தமிழ்நாடு அரசு

# மேல்நிலை முதலாம் ஆண்டு

# வணிகவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

First pages Higher.indd 1 2/17/2021 3:10:41 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*

திருத்தியபதிப்பு - *2019, 2020,2021*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



First pages Higher.indd 2 2/17/2021 3:10:42 PM

# பொருளடக்கம்

## வணிகவியல்


| அலகு | அத்தியாயம் | பாடத்தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| அலகு – 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள் | 1 | **இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி**<br>1.01 அறிமுகம்<br>1.02 பண்டமாற்று முறை<br>1.03 வணிகத் தடைகள்<br>1.04 தொழில் தடைகளும் அவற்றை நீக்கும் வழிகளும் | 01 | ஜூன் |
| | 2 | **தொழிலின் நோக்கங்கள்**<br>2.01 மனிதச் செயல்பாடுகள்<br>2.02 பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள்<br>2.03 தொழிலின் தன்மைகள்<br>2.04 தொழிலின் நோக்கங்கள் | 09 | ஜூன் |
| | 3 | **தொழில் நடவடிக்கைகளின் வகைகள்**<br>3.01 உற்பத்தித் தொழில்<br>3.02 வணிகம்<br>3.03 வியாபாரம் | 17 | ஜூன் |
| அலகு – 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள் | 4 | **தனியாள் வணிகம்**<br>4.01 தொழில் அமைப்பு<br>4.02 தனியாள் வணிகம்<br>4.03 சிறப்பியல்புகள்<br>4.04 தனியாள் வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும் | 23 | ஜூன் |
| | 5 | **இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை**<br>5.01 இந்து கூட்டுக் குடும்பம் – அறிமுகம்<br>5.02 கூட்டாண்மை<br>5.03 கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் உள்ளடக்கம்<br>5.04 கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்<br>5.05 கூட்டாளிகளின் வகைகள்<br>5.06 கூட்டாண்மையைப் பதிவு செய்யும் முறை<br>5.07 கூட்டாண்மையை பதிவு செய்யாவிடில் ஏற்படும் விளைவுகள்<br>5.08 கூட்டாண்மைக் கலைப்பு | 31 | ஜூன் |
| | 6 | **கூட்டுப் பங்கு நிறுமம்**<br>6.01 நிறுமம் – பொருள் மற்றும் இலக்கணம்<br>6.02 நிறுமத்தின் வகைகள்<br>6.03 அமைப்பு முறையேடு<br>6.04 செயல்முறை விதிகள்<br>6.05 தகவலறிக்கை | 48 | ஜூலை |




First pages Higher.indd 3 2/17/2021 3:10:42 PM

| | | | | |
|---|---|---|---|---|
| | 7 | **கூட்டுறவு அமைப்பு**<br>*7.01 பொருள் மற்றும் இலக்கணம்*<br>*7.02 கூட்டுறவின் கொள்கைகள்*<br>*7.03 கூட்டுறவின் சிறப்பியல்புகள்*<br>*7.04 கூட்டுறவு சங்கங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்*<br>*7.05 கூட்டுறவு சங்கங்களின் வகைகள்* | 60 | ஜூலை |
| | 8 | **பன்னாட்டு நிறுமங்கள்**<br>*8.01 பன்னாட்டு நிறுமங்கள் – பொருள் மற்றும் இலக்கணம்*<br>*8.02 பன்னாட்டு நிறுமங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்*<br>*8.03 பன்னாட்டு நிறுமங்களுக்கு எடுத்துக்காட்டுகள்* | 70 | ஜூலை |
| | 9 | **அரசு அமைப்புகள்**<br>*9.01 துறைவாரி நிறுவனங்கள்*<br>*9.02 நிறைகளும் குறைகளும்*<br>*9.03 பொதுக் கழகங்கள்*<br>*9.04 நிறைகளும் குறைகளும்*<br>*9.05 அரசு நிறுமங்கள்*<br>*9.06 நிறைகளும் குறைகளும்* | 76 | ஜூலை |
| அலகு – 3<br>சேவைத் தொழில்கள் I | 10 | **இந்திய ரிசர்வ் வங்கி**<br>*10.01 சேவைத் தொழிலின் தேவை*<br>*10.02 வங்கிச் சேவை*<br>*10.03 இந்திய வங்கிகள் – ஓர் வரலாற்றுப் பின்னணி*<br>*10.04 வங்கி – இலக்கணம்*<br>*10.05 மைய வங்கி – இலக்கணம்*<br>*10.06 இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்*<br>*10.07 இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு*<br>*10.08 இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்* | 85 | ஜூலை |
| | 11 | **வங்கிகளின் வகைகள்**<br>*11.01 அறிமுகம்*<br>*11.02வங்கிகளின் வகைகள்* | 95 | ஆகஸ்ட் |
| | 12 | **வணிக வங்கிகளின் பணிகள்**<br>*12.01 முதன்மைப் பணிகள்*<br>*12.02 இரண்டாம் நிலை பணிகள்*<br>*12.03 பரவலாக்கப்பட்ட வங்கி சேவைகள்*<br>*12.04 மின்னணு வங்கியியல் பணிகள்*<br>*12.05 அனைத்து வணிக வங்கிகளின் மொத்தப் பணிகள்* | 103 | ஆகஸ்ட் |
| | 13 | **பண்டகக் காப்பு**<br>*13.01 பண்டகக் காப்பகம்*<br>*13.02 பண்டகக் காப்பகம் மற்றும் பண்டகக் காப்பு இடையே உள்ள வேறுபாடுகள்*<br>*13.03 பண்டகக் காப்பகங்களின் வகைகள்*<br>*13.04 பண்டகக் காப்பகங்களின் பணிகள்*<br>*13.05 பண்டகக் காப்பின் நன்மைகளும் குறைபாடுகளும்*<br>*13.06 பண்டகக் காப்பு ஆவணங்கள்*<br>*13.07இந்தியாவில் பண்டகக் காப்பு* | 115 | ஆகஸ்ட் |




First pages Higher.indd 4 2/17/2021 3:10:42 PM

| | | | | |
|---|---|---|---|---|
| | 14 | **போக்குவரத்து**<br>*14.01* போக்குவரத்து - பொருள்<br>*14.02* போக்குவரத்தின் வகைகள்<br>*14.03* தொழிலுக்கான போக்குவரத்தின் சேவைகள்<br>*14.04* போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்<br>*14.05* பொதுச் சரக்கேற்றிகள் | 124 | ஆகஸ்ட் |
| | 15 | **காப்பீடு**<br>*15.01* காப்பீட்டின் பொருள்<br>*15.02* காப்பீட்டின் கோட்பாடுகள்<br>*15.03* காப்பீட்டின் வகைகள்<br>*15.04* தொழில் இடர்கள்<br>*15.05* இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் | 136 | ஆகஸ்ட் |
| அலகு – 4<br>சேவைச் தொழில்கள் II | 16 | **இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்**<br>*16.01* தனி உரிமையியல்<br>*16.02* ஏட்டுக்கடன் முகமை<br>*16.03* பெயர்ச்சியியல்<br>*16.04* புறத் திறனீட்டல்<br>*16.05* மின்னணு வணிகம் | 148 | செப்டம்பர் |
| அலகு – 5<br>தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள் மற்றும் தொழில் நன்நெறிகள் | 17 | **தொழிலின் சமூக பொறுப்புணர்வுகள்**<br>*17.01* சமூகப் பொறுப்புணர்வின் கருத்து<br>*17.02* சமூகப் பொறுப்புணர்வுக்கான தேவை<br>*17.03* சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த வாதங்கள்<br>*17.04* சமூகப் பொறுப்புணர்வின் வகைகள்<br>*17.05* பல்வேறு ஆர்வக் குழுக்களுக்கான பொறுப்புணர்வுகள் | 167 | செப்டம்பர் |
| | 18 | **தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை**<br>*18.01* தொழில் நன்நெறிகள் - கருத்து<br>*18.02* தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள்<br>*18.03* தொழில் நெறிமுறையின் விதிகள்<br>*18.04* பெருநிறுவன ஆளுகை<br>*18.05* இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்கள் | 178 | செப்டம்பர் |
| அலகு – 6<br>தொழில் நிதியியல் | 19 | **தொழில் நிதிமூலங்கள்**<br>*19.01* தொழில் நிதி - பொருள்<br>*19.02* தொழில் நிதி ஆதாரங்களின் வகைகள்<br>*19.03* தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகள்<br>*19.04* சேமிப்பு – சேமிப்பின் முக்கியத்துவம்<br>*19.05* தனிநபர் முதலீட்டு வழிகள் | 185 | செப்டம்பர் |
| | 20 | **பன்னாட்டு நிதி**<br>*20.01* பன்னாட்டு நிதி<br>*20.02* அந்நிய நேரடி முதலீடு<br>*20.03* பன்னாட்டு நிதிச் சந்தை<br>*20.04* உலகளாவிய வைப்பு இரசீதுகள்<br>*20.05* அமெரிக்க வைப்பு இரசீதுகள்<br>*20.06* அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரங்கள் | 200 | செப்டம்பர் |




First pages Higher.indd 5 2/17/2021 3:10:42 PM

| | | | | |
|---|---|---|---|---|
| | 21 | **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்**<br>*21.01* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்<br>*21.02* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம்<br>*21.03* இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு<br>*21.04* தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்<br>*21.05* சுய உதவிக் குழுக்கள் | 207 | அக்டோபர் |
| அலகு – 7<br>வியாபாரம் | 22 | **வியாபாரத்தின் வகைகள்**<br>*22.01* வியாபாரம் – பொருள்<br>*22.02* உள்நாட்டு வியாபாரம்<br>*22.03* பன்னாட்டு வியாபாரம் | 215 | அக்டோபர் |
| | 23 | **வழங்கல் வழிகள்**<br>*23.01* வழங்கல் வழி – பொருள்<br>*23.02* வழங்கல் வழிகளின் வகைகள்<br>*23.03* வழங்கல் வழியைத் தீர்மானிக்கும் காரணிகள்<br>*23.04* இடைநிலையர்கள்<br>*23.05* வணிக முகவர்கள்<br>*23.06* மொத்த வியாபாரம்<br>*23.07* மொத்த வியாபாரியின் சிறப்பியல்புகள்<br>*23.08* சில்லறை வியாபாரம்<br>*23.09* சில்லறை வியாபாரியின் சிறப்பியல்புகள்<br>*23.10* மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் | 221 | அக்டோபர் |
| | 24 | **சில்லறை வியாபாரம் செய்தல்**<br>*24.01* பொருள்<br>*24.02* சில்லறை வியாபார அமைப்புகளின் வகைகள் | 235 | அக்டோபர் |
| அலகு – 8<br>பன்னாட்டு வணிகம் | 25 | **பன்னாட்டு வணிகம்**<br>*25.01* பன்னாட்டு வணிகத்தின் தன்மை<br>*25.02* பன்னாட்டு வணிகத்தின் கருத்து,பொருள், மற்றும் வரைவிலக்கணம்<br>*25.03* பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள்<br>*25.04* பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக்கூறுகள்<br>*25.05* பன்னாட்டு வணிகத்தின் முக்கியத்துவம்<br>*25.06* உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும்இடையே உள்ள வேறுபாடுகள்<br>*25.07* பன்னாட்டு வணிகத்தின் வகைகள்<br>*25.08* பன்னாட்டு வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும் | 245 | அக்டோபர் |
| | 26 | **ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்**<br>*26.01* ஏற்றுமதி நடைமுறை<br>*26.02* இறக்குமதி நடைமுறை | 255 | நவம்பர் |




First pages Higher.indd 6 2/17/2021 3:10:42 PM

| | | | | |
|---|---|---|---|---|
| | 27 | **பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்**<br>*27.01* உலக வர்த்தக அமைப்பு<br>*27.02* உலக வங்கி<br>*27.03* பன்னாட்டு நாணய நிதியம்<br>*27.04* தெற்காசிய நாடுகளின் வட்டார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு | 275 | நவம்பர் |
| | 28 | **செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை**<br>*28.01* செலுத்தல் சமநிலை<br>*28.02* வாணிபச் சமநிலை | 286 | நவம்பர் |
| அலகு – 9<br>இந்திய ஒப்பந்தச் சட்டம் | 29 | **ஒப்பந்தத்தின் கூறுகள்**<br>*29.01* அறிமுகம்<br>*29.02* சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள்<br>*29.03* ஒப்பந்தங்களின் வகைகள் | 291 | நவம்பர் |
| | 30 | **ஒப்பந்த நிறைவேற்றம்**<br>*30.01* ஒப்பந்தங்களின் நிறைவேற்றம்<br>*30.02* ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?<br>*30.03* இருதரப்பு வாக்குறுதிகள் | 298 | நவம்பர் |
| | 31 | **ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை**<br>*31.01* ஒப்பந்த விடுவிப்பு<br>*31.02* ஒப்பந்த மீறுகையும் அதற்கான தீர்வுகளும் | 304 | டிசம்பர் |
| அலகு – 10<br>நேர்முக மற்றும் மறைமுக வரிகள் | 32 | **நேர்முக வரிகள்**<br>*32.01* வரி என்பதன் பொருள்<br>*32.02* வரிகளின் வகைகள்<br>*32.03* வருமானவரி | 308 | டிசம்பர் |
| | 33 | **மறைமுக வரிகள்**<br>*33.01* மறைமுக வரி என்பதன் பொருள்<br>*33.02* சரக்கு மற்றும் சேவை வரி-பொருள்<br>*33.03* சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம் | 314 | டிசம்பர் |


5AURQH

**மின்னூல்**

5B4MSJ

**மதிப்பீடு**

B133_11_COM_TM

**இணைய வளங்கள்**

**பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code-இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.



First pages Higher.indd 7 2/17/2021 3:10:42 PM

**அன்பார்ந்த மாணவர்களே !**

எதிர்காலத்தில் உங்களை திறமையானதோர் மற்றும் நுண்ணறிவு கொண்ட நபராக மாற்ற வல்லமை தரும் புதையலுக்கு நிகரான அருமையான புத்தகம் ஒன்று உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டு இருக்கிறது. அதை நீங்கள் முதலில் நம்ப வேண்டும் மற்றும் அதன் மூலம் வணிகவியலில் முழுமையான அறிவைப் பெற்று பன்முகத் திறமைசாலியாக உங்களை மேம்படுத்திக் கொள்ள இயலும்.

இந்தப் புத்தகத்தில் புதைந்துள்ள பல்வேறு மதிப்புமிக்க மற்றும் பயனுள்ள கருத்தாழமிக்க பகுதிகளை நன்கு புரிந்து கொள்ள எப்படி இந்தப் புத்தகத்தை பயன்படுத்த வேண்டும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இப்புத்தகத்தின் அலகுகள், அத்தியாயங்கள் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள கருத்துகள் யாவும் கற்றலின் பொழுது திறன் மேம்படும் அளவிற்கான ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

இப்புத்தகம் பத்து அலகுகளாகவும் முப்பத்து மூன்று அத்தியாயங்களாகவும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தாலும் இது மாணவர் நோக்கில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. மிகச் சிறந்த கற்றல் அனுபவத்தைப் பெறுவதற்கான உங்கள் முயற்சிக்கு "புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?" என்று கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

## புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?

**அலகுகள்**

புத்தகத்தின் பல்வேறு அத்தியாயங்களைத் தனித்தனியே சில முக்கிய தலைப்புகளின் கீழ் பாடப்பகுதிகளாக இவ்வலகுகள் கொண்டு இருப்பதால் வணிகவியல் கல்வியின் குறிப்பிட்ட அறிவு சார்ந்த பகுதிகளை நீங்கள் புரிந்து கொள்ள இயலும். இதுதான் கற்றலின் வழக்கமான வழி ஆகும். உதாரணமாக அலகு ஒன்றில், மூன்று அத்தியாயங்கள் உள்ளன; அவை வணிகவியல் கல்வியின் அடிப்படை மற்றும் துவக்கப் பகுதிகளாக உள்ளன. அதுபோலவே பிற அலகுகள் உங்களுக்கு பதினொன்றாம் வகுப்பிற்குத் தேவையான குறிப்பிட்ட அறிவு சார்ந்த பகுதிகளை வெவ்வேறு அலகுகளில் பல தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் எதனை தவிர்த்தாலும், நீங்கள் அறிவின் தொடர்ச்சியை இழக்க நேரிடும்.

**அத்தியாயங்கள்**

இன்றைய வணிகவியல் கல்வியின் உரைநடை மற்றும் செயல்முறை விளக்கத்தினை ஓர் உண்மையான புதையலாக பெற்றுக் கொள்ள விரும்பும் எவரும் இப்புத்தகத்தின் அனைத்து அத்தியாயங்களையும் (முப்பத்து மூன்று) முழுமையாகப் படிக்க வேண்டும். வணிகவியலின் அடிப்படைகளையும், மூலக்கூறுகளையும் கற்றுக்கொள்ள விரும்பும் எந்த ஒரு மாணவரும் இப்பாடங்களைத் தங்கள் தகுதி மேம்பாடு அடையச் செய்யும் மாத்திரைகளாக எண்ணி விழுங்க வேண்டும். பாடங்களால் விளையும் நன்மைகளையும் உண்மையான அறிவினையும் இழக்காமல் இருக்க எந்தப் பாடத்தையும் ஒதுக்கக் கூடாது என அறிவுறுத்தப்படுகின்றது.

**சிறு தலைப்புகள்**

இத்தலைப்புகள் உங்களின் கற்றல் முறை சீராக ஒழுங்குபடுத்தப்படுவதற்கும் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கப்பட்ட பாணியில் தகவல்களின் தெளிவு மற்றும் உண்மைத் தன்மையை பிரதிபலிக்கும் வண்ணமாக பல்வேறு அத்தியாயங்களில் நினைவில் நிறுத்தக்கூடிய பகுதிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு அத்தியாயத்தின் பாடப்பகுதியை நீங்கள் கற்பதற்கு அதே அத்தியாயத்தின் "சிறு தலைப்புகள்" அடிப்படையாக விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது. இதுவே கற்றலின் மிக எளிய முறையாகும்.



First pages Higher.indd 8 2/17/2021 3:10:42 PM

**உங்களுக்குத் தெரியுமா?**

இப்பகுதியானது பொதுவாகப் பல்வேறு அத்தியாயங்களில் சிறு துளிகளாகத் தரப்பட்டுள்ள வணிகவியல் தொடர்புடைய நிகழ்கால மற்றும் இறந்த கால நிகழ்வுத் துளிகளாகும். இவை அத்தியாயம் தொடர்புடையதாக இருப்பதால் அநேகமாக எல்லா அத்தியாயங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

**வெற்றிக் கதை**

வாழ்வில் சாதாரண நிலையிலிருந்து எடுகோளாக சொல்லக்கூடிய நிலைக்கு உயர்ந்த நிறுவனங்கள் அல்லது நிஜமனிதர்கள் வளர்ந்த வரலாற்றுச் சுருக்கத்தை இப்பகுதி குறிப்பிடுகின்றது. நீங்கள் இத்தகைய உதாரணங்களைப் பின்பற்றி உங்கள் எதிர்கால இலட்சியங்களை அடைவதற்காக இவ்வுண்மைக் கதைகளைப் புரிந்து கொண்டு வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டும்.

**சூழ்நிலை ஆய்வு**

பல்வேறு அத்தியாயங்களில் உள்ள பாடப்பகுதிகளில் உள்ள உட்கூறுகளைப் பற்றிய செயல்பாட்டு அறிவைச் சோதிப்பதற்காக இப்பகுதி சிந்தித்து விடை அளிக்கும் நோக்கில் ஆய்வின் அடிப்படையில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தொடர்புடைய விடைகளைத் தரும் வண்ணம் உங்களைத் தயார் செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீங்கள் செய்முறை அறிவையும் பயன்பாட்டு அறிவையும் ஒருங்கே பெற இயலும்.

**திட்டச் செயல்**

ஒவ்வொரு அத்தியாயத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வீட்டுப் பாடமாகவோ அல்லது வகுப்புப் பாடமாகவோ உங்களுக்குப் பயிற்சியளிக்கும் பகுதியே திட்டச் செயல் என்பதாகும். உலகளாவிய நிலையில் பல்வகைத் தொழிலமைப்புகள் பற்றிய செயல்முறை விளக்கமானது வணிகவியல் கல்வியில் தரப்பட வேண்டியுள்ளது. ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனம் தொடர்புடைய பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இந்த திட்டச் செயல் தரப்படுவதால் அவை உங்கள் எதிர்கால முன்னேற்றத்திற்கும் பயன்படுவனவாக அமையும்.

**சுய சிந்தனைக்கு**

உங்கள் மேலான புரிதலுக்கு துணை செய்வதற்காக இப்பகுதி அனைத்து அத்தியாயங்களிலும் ஒரு பயனுள்ள பகுதியாகத் தரப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் சில முக்கிய கலைச் சொற்களின் பொருளை நினைவு கூறுவதற்கோ அல்லது அவற்றின் பயன்பாட்டினை மறுமுறை நினைவு கூறுவதற்கோ "சுய சிந்தனைக்கு" பகுதி தேவைப்படுகின்றது. இது உங்கள் பாடப்பகுதியினைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமல்லாமல் சுயதொழில் துவங்குவதற்கான வாய்ப்பினைத் தருகின்றது.

**மேலும் அறிவதற்கு**

இப்பகுதி தரப்பட்டுள்ளதன் நோக்கமாவது மாணவர்கள் பெற வேண்டிய வணிகவியல் தொடர்புடைய கோட்பாடுகள் கருத்துக்கள் பற்றி வீட்டுப்பாடமாக அல்லது மேற்படிப்பில் கவனம் கொள்ளும் வகையில் இணையதளம் அல்லது குறிப்பு நுல்கள் வாயிலாக அறிந்து கொள்ளும் பகுதியே "மேலும் அறிவதற்கு" ஆகும்.



First pages Higher.indd 9 2/17/2021 3:10:43 PM

**கலைச் சொற்கள்**

ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய கருத்துக்கள் பற்றி மாணவர்கள் முழுமையாக அறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட பகுதியே கலைச் சொற்கள் ஆகும். கற்றலின் பொழுது தரப்பட்டுள்ள கருத்துக்கள் பற்றி தெளிவாகவும் அவசியமானதாகவும் கருதப்படும் விவரங்களை மாணவர்கள் எளிதில் நினைவு கூறத்தக்க வகையில் உள்ள பகுதியே இதுவாகும்.

**பயிற்சி**

குறு விடை, சிறு விடை மற்றும் பெரு விடை வினாக்கள் பகுதியானது உங்கள் திறமையை அளவிடும் கருவிகளுக்கானது என்பது உங்களுக்குத் தெரியுமா? சில குறிப்பிட்ட மதிப்பீட்டு முறைகளாக கொடுக்கப்பட்டவை சரியான விடையைத் தேர்ந்தெடு, கோடிட்ட இடங்களை நிரப்பு, பல தேர்வு வினாக்கள் ஆகியவை ஆகும். அதிக மதிப்பெண்கள் பெறுவது உங்கள் உயரிய அறிவு நிலையைக் காட்டுவதாகும். மேற்படிப்புக்கு ஏதுவாக இருப்பதால் மேற்கூறிய அனைத்தையும் தேர்வுக்கு முன்னதாகவே நீங்கள் தயார் செய்து கொள்ள வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. **வருமுன் காப்பது நல்லது** என்பதற்கு இணங்க நீங்கள் உங்கள் ஆசிரியர் கூறுவதற்கு முன்னதாகவே உங்கள் விடைகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம்.

**இணையதளக் குறியீடு**

இது ஒரு கவனத்தை ஈர்க்கும் பகுதியாகும். இதன் மூலம் உரைநடைக் கல்விதனை இணைய தளத்தின் மூலம் ஒரு கைபேசியின் வாயிலாக நடைமுறை வணிகம் பற்றி கொடுக்கப்பட்டுள்ள குறு சொற்பொழிவுகள் மற்றும் செயல்விளக்கம் மூலமாக அறிவுசார் நிபுணர்களைக் கொண்டு தரப்படுவதாகும். ஆனால், இது பெரும்பாலும் வீட்டுப்பாடமாக அல்லது ஓய்வு நேர கற்றல் மூலமாக அல்லது ஆசிரியர்களின் கவன ஈர்ப்புச் செயலாக இதனை மேற்கொள்ள வேண்டும்.

**சொற்களஞ்சியம்**

உங்கள் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான முக்கியப் பகுதியாகவும் புத்தகத்தில் உள்ள மிக முக்கிய கருப்பொருட்களின் தொகுப்பாகவும் இப்பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், உங்களின் நினைவாற்றலை மேம்படுத்தவும் நினைவு கூறலுக்கு ஏதுவாகவும் பல்வேறு முக்கிய கலைச் சொற்களின் தொகுப்பாகப் புத்தகமெங்கும் காணப்படும் முக்கியக் கருத்துக்களை வரிசைப்படுத்தி தமிழ்–ஆங்கிலமாக வழங்கப்பட்டுள்ள பகுதி இதுவாகும்.

**ஆகவே, நன்மாணாக்கர்களே!**

முழுமையான வெற்றிக்கு கடும் உழைப்பு ஒன்றே வழிகோலும் என்பதை நாங்கள் நினைவுப்படுத்தும் வேளையில் உங்களின் வெற்றிக்காகவும் பொருள் அறிந்த கற்றலுக்காகவும் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர் குழுமம்.**



First pages Higher.indd 10 2/17/2021 3:10:43 PM

# "வணிகவியல்" கல்வியின் செயல் எல்லை

"வணிகவியல்" என்ற படிப்பு அறிவுசார் உலகெங்கும் பயன்படக்கூடிய ஒரு படிப்பு. இப்படிப்பை பயின்றவர்கட்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகெங்கும் ஏராளமான வேலை வாய்ப்புகள் காத்துக்கிடக்கின்றது. மேல்நிலைப் பள்ளியில் வணிகவியல் படிப்பை முடித்த மாணவர்களுக்கு எப்படிப்பட்ட வாய்ப்புகள் எல்லாம் அரங்கேற உள்ளது என்பதைக் கீழ்க் குறிப்பிடப்பட்ட படம் விளக்குகிறது.

## கல்வி வாய்ப்புகள்

| கல்லூரிகளில் நேராக சேர்ந்தோ அல்லது அஞ்சல் வழியிலோ கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இளங்கலை பட்டப் படிப்புகளைப் படிக்கலாம். | தொழில் படிப்புகள் | கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் நேரடியாக சேர்ந்தோ அல்லது அஞ்சல் வழியிலோ பகுதி நேரப்படிப்பாகவோ கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மேல்பட்ட படிப்புகளை மாணவர்கள் படிக்கலாம். | பட்டப்படிப்புக்குப் பிறகு சிறப்புத் தொழில் படிப்புகள் | முதுகலைபட்டப் படிப்பு முடித்த பின் கீழ்க் குறிப்பிட்ட படிப்புகளை மேற்கொள்ளலாம் |
|---|---|---|---|---|
| • இளங்கலை வணிகவியல் (B.Com.)<br>• இளங்கலை வணிகவியல் (B.Com.,Hons)<br>• இளங்கலை வணிகவியல் (கணக்கியல் மற்றும் நிதியியல்)<br>• இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு)<br>• இளங்கலை வணிகவியல் (வங்கி மேலாண்மை)<br>• இளங்கலை நிர்வாகவியல்<br>• இளங்கலை வங்கி நிர்வாகம்<br>• முதுகலை வணிகவியல் (5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பு)<br>• இதர பட்டயப் படிப்புகள் (Diploma) | • சாசனக் கணக்கர் பட்டயப் படிப்பு (CA)<br>• சாசன மேலாண் கணக்கர் (CMA)<br>• நிறுமச் செயலர் பட்டயப் படிப்பு (ACS)<br>• இளங்கலை சட்ட படிப்பு (5 ஆண்டுகால ஒருங்கிணைந்த படிப்பு) (B.L)<br>• இளங்கலை வணிகவியல் (சட்டம்) (LLB) (5 ஆண்டுகால ஒருங்கிணைந்த படிப்பு)<br>• மேலாண்மை கணக்கர் பட்டய படிப்பு (இங்கிலாந்து)<br>• சான்றளிக்கப்பட்ட பட்டய கணக்கர் படிப்பு (இங்கிலாந்து)<br>• சான்றிதழ் பெற்ற பொது கணக்கர் (அமெரிக்கா) | • முதுகலை வணிகவியல் (M.Com.,)<br>• முதுகலை வணிகவியல் (கணக்கியல் மற்றும் நிதியியல்)<br>• முதுகலை வணிகவியல் (பன்னாட்டு வணிகம் மற்றும் வங்கியியல்)<br>• முதுகலை வணிகவியல் (கணினி பயன்பாடு)<br>• முதுகலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் (M.B.A)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் (நிதியியல்)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் ( சந்தையிடல்)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் ( மனிதவள மேலாண்மை)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் ( விளம்பரம் மற்றும் விற்பான்மை)<br>• முதுகலை தொழில் நிர்வாகம் ( மருத்துவமனை மேலாண்மை)<br>• முதுகலை மனிதவள மேலாண்மை (MHRM)<br>• முதுகலை தொழிலாளர் மேலாண்மை (MLM) | • சாசனக் கணக்கர் (CA)<br>• சாசன மேலாண் கணக்கர் (ICMA)<br>• நிறுமச் செயலர் படிப்பு (ACS)<br>• இளங்கலை சட்டம் (LLB)<br>• மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC)<br>• இந்திய ஆட்சிப் பணி (IAS)<br>• இந்திய காவல் பணி (IPS)<br>• இந்திய அயல்நாட்டுப் பணி (IFS)<br>• இந்திய வருவாய் பணி (IRS)<br>• இந்திய கணக்கியல் மற்றும் தணிக்கையியல் பணி (IA & AS) | • வணிகவியல் முதுகலை ஆய்வியல் நிறைஞர் படிப்பு (M.Phil.)<br>• முனைவர் பட்டப் படிப்பு (Ph.D.,)<br>• ஆய்வியல் அறிஞர் (D.Litt)<br>• பல்கலை மான்யக் குழு நடத்தும் கல்லூரி ஆசிரியர் தகுதித் தேர்வு (NET)<br>• மாநில அரசு நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வு (SET)<br>• இளங்கலை கல்வியியல் பட்டப் படிப்பு (B.Ed.,)<br>• முதுகலை கல்வியியல் பட்டப் படிப்பு (M.Ed.,)<br>• பிற முதுகலை பட்டயப் படிப்புகள் (PG Diploma) |

## வேலை வாய்ப்புகள்

அ. தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் எண்ணற்ற சுயவேலைவாய்ப்புப் பயிற்சிகள் தரப்படுகின்றன. இதனை 12ஆம் வகுப்பு தேர்ச்சித் தகுதியோடு பெறுவது நல்லது.

ஆ. முறையான பட்டப்படிப்பை பெற்ற பின்பு வணிகவியல் பட்டதாரிகள் தொழில் முனைய விழையின் வங்கிகளையோ அல்லது நிதி நிறுவனங்களையோ நாடி நிதி பெற்று சொந்தமாக தொழில் தொடங்கலாம்.

இ. மேல்நிலை வணிகவியல் படித்த பின்பு, இளங்கலை வணிகவியல் பட்டம் பெற்ற பின்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பணியாளர் தொகுதி I, II, III மற்றும் IV என்ற பதவிகளுக்கான தேர்வு எழுதி அரசுப்பணிகளுக்குச் செல்லும் வாய்ப்புகளும் உள்ளது.

ஈ. வணிகவியல் பட்டதாரிகள் வரி ஆலோசகர்களாகவோ அல்லது சரக்கு மற்றும் சேவை வரி ஆலோசகர்களாகவோ தாமாக தொழில் செய்ய முடியும்.



First pages Higher.indd 11 2/17/2021 3:10:43 PM


## வெளிநாட்டு வாய்ப்பு

**வணிகவியல் மாணவர்களுக்கு உலகளவில் கீழ்க் கண்ட சிறப்பான வாய்ப்புகள் உள்ளன.**

1. முன்னேறிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் தொழில் நிர்வாகப் படிப்பினைத் தொடரலாம்.
2. கணினி படிப்பில் ' Tally ' என்ற மென் படிப்பை பயின்ற வணிகவியல் பட்டதாரிகள் தொழில் நிறுமங்களில் கணக்கர் பணிக்குப் பணி அமர்த்தப்படலாம்.
3. முதுகலைப் பட்டம் பெற்ற வணிகவியல் பட்டதாரிகள் முனைவர் பட்டப் படிப்பை இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களிலோ அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களிலோ கல்வி உதவித் தொகையுடன் தொடரலாம்.
4. முதுகலை வணிகவியல் பட்டம் பெற்ற பட்டதாரிகள் கல்வியியல் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்று மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணி பெறலாம்.
5. நல்ல செயல் திட்டங்களைத் தீட்டி அதனைக் கொண்டு வணிகவியல் பட்டப் படிப்பு படித்தவர்கள் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபடலாம்.
6. பல நாடுகளில் உள்ள தேசிய அரசின் உரிய சான்றிதழ் பெற்று வணிகவியல் பட்டம் பெற்றவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அந்நிய செலாவணி வணிகர்களாக செயல்படலாம்.
7. தேவையான தகுதிகளைப் பெற்ற வணிகவியல் பட்டதாரிகள் வங்கித் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு வங்கி ஊழியர் தேர்வு எழுதி வங்கிப் பணிகளில் சேரலாம்.
8. வணிகவியல் பட்டதாரிகள் மேலாண்மை ஆலோசகராகவோ, ஏற்றுமதி, இறக்குமதி ஆலோசகராகவோ, சரக்கு அகற்றீட்டு முகவராகவோ, பங்கு வணிகராகவோ, ஊக வணிகராகவோ, முதலீட்டு ஆலோசகராகவோ, காப்பீட்டு ஆலோசகராகவோ, விளம்பர முகமை நடத்துபவராகவோ, வியாபார நிறுமங்களில் செயலர்களாகவோ, நிதி ஆலோசகராகவோ, வரி ஆலோசகராகவோ, கருவூல மேலாளராகவோ, மற்றும் பல்வேறு குழுக்களில் ஆலோசகராகவோ செயல்படலாம்.

## ஆராய்ச்சி வாய்ப்புள்ள பாடங்கள்

- சந்தையியல்
- மேலாண்மையியல்
- நிதியியல்
- மனிதவள மேலாண்மை
- தொழில் முனைவு
- சில்லறை வர்த்தகம்
- தொடர் அளிப்பு மேலாண்மை
- இடற்பெயற் மேலாண்மை
- நிதிசார் சேவைகள்
- நிதிச் சந்தையியல்
- சேவை நிறுவனங்கள்
- பன்னாட்டுத் தொழில்
- அமைப்புசார் நடத்தை
- மின்னணு சந்தையியல்
- வரியியல்




Institute of Chartered Accountants Of India



First pages Higher.indd 12 2/17/2021 3:10:46 PM

அத்தியாயம் 1

# இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்".

– குறள் 120

5BDIU7

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணியைப் பற்றித் தெரிந்து கொள்ள இயலும்.
2. பண்ட மாற்று வணிக முறையை அறிந்து கொள்ள முடியும்.
3. வணிகம் மற்றும் தொழிலின் பல்வேறு தடைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

## 1.01 அறிமுகம்

வாணிபம் நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு நடைமுறையில் உள்ளது. அரசனோ அல்லது சாதாரணக் குடிமகனோ யாராக இருந்தாலும் மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. பெரும்பாலும் வாணிகம் ஒரு பொருளாதார நடவடிக்கையாக உருவாகி, பொருட்களுக்குப் பொருட்கள் பரிமாற்றம் செய்யப்பட்டது. இதனையே பண்டமாற்று முறை என்கிறோம். அண்டைக் கிராமங்கள், நகரங்கள், மாநிலங்கள் மற்றும் நாடுகளுக்கிடையில் பணம் என்ற ஒன்று இல்லாத போது பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்தது. பண்டங்கள் பரிமாற்றத்தினை எளிதாக்கப் பணம் உருவாக்கப்பட்ட பிறகு தேவைக்கேற்றவாறு பண்டங்கள் பண மதிப்பிற்கு ஏற்றவாறு உரிமை மாற்றம் (விற்பனை) செய்யப்பட்டன. பின்பு, பணப் பரிமாற்றமே பண்டங்கள் மற்றும் பணி வியாபாரம் செய்வதற்கு என மாறிய பொழுது பண்டமாற்றுப் பொருளாதாரம் பணப் பொருளாதாரம் என மாற்றம் பெற்றது.

நாகரிக வளர்ச்சி பல வம்சாவளிகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிகளைக் கண்ட போதும் வர்த்தக நடவடிக்கைகள் நம் நாட்டிற்குள் மட்டுமில்லாமல் உலக நாடுகளிடையே மேன்மேலும் சிறப்பாக நடைபெற்றன. தமிழ்நாடு தொடர்ந்து வியாபாரம் மற்றும் வாணிகத்தில் முதன்மை பெற்று வந்ததையே சங்க இலக்கியங்கள் சாட்சியாக விளங்குகின்றன.

வணிக நடவடிக்கைகள் பண்டைய காலத்துப் பண்டமாற்று முறையிலிருந்து நாணயமுறை, அஞ்சல் வழி வணிகம், வாடகைக் கொள்முதல் முறை, தவணை விற்பனை முறை போன்ற பன்முகத் தன்மையில் உருமாறி வளர்ந்துள்ளன என்பது தெள்ளத் தெளிவாகிறது. இன்றைய தொழில் நுட்ப சமுதாயத்தில் வணிகச் செயல்பாடுகள் யாவும் மின்னணு வர்த்தகமாக ரொக்கமில்லா முறைக்கு மாறி இணைய தள வியாபாரம், அலைபேசி வங்கி மற்றும் மின்னணு வர்த்தகம் என விரிவாக்கம் பெற்றுள்ளன.

இந்நிலையில், பொதுவாக இந்திய துணைக்கண்ட அளவிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் வணிக வளர்ச்சியின் வரலாற்றினைத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. வணிகத்தின் பரிணாம வளர்ச்சியைத் தெரிந்து கொள்ள மட்டுமே இப்பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 1 2/17/2021 3:11:00 PM

முதன் முதலில் சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் வியாபாரம் என்ற சொல்லை பயன்படுத்தியதாக அறிகிறோம். வாணியம் அல்லது வாணிபம் என்ற சொல் தென்னிந்தியாவில் வழக்கத்தில் இருந்ததாக அறிகிறோம். பண்டைய காலத்தில் நிலத்தில் விளைந்த பொருள்களில் தேவைக்கு அதிகமாக உள்ளதைப் பண்ட மாற்று முறையில் வியாபாரம் செய்து வந்தனர். புறநானூறு மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களில் 'வாணிகம்' என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தங்கம், எண்ணெய், கலப்பை, துணி ஆகியவை வியாபாரம் செய்யப்பட்டதாக அழகர்மலை, புகளூர், மாங்குளம் மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் காணப்படும் தமிழ் – பிராமி கல்வெட்டுகள் விளக்குகின்றன.

சங்க காலத்தில் பண்டமாற்று முறையில் உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு வியாபாரம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இடைக்காலத்தில் வியாபாரம் பல்வேறு பகுதிகளை இணைக்க வழி வகை செய்தது. சங்க கால ஏடுகள் பெரு வியாபாரிகள், அவர்களுடைய பாதுகாப்புப்படை, சந்தைகள், கடைகள் மற்றும் வணிகக் குழுக்கள் பற்றிக் கூறுகிறது. மலைவாழ் மக்கள் தேன், பழங்கள் மற்றும் கிழங்குகளையும் தரை – நிலம் வாழ் மக்கள், கால் நடைகள், பால் மற்றும் பால் பொருட்களையும் பண்ட மாற்றம் செய்தனர். கால்நடைகள் சில நேரங்களில் பண்டமாற்றுப் பொருளாக பணியாற்றின. பண்டமாற்று முறையில் பெரும்பாலான உள்நாட்டு வியாபாரத்தில் உப்பு மாற்றுப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில காலம் நெல் பண்ட மாற்றுப் பொருளாக விளங்கியுள்ளது. ஆக, வியாபாரத்தில் ஒன்றை யொன்று சார்ந்து இருந்தது. பிற்காலத்தில் வெளிநாட்டு வர்த்தகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

### பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வர்த்தகம் மற்றும் வர்த்தகர்கள்

வியாபாரம் மற்றும் வணிகம் பாண்டிய அரசாட்சிக்கு மிகவும் பொதுவானது, வெளிநாட்டுப் பயணிகள், கப்பல் பயணிகள் மற்றும் பண்டைய கால வரலாற்றறிஞர்கள் நாட்குறிப்பிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் பாண்டிய நாட்டில் வர்த்தகத்தின் செழுமைகளை உயர்த்திக் காட்டுகின்றன. ஈப்ரு மற்றும் இலத்தீன் இலக்கியம், ஏதென்ஸ், அலெக்சாண்டிரியா, ஜாவா, சுமத்திரா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் உள்ள தொல்பொருள் கண்டுபிடிப்புகள் பாண்டிய நாட்டில் வியாபாரத் தளங்கள் இருந்ததைத் தெரிவிக்கின்றன.

**பாண்டியர் காலத்தில் வியாபாரமும் வணிகமும்**




1453இல் கான்ஸ்டான்டி நோபிள் ஓட்டோமான் பேரரசு மற்றும் பைசான்டைன் பேரரசு வீழ்ச்சியால் பட்டு மற்றும் வாசனைத் திரவியங்கள் வியாபார வழித் தடங்கள் தடை செய்யப்பட்டதால் அட்லாண்டிக் பெருங்கடல் ஓரமான ஆப்பிரிக்கா முழுவதும் கடல்வழி தேட வழி வகுத்தது. தமிழரின் கடல் வழிவாணிபத் தடத்தினை இப்படத்தில் காணலாம்.

இக்காலத்தில் தாமிரம், துணி, உப்பு, பூக்கள், சந்தனம், மீன், நெல், தானியங்கள், முத்துக்கள் முதலியன வியாபாரம் செய்யப்பட்டதாக அறிகிறோம். பொருள்கள் விற்குமிடம் அங்காடி என அழைக்கப்பட்டுள்ளது. பகலில் நடப்பதை நாளங்காடி எனவும் இரவில் நடப்பதை அல்லங்காடி எனவும் அழைக்கப்பட்டதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மதுரைக்காண்டப் பகுதியில் குறிப்பிடுகிறார். அவர் மேலும் மதுரை ஒரு இருபெரு நியாமத் எனப்படும் தூங்கா நகரம் எனக் குறிப்பிடுகிறார். அதாவது இடைவெளியின்றி 24 மணி நேரமும் வியாபாரம் நடந்ததாகக் கூறுகிறார்.

### பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம்

பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன. தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி ஆகிய துறைமுகங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இடங்களாக வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 2 2/17/2021 3:11:00 PM

முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும் பாண்டியர் ஈடுபட்டிருந்தனர். குறிப்பாக சிறியதான படகு, திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம் முதலியன உள் நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவு கலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்.

### பண்டைய தமிழக வர்த்தகத்தில் அரசின் பங்கு

வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்கள் யவனர்கள் என அழைக்கப்பட்டனர். தமிழர்களுடன் வர்த்தகம் செய்த அரேபியர்கள் ஜானகர் என்று அழைக்கப்பட்டனர். காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரம் அரசின் உதவியோடு பல்வேறு மொழிகள் பேசும் நவநாகரிகமுள்ள வெளிநாட்டவர்கள் ஒன்று கூடும் இடமாகத் திகழ்ந்ததாகப் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வியாபாரத்திற்கான வசதிகளை வழங்குதல் என இரு வகைகளில் அரசு பங்கு வகித்துள்ளது. சங்க காலத்திலேயே மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கிடையே அடர்ந்த காட்டுப் பகுதியில் சாலை அமைத்துத் தரப்பட்டிருந்தது. பெருவழி எனப்படும் தரை வழி நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாகத் துறைமுகங்கள், கலங்கரை விளக்கம், பண்டகக்காப்பகங்கள் என அயல்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்தால்

#### தமிழ்நாட்டின் முக்கியமான பண்டைய கால வர்த்தக மையங்கள்

1. அழகன் குளம் (ராமநாதபுரம்)
2. மயிலாற்பான் (மயிலாப்பூர், சென்னை)
3. கெபிரிஸ் (காவேரிப் பூம்பட்டினம்)
4. பொடுக்கி (அ) பொடுசி (அரிக்கமேடு, பாண்டிச்சேரி)
5. சோப்டானா (மரக்காணம்)
6. நிகம் (நாகப்பட்டினம்)
7. பெரியப்பட்டிணம்
8. காயல்பட்டிணம்
9. கொள்சி (கொற்கை)
10. கோமாரி (கன்னியாகுமரி)

**ஆலம்பறை**



இடம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தெற்கே 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

முக்கியத்துவம்: இது வர்த்தகத்திற்குரிய ஒரு வளமான இடமாக இருந்தது.

உருவாக்கித் தரப்பட்டிருந்தது. சோழர் காலத்தில் காவிரிப் பூம்பட்டினம் ஒரு முக்கிய துறைமுகமாகவும் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் நாகப்பட்டினம், மரக்காணம், அரிக்க மேடு ஆகிய இடங்களில் சிறிய துறைமுகங்களும் இருந்தன. பாண்டியர் காலத்தில் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம் மற்றும் குமரி ஆகிய இடங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. நெடுஞ்சாலைகளிலும் துறைமுகங்களிலும் சோதனைச் சாவடிகளை நிறுவி சுங்க வரிகள் வசூலிக்கப்பட்டன.

### வியாபாரம் பற்றிய சாணக்கியரின் கருத்து

சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் வட இந்திய மௌரியர் காலப் பொருளாதார நிலையை விவரிக்கிறது. இதன் வழியாக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றைத் தெரிந்து

#### தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் முக்கியமான பண்டைய வர்த்தக நிலையங்கள்

1. ஆலம்பறை
2. அழகன்குளம்
3. பூம்புகார்
4. மரக்காணம்
5. வாசவசமுத்திரம்
6. மயிலாப்பூர்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 3 2/17/2021 3:11:00 PM

**அழகன் குளம்**



**வைகை ஆறு**

இடம்: வங்காள விரிகுடா பகுதியில் அமைந்துள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம்.


முக்கியத்துவம்: மத்திய தரைகடல் சார் நாடுகளின் மட்பாண்டங்கள் பெரும் எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. வேலன்டைன் – II ராஜ்ஜியத்தின் ரோமாபுரி நாணயங்கள், ஆர்கேட் மற்றும் தியோடஸ் – II மட்பாண்டங்கள் மற்றும் ரோமானிய கப்பல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. எகிப்திலிருந்து கிடைத்த இரண்டு பொன் சிலைகள், தமிழ் பிராமி மற்றும் இலங்கை பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தொல்லியல் துறை எட்டு முறை அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு இந்திய – ரோமானிய வியாபாரத் தொடர்பை வெளியுலகிற்கு கொண்டு வந்தது.

கொள்ளலாம். சாணக்கியர் இடைக்காலத்தில் வியாபாரம் ஓரிடத்தில் மையப்படுத்தியிருந்ததாகக் கூறுகிறார். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் அரசு குறிப்பிடும் ஓரிடத்தில் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகிறது. நகரத்தில் வரி செலுத்திய பின் விற்கப்படும். சில வணிகர்கள் மட்டுமே கட்டுப்பாட்டு அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்தனர். உள்ளூர் பொருட்களுக்கு 5 சதவீதமும் வெளிநாட்டுப் பொருட்களுக்கு 10 சதவீதமும் இலாப வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுப் பொருட்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஊக்குவிக்கப்பட்டது. கருவூலம், வரிவிதிப்பு, தொழிற்சாலைகள், வணிகம், விவசாயம், மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்தது. வணிக நடவடிக்கைகளின் வாயிலாக அரசு மேலாண்மை மற்றும் மக்கள் நலன் இரண்டும் சமநிலையில் பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

### வட இந்தியாவில் வணிகம்

அரசியல் மாற்றங்கள் இருந்த போதும் 12ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை இந்தியா செழிப்புடன் விளங்கியது. பால்பன் முதன் முதலாக சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார். அலாவுதின் கில்ஜி பொருட்களின் விலைகளைக் குறைத்து வியாபார வளர்ச்சியைப் பெருக்க வழி வகுத்தார். அவர் பெர்சியாவிலிருந்து வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ய மானியம் வழங்கி ஊக்கப்படுத்தினார். அரேபியர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தினர். தமிழர்கள், குஜராத்தியர்கள் போன்ற இந்திய வர்த்தகர்களை அவர்கள் ஒரு போதும் நசுக்க நினைத்ததில்லை. கடலோர வர்த்தகம் மார்வாடிகள் மற்றும் குஜராத்தியர்கள் கைகளில் இருந்தன. மத்திய மற்றும் மேற்கு ஆசிய நிலப்பகுதி வர்த்தகம் இந்துக்களில் முல்கானியர்களிடமும் ஆப்கானியர், மற்றும் ஈரானியர்களில் குர்சானியர்களிடமும் இருந்தது. வெள்ளி மற்றும் தாமிரம் அடிப்படையில் நாணயமுறை நிறுவப்பட்டு, சுல்தான் காலகட்டத்துக்குள் வர்த்தகம் செழித்தோங்கியது.

மூரிஷ் பயணி கங்கைச் சமவெளி, மால்வார், குஜராத் மற்றும் தென் இந்தியாவில் உள்ள பெரிய நகரங்களில் நடைபெற்ற சந்தையினை விவரித்துள்ளார். டெல்லி, பம்பாய், அகமதாபாத், சோனார், சோனார்கூன், ஜான்புர், லாகூர் ஆகிய இடங்கள் முக்கிய வர்த்தக மையங்களாக விளங்கின. காபூல், அரேபியா, ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் சீனாவில் இருந்து குதிரைகள், உலர் பழங்கள், விலையுயர்ந்த கற்கள், கண்ணாடிப் பொருட்கள், உயர்தர ஜவுளி, கச்சாப்பட்டு, பவளப்பாறைகள், வாசனை எண்ணெய், வெல்வெட் போன்றவைகளை இந்தியா இறக்குமதி செய்தது. இந்திய தயாரிப்புகள் கிழக்கு ஆப்பிரிக்கா, மலாயா, சீனா, ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் பெர்சியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கைபர் கணவாய், ஈராக், புகாரா ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள் மலபார், குஜராத், காலிகட், காம்பாட் மற்றும் மங்களூர் ஆகிய இடங்களில் குடியேறி ஒரு பெரிய வணிக உலகத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தனர்.



### பூம்புகார்

தென் சோழமண்டல கடற்கரை நகரமான பூம்புகார் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது. இந்த நகரம் ஐரோப்பிய குடியேற்றங்களை மட்டுமல்லாமல், கடலோரப் பகுதிகளிலிருந்தும் பல இடங்களுக்கு சர்வதேச வர்த்தக மையங்களைக் கொண்டிருந்தது. பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பூம்புகார் என்றழைக்கப்படும் ஓர் இடமாக இது அமைந்திருந்தது. சோழப் பேரரசின் இரண்டாவது தலைநகரமாக விளங்கிய கடற்கரை நகரம் மற்றும் கிழக்கு மற்றும் மேற்கத்திய மக்களிடையே சர்வதேச வர்த்தகத்தின் முக்கிய மையமாக விளங்கியது. இங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருளாகப் பட்டு இருந்தது. புராதன துறைமுகம் அழிக்கப்பட்டு இப்போது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 5 கி.மீ. வரை கடலில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர். இதற்கு காரணம் நிலம் அரிப்பு அல்லது சுனாமி போன்றவையாக இருக்கலாம் என கருதலாம்.

## ரோம், சீனா மற்றும் ஐரோப்பாவுடன் வர்த்தகம்

ரோமாபுரி மற்றும் கிரேக்க வர்த்தகர்கள் பழங்காலத் தமிழ்நாட்டுக்கு வந்து பண்டைய சோழ, சேர, பாண்டிய மன்னர்களைச் சந்தித்து வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தினர். சீன சோங் வம்சத்தினர் சோழர்களுடன் வலுவான வர்த்தக உறவு கொண்டிருந்தனர். இந்தோனேசியா மற்றும் மலேசியாவை ஆண்டு கொண்டிருந்த ஸ்ரீ விஜய நகர சாம்ராஜ்ஜியத்தை சோழர்கள் கைப்பற்றி, சீனாவுடன் கடலோர வணிகத்தைத் தொடர்ந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சீனத்தின் யுவான்சுவாங் என்பவர் கண்டறிந்து தனது தேசத்திற்கு எடுத்துரைத்துள்ளார்.

16 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்ததன் காரணமாக இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் பரவலாக விரிவடைந்தது. வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக கி.பி.1496இல் இந்தியாவுக்கு வரும் போது அனைத்துப் புதிய கடல் வழிகளையும் கண்டு பிடித்ததால் நாகரிக உலகத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மேலும் போர்த்துகீசியர்களின் இந்திய வருகை பிற ஐரோப்பிய சமூகங்களின் வருகைக்கு வழி வகுத்தது. இவ்வாறாக இந்தியாவின் கடலோர வர்த்தகம் ஐரோப்பியர்கள் மீது ஏகபோக உரிமை கொண்டதாக மாறியது.

ஒரு கட்டத்தில், 17ஆம் நூற்றாண்டு வரை, இந்தியாவின் உலகளாவிய வர்த்தகப்பங்கு 55 விழுக்காடாக இருந்தது. 21ஆம் நூற்றாண்டில் அது 2 விழுக்காடாகத் தற்போது குறைந்து விட்டது. இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வணிகர்கள் படிப்படியாக பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் பல அரசர்களை பல்வேறு பகுதிகளில் வீழ்த்தினர். இந்தியாவின் கடல்வழி வர்த்தகத்தின் மூலம் அவர்கள் வலுவான கடற்படை அதிகாரத்தைப் பெற்றனர். காலப் போக்கில் வர்த்தக நோக்கத்தோடு வந்த இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரிட்டிஷ் பேரரசு என மாற வழிவகுத்தது. மேலும் அவர்கள் ஒட்டுமொத்த பாரதத்தையும் தன் ஆட்சி அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

ஐரோப்பிய வர்த்தகத்தின் விளைவாக 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் துணி மற்றும் கப்பல் கட்டுதல் பாரதத்தில் பெரும்புகழ் பெற்றது. ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்தியப் பிராந்தியங்களில் இளவரசர்களின் கட்டளைகளை அகற்றினர். இதனால் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியப் பொருட்களின் தேவை குறைந்தது. குறிப்பாக இந்திய ஜவுளிப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்ற பாரம்பரியப் பொருட்களின் ஏற்றுமதிக்குத் தடைகளை விதித்தார்கள்.

1600 தொடக்கம் முதல் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கிடையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆசியா முழுவதும் தங்களின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தது. கிழக்கிந்தியக் கம்பெனி தொடக்கக் காலத்தில் இலாபம் ஈட்டுவதே நோக்கமாகக் கொண்டதால் நிர்வகிக்க ஒரு வர்த்தகரை நியமித்து கவனம் செலுத்தினர்.

அவர்கள் ஏகபோக உரிமை கொண்டு பிரிட்டிஷ் காலனி ஏகாதிபத்தியத்தின் முழுநேர முகவர்களாக மாறினர்.

## 1.02 பண்டமாற்று முறை

ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

### பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாவன

ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

1. இருவருக்கும் அப்பொருட்கள் உரிமைமாற்றுத் தேவையாக இருக்க வேண்டும்.
2. பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.

### பண்டமாற்று வணிகத்தின் தடைகள்

பணப் பரிமாற்றம் இடம் பெறாமல் ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் வணிக முறையே பண்டமாற்று வணிக முறையாகும். இம்முறையில் பல குறைபாடுகள் உள்ளன. அவையாவன.

#### 1. இருவருடைய தேவைகள் உடன்பாடில்லாமல் இருத்தல்

இருவரில் முதலாமவருடைய உபரிப் பொருட்கள் இரண்டாமவருக்குத் தேவையாகவும் இரண்டாமவருடைய உபரிப்பொருட்கள் முதலாமவருக்குத் தேவையாகவும் ஒத்துக் போக வேண்டும். இல்லையெனில் பண்டமாற்றம் நிகழாது. எடுத்துக்காட்டாக, அகல்யா என்பவரிடம் உபரியாக நெல் உள்ளது. பாலமுரளி என்பவரிடம் உபரியாக துணி உள்ளது. இவற்றில் அகல்யாவுக்கு பாலமுரளியின் துணி தேவைப்பட வேண்டும். அதுபோலவே பாலமுரளிக்கு அகல்யாவின் நெல் தேவைப்பட வேண்டும்.

#### 2. பொதுவான மதிப்பீட்டு அளவு இல்லாமை

ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி மதிப்பு உண்டு. மதிப்பீட்டில் யாதொரு பொதுமதிப்பும் பின்பற்றப்படுவதில்லை. விலை மதிப்பீட்டின்மைக் காரணமாகப் பொருட்கள் மதிப்பீட்டு ஒப்புமையில் தடைகள் உள்ளன.

#### 3. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் நேரடித் தொடர்பின்மை

விற்போரும் வாங்குவோரும் எப்பொழுதும் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆனால் இம்முறையில் நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியது அவசியம்.

#### 4. உபரி இருப்பு வைக்க இயலாத நிலை

இம்முறையில் பொருட்கள் தேவைக்கு அதிகமாகக் கையிருப்பு இல்லையெனில், வணிகம் நடைபெற வழி ஏற்படாது.

### பணம் கண்டுபிடிப்பு (அ) உருவாக்கம்

மேலே குறிப்பிட்ட அனைத்துத் தடைகளையும் அகற்றப் பணம் என்ற ஒன்றை உருவாக்கி பரிமாற்றத்திற்கான அளவுகோலாகப் பணம் நடைமுறைக்கு வந்தது. உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து பயன்படுத்தப்படும் இடத்துக்குப் பொருட்கள் பரிமாற்றம் செய்யும் பொழுது ஏற்படும் இடம், காலம், இடர்ப்பாடு, அறிவுசார் நிதி உள்ளிட்ட அனைத்துத் தடைகளையும் அகற்றப்பட உதவியாக இருந்தது.

## 1.03 வணிகத் தடைகள்

மனிதத் தேவைகளை நிறைவேற்ற பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களும் பணிகளும் மக்களுக்குச் சென்று சேர வேண்டும். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் வணிகம் முக்கியப் பங்காற்றுகிறது.

பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றம் செய்யும் ஓர் ஒழுங்கு முறை அமைப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது. இவற்றில் அனைத்து வகை வியாபாரச் செயல்பாடுகள் அதாவது மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி, தொழில் முனைவோர் பணிகள் மற்றும் அவற்றின் துணைச் செயல்பாடுகளான வங்கியியல், போக்கு வரத்து, பண்டகக் காப்பகங்கள், காப்பீடு மற்றும் விளம்பரம் உள்ளிட்டவை அடங்கும்.

## 1.04 தொழில் தடைகளும் அவற்றை நீக்கும் வழிகளும்

பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றத்தினூடே ஏற்படும் தடைகளும் இடையூறுகளும் அவற்றை நீக்கும் வழி வகைகளும் பின் வருமாறு :-

### 1. ஆள்சார் தடை

பொருள்கள் தேவைப்படும் நபர்களையும் நியாயமான விலையில் வாங்க விரும்புபவர் களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். உற்பத்தியின் அளவு அதிகரிக்க நுகர்வோரை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

### 2. இடத் தடை

பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில், விமானம், கடல் மற்றும் நில போக்குவரத்து போன்றவை நுகர்வோர்களுக்குப் பொருட்களை கொண்டு செல்ல முக்கியப் போக்குவரத்தாக இருக்கிறது.

### 3. காலத் தடை

நுகர்வு தேவைப்படும் பொழுதும் வாங்க விரும்பும் பொழுதும் பொருட்கள் கிடைக்க வேண்டும். தேவையைக் கணக்கில் கொண்டு பொருட்களைப் பேரளவு உற்பத்திச் செய்து, நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்திச் செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். எனவே பொருட்களைப் பண்டகக் காப்பகங்களில் சேகரித்து வைத்துக் கொள்வதன் மூலம் நுகர் பொருள் தொடர்ந்து கிடைக்க வழி ஏற்படும்.

### 4. நட்ட இடர்ப்பாட்டுத் தடை

போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்க முடிவதில்லை, இந் நட்டத்தை ஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது. தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக் காப்பீடு ஆகியவற்றின் வழியாக நட்டத்தைச் சரிகட்ட முடியும்.

### 5. அறிவுசார் தடை

சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இத்தடைக்கு அறிவுசார் தடை என்கிறோம். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் அத்தடையை நீக்கலாம்.

### 6. நிதி தடை

உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| வணிகம் | நாளங்காடி |
| அல்லங்காடி | வியாபாரத் தடைகள் |
| பண்டமாற்று முறை | |

**பயிற்சி**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ________ என்று பெயர்.

   அ. அங்காடி

   ஆ. சந்தை

   இ. நாளங்காடி

   ஈ. அல்லங்காடி

5BMEVU

2. இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.

   அ. போக்குவரத்து

   ஆ. பண்டகசாலை

   இ. விற்பனையாளர்

   ஈ. காப்பீடு



XI_Tamil_commerce 1-15_001-147.indd 7 2/17/2021 3:11:01 PM

***3.*** ***அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?***

*அ. கௌடில்யர்*

*ஆ. வால்மிகி*

*இ. திருவள்ளுவர்*

*ஈ. இளங்கோவடிகள்*

***4.*** **வியாபாரம் மற்றும் வணிகம் ____ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.**

*அ. பல்லவர்* *ஆ. சோழர்*

*இ. பாண்டியர்* *ஈ. சேரர்*

*5.* **________ முதன்முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.**

*அ. பால்பன்* *ஆ. வாஸ்கோடகாமா*

*இ. அக்பர்* *ஈ. அலாவுதின் கில்ஜி*

**விடைகள்**

*1. அ* *2. அ* *3. அ* *4. இ* *5. அ*

## II. குறுவிடை வினாக்கள்.

1. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
2. நாளங்காடி என்றால் என்ன?
3. அல்லங்காடி என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. வணிகம் பொருள் தருக.
2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக.
3. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5)
2. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?
3. பண்டையத் தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.

# அலகு – 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்


அத்தியாயம்
**2**

# தொழிலின் நோக்கங்கள்

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. மனிதச் செயல்பாடுகளின் பொருள் மற்றும் வகைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.
2. பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள முடியும்.
3. பொருளாதார நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, சிறப்புத் தொழில் மற்றும் தொழில் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.
4. தொழில் நடவடிக்கைகளின் இயல்புகளை அறிந்து கொள்ள முடியும்.
5. தொழில், சிறப்புத் தொழில், வேலைவாய்ப்பு ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.




## 2.01 மனிதச் செயல்பாடுகள்

மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம். மனிதச் செயல்பாடுகளைப் பொருளாதாரச் செயல் பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். மனிதச் செயல்பாடுகளைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் எளிதாக அறியலாம்.

### I. பொருளாதாரச் செயல்பாடுகள்

எந்தவொரு பொருளாதாரச் செயல்பாடு அல்லது நடவடிக்கையின் நோக்கம் இலாபம் ஈட்டுவதே ஆகும். இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

### எடுத்துக்காட்டுகள்

1. தயாரிப்பாளர்களால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது
2. மொத்த வியாபாரிகளால் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது
3. சில்லறை வியாபாரிகளால் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது
4. மருத்துவர்களால் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனைகள்
5. பட்டயக் கணக்காளர்களால் வழங்கப்படும் கணக்கியல் சேவைகள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 9 2/17/2021 3:11:01 PM

**பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் இடையே உள்ள வேறுபாடுகள்**

| பொருளாதாரச் செயல்பாடுகள் | பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் |
|---|---|
| 1. **வரைவிலக்கணம்:** வாழ்வாதாரத்திற்காக தேவையான பணம், நிதி சார்ந்த ஆதாயங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்பாடுகள் எனப்படும்.<br>**எடுத்துக்காட்டு:** பழவியாபாரி பழங்களை விற்பது. | மகிழ்ச்சி, அன்பு, இரக்கம், உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** தாய் தன் குடும்பத்திற்காக உணவு சமைப்பது. |
| 2. **நோக்கம்:** இலாபம் ஈட்டுவது அல்லது நிதி சார்ந்த ஆதாயம் அடைவது ஒன்றே நோக்கம் ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** ஒரு வழக்கறிஞர் தன் பணியைச் செய்வது. | சமூக, உளவியல், உணர்வுரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** கோவிலுக்குச் செல்வது. |
| 3. **பணத்தின் அடிப்படையில் அளவிடல்:** அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளையும் பண மதிப்பின் அடிப்படையில் அளவிடலாம்.<br>**எடுத்துக்காட்டு:** ஒரு மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் ₹500 வசூலித்தல். | பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளை பணமதிப்பின் அடிப்படையில் அளவிட முடியாது. இவைகள் எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** ஒரு அரசு சாரா அமைப்பு. ஏழைக்குழந்தைகளுக்கு இலவசமாக உடைகள் வழங்குவதைக் கூறலாம். |
| 4. **உறவு:** பொருளாதார நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை.<br>**எடுத்துக்காட்டு:** ராம் என்பவர் சொந்தமாக வீடு வாங்குவதற்காக தனது ஊதியத்தின் ஒரு பகுதியைச் சேமித்து வருவது. | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதில்லை.<br>**எடுத்துக்காட்டு:** நன்கொடையாகப் பெற்ற பணத்தை அறக்கொடை பணிகளுக்குச் செலவிடுவது. |
| 5. **விளைவு:** அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி, கொள்முதல், விநியோகம், நுகர்வு ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** நோக்கியா நிறுவனம் கைபேசிகளை உற்பத்தி செய்து, விநியோகித்து இந்தியா முழுவதும் விற்பனை செய்கிறது. | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகளின் இறுதி விளைவு நடவடிக்கைகள் மேற்கொள்பவரின் மனம், உணர்வு, உளவியல் சார்ந்த மனநிறைவு ஆகும்.<br>**எடுத்துக்காட்டு:** சோனா என்பவர் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி புகட்டுதல். |
| 6. **கால அளவு:** பொருளாதார நடவடிக்கைகள் திரும்பத்திரும்ப நிகழும் தன்மை கொண்டது.<br>**எடுத்துக்காட்டு:** குல்பி ஐஸ்கிரீம் விற்பவர் நாள்தோறும் மாலை வேளைகளில் விற்பார். | இவை தொடர்ந்து நிகழாது. மேலும் நேரம் கிடைக்கும்பொழுது நிகழும்.<br>**எடுத்துக்காட்டு:** ஆதரவற்றோர் இல்லம் சென்று பார்த்தல். |
| 7. **உருவாக காரணம்:** பொருளாதார நடவடிக்கைகள் மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது. | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் உணர்வுப் பூர்வமாக மகிழ்ச்சியினை அனுபவிக்கச் செய்யப்படுகிறது. |



XI_Tamil_commerce 1-15_001-147.indd 10 2/17/2021 3:11:01 PM

## II. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

சமூக மற்றும் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் எனலாம். இதன் நோக்கம் இலாபம் ஈட்டுவதாக இருக்காது.

**எடுத்துக்காட்டுகள்**

1. குடும்பத்திற்கு உணவு சமைப்பது
2. விழாக்கள் கொண்டாடுவது
3. திரை அரங்கங்களில் திரைப்படம் பார்ப்பது
4. தியானம் செய்வது

பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் இடையே உள்ள வேறுபாடுகள்

## 2.02 பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள்

பொருள் ஈட்டுவதற்காகவே பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக மக்கள் வழக்கமாக செய்து வரும் செயல்பாடுகளை பணிகள் (occupations) என்று அழைக்கலாம். அத்தகைய பணிகளை பின்வருமாறு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அ. வேலை (Employment)

ஆ. சிறப்புத்தொழில் (Profession)

இ. தொழில் (Business)

### அ. வேலை

வேலை என்பது கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்குப் பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர் பணியமர்த்துநர் என்றும், அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மேலாளர்கள், எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள், தொழிற்சாலை வேலையாட்கள் ஆகியோர் பணியாளர்களுக்கு உதாரணம் ஆகும்.

**இயல்புகள்**

பணியமர்த்துபவருக்கும் பணியாளருக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும். பணியாளர் அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் தனக்களிக்கப்பட்ட பணியினை நிறைவேற்றுகிறார். பணியாளர் வழங்கும் பணியின் மதிப்பளவிற்கு அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஒரு பணியாளர் தன்னை பணியமர்த்திய அமைப்பின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பணியாற்ற வேண்டும்.

### ஆ. சிறப்புத் தொழில்

சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் ஆகும். வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்புத்தொழில் எனலாம். வேலை என்பதைவிட சிறப்புத் தொழில் மேம்பட்டது ஆகும்.

**இயல்புகள்**

சிறப்புத் தொழில் புரிவோர் அத்துறையில் சிறப்பறிவு பெற்றவராக இருப்பார்கள். அவர்கள் அத்துறையில் முறையான கல்வியறிவு பெற்றிருப்பர். இச்சிறப்புத் தொழில் புரிவோர் அவர்களை நெறிப்படுத்தும் அமைப்பின் நடத்தை விதிகளுக்கு உட்பட்டுச் சேவை புரிவார்கள். சிறப்புத் தொழில் புரிவோர் வழங்கும் பணிகளில் சேவை நோக்கம் மேலோங்கி இருக்கும்.

### இ. தொழில்

தொழில் என்பது இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களையும், பணிகளையும், உற்பத்தி, விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை வழக்கமாக மேற்கொள்ளும் செயல்முறையாகும்.

தொழில் என்பது "இலாபம் பெறும் நோக்குடன் வழக்கமாகப் பொருட்களையும் பணிகளையும் விற்பனை செய்யும், பரிமாற்றம் செய்யும் நடவடிக்கையாகும்" என வரையறுக்கப் பட்டிருக்கிறது.

**ஜேம்ஸ் ஸ்டீபன்சன்** என்பவரது வரைவிலக்கணப்படி "தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்".

**ஹேனே** என்பவரது வரைவிலக்கணப்படி "தொழில் என்பது பொருட்களை வாங்கி விற்பதன் மூலம் செல்வம் சேர்க்கும் மனித நடவடிக்கை ஆகும்".

தொழில் நடவடிக்கைகள் பொருட்களை உற்பத்தி செய்வது அல்லது தயாரிப்பு நிலைகள் வழியே

செலுத்துவதுடன் தொடர்புடையது ஆகும்.உற்பத்தித் தொழில் மூலம் நுகர்வுப் பொருட்களுக்கு மூலப்பொருட்களை வாங்குவது மூலம் பயன்பாடு (பொருட்களுக்கு பொருட்களைப் பயன்படுத்துதல்) உருவாகிறது. இறுதியாக நுகர்வோரைச் சென்றடைகிறது.

### தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

தொழில் செயல்பாடுகளை அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

### 1. தொழில் அளவு அடிப்படையில்

அளவின் அடிப்படையில் தொழில் செயல்பாடுகள் இருபெரும் பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை

அ. சிற்றளவு தொழில்கள்

ஆ. பேரளவு தொழில்கள்

**அ. சிற்றளவு தொழில்கள்** (Small Scale Business)

சிற்றளவு தொழில்களுக்கு குறைந்த மூலதனம் தேவைப்படும். இவற்றிற்கு குறைந்த அளவு பணியாளர்கள் மட்டுமே போதும். குறைவான அளவிற்குப்பொருட்கள் உற்பத்திச்செய்யப்படுகின்றன.

எடுத்துக்காட்டு : கைத்தறி நெசவு

**ஆ. பேரளவு தொழில்கள்** (Large Scale Business)

பேரளவு தொழில்களுக்கு அதிக மூலதனம் தேவை மற்றும் அதிகப் பணியாளர்கள் பயன்படுத்தி பேரளவு பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள்:

ஜவுளி தொழிற்சாலை (ரேமண்ட், ராமராஜ் காட்டன்)

உணவு எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை (சன்பிளவர், சபோலா)

### 2. உரிமை அடிப்படையில்

தொழில்கள் உரிமை அடிப்படையில் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது.

அ. தனியார் நிறுவனங்கள்

ஆ. பொது நிறுவனங்கள்

இ. இணை நிறுவனங்கள்

### அ. தனியார் நிறுவனங்கள்

தனி நபரால்/தனி நபர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வாகம், கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட யாவும் மேற்கொள்ளும் தொழில் அமைப்புகள் தனியார் நிறுவனங்கள் எனலாம். இது அரசால் உருவாக்கப்பட்டது அல்ல.

எடுத்துக்காட்டுகள் :

தனியாள் வணிகம் / (சுந்தர் எழுதுபொருள் அங்காடி)

கூட்டாளி நிறுவனம் (ரமேஷ் பிரதர்ஸ்)

### ஆ பொதுத்துறை நிறுவனங்கள்

அரசாங்கத்தின் மூலமாக அல்லது அரசின் அதிகாரம் பெற்ற முகமை மூலமாக உருவாக்கப்பட்டு சட்டத்தால் நடத்தப்படும் தொழிலமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும்.

பொதுத்துறை தொழிலமைப்பின் வடிவங்களாவன.

1. துறைவாரி அமைப்பு (பொதுப் பணித்துறை)
2. பொதுக் கழகம் (இயற்கை மற்றும் எரிவாயு கழகம்)
3. அரசு நிறுமம் (மாநில வாணிகக் கழகம்)

### இ. இணை நிறுவனங்கள்

அரசும், தனிநபரும் ஒருங்கிணைந்து உருவாக்கி ஒரு தொழிலமைப்பை கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும்.

### 3. பணிகள் அடிப்படையில்

பணிகள் அடிப்படையில் தொழிற் செயல்பாடுகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

### அ. உற்பத்தித் தொழில்

நுகர்வு சார்ந்த அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் அனைத்துத் தயாரிப்பு நிலைகளையும் உள்ளடக்கிய செயல்பாடுகளையும் உற்பத்தித் தொழில் என்கிறோம்.

எடுத்துக்காட்டுகள்:

ரொட்டி, வெண்ணெய், காலணிகள் மற்றும் மூலதனப் பொருட்கள் (இயந்திரங்கள்) தயாரிக்கும் நிறுவனங்கள்

### ஆ. வணிகம்

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்களுக்குப் பொருட்கள் எவ்வித தங்கு தடையுமின்றி எளிதாகச் சென்று உதவும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது வணிகம் ஆகும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 12 2/17/2021 3:11:02 PM

**தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு – ஓர் ஒப்பீடு**

| தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **1. பணியின் தன்மை**<br>சரக்கு மற்றும் சேவையைப் பொது மக்களுக்கு அளித்தல். | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல். | பணியாளர்களுக்கு வழங்கிய செயலைச் செய்தல். |
| **2. தகுதி**<br>குறைந்த பட்சத் தகுதி என்று ஏதுமில்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்சத் தகுதி தேவையில்லை. |
| **3. மூலதனம்**<br>நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும். | இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும். | மூலதனம் ஏதும் தேவையில்லை. |
| **4. வெகுமதி**<br>இலாபம் | தொழில்முறைக் கட்டணம் | கூலி / சம்பளம் |
| **5. இடர்**<br>இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது. | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதுமில்லை. |
| **6. உரிமை மாற்றம்**<br>சில நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |



XI_Tamil_commerce 1-15_001-147.indd 13 2/17/2021 3:11:02 PM

## 2.03 தொழிலின் தன்மைகள்

தொழிலின் தன்மைகள் பின்வருமாறு

### அ. பொருட்களை உற்பத்தி செய்தல் / திரட்டுதல்

மனிதத் தேவையைப் பூர்த்தி செய்யப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.

### ஆ. விற்பனை (அ) பரிமாற்றம்

தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும். தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காகத் துணியை நெய்தல் அது தொழில் செயல்பாடு ஆகாது.

### இ. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது

பொருட்கள் உற்பத்தி செய்தல் / திரட்டுதல் என்பது நுகர்வு பொருட்களான துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும் உற்பத்திப் பொருட்களான இயந்திரமும் சார்ந்ததாகும்.

சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீடு தொடர்புடையதாகும்.

### ஈ. வணிக ஒழுங்கு

தனிப்பட்ட முறையில் வாங்கி விற்பது என்பது தொழிலாகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். உதாரணமாக ஒருவர் தன்னுடைய சொந்தப் பயன்பாட்டிற்கு இருசக்கர மோட்டார் வாகனத்தை வாங்கி குறிப்பிட்ட காலம் கழித்து அதை இலாபத்திற்கு விற்று விட்டால் அது தொழிலாகாது. பொருட்களை வாங்கி விற்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தால் மட்டுமே அதை தொழிலாகக் கருத முடியும்.

### உ. இலாப நோக்கம்

தொழிலின் மிக முக்கியத் தன்மை இலாபம் ஈட்டுவது ஆகும். மனித இனம் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு தன்னுடையப் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம். சிலர் இலாபம் ஈட்டும் நோக்குடன் அதிக நபர்களைத் தொழிலில் ஈடுபட வைக்கிறது.

### ஊ. இடர்ப்பாட்டிற்கான கூறு

தொழிலில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும். ஒரு வகையில் தன்னுடைய தொழிலைத் திறம்பட நிர்வாகம் செய்தாலும் இலாபம் என்பது மற்ற காரணிகளை சார்ந்து உள்ளது. அவையாவன, நுகர்வோர் விருப்பு வெறுப்பு, மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து சிக்கல், மின்சாரப் பற்றாக்குறை ஆகியன ஆகும். இதன் மூலம் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றது ஆகும். எனவே தான் இலாபம் ஈட்டுதல் என்பது இடர்ப்பாட்டை எதிர் கொள்வதற்கான வெகுமதியாகக் கருதப்படுகிறது. ஆகவே தொழில் செயல்பாடுகள் யாவும் இடர்ப்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

## 2.04 தொழிலின் நோக்கங்கள்

ஒவ்வொரு தொழில் நிறுவனமும் தனக்கென குறிக்கோள்களை வகுத்துக் கொண்டு தொழில் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொள்வதாகும்.

தொழிலின் பல்வேறு விதமான நோக்கங்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### அ. பொருளாதார நோக்கங்கள்

தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது இலாபம் ஈட்டுவதே ஆகும். மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குவதல், புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும்.

### ஆ. சமூக நோக்கங்கள்

சமூக நலனைப் பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். எந்த தொழில் நடவடிக்கைகளும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது.

### இ. நிறுவன நோக்கங்கள்

தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் பொருளாதாரத்திற்கு உதவும் வகையில்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 14 2/17/2021 3:11:02 PM

அமையப்பெற வேண்டும். அவை நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீன மயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல், நுகர்வோருக்குத் திருப்திப்படுத்துதல் ஆகியன மூலமாக அமையலாம்.

### ஈ. மனித நோக்கங்கள்

தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும். மேலும் இயலாதவர்கள், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும்.

பணியாளர்களின், பொருளாதார, சமூக, உளவியல் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும்.

### உ. தேசிய நோக்கங்கள்

ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும். எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கலைச்சொற்கள்**

மனிதச் செயல்பாடுகள்

பொருளாதாரச் செயல்பாடுகள்

பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

தொழில்

வேலைவாய்ப்பு

5C66Z5

**நமது சிந்தனைக்கு**

வேலைவாய்ப்பில் வெள்ளை கழுத்துப்பட்டை, நீலம் கழுத்துப்பட்டை, ஊதா கழுத்துப்பட்டை பற்றி தெரியுமா? அதைப் பற்றிய தகவல்களைத் திரட்டவும்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **தொழிலின் முதன்மைக் குறிக்கோள் __________**

   அ. இலாபம் ஈட்டுதல்

   ஆ. இலாபம் ஈட்டாமல் இருத்தல்

   இ. சிறப்புத் தேர்ச்சி

   ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

2. **மருத்துவர் தொழில் என்பது _________**

   அ. வேலைவாய்ப்பு

   ஆ. தொழில்

   இ. சிறப்புத் தொழில்

   ஈ. தனியார் வணிகம்

3. **பின்வருவனற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?**

   அ. பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்

   ஆ. இடர் ஏற்றல்

   இ. பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை

   ஈ. சம்பளம் / கூலி

4. **அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

   அ. பொருளாதாரச் செயல்பாடுகள்

   ஆ. பண நடவடிக்கைகள்

   இ. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

   ஈ. நிதி நடவடிக்கைகள்

**விடைகள்**

*1. அ   2. இ 3. ஈ   4. இ*

## II. குறுவிடை வினாக்கள்.

1. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
2. தொழில் என்றால் என்ன?
3. வேலை என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.
2. சிறு குறிப்பு வரைக.

   அ) தொழில் ஆ) சிறப்புத் தொழில்
3. தொழிலின் கருத்துக்களை விவரி.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. தொழிலின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)
2. தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு – ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)
3. தொழிலின் நோக்கங்களை விவரி.

## குறிப்பு நூல்கள்.


1. *Gupta C.B, Business Organization and Management, Sultan Chand & Sons, Education Publishers, New Delhi.*
2. *Balaji C.D, and Prasad G., Principles of Commerce, Margham Publications, Chennai*




XI_Tamil_commerce 1-15_001-147.indd 16 2/17/2021 3:11:02 PM

## அலகு – 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்

அத்தியாயம்
**3**

# தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்".

– குறள் 675

5CF31S

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. தொழில் நடவடிக்கைகளின் வகைகள்.
2. உற்பத்தி தொழில்.
3. முதன்மை உற்பத்தித் தொழில், இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில் மற்றும் சேவைத் தொழில்.
4. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஆகியவற்றிற்கும் உள்ள வேறுபாடுகள்.
5. வியாபாரத்திற்கு உறுதுணைபுரிபவை ஆகியவற்றை புரிந்துக் கொள்ள முடியும்.

### அறிமுகம்

பொருளை உற்பத்தி செய்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொருளை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் உற்பத்தி செய்ப்பட்ட பொருட்களை இடைநிலையர்களான மொத்த வணிகர், சில்லரை வணிகர்கள், முகர்வர்கள், பொருள் பகிர்வாளர்கள் மூலம் இறுதி நுகர்வோர்கட்கு முடிவுற்ற பொருளை கொண்டு சேர்க்கின்றனர். இவ்வாறு பொருட்களின் உற்பத்திக் கூடத்திலிருந்து நுகரும் மையங்கள் வரை நடைபெறும் அனைத்துச் செயல்பாடுகளையும் தொழில் நடவடிக்கைகள் எனலாம்.

எல்லாத் தொழில் நடவடிக்கைகளும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் .

அ. உற்பத்தித் தொழில்

ஆ. வணிகம்

## 3.01 உற்பத்தித் தொழில்


வளங்களை இயந்திரம் மற்றும் தொழில்நுட்பத் திறமையுடன் உபயோகிக்கவல்ல பொருளாக மாற்றக்கூடியதே உற்பத்தித் தொழில் என்கிறோம். ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையைத் தயாரித்து அளிக்கும் முறையை உற்பத்தித் தொழில் என்கிறோம். உதாரணமாக சிமெண்ட் உற்பத்தித் தொழில், ஜவுளி உற்பத்தித் தொழில். உற்பத்தித் தொழிலின் கீழ் இருக்கின்ற ஒவ்வொரு நிறுமத்தையும் ஓர் அலகு என்கிறோம். உதாரணம். கங்கா – காவேரி உற்பத்தித் தொழிற்சாலை.

### உற்பத்தித் தொழில்களின் வகைகள்

உற்பத்தித் தொழில்களைச் செயல்பாடுகள் மற்றும் அளவுகள் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 17 2/17/2021 3:11:02 PM






### I. செயல்பாடுகள் அடிப்படையில்

அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்

ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்

இ. சேவைத் தொழில்கள்

### அ. முதன்மை உற்பத்தித் தொழில்கள்

முதன்மை உற்பத்தித் தொழில்கள் இயற்கையோடு தொடர்புடையவை. இது இரண்டு வகைப்படும்.

*1. பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்: (Extractive Industries)*

பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களைக் கொண்டது எடுத்துக்காட்டு: நிலக்கரி மற்றும் கச்சா எண்ணை எடுத்தல் முதலியவை.

*2. மரபுசார் உற்பத்தித் தொழில்கள் (Genetic Industries)*

தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன மரபுசார் உற்பத்தித்தொழில்கள் எனப் படுகின்றன. எடுத்துக்காட்டு: கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு .

### ஆ. இரண்டாம் நிலை உற்பத்தித் தொழில்கள்

இது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியது.

1. தயாரிப்புத் தொழில்கள் (Manufacturing Industries)
2. கட்டுமானத் தொழில்கள் (Construction Industries)

### 1. தயாரிப்புத் தொழில்கள்

கச்சாப் பொருட்கள் அல்லது பகுதியாக முடிவு பெற்றுப் பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய



அளவில் முடிவுற்ற முழுப்பொருளாக மாற்றும் தொழில்களையே தயாரிப்புத் தொழில்கள் என்கிறோம். இவை கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

i. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்

ii. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்

iii. தொடர்முறை உற்பத்தித் தொழில்

iv. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள்

### i. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்:

இத்தொழிற்சாலை ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையானப் பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரிப்பதை மேற்கொள்ளும் எடுத்துக்காட்டாக: எண்ணை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில் கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பிரித்தல்.

### ii. செயற்கைப் பொருள் உற்பத்தித் தொழில்கள்:

பல்வேறு வகையான கூட்டுப்பொருட்களை ஒன்றாகச் சேர்த்துப் புதிதாக ஒரு பொருளை உருவாக்கும் தொழிற்சாலைகளையே செயற்கைப் பொருள் உற்பத்தித் தொழில்கள் எனப்படுகிறது. எடுத்துக்காட்டு: பாலியஸ்டர், நைலான், டெஃலான்.

### iii. தொடர் முறை உற்பத்தித் தொழில்கள்:

கச்சாப் பொருள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இறுதியில் ஒரு முடிவுற்ற பொருளாக மாற்றுவது தொடர் முறை உற்பத்தித் தொழில் எனப்படுகிறது. எடுத்துக்காட்டு: குளிர்பானம் தயாரித்தல், மருந்துகள் தயாரித்தல், வண்ணம் தயாரித்தல் போன்றவை.

### iv. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்கள் :

இத்தொழிற்சாலையில் பல்வேறு முடிவுற்ற பொருட்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, ஒரு முற்றுப்பெற்ற பொருளாக மாற்றப்படுகிறது. எடுத்துக்காட்டு: தொலைக்காட்சி, மகிழுந்து, கணினி.

### 2. கட்டுமானத் தொழில்கள்

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே, கட்டுமானத் தொழிற்சாலை இதில் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி திட்டமிடல் உண்டு.

### இ. சேவைத் தொழில்கள்

இத்தொழில்கள் இயல் பொருட்களை உற்பத்தி செய்வது இல்லை. மாறாக சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன. இவ்வகை சேவை வியாபாரம் பலவகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன. எடுத்துக்காட்டு: மருத்துவ கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான வங்கியியல், காப்பீடு, பண்டகக் காப்பு ஆகியவை இந்தச் சேவைத் தொழிலில் உள்ளடங்கும். இவ்வகை தொழில்கள் கீழ்வருமாறு வகைப் படுத்தபடுகிறது.

*i.* **தனிச் சேவை:** தனி மனிதன் மற்றும் தனியார் பயிலகமும் அவர்களின் சேவையை மற்றவர்களுக்கு விற்பது தனிச் சேவையாகும் எடுத்துக்காட்டு: குழாய்கள் மற்றும் தொட்டிகளைச் சீர் செய்பவர், உணவகம், தனியார் பள்ளிகள், வீட்டு வேலையாட்கள்.

*ii.* **பொதுச் சேவை:** அரசு மருத்துவமனை, பள்ளிகள், காவல் நிலையம் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் அரசுக்காக எந்த ஓர் இலாப நோக்கமும் இல்லாமல் சேவை புரிவதே பொதுச்சேவை.

*iii.* **விநியோகச் சேவை:** போக்குவரத்து, விற்பனை, பண்டகக் காப்பு, பொருட்கள் ஏற்றிச்செல்லுதல், விற்பனையாளர்கள் முதலியன விநியோகச் சேவையில் அடங்கும்.

*iv.* **நிதிச் சேவை:** வங்கியியல், கணக்கீடு மற்றும் காப்பீடு ஆகியவை இதில் அடங்கும்.

*v.* **தனித்துவச் சேவைகள்:** சிறப்புத் தொழில், திறமை மற்றும் உயர் தொழில் நுட்பச் சேவை ஆகியன இச்சேவையின் கீழ் அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு: மென் பொருள் வளர்ச்சித் தணிக்கையியல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, மருத்துவ ஆலோசனை, பரஸ்பர நிதி மேலாண்மைச் சேவை, வெளியாட்களிடம் பணி கொடுத்துச் செய்தல் (BPO).

*vi.* **தனித்திறன் சேவை:** புதுப்புது எண்ணத்தை உருவாக்குதல், புது தொழில் நுட்பத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் புதுக்கொள்கைகளைக் குறிப்பிட்ட வல்லமையுடைய தனி நபரிடம் ஒப்படைத்தல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

### II. அளவுகள் அடிப்படையில்

தொழில் முதலீடுகளின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

*i.* குறுந் தொழில்கள்

*ii.* சிறு தொழில்கள்

*iii.* நடுத்தரத் தொழில்கள்

*iv.* பெருந் தொழில்கள்

## 3.02 வணிகம்

பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து நுகரும் இடத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்கான அனைத்துச் செயல்பாடுகளையும் உள்ளடக்கியதே வணிகம் எனப்படுகிறது. எவ்லின் தாமஸ் அவர்களின் கூற்றுப்படி, "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும் விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்". வணிகம் என்பது வியாபாரம் மட்டுமல்லாமல் இதர சேவைகளான போக்குவரத்து, பண்டகக் காப்பு, கட்டுமப் பணி, காப்பீடு, வங்கிச் சேவை, விற்பனை அதிகரிப்பு உள்ளிட்டவைகள் அடங்கியதாகும். மேலும் இது தொடர்பாக அறிவதற்கு அத்தியாயம் இரண்டினைப் பார்க்கவும். வணிகம் கீழ்க்காணும் செயல்பாடுகளை உள்ளடக்கியது.

## 3.03 வியாபாரம்

### i. வியாபாரம்

உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே செயல்படும் நபர் வணிகர் நிலை நுகர்வோருக்குக் கொண்டு சேர்க்கும் செயலையும் உள்ளடக்குகிறது. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே செயல்படும் நபர் வணிகர் ஆவார். வணிகத்தை உள்நாட்டு வணிகம் எனவும் வெளிநாட்டு வணிகம் எனவும் வகைப்படுத்தலாம். உள்நாட்டு வணிகத்தை மொத்த வணிகம் என்றும் சில்லறை வணிகம் என்றும் மேலும் வகைப்படுத்தலாம்.

### ii. போக்குவரத்து

உற்பத்தி செய்த பொருட்களை உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது அரிது. அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களுக்குச் சென்று சேர்க்க வேண்டிய பணியைப் போக்குவரத்துச் செய்கிறது. அதாவது உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்கட்கு பொருளை நகர்த்தும் ஒரு ஊடகமாக (Medium) போக்குவரத்து விளங்குகிறது.

### iii. வங்கியியல்

வங்கிகள் தொழில் அமைப்புகளிடம் உள்ள பணத்தை வைப்புகளாக பெறுவதுடன் தொழில் அமைப்புகட்கு தேவைப்படும் நிதியை பல்வேறு கடன் திட்டங்கள் மூலம் கிடைக்க வழிவகை செய்கிறது. வங்கி நிதியின் மூலம் தொழில் அமைப்புகள் நிலை சொத்து வாங்குதல், சரக்குக் கொள்முதல், கச்சாப்பொருட்கள் வாங்குதல், இயந்திரங்கள் வாங்குதல், கட்டுமான பணிகளை மேற்கொள்ளும் நடைமுறைச் செலவுகளை செய்தல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்துகின்றன.

### iv. காப்பீடு

எல்லாத் தொழில் நிறுமங்களும் தீ, களவு, சூறாவளி, நிலநடுக்கம், கடல் நடுக்கம், வெடிவிபத்து, இயந்திரக் கோளாறு போன்ற பலதரப்பட்ட இடர்ப்பாட்டால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வித இடர்ப்பாட்டால் பொருள் நட்டமோ அல்லது பண நட்டமோ ஏற்பட்டால், காப்பீட்டு நிறுமங்களிலிருந்து இழப்பீட்டை (Indemnity) பெற்று தங்களை பாதுகாத்து கொள்ளும் உன்னதமான உதவியை காப்பீடு நல்குகிறது.

**உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் – ஓர் ஒப்பீடு**

| உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|
| 1. பொருள் | | |
| உற்பத்தித் தொழில் என்ற சொல் பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களைத் தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. | வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது. | வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |
| 2. உள்ளடக்கம் | | |
| கச்சாப் பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கையையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| 3. முதல் | | |
| பொதுவாக உற்பத்தித் தொழிலுக்கு அதிக அளவு முதலீடு என்பது தேவைப்படுகிறது. | வணிகத்திற்கு முதல் குறைந்த அளவே தேவைப்படுகிறது. | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் போதுமான முதல் தேவைப்படும். |
| 4. இடர்ப்பாடு | | |
| அதிக இடர்ப்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்ப்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்ப்பாட்டைக் கொண்டது. |
| 5. பரிமாணம் | | |
| பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |
| 6. பயன்பாட்டு உருவாக்கம் | | |
| உருவப் பயன்பாட்டை உருவாக்குகிறது. | பொருட்களைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குக் கொண்டு செல்வதன் மூலம் இடப்பயன்பாட்டை உருவாக்குகிறது. | பரிவர்த்தனை மூலம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது. |

### v. பண்டகக் காப்பு

பண்டகக் காப்பகங்கள் தொழில் நிறுவனங்களின் பொருட்களைச் சேமித்து வைக்க பேருதவி புரிகின்றன. பொருட்கள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதால் விலை சீராக இருக்க வகை செய்யப்படுகிறது.

### vi. தகவல் தொடர்பு

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு செய்யப்படும் தகவல் பரிமாற்றமே தகவல் தொடர்பு எனப்படுகிறது இது வாய் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இருக்கலாம். பொருளின் விலை, அளித்த தள்ளுபடி கடன் வசதி காலம் போன்ற விற்பனை சார்ந்த நடவடிக்கைகளை வாங்குவோர் விற்போர் இடையே மேற்கொள்வதற்கு தகவல்தொடர்பு தேவைப்படுகிறது உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், மற்றும் நுகர்வோர்கள் இடையே தகவல் பரிமாற்றம் தற்போது இணையம், அலைபேசி, தொலைபேசி, போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக நடைபெறுகிறது.

### vii. விளம்பரமும் விற்பாண்மையும்

சந்தையில் கிடைக்கும் பல்வேறு வகையான பொருட்களை பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு விளம்பரம் அளிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி , நாளிதழ், இதழ்கள், இணையம், மற்றும் பதாகைகள் போன்ற ஊடகங்கள் வாயிலாக பொருட்கள் பற்றிய விளம்பரம் செய்யப்படுகிறது. விற்பாண்மை என்பது வணிகப் பொருள்களை விற்பதில் கொண்டுள்ள திறன்மிகு கலையாகும். இது தனிமனித விற்பனையை ஏற்படுத்துகிறது. நுகர்வோர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து நேரடியாக பொருட்களுக்கான முனைவை பெற்று பொருட்களை வழங்கி விற்பனையை அதிகரிக்க உதவுகிறது. சேவை மற்றும் உற்பத்திப் பொருட்களை விற்பதில் இதன் பங்கு அதிகமாக இருக்கிறது.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது**

   அ. கட்டுமானத் தொழில்கள்

   ஆ. தயாரிப்புத் தொழில்கள்

   இ. பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்

   ஈ. மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

2. **ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது**

   அ. பகுப்பாய்வுஉற்பத்தித் தொழில்

   ஆ. செயற்கை பொருள்உற்பத்தித் தொழில்

   இ. தொடர்முறைஉற்பத்தித் தொழில்

   ஈ. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

3. **அதிக அளவு அபாயத்தைக் கொண்டது**

   அ. உற்பத்தித் தொழில்

   ஆ. வணிகம்

   இ. வியாபாரம்

   ஈ. இவை அனைத்தும்

5CNY3F

**விடைகள்**

1. இ  2. இ  3. அ

### II. குறுவிடை வினாக்கள்.

1. வணிகத்தை வரையறு.
2. உற்பத்தித் தொழில் என்றால் என்ன?
3. வியாபாரம் என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
2. போக்குவரத்து – சிறுகுறிப்பு வரைக.

### IV. பெருவிடை வினாக்கள்.

1. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் – ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)
2. சிறு குறிப்பு வரைக.

   அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்

   ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

   இ) கட்டுமானத் தொழில்கள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 22 2/17/2021 3:11:03 PM

## அலகு – 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம்
**4**

# தனியாள் வணிகம்

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு". – குறள் 467

5CXU53

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. தொழில் அமைப்புகளின் வடிவங்கள் பற்றி அறிந்து கொள்ள இயலும்.
2. தனியாள் வணிகம் – பொருள், பண்புகள், நன்மைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

## 4.01 தொழில் அமைப்பு

### அறிமுகம்

தொழில் அமைப்பு என்பது உற்பத்தித் தொழில் அல்லது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாகும். எந்த ஒரு வணிகச் செயலையும் மேற்கொள்ளும் நிறுவன ஏற்பாடுகளைத் தொழிலமைப்புகள் பிரதிபலிக்கின்றன. சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத உடன்படிக்கையினால் கூட்டாகத் தொழிலை நடத்துவதற்காகத் தனியாகவோ அல்லது அனைவருமோ அத்தொழிலை நடத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் கூடியதே இவ்வமைப்புகளாகும்.


ஒவ்வொரு வியாபார நிறுவனமும் தனியான மற்றும் மாறுபட்ட வியாபாரப் பிரிவுகளைக் கொண்டதாகும். அத்தொழிலமைப்பு தனித்துவமான அடையாளமும் மற்றும் தனிப்பட்ட உரிமையும் உடையதாகும். உரிமை, மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இவை சிறந்த நிறுவனங்களாக மாறமுடியும். வீலர் என்பவர் இதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வழங்குகிறார். " தொழில் அமைப்பு என்பது தனியான கொள்கைத் தொகுப்புடன் தொடர்புடைய நிறுவனம், நிறுமம் அல்லது வணிக அமைப்பின் மூலம் வாங்க மற்றும் விற்கத் தனிநபராக அல்லது கூட்டாக உரிமையும் மேலாண்மையும் கொண்டதாகும்".

இவ்வாறு தொழில் நிறுவனம் என்பது சுதந்திரமான இடர் ஏற்புடன் கூடிய தனிப்பட்ட உரிமை மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டுடன் கூடிய தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் அமைப்பு என மேற்கண்ட வரைவிலக்கணம் விளக்குகிறது.

## 4.02 தனியாள் வணிகம்

தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும். தனிநபர் ஒருவர் தனியாகவோ அல்லது பணியாளர்களைக் கொண்டோ தொழிலை நடத்தலாம். இத்தொழிலமைப்பே பழமையானதும் மற்றும் வியாபார அமைப்புத் தோற்றுவித்தலில் முதன்மையானதும் ஆகும்.

தனியாள் வணிகர் பெரும்பாலும் பகுதியாகவோ அல்லது முழுதாகவோ கடனைத் தனது நண்பர்கள் அல்லது உறவினர்கள் அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து பெறுவார். தனது தொழில் அமைப்பைத் தனது சொந்த வீட்டின் ஒரு பகுதியை அல்லது வாடகைக் கட்டடத்திலிருந்து தொடங்குவார். ஒரு சில குறிப்பிட்ட தொழிலை நடத்த எந்த வித




சட்டபூர்வமான நடைமுறைகளையும் பின்பற்ற மாட்டார். உதாரணமாக ஒருவர் உணவகம் தொடங்க வேண்டுமென்றால் நகராட்சியின் சுகாதாரத் துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டும். ஆனால் இவ்வகை நிறுவனங்களைத் தொடங்க சட்டபூர்வ முறைமைகளைப் பின்பற்றுவதில்லை.

**இலக்கணம்**

"தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்"

– J.J. ஹேன்சன்

"தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பின் ஒரு வடிவமாகும். அது தனி ஒரு மனிதனுக்குச் சொந்தமானதும் கட்டுப்பாட்டுக்குட்பட்டதுமான வியாபார அமைப்பாகும். அவர் தன் சொத்தை வணிக வெற்றி அல்லது தோல்வி என்ற துணிகரச் செயலில் ஈடுபடுத்தி இலாபத்தைப் பெறுகிறார்".

– வீலர்.

## 4.03 சிறப்பியல்புகள்

தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் பின்வருமாறு.

### i. தனிநபர் உரிமை

இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வியாபாரத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இருப்பதால் அதன் அமைப்பு முழுமையும் அவரே கட்டுப்படுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும் அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார். வியாபார அமைப்பின் உரிமையும் கட்டுப்பாடும் மேலாண்மையும் ஒருவரிடமே இருக்கிறது.

### ii. தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு

தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். தனி உரிமையாளர் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

### iii. வரையறாப் பொறுப்பு

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே அவரின் பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம்.

### iv. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை

அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

### v. அரசு விதிமுறைகள் பின்பற்றாமை

தனியாள் வணிகர் அரசின் விதிமுறைகளின் குறுக்கீடு இன்றிச் செயல்படுகிறார். இவ்வமைப்பை உருவாக்குவதிலோ மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

### vi. குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை

தனியாள் வணிகர் தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் அது சிறிய அளவிலேயே இருக்கும். அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம், தனி உரிமையின் மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

### vii. தனி நிறுவனங்களின் நீடித்த வாழ்வு

தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு என்பது தனியாள் வணிக உரிமையாளரின் இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறனை இழத்தல் போன்றவைகளைப் பொறுத்ததாகும். இவையே அவருடைய வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.

#### முருகப்பா குழுமத்தின் வெற்றிக்கதை



முருகப்பா குழுமம் இந்திய வணிக நிறுவனமாகும், இதை நிறுவியதும், நிர்வகிப்பதும் பெரும்பாலும் முருகப்பா குடும்பத்தினர். இந்தக் குழுவில் 28 வணிக நிறுவனங்கள் உள்ளன. இதில் இந்தியாவின் தேசியப் பங்கு பரிவர்த்தனை மற்றும் பம்பாய் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ள 11 பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அடங்கும். சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கார்போரன்டம் யுனிவர்சல் லிமிடெட், சோழமண்டலம் முதலீட்டு மற்றும் நிதி நிறுவனம் லிமிடெட், சோழமண்டலம் எம்எஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட், கோரமாண்டல் இன்ஜினியரிங் கம்பெனி லிமிடெட், ஈஐடி பாரி (இந்தியா) லிமிடெட், பியாரி அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மற்றும் வென்டிட் (இந்தியா) லிமிடெட், மற்றும் சாந்தி கியர்ஸ் லிமிடெட் (கோயம்புத்தூர்) போன்றவை இயங்குகின்றன.

குரூப் சிமிக்கு துனிசியா, ஃபோஸ்கோர், கார்கில், மிட்சுய் சுமிடோமோ, மோர்கன் போன்ற முன்னணி சர்வதேச நிறுவனங்களுடன் வலுவான கூட்டணிகளை இக்குழு கொண்டுள்ளது. அக்ராசிவ்ஸ், கார் உதிரி பாகங்கள், மிதிவண்டி, சர்க்கரை, பண்ணை உள்ளீடுகள், உரங்கள், தோட்டங்கள், உயிரி பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அவை உள்ளன. க்ரூசிபல் மற்றும் சோசிடட் குவிமிகா யூ மினெரா டி சிலி (SQM). இந்தியாவில் 13 மாநிலங்கள் மற்றும் உலகம் முழுவதும் சுமார் ஐந்து கண்டங்களில் பரவலாக தொழிலில் ஈடுபட்டுள்ளது.

பி.எஸ்.ஏ, ஹெர்குலூஸ், பால்மாஸ்டர், அஜாக்ஸ், பாரிசின், சோலா, கிராமோர் மற்றும் பரம்போஸ் போன்ற பிராண்டுகள் முருகப்பாவின் குழுமத்திலிருந்து வந்தன. இந்த அமைப்பு 32,000 ஊழியர்களைக் கொண்டுள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 25 2/17/2021 3:11:04 PM

**டிவிஎஸ் நிறுவனத்தின் வெற்றிக்கதை**

டி.வி.எஸ் மோட்டார் நிறுவனம் இந்தியாவில் மூன்றாவது பெரிய இரு சக்கர வாகன உற்பத்தி நிறுவனமாக உள்ளது. 2016–17 ஆம் ஆண்டில் 13,000 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது ₹ 40,000 கோடி (2014 ஆம் ஆண்டில் $ 6 பில்லியன், டிவிஎஸ் குழுமம்). இதன் இணை நிறுவனத்தின் வருடாந்திர விற்பனை 3 மில்லியன் யூனிட்டுகள் மற்றும் 4 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் கொண்டது. டி.வி.எஸ். டபிள்யூ குழுமத்தின் உறுப்பினரான டி.வி.எஸ். மோட்டார் நிறுவன லிமிடெட், 3 கோடி (30 மில்லியன்) வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் திரு. TV சுந்தரம் அவர்களால் நிறுவப்பட்டது. அவர் 1911 ஆம் ஆண்டில் தில்லி முதல் பஸ் சேவையுடன் தொடங்கினார் மற்றும் தெற்கு ரோடுவேஸ் லிமிட்டெட்டின் பெயரில் டி.வி. சுந்தரம் மற்றும் சன்ஸ் லிமிடெட், போக்குவரத்து வணிகத்தில் ஒரு பெரிய நிறுவனமாகவும், பேருந்து நிலையங்களுடனும் இணைக்கப்பட்டார். 1955 ஆம் ஆண்டில் அவர் இறந்தபின், அவரது மகன்கள் நிதி, காப்பீடு, இரு சக்கர வாகனங்கள் / மூன்று சக்கர வாகனம், டயர்ஸ் மற்றும் உதிரி பாகங்கள், வீடுகள், விமானப் போக்குவரத்து, தளவாடங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய வாகனங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஏறக்குறைய 6 பில்லியன் அமெரிக்க டாலர் ஒருங்கிணைந்த வருவாய் ஈட்டக்கூடிய நிறுவனமாக வளர்ந்துள்ளது.

### viii. இரகசியம் காத்தல்

*தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராதலால் தனது தொழில் பற்றிய இரகசியத்தை எளிதாகக் காப்பாற்றலாம்.*

## 4.04 தனியாள் வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்

### நன்மைகள்

*தனியாள் வணிகத்தின் நன்மைகள் பின்வருமாறு:*

### i. எளிதான அமைப்பு

*தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் சட்ட சடங்குமுறை ஏதுமின்றித் துவக்கலாம். ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விருப்பமுடையவர் எவரும் இத்தொழிலைத் தொடங்கலாம். சட்ட பூர்வ அன்றாடத் தடைகள் ஏதுமில்லை, எனவே வியாபாரத்தை நிறுவகிப்பது எளிது.*

### ii. கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு

*முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பிருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து அயராது உழைக்கச் செய்கிறது.*

### iii. குறைந்த மூலதனம்

*தனியாள் வணிகத்தின் சிறப்பான நன்மையே குறைந்த மூலதனமாகும். அவர் குறைந்த மூலதனத்துடன் தொழில் தொடங்க இயலும். கூடுதல் மூலதனம் தேவைப்பட்டால் கடன்பெற்று வியாபாரத்தில் மேலும் முதலீடு செய்ய இயலும்.*

### iv. கடன் தகுதி

*தன் வியாபாரக் கடன்களைத் தனது சொந்தச் சொத்துக்களிலிருந்தும் தீர்ப்பதால் கடனீந்தோர் எளிதாக கடன் தர முன் வருவர். அதனால் அவருக்குத் தேவையான கடன் வசதி எளிதாகக் கிடைக்க வாய்ப்புண்டு.*

### v. வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு

*வாடிக்கையாளர்களின் விருப்பங்களைத் தெரிந்திருப்பதால் அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார். அவரின் மரியாதையான வரவேற்பு மற்றும் இணக்கமான நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து ஆதரவு தெரிவிக்கச் செய்கிறது.*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 26 2/17/2021 3:11:04 PM

### vi. நெகிழ்வுத்தன்மை

தனியாள் வணிகர் சந்தை நிலவரத்திற்கேற்ப வாடிக்கையாளரின் விருப்பத்திற்கிணங்க தன் வியாபார நிலைமைகளை மாற்றிக் கொள்ளலாம்.

### vii. விரைவான முடிவு

தனியாள் வணிகர் ஒருவர் தானே உரிமையாளராக இருப்பதால் கால தாமதமின்றி விரைவாக முடிவு எடுத்து உடனே செயல்படுத்தவும் மற்றும் மாறும் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் விரைவாக முடிவெடுக்கவும் அவரால் முடியும்.

## குறைபாடுகள்

தனியாள் வணிகத்தின் குறைபாடுகள் பின்வருமாறு

### i. அளவான மூலதனம்

தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு. அவரின் கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும் மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

### ii. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத்திறன்

வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது. அவரின் அறிவும் திறமையும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் வியாபார நடவடிக்கையில் செலுத்த வேண்டி இருப்பதால் அதிகப்படியான மனஅழுத்தம் ஏற்படுவதுடன் தவறான முடிவெடுக்க ஏதுவாகிறது. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடை செய்கிறது.

### iii. வரையறாப்பொறுப்பு

வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

### iv. சிறப்புத் தேர்ச்சியின்மை

தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில், இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களையும் பணியமர்த்தப் போதிய பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அதிக நன்மைகளைப் பெற இயலாது. அவர் ஒருவரே உற்பத்தி, சந்தையிடுதல், கணக்குப் பதிவியல், கடிதத்தொடர்பு போன்ற பணிகளை ஒருவரே கையாள முடியாது. அதன் விளைவாகத் திறமைக் குறைவு ஏற்படும்.

### v. அவசர முடிவு

அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்குச் செல்ல வழிவகுத்துவிடும். அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழிக்கு இணங்க இச்செயலும் இருக்கும்.

**கலைச்சொற்கள்**

வியாபார அமைப்பின் வடிவங்கள்

தனியாள் வணிகம்

வரையறாப் பொறுப்பு

மேலாண்மைத்திறன்

சட்டபூர்வமான நிறுவனம்

கடன் மதிப்பீடு

**நமது சிந்தனைக்கு**

எவ்வாறு நொறுக்குத்தீனி தயாரிப்பு நிறுவனத்தை வீட்டில் தொடங்குவது?

கருவாடு – வியாபாரம் விளக்குக?

தனிநபர் – புதிய பட்டதாரிகள் தனியான மென்பொருள் நிறுவனங்களை நடத்துதல்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் தயாரிப்பு நிறுவனங்கள்.

## வழக்கு ஆய்வு

திரு. இராஜேந்திரன் என்பவர் B.Com இளங்கலை வணிகவியல் பட்டத்தை நிறைவு செய்தார். தற்போது அவர் ஒரு நல்ல வியாபாரியாக விரும்புகிறார். அவரது தந்தை திரு.கேசவன் அவர்கள் சேலத்தில் உள்ள ஒரு சிறிய பனியன் உற்பத்தி செய்யும் ஆலையைத் தொடங்கி நடத்தி வருகிறார். ஆனால் இராஜேந்திரன் தனியாக நிறுவனத்தைத் தொடங்கி நடத்தவே விரும்புகிறார். இது தொடர்பாக அவர்களிடையே விவாதம் நடக்கிறது. திரு. இராஜேந்திரன் தந்தையின் வழக்கறிஞரும் நண்பருமான திரு. அருள் அவர்களிடையே சில கருத்துக்களை முன் வைக்கிறார். இராஜேந்திரன், கேசவன் மற்றும் அருள் ஆகியோரின் நிலைமைகளைப் பாதுகாக்கும் கருத்துக்களை எடுத்து வைக்கவும்.

## மேலும் அறிவதற்கு

1. *மகேசன் என்பவர் வாரிசுரிமைத் தொகையாக அவருடைய குடும்பத்தாரிடமிருந்து ₹1,00,000த்தைக் குடும்ப சேமிப்பிலிருந்து பெற்றார். மேலும் அவருடைய தந்தையாருக்கு அவர் ஒருவரே மகனாவார். பிளாஸ்டிக் பொம்மை தயாரிக்கும் நிறுவனத்தை சிறிய அளவில் தொடங்க எண்ணினார். எந்தவிதமான வியாபார அமைப்பை சொந்தமாக தொடங்க நீ அவருக்கு அறிவுரை வழங்குவாய்?*

2. *அமர் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தையார் கணக்குகளை பராமரிக்கவும் மாலையில் அவருடைய சகோதரர் வாடிக்கையாளர்களைப் பார்த்துக்கொள்ள உதவினார். அமர் தனது தந்தைக்கும் சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எந்தவிதமான வியாபார அமைப்பு என்பதை அடையாளம் காண்.*

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ***கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?***

   அ. தனியாள் வணிகம்

   ஆ. கூட்டாண்மை

   இ. கூட்டுறவுச் சங்கம்

   ஈ. நிறுமம்

5D7Q6Q

2. ***எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?***

   அ. கூட்டு நிறுவனம்

   ஆ. அரசு நிறுவனம்

   இ. கூட்டுறவுச் ங்கம்

   ஈ. தனியாள் வணிகம்

3. ***தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு***

   அ. வரையறு பொறுப்பு

   ஆ. வரையறாப் பொறுப்பு

   இ. அமைப்பெளிமை

   ஈ. விரைவான முடிவு

4. ***பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது?***

   அ. கூட்டுப் பங்கு நிறுமம்

   ஆ. தனியாள் வணிகம்

   இ. அரசு நிறுமம்

   ஈ. கூட்டுறவு

### விடைகள்

*1. அ  2. ஈ  3. ஆ  4. ஆ*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 28    2/17/2021 3:11:04 PM

## II. குறுவிடை வினாக்கள்.

1. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
2. கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றிச் சுருங்கக் கூறுக.
3. கூட்டுரு நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறுக.

## III. சிறுவிடை வினாக்கள்.

1. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
2. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறுக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை. (ஏதேனும் 5)
2. தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)
3. தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விவரி.

## குறிப்பு நூல்கள்.


1. *Kathiresan and Radha – "Business Organisation", Tenth Edition, Prasanna Publishers, Chennai.*
2. *Subhanjali Chopra – Business Organisation and Management*





XI_Tamil_commerce 1-15_001-147.indd 29 2/17/2021 3:11:04 PM

## இணையச் செயல்பாடு

### சேவை வியாபாரம்


மென்பொருள் பயன்படுத்தி மனவரைபடம் வரைவோமா!





**படிகள் :**

- கீழ்க்காணும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி EDRAW Mind Master என்னும் பக்கத்திற்குச் செல்லவும்.
- EDRAW Mind Master – என்பதைத் தரவிறக்கி நிறுவிக்கொள்க.
- நிறுவிய பின், தெரியும் மாதிரித் தகடுகளில்(templates) ஒன்றைத் தேர்வு செய்து, "Create" என்பதைச் சொடுக்கவும். உங்களுக்குத் தேவையான மனவரைபடப் பக்கம் தோன்றும்.
- "Main Idea" என்னும் பெட்டி தோன்றும். அதில் முதன்மைத் தலைப்பை தட்டச்சு செய்யவும். சுட்டிக்குறியை (cursor) அப்பெட்டியின் மேல் நகர்த்த "+" தோன்றும். அதைச் சொடுக்கினால் அதன் கிளைப்பெட்டி தோன்றும். இதைப் போன்றே தேவைப்படும் இடங்களில் மேலும் பெட்டிகளை உருவாக்க முடியும். இப்போது பெட்டிகளில் அது தொடர்பான மற்ற தலைப்புகளைத் தட்டச்சு செய்யவும். இப்போது உங்கள் மனவரைபடம் உருவாகி விட்டது. பெட்டிகளைக் குறைக்க " – " என்பதைச் சொடுக்கவும்.


(1) "colour palette" என்பதைப் பயன்படுத்தி நிறத்தை மாற்றிக்கொள்ளலாம், (2) "Background" என்பதைப் பயன்படுத்திப் பின்னணி நிறத்தை மாற்றிக் கொள்ளலாம், (3) எழுத்து வடிவத்தை மாற்றிக் கொள்ளலாம், (4) சேமிக்கவும் தொகுக்கவும் முடியும், (5) HTML வடிவில் சேமிக்கவும், அதன் அம்சங்களை மறைத்தும் காட்டவும் முடியும், (6) வேறு ஆவணங்களில் படங்களாகச் சேமித்தும் வைக்கலாம்.



படி 1



படி 2



படி 3

**செயல்பாட்டிற்கான உரலி :**

EDRAW–Mind Master: https://www.edrawsoft.com/download–mindmaster.php

(or) scan the QR Code

**Alternative:** Android Play store app- Mind Map Free OX Studio 3+

B170_11_COMM_EM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 30 2/17/2021 3:11:05 PM

## அலகு – 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம்

# 5 இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்". – குறள் 517

5DGL8D

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. இந்து கூட்டுக் குடும்ப வணிகம், பொருள், பண்புகளைப் பற்றி புரிந்துக் கொள்ள முடியும்.
2. கூட்டாண்மை – பொருள், பண்புகள், நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றித் தெரிந்துக் கொள்ள முடியும்.
3. கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் அதன் உள்ளடக்கம் பற்றி அறிந்துக் கொள்ள முடியும்.
4. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிப் புரிந்துக் கொள்ள முடியும்.
5. கூட்டாண்மை வகைகள், கூட்டாளிகள் வகைகள் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.
6. பதிவுச் செய்வதற்கான நடைமுறைகள், பதிவு செய்யாமையின் பாதிப்புகள், கூட்டாண்மைக் கலைப்பு பற்றிப் புரிந்துக் கொள்ள முடியும்.

இந்து கூட்டுக் குடும்பம்



## 5.01 இந்து கூட்டுக் குடும்பம்

### அறிமுகம்

இந்தியாவில் இந்து கூட்டுக் குடும்பம் என்பது தனி இயல்பு கொண்ட வேறுபட்ட வியாபார அமைப்பாகும். இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரச் செயல்பாடுகள் சட்டத்தால் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வமைப்பு தனிப்பட்ட ஒன்றாக இருப்பதில்லை மற்றும் வேறுபட்ட சட்டபூர்வ நிறுவனமாக அதன் உறுப்பினர்களிடையே இருக்கிறது. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் கூட்டாண்மைச் சட்டத்திற்குப் பதில் இந்து சட்டத்தின்படி செயல்படுகிறது. இவ்வகையான வியாபார அமைப்பின் உறுப்பினராக வேண்டுமென்றால் அந்த குடும்பத்தில் ஒருவராகப் பிறந்திருக்க வேண்டும் அல்லது அந்த குடும்ப உறுப்பினர்களில் ஒருவரைத் திருமணம் செய்திருக்க வேண்டும்.

### பொருள்

குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகவே வாழ்ந்து அக்குடும்பத்தின் சொத்துக்களை ஒன்றாக முதலீடு செய்து தொழிலை மேற்கொண்டு, அதிலிருந்து கிடைக்கின்ற இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டு வாழும் இந்தக் குடும்பமே இந்து கூட்டுக் குடும்பம் என்றழைக்கப்படுகின்றது.

இந்தச் சட்டம் இரண்டு பிரிவாக உள்ளது. தயாபாகா (DAYABHAGA) சட்டம் மேற்கு வங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் நீக்கமற நிறைந்துள்ளது. மிட்டாக்சரா (MITAKSARA)



XI_Tamil_commerce 1-15_001-147.indd 31 2/17/2021 3:11:05 PM

சட்டத்தின்படி இந்து கூட்டுக் குடும்பத்தில் பிறந்தால் மட்டுமே மகனாக உரிமை கொண்டாட முடியும். இதன் பொருள் ஒரு குடும்பத்தில் மகனாகப் பிறக்கும் பொழுது மட்டுமே அவர் அக்குடும்பத்தின் சொத்தில் கூட்டுரிமை பெற முடியும்.

இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தைத் கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது ஒரு நபர் மட்டுமே. அவர் "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று அழைக்கப்படுகிறார். கர்த்தா மற்றும் மேலாளர் தன் குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையின்படியும் இறுதியாக தன் முடிவுபடியும் செயல்படுவார். கர்த்தாவின் பொறுப்பு வரையறுக்கப்படாததாக இருக்கும்பொழுது இதர குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருக்கும்.

### இயல்புகள்

இந்து கூட்டுக்குடும்ப வியாபாரத்தின் பண்புகள் பின்வருமாறு:

#### i. இந்துச் சட்டத்தின்படி கட்டுப்படுத்துதல்

இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது.

இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்:

(i) தயாபாகா மற்றும்

(ii) மிட்டாக்சரா

5DQHA1

#### ii. மேலாண்மை

இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று அழைக்கப்படுகிறார். அக்குடும்பத்தில் கர்த்தாவே மூத்த ஆண் நபராவார். அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கைச் செய்ய உரிமை பெற்றவர். ஆனால் கர்த்தாவின் அனுமதி பெற்றே குடும்ப உறுப்பினர்கள் வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்யலாம்.

#### iii. பிறப்பால் உறுப்பினர்

இக்குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும். உறுப்பினராக எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.

#### iv. பொறுப்பு

கர்த்தாவைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு என்பது வியாபாரத்தில் அவருக்குள்ள பங்கின் அளவுக்கு வரையறுக்கப் பட்டது. கர்த்தா மட்டுமே அவ்வியாபாரத்தில் பொறுப்பாளராக ஆக்க இயலாது. எனினும் கடனீந்தோருக்கு கர்த்தாவின் தனிச்சொத்தைக் கைப்பற்ற உரிமையுண்டு.

#### v. நீடித்த வாழ்வு

குடும்ப உறுப்பினரின் மரணம், நொடிப்பு நிலை, மனச் சமநிலை, இழப்பு ஆகியவை வியாபாரத்தைப் பாதிக்காது. அவ்வியாபாரம் தொடர்ந்து மற்ற குடும்ப உறுப்பினர்களால் நடைபெறும்.

#### vi. கர்த்தாவின் உட்கிடை அதிகாரம்

வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபாரக் காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றைச் செய்யும் உட்கிடையான அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டுமே உண்டு.

#### vii. இளவர் உறுப்பினர்

கூட்டாண்மையில் கூட்டாண்மையின் நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக முடியும். ஆனால் இந்து கூட்டுக் குடும்பத்தில் பிறந்த குழந்தையும் ஒரு கூட்டு உறுப்பினர் ஆகலாம்.

#### viii. கலைப்பு

இந்து கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்கள் அனைவரின் விருப்பத்தின் பேரில் வியாபாரத்தை கலைக்கலாம்.

## 5.02 கூட்டாண்மை

### பொருள்

பல நபர்கள் ஒன்று சேர்ந்துக் கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்றும், கூட்டாக நிறுவனம் என்றும் அழைக்கப்படுகிறது.

## கூட்டாண்மை – இலக்கணம்

"தனிபட்ட இலாபங்களுக்காக ஒரு வியாபாரத்தை நடத்த ஒப்புக் கொண்ட நபர்களுக்கிடையே நிலவும் உறவே கூட்டாண்மையாகும்."

**– பேராசிரியர் ஹேனே (Prof.Haney)**

"கூட்டாண்மையில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் அனைவரும் கூட்டாண்மை பொறுப்புகளுக்கு கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரு கூட்டாளியின் நடவடிக்கையும் மற்ற கூட்டாளிகளைக் கட்டுப்படுத்தும். மேலும் கூட்டாண்மையின் கடன்களைத்தீர்க்ககூட்டாளிகளின் சொத்துக்கள் எடுத்துக் கொள்ளப்படும்".

**– ஸ்பிரிகில் (Spriegal)**

1932–ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 4 பின்வருமாறு கூட்டாண்மைக்கு வரைவிலக்கணம் வழங்குகிறது. "கூட்டாண்மை என்பது எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" என்று கூறுகிறது.

**– இந்திய கூட்டாண்மைச் சட்டம்**

### கூட்டாண்மையின் இயல்புகள்

#### i. உடன்பாட்டு உறவு

கூட்டாண்மை என்பது உடன்படிக்கையால் ஏற்படும் உறவாகும். தகுதி உடையவர்கள் மட்டுமே சட்டப்படி கூட்டாளியாக இருக்க முடியும். மற்றவர்களால் (உதாரணமாக இளவர்) அமைக்க முடியாது.

#### ii. பல நபர்கள்

உடன்படிக்கையின் மூலம் ஏற்பட்ட உறவே கூட்டாண்மை. இதை ஏற்படுத்த குறைந்தபட்சம் 2 நபர்கள்அதிகபட்சம் 50 நபர்கள்.

#### iii. வணிகத்தன்மை

சட்டபூர்வமாக நடத்தக்கூடிய வணிகம் அல்லது தொழிலை உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்தும் அமைப்பே கூட்டாண்மை ஆகும்.

#### iv. இலாபப் பகிர்வு

கூட்டாண்மை வணிகத்தின் மூலம் சம்பாதித்த இலாபத்தை அனைத்துக் கூட்டாளிகளும் பங்கிட்டுக் கொள்கிறார்கள்.






#### v. பரஸ்பர முகமை

கூட்டாண்மையில் முகமை உறவே முக்கிய காரணியாக இருக்கின்றது. ஏனெனில் அனைத்துக் கூட்டாளிகளும் இணைந்தோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளுக்கும் பதிலாக யாராவது ஒருவரோ, முதல்வராகவும் மற்றும் முகவராகவும் செயல்படலாம். வெளியாட்களுக்கு முதல்வராகவும் பிற கூட்டாளிகளுக்கு முகவராகவும் செயல்படுகிறார்கள். அப்படிச் செயல்படும் போது ஒருவர் செயலால் பிற கூட்டாளிகளும், கூட்டாகவோ அல்லது தனியாகவோ பொறுப்பைச் சுமக்கும் நிலை ஏற்படுகிறது.

### நன்மைகள்

கூட்டாண்மையின் முக்கிய நன்மைகள் பின்வருமாறு:

#### i. அமைத்தல் எளிது

எவ்வித சட்டபூர்வ நடைமுறைகளும் இல்லாமல் கூட்டாண்மை வியாபாரத்தை அமைப்பது எளிது. வாய்வழியாகவோ அல்லது எழுத்துப் பூர்வமாகவோ உடன்படிக்கை அவசியம். கூட்டாண்மையைப் பதிவு செய்தல் விருப்பதிற்குட்பட்டது. கூட்டாண்மையைப் பதிவு செய்யும் நடைமுறை மிகவும் எளிமையானது. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்வதே சாலச் சிறந்தது. பதிவின் மூலம் பல நன்மைகள் கிட்டுகின்றன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 33 2/17/2021 3:11:05 PM

### ii. அதிக நிதி ஆதாரங்கள்

அனைத்துக் கூட்டாளிகளின் நிதி ஆதாரம், கடன் பெறும் திறன் அனைத்தும் ஒன்று சேர்வதால் தேவையான அளவிற்கு நிதி திரட்ட முடியும். புதிய கூட்டாளிகளும் கூட்டாண்மையில் சேரும் வாய்ப்பு இருப்பதால் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வது எளிதாக அமைகிறது.

### iii. சிறந்த தொழில் முடிவுகள்

ஒரு தலைமையை விட இரண்டு தலைமைகள் சிறந்தது. நன்கு விவாதித்த பிறகு எடுக்கும் முடிவு சிறந்த முடிவாகவே இருக்கும். இதனால் அவசர முடிவு என்பதே இங்கு இல்லை.

### iv. வேலைப் பகிர்வு மற்றும் உயரிய மேலாண்மைத் திறன்

கூட்டாண்மையின் மகத்தான பணிகளை சட்டபூர்வமாகவும், கூட்டாளிகளின் அனுபவம், அறிவு மற்றும் அவர்களின் திறனை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளிக்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு கூட்டாளி கொள்முதல் துறையைக் கவனித்தால், மற்றவர் விற்பனைத் துறையையும் , அடுத்தவர் கணக்குப்பதிவியல் துறையையும் கவனித்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு கூட்டாளியும் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்வது மற்றும் மேலாண்மை செய்வது போன்ற வேலைப் பகிர்வு முறை பரவலாக்கப்பட்டு தொழிலைத் திறம்பட நடத்த உதவுகிறது.

### v. இடர்ப்பாட்டில் பங்கேற்பு

கூட்டாண்மையின் நட்டங்களை அனைத்துக் கூட்டாளிகளும் பகிர்ந்து கொள்வதால் அந்நிறுவனம் தொடர்ந்து இயங்குகிறது.

### vi. வரையறாப்பொறுப்பு மற்றும் கடன் தகுதி

கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. கடனீந்தோரின் கடன்களைத் தீர்க்க வியாபாரச் சொத்துக்கள் அல்லாமல் தனிப்பட்ட சொத்துக்களையும் ஈடாகத் தரவேண்டியுள்ளது. எனவே கூட்டாளி தன் சொந்த சொத்துக்களையும் ஈடாகக் கொடுத்து கடன் பெற இயலுகிறது. ஆகவே வங்கியிடமிருந்தும் கடனீந்தோரிடமிருந்தும் கடன் பெறுவது எளிதான ஒன்றாகும்.

### vii. அனைவரின் நலன் பாதுகாத்தல்

முக்கிய முடிவுகளை அனைத்துக் கூட்டாளிகளின் ஒருமித்த கருத்துடன் எடுக்கின்றனர். ஒவ்வொரு கூட்டாளியும் முக்கியமானவரே ஆகும். மற்றவர்களைப் போலவே சிறுபான்மையினரின் நலத்தையும் பேண வேண்டும். ஒருமித்த கருத்து அடிப்படையிலேயே மிகமுக்கிய முடிவுகள் எடுக்கப்படுகிறது.

### viii. எளிதான கலைப்பு

கூட்டாண்மை கலைப்பு என்பது மிக எளிமையான ஒன்று. விருப்பக் கூட்டாண்மைக் கலைப்பு என்பது கூட்டாளிகளின் விருப்பத்திற்கேற்ப 14 நாட்கள் முன்னதாக அறிவிப்பு கொடுத்தால் போதுமானது. ஆகவே கூட்டாண்மையைக் கலைப்பது என்பதில் எவ்வித சட்டப்பூர்வ சிக்கலும் இல்லை.

## குறைபாடுகள்

கூட்டாண்மை வியாபாரத்தின் குறைபாடுகள் பின்வருமாறு:

### i. இணக்கமின்மை

கூட்டாளிகளுக்கிடையே மனக் கசப்பு மோதல்கள், மற்றும் முரண்பாடுகள், ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களின் உறவில் விரிசல் ஏற்பட்டு இணக்கமில்லா சூழல் ஏற்படலாம்.

### ii. சட்டபூர்வ நிலையின்மை

கூட்டாண்மை அமைப்பிற்கு தனிப்பட்ட சட்ட அங்கீகாரம் இல்லாததால். கூட்டாளிகளிடையே பலமான உறவு இருக்க வேண்டும். கூட்டாளிகளின் இறப்பு அல்லது நொடிப்பு நிலை கூட்டாண்மையை முடிவு பெறச் செய்துவிடும்.

### iii. குறைவான நிதி வளங்கள்

கூட்டாண்மையைத் தொடங்க குறைந்தபட்சம் 2 நபர்கள்அதிகபட்சம் 50 நபர்கள் தேவை. ஆனால் நடைமுறையில் ஒற்றுமையாக பணியாற்றக்கூடிய நபர்கள் இதற்கும் குறைவாகவே இருக்கும். அதனால் நிதி ஆதாரமும் குறைவாகவே இருக்கும். பேரளவு நிறுவனங்களைப் போன்று அதிக மூலதனத்தைத் திரட்டி தொழில் தொடங்க இயலாது.

### iv. வரையறுக்கப்பட்ட இடர் ஏற்பு

வரைறுக்கப்படாத பொறுப்பின் அபாயத்தினால் கூட்டாளிகள் அதீத எச்சரிக்கையுடன் செயலாற்ற முனைகின்றனர். ஆகவே இடர் ஏற்படுத்தும் தொழில்களை துவங்க விரும்புவதில்லை.

### v. உட்கிடை ஆணையுரிமையின் அபாயம்

ஒரு கூட்டாளி தன் நடவடிக்கையின் மூலமாக பிற கூட்டாளிகளை சட்டபூர்வமாக கட்டுப்படுத்த இயலும். நேர்மையில்லாத அல்லது திறமையற்ற ஒரு கூட்டாளி தனது செயலின் மூலம் பிறர்க்கு உட்கிடை ஆணையுரிமையால் தீங்கு இழைக்க முடியும். இதனால் ஒரு நேர்மையான கூட்டாளி கூட பிற கூட்டாளிகளின் தவறுக்காக தன் சொந்த சொத்துக்களை இழக்கும் நிலை ஏற்படலாம்.

### vi. பொதுமக்களிடையே நம்பிக்கை குறைவு

கூட்டாண்மையின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவோ மற்றும் பொதுமக்களுக்கு வெளியிடப்படுவதோ இல்லாத காரணத்தினால் நம்பிக்கையின்மையை பொதுமக்களிடையே இது ஏற்படுத்துகிறது.

## 5.03 கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் உள்ளடக்கம்

கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இருந்தாலும் கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருந்தால் பிற்காலத்தில் தவறான கருத்துக்களினால் ஏற்படும் தகராறுகளை மற்றும் மனக்கசப்புகளை தவிர்க்கலாம். கூட்டாண்மை வியாபாரம் சிறப்பாக நடைபெற சரியான முறையில் தயாரிக்கப்பட்ட ஒப்பாவணம் மன வேற்றுமைகளை களைந்து, கூட்டாளிகளைச் சிறப்பாக இயங்கச் செய்கிறது. இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும்.

### கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்

### i. பெயர்

கூட்டாண்மையின் பெயர்.

### ii. நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை

அனைத்து கூட்டாளிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடத்த விழையும் தன்மை.

### iii. கூட்டாண்மையின் கால வரையறை

கூட்டாண்மையின் கால அளவு குறிப்பிட்ட காலம் முடியும் வரையிலோ அல்லது குறிப்பிட்ட தொழில் நிறைவடையும் வரை தொடருமா என்பது தெரிவிக்கப்பட வேண்டும்.

### iv. கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை

கூட்டாளிகளினால் மூலதனம் வழங்கப்படுகிறது. கூட்டாளியாக வேண்டுமெனில் மூலதனம் வழங்கவேண்டுமென்ற அவசியமில்லை. தனது அமைப்புத்திறன், கூர்மையான வணிக அறிவு, மேலாண்மைத் திறன் போன்றவையும் மூலதனத்திற்கு பதிலாக வழங்கலாம்.

### v. கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை

ஒவ்வொரு கூட்டாளிக்கும் கூட்டாண்மை யிலிருந்து சொந்த செலவிற்கு தொகை எடுக்கும் உரிமை உண்டு. அது எவ்வளவு விழுக்காடு எடுக்கலாம் என்பதைக் குறிப்பிட வேண்டும்

### vi. இலாப – நட்டம் பகிர்வு விகிதம்

இலாப நட்டப் பகிர்வு குறித்து தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிருக்கவில்லை யென்றால் இலாப – நட்டத்தைக் கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

### vii. மூலதனத்தின் மீது வட்டி

ஒவ்வொரு கூட்டாளிக்கும் மூலதனத்தின் மீது வட்டி பெறும் உரிமை உண்டு. வட்டி எவ்வளவு விழுக்காடு பெற உரிமை உண்டு என்பதைக் குறிப்பிட வேண்டும்.

### viii. எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்

எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம் குறித்து குறிப்பிடப்பட வேண்டும்.

### ix. கூட்டாளிகள் தரும் கடன்

கூட்டாளிகள் கூட்டாண்மைக்குத் தருகின்ற கடன்கள் மற்றும் அவற்றிற்கான வட்டி வீதம் முதலானவை இடம் பெற வேண்டும்.

### x. கணக்கு வைப்பு

கணக்கேடுகளைப் பராமரித்தல் மற்றும் தணிக்கை செய்யும் முறையினைக் தெளிவாக விவரிக்க வேண்டும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 35 2/17/2021 3:11:06 PM

### xi. கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

கூட்டாண்மைக்குச் செய்கின்ற சேவைகளுக்காகக் கூட்டாளிகள் பெறுகின்ற சம்பளம் மற்றும் கழிவு (சம்பளம் மற்றும் கழிவு குறித்து உடன்படிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் எக்கூட்டாளியும் அதைப் பெற இயலாது) ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

### xii. கூட்டாளி விலகல்

கூட்டாளிகளின் விலகல் பற்றி ஒப்பாவணத்தில் குறிப்பிட வேண்டும். கூட்டாளி விலக அல்லது கூட்டாளி இறந்துவிட்டால் அவர்களுக்குக் கணக்கைத் தீர்க்கும் முறை பற்றிக் குறிப்பிட வேண்டும்.

### xiii. நற்பெயர் மதிப்பிடுதல்

கூட்டாளிகள் சேர்க்கை அல்லது இறப்பின் பொழுது நற்பெயர் மதிப்பிடும் முறைகளை ஒப்பாவணத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

### xiv. பொறுப்பு பகிர்வு

மேலாண்மைப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல் பற்றியும் குறிப்பிட வேண்டும். கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஒவ்வொரு கூட்டாளியின் பொறுப்பு குறித்து தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

### xv. கூட்டாண்மை கலைப்பு நடைமுறைகள்

கூட்டாண்மை கலைப்பு பற்றியும் மற்றும் கணக்குகள் தீர்ப்பது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

### xvi. கூட்டாளிகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கும் முறைகளையும் மற்றும் நடுவர் தீர்ப்பிற்கு விடும் நடைமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்

கூட்டாளிகளிடையே பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணமான ஒன்று. இவ்வாவணத்தில் கணக்கு தீர்க்கும் முறைகளையும், கருத்து வேற்றுமைகளையும் தீர்க்கும் முறைகளையும் குறிப்பிட வேண்டும். இப்பிரிவு வழக்காடுவதால் ஏற்படும் செலவைக் குறைக்கும் பிரிவாகும்.

## 5.04 கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்

கூட்டாண்மை ஒப்பாவணத்தில் பரஸ்பரம் உரிமைகளும், கடமைகளும் குறிக்கப்பட்டிருக்கும். கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிக்கப்படாமலிருந்தால் கூட்டாண்மைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரிவுகள் பொருந்தும்.


भारतीय गैर न्यायिक
एक सौ रुपये Rs. 100
रु. 100 ONE HUNDRED RUPEES
भारत INDIA
INDIA NON JUDICIAL
तमिलनाडु TAMIL NADU 02AB 335525
K.MAHALAKSHMI

**Deed of Partnership**

This deed of partnership is made on [Date, Month, Year] between:

1. [First Partner's Name], [Son/Daughter] of [Mr. Father's Name], residing at [Address Line 1, Address Line 2, City, State, Pin Code] hereinafter referred to as FIRST PARTNER.
2. [Second Partner's Name], [Son/Daughter] of [Mr. Father's Name], residing at [Address Line 1, Address Line 2, City, State, Pin Code] hereinafter referred to as SECOND PARTNER.
3. [Third Partner's Name], [Son/Daughter] of [Mr. Father's Name], residing at [Address Line 1, Address Line 2, City, State, Pin Code] hereinafter referred to as THIRD PARTNER.
4. [Fourth Partner's Name], [Son/Daughter] of [Mr. Father's Name], residing at [Address Line 1, Address Line 2, City, State, Pin Code] hereinafter referred to as

continued...

### 1. கூட்டாளியின் உரிமைகள்

### i. வியாபாரத்தில் பங்குபெறும் உரிமை

வியாபாரத்தின் மேலாண்மையில் பங்குபெறும் உரிமை ஒவ்வொரு கூட்டாளிக்கும் உண்டு.

### ii. ஆலோசனை கூறும் உரிமை

நிறுவனத்தின் நடவடிக்கைகளோடு தொடர்புள்ள அனைத்துத் தகவல்களிலும் ஆலோசனை கூற ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமை உண்டு. கூட்டாண்மையின் அனைத்து தகவல்களால் பெரும்பான்மையோரின் முடிவே இறுதியாக இருக்கும். ஆனால் கூட்டாளி சேர்ப்பு போன்ற அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் ஒருமனதாக முடிவெடுப்பது கட்டாயமாகும்.

### iii. கணக்குப் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் பத்திரங்களைப் பார்வையிடும் உரிமை

ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஆவணங்கள், கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பார்வையிடவும் மற்றும் நகல் எடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 36 2/17/2021 3:11:06 PM

### iv. இலாபத்தில் பங்கேற்கும் உரிமை

ஒவ்வொரு கூட்டாளியும் ஒப்புக் கொண்ட விகிதத்தில் இலாபத்தில் பங்கேற்க உரிமை உண்டு. உடன்படிக்கையில் இலாப விகிதம் குறிப்பிடவில்லை என்றால் அனைத்துக் கூட்டாளிகளும் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.

### v. வட்டி பெறும் உரிமை

ஒவ்வொரு கூட்டாளிக்கும் தான் பெறும் கடன் மற்றும் முன் பணத்திற்கு ஒப்புக் கொண்ட விகிதத்தில் வட்டி செலுத்த வேண்டும் அல்லது ஆண்டிற்கு 6% வட்டி என முன்கூட்டியே நிர்ணயம் செய்யப்பட்டு செலுத்தப்படுவது நடைமுறை பழக்கமாக உள்ளது.

### vi. தொடரும் உரிமை

வியாபாரத்தின் அனைத்து செயல்களிலும் தலையிட ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமை உண்டு. அவர் அக்கூட்டாண்மைக்காக ஏதாவது செலவு செய்திருந்தாலும் அல்லது நட்டமடைந்திருந்தாலோ அதைத் திரும்ப மீட்டுக் கொள்ளும் ஈட்டுறுதி (Reimbursement) உரிமை உண்டு. கூட்டாளி எப்பொழுதும் கூட்டாண்மை சம்பந்தப்பட்ட செயல்களில் அறிவுபூர்வமாக செயல்பட வேண்டும்.

### vii. கூட்டாண்மைச் சொத்துக்களை வியாபார நலனுக்காக பயன்படுத்தும் உரிமை

கூட்டாண்மையின் நலனுக்காக மற்றும் நோக்கத்திற்காக மட்டுமே கூட்டாண்மைச் சொத்துக்களைப் பயன்படுத்த உரிமை உண்டு.

### viii. விலகும் உரிமை

ஒவ்வொரு கூட்டாளிக்கும் மற்ற கூட்டாளிகளின் இசைவுடனோ அல்லது கூட்டாண்மைப் பத்திரத்தில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகும் உரிமையுண்டு. கூட்டாளி ஒருவர் தன்விருப்பப்படி கூட்டாண்மையில் இருந்து விலக விரும்பினால் உரிய முறையில் மற்ற கூட்டாளிகளுக்கு அறிவிக்கை அளித்து விட்டு எப்பொழுது வேண்டுமென்றாலும் கூட்டாண்மை யிலிருந்து விலகலாம்.

### ix. கூட்டாண்மையில் தொடரும் உரிமை

ஒவ்வொரு கூட்டாளிக்கும் கூட்டாண்மையில் தொடரும் உரிமை உண்டு. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தால் தவிர அவரை வெளியேற்றும் உரிமை யாருக்கும் கிடையாது.

## 2. கூட்டாளிகளின் கடமைகள்

### i. அனைத்துக் கூட்டாளிகளுக்காக தொழில் நடத்துதல்

அனைத்துக் கூட்டாளிகளின் நலனிற்காகவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் வியாபாரத்தை நடத்தும் கடமை உள்ளது.

### ii. உண்மையாக இருக்கும் கடமை

ஒவ்வொரு கூட்டாளியும் மற்றவர்களுடன் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். வியாபார நடவடிக்கைகளிலும் நேர்மையாகவும் மற்றும் உண்மையாகவும் இருக்க வேண்டும்.

### iii. கணக்குகள் ஒப்படைப்பதில் உண்மைத் தன்மை

ஒரு கூட்டாளி தன் கூட்டாண்மையின் கணக்குகளை உண்மையாகவும் முழுமையாகவும் சமர்ப்பிக்க வேண்டும். அவர் ஒவ்வொரு செலவினத்திற்கும் உரிய ரசீதுகளை அளிக்க வேண்டும்.

### iv. நிறுவனத்திற்கு ஈடுசெய்யும் கடமை

ஒவ்வொரு கூட்டாளியும் தனது தவறான நடவடிக்கைகளால் ஏற்படும் நட்டத்தையும், வியாபாரத்தில் தன்னால் ஏற்படுகின்ற இழப்புகளையும் ஈடுசெய்யும் கடமை உண்டு.

### v. நட்டத்தில் பங்கேற்கும் கடமை

ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையின் நட்டத்தை ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒப்பாவணத்தில் இலாபநட்ட விகிதம் குறிப்பிடவில்லையென்றால் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

### vi. சம்பளம் பெறும் கடமை

உடன்படிக்கையில் கூறியிருந்தால் மட்டுமே ஒரு கூட்டாளி கூட்டாண்மையில் தனது பணிக்காக சம்பளம் பெறலாம்.

### vii. வியாபாரத்தின் சொத்துக்களை சொந்த நலத்திற்கு பயன்படுத்தாமல் இருக்கும் கடமை

கூட்டாண்மையின் சொத்துக்கள் அனைத்துக் கூட்டாளிகளுக்கும் உரிமையானவை. அதனால்

கூட்டாளிகள் சொந்த நலனுக்கு கூட்டாண்மையின் சொத்துக்களைப் பயன்படுத்தக்கூடாது.

### viii. போட்டித்தொழில் செய்யாதிருக்கும் கடமை

எந்த ஒரு கூட்டாளியும் கூட்டாண்மைக்கு எதிராகப் போட்டித் தொழில் செய்யக்கூடாது. அப்படி ஏதாவது தொழில் செய்து இலாபம் ஈட்டியிருந்தால் அவை அனைத்தையும் ஒப்படைக்க வேண்டும். எந்த கூட்டாளியும் இரகசிய இலாபம் ஈட்டக்கூடாது.

### ix. அதிகார வரம்புக்குள் செயல்படும் கடமை

ஒவ்வொரு கூட்டாளியும் தனது அதிகார வரம்புக்குள் மட்டுமே செயல்படும் கடமை இருக்கிறது.

### x. மற்ற கூட்டாளிகளின் சம்மதத்துடன் ஒதுக்கீடு செய்தல் அல்லது கூட்டாளிகளின் விருப்பத்துடன் கூட்டாண்மைப் பணிகளை ஒதுக்கீடு செய்தல்

கூட்டாண்மையில் மற்ற கூட்டாளிகளின் சம்மதமில்லாமல் நிறுவனத்தின் பணிகளை மற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்யாதிருக்கும் கடமை உண்டு.

## 3. கூட்டாளிகளின் பொறுப்புகள்

### i. கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள்

நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புகள் உண்டு. நிறுவனத்தின் கடன்களைத் தீர்க்க கூட்டாண்மையின் சொத்துக்கள் மட்டுமின்றி கூட்டாளிகளின் சொந்த சொத்துக்களும் ஈடாகத் தர வேண்டும். கடனீந்தோர் கூட்டாளிகளிடமிருந்து அனைத்துக் கடன்களுக்கும் தொகை பெறும் உரிமையுண்டு.

### ii. மூன்றாவது நபருக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு பொறுப்பு

கூட்டாளிகளின் தவறான செயலால் ஏற்பட்ட நட்டத்திற்கு கூட்டாண்மை நிறுவனமே பொறுப்பாகும். அதன் பொருள் என்னவெனில் ஒவ்வொரு கூட்டாளியும் அதற்குப் பொறுப்பாவார்.


### iii. மூன்றாவது நபரினால் ஏற்படுத்திய நட்டத்திற்கு பொறுப்பு

கூட்டாண்மைக்குச் சேரவேண்டிய பணத்தையோ அல்லது சொத்துக்களையோ மூன்றாவது நபரிடமிருந்து பெற்று ஒரு கூட்டாளி சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு அக்கூட்டாளியே பொறுப்பாவார்.

## கூட்டாண்மையின் வகைகள்

### i. விருப்பமுறிக் கூட்டாண்மை

குறிப்பிட்ட காலம் எதுவும் இல்லாமல் ஒரு வியாபாரத்தைக் கூட்டாளிகளால் தொடங்கி நடத்தும் அமைப்பே விருப்பமுறிக் கூட்டாண்மையாகும். ஒரு சில வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால் கால வரையறை எதுவும் குறிப்பிடப்படாமல் தொடங்கும் அமைப்பாகும்.




எப்பொழுது ஒரு கூட்டாளி கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்க வேண்டும் என்று விரும்பி அறிவிப்பு கொடுக்கிறாரோ அப்பொழுது கூட்டாண்மைக் கலைப்பு தொடங்கும். இவ்வகையான கூட்டாண்மை கூட்டாளிகளின் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையுடன் கூட்டாண்மை பல்லாண்டு தொடரும். ஆகவே விருப்பமுறிக் கூட்டாண்மை என்பது கூட்டாளிகள் விரும்பும் வரை அதாவது கலைப்பு குறித்த அறிவிப்பு கொடுக்கும் வரை தொடரும். இதே போல், குறிப்பிட்ட கால கூட்டாண்மையை ஏற்படுத்தி அக்குறிப்பிட்ட காலம் முடிந்தாலும் அக்கூட்டாண்மையைத் தொடரலாம்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 38 2/17/2021 3:11:06 PM

குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகு அது விருப்பமுறிக் கூட்டாண்மை எனப்படும். கூட்டாளி வழங்கும் அறிவிப்பாணை ஒரு கூட்டாண்மையை இறுதிநிலைக்குக் கொண்டுவரும்.

### ii. குறித்த கால கூட்டாண்மை

குறிப்பிட்ட காலத்திற்கென அல்லது குறிப்பிட்ட வணிகச் செயலை செய்து முடிக்க தொடங்கப்பட்ட கூட்டாண்மையாகும். உடன்படிக்கையால் தொடங்குவதே கூட்டாண்மை இல்லையெனில் குறிப்பிட்ட காலத்திற்கெனவும் ஒரு கூட்டாண்மை தொடங்கலாம். குறிப்பிட்ட காலத்திற்கென தொடங்கப்படும் கூட்டாண்மை அக்குறிப்பிட்ட காலம் முடிவுற்றவுடன் கூட்டாண்மை நிறைவுபெறும். இதுவே அக்காலம் முடிந்தும் கூட்டாண்மை தொடர்ந்தால் அது விருப்பமுறிக் கூட்டாண்மை எனப்படும். அவ்விதமான கூட்டாண்மை ஒரு அறிவிப்பாணையை கூட்டாளி வழங்கியவுடன் கலைக்கப்படும்.

### iii. குறிப்பிட்ட கூட்டாண்மை

ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது செயலை செய்வதற்காக தற்காலிகமாக தொடங்கப்பட்ட அமைப்பே குறிப்பிட்ட கூட்டாண்மை எனப்படும். சில நேரங்களில் அத்தொழில் நிறைவு பெறாமல் கூட கூட்டாண்மை கலைக்கப்படும். சில வார்த்தைகளில் கூறவேண்டுமெனில் குறிப்பிட்ட வேலை முடிந்தவுடன் கூட்டாண்மை முடிவுறும்.

### iv. வரையறுத்த கூட்டாண்மை

வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை சிற்றளவு நிறுவனங்களில் பிரபலமானதாகும். பிரபலமான தொழில் செய்பவர்களால் அடக்கவிலை கணக்காளர், நிறுமச்செயலர், பட்டயக் கணக்காளர், வழக்குரைஞர், கட்டுமான வல்லுநர்கள், மருத்துவர்கள் போன்றோரை உள்ளடக்கியதாகும். அமெரிக்கா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் இவ்வமைப்பு பிரபலமாகும்.

## 5.05 கூட்டாளிகளின் வகைகள்

### i. உழைக்கும் கூட்டாளி

உழைக்கும் கூட்டாளி என்பவர் முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளிக்கு உழைக்கும் கூட்டாளி என்று பெயர். ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை மேலாண்மை செய்யும் உரிமை உண்டு.

**வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சட்டம், 2008 (Limited liability Partnership (LLP) Act, 2008)**


2009 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் நாள் இந்தியாவில் வரையறுக்கப்பட்ட பொறுப்புச்சட்டம், 2008 அரசு இதழில் வெளியிடப்பட்டு 2009 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் அறிவிப்பாணை வெளியிடப்பட்டது. முதல் வரையறுக்கப்பட்ட பொறுப்புச்சட்டம் 2-4-2009 ஆம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டது. தற்பொழுது 10,000 வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1932 ஆம் ஆண்டின் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் பிரிவுகளிலிருந்து தனியாக எடுக்கப்பட்டது. கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன் படிக்கையை முறையாக்குவதற்காக இச் சட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமும் "வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை" என்ற அதன் பெயரில் கடைசியில் குறிப்பிடப்பட வேண்டும்.

### ii. உறங்கும் கூட்டாளி அல்லது உழையா கூட்டாளி

இத்தகைய கூட்டாளி முலதனத்தை வழங்குவதோடு நிறுவனத்தின் இலாபநட்டத்தில் மட்டுமே பங்கேற்று வியாபாரத்தின் மேலாண்மையில் பங்கேற்காமல் இருப்பர். வெளியாட்களுக்கு அவர் கூட்டாளி போன்று தோன்றாமலும் கூட்டாளிகளின் வரையறாப் பொறுப்பிற்கு அவரும் ஒரு பங்கேற்பாளராகும்.

### iii. பெயரளவு கூட்டாளி

எவ்வித முலதனமும் வழங்காமலும் மேலாண்மையில் பங்கேற்காமலும் உள்ளவரே பெயரளவு கூட்டாளி என அழைக்கப்படுகிறார். நிறுவன நற்பெயருக்காகவும், மரியாதைக்காகவும் தனது பெயரை மட்டுமே கடனாக வழங்குகிறார்.




இக்கூட்டாளி அந்நிறுவனத்தின் உண்மையான கூட்டாளியாக இல்லாவிட்டாலும், இலாபத்தை அனுபவிக்காவிட்டாலும் அந்நிறுவனக் கடனிற்காக அவர் பொறுப்பேற்கிறார்.

### iv. இலாபத்தில் மட்டுமே பங்கேற்கும் கூட்டாளி

இவர் இலாபத்தில் மட்டுமே பங்கேற்பார். நட்டத்தில் பங்கேற்க மாட்டார். இவரையே இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி எனப்படுவர். ஆனால் வரையறாப்பொறுப்பு மூன்றாவது நபரின் கடனிற்கு உண்டு.

### v. முரண்தடைக் கூட்டாளி

ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லாமலிருந்து, தன் நடத்தையின் மூலம் தானும் அத்தொழிலில் ஒரு கூட்டாளி என்று வெளிநபர்களை நம்பச்செய்தபின் தான் கூட்டாளி அல்ல என்று பின்னர் அவர் மறுத்துக்கூற இயலாது. அவ்வாறு நம்பி நிறுவனத்திற்கு முன்பணம் அளிப்பவருக்கோ அல்லது நிறுவனத்தோடு ஈடுபடுபவருக்கோ அவர் பொறுப்பாகிறார். அத்தகைய நபரே முரண்தடைக் கூட்டாளி என்று அழைக்கப்படுகிறார்.

### vi. உரிமைப்போலிக் கூட்டாளி

கூட்டாண்மையில் கூட்டாளி அல்லாத ஒருவர் கூட்டாளியென விவரிக்கப்படும்போது தான் அவ்வாறு கூட்டாளி அல்ல என அவர் மறுத்துரைக்க வேண்டும். அவர் ஏதும் சொல்லாது அமைதி காத்தார் எனில் அவரைக் கூட்டாளி எனக் கருதி அக்கூட்டாண்மையுடன் வணிகம் செய்யும் நபர்களுக்கு அவர் பொறுப்பாகிறார். அத்தகைய நபரே உரிமைப்போலிக் கூட்டாளி எனப்படுகிறார்.

### vii. இரகசியக் கூட்டாளி

இரகசியக் கூட்டாளி என்பவர் பொதுமக்களுக்குத் தெரியாமல் அந்நிறுவன உறுப்பினராக இருப்பவர் மற்ற கூட்டாளிகளுக்கு உள்ளதைப் போன்றே இவரும் கடனிற்கு பொறுப்பாளியாவார்.

### viii. இளவர் கூட்டாளி

இந்திய பெரும்பான்மைச் சட்டம், 18 வயதை பூர்த்தி அடையாத ஒரு நபரை இளவர் என்று அழைக்கப்படுகிறார். 18 வயது பூர்த்தி அடைந்தாலும் 21 வயது பூர்த்தியாகும் வரை பாதுகாவலரை



XI_Tamil_commerce 1-15_001-147.indd 40 2/17/2021 3:11:06 PM

துணை கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட்டாண்மையின் பயன்களுக்கு (Benefits) மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆனால் இளவருக்கு உடன்படிக்கை ஏற்படுத்தும் உரிமை இல்லை. அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்துடன் மட்டுமே இளவரைக் கூட்டாளியாகச் சேர்க்க இயலும்.

**கூட்டாண்மைப் பதிவு**

இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் கூட்டாண்மையை பதிவு செய்வதை கட்டாயமாக்கவில்லை. அது விருப்பத்திற்குட் பட்டது. ஆனால் பதிவு செய்யாமையினால் ஏற்படும் குறைபாடுகளை நீக்க பதிவு செய்தல் கட்டாயமாகிறது.

## 5.06 கூட்டாண்மையைப் பதிவு செய்யும் முறை

பின்வரும் விவரங்களை கூட்டாண்மையைப் பதிவு செய்யும் அம்சங்களாகும்.

i. நிறுவனத்தின் பெயர்
ii. வணிகத்தின் தலைமையிடம்
iii. பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
iv. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
v. ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள்
vi. கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையைத் தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பமிட்டு பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி சமர்ப்பிக்க வேண்டும். மேற்காணும் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

## 5.07 கூட்டாண்மையைப் பதிவு செய்யாவிடில் ஏற்படும் விளைவுகள்

### i. மற்றவர்கள் மீது வழக்குத் தொடர இயலாது

பதிவு செய்யப்படாத நிறுமம் அதனுடைய வசூல் செய்ய வேண்டிய தொகைக்கான மூன்றாவது நபர் மீது வழக்குத் தொடர இயலாது. உதாரணமாக மூன்றாவது நபர்கள் மீது அவர்கள் திருப்பித்தர வேண்டிய கடன் தொகைக்காக நீதிமன்றம் மூலம் வழக்குத் தொடர இயலாது. எவ்வகையிலேனும் கடனீந்தோர் மீது வழக்குப்பதிய இயலாது.

### ii. உரிமைத் தடுப்பிற்காக வழக்குப் பதியும் உரிமை இழப்பு

உடன்படிக்கையின்படி உரிமை மீறலுக்கான வழக்குப் பதியும் உரிமையை இழக்கிறது. உதாரணமாக பதிப்புரிமை மற்றும் காப்புரிமையை பயன்படுத்துவதை தடுக்கும் உரிமையை இழக்கிறது.

### iii. நிறுவனத்திற்கு எதிராக வழக்குப்பதியும் உரிமையில் மூன்றாம் நபர்

கூட்டாண்மைக்கு எதிராகவோ அல்லது கூட்டாளிகளுக்கு எதிராகவோ மூன்றாம் நபர் வழக்குப் பதிய உரிமையில்லை.

கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி கூட்டாளிகள் நடந்து கொள்ளவில்லையென்று பதிவுறா நிறுவனத்தின் கூட்டாளி ஒருவர் கூட்டாண்மையின் மீது வழக்குப் பதிய இயலாது.

பதிவுறா நிறுவனத்தைத் கலைக்கும்பொழுது அதன் சொத்துக்களை பங்கீடு செய்தலின் பேரில் கூட்டாளி மற்ற கூட்டாளிகள் மீது வழக்குப்பதிய இயலாது.

சுருக்கமாக இதன் விளைவுகள் பின்வருமாறு:

i. மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ரூ.100 க்கு மேல் திரும்பப் பெற, அதனுடைய உரிமையை செயல்படுத்த இயலாது.

ii. இந்நிறுவனமோ அல்லது கூட்டாளிகளோ இந்தியாவில் எங்கும் தொழில் செய்ய இயலாது.

iii. ஒப்புடைவுதாரரோ அல்லது பெறுபவரோ திவாலானவருக்காக பணியாற்ற இயலாது.

iv. முன்பே கூறியபடி உடன்படிக்கையில் இல்லாதவற்றின் மீது வழக்குத் தொடர இயலாது.

v. கூட்டாண்மையைக் கலைக்க வேண்டியோ சொத்தைப் பங்கிடவோ அதற்கு எதிராக வழக்குப்பதியவோ இயலாது.

vi. நிறுவனத்தைக் கலைக்கச் சொல்லி கூட்டாளிகளே வழக்கு தொடுத்தல் அல்லது நிறுவனத்தின் கணக்குகளைத் தீர்க்கச் சொல்லி வழக்குத் தொடுத்தல் அல்லது நிறுவனத்தின் சொத்துக்களுக்கு உரிமை கொண்டு வழக்குத் தொடுத்தல் ஆகியன.

பதிவு செய்வதே சரியான தீர்வாகும். அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கூட்டாண்மையைப் பதிவு செய்வதாகும்.

## 5.08 கூட்டாண்மைக் கலைப்பு

கூட்டாண்மைக் கலைப்பு என்பது நிறுவனக் கலைப்பிலிருந்து மாறுபட்டதாகும். நிறுவனக் கலைப்பு என்பது கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு பிரிந்து விடுவதாகும். நிறுவனக்கலைப்பின் கூட்டாண்மைத் தொழில் முடிவுக்கு வந்து விடும். இதன் பிறகு தொழில் தொடர்ந்து நடைபெறாது. கூட்டாளியின் நொடிப்பு நிலை விலகல், கூட்டாண்மையின் கால முடிவு முதலியவற்றால் கூட்டாண்மைக் கலைப்பு நேரிடும். தொழில் கூட்டாண்மைக் கலைப்பிற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறலாம்.

அடிப்படையான வேறுபாடு என்னவென்றால் கூட்டாண்மைக் கலைப்பினால் நிறுவனக் கலைப்பு ஏற்படுவதில்லை. ஆனால் நிறுவனக் கலைப்பினால் கட்டாயமாக கூட்டாண்மைக் கலைப்பு ஏற்படும்.

### அ. நிறுவனக் கலைப்பு

நிறுவனக் கலைப்பு என்பது கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்து விடுதலாகும். நிறுவனக் கலைப்பினால் கூட்டாண்மைத் தொழில் முடிவுக்கு வந்துவிடும். அதன் சொத்துக்கள் விற்கப்பட்டு கடனீந்தோர் கணக்குகள் முடிக்கப்படும். இதன் பிறகு தொழில் தொடர்ந்து நடைபெறாது.

எடுத்துக்காட்டாக, அ, ஆ, இ மூவரும் ஒரு தொழிலில் கூட்டாளிகள். மூவரும் மேற்கொண்டு தொழில் நடத்த விருப்பமின்றி கலைந்துபோகத் தீர்மானித்தால், அது நிறுவனக் கலைப்பாகிறது.

### ஆ. கூட்டாண்மைக் கலைப்பு

கூட்டாண்மைக் கலைப்பு என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும். கூட்டாளியின் நொடிப்பு நிலை, விலகல், கூட்டாண்மைக் காலம் முடிவு முதலியவற்றால் கூட்டாண்மைக் கலைப்பு நேரிடும். ஆனால் தொழில், கூட்டாண்மைக் கலைப்பிற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறலாம்.



எடுத்துக்காட்டாக, அ, ஆ மற்றும் இ என்ற மூவரும் கூட்டாளிகள். இதில் 'அ' என்பவர் விலகிக் கொண்டாலும், 'ஆ' மற்றும் 'இ' ஆகிய இருவரும் கூட்டாண்மையைத் தொடர்ந்து நடத்துவதாக ஒப்புக்கொண்டால், அது கூட்டாண்மைக் கலைப்பாகிறது.

கூட்டாண்மை நிறுவனக் கலைப்பிற்கான பல்வேறுச் சூழ்நிலைகளின் தொகுப்பை, Dissolution என்ற ஆங்கிலச் சொல்லின் எழுத்துகள் மூலம் தரப்பட்டுள்ளது.


| | | |
|---|---|---|
| D (Death of a Partner) | – | கூட்டாளி மரணம் |
| I (Incapacity of Partner) | – | கூட்டாளி திறமின்மை |
| S (Stipulated Period of Partnership Completed in the case of Particular Partnership) | – | குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையில் அக்காலம் முடிவடைந்ததும் |
| S (Serious Misconduct of a Partner) | – | கூட்டாளியொருவரின் மோசமான ஒழுக்கக்கேடு |
| O (Object is Completed) | – | நோக்கம் நிறைவு பெற்றவுடன் |
| L (Lunacy of a Partner) | – | கூட்டாளியின் பித்துநிலை |
| U Unavoidable Continuous Loss) | – | தவிர்க்க முடியாத தொடர் நட்டம் |
| T (Transfer of Interest in the Firm) | – | நிறுவனத்தில் உரிமை மாற்றம் |
| I (Insolvency of a Partner) | – | கூட்டாளியின் நொடிப்பு நிலை |
| O (Objectionable Unlawful Objectives) | – | சட்டத்திற்கு முரணான தொழில் செய்தல் |
| N (Notice of Dissolution by a Partner) | – | கூட்டாளி ஒருவரின் அறிவிக்கையால் கலைப்பு |

கூட்டாண்மைக் கலைப்பு ஏற்படும்பொழுது பின்வருவனவற்றை நினைவில் கொள்.

i. இலாபப்பகிர்வு விகிதத்தில் மாற்றம்
ii. கூட்டாளி சேர்க்கை
iii. கூட்டாளியின் விலகல் மற்றும் இறப்பு
iv. கூட்டாளி நொடிப்பு நிலை அடைதல்
v. கூட்டாண்மையின் காலம் முடிவுக்கு வருதல்
vi. கூட்டாண்மைத் தொழில் முடிவுக்கு வருதல்
vii. உடன்படிக்கையால் கலைப்பு



XI_Tamil_commerce 1-15_001-147.indd 42 2/17/2021 3:11:07 PM




**i. நிறுவனக் கலைப்பு இரண்டுவிதமாக நடைபெறுகிறது.**

*அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு*
*ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு*

**அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு**

**i. கூட்டாளிகளின் உடன்பாட்டால்**

*ஒரு கூட்டாண்மை நிறுவனம் கூட்டாளிகளின் உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. அனைத்துக் கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.*

**ii. ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை.**

*ஏதாவது ஒருவர் நொடிப்புநிலை அடைந்தாலோ அல்லது அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவனக் கலைப்பு ஏற்படும்.*

### iii. சட்டத்திற்கு புறம்பான செயலால்

கூட்டாண்மை நிறுவனத்தில் சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

### iv. விருப்புமுறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு

விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஏதாவது ஒரு கூட்டாளி கடிதம் மூலம் அனைத்துக் கூட்டாளிகளுக்கும் தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

### v. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு

கூட்டாண்மைக் கலைப்பு நிறுவனக் கலைப்புடன் தொடர்புடையது. மற்ற கூட்டாளிகள் தொடர்ந்து நடத்தினாலேயொழிய நிறுவனக் கலைப்பு ஏற்படாமல் இருக்கலாம்.

i. குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையின் அக்காலம் முடிவடைந்தவுடன்

ii. குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின் தொழில்கள் நிறைவு பெற்றவுடன் அதாவது குறிப்பிட்ட கூட்டாண்மையாக இருந்தால்

iii. கூட்டாளி இறந்து விட்டால்

iv. கூட்டாளி விலகும் பொழுது

v. கூட்டாளி நொடிப்பு நிலை அடையும் போது

vi. மேற்காணும் அனைத்து சூழ்நிலைகளிலும் அனைத்து கூட்டாளிகளாலும் தொடர்ந்து கூட்டாண்மையை நடத்த இயலாமல் தானாகவே நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

### ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு

நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்க்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

(i) கூட்டாளி பைத்திய நிலையானால் (When a partner becomes of unsound mind)

(ii) நிலையான திறமையின்மை (Permanent incapacity)

(iii) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு (Misconduct of partner)

(iv) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை (Breach of agreement)




**ஃபோர்ரட்ஸ் இந்தியா (தனிவரையறுக்கப்பட்டது) அமைப்பின் வெற்றிக் கதை (கூட்டாண்மை நிறுவனமாக வளர்ந்தது)**

நல்ல உடல்நலம் என்பது தனிநபருக்கும், சமுதாயத்திற்கும் அல்லது தேசம் முழுவதற்கும் நல்லது. சமுதாயத்திற்கு நல்ல தரமான சுகாதாரமான பொருட்களை சமுதாயத்திற்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில் 1977 ஆம் ஆண்டு ஃபோர்ரட்ஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது. உடல் நலம் சார்ந்த மனதில் உணர்வோடு ஆழ்ந்து பதிகிற பொருட்களை இந்நிறுவனம் கடந்த 35 ஆண்டுகளாக சிறப்பாக தயாரித்து வருகிறது. ஃபோர்ரட்ஸ் நீதி நேர்மையுடன், தெளிவான, உறுதியான துடிப்பாக இயங்குகிற அமைப்பாகும். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு புதிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் தயாரிக்கிறார்கள். ஃபோர்ரட்ஸ் நிறுவனத்தின் பொருட்கள் மருத்துவர்களால் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் ஏற்றுக்கொள்கிறார்கள். தற்பொழுது ஃபோர்ரட்ஸ் நிறுவனத்தின் பொருட்களை இந்தியா முழுமைக்கும் மற்றும் 40க்கும் மேற்பட்ட வெளிநாடுகளில் விற்பனை ஆகின்றன. தற்பொழுது ஃபோர்ரட்ஸ் நிறுவனம் 1500 அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட தொழில் நுட்ப வல்லுநர்களை ஒவ்வொரு மருந்துத் துறையிலும் பயிற்சி பெற்றவர்களாகக் கொண்டு செயல்படுகிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 44 2/17/2021 3:11:07 PM

(v) உரிமை மாற்றம் (Transfer of interest)

(vi) தொடர் நட்டம் (Continued loss)

(vii) நீதி நேர்மை அடிப்படையில் (Just and Equitable ground)

நிறுவனத்தைக் கலைத்திடப் போதிய அடிப்படை காரணமுள்ளது என்று நீதிமன்றம் கருதினால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| கர்த்தா | தயாபாகா சட்டம் |
| மிட்டாக்சரா சட்டம் | கூட்டுக் குடும்ப உறுப்பினர் |
| தனிச்சட்ட உரு | கலைப்பு |

**மேலும் அறிவதற்கு**

அ. திரு. இராமன் தனது குடும்ப உறுப்பினர்களுடன் கைத்தொழில் செய்து வந்ததை இந்து கூட்டுக் குடும்ப தொழிலாக அமைத்தார். இராமன் அக்குடும்பத்தின் தலைவராக இருப்பதால் அவரே கர்த்தாவாக செயல்பட்டு வியாபாரத்தை கட்டுப்படுத்துகிறார். வியாபாரத்தின் அனைத்து முடிவுகளையும் அவரே மேற்கொள்கிறார். சில சமயங்களில் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் சரக்குகளை ரொக்கத்திற்காக விற்பனை செய்கிறார். அதனால் இலாபம் குறைகிறது. மேலும் சில குடும்ப சொத்துக்களை விற்று தனது மகளுக்கு திருமணப்பரிசாக பணம் வழங்குகிறார். மேற்காணும் வழக்கில் என்ன பாதிப்பை கர்த்தா புறந்தள்ளியுள்ளார்?

ஆ. திரு. பழனி ஒரு மென்பொருள் பொறியாளர். அவரின் டேப்-ரெக்கார்டர் உற்பத்திக்காக அவருடன் ஒரு கூட்டணியில் சேர விரும்பும் இரண்டு வணிகர்களைச் சந்திக்கிறார்கள். அவர்கள் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர். மேலும் அவர்கள் லாபத்தில் நான்கில் ஒரு பங்கினை பழனிக்கு வழங்க முன்வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் பழனிக்கு எந்த விதமான அறிவுரையை வழங்குவீர்கள்?

**நமது சிந்தனைக்கு**

i. இந்து கூட்டுக் குடும்ப முறையில் இயங்கி வரும் உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஏதேனும் இரண்டு மருத்துவமனையின் பெயரை குறிப்பிடுக.

ii. இந்து கூட்டுக் குடும்ப முறையில் நீங்கள் ஏற்றுமதி நிறுவனத்தை எவ்வாறு நடத்துவீர்?

iii. பேருந்து போக்குவரத்து தொழிலை இந்து கூட்டுக் குடும்பம் முறையில் நடத்த இயலுமா?

iv. சட்டத்திற்கு உட்பட்டு உங்கள் நண்பர்களுடன் இணைந்து ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை எவ்வாறு நடத்துவாய்?

v. உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஏதேனும் இரண்டு கூட்டாண்மை நிறுவனத்தை குறிப்பிடுக.

**வழக்கு ஆய்வு**

அ. ஒரு தந்தை சொந்தமாக விவசாய நிலம் வைத்துள்ளார். அவர் தன்னுடைய நிலத்தை தனது மூன்று மகன்களின் பெயருக்கும் மாற்றித்தர முடிவு செய்தார். வருவாய் துறையின் ஆவணங்களில் 3 மகன்களின் பெயருக்கும் பங்கை சமமாகப் பதிவு செய்தார். சமீபத்தில் தந்தை இறந்து விட்டார். அவர்கள் பரஸ்பரம் ஒப்புக்கொண்டபடி இல்லாமல் நடந்து கொண்டார்கள். தந்தையின் மரணத்திற்குப் பிறகு மூத்த மகனே நிலம் அனைத்தையும் நிர்வாகம் செய்யத் தொடங்கினான். கேள்வி என்னவென்றால் மேற்படி நிலம் மூதாதையர்களின் சொத்தா? இந்து கூட்டுக் குடும்பப்படி மூன்று சகோதரர்களும் அச்சொத்தை கோர முடியுமா? ஆம் எனில், அவர்கள் இந்து கூட்டுக் குடும்ப வழக்கப்படி தந்தை மரணமடைந்தால் அல்லது பெயர் மாற்றம் செய்ததிலிருந்தா என்று கூறவும்.

ஆ. நீங்கள் இந்து கூட்டுக் குடும்ப முறையில் ஒரு வணிக நிறுவனத்தை நடத்தி வருகிறீர்கள். அதனை அடிப்படையாக வைத்து ஒரு குடும்ப வரைபடம் வரைக.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 45 2/17/2021 3:11:07 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?**

அ. முதலாளி

ஆ. கர்த்தா

இ. மேலாளர்

ஈ. கூட்டாளி

5E99DB

**2. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?**

அ. உடன்படிக்கையால்

ஆ. பிறப்பால்

இ. முதலீட்டின் அடிப்படையில்

ஈ. நிர்வாகத்தின் அடிப்படையில்

**3. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?**

அ. கர்த்தா

ஆ. கூட்டு வாரிசுதாரர்

இ. தலைமுறை

ஈ. கூட்டாளிகள்

**4. _________ சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.**

அ. இந்துச் சட்டம்

ஆ. மிடாக்சரா சட்டம்

இ. தயாபாகா சட்டம்

ஈ. மேற்கண்ட யாவும்

**5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது**

அ. ஒப்பந்தத்தால்

ஆ. கூட்டாளிகளிடையே உறவு

இ. அரசின் வழிகாட்டல்

ஈ. நட்பின் அடிப்படையில்

**விடைகள்**

1. ஆ  2. ஆ  3. ஆ  4. ஆ  5. அ

### II. குறுவிடை வினாக்கள்.

1. கர்த்தா என்பவர் யார்?
2. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
3. கூட்டாளி என்பவர் யார்?
4. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
5. கூட்டாண்மைக் கலைப்பு எத்தனை வகைப்படும்?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
2. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
3. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?



XI_Tamil_commerce 1-15_001-147.indd 46 2/17/2021 3:11:07 PM

## IV. பெருவிடை வினாக்கள்.

1. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5)
2. கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)
3. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி. (ஏதேனும் 5)

## குறிப்பு நூல்கள்.


1. BHUSHAN,Y.K, 2013, Business Organisation and Management
2. SHERLEKAR,S.A., SHERLEKAR,V.S, Business Organisation and Management
3. RAO,V.S.P,2012, Business Organisation




XI_Tamil_commerce 1-15_001-147.indd 47 2/17/2021 3:11:07 PM

# அலகு –2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம் **6**

# கூட்டுப் பங்கு நிறுமம்

5EI5EY

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. கூட்டுப் பங்கு நிறுவனத்தின் பொருள்,
2. நிறுமத்தின் பண்புகள், நன்மைகள் மற்றும் குறைபாடுகள்
3. நிறுமத்தின் வகைகள்
4. அமைப்பு முறையேடு அதன் உள்ளடக்கம் மற்றும்
5. சங்க நடைமுறை விதிகள் அதன் உள்ளடக்கம்
6. தகவல் அறிக்கை அதன் உள்ளடக்கம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

## 6.01 நிறுமம் – பொருள் மற்றும் இலக்கணம்

கூட்டுப் பங்கு நிறுமம் வியாபார அமைப்பின் முந்தைய வடிவங்களான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மையின் குறைபாடுகளை களைவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி, தொழில் புரட்சியின் தாக்கம், பேரளவு மூலதனம் மற்றும் உயர் மேலாண்மைத் திறனுடன் பேரளவு முதலீட்டு தொழில் நிறுவனங்களை தோற்றுவித்து செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. பேரளவுத் தொழிலுக்குக் கோடிக்கணக்கில் பெருமுதல் தேவைப்படுகிறது. பெரிய நிறுவனங்களை நிர்வகிக்க மேலாண்மையில் சிறப்பாற்றல் உடைய வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர். கூட்டாண்மை நிறுவன அமைப்பில் காணப்படும் குறைபாடுகளான பேரளவு முதல் திரட்ட இயலாமை, வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன், வரையறாபொறுப்பு ஆகியவை அண்மைக்காலத்தில் மிகப்பெருமளவு முதல் திரட்டி பேரளவு தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்க இயலாத நிலையை உருவாக்கியது. எனவே இத்தகைய குறைபாடுகளைப் போக்கிட கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

2013ஆம் ஆண்டு இந்திய நிறுமச்சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டுள்ளது. அச்சட்டத்தில் நிறுமம் நிறுமத்தின் பொறுப்பு இயக்குனர்கள் நிறுமக்கலைப்புப் பற்றி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் நாள், மத்திய அரசு (நிறும விவாகாரங்கள் துறை அமைச்சகம்) 28 பிரிவுகளுடன் கூடிய நிறுமச் சட்டம் 2013க்கு ஆன அறிவிப்பினை வெளியிட்டது. இச்சட்டம் 2013 செப்டம்பர்15ஆம் நாள் அமலுக்கு வந்தது. இச்சட்டம் 1956ஆம் ஆண்டு இந்திய நிறுமச்சட்டத்தின் 658 பிரிவுகளை

### நிறுமம் – இலக்கணம்

"நிறுமம் என்பது பல நபர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதற்கு மூலதனத்தை வழங்கி அல்லது மூலதனத்தின் மதிப்பிலான பொருட்களை வழங்கி, சில வணிகம் அல்லது வியாபாரத்தைத் தொடங்கி அதிலிருந்து கிடைத்த இலாபநட்டத்தை (உள்ளவாறு) அவர்கள் பகிர்ந்து கொள்வதாகும்".


– லார்டு லிண்ட்லே

"நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும், நிலைபேற்றுத் தொடர்ச்சியுடனும், பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்".

– இந்திய நிறுமச் சட்டம் பிரிவு 2 (20) 2013



XI_Tamil_commerce 1-15_001-147.indd 48 2/17/2021 3:11:07 PM



உங்களுக்குத் தெரியுமா?

**2013 ஆம் ஆண்டு நிறுமச்சட்டம் சிறப்பம்சங்கள் :**

1. 1956ஆம் ஆண்டுடைய 658 பிரிவுகளுடன் உள்ள நிறுமச்சட்டத்திற்குப் பதிலாக 470 பிரிவுகளுடன் உள்ள 2013 ஆம் ஆண்டு நிறுமச்சட்டம் உள்ளது.
2. மொத்தம் சட்டம் 29 பிரிவுகளைக் கொண்டது.
3. பல புதிய அத்தியாயங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது உதாரணமாக, பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் (1956ஆம் ஆண்டுடைய 658 பிரிவுகளுடன் உள்ள நிறுமச்சட்டத்திற்குப் பதிலாக 470 பிரிவுகளுடன் உள்ள 2013 ஆம் ஆண்டு நிறுமச்சட்டம் உள்ளது.
4. மொத்தம் சட்டமும் 29 பிரிவுகளைக் கொண்டது. பல புதிய அத்தியாயங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது உதாரணமாக பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் (அத்தியாயம் 17) அரசு நிறுமங்கள் (அத்தியாயம் 23) நிறுமங்கள் வழங்கும் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்கள் (அத்தியாயம் 25) நிதிகள் (அத்தியாயம் 26) தேசிய நிறுமச் சட்ட நடுவர் மன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு நடுவர் மன்றங்கள் (அத்தியாயம் 27) சிறப்புநீதிமன்றங்கள் (அத்தியாயம் 28).
5. இச்சட்டத்தின் பார்வையால் மத்திய அரசின் விதிகளைப் பலப்படுத்தவும் மற்றும் சட்டப் பரிபாலனங்களைப் பகிரிந்தளிக்கவும் செய்கிறது.
6. 2013ஆம் ஆண்டின் நிறுமச்சட்டம் ஒரு விரிவான ஆலோசனை வழங்கவும் கற்றுக் கொள்ளத்தக்கதுமான நடைமுறைகளையும் மத்திய அரசுக்கு வழங்குகிறது.

அடிப்படையாகக் கொண்டு 470 பிரிவுகளை உள்ளடக்கியதாக இயற்றப்பட்டது. இச்சட்டம் 29 அத்தியாயங்களைக் கொண்டதாக உள்ளது. 1956ஆம் ஆண்டு நிறுமச்சட்டத்திற்குப் பதிலாக (பகுதிமட்டும்) இந்திய ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்று 29.8.2013 அன்று நிறைவேற்றப்பட்டது. 2013ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள் சில மாற்றங்களுடன் மாற்றியமைக்கப்பட்டது. உதாரணமாக தனியார் நிறுவனங்கள் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 50லிருந்து 200 ஆக அதிகரிக்கப்பட்டது. புதிய வகை நிறுமமாக "ஒரு நபர் நிறுமம்" இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டுத் தனியார் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

### இயல்புகள்

நிறுமத்தின் இன்றியமையாத பண்புகள் பின்வருமாறு.

### i. தனியான சட்ட நபர் தன்மையுடையது

நிறுமம் என்பது உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டுத் தன்னிச்சையாகச் செயல்படும் தனிநபர்த் தன்மையை நிறுமம் பெற்றுள்ளது. அதற்கெனத் தனிப்பெயருடன் பொது முத்திரையையும் கொண்டுள்ளது. அதன் உறுப்பினர்களுடன் வேறுபட்டுச் சொத்துக்களையும் பொறுப்புகளையும் தன்னிடத்தே கொண்டுள்ளது. கடன்களைத் தன் பெயரில் வாங்கவும், பணியாட்களை நியமிக்கவும், வங்கியில் கணக்குத் தொடங்கவும் ஒப்பந்தத்தில் ஈடுபடவும் வழக்குத் தொடுக்கவும், எதிர் வழக்காடவும் முடியும். சுருங்கக் கூறின் இது சட்டத்தின் கண்களில் ஒரு செயற்கை நபராக தனிநபர் தன்மையுடன் விளங்குகிறது.

### ii. வரையறு பொறுப்பு

பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு பங்குதாரர்களின் பொறுப்பும் அவர் வைத்துள்ள பங்குகளின் செலுத்தப்படாத தொகைக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் கடனுக்கு அதன் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால், அதன் கடனீந்தோர் நிறும உறுப்பினர்களின் சொந்தச் சொத்துக்களைக் கைப்பற்ற முடியாது. நிறுமப்பங்கு முதலில் அழைப்பு விடுக்கப்படாத தொகைக்கு மட்டுமே பொறுப்பாவார்.

### iii. நீடித்த வாழ்வு

ஒரு நிறுமம் சட்டத்தால் உருவாக்கப்பட்டதால் அதன் ஆயுளைச் சட்டத்தினால் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வர இயலும். அல்லது எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டதோ அந்த



XI_Tamil_commerce 1-15_001-147.indd 49 2/17/2021 3:11:07 PM

நோக்கம் நிறைவேறியவுடன் அந்நிறுவனம் கலைக்கப்படும். பங்குதாரர்களின் வாழ்வு முடிவுற்றாலும் நிறுமத்தின் ஆயுள் நீட்டிக்கும். பங்குதாரர்களின் நொடிப்புநிலை, செயல்திறன் இழப்பு, மனச் சமநிலை இழப்பு போன்ற நிகழ்வுகள் நிறுமத்தின் ஆயுளைப் பாதிக்காது.

### iv. தனிப்பட்ட சொத்து

நிறுமம் என்பது சட்டபூர்வத் தனிநபர் தன்மையைப் பெற்றுள்ளது. நிறுமம் தனது பெயரில் சொத்துக்கள் வாங்கலாம்,விற்கலாம்.உறுப்பினர்கள் நிறுமச் சொத்தின் மீது யாதொரு உரிமையும் கொண்டாட முடியாது.

### v. பங்குகளின் மாற்றியல்பு

பொது நிறுமங்களின் பங்குகளை மாற்றுவது எளிதானது, தேவைப்படும் பொழுது பங்குகளை விற்கலாம். பங்குதாரர் ஒருவர் தனது பங்குகளை மற்றொருவருக்கு மாற்றம் செய்யும் பொழுது மாற்றம் பெறுபவர் பங்குகள் தொடர்பான அனைத்து உரிமைகளையும் பெறுகிறார்.

### vi. பொது முத்திரை

நிறுமம் என்பது ஓர் செயற்கையான நபர். சட்டத்தால் உருவாக்கப்பட்ட நபர். ஆனால் கண்ணால் காண இயலாது. எனவே பத்திரங்களில், ஒப்பந்தங்களில் நிறுமம் கையொப்பமிட முடியாது. இயக்குநரவை மூலமாகவே நிறுமத்தின் அனைத்துச் செயல்களும் நடைபெறுகிறது. பொதுமுத்திரையே நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகக் கையெழுத்தாகும். நிறுமத்தின் பெயரையே பொது முத்திரையாக செதுக்கப்பட்டுள்ளது. எந்த ஓர் ஆவணமும் நிறுமத்தின் பொது முத்திரை இடப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்கப்படும். அவ்வாறு இல்லையெனில் அதற்குச் சட்டப் பூர்வ அங்கீகாரம் இல்லை. அதாவது அந்த ஆவணம் நிறுமத்தினால் வெளியிடப்பட்டதன்று எனப் பொருள்.



### vii. வழக்காடும் திறனும் மற்றும் வழக்கில் பதில் சொல்லும் உரிமையும்

ஒரு நிறுமம் தன் உறுப்பினர்களிடம் வேறுபட்டு தனது பெயரில் வழக்கு தொடுக்கவும், எதிர் வழக்காடவும் நிறுமத்திற்கு சட்டபூர்வ உரிமையுள்ளது.

### viii. தனிப்பட்ட மேலாண்மை

இயக்குநரவையே ஒரு கூட்டுப் பங்கு நிறுமத்தை மேலாண்மை செய்கிறது. பங்குதாரர்கள் நிறுமத்தை மேலாண்மை செய்ய முடியாது. பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர் அவை நிறுமத்தை மேலாண்மை செய்கிறது.

### ix. ஒரு பங்கு – ஒரு வாக்கு

ஒரு பங்கு ஒரு வாக்கு என்பது நிறுமத்தின் வாக்கெடுப்பு தத்துவமாகும். அதாவது ஒரு நபர் 10 பங்குகள் வைத்திருந்தால் அவருக்கு 10 வாக்குகள் உண்டு. கூட்டுறவு அமைப்பின் "ஒரு நபர் – ஒரு வாக்கு" என்ற விதிக்கு மாறானது ஆகும். ஒரு நிறுமத்தின் ஒரு பங்குநர் எத்தனை பங்குகள் வைத்துள்ளனரோ அதற்குச் சமமான ஓட்டுரிமை உண்டு.

### நன்மைகள்

கூட்டுப் பங்கு நிறுமம் பல நன்மைகளை உடையது அவை பின்வருமாறு.

### i. பேரளவு மூலதனம்

தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மையைக் காட்டிலும் நிறுமத்திற்குப் பேரளவு மூலதனத்தைத் திரட்ட இயலும். பேரளவு மூலதனம் என்பது பெரிய அளவு மூலதனத்தைத் திரட்டி அவற்றைப் பெரிய தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதாகும். உதாரணமாக ரிலையன்ஸ் தொலைபேசி நிறுவனம் ரூ. 25,000 கோடிக்கும் அதிகமாக மூலதனம் செய்துள்ளது. தனியாள் வணிகமோ அல்லது கூட்டாண்மையோ இதேபோல் பேரளவு மூலதனத்தைத் திரட்ட இயலாது.

### ii. வரையறுக்கப்பட்ட பொறுப்பு

பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும் பங்குதாரரின் இடர் என்பது பங்குகளின் முகமதிப்பில் செலுத்தப்படாத தொகை மட்டுமே பொறுப்பாகும்.

பொறுப்புறுதி நிறுமமாக இருந்தால் எவ்வளவு தொகைக்கு உத்தரவாதம் அளித்துள்ளாரோ அத்தொகையைக் கலைப்பின் பொழுது அவர் செலுத்த வேண்டும்.

### iii. பங்குகள் மாற்றம்

இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கிடையே பங்குகள் மாற்றம் என்பது எளிது, ஆகவே முதலீடு என்பது எளிமையான ஒன்றாகும். ஒரு பங்குதாரர் பங்குகளை எளிதாக வாங்கவும், விற்று பணமாக்கவும் முடியும்.

**எடுத்துக்காட்டு**

**சியாம் என்பவர் ஒரு நிறுமத்தின் ₹ 10 முகமதிப்புடைய 500 பங்குகளை வாங்கி ஒவ்வொரு பங்கின் மீதும் ₹ 7 செலுத்தியிருந்தார். அந்நிறுமம் தனது கடன்களைத் தீர்க்க இயலாத நிலையில், அவர் செலுத்த வேண்டிய பொறுப்பு ₹ 1500 ஆகும். (500 பங்குகள் மீது செலுத்த வேண்டிய தொகை ₹ 3 ஆகும்.)**

### iv. நீடித்த வாழ்வு

ஒரு நிறுமத்தின் வாழ்வு நீடித்த நிலைத்த தன்மையுடையது ஆகும். யார் வேண்டுமானாலும் பங்குகளை வாங்கி பங்குதாரர் ஆகலாம். எப்பொழுது வேண்டுமானாலும் யாருக்கும் பங்குகளை விற்று விடலாம். ஆனால் நிறுமம் என்றும் நீடித்து நிலைத்திருக்கும். இது நிறுமத்தின் தொடர் தன்மையே நிறுமத்தின் நீண்ட கால மூலதனத்திற்கு ஏற்றதாகும்.

### v. சேமிப்புப் பழக்கம் மற்றும் மூலதனம் செய்யும் பழக்கம்

கூட்டுப் பங்கு நிறுவனம் பொதுமக்களைச் சேமிக்க ஊக்குவிக்கிறது. சிறிய தொகையாக இருந்தாலும் அத்தொகைக்கு பங்குகளை வாங்க இயலும். ஒரு நபர், ஒரு நிறுமத்தின் ஒரு பங்கைக்கூட வாங்கலாம்.

### vi. இடர் ஏற்கும் திறன்

கூட்டுப்பங்கு நிறுமத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை பல மடங்காக இருப்பதால் நிறுமத்தின் நட்டத்தை எளிதாகப் பங்கிட்டுக் கொள்ள இயலுகிறது. இதனால் நிறுமத்தின் நட்டத்தில் மிகச் சிறிய அளவையே ஒவ்வோர் உறுப்பினரும் பகிர்ந்து கொள்கின்றனர். எனவே நிறுமம் தன் பங்குநர்களுக்கு இடர் ஏற்கும் திறனை உருவாக்குகிறது.

### vii. பேரளவு உற்பத்தியின் பெரு நன்மைகள்

கூட்டுப்பங்கு நிறுமம் பேரளவு வியாபாரத்தில் ஈடுபடுகிறது. பேரளவு உற்பத்தியின் அனைத்து நன்மைகளையும் பயன்படுத்திக்கொள்கிறது. உதாரணமாக, பேரளவில் தொழில் செய்யும் பொழுது பல வித சிக்கனங்களைக் கூட்டுப்பங்கு நிறுமங்கள் பெற முடிகிறது. அடக்கச் செலவைச் சுருக்க முடிகிறது. பல்வேறு சரக்களிப்பளிப்பவரிடம் பேரம் பேசிப் பல சலுகைகளைப் பெற முடிகிறது. எடுத்துக்காட்டாக ஹீரோ மோட்டார் கார்ப்பரேசன் நிறுவனம் 2015-ம் ஆண்டில் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் இருசக்கர வாகனங்களை உற்பத்திச் செய்து சிக்கனமான விலையில் விற்றுப் பேரளவு உற்பத்தியின் நன்மைகளைத் தனது வாடிக்கையாளர்கள் நுகரச் செய்தது.

### viii. பொருளாதார முன்னேற்றம்

நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் பேரளவு நிறுவனங்கள் துணை புரிகின்றது. கூட்டுப்பங்கு நிறுமங்கள் பேரளவு நிதி ஆதாரத்துடன் செயல்படுவதால் பேரளவு உற்பத்தி செய்ய முடிகிறது. பெருமளவு வேலைவாய்ப்பை உருவாக்குதல், பெருமளவு நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பொருளாதார ஏற்றதாழ்வைச் சீர்செய்வதோடு அரசுக்கு வரி வருவாயையும் பெருக்கித் தருகிறது.

## குறைபாடுகள்

பின்வரும் வியாபார அமைப்பான நிறுமத்தின் குறைபாடுகள் பின்வருமாறு

### i. அதிகச் செலவும் கடுமையான விதிமுறைகளும்

நிறுமத் தோற்றுவிப்பாளர்களால் கடுமையான சடங்கு முறைகளைப் பின்பற்றிக் கூட்டுப் பங்கு நிறுமங்கள் தொடங்க வேண்டியுள்ளது. தோற்றுவிப்பாளர்கள் நிறுமத்தைத் தொடங்க அதிக நேரமும் அதிகத் தொகையும் முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

### ii. நேர்மையற்ற மேலாண்மை

நிறும மேலாண்மை நிறுமத்தின் இயக்குநர்கள் அலுவலர்களின் துணைக்கொண்டு நடத்தப்படுகிறது. சில இயக்குநர்கள் மனசாட்சியற்ற முறையில் தனிப்பட்ட இலாபத்திற்காகச் செலவு செய்கிறார்கள்.

அவர்கள் தனது நிலையையும் அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

### iii. ஒருசிலர் கையில் நிர்வாகம்

சில பணவசதி படைத்த நபர்கள் நிறுமத்தின் கட்டுப்பாட்டைத் தன்னிடம் வைத்துக் கொண்டு தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். நிறும மேலாண்மை ஒருசிலர் கையில் சிக்குண்டு கிடக்கின்றது.

### iv. ஊகவணிகம்

நிறுமத்தின் பங்குகளைச் சிலர் தவறாக அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்று பங்குகளை ஊகவணிகத்தில் ஈடுபடுகின்றனர்

### v. விருப்பமின்மை

நிறுமத்தின் அலுவலர்கள் கடின உழைப்பைச் செய்ய விரும்புவதில்லை. அவர்கள் இடர் ஏற்கவும் விருப்பமில்லை. அவர்கள் நிறும வளர்ச்சியில் உண்மையான அக்கறை காட்டுவதில்லை.

### vi. பணியாளர்களுடன் சமூக உறவின்மை

கூட்டுப் பங்கு நிர்வாகத்தில் பங்குநர்கட்கும் பணியாளர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லை. ஒட்டுமொத்த நிர்வாகமும் இயக்குநர் அவையால் நடத்தப்படுகிறது. இச்சூழ்நிலையில் பணியாளர்கட்கும் நிர்வாகத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

### vii. அதிக வரி விதிப்பு

மற்ற அமைப்புகளைப் பார்க்கும் பொழுது கூட்டுப்பங்கு நிறுமத்திற்கு வரிவிதிப்பு அதிகமாக இருக்கிறது.

## 6.02 நிறுமத்தின் வகைகள்


### 1. கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில்

#### அ. பட்டய நிறுமங்கள்

ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப் படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும். உதாரணம் கிழக்கிந்திய நிறுமம் ஸ்டேண்டார்டு சார்ட்டு வங்கி, இங்கிலாந்து வங்கி மற்றும் ஹைட்சன்ஸ் பே நிறுமம் போன்றவை நிறுமச் சட்டம் இந்த நிறுமத்திற்கு பொருந்தாது. இவ்வகை வங்கிகளை இந்தியாவில் தோற்றுவிக்க இயலாது.

#### ஆ. சட்டமுறை நிறுமங்கள்

நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச்சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் எனக் கூறப்படுகின்றன. அமைப்பு முறையேட்டில் அரசியல் சட்டத்தில் கூறியுள்ளவாறு அமைப்பு முறையீட்டில்






XI_Tamil_commerce 1-15_001-147.indd 52 2/17/2021 3:11:08 PM

குறிப்பிடப்பட்டிருக்கும் அன்றாடம் நடைபெறும் மேலாண்மை நடவடிக்கைகளைச் சங்க நடைமுறைவிதிகளில் உள்ளவாறு குறிப்பிட்டபடி நடைபெறும். சட்டபூர்வ நிறுமத்தின் தணிக்கையை இந்தியப் பொதுக் கணக்குத் தணிக்கை யாளர் அவர்கள் மேற்கொள்வர். அவர்களின் அறிக்கை நாடாளுமன்றம் / சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படும். உதாரணமாக இந்திய உணவுக் கழகம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொதுக்காப்பீட்டு நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, ரயில்வேத்துறை, மின்சாரக் கழகம், சட்டபூர்வ நிறுவனங்கள் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் இந்நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டது. என்ற வார்த்தையை தனது பெயருக்குப் பின்னால் சேர்க்க வேண்டிய தேவையில்லை

### இ. இலாப நோக்கமில்லாச் சங்கம்

பிரிவு 8 ன்படி மத்திய அரசு இவ்வகைச் சங்கத்திற்கு அனுமதி வழங்குகிறது. இவ்வகை நிறுமங்கள் வரையறு பொறுப்புடன் வரையறுக்கப் பட்டது அல்லது தனி வரையறுக்கப்பட்டது என்று வார்த்தை பெயருடன் இறுதியில் சேர்க்காமல் பதிவு செய்யப்படுகிறது. "இலாபமில்லா அமைப்பு என்ற தகுதிநிலையால் அனுமதி வழங்கப்படுகிறது. பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு மத்திய அரசு அனுமதி வழங்கும்.

(i) சங்கம் வரையறு பொறுப்பு என்ற நோக்கத்துடன் மட்டுமே வணிகத்தை மேம்படுத்தவும்/கலை, அறிவியல், மதம், கருணை அல்லது பயன்படத்தக்க நோக்கத்துடன் அமைக்கப்பட வேண்டும்.

(ii) இலாப மீட்டலை நோக்கமாகக் கொண்டு செயல்பாட்டிருந்தால் அதன் இலாபத்தை அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த மட்டுமே வேண்டும்.

(iii) அதன் உறுப்பினர்களுக்குப் பங்காதாயம் வழங்கக் கூடாது.

இத்தகைய நிறுவனங்கள் பொது நிறுமமாகவோ அல்லது தனி நிறுமமாகவோ இருக்கலாம் அல்லது பங்கு மூலதனம் இல்லாமலும் இருக்கலாம்

## 2. உறுப்பினர்களின் அடிப்படையில்

### அ) தனி நிறுமம்

தனிநிறுமம் என்பது நிறுமங்களில் ஒருவகை இந்நிறுமம் குறைந்த பட்சம் 2 பங்குதாரர்கள் மற்றும் 2 இயக்குநர்களைக் கொண்டு செயல்படலாம். குறைந்தபட்சத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட மூலதனம் ₹ 1,00,000/- என்பது நிறுமச்சட்டம் (திருத்தம்) 2015இல் விதிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் 29.05.2015 அன்று அமல்படுத்தப்பட்டது. தனி நிறுமங்களில் பங்குகள் மாற்றம் செய்வதைச் சங்க நடைமுறை தடைசெய்கிறது. பத்திரங்களுக்காக அழைப்பு விடுப்பதையும் தடைசெய்கிறது. தற்பொழுது நிறுமத்தின் பங்குதாரர்களாக அதிகபட்சமாக 200 நபர்கள் வரை அனுமதிக்க நிறுமச்சட்டம் அனுமதி அளிக்கிறது. ஒரு தனிநிறுமம் மூன்று முறைகள் அமைக்கலாம் அவையாவன

a) தனிநிறுமம் b) சிறிய தனி வரையறுக்கப்பட்ட நிறுமம் c) ஒரு நபர் தனிநிறுமம்.

### ஆ) பொது நிறுமம்

பொது நிறுமம் என்பது தனி நிறுமம் அல்லாதது. பொது நிறுமம் என்பது பின்வரும் சிறப்பு இயல்புகளை உள்ளடக்கியது.

- குறைந்தபட்ச 7 உறுப்பினர்களைக் கொண்டது.
- குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5,00,000/- ஆகும். அல்லது அதிகபட்ச செலுத்தப்பட்ட மூலதனம் குறிப்பிடவில்லை
- துணை நிறுமம் என்பது தனி நிறுமமாக இருக்காது.
- பங்குகளை மாற்றம் செய்வதைத் தடை செய்வதில்லை.
- நிறுமத்தின் பங்குகளுக்கோ அல்லது கடனீட்டுப் பத்திரத்திற்கோ வெளியிடத் தடைசெய்வதில்லை.
- பொதுவைப்புநிதியைப் பெறப் பொதுமக்களுக்கு அழைப்பு விடுப்பதைத் தடை செய்வதில்லை.

## 3. பொறுப்பின் அடிப்படையில்

### அ. பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள்

பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள் என்பது அதன் அமைப்பு முறையேட்டில் கூறப்பட்டுள்ளபடி அதன் பங்கு முதலில் செலுத்தப்படாத தொகை மட்டுமே பொறுப்பாகும். பொது நிறுமம் அல்லது தனி நிறுமம் ஆகியவை



XI_Tamil_commerce 1-15_001-147.indd 53 2/17/2021 3:11:08 PM

பங்குகளால் வரையறுக்கப்பட்டதாக இருக்கலாம். பங்குகளின் முகமதிப்பை முழுவதுமாக செலுத்திவிட்டால் பொறுப்பு ஏதும் இல்லை.

பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம் என்பது இரண்டு முக்கியத் தன்மைகளைக் கொண்டது. அவை பின்வருமாறு:

- உறுப்பினர்களின் பொறுப்பு என்பது பங்குகளின் மீதான செலுத்தப்படாத தொகை அளவிற்கு மட்டுமே பொறுப்பாவார்.
- பொறுப்பு என்பது நிறுமத்தின் வாழ்நாளில் அல்லது நிறுமம் கலைக்கப்படும்பொழுது செலுத்தப்படவேண்டும்.

### ஆ. பொறுப்புறுதியால் வரையறை செய்யப்பட்ட நிறுமங்கள்

பொறுப்புறுதி நிறுமக் கலைப்பிற்குள்ளாகும் பொழுது, அதன் கடன்களைத் தீர்க்கப் போதுமான சொத்துகள் இல்லா நிலையில் தானே முன் வந்து தருவதாக அமைப்பு முறையேட்டில் உறுதி அளித்திருந்த தொகை அளவிற்கு மட்டுமே பங்குநர்களிடமிருந்து பற்றாக்குறையைத் திரட்ட முடியும். இவ்வகை நிறுமங்கள் கலை, வணிகம், அறிவியல், மதம், அறக்கொடை அல்லது ஏதாவதொரு நன்மை பயக்கும் நோக்கத்தைக் கொண்டு வளர்ந்த இவ்வகை நிறுமங்களாகும். இவ்வகை நிறுமங்கள் தனி நிறுமங்களாகவோ அல்லது பொது நிறுமங்களாகவோ இருக்கலாம்.

### இ. வரையறாப் பொறுப்புடைய நிறுமங்கள்

வரையறாப் பொறுப்புடைய நிறுமங்கள் என்பது அதன் அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களில் பொறுப்பு வரையறுக்கப்படாதது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதாவது அதன் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. உறுப்பினர்களின் சொந்தச் சொத்துகளைக் கொண்டு நிறுமத்தின் பொறுப்புகளைத் தீர்ப்பதாகும். நிறுமங்கள் தனித்த சட்டஉருத் தன்மை பெற்றிருப்பதால், நேரடியாகக் கடனீந்தோர் அதன் உறுப்பினர்கள் மீது வழக்குத் தொடுக்க இயலாது. கடனீந்தோர் நிறுமத்தைக் கலைக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால், நீதிமன்றம் கலைப்பாளர் ஒருவரை நியமித்து அவர் மூலம் உறுப்பினர்களின் தனிச் சொத்துக்களிலிருந்து எடுத்து கடன்களைத் தீர்க்கலாம்.

## 4. கட்டுப்பாட்டின் அடிப்படையில்

### அ. அரசு நிறுமங்கள்

பொதுத்துறை நிறுவனங்களை 1956ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்தால் அது அரசு நிறுமம் எனப்படும். இவ்வகை நிறுமங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்குச் சொந்தமானது.

1956 ஆம் ஆண்டு இந்திய நிறுமச்சட்டம் பிரிவு 617, அரசு நிறுமங்கள் என்பது 51%க்கு மேலாக (செலுத்தப்பட்ட மூலதனம்)

1. மத்திய அரசு
2. மாநில அரசு அல்லது மாநில அரசுகள்
3. பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் வைத்திருந்தால் அவற்றையே அரசு நிறுமங்கள் என்று அழைக்கப்படும்

அரசு நிறுமத்தின் துணை நிறுமமும் அரசு நிறுமம் என்று அழைக்கப்படும். இவ்வகை நிறுமங்கள் தனி நிறுமங்களாக பதிவு செய்யப்பட்டாலும் அதன் மேலாண்மையும் கட்டுப்பாடும் அரசிடமே இருக்கும். இவ்வகை நிறுமங்களின் பங்குதாரர்களாகத் தனியாரும் அரசும் இருப்பர். சில நேரங்களில் கலப்பு உரிமை நிறுமம் என்று அழைக்கப்படலாம். SAIL, IOC, ONGC, BHEL போன்ற நிறுவனங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

### ஆ. பிடிப்பு நிறுமங்கள்

பிரிவு 2 (87)பிடிப்பு நிறுமம் என்பது மற்றொரு நிறுமத்தின்

1. பெரும்பாண்மை இயக்குநர்களை நியமிக்கவும் அல்லது நீக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் நிறுமம்,
2. நிறுமத்தின் மொத்தப் பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை வைத்திருக்கும் நிறுமம்.

அந்நிறுமம் பிடிப்பு நிறுமம் எனப்படும். அது கட்டுப்படுத்தும் நிறுமம், துணை நிறுமம் எனப்படும். ஒரு பிடிப்பு நிறுமம் எத்தனை துணை நிறுமங்களை வேண்டுமானாலும் நிர்வகிக்கலாம்.

### இ. துணை நிறுமங்கள்

துணை நிறுமம் என்பது

(i) அந்நிறுமத்தின் மொத்த பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை மற்றொரு நிறுமம் வைத்திருந்தாலும்,

(*ii*) பெரும்பான்மை இயக்குனர்களை நியமிக்கவும் நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தாலும், அவ்வாறு கட்டுப்படுத்தப்படும் நிறுமம் துணை நிறுமம் ஆகும்.

எடுத்துக்காட்டாக H என்ற நிறுமம் S என்ற நிறுமத்தின் மொத்த பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பங்குகளை பெற்றிருந்தால் H என்ற நிறுமம் பிடிப்பு நிறுமம் ஆகும். S என்ற நிறுமம் H என்ற நிறுமத்தின் துணை நிறுமம் ஆகும்.

### 5. தேசிய இனத்தின் அடிப்படையில்

#### அ. உள்நாட்டு நிறுமங்கள்

ஒரு நிறுமம் அயல்நாட்டு நிறுமமாக அல்லாமல் உள்நாட்டு நிறுமச்சட்டங்களின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிறுமம் உள்நாட்டு நிறுமம் எனப்படும்.

#### ஆ. அயல்நாட்டு நிறுமங்கள்

அயல்நாட்டு நிறுமம் என்பது ஒரு நிறுமம் இந்தியாவிற்கு வெளியில் வேறுநாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுமத்தைக் குறிக்கும். அவை அயல்நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவில் நிறுமத்தை அமைப்பதற்குப் பின்வரும் ஆவணங்களைக் கண்டிப்பாக நிறுமப்பதிவாளர்களிடம் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். அவையாவன

i. சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாக்கத்தின் சான்றிதழ் அல்லது அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ii. நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம்.

iii. இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்.

iv. இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.

v. நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

#### இ. பன்னாட்டு நிறுமங்கள்

பன்னாட்டு நிறுமங்கள் என்பது (MNC) மிகப் பெரிய தொழிலமைப்பாகும். அவ்வமைப்பு பின்வருமாறு செயல்படும்.

i. இதன் செயல்பாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செயல்பட வேண்டும்.


ii. பல நாடுகளில் இதன் உற்பத்தி, சந்தையியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் என உலகளவில் நடைபெறுகிறது

iii. தனது இலாபத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து ஈட்டுகின்றது

உதாரணம் – மைக்ரோ சாப்ட் நிறுவனம், நோக்கியா நிறுவனம், நெஸ்ட்லே, கோகோ கோலா, IBM, பெப்சிக்கோ, சோனி கார்ப்பரேஷன்.

### 6.03 அமைப்பு முறையேடு

அமைப்பு முறையேடு என்பது ஒரு கூட்டு பங்கு நிறுமம் முறையாக அமைக்கப்பட்டதைச் சான்று பகரும் ஓர் ஆவணமாகும். இந்த ஆவணத்தில் பெயர், இடம், நோக்கங்கள், பொறுப்பு மற்றும் முதலீடு தொடர்பான உட்பிரிவுகள் இருக்கும். நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் ஆவணமாகும். இந்த ஆவணத்தில் குறிப்பிடப்படாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபட்டால் அச்செயல் வரம்பு மீறியச் செயல் (Ultra Vires) என அழைக்கப்படுகிறது. எனவே, அத்தகைய எல்லை மீறிய செயல் நிறுமத்தைக் கட்டுப்படுத்தாது. இந்த ஆவணம் நிறுமத்திற்கும், வெளியாருக்கும் உள்ள தொடர்பினை விவரிக்கிறது. இது ஒரு பொது ஆவணமாகும். வெளிநபர் யாரேனும் நிறுமத்துடன்



854816/2

THE COMPANIES ACT, 1948

COMPANY LIMITED BY GUARANTEE AND NOT HAVING A SHARE CAPITAL

REGISTERED

Memorandum of Association

— OF —

continued...



XI_Tamil_commerce 1-15_001-147.indd 55 2/17/2021 3:11:08 PM

வியாபார உறவு கொள்ள விரும்பினால் அமைப்பு முறையேட்டினை முழுமையாகப் படித்து அதன் உட்பிரிவுகளைத் தெரிந்து வைத்துக் கொள்வது சாலச் சிறந்தது.

### அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம்

#### 1. பெயர் குறித்த உட்பிரிவு

பெயர் குறித்த உட்பிரிவில் ஒரு நிறுவனத்திற்குச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களுக்கு பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால் நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும்.

#### 2. இடம் குறித்த உட்பிரிவு

இப்பிரிவு நிறுமத்தின் பதிவு அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்பது பற்றித் தெரிவிக்கிறது. தகவல் தொடர்பிற்காக நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தையும் மற்றும் பதிவேடுகள் எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் தெரிவிக்கிறது, தொழில் தொடங்குவதற்கு முன்பே நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

#### 3. நோக்கம் குறித்த உட்பிரிவு

இப்பிரிவு நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். பங்குதாரர்களின் தேவைகளையும் மற்றும் நிதி ஆதாரத்தையும் பயன்படுத்துவது குறித்தும் இதில் விவரங்கள் இருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் நிறுமத்தின் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். நோக்கங்கள் நிறுமங்கள் சட்டத்தை மீறியோ அல்லது பொது நலத்திற்கு எதிராகவும் இருக்கக் கூடாது.

#### 4. பொறுப்புக் குறித்த உட்பிரிவு

பொறுப்புக் குறித்த உட்பிரிவு என்பது பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளைத் தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும் இதே பொறுப்புறுதி நிறுமத்தின் பங்குதாரர்களின் பொறுப்பு என்பது பங்குகளை வைத்துள்ள அளவும் கலைப்பின் பொழுது தருகின்ற தொகை மற்றும் கலைப்புச் செலவும் அடங்கும்.

#### 5. முதல் குறித்த உட்பிரிவு

முதல் பிரிவு என்பது நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்தப்பட்ச மதிப்பு) ஆகியவை பற்றி விவரிக்கிறது. நிறுமத்தின் சொத்துகள் பற்றியும் இப்பிரிவு குறிப்பிடுகிறது.

#### 6. அமைப்பு குறித்த உட்பிரிவு

பங்குதாரர்கள் தாங்கள் ஒன்றிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும் தங்களின் விருப்பத்தை இப்பிரிவு வெளிப்படுத்துகிறது. பொதுநிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

## 6.04 செயல்முறை விதிகள்

செயல்முறை விதிகள் என்பது நிறுமத்தின் முக்கிய ஆவணமாகும் இதில் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த முக்கிய ஆவணம் நிறுமத்தைப் பதிவு செய்யும் பொழுது நிறுமம் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிறுமச்சட்டத்தின் குறிப்பிட்டுள்ளவாறு இந்த ஆவணம் நிறுமம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கான நிறுமத்தின் துணை விதிகளாகக் கருதப்படும். அட்டவணை 'அ' (Table A) நிறுமத்தின் உட்கட்டமைப்பு விதிகளை வெளிப்படுத்தும் ஆவணமாகும். அட்டவணை அவை பின்பற்றும் நிறுமங்கள் தனக்கென தனியாக நிறுமச் செயல்முறை விதிகளைத் தயாரித்துப் பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தேவையில்லை.

### செயல்முறை விதிகளின் உள்ளடக்கம்

செயல்முறை ஏடு என்பது கூட்டுப் பங்கு நிறுமத்தை எப்படி அன்றாடம் நடத்திச் செல்வது என்ற விவரத்தைத் தாங்கிய ஏடு. இதில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இருக்கும்.

i. பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.

ii. ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 56 2/17/2021 3:11:08 PM

அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.

iii. பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.

iv. பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.

v. பங்குமாற்றம் குறித்த விதிகள்.

vi. பங்காதாயம் அறிவித்தல் .

vii. நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம் .

viii. இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.

ix. கூட்டங்களை நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்

x. நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்

xi. நிறுமத்தின் பொது முத்திரை.

xii. நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.

## 6.05 தகவலறிக்கை

### பொருள்

நிறுமச் சட்டம் பிரிவு 2(26) தவலறிக்கைக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வழங்குகிறது. ஒரு பொது வரையறை நிறுமம் தான் வெளியிடும் பங்குகளையும் கடனீட்டு பத்திரங்களையும் வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு ஆவணம் தகவலறிக்கை எனப்படும். பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதற்காக வெளியிடப்படும் விளம்பரம் தகவலறிக்கையாகவே கருதப்படும்.

### உள்ளடக்கம்

தகவலறிக்கை என்பது நிறுமத் தொழில் ஆதாயமிக்கதாக இருக்குமா என்பதை முதலீட்டாளர் நோக்கும் சாளரமாக (Window Display) அமைகிறது. அட்வணை II ன் படி ஒரு தகவலறிக்கை பின்வரும் தகவல்களையாவது கட்டாயம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

i. தகவலறிக்கை நிறுமத்தின் நோக்கத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும். அதில் நிறுமத்தின் அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் அவர்கள் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை

ii. இயக்குநர்கள், மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோரின் பெயர், முகவரி மற்றும் தொழில் ஆகிய விவரங்கள்

iii. வெளியிடப்படும் பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை

iv. இயக்குநர்களின் தகுதிப்பங்குகள் குறித்த விவரங்கள்

v. கடந்த இரண்டாண்டுகளில் ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக வெளியிடப்பட்ட பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் குறித்த விவரங்கள்

vi. சொத்துக்களை நிறுமத்திற்கு விற்பனை செய்தவர்களின் பெயர் மற்றும் முகவரி அதற்கு வழங்கப்பட்ட தொகை அல்லது செலுத்தப்படாத தொகை, விவரங்கள்

vii. இயக்குநர்கள், செயலர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர்களின் விவரங்கள் மற்றும் ஊதியம்

viii. குறுமப் பங்கொப்பத் தொகை

ix. செயல்பட்டு வரும் நிறுமமாயின் வியாபாரத்தின் கால அளவு, தொழில் அமைப்பின் விவரங்கள்

x. தொடக்கச் செலவுகளுக்காக எதிர்பார்க்கப்படும் தொகை

xi. நிறும தணிக்கையர்கள், வங்கியர்கள் மற்றும் வழக்குறைஞர்கள் ஆகியோரின் பெயர் மற்றும் முகவரி

xii. தணிக்கை செய்யப்பட்ட இலாப நட்டக் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவற்றைப் பார்வையிட அனுமதிக்கும் நேரம், இடம் மற்றும் அதன் நகல்கள்.

xiii. கடந்த ஐந்தாண்டுகளின் நிறுமத்தின் இலாப நட்டம் குறித்த தணிக்கையரின் அறிக்கை.

xiv. நிறுமத்தின் முந்தைய இலாபம் அல்லது காப்புநிதியை மூலதனமாக்கி இருந்தால் அதனுடைய விவரங்கள் தகவலறிக்கையில் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| உத்திரவாதம் | அமைப்பு முறையேடு |
| தகவலறிக்கை | பொது முத்திரை |
| நீடித்த வாழ்வு | செயற்கை நபர் |

### நமது சிந்தனைக்கு

1. ஏதேனும் இரண்டு அரசு பொது நிறுமத்தை குறிப்பிடுக.
2. ஏதேனும் இரண்டு கூட்டு பங்கு நிறுமம் குறிப்பிடுக (தனியார் துறை)
3. ஏதேனும் இரண்டு வெளிநாட்டு நிறுமத்தை குறிப்பிடுக (தனியார் துறை)

### மேலும் அறிவதற்கு

ஏதேனும் மூன்று வெவ்வேறு நிறுமங்களின் தகவலறிக்கையை சேகரி. மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தை நிரப்புக.

| விபரம் | நிறுமம் 1 | நிறுமம் 2 | நிறுமம் 3 |
|---|---|---|---|
| பெயர் | | | |
| நோக்கம் | | | |
| வெளியிடப்படும் பங்குகளின் பெயர் | | | |
| வெளியிடப்படக் கூடிய பங்குகளின் எண்ணிக்கை | | | |
| வெளியிட்ட ஒவ்வொரு பங்குகளின் விலை | | | |

### சூழ்நிலை ஆய்வு

அ. அசோக் என்பவர் ஒரு தொழில்துறை வடிவமைப்பாளர் ஆவார். அவர் பயிற்சிக்கு ஜெர்மனியில் இருந்தபோது ஃபைபர் கண்ணாடி உற்பத்திக்கான தொழில்நுட்பத்தை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இந்தியாவில் ஃபைபர் கண்ணாடி தயாரிப்பதற்கான ஒரு ஆலை ஒன்றை நிதியளிப்பாளர்களையும், தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்டு அமைக்க அவர் திட்டமிடுகிறார். ஆலைக்கான ஆரம்பக்கட்ட முதலீடு ₹50 லட்சம் ஆகும். அசோக் மற்றும் மற்றவர்கள் இந்த நோக்கத்திற்காக ஒரு நிறுவனத்தை அமைக்க முடிவு செய்கிறார்கள்.

அவர்கள் நோக்கத்தை நிறைவேற்ற ஒரு பொது நிறுவனத்தை அமைக்க வேண்டுமா? அப்படியானால், அவர்கள் அதை எப்படி அமைப்பார்கள்? இல்லையென்றால், நீங்கள் என்ன மாற்று வழியைப் பரிந்துரைப்பீர்கள்? அசோக் மற்றும் அவரது கூட்டாளிகள் உங்களிடம் கருத்துக் கேட்டால் என்ன விதமான ஆலோசனைகளை வழங்குவீர்கள்?

ஆ. நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஏதாவது 10 பொருட்களை சேகரிக்கவும் (பாக்கெட் செய்யப்பட்டது) பிறகு அந்த பொருட்களின் நிறுவனங்களின் பெயர்களை பட்டியலிடவும். மேலும் அந்த நிறுவனங்களில் எது எது தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் என்று பட்டியலிடவும். மேலும் அந்த நிறுவனங்களில் பன்னாட்டு நிறுவனங் களை வகைப்படுத்தவும்.


XI_Tamil_commerce 1-15_001-147.indd 58 2/17/2021 3:11:09 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?**

   அ. தகவலறிக்கை

   ஆ. சங்க நடைமுறை விதிகள்

   இ. அமைப்பு முறையேடு

   ஈ. கூட்டுருவாக்கச் சான்றிதழ்

2. **நிறுமச் சட்டத்தின் அட்டவணை – அ (Table-A) என்பது**

   அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

   ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

   இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி

   ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

3. **கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?**

   அ. பட்டய (சாசன) நிறுமம்

   ஆ. அயல் நாட்டு நிறுமம்

   இ. அரசு நிறுமம்

   ஈ. சட்டமுறை நிறுமம்

4. **நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?**

   அ. கடனீந்தோர்

   ஆ. கடனாளர்

   இ. கடனீட்டு பத்திரதாரர்

   ஈ. பங்குதாரர்கள்

5. **ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் _______ எனப்படும்.**

   அ. பட்டய (அ) சாசன நிறுமங்கள்

   ஆ. சட்டமுறை நிறுமங்கள்

   இ. பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்

   ஈ. அயல்நாட்டு நிறுமங்கள்

**விடைகள்**

1. இ  2. இ  3. ஈ  4. ஈ  5. அ

### II. குறுவிடை வினாக்கள்.

1. நிறுமத்தின் பல்வேறு வகைகளை விவரி.
2. நிறுமம் வரைவிலக்கணம் தருக.
3. வரையறு பொறுப்பு என்றால் என்ன?
4. நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
5. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. நிறுமத்தின் ஏதேனும் மூன்று நன்மைகளை விவரி.
2. அரசு நிறுமம் என்றால் என்ன?
3. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)
2. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)
3. பன்னாட்டு நிறுவனம் என்றால் என்ன?

### குறிப்பு நுல்கள்.


1. www.company-formation.co.in


5ES1GL

# அலகு –2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம்
7

# கூட்டுறவு அமைப்பு

5F1HI9

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. கூட்டுறவு பொருள்
2. கூட்டுறவுகளின் சிறப்பியல்புகள், நன்மைகள் மற்றும் குறைபாடுகள்
3. கூட்டுறவுகளின் கொள்கைகள்
4. கூட்டுறவுகளின் வகைகள்

ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்

**உங்களுக்குத் தெரியுமா?**



முதல் கூட்டுறவுச் சங்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கி "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சங்கம்" என்று அவர் அழைத்தார்.

## 7.01 பொருள் மற்றும் இலக்கணம்

கூட்டுறவு என்பது ஒரு வணிக நிறுவனமாகும். அது அதன் தயாரிப்புகள், பொருட்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தும் உறுப்பினர்களுக்குச் சொந்தமான மற்றும் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகும். கூட்டுறவு உறுப்பினர்களின் வகைகள் மற்றும் உறுப்பினர்களின் அளவு ஆகியவற்றில் வேறுபாடு இருந்தாலும், உறுப்பினர்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களைச் சந்திக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட மற்றும் அங்கத்தினர்களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனமும் கட்டமைக்கப்படுகின்றன.

உறுப்பினர்களால், உறுப்பினர்களுக்காக தாங்களாகவே இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பே கூட்டுறவாகும். இதில் லாபத்தை விட சேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். கூட்டுறவுகளில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் செங்குத்து ஒருங்கிணைப்பை அடைய ஒருங்கிணைந்த (கிடைமட்ட ஒருங்கிணைப்பு) தனிநபர்களால் கூட்டுறவு நிறுவனங்கள் உருவாகின்றன. சமுதாயத்தின் குறைந்த சக்தி வாய்ந்த உறுப்பினர்களின் நலன்களை ஊக்குவிப்பதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் பயன்பட்டன. விவசாயிகள், தயாரிப்பாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் தனித்தனியாகச் சம்பாதிக்கும் அளவிற்கு அதிகமானவற்றைச் சாதிக்க முடியும் என்று கண்டனர்.

மனித வரலாறு முழுவதும் பரஸ்பர நன்மைக்காக மக்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்திருந்தாலும்,





XI_Tamil_commerce 1-15_001-147.indd 60 2/17/2021 3:11:09 PM

தொழில்துறை புரட்சியின் போது கூட்டுறவு அமைப்பு வணிக அமைப்பைத் தொடங்கியது. முதலில் கூட்டுறவு இயக்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கி **"ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி"** என்று அவர் அழைத்தார். இது படிப்படியாக கடன், விவசாயம், சந்தைப்படுத்துதல், செயலாக்கம், வீட்டுவசதி, போக்குவரத்து, காப்பீடு, மீன் வளர்ப்பு, கோழிப்பண்ணை, பால், பாசனம் முதலியவற்றில் உலகளவில் படிப்படியாக வளர்ந்தது. கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம் ஒத்துழைப்புடன் வர்த்தக பொது நலன்களைப் பின்பற்றுவதன் மூலம் தேவைப்படும் நபர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகும். இலாபமானது ஒரு முக்கிய நோக்கமல்ல. சேவையே இதன் பிரதான நோக்கமாகும்.

**கூட்டுறவு வரைவிலக்கணம்**

"கூட்டுறவுச் சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு"

– H.கால்வேர்ட்

"கூட்டுறவு என்பது, சிறந்த விவசாயம், சிறந்த வணிகம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறையாகும்".

– சர் ஹொரேஸ் ப்ளங்கெட்

**கூட்டுறவுச் சங்கத்தின் எடுத்துக்காட்டுகள்**

- இந்தியன் காபி ஹவுஸ் (ரெஸ்டாரெண்ட்)
- மதர் டெய்ரி (ஆவின்)
- ஸ்ரீ மகிலா கிரியா உத்யோக் விஜஜத் பாபட்
- இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் (IFFCO)
- இந்திய விமான நிறுவனம் (சரக்கு) (C.G.H.S.Ltd)
- கோ ஆப்டெக்ஸ்

## 7.02 கூட்டுறவின் கொள்கைகள்

### i. தன்னார்வ மற்றும் உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு

கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும். அதன் சேவைகளைப் பாலினம், சமூக, இன, அரசியல் அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்றுப் பயன் அடையலாம்.

### ii. மக்களாட்சி முறையில் உறுப்பினர் கட்டுபாடு

கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் கூட்டுறவின் சேவைகளைப் பயன்படுத்துபவர்களாகவோ, கொள்கைகளை அமைப்பதிலும், முடிவுகளை எடுப்பதிலும் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

### iii. உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு

உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சமமாக, ஜனநாயக முறையில் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர். இந்த நன்மைகள் உறுப்பினர்கள் மூலதனத்தில் முதலீடு செய்வதை விட ஒத்துழைப்புடன் நடத்தும் வியாபார விகிதத்தில் இருக்கும்.

### iv. தன்னாட்சி மற்றும் சுதந்திரம்

கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் தன்னாட்சி, சுய உதவி அமைப்புகள் ஆகும். கூட்டுறவு நிறுவனங்கள் மற்ற அமைப்புகளுடன் ஒப்பந்தங்களில் நுழைந்தால் அல்லது மூல ஆதாரங்களிலிருந்து மூலதனத்தை உயர்த்தினால், உறுப்பினர்கள் ஜனநாயகக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதோடு, கூட்டுறவுச் சுயாட்சியைத் தக்கவைத்துக்கொள்வதன் அடிப்படையில் இது செய்யப்படுகிறது.

### v. கல்வி, பயிற்சி, மற்றும் தகவல்

உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள். அதனால் அவர்கள் கூட்டுறவு அபிவிருத்திக்கு திறம்பட பங்களிக்க முடியும். மேலும் அவர்கள் கூட்டுறவுகளின் இயல்பு மற்றும் நன்மைகளைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிவிக்கின்றனர்.

### vi. கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு

கூட்டுறவு உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்களை மிகவும் திறமையாகவும், உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றாக இணைந்து கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவும் செய்கின்றனர்.

### vii. சமூகத்திற்கான கவலை

கூட்டுறவில் உறுப்பினர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது, உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் சமூகங்களின் நிலையான அபிவிருத்திக்காக கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

## 7.03 கூட்டுறவின் சிறப்பியல்புகள்

**உங்களுக்குத் தெரியுமா?**



சர்வதேசக் கூட்டுறவு இயக்கத்தின் ஏழு வண்ண வானவில் கொடி ஒரு பொதுவான அடையாளமாகும். 1922 இல் ஜெர்மனியில் உள்ள எஸ்சனில் என்ற நகரில், பன்னாட்டு கூட்டுறவு கூட்டு மன்றத்தின் மூலம் (ICA) என்ற அமைப்பு ஜீலை 1923 ல் நடைபெற்ற முதல் கூட்டுறவு தினத்தில் சர்வதேசக் கூட்டுறவுச் சின்னம் மற்றும் ஒரு கொடியை வடிவமைத்தது.

### i. தன்னார்வ உறுப்பினர் சேர்க்கை

கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராகச் சேர்வது கட்டாயம் அல்ல. சங்கங்களில் எவரும் தானாக முன்வந்து உறுப்பினர் ஆகலாம். எப்போது வேண்டுமானாலும் உறுப்பினர் தகுதியில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

### ii. சம உரிமைகள்

கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. அவர் எத்தனை பங்குகள் வாங்கினாலும் ஒரு வாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே அனைவரும் நிர்வாகத்தில் சமபங்கு எடுக்க சங்கங்கள் வாய்ப்பு அளிக்கின்றன.

### iii. மக்களாட்சி

கூட்டுறவுகளில் மக்களாட்சி முறையில் முடிவுகள் எடுக்கப்படுகிறது. முடிவுகளில் பெரும்பான்மை இருந்தால் இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### iv. நேர்மை

நேர்மை என்பது கூட்டுறவின் அடிப்படைக் கொள்கை. கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். சுயநலமிகளுக்கு (Selfish) சங்கத்தில் இடமில்லை.

### v. பரஸ்பர நம்பிக்கை

கூட்டுறவுச் சங்கத்தின் அடித்தளம் பரஸ்பர நம்பிக்கை. கூட்டுறவுகளில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுக்குள் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஒரு குழுவாக அணிவகுக்க வேண்டும். அதுவே அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும்.

### vi. நல்வாழ்வு எனும் முக்கிய குறிக்கோள்

உறுப்பினர்கட்குச் சீரிய முறையில் சிறந்த சேவை புரிய வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் என கூட்டுறவுகள் செயல்படுகின்றன.

### vii. பணம் செலுத்துதல்

இச்சங்கங்களில் கடன் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளது. எல்லா வியாபாரமும் ரொக்கத்தன்மை அடிப்படையில் நடத்தப்படுகிறது.

### viii. சிக்கனம்

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சிக்கன கொள்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கூட்டுறவுகளின் மூலதனத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது மற்றும் எப்போதும் கூட்டுறவின் நலன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

### ix. இலாப பகிர்வு

கூட்டுறவுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி சங்கங்களின் இலாபம் பகிரப்பட வேண்டும். இலாபத்தின் ஒரு பங்கை காப்பில் (Reserve) ல் வைக்க வேண்டும். இலாபத்தில் 10 விழுக்காட்டினை உறுப்பினர்களின் சேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 62 2/17/2021 3:11:09 PM

### x. சுய சேவை

சங்கங்களின் செயல்களை உறுப்பினர்களே கவனிக்கின்றனர். எல்லா உறுப்பினர்களும் உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள். எனவே அவர்கள் அனைவரும் ஒருவருக்காக, ஒவ்வொரு வரும் அனைவருக்காக என்ற மகத்தான கூட்டுறவு கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றன.

## 7.04 கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்

### நன்மைகள்

### i. தன்னார்வு நிறுமம்

கூட்டுறவுச் சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம். பொதுவான நோக்கமுள்ள எவரும் இதன் உறுப்பினராகலாம். உறுப்பினர் தொகையும் மிகவும் குறைவாக இருப்பதனால், பொருளாதார ரீதியாக பின்தங்கியவர் முதல் முன்னேறியவர் வரை யாரும் உறுப்பினராக ஆக முடியும். எவரும் சங்கத்தை விட்டு எப்போதும் வெளியேற தடை இல்லை. உறுப்பினர்கள் தன்னார்வத்துடன் முன் வந்து சங்கத்தினை அமைத்திட வேண்டும்.

### ii. எளிமையான தோற்றுவிப்பு

குறைந்தபட்சம் இளவர் அல்லாத 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தினை ஆரம்பிக்கலாம். சங்கத்தை ஆரம்பிக்க சட்ட சடங்குகள் அதிகம் இல்லை.

### iii. மக்களாட்சி

கூட்டுறவுச் சங்கங்கள் "ஒருநபர் ஒருவாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் நிறுமமாகும். உறுப்பினர் எவ்வளவு பங்கு வைத்திருந்தாலும் ஒருவாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே பொருளாதார அடிப்படையில் கூட்டுறவு நிர்வாகத்தை நடத்துவதில் அனைவரும் பொதுவானவர்களே.

### iv. சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் உபரி சமத்துவமாக அனைவர்க்கும் பங்கிட்டு தரப்படுகிறது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறுவர். ஈட்டும் உபரியில் 10 விழுக்காட்டை சங்கம் செயல்பட்டு வரும் பகுதி மக்களின் நலனுக்கு செலவிட வேண்டும்.

### v. வரையறுக்கப்பட்ட பொறுப்பு

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த நபர்களின் பொறுப்புகள் அவர்கள் வாங்கிய பங்கு முதலுடன் அடங்கி விடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களை கலைக்கும் போது அந்நிறுவனத்தின் நிதி பொறுப்புகளைத் தீர்க்க உறுப்பினர்களின் சொந்த சொத்துக்களை ஈடுபடுத்த முடியாது. எனவே உறுப்பினர்களின் பொறுப்பு அளவுடையது.

### vi. சட்ட உரு

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினால் வழங்கப்பட்ட தனித்தன்மை கொண்டது. எனவே உறுப்பினர்களின் இறப்பு, துறப்பு, நொடிப்பு, மனநிலை சமனின்மை, திறனிழப்பு போன்ற நிகழ்வுகள் சங்கங்களின் ஆயுளை பாதிப்பதில்லை.

### vii. பொது நலன்

கூட்டுறவுச் சங்கங்கள் சுய உதவி மற்றும் ஒருவருக்கொருவர் உதவி புரிதல் என்ற கோட்பாட்டில் ஆரம்பிக்கப்படுவதால், சங்க உறுப்பினர்கள் பொது நலனை எட்ட அனைவரும் பங்களிக்கின்றனர்.

### viii. சிறப்பான நிர்வாகம்

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்குவதாலும் அங்கு வசிக்கும் மனிதர்களால் ஆரம்பிக்கப்படுவதாலும், உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுக்குள் ஒன்றாக பழகி, நிறுமத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுழைப்பில் நடத்தி வருகின்றனர். எனவே அதன் நிர்வாகம் சிறப்பாக செயல்படுகிறது.

### ix. அரசின் ஆதரவு

அரசும் கூட்டுறவு நிறுமங்களை வளர்த்து விட பல்வேறு ஆதரவுகளை நல்கி வருகின்றன. சலுகை வட்டியில் கடன், மானியம் மற்றும் அரசுநிறுமங்களின் தேவையை கூட்டுறவுச் சங்கங்களிடம் வாங்குதல் போன்ற செய்கைகளின் மூலம் நல்லாதரவை வழங்கி வருகின்றன.

### x. இடைநிலையரைத் தவிர்த்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளரிடம் தேவைப்படும் பொருட்களை கொள்முதல் செய்வதால், நுகர்வோர்கட்கு பொருட்களை குறைவான விலையில் விற்பனை செய்கின்றன. இதனால் இடைநிலையர் குறுக்கீடு என்ற பேச்சுக்கே கூட்டுறவு தத்துவத்தில் இடமில்லை. இடைநிலையரை அகற்றி

பெறப்படும் இலாபத்தை பங்கிட்டு தருவதுதான் கூட்டுறவின் தத்துவமாகும்.

### xi. வரிச்சலுகை

அரசும் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது.

### xii. ஊரகக் கடன்

சிற்றூர்களில் வசித்து வரும் மக்களில் பெரும்பாலானோர் உள்ளூர் கந்துவட்டிக்காரர் மற்றும் நாட்டு வங்கியர்களின் பிடியில் சிக்கி தவிப்பதை கூட்டுறவுச் சங்கங்கள் மீட்டு வருகின்றன. சலுகைவட்டியில் சங்கங்கள் கடன் நல்கி அவர்களை வட்டிக் கொடுமையிலிருந்து மீட்டு வருகின்றன. இயற்கையின் சீற்றத்தினால் வாடும் வேளாண்மையினரையும் கடன் தள்ளுபடியின் மூலமும், வட்டி தள்ளுபடி மூலமும் கடன் தவணைகளை நீட்டித்து தருவதன் மூலமும் காத்து வருகின்றன.

## குறைபாடுகள்

### i. அளவான நிதி ஆதாரங்கள்

கூட்டுறவுச் சங்க நிறுமங்களின் நிதி ஆதாரம் பிற அமைப்புகளைக் காட்டிலும் குறைவு. உறுப்பினர் கட்டணம் குறைவு. மேலும் உறுப்பினர்களின் பங்கு முதல் குறைவாக இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் செயல்பாட்டை குறிப்பிட்ட அளவிற்கு மேல் விரிவாக்க முடியாமல் தவித்து வருகின்றன.

### ii. அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் அரசின் நிதி ஆதரவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் அவைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே கூட்டுறவு நிறுமங்கள் தங்களின் செயல்பாடுகளை விரிவாக்க முடிவதில்லை.

### iii. அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள்

மேற்கத்திய நாடுகளில் கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளியவர்களால் தானாக முன் வந்து துவக்கப்பட்ட நிறுமங்கள். ஆனால் இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள் அரசின் வற்புறுத்தலால் துவக்கப்பட்ட சங்கங்கள் என கூறப்படுகின்றன. எனவே இங்குள்ள சங்க உறுப்பினர்களின் பங்கெடுப்பு தானாக முன் வந்தது இல்லை என்றும் கூறப்படுகிறது. இப்படி திணிக்கப்பட்ட சங்கங்கள் மக்கள் ஆதரவின்றி நொடித்துப் போக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

### iv. ஊரக பகுதி செல்வந்த உறுப்பினர்களின் பலனுக்காக செயல்படுதல்

கூட்டுறவுச் சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக ஆகலாம் என்ற வாய்ப்பு இருப்பதால் உள்ளூரில் உள்ள செல்வந்தர்கள் மற்றும் சில இடைநிலையர்கள் உறுப்பினர்கள் என்ற வேடமணிந்து நிர்வாகக் குழுவின் முக்கிய பதவிகளைப் பெற்று, வேண்டுமென்று நய வஞ்சகமாக கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை சீர் குலைத்து சங்கங்களை மூடிவிடும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. பெரும் செல்வந்தர்களாக உள்ள வேளாண் குடியினரின் சங்கங்களை நன்றாக தங்களின் சுயநலத்திற்குப் பயன்படுத்தித் தங்களைப் பொருளாதார ரீதியாக வளப்படுத்திக் கொள்கின்றனர். சிறு மற்றும் குறு வேளாண்மையாளர்களால் உபரியாக பொருளை உற்பத்தி செய்து சங்கத்திற்கு அளிக்க முடியாதவர்கட்கு கூட்டுறவுச் சங்கங்களினால் யாதொரு பயனும் விளைவதில்லை என்றால் மிகையாகாது.

### v. உள்ளூர் கடனாளர்களின் பிடியில் இருந்து மக்களை மீட்க முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கட்கு உற்பத்தி நடவடிக்கைகட்கு மட்டுமே கடன் வழங்குகின்றன. அவர்களின் சொந்த அல்லது குடும்ப செலவிற்கு கடன் தருவதில்லை. இந்நிலையில் அவர்கள் உள்ளூர் கடனாளர்களிடம் தொடர்ந்து கடன் அடிமைகளாக தொடரும் அவல நிலை ஏற்படுகிறது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண ஏழை எளிவர்களைக் கடனாளர்களிடமிருந்து மீட்டு விட்டதாக கூறிக் கொள்ள முடியாது.

### vi. நிர்வாக வல்லுநர்களை பணி அமர்த்த முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாக குழுவினால் மேலாண்மை செய்யப்படுகிறது. இந்த நிர்வாக குழு உறுப்பினர்கள் தேவையான கல்வித் தகுதியை அனுபவமோ அல்லது ஆற்றலோ இல்லாது இருக்கும் நிலையில், சங்க நிர்வாகம் சிறப்பாக நடத்த முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்களால் தொழில் படிப்பு படித்த அல்லது பட்டயம் பெற்ற நிர்வாகிகளை அமர்த்தி நிர்வாகத்தை தொழில்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 64 2/17/2021 3:11:10 PM

ரீதியாக சிறப்பாக நடத்த போதிய நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே கூட்டுறவு அமைப்புகள் தங்களின் தலையாய நோக்கங்களை சிறப்பாக அடைய முடிவதில்லை.

### vii. தன்னிச்சையாக செயல்பட முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் பிடியில் அல்லது மேற்பார்வையில் இயங்கி வருவதனால், அரசின் கட்டுப்பாட்டு விதி முறைகள் குறுக்கீடுகள் சங்கங்களை தன்னிச்சையாக செயல்பட அனுமதிப்பதில்லை. அவற்றின் தன்னாட்சி உரிமை முடக்கப்படுகிறது.

### viii. நாணயமற்ற நிர்வாக உறுப்பினர்கள்

நிர்வாக குழுவில் இருப்பவர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருக்க நேர்ந்தால் சங்கங்களின் நிதியை கையாடல் செய்து சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளிப் புதைக்கும் வாய்ப்பு உள்ளது.

### ix. தேர்ச்சி பெற்ற வல்லுநர்களை அமர்த்த முடியாமை மற்றும் புதிய நுட்பங்களை புகுத்த முடியாமை

கூட்டுறவு அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் குறைவாக இருப்பதால், அவர்களால் நன்றாகப் படித்து பட்டம் அல்லது பட்டயம் பெற்ற மனித சக்தியை சங்கங்களின் பதவிகளில் அமர்த்த முடிவதில்லை. சங்கங்களினால் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்த முடிவதில்லை. எனவே பல சங்கங்கள் இன்னும் பழைய பாரம்பரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் அவர்களால் புதியதாக முளைத்த நிறுவனங்களோடு சமமாகப் போட்டியிட முடிவதில்லை. இதனாலும் பல சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

### x. இரகசியம் காக்க முடியாமை

கூட்டுறவுச் சங்கங்களால் இரகசியத் தன்மையைக் காக்க முடிவதில்லை. சங்கங்களின் செயல்பாடுகள் இலாபம், சொத்து பொறுப்பு நிலைமைகள், வாராக்கடன் முதலீடுகள் போன்ற அனைத்தையும் பகிரங்கமாக அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விவாதிக்க வேண்டிய கடமை உள்ளது. மேலும் சங்கங்களின் அறிக்கைகள் கணக்குகளை கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் கால வாரியாக தாக்கல் செய்ய வேண்டும். எனவே மந்தனமாக (Secrecy) செய்திகளை வைத்திருத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் தனியார் நிறுமங்கள் பல இரகசிய செயல் மூலம் தில்லு முல்லு செய்து அதிக இலாபம் ஈட்டி வருகின்றன. இப்படிப்பட்ட இரகசிய செயல்பாடுகள் தில்லுமுல்லுகள் கூட்டுறவு அமைப்புகளில் செய்வது இயலாத காரியம்.

### xi. உறுப்பினர்களின் உட்போரினால் சங்கங்களின் செயல்திறன் மங்குதல்

உறுப்பினர்களிடையே ஏற்படும் மனக்கசப்புகள் வேறுபாடுகள், கருத்து மோதல், காழ்ப்புணர்ச்சி, போட்டி, பொறாமைகள் சங்கங்களின் செயல்பாட்டை முடக்கும் தன்மை கொண்டவை.


### xii. பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடியாமை

அனைத்துத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்த முடியாது. அவர்களது நோக்கம் சில துறைகளில் மட்டுமே இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களின் குறைவான நிதி ஆதாரங்களினால் பேரளவு தொழில்களை துவங்க முடிவதில்லை.

## 7.05 கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்

### அ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்


நுகர்வோர் கூட்டுறவை நுகர்வோர்கள் ஆரம்பிக்கின்றனர் இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களைப் போல இலாபம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்காமல், மக்களுக்குத் தரமானப் பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு






XI_Tamil_commerce 1-15_001-147.indd 65 2/17/2021 3:11:10 PM

இயங்கி வரும் சங்கங்களாகும். கூட்டுறவுச் சிறப்பங்காடியை மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம். கடன் ஒன்றியங்கள் வங்கிகளின் சேவையையும் செய்து வருகின்றன. கடன் ஒன்றியத்தில் 90 மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர்கள். அவற்றின் சொத்து பல மடங்கில் பெருகி ஒரு வலுவான அமைப்பாக இந்தியாவில் வேரூன்றி உள்ளது என்றால் மிகையாகாது. பொது விநியோகத் திட்டத்தையும் இவை செயல்படுத்தி வருகின்றன.




## ஆ. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகிறது. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில் உற்பத்தி செய்து முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வகை உற்பத்தி சங்கங்கள் செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாகத் திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற சங்கங்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு உதாரணமாக விளங்குகின்றன.




## இ. கூட்டுறவுச் சந்தையிடு சங்கங்கள்

கூட்டுறவுச் சந்தையிடு சங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாகத் திரட்டி அவைகளைச் சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம். இச்சங்கங்கள் முடிவுற்ற பொருட்களைத் தரம் பிரிப்பது, பண்டகத்தில் வைத்துக் காப்பது, விளம்பரம் செய்வது, கட்டுவது, ஏற்றுவது, அனுப்பி வைப்பது போன்ற சந்தையிடல் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் சங்கமாகும். பொருள் தேவைப்படும் இடம் மிக தூரத்தில் இருப்பினும் அங்கு பொருளை அனுப்பி அங்கு பொருளுக்கு சந்தையை சிறந்த விலையில் வழங்குகின்றன. உறுப்பினர்கட்கு அளித்த பொருளின் பேரில் முன் பணங்கள் வழங்குகின்றன. இந்த சங்கம் இல்லாத நிலையில் பல்வேறு வேளாண்மையினால் சிறு உற்பத்தியாளர்கள் கைவினைஞர்கள் போன்றோர்கள் இடை நிலையர்களிடம் அடிமாட்டு விலையில் பொருளை விற்று நலிந்து போயிருப்பார்கள். அவர்களை எல்லாம் கைதூக்கி விடும் சங்கங்களே சந்தையிடு சங்கம் என்றால் மிகையாகாது.




## ஈ. கூட்டுறவு கடன் சங்கங்கள்

உறுப்பினர்கட்கு குறுகியகால கடன் வழங்குதல் தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும். வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றோர்க்கு கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் நல்கி வருகின்றன. வங்கிகளிடம் இருந்து கடன் பெறமுடியாமல் உள்நாட்டு நபர்களிடமிருந்து அதிக வட்டியில் கடன் வாங்கி சீரழியும் பலரை குறைவான வட்டியில் கடன் ஈந்து அவர்களை இடைநிலையர் பிடியிலிருந்து மீட்டுவரும் உன்னதமான சங்கம் கடன் சங்கங்கள். சுரண்டலை ஒழிப்பது, சிக்கனத்தை வளர்ப்பது என்பதே கடன் சங்கங்களின் தாரக மந்திரம். கடன் சங்கங்கள் வேளாண் கடன் சங்கமாகவோ அல்லது வேளாண் சாரா சங்கமாகவோ இருக்கலாம்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 66 2/17/2021 3:11:10 PM




**உ. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்**

*உறுப்பினர்கட்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படுகின்றன. சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடுகட்ட கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்றனர். இச்சங்கங்கள் உறுப்பினர்கட்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் ஈந்து அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன. சில வீட்டு சங்கங்கள் மொத்தமாக காலிநிலங்களை வாங்கி, வீடுகட்டி உறுப்பினர்கட்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன. வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.*




**ஊ. உழவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

*உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள் தங்களின் நிலங்களை தனித்தனியே பயிரிடுவதற்கு பதிலாக அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தங்களின் நிலங்களை ஒன்றாகத் திரட்டி பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கமே கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும். அனைத்து விவசாயிகள் நிலத்தை ஒன்று திரட்டி சங்கமாக செயல்பட்டாலும் அவர்களின் நில உரிமை பாதிக்கப்படாது. அவர்கள் அனைவரும் சங்கம் அமைத்து அவர்களே நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுத்து உழவு சங்கத்தை நிர்வகிக்க வேண்டும். கூட்டாகப் பயிரிட வேண்டும். நிர்வாகக் குழு சந்தையின் தேவைக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையை ஒட்டி எந்த பயிர் செய்வது எந்த அளவில் செய்வது என முடிவு செய்யும். நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகட்கு வாடகையும் அவர்கள் கூட்டாக திரட்டிய நிலத்தில் உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள். இம்முறையில் பேரளவில் பயிர் செய்து விவசாயிகள் பலன் பெறலாம். இம்முறை இரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.*

**மேலும் அறிவதற்கு**

*(i)* *இயந்திர மற்றும் வாகன பொறியாளர்கள் ஒரு குழுவாக இருசக்கர வாகனங்களை ஒன்று சேர்த்தல் (assembly) செய்யும் பணியினை கூட்டுறவின் அடிப்படையில் செய்து வருகிறார்கள். அவர்கள் கூட்டுறவின் அடிப்படையில் அதனை எவ்வாறு நிர்வாகம் செய்ய இயலும்? அதற்கு தேவையான நிதி ஆதாரங்களை அதிகரிக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் தொழிலினை வியாபாரபடுத்த என்ன யுக்தியை கையாள வேண்டும்?*

*(ii)* *இன்றைய காலகட்டத்தில் நாம் உயர்ந்த அடுக்கு மாடிகுடியிருப்புகளில் வாழ்கிறோம். இவை ஒன்று அடுக்குமாடி கட்டடஅமைப்பாளர் அல்லது ஒரு சமுதாயமாக மக்கள் குழுவால் கட்டப்பட்டவையாக இருக்கலாம். உங்கள் இருப்பிடங்களில் உள்ள இரண்டு கூட்டுறவு வீட்டுவசதிசங்கங்கள் பற்றியதகவல்களையும் சேகரிக்கவும்.*

**பின்வரும் தகவலை சேகரிக்கவும்:**

*கூட்டுறவின் சங்கத்தின் பெயர்; பதிவு சான்றிதழ்; கூட்டுறவுச் சங்கத்தை பதிவு செய்யும் நடைமுறை; நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்கும் நடைமுறை; அவர்கள் என்ன செய்வார்கள்? கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு என்ன வகையான சட்டங்களை கடைபிடிக்க வேண்டும்?*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 67 2/17/2021 3:11:11 PM

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| தன்னார்வ சங்கம் | வாக்கு உரிமைகள் |
| சேவை மையம் | குறைவான மூலதனம் |
| நுகர்வோர் கூட்டுறவு | கூட்டுறவுச் சந்தையிடுகை |
| வீட்டு வசதி கூட்டுறவு | கடன் கூட்டுறவு |

### சூழ்நிலை ஆய்வு

சந்துரு, ஒரு தொழிற்சங்க ஆர்வலர், சென்னையில் உள்ள ஒரு தொழிலாளர்கள் காலனியில் வசிக்கிறார். தொழிலாளர்கள் நலனுக்காக தன்னையே அர்ப்பணிக்கும் ஒரு தலைவர். கடந்த பல மாதங்களாக மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை உள்ளூர் விற்பனையாளர்கள் மக்களிடம் அதிக தொகையினை வசூலித்துப் பெருமளவில் இலாபம் சம்பாதித்து வருகின்றனர் என்பதை அறிகிறார். அவரால் இதனைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனவே தான் வசிக்கும் காலனியிலேயே நுகர்வோர் கூட்டுறவு கடையைத் திறக்கும் யோசனை அவருக்குத் தோன்றுகிறது. அதனால் தன் பகுதியில் வசிக்கும் சில தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளை அழைத்து இதனை எவ்வாறு செயல்படுத்தலாம் என்று விவாதிக்கிறார். இந்த திட்டத்தை அவர்களில் சிலர் வரவேற்கிறார்கள். மற்றவர்கள் இதனை எவ்வாறு நியாயமான முறையில் வெற்றிகரமாக செயல்படுத்துவது என்பதைப் பற்றி விவாதிக்கின்றனர். இப்பொழுது நீங்கள் இந்த தொழிற்சங்க ஆர்வலர் மற்றும் தொழிலாளர்கள் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு, அவர்களால் சாத்தியமான வாதங்களைப் பட்டியலிடலாம்.

### நமது சிந்தனைக்கு

1. ஏதேனும் இரண்டு கூட்டுறவு நிறுவனங்களையும் பட்டியலிடுங்கள்.
2. ஏதேனும் இரண்டு மாவட்ட அளவில் உள்ள கூட்டுறவு அமைப்புகளை பெயரிடுக.
3. உங்கள் ஊரில் உள்ள ஏதேனும் இரண்டு கிராம மட்டத்திலான முதன்மைக் கூட்டுறவுகளை குறிப்பிடுங்கள்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

*1. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள்*

*அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது*

*ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்*

*இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்*

*ஈ) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை*

*2. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்*

*அ) வரம்பற்ற உறுப்பினர்*

*ஆ) ரொக்க வியாபாரம்*

*இ) தவறான நிர்வாகம்*

*ஈ) இழப்பு ஏற்படுவதால்*

*3. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு*

*அ) தொண்டு நிறுவன நோக்கம்*

*ஆ) சேவை நோக்கம்*

*இ) இலாப நோக்கம்*

*ஈ) சீர்திருத்த நோக்கம்*

*4. நுகர்வோர் கூட்டுறவு ______ முதன் முதலாக வெற்றிபெற்றது*

*அ) இங்கிலாந்து*

*ஆ) அமெரிக்கா*

*இ) சுவிஸ்*

*ஈ) இந்தியா*

5FASJH



XI_Tamil_commerce 1-15_001-147.indd 68 2/17/2021 3:11:11 PM

5. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர் ____

அ) ராபர்ட் ஓவென்

ஆ) H.C. கால்வெர்ட்

இ) டால்மாக்கி

ஈ) லம்பேர்ட்

**விடைகள்**

1. இ 2. இ 3. ஆ 4. அ 5. அ

## II. குறுவிடை வினாக்கள்.

1. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
2. கூட்டுறவு வரையறு.
3. கடன் கூட்டுறவு விளக்குக.
4. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. கூட்டுறவுகளின் குறைபாடுகளை விவரி? (எவையேனும் 3)
2. வீட்டு வசதி கூட்டுறவு பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. கூட்டுறவின் கொள்கைகள் என்ன? (ஏதேனும் 5)
2. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
3. கூட்டுறவுச் சங்கத்தின் வகைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

## குறிப்பு நூல்கள்.


1. Haney, L.H, Business Organisation
2. Krishnamoorthy,O.R, Fundamental of Cooperation
3. https://accountlearning.com




XI_Tamil_commerce 1-15_001-147.indd 69 2/17/2021 3:11:11 PM

# அலகு – 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம்
**8**

# பன்னாட்டு நிறுமங்கள்

5FJNLJ

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. பன்னாட்டு நிறுவனங்களின் பொருள்.
2. பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள்
3. பன்னாட்டு நிறுவனங்களின் உதாரணங்கள் பற்றி தெரிந்து கொள்கிறார்கள்.

## 8.01 பன்னாட்டு நிறுமங்கள் – பொருள் மற்றும் இலக்கணம்

கூட்டுறவுச் சங்கத்தைத் தொடர்ந்து பன்னாட்டு நிறுவனங்களைப் பற்றிக் கற்க இருக்கிறோம்.

பன்னாட்டு நிறுவனங்கள் என்பது ஒரு நாட்டில் (தாய்நாடு) தொடங்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் தாய்நாட்டைக் கடந்து கூடுதலாகப் பல நாடுகளில் கூட்டுருவாக்கப்படுவதாகும். இந்நிறுவனங்களின் தலைமையகம் எப்பொழுதும் தாய்நாட்டிலேயே இருக்கும். இந்நிறுவனங்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. அதாவது உலக நிறுவனம், எல்லைத்தாண்டி செயல்படும் (Trans National Corporation) நிறுவனம் போன்றவை.




### பன்னாட்டு நிறுமம் – இலக்கணம்

"பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்."

*நைல். H. ஜேகோபி*

"ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தைத் தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்" .

### சில்லோர் முற்றுரிமை

சந்தை நிலவரத்தைப் பொறுத்து பொருட்களை விற்க சில வியாபாரிகள் மட்டுமே இருப்பது சில்லோர் முற்றுரிமை ஆகும்.

உலக வியாபார நிறுவனம் என்பது ஒரு நாட்டிற்கு மேல் வியாபார நடவடிக்கைகளைக் கொண்டிருப்பதாகும். ஆகவே ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து வணிக நடவடிக்கைகளைத் தொடரும் நிறுவனத்திற்குப் பன்னாட்டு நிறுவனம் என்று பெயர்.

## 8.02 பன்னாட்டு நிறுமங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்

### நன்மைகள்

#### i. குறைந்தபட்சக் கூலி

பன்னாட்டு நிறுவனங்கள் குறைநதபட்சக் கூலி வழங்கும் நாடுகளில் தனது நிறுவனங்களை அமைப்பதால் குறைந்த செலவில் பொருட்களையும் சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க

விலையில் நன்மைகளைப் பெறுவதால் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகை செய்யப்படுகிறது. சிறிய நிறுவனங்கள் குறிப்பிட்ட வட்டார அளவில் மட்டுமே செயல்பட்டு வருவதால் அவர்களால் சிக்கனமாகப் பொருட்களை வழங்க முடிவதில்லை.

### ii. தரமான பொருட்கள்

பன்னாட்டு நிறுவனங்களின் வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் இந்நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக தாராளமாகச் செலவிட்டுத் தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

### iii. பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்

தனது சிறப்புத் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்திப் பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும் மற்றும் பயனற்ற சொத்துகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

### iv. நாட்டின் செலாவணிச் செலுத்துநிலை வளர்ச்சி

பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால் நாட்டின் செலுத்துநிலையை பலப்படுத்துகின்றது.

### v. தொழில் நுட்ப வளர்ச்சி

பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சியை ஒரு நாட்டிலிருந்து வேறு ஒரு நாட்டிற்கு மாற்றுவதன் மூலம் வளரும் நாடுகளில் தொழில் நுட்ப வளர்ச்சியின் பலனை உணர வைக்கின்றனர்.

### vi. மேலாண்மை வளர்ச்சி

நிறுவனங்கள் மேலாண்மைத் திறமையைப் பயன்படுத்துகின்றன. மேலாண்மைத் திறமையைக் கருத்தாகவும் செயலாகவும் ஆக்குகின்றன. இந்நிறுவனங்கள் நாட்டின் மேலாண்மை முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றன.

### vii. சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்துகின்றன

பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டில் போட்டியைத் தூண்டுகின்றன. உள்ளூர் சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்திப் பொருட்களைச் சிறப்பாக வடிவமைத்து விலை குறைப்பிற்கும், குறைவான விலையில் பொருளை வழங்கவும் வழி வகுக்கின்றன. இதனால் உள்ளூர் நிறுவனங்கள் தனது பொருட்களைத் திறமையாகவும், தரமாகவும் தயாரிக்க உந்தப்படுகிறார்கள். அனேக இந்திய நிறுவனங்கள் ISO – 9000 தரச்சான்றிதழைப் பெற்றதனால் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஈடாகப் போட்டியிட்டு வருகின்றன.

### viii. வாழ்க்கைத் தரம் உயர்கின்றது

பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

### ix. சர்வதேச சகோதரத்துவத்தையும் கலாச்சாரத்தையும் காக்கிறது

உலகப் பொருளாதாரத்தை ஒருங்கிணைத்து செயல்பட இந்நிறுவனங்கள் உதவுகிறது. பன்னாட்டு நல்லுறவையும் கலாச்சாரத்தையும் பேணிக்காப்பதால் உலகெங்கும் அமைதியும் சகோதரத்துவமும் செழுமையும் நிலவ வழிவகுக்கிறது.

### குறைபாடுகள்:

### i. உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்

பன்னாட்டு நிறுவனங்களின் மிகப்பெரிய பொருளாதாரச் சக்தி, உள்நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திற்குத் தடையை ஏற்படுத்துகிறது. பல உள்நாட்டு நிறுவனங்கள். பன்னாட்டு நிறுவனங்களால் அழிக்கப்படுகின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டிற்குப் பொருளாதார வளர்ச்சியைத் தருவது போன்று தோற்றமளிக்கின்றன. ஆனால் அந்நிறுமங்கள் உள்ளூர் தொழில்களை அழிக்கும் பசுத்தோல் போர்த்திய புலி என்று எதிர்ப்பாளர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

### ii. வழக்கொழிந்த தொழில்நுட்பத்தை மாற்றுதல்

வழக்கொழிந்த தொழில்நுட்பத்தை வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம் இந்த நாடுகளின் தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்ற வாதம் தவறானவை என வாதிடப்படுகிறது.

### iii. ஏழை மக்களுக்கு நன்மையில்லை

பணக்காரர்களால் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை வாங்கமுடிகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் அமைந்துள்ள நாடுகளின்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 71 2/17/2021 3:11:11 PM

ஏழை மக்களுக்கு இந்நிறுவனங்களால் எப்பயனும் இல்லை என எதிர்ப்பாளர்கள் குரல்எழுப்புகின்றனர்.

### iv. தனி மனித சுதந்திரத்திற்கு அபாயம்

பன்னாட்டு நிறுவனங்கள் தொடக்கத்தில் உள்நாட்டு அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் உறுதுணையாக இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும். பின்னர் படிப்படியாக உள்நாட்டு அரசியலில் பாதிப்பை ஏற்படுத்தும் இதன் விளைவாக நீண்ட காலத்தின் ஒரு தனிமனித சுதந்திரத்தின் பாதிப்பை ஏற்படுத்தும்படி நடந்து கொள்ளும்.

### v. உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு

உள்நாட்டு மக்களுக்காகக் கணிசமான அளவில் வேலை வாய்ப்பையும் பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்குவதில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

### vi. வலுவான தகுநிலையை தவறாக பயன்படுத்துதல்

பன்னாட்டு நிறுவனங்கள் பேரளவு பொருளதார நிறுவனங்கள் ஆகும். இந்நிறுவனங்கள் சர்வாதீனமாகச் செயல்பட்டு உள்நாட்டு போட்டிகளை முழுமையாக அழித்து அளவுக்கதிமாகப் பேரளவு இலாபம் ஈட்டி அவற்றை தங்கள் நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். உள்நாட்டுத் தொழில்களை முற்றிலும் அழிக்கும் தவறான கொள்கைகளைப் பின்பற்றி பலநாடுகளில் போட்டியே இல்லாத சூழலை அவைகள் உருவாக்கி வருகின்றன.

### vii. இயற்கை வளங்களைச் சுயநலத்திற்குப் பயன்படுத்துதல்

பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டு இயற்கை வளங்களைத் தன் சுயநலத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துகின்றன. உள்நாட்டில் எப்பொழுதும் கிடைக்காத சில அரிய இயற்கை வளங்களை மிக வேகமாகப் பயன்படுத்தி அதைத் தீர்த்து வருகின்றனர். இயற்கை வளங்களை இழந்த நாடு பொருளாதார ரீதியாக நொடிந்து போகும் நிலையும் ஏற்படலாம்.

### viii. அயல் நாட்டின் சுயநல வளர்ச்சிப் போக்கு

பன்னாட்டு நிறுமங்களின் கலாச்சாரத்தால் உள்ளூர் மக்கள் தங்களின் பாரம்பரிய காலாச்சாரத்தை இழக்கும் அபாயம் உள்ளது. இந்தியாவில் செயற்கை உணவு பாட்டில் குளிர்பானங்கள் ஆகியவற்றை உண்கிறார்கள். இதனால் மக்களின் உடல்நலத்திற்கு கேடு உண்டாகிறது.

### ix. உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு

உள்நாட்டு முதலீட்டினால் பன்னாட்டு நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டினாலும் உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளதார முன்னேற்றம் ஏற்படுவதை புறக்கணிக்கின்றன.

## 8.03 பன்னாட்டு நிறுமங்களுக்கு எடுத்துக்காட்டுகள்

**பன்னாட்டு நிறுவனங்களின் இந்தியத் துணை நிறுவனங்கள் பட்டியல்**

| பன்னாட்டு நிறுமங்கள் | இந்திய துணை நிறுமங்கள் | நிறுமங்கள் சின்னம் |
|---|---|---|
| பாட்டா | பாட்டா இந்தியா | Bata India |
| கோல்கேட் பாமொலிவ் | கோல்கேட் இந்தியா | COLGATE-PALMOLIVE |
| சோனி கார்ப்பரேசன் | சோனி இந்தியா | SONY make.believe |
| சுசூகி | மாருதி சுசூகி | MARUTI SUZUKI |
| டைமெக்ஸ் | டைமெக்ஸ் வாட்ச் | TIMEX |

**நமது சிந்தனைக்கு**

1. அயல்நாட்டிலுள்ள ஏதேனும் இரண்டு இந்திய பன்னாட்டு நிறுவனங்களை குறிப்பிடுக.
2. இந்தியாவிலுள்ள ஏதேனும் இரண்டு அயல்நாட்டு பன்னாட்டு நிறுவனங்களை குறிப்பிடுக.

**இந்தியப் பன்னாட்டு நிறுமங்களின் சின்னம்**

| நிறுமங்கள் | தலைமையகம் | நிறுமங்கள் சின்னம் |
|---|---|---|
| மைக்ரோமேக்ஸ் இன்பர்மேட்டிக்ஸ் | குர்கான் | micromax nothing like anything |
| ஹீரோ மோட்டார் கார்ப்பரேசன் | புதுதில்லி | Hero |
| பஜாஜ் | பூனே | BAJAJ |
| பிரிட்டானியா | பெங்களூரு | BRITANNIA Eat Healthy, Think Better |
| டிவிஎஸ் | சென்னை | TVS |
| டாட்டா | மும்பை | TATA |
| இன்ஃபோசிஸ் | பெங்களூரு | Infosys POWERED BY INTELLECT DRIVEN BY VALUES |

**கலைச்சொற்கள்**

முற்றுரிமை — உலக நிறுவனங்கள்

சுரண்டல் — அண்டை நாடு

உள்நாட்டு நிறுவனங்கள்

### மேலும் அறிவதற்கு

பன்னாட்டு நிறுமங்கள் வளரும் நாடுகளில் நுகர்வோர் பொருட்கள் அல்லது ஆடம்பர பொருட்கள் விற்பனை செய்வதன் மூலம் பெரும் லாபத்தை அனுபவித்து வருகின்றன. அவர்கள் உள்ளூர் சில்லறை விற்பனை யாளர்களைக் காட்டிலும் மலிவான விலையில் பொருட்களின் பல்வேறு வகைகளை வழங்குகின்றனர். ஆனால் நிறுவப்பட்டவுடன் அவற்றின் விலை அதிகரிக்கும்.

அ. மாநிலங்கள், வளரும் நாடுகளின் அரசாங்கம், தங்கள் நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களை நிறுவுவதற்கு அனுமதியளிக்க மறுக்கிறது.

ஆ. அவ்வாறு அனுமதி அளிக்க மறுப்பதற்கான காரணங்களை விவரி.

### சூழ்நிலை ஆய்வு

பொதுத்துறை நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியின் இலக்கை அடைவதற்காக நிறுவப்படுகின்றன. அவை அந்தந்த மத்திய மற்றும் மாநில அரசுகளின் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அரசின் தவறான கொள்கை முடிவுகளால் பல முறை பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தை சந்திக்கின்றன. பெரிய வணிக அமைப்புகள் கூட தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசின் கொள்கைகளைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்கின்றன. மேற்கூறியவற்றில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் அமைச்சர்கள் பொதுத்துறை நிறுவனங்கள் வெற்றிகரமாகச் செயல்பட எம்மாதிரியான திட்டங்களை வகுக்க வேண்டும்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **பன்னாட்டு நிறுமம் என்பது**

   அ. எந்த ஒரு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது

   ஆ. உலகின் முதல் 200 நிறுவனங்களின் ஒன்றாகும்

   இ. ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்டில் நிறுவனங்களை கொண்டுள்ளது

   ஈ. இவை அனைத்தும்

2. **பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன**

   அ. கிளைகள்

   ஆ. அதன் துணை நிறுவனங்கள்

   இ. தலைமையகம்

   ஈ. நாடாளுமன்றம்

3. **பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட்டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன. இதனை _________ நிறுவனங்கள் எனலாம்.**

   அ. அரசு நிறுவனங்கள்

   ஆ. பன்னாட்டு நிறுவனங்கள்

   இ. தனியார் நிறுவனங்கள்

   ஈ. இணை நிறுவனங்கள்

4. **தலைமை அலுவலகத்தின் கிளைகள் / துணை நிறுவனங்கள் / துணை நிறுவனங்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவது**

   அ. மையப்படுத்துதல்

   ஆ. பரவலாக்கம்

   இ. அதிகாரம்

   ஈ. ஒருங்கிணைப்பு

5. **கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?**

   அ. பன்னாட்டு நிறுமம்

   ஆ. அரசு நிறுமம்

   இ. இணை நிறுமம்

   ஈ. பொதுத்துறை நிறுமம்

5FTJN7

**விடைகள்**

1. இ  2. இ  3. ஆ  4. ஆ  5. அ

### II. குறுவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு நிறுமம் – இலக்கணம் வரைக.
2. பன்னாட்டு நிறுமத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை விவரி.
3. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.

### III. சிறுவிடை வினாக்கள்.

1. ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டில் தொழில் நடத்திக்கொண்டிருக்கும் சில பன்னாட்டு நிறுமங்களின் பெயரைக் குறிப்பிடவும்.
2. இந்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.

### IV. பெருவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)
2. பன்னாட்டு நிறுமத்தின் தீமைகளை விவரி. (ஏதேனும் 5)

### குறிப்பு நூல்கள்.


1. *Mathur,B.S, Business Organisation*
2. *Shukula, M.C. Business Organisation.*





XI_Tamil_commerce 1-15_001-147.indd 74    2/17/2021 3:11:11 PM

## இணையச் செயல்பாடு


### கொடுக்கப்பட்ட நிறுவனங்களின் சின்னங்களைச் சரிபார்த்தல்

சின்னங்களை அடையாளம் காண்போமா !





**படிகள் :**


- கீழ்க்காணும் உரலியை, உலாவியில் தட்டச்சு செய்யவும் (அல்லது விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.
- வணிகவியலுக்கான GeoGebra பணிபுத்தகம் திரையில் தோன்றும். வணிகவியலுக்கான பல்வேறு பணித்தாள்களில் "Check the logos of given organizations" –ஐ எடுத்துக் கொள்ளவும்.
- நிறுவனப் பெயர்களுக்கு அருகில் இருக்கும் பெட்டிகளைச் சொடுக்கவும்.
- அந்தந்த நிறுவனங்களின் சின்னங்கள் தோன்றும்.Logos of respective organisations will appear as above.



படி 1



படி 2



படி 3

**செயல்பாட்டிற்கான உரலி :**

https://ggbm.at/b9jZFxRE

B133_11_COM_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 75 2/17/2021 3:11:12 PM

# அலகு – 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

அத்தியாயம்
**9**

## அரசு அமைப்புகள்

5G3FPU

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. துறைசார் நிறுவனங்கள் பொருள், இயல்புகள், நிறைகள், குறைகள்
2. பொதுக்கழகங்களின் பொருள், இயல்புகள், நிறைகள், குறைகள்
3. அரசு நிறுமங்களின் பொருள், இயல்புகள், நிறைகள், குறைகள்

ஆகியவற்றைப் புரிந்துக் கொள்ள இயலும்.

### அறிமுகம்

*பொது நிறுவனங்கள் வியாபார அமைப்பில் ஒரு வடிவமாகவும் தற்காலத்தில் உலக அளவில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் அமைப்பாகவும் உள்ளது. 20 ஆம் நூற்றாண்டில் பல்வேறு அரசுகள் தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இதற்கு முன்பு அரசாங்கம் சட்டம் இயற்றுவதையும் அதை பாதுகாத்தலையும் மட்டுமே செய்தன. தொழிற் புரட்சி தொழிலை அனைத்து வழிகளிலும் முன்னேற்றப்பாதைக்கு கொண்டு சென்றது. தனியார் தொழில் முனைவோர்கள் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதால் நுகர்வோர் சுரண்டடப்படுகின்றனர். தனியார் தொழில் முனைவோரை ஒதுக்கிவிட்டு தொழில் வளர்ச்சியடையும் சூழ்நிலை தேவைப்படுகிறது. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளில் கூட தொழில்துறையை பொதுமக்களிடமிருந்து காக்க அரசாங்கம் தலையிட நேரிடுகிறது.*

*அரசாங்கம் தொழிலைச் சொந்தமாகவும் தனது கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொள்ள இரண்டு வழிகள் உள்ளன.*

*(i) புதிய தொழில்களைத் தொடங்குவது*

*(ii) தனியாரிடமிருந்து வணிகப் பிரிவையோ அல்லது ஏற்கனவே உள்ள தொழிலையோ பொது மக்கள் நலனுக்காக எடுத்துக் கொள்கிறது (நாட்டுடமையாக்கம்).*

### 9.01 துறைவாரி நிறுவனங்கள்

#### பொருள்

*அரசுத் தொழில்களின் வடிவமைப்புகளில் இது மிகவும் தொன்மையானதாகும் – பொது நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இன்றைய சூழ்நிலையில் அதன் பணிகளில் வேறுபாடு இருப்பதில்லை. தொடக்க காலத்தில் நிறுவப்பட்ட பெரும்பாலான அரசுரிமை நிறுவனங்கள் அனைத்தும் துறைவாரி அமைப்புக்குச் சான்றுகளாகும். இத்துறைவாரி அமைப்புகள் அத்துறையின் உட்பிரிவாகவும் அத்துறையின் முழு கட்டுப்பாட்டிலும் இயங்கக் கூடியதாகும்.*

*உதாரணமாக இந்திய இரயில்வே துறை இரயில்வே அமைச்சகத்தின் கீழும், தபால் தந்தி துறை, தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழும் இயங்குகின்றன. அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன் போன்ற அமைப்புகள் துறைவாரி நிறுவனங்களுக்கு மேலும் சில உதாரணங்களாகும்.*

#### இயல்புகள்

#### துறைவாரி நிறுவனங்களின் இயல்புகள் பின்வருமாறு.

#### i. இறுதியான பொறுப்புகள்

*துறைவாரி நிறுவனங்களின் பொறுப்பு என்பது அத்துறையின் அமைச்சகத்துடன் தொடர்புடையது.*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 76 2/17/2021 3:11:12 PM

பாராளுமன்றத்துக்கோ அல்லது மாநில அரசின் சட்ட மன்றத்திற்கோ பதில் சொல்லும் பொறுப்புடையது ஆகும். துறைவாரி நிறுவனங்களுக்கு அத்துறையின் அமைச்சரிடமிருந்து அதிகாரம் கீழ்நோக்கியவாறு அதிகாரிகளுக்குச் செல்கின்றது.

### ii. அரசின் நிதியுதவி

பாராளுமன்றம் அல்லது சட்டசபையின் ஆண்டு வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின்படி நிதியுதவி கிடைக்கிறது. அரசின் கருவூலத்திடமிருந்து நிறுவனங்களுக்கு வருவாய் செல்கிறது.

### iii. கணக்கியலும் தணிக்கையும்

துறைவாரி நிறுவனங்களின் சாதாரண வரவு செலவுத் திட்டமிடல் கணக்கியல் மற்றும் தணிக்கை நடைமுறைகள் அரசின் அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும்.

### iv. மேலாண்மை

துறைவாரி நிறுவனங்களை அரசு அலுவலர்களே மேலாண்மைசெய்கின்றனர்.அரசு அலுவலர்களுக்கு பணிச்சூழல் எவ்வாறு உள்ளதோ அதை ஒத்த பணிச்சூழல் இங்கும் நிலவுகிறது.

### v. சட்டவிலக்களிப்பு

அரசின் ஒப்புதலின்றி இந்நிறுவனங்களுக்கெதிராக வழக்குத் தொடுக்க இயலாது.

## 9.02 நிறைகளும் குறைகளும்

### நிறைகள்

### i. எளிமையான அமைப்பு

துறைவாரி நிறுவனங்களை அமைப்பது எளிது. இவ்வமைப்புகளை நிர்வாக முடிவெடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

### ii. பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு

துறைவாரி நிறுவனங்கள் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும். அதற்கு அத்துறை அமைச்சரே பொறுப்பாவார்.

### iii. இரகசியம் காத்தல்

பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள் தங்களது பணிகள் கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க இயலும்.

### iv. பொதுமக்களுக்கு வரிச்சுமை குறைவு

இத்தொழில் நிறுவனங்கள் தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்களில் செலுத்தப்படுவதால் பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்

### v. சமூக மாற்றத்திற்கான கருவி

அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூகநீதியை அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும். ஆகவே அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த பொது துறை நிறுவனங்களை கருவியாகப் பயன்படுத்துகின்றன.

### vi. பொது மக்களின் நிதியை தவறாக பயன்படுத்துதலினால் ஏற்படும் இடர் குறைவு

துறைவாரி நிறுவனங்களின் வரவு செலவு திட்டம் கணக்கு மற்றும் தணிக்கை செயல்முறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். இதனால் பொது மக்களின் நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதினால் ஏற்படும் இடர்பாடு குறைகிறது

### vii. அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்

அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் மூலமே துறைவாரி நிறுவனங்கள் இயங்குகிறது. பொதுமக்களின் நலனுக்குப் பாதிப்பு இல்லாமல் அத்துறை அமைச்சகம் விதிகளையும் செயல்முறைகளையும் வகுக்கிறது.

### குறைகள்

துறைவாரி நிறுவனங்களின் முக்கியக் குறைபாடுகள் பின்வருமாறு

### i. தாமதமும், சிகப்பு நாடா போக்கும்

அரசின் நெகிழ்வற்ற நடைமுறைகளையும் மரபுகளையும் வழுவாது பின்பற்றுவதும் காலதாமதமும் மிகப்பெரிய குறைபாடாகும். வணிக நிறுவனங்கள் காலதாமத முடிவெடுப்பது ஏற்கத்தக்கது அல்ல.

### ii. கூடுதல் வரிச்சுமை

துறைவாரி நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட அரசின் கருவூலத்திலிருந்து தொகையை

வழங்க வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்கள் மீது மேலும் வரியைச் சுமத்தி வரிச்சுமை கூட்டுகிறது.

### iii. போட்டியின்மை

வணிக அனுபவமோ அல்து வியாபார வெளிப்பார்வையோ இல்லாத அரசு அலுவலர்கள் துறைவாரி நிறுவனங்களை நிர்வாகம் செய்வதினால் அவர்களால் துறைவாரி நிறுமங்களை முறையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே நுகர்வோரின் விருப்பத்தையோ அல்லது தேவையையோ அறிந்து கொள்ளாமல் தங்களது குறுகிய அனுபவத்தின் மூலம் வழிநடத்துகின்றனர். இதனால் இந்நிறுமங்கள் செயல்திறன் குறைகிறது.

### iv. பணியில் சராசரி அணுகுமுறை

அரசு அலுவலர்கள் தங்களது பணியில் சராசரி அணுகுமுறை போன்றே இந்நிறுவன பணியிலும் ஈடுபடுகிறார்கள். அதனால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகிற திறமை இல்லாமல் போகிறது.

### v. அரசின் தலையீடு

துறைவாரி நிறுவனங்களின் மீது அளவுக்கதிகமான கட்டுப்பாடு, விதிகள் ஆகியவற்றை அரசு சுமத்துகிறது, இதுதுறைவாரி நிறுவனங்கள் தன்னாட்சியுடன் பணியாற்ற விடுவதில்லை. மையக் கட்டுப்பாடு நிறுவனத்தின் செயலில் பாதிப்பு ஏற்படுத்துகிறது. மந்தப்போக்கு ஏற்பட்டு செயல்திறன் பாதிக்கப்படுகிறது.

### vi. மேலாண்மைத் திறமைக் குறைவு என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகும் அச்சம்

துறைவாரி நிறுவனங்களின் மேலாளர்கள் அரசு அலுவலர்களாக இருப்பதால் அவர்களின் மெத்தனப்போக்கு அவர்களைச் சிறப்பாகச் செயல்பட அனுமதிப்பதில்லை. மேலாண்மைத் திறமை இல்லாமல் இருப்பவர்கள் பாராளுமன்றம் அல்லது அமைச்சரின் விமர்சனம் ஆகியவை அவர்களை திறம்பட செயல்பட விடுவதில்லை.

### vii. நிதிச்சார்பு

துறைவாரி நிறுவனங்கள் பொருளாதார ரீதியாகவும் மற்றும் அரசின் வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைச் சார்ந்தும் இருக்க வேண்டியுள்ளது. எனவே பொருளாதார ரீதியாக இந்நிறுவனங்கள் தன்னிச்சையாக செயல்பட முடிவதில்லை.

### இந்திய துறைவாரி நிறுவனங்கள் மற்றும் அதன் சின்னம்

| நிறுவனங்கள் | தலைமையகம் | சின்னம் |
|---|---|---|
| இந்தியன் இரயில்வே | புதுடெல்லி | |
| உணவு மற்றும் பொது விநியோகத் துறை | புதுடெல்லி | |
| தமிழ்நாடு காவல் துறை | சென்னை | |

## 9.03 பொதுக் கழகங்கள்

பொதுக் கழகம் என்பது பாராளுமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும். பொதுக்கழகம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தனித்தியங்கும் தன்மையுடன் சட்டத்தால் உருவாக்கப்படுவதாகும்.

பொதுக் கழகத்திற்கென நோக்கங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு அமைப்பு (ONGC) ஆகியவை பொதுக் கழகத்திற்கான உதாரணங்களாகும்.

### பொதுக்கழகத்தின் இயல்புகள்

### i. தனித்தியங்கும் சட்டத் தன்மை

பொதுக்கழகம் என்பது மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகிறது. அச்சட்டத்தின் மூலம் அதற்கான அதிகாரங்கள், நோக்கங்கள், பணிகள் மற்றும் பாராளுமன்றம் அல்லது சட்டசபையின் மூலம் உருவாக்கப்பட்ட அமைச்சகத்துடன் தொடர்புள்ளது.

### ii. நீடித்த நிலைத்தன்மை

பொது முத்திரையுடன் நீடித்த நிலைத்த தன்மையுடன் சட்டபூர்வமாகச் செயல்படும். அரசுடன்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 78 2/17/2021 3:11:13 PM

தொடர்புடையது மட்டுமல்லாமல் தனித்து இயங்கக் கூடியது, இதன் சொத்துக்கள் அனைத்தும் தனக்குச் சொந்தமானதும் தன் பெயரிலேயே உடன்படிக்கை செய்யவும் வழக்குப் பதியவும் இயலும்.

### iii. அரசின் முதலீடு

பொதுக்கழகம் அதற்குத் தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது. எனினும் பொதுக்கழகம் முதலீட்டுச் சந்தையிலிருந்தும் மூலதனத்தைத் திரட்டுகின்றன.

### iv. நிதி தன்னாட்சியுரிமை

பொதுக்கழகங்கள் நிதி தன்னாட்சி பெற்றவை தனக்கான வரவு செலவுத்திட்டத்தைத் தானே தயாரித்துக் கொள்ளவும், அதற்கான அதிகாரம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வியாபாரத்தில் அந்த நிதியைப் பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றவையாகும்.

### v. இயக்குனரவையால் நிர்வாகம்

அரசால் பரிந்துரைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட இயக்குனரவைக்கு மேலாண்மை செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால் கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை.

### vi. பணியாளர்கள் நியமனம்

பொதுக்கழகங்கள் தனக்குத் தேவையான பணியாளர்களைத் தானே நியமனம் செய்து கொள்ளவும், ஊதியம், பணித்தன்மை ஆகியவற்றை கழகங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

### vii. சேவை நோக்கம்

பொதுக்கழகங்கள் சேவையை நோக்கமாகக் கொண்டவை ஆகும். இருந்தாலும் சுயசார்பு கொண்டு நியாயமான இலாபத்தை ஈட்டும் குறிக்கோள் கொண்டவையாகும்.

### viii. பதில் சொல்லும் கடமை

பொதுக்கழகங்கள் தனது பணி குறித்த ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். இதன் கணக்குகளை இந்திய பொதுக்கணக்கு மற்றும் தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்படும். தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை பாராளுமன்றம் அல்லது சம்பந்தப்பட்ட சட்ட சபையில் விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 9.04 நிறைகளும் குறைகளும்

### நிறைகள்

### i. தன்னாட்சியுரிமை

பொதுக்கழகம் தன்னாட்சியாக இயங்குகிறது. அரசின் கட்டுப்பாடு இதில் இருப்பதில்லை. வியாபார முறையிலேயே சிறப்பாக இயங்க முடிகிறது. வியாபார சூழ்நிலைகளுக்கேற்ப அதன் நன்மைக்களுக்காக திறந்த மனதுடன் முடிவெடுக்க முடிகிறது.

### ii. சட்ட அமைப்புகளின் கட்டுப்பாடு

பாராளுமன்றம் அல்லது சட்டசபை அமைப்புகளின் குழுக் கட்டுப்பாடு மூலம் கட்டுப்படுத்துகிறது. பொதுக்கழகம் செயல்பாடுகளை பத்திரிக்கைத் துறை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. பொதுக்கழகத்தின் செயல்பாடுகள் அதன் நன்மைக்கு எதிராக இருந்தால் அதைச் சுட்டிக்காட்டவும் செய்கிறது.

### iii. தகுதி மற்றும் நிறைவான அலுவலர்கள்

பொதுக்கழகம் அதன் அலுவலர்களுக்கு பணியில் நிறைவான தன்மை உள்ளது. அதன் அலுவலர்கள் தகுதி பெற்றவர்களாக உள்ளனர். ஏனெனில் தகுதியும் மனநிறைவும் உள்ள பணியாளர்களால் தான் நிறுவனம் வளர்ச்சியடையும் அலுவலர்கள் ஊக்கத்துடன் பணியாற்றுவதால் பொதுக்கழகம் விரைவாக வளர்ச்சியடையும்.

### iv. தயார் நிலை

பொதுக்கழகங்கள் சிறப்புச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால் அதன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றன. பொதுக்கழகம் அதன் சிறப்பான செயல்பாடுகள் மூலம் நோக்கங்களை நிறைவேற்றுகின்றன.

### v. அரசின் தலையீடின்மை

அரசியல் தலையீடுகளால் பொதுக்கழகம் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. அதன் கொள்கைகளும் செயல்பாடுகளும் தொடர்ந்து நடைபெறும்.

### vi. குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு

பொதுக் கழகத்தின் இயக்குநரவையில் சமுதாயத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள், நுகர்வோர்கள் சமுதாய நலவிரும்பிகள் ஆகியோரை அரசு தேர்ந்தெடுத்திருப்பதால் சுரண்டல் மற்றும் ஊழல் ஆகியவை இருப்பதில்லை.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 79 2/17/2021 3:11:13 PM

### vii. நியாயமான விலைக் கொள்கை

அடக்கவிலை – இலாபம் என்ற அடிப்படையில் பொதுக்கழகம் விலைக் கொள்கையை உருவாக்குகிறது. ஆகவே பொதுவாக சரக்கு மற்றும் சேவைகள் பணிகளை பொதுக்கழகம் மக்கள் திருப்தியடையும் வகையில் செயலாற்றுகிறது.

## குறைகள்

### i. தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை

தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை என்பது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. பொதுக் கழகங்கள் துறை அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மூலம் அதிகளவில் இடையூறு ஏற்படுகிறது.

### ii. சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்

பொதுக்கழகங்கள் அதன் செயல்பாடுகளில் சர்வாதீன அதிகாரம் பெற்றவை. ஒருவகையில் நுகர்வோரின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்க்க எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை. மற்றொரு புறம் நுகர்வோரிடமிருந்து சுரண்ட எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை.

### iii. நெகிழ்வு தன்மையற்ற அரசியலமைப்பு

பொதுக்கழகத்தினை உருவாக்கும் அரசியல் சட்டப்பிரிவுகள் நெகிழ்வுத்தன்மையற்றவை. எவ்விதத்திலும் மாற்றக்கூடியது அல்ல. அதை உருவாக்க தேவையான சட்ட விதிகள் அவசியம். அகவே பொதுக்கழகத்தின் செயல்பாடுகள் நெகிழ்ந்த தன்மையற்றவை.

### iv. குறைவான மேலாண்மைத் திறமை

பொதுக் கழகத்தின் அலுவலர்கள் பெரிய அளவில் மேலாண்மை அறிவு பெற்றவர்களோ திறமைசாலிகளாகவோ அதன் மேலாண்மை இயக்குநர்கள் இருப்பதில்லை. தனியார் நிறுவனங்களின் பணியாளர்களின் மேலாண்மைத் திறமைக்கு பொதுக்கழகத்தின் அலுவலர்கள் ஈடானவர்கள் அல்ல

### v. சிறப்புச் சட்டம் இயற்றுவதில் சிக்கல்

பொதுக்கழகங்களைச் சிறப்புச்சட்டங்கள் மூலம் மட்டுமே உருவாக்க முடியும் – சிறப்புச்சட்டம் இயற்றுவது எளிதானது அல்ல. அதனை உருவாக்கும் சட்ட நடைமுறைகள் சிக்கலானவை. ஆகவே பொதுக்கழகம் உருவாக்கப்படுவது எப்பொழுதோ நிகழும் ஒன்றாகும்.

### vi. முரண்பாடுகள்

பொதுக்கழகத்தின் இயக்குனரவை உறுப்பினர்களின் பல்வேறு குழுக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் உருவாகின்றன. இதனால் பொதுக்கழகங்களின் செயல்திறன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

## இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அதன் சின்னங்கள்

| நிறுவனங்கள் | தலைமையகம் | சின்னம் |
|---|---|---|
| இந்திய உணவுக் கழகம் (FCI) | நியூடெல்லி | Golden Jubilee Year 2014-2015 Food Corporation of India |
| எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC) | நியூடெல்லி | ओएनजीसी ONGC |
| இந்தியா சுற்றுலா கழகம் | நியூடெல்லி | MINISTRY OF TOURISM GOVERNMENT OF INDIA |

## 9.05 அரசு நிறுமங்கள்

### பொருள்

2013ஆம் ஆண்டு நிறுமச்சட்டம் பிரிவு 2(45) ன் கீழ் அரசு நிறுமம் என்பது, மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்த பட்சம் 51 விழுக்காட்டுக்கு மேல் மைய அரசோ, ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில அரசுகளோ அல்லது மைய அரசும் ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகளும் சேர்ந்து உருவாக்கும் நிறுவனம் ஆகும். ஒரு அரசு நிறுமத்தின் துணை நிறுமமும் அரசு நிறுமமாகவே கருதப்படும்.

## அரசு நிறுமத்தின் இயல்புகள்

### i. நிறுமச்சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்

1956 ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அல்லது முந்தைய நிறுமச் சட்டங்களின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 80 2/17/2021 3:11:13 PM

*மைய அரசு நேரடியாகவோ நிறுமச்சட்டத்தின் விதிகளின் கீழ் அரசு நிறுமங்கள் அறிவிப்பாணையை வெளியிடுகின்றன.*

### ii. அரசின் நிர்வாக முடிவு

*பாராளுமன்றமோ அல்லது சட்டசபையின் அங்கீகாரம் இல்லாமலோ அரசு நிறுமத்தை அரசாங்கம் நிர்வாக முடிவின் கீழ் அமைக்கலாம்.*

### iii. நீடித்த நிலைத்த தன்மை

*அரசாங்கத்திடமிருந்து அரசு நிறுமம் தனித்த சட்டப் பூர்வ தன்மையுடைய அமைப்பாகும். தனது சொந்த பெயரால் சொத்துக்களை வாங்கவும் உடன்படிக்கை ஏற்படுத்தவும் முடியும்.*

### iv. முழுவதும் அல்லது பெரும்பான்மையான மூலதனத்தை அரசு வழங்குகிறது

*அரசு நிறுமத்திற்கு தேவையான மூலதனத்தை குறைந்தபட்சம் 51% முழுவதுமோ அல்லது பெரும்பான்மையோ அரசே வழங்குகிறது. ஆனால் அதன் வருமானத்தை அரசு கருவூலத்தில் செலுத்துவதில்லை.*

### v. பெரும்பான்மையான அரசு இயக்குநர்கள்

*அரசு நிறுமத்தில் அரசாங்கமே பெரும்பான்மையான மூலதனத்தை வழங்குவதால் இயக்குனர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது.*

### vi. சொந்த அலுவலர்கள்

*அரசு நிறுமங்கள் சொந்தமாக அலுவலர்களை நியமிக்கிறது. மேலும் அரசு அலுவலர்களை பணிமாறுதலில் செல்வதை தவிர்க்கிறது. அதன் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களின் விதிகள் பொருந்தாது.*

### vii. நடைமுறை கட்டுப்பாடு இல்லை

*அரசு நிறுமங்கள் வரவு செலவுத்திட்டம், கணக்கியல் மற்றும் தணிக்கைக் கட்டுப்பாடு போன்றவற்றிலிருந்து விடுபட்டு குறுக்கீடு இன்றி செயல்பட முடிகிறது.*

### viii. பாராளுமன்றம் / சட்ட மன்றத்திற்கு பொறுப்பு

*பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் அரசு நிறுமத்தின் ஆண்டறிக்கை சமர்பிக்கப்படுகிறது.*

## 9.06 நிறைகளும் குறைகளும்

## நிறைகள்

### i. எளிமையான அமைப்பு

*நிறுமச்சட்டத்தின்படி அரசு முடிவெடுத்து அரசு நிறுமங்களை எளிதாக அமைக்கலாம்.*

### ii. அகத் தன்னாட்சி

*அரசு நிறுமங்கள் தனது நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ளலாம். அதன் அன்றாட நடவடிக்கைகளில் அமைச்சரவை கட்டுப்பாடோ அரசியல் தலையீடோ இருப்பதில்லை.*

### iii. தனியார் பங்களிப்பு

*தனியார் நிறுமங்களிலிருந்து மேலாண்மை, அறிவு, தொழில் நுட்ப அறிவு மற்றும் சிறப்பு நிபுணத்துவம் போன்றவற்றை அரசு நிறுமங்கள் பெறலாம். உதாரணமாக ஹிந்துஸ்தான் இரும்பு தொழிற்சாலை நிறுவனம் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவியையும் பிலாய், ரூர்கேலா மற்றும் துர்காபூர் ஆகிய இடங்களில் தொழிற்சாலை நிறுவவும் ரஷ்யா, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து பெற்றுள்ளன.*

### iv. நெகிழ்வுத் தன்மை

*அரசு நிறுமங்கள் நோக்கங்கள், அதிகாரங்கள் போன்றவற்றை பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலேயே அதன் அமைப்பு முறையேட்டில் மாற்றம் செய்வதன் மூலம் மாற்றம் செய்யலாம்.*

### v. ஒழுங்கு

*அரசு நிறுமங்கள் நிறுமச்சட்டத்தின் விதிகளின் படிமேலாண்மை செய்யவும் பணி விறுவிறுப்பையும் ஒழுக்கத்தையும் பின்பற்றுகின்றன.*

### vi. தொழில் நிபுணத்துவம்

*அரசு நிறுமங்களில் தொழில் நுட்ப ரீதியாகவும் தகுதி பெற்ற மேலாளர்களையும் நியமிப்பதால் அரசு நிறுமங்களின் கொள்கைகளை தவறாமல் பின்பற்ற இயலுகிறது*

### vii. பதிலளிக்க இயலுகிறது

*பாராளுமன்றம்/சட்டமன்றத்தில் அரசு நிறுமத்தின் ஆண்டுத் தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. அதன் அறிக்கைகள் அங்கு விவாதிக்கப்படுகின்றது.*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 81 2/17/2021 3:11:13 PM

### குறைகள்

#### i. மாறாத்தன்மையுடைய இயக்குனரவை

அரசு நிறுமங்களில் அரசால் நியமிக்கப்படும் இயக்குனர்கள் (அரசு பெரும்பான்மையுள்ள பங்குதாரர்) பெயரளவுக்காக அரசுக்கு "ஆம்" சொல்லிப் பழகியவர்கள் ஆதலால் அவர்களால் வணிக நோக்கில் செயல்பட இயலாது.

#### ii. பெயரில் மட்டும் சர்வாதிகாரம்

அரசு நிறுமத்தின் தனித்தன்மை என்பது பெயரில் மட்டுமே உள்ளது. உண்மையில் அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரின் அதிகபட்ச தலையீடு இந்நிறுமங்களின் அன்றாட செயல்பாட்டில் அதிகரித்துள்ளது.

#### iii. நிறுமச்சட்டம் மற்றும் அரசியல் சட்டத்தில் மோசடி

அரசு நிறுமம் நிறுமச்சட்டம் மற்றும் அரசியல் சட்டத்தை விமர்சிக்கிறது. நிறுமச்சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்துவதினின்றும் விதிவிலக்கு பெறுகிறது. அரசு நிறுமத்தை உருவாக்கும் பொழுது பாராளுமன்றத்தில் நம்பிக்கை தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

#### iv. பயத்தின் வெளிப்பாடு

அரசு நிறுமங்களின் ஆண்டுத் தணிக்கை அறிக்கை பாராளுமன்றம் / சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. இதன் செயல்பாடுகள் பத்திரிக்கைகளால் விமர்சனம் செய்யப்படுகிறது. இதனால் அரசு நிறுமத்தின் மேலாண்மை நிர்வாகம் சோர்வுற்று காணப்படுகிறது. எந்த வித துவக்க முயற்சியும் இல்லாமல் புதுமையும் இல்லாமல் இருக்கின்றன.

#### v. நிபுணத்துவர் திறமை குறைவு

அரசுத் துறைகளிலிருந்து அரசு நிறுமங்களுக்கு பணிமாறுதலில் வருகிறார்கள். அவ்வாறு வருபவர்கள் திறமையில்லாமலும், குறைந்த செயல்திறமை பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

#### vi. சுயநலப் போக்கு

அரசு நிறுமங்கள் அரசாங்கத்திற்காகவும் பொதுமக்களுக்காகவும் பெரிய அளவில் பணியாற்ற வேண்டியுள்ளது. ஆனால் சுயவிருப்பத்திற்காகவும் பணியாளர்கள் நிறுமத்தின் கொள்கைகளை அடிப்பற்றியும் பணியாற்ற வேண்டியுள்ளது.

### இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் சின்னங்கள்

| நிறுவனங்கள் | தலைமையகம் | சின்னம் |
|---|---|---|
| இந்திய நிலக்கரி லிமிடெட் | கொல்கத்தா | |
| இந்திய எஃகு ஆணையம் | புதுடெல்லி | |
| தமிழ்நாடு போக்குவரத்து கழகம் லிமிடெட் | சென்னை | |
| இந்திய எரிவாயு ஆணையம் லிமிடெட் | புதுடெல்லி | |

**கலைச்சொற்கள்**

துறைவாரி நிறுவனங்கள் | பொதுக்கழகம்

அரசு நிறுமங்கள் | தேசிய மயமாக்கம்

**நமது சிந்தனைக்கு**

1. துறைவாரி நிறுவனங்களுக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
2. பொதுக் கழகத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
3. அரசு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 82 2/17/2021 3:11:13 PM

### மேலும் அறிவதற்கு

அ. இந்தியாவில் "பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் குறிக்கோளை அடைய தவறிவிட்டன" என்ற தலைப்பில் உங்கள் வகுப்பு மாணவர்களிடையே ஒரு விவாதம் ஏற்பாடு செய்யுங்கள். அதற்காக வகுப்பில் உள்ள சில நல்ல பேச்சாளர்களை தேர்ந்தெடுக்கவும். இயக்கம் மற்றும் அதற்கு எதிரான வாதத்தை குறிப்பிடுங்கள்.

ஆ. சமீபத்தில் "பொதுத்துறை நிறுவனங்களின் நோக்கங்கள்" என்ற தலைப்பில் சென்னை வட்டார தனியார் கலாச்சார அமைப்பான நண்பர்கள் வட்டம் என்ற அமைப்பு நடத்தியது. பங்கேற்பாளர்களில் ஒருவரான, திரு.ரமேஷ் ஒரு சமூக ஆர்வலர். "பொதுத்துறை நிறுவனங்களின் குறிக்கோள் சமூகத்திற்கு சேவை செய்வதே, லாபம் சம்பாதிப்பதில்லை" என்று அவர் குறிப்பிட்டார். திரு.தீபேஸ், என்பவர் ஒரு வழக்கறிஞர். அவர் திரு. ரமேஷ் அவர்களின் கருத்தை மறுத்து தனது கருத்தை முன் வைக்கிறார். இவ்வாறு அவர்களுக்கிடையே கலந்துரை யாடல் நடக்கிறது. அந்த கலந்துரையாடலில் நீங்கள் பங்கேற்றிருந்தீர்கள் என்றால், உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும், ஏன்?

### சூழ்நிலை ஆய்வு

அ. நீங்கள் ஒரு தமிழ்நாடு சுற்றுலாப் பேருந்து போக்குவரத்து நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்படுகிறீர்கள். உங்கள் நகரத்தின் போக்குவரத்து மேலாண்மை அதன் பேருந்துகள் பல சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இயலாது என்பதைக் கண்டறிகிறது. சில வழித்தடங்களில் இயங்கும் தனியார் சிற்றுந்து மக்கள் விரும்புவதாக கண்டறியப்படுகிறது. இதன் விளைவாக, நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே, நிர்வாகமானது அதன் விலைக் கொள்கைகளை மறுசீரமைக்க விரும்புகிறது. ஒரு தலைமை நிர்வாக அதிகாரி அல்லது மேலாண்மை இயக்குநர் என்ற முறையில் நீங்கள் என்ன விதமான ஆலோசனைகளை வழங்கலாம்? விளக்குக.

ஆ. சுதன் என்பவர் முதலாம் ஆண்டு பி.காம் படித்து வருகிறார். அவரது தந்தை, திரு. சோமு சென்னையில் ஒரு முன்னணி தொழிலதிபர் ஆவார். ஆனால், சுதனுக்கு பொதுப் பயன்பாடுகள் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவர் இந்த தலைப்பில் தனது வகுப்பில் அவர் ஒரு பாடம் தயார் செய்து விவாதிக்க வேண்டும். அவர் தனது தந்தையின் உதவியை நாடுகிறார். அவரது தந்தை சுதனிடம், பொதுப் பயன்பாடுகள் தனியார் நிறுவனங்களுக்குப் பதிலாக அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை எனக் கூறுகிறார். இதற்கிடையில் திரு. சந்திரசேகரன் திரு. சோமுவின் நண்பர் அங்கு வருகிறார். திரு. சந்திரசேகரன் சென்னை மின்சாரம் வழங்கல் பிரிவில் ஊழியராக பணிபுரிகிறார். திரு. சந்திரசேகரன் திரு.சோமுவுக்கும் அவரது மகனுக்கும் இடையில் நடக்கும் உரையாடலில் தலையிட்டு திரு. சந்திரசேகரன் திரு.சோமுவின் கருத்து சரியானதல்ல என்றும், பொதுப்பயன்பாட்டில் சில உத்திகள் மற்றும் சிறப்பு அம்சங்கள் உள்ளன என்றும் கூறுகிறார். நீங்கள் சுதன், திரு. சோமு மற்றும் திரு. சந்திரசேகரன் ஆகியோரின் கதாபாத்திரங்களையும், வடிவமைத்து உங்கள் நிலைப்பாடுகள் என்ன என்பதைப் பற்றியும் தெரிவிக்கவும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 83 2/17/2021 3:11:13 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ________ க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.**

அ. 75%

ஆ. 60%

இ. 95%

ஈ. 51%

5GCBRH

**2. பொதுத் துறை நிறுவனத்தின் மிகப்பழமையான அமைப்பு**

அ. பொதுத்துறை நிறுவனம்

ஆ. துறைவாரி அமைப்பு

இ. பன்னாட்டு நிறுவனம்

ஈ. சட்டமுறை நிறுவனம்

**3. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?**

அ. பிரதமர்

ஆ. குடியரசுத் தலைவர்

இ. இந்தியத் தலைமை நீதிபதி

ஈ. மாநில முதலமைச்சர்

**4. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது**

அ. லாபம் ஈட்டுதல்

ஆ. வேலை வாய்ப்பை உருவாக்குதல்

இ. மக்களுக்கு சேவை செய்தல்

ஈ. மேற்கூறிய அனைத்தும்

**விடைகள்**

1. ஈ  2. ஆ  3. ஆ  4. இ

### II. குறுவிடை வினாக்கள்.

1. பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
2. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
3. தாமதமும்,சிகப்பு நாடா போக்கும் என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. துறைவாரி நிறுவனம் என்றால் என்ன?
2. அரசு நிறுமம் என்றால் என்ன?
3. பொது கழகங்கள் என்றால் என்ன?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)
2. பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)
3. அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)

### குறிப்பு நூல்கள்.

1. Bhushan, Y.K, Business Organisation and Management

## அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம் **10**

# இந்திய ரிசர்வ் வங்கி

5GL7T5

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. மைய வங்கியின் பொருளைப் புரிந்து கொள்ள முடியும்
2. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றி அறிய முடியும்
3. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளை விவரித்துக் கூற முடியும்.

### 10.01 சேவைத் தொழிலின் தேவை

கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற சேவைத் தொழில்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன. உலக வர்த்தகத்தில் சேவைத் தொழில்கள் 1970 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. 2015-16 ஆம் ஆண்டு இந்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு கூறுவதாவது.

"உலகப் பொருளாதாரத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துறையாகச் சேவைத் துறை உருவாகியுள்ளது. சேவைத் தொழில்கள் உலகின் ஒட்டு மொத்தக் கூட்டு உற்பத்தி மதிப்பின் பங்களிப்பில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு, உலக வேலைவாய்ப்பில் சம பங்கு, உலக வர்த்தகத்தில் ஐந்தில் ஒரு பங்கு, உலகின் வெளிநாட்டு அன்னிய நேரடி முதலீடுகளில் பாதிக்கும் மேலான பங்கு வகிக்கிறது. இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய கருவியாக உள்ளது. இது இந்தியாவின் ஒட்டு மொத்தக் கூட்டு உற்பத்தி மதிப்பில் 2015-16 இல் கிட்டத்தட்ட 66.1 சதவிகிதம் பங்களிப்பு செய்து பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துள்ளது".

### 10.02 வங்கிச் சேவை

ஒரு நாட்டின் வர்த்தகம், வாணிகம் மற்றும் தொழில்களின் நரம்பு மண்டலமாக வங்கி கருதப்படுகிறது. இது நாட்டின் வழக்கமான செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக்கான பணத் தேவைகளைச் சந்திப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொதுவாக வங்கி என்றால் அது வணிக வங்கியை குறிக்கும். ஆனால் பல்வேறு வகையான சேவைகளை வழங்கும் பலவிதமான வங்கிகள் இருக்கின்றன. மைய வங்கி அவற்றில் முக்கியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு மைய வங்கி உள்ளது. இது நாட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. ஒரு நாட்டின் அனைத்து வங்கிகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த உச்ச வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவைகளது செயல்பாடுகள் நாட்டிற்கு நாடு மாறுபடும். ஒரு மைய வங்கி முழு தன்னாட்சி அல்லது பாதி தன்னாட்சியுடன் அமைக்கப்படுகிறது. ஒரு நாட்டு பொருளாதாரத்தின் நிலைத்தன்மை மற்றும் மேம்பாடு ஆகியவைகளே மைய வங்கியின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். இந்தியாவில் இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of Inda – RBI) மைய வங்கியாகச் செயல்படுகிறது.

### 10.03 இந்திய வங்கிகள் – ஓர் வரலாற்றுப் பின்னணி

I. இந்துஸ்தான் வங்கியானது 1770 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் வங்கியாகும். இது 1932 இல் மூடப்பட்டது.

II. 1786 இல் இந்தியப் பொதுவுடைமை வங்கி நிறுவப்பட்டது. இது 1791 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது.

III. 1806 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கொல்கத்தா வங்கி முதல் கூட்டுப் பங்கு வங்கியாகும். இது 1809 ஆம் ஆண்டில் பெங்கால் வங்கி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

IV. 1840 ஆம் ஆண்டில் மும்பை வங்கி மற்றும் 1843 ஆம் ஆண்டில் சென்னை வங்கி ஆகியவை நிறுவப்பட்டன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 85 2/17/2021 3:11:13 PM

## பண்டைய இந்தியாவில் வங்கி

இந்தியாவில் 3500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (1500 பொ.ஆ.மு.) வங்கி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. வட்டி சம்பாதித்தல் மற்றும் அநியாய வட்டி (நியாயமற்ற வட்டி) ஆகியவை பரவலாக வேத காலத்தில் இருந்துள்ளது. 1200 ஆண்டுகளுக்கு முன்னர் (800 பொ.ஆ). தமிழ்நாட்டில் கீழ் வரும் பதங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன: பற்று, வரவு, செலவு, இலாபம், நஷ்டம், இவை அனைத்தும் 'ஐந்தொகை' (Trial Balance) என அழைக்கப்பட்டது. பேரேடு (Ledger) என்பது பேரேட்டைக் குறிக்கின்றது.



இராஜ இராஜ சோழன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வெண்கல நாணயங்கள் (985-1014 பொ.ஆ)

இந்த மூன்று வங்கிகளும் 1921 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி ஒருங்கிணைக்கப்பட்டு இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா என்ற வங்கி உருவாக்கப்பட்டது. அந்த நாட்களில் இந்த வங்கி நகர்ப்புறப் பகுதிகளுக்கு மட்டும் சேவை செய்து, கிராமப்புறப் பகுதிகள் முழுவதையும் புறக்கணித்தது எனவே, சுதந்திரத்திற்குப் பிறகு, இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவை அரசுடமையாக்கப் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு ஜூலை 1, 1955 அன்று ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உருவாக்கப்பட்டது.

### இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் முத்திரை




### 10.04 வங்கி – இலக்கணம்

1949 ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி, "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ, கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொதுமக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல்" எனப்படும். அப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் வங்கி ஆகும் என வரைவிலக்கணம் கூறுகிறது.

### 10.05 மைய வங்கி – இலக்கணம்


1. "ஒரு நாட்டின் பண மற்றும் வங்கிக் கட்டமைப்பின் உச்சநிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும், சிறந்த முறையில் செயல்படும் வங்கி, அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்." என டிகா அவர்கள் வரைவிலக்கணம் வகுத்துள்ளார். மைய வங்கியின் ஏழு பணிகளை அவர் பட்டியலிட்டுள்ளார். இப்பட்டியல் பொருளாதார நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
2. "பொது நலன் கருதி மொத்தப் பணப் புழக்கத்தை எந்த ஒரு நிறுவனம் விரிவாக்குதல் கட்டுப்படுத்துதல் மற்றும் நெறிமுறைப்படுத்துதல் பொறுப்புகளைப் பெற்றுள்ளதோ, அதுவே மைய வங்கி." என கென்ட் அவர்கள் இலக்கணம் வகுத்துள்ளார்.
3. "எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டின் பணப்புழக்கம் மற்றும் கடன் அளவை கட்டுப்படுத்தும் கடமை எந்த வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதுவே மைய வங்கி ஆகும்." என பன்னாட்டு தீர்வு வங்கி (BIS) கூறுகிறது.

### 10.06 இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்


இம்பீரியல் பாங் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது. 1926 ஆம் ஆண்டில் ஹில்டன்-யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் (ஜே. எம். கீன்ஸ் மற்றும் சர் எர்னெஸ்ட் கேபிள் இதன் உறுப்பினர்கள்) ஒரு மைய வங்கியை உருவாக்கப் பரிந்துரைத்தது. அதன் விளைவாக, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 இல் உருவாக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது. இந்திய ரிசர்வ் வங்கியின் ₹5 கோடி மூலதனம் ₹100 மதிப்புள்ள முழுவதும்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 86 2/17/2021 3:11:13 PM


வங்கிகளின் வகைகள்
மைய வங்கி
வணிக வங்கிகள்
மேம்பாட்டு வங்கிகள்
பன்முகத்தன்மை கொண்ட மேம்பாட்டு வங்கிகள்
கூட்டுறவு கடன் நிறுவனங்கள் (95,487)
சிறிய நிதி வங்கிகள் (9)
உள்ளூர் பகுதி வங்கிகள் (3)
செலுத்தல் வங்கிகள்
அட்டவணையிடப்பட்ட வணிக வங்கிகள்
அட்டவணையிடப்படாத வங்கிகள்
இந்திய வங்கிகள்
வெளிநாட்டு வங்கிகள் (42)
பொதுத் துறை வங்கிகள்
தனியார் துறை வங்கிகள்
பாரத ஸ்டேட் வங்கி
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் (19)
வட்டாரக் கிராமிய வங்கிகள் (56)
இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி லிமிடெட்
பழைய தனியார் துறை வங்கிகள் (13)
புதிய தனியார் துறை வங்கிகள் (8)
வேளாண்மை மேம்பாட்டு வங்கிகள்
தொழில்துறை மேம்பாட்டு வங்கிகள்
நபார்டு
ஐடிபிஐ, ஐசிஐசிஐ, ஐஎப்சிஐ
நகர கூட்டுறவு வங்கிகள் (1574)
அட்டவணையிடப்பட்ட நகர கூட்டுறவு வங்கிகள் (52)
அட்டவணையிடப்படாத நகர கூட்டுறவு வங்கிகள் (1522)
பல மாநிலம் (31)
தனி மாநிலம் (21)
பல மாநிலம் (20)
தனி மாநிலம் (1502)
பல மாவட்டம்
தனி மாவட்டம்
அலகு நகர கூட்டுறவு வங்கி
அலகில்லாத நகர கூட்டுறவு வங்கி
கிராம கூட்டுறவு கடன் நிறுவனங்கள் (93,913)
குறுகிய காலம் (93,191)
நீண்ட காலம் (722)
மாநில கூட்டுறவு வங்கிகள் (32)
மாவட்ட/மத்திய கூட்டுறவு வங்கிகள் (370)
தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (92,789)
குறு, சிறு வேளாண்மை கிராம மேம்பாட்டு வங்கிகள் (20)
தொடக்க வேளாண்மை கிராம மேம்பாட்டு வங்கிகள் (702)
தனியார் துறை செலுத்தல் வங்கிகள் (3)
இந்திய அஞ்சல் செலுத்தல் வங்கிகள் (பொதுத்துறை)

செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது. பங்கு முதல் தொகை முழுவதும் தனியார் பங்குதாரர்கள் வசம் இருந்தது. அதன் தலைமை அலுவலகம் கொல்கத்தாவில் இருந்தது, பின்னர் 1937 இல் மும்பைக்கு மாற்றப்பட்டது.


ROYAL COMMISSION ON INDIAN CURRENCY AND FINANCE.

VOL. I.

REPORT

OF THE

ROYAL COMMISSION ON INDIAN CURRENCY AND FINANCE.

சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசாங்கம் ரிசர்வ் வங்கி (பொது உரிமைக்கு மாற்றுதல்) சட்டம் 1948 ஐ நிறைவேற்றியது மேலும் தனியார் பங்குதாரர்களுக்குச் சரியான இழப்பீட்டுத் தொகையை வழங்கி ரிசர்வ் வங்கியை அரசுடமை ஆக்கியது. ஜனவரி 1, 1949 முதல் இந்திய ரிசர்வ் வங்கி அரசுக்குச் சொந்தமான மைய வங்கியாக செயல்பட்டு வருகிறது. அப்பொழுது இதில் மூன்று துறைகள் மட்டுமே இருந்தன. இந்திய ரிசர்வ் வங்கி 1947 வரை பர்மா நாட்டிற்கும் ஜூன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**இந்திய ரிசர்வ் வங்கியின் சின்னம்**




**உங்களுக்குத் தெரியுமா?**

1. இந்தியாவில் 1969 ஆம் ஆண்டு 14 வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.
2. அதன் பிறகு 1980 ஆம் ஆண்டு மேலும் 6 வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.
3. NABARD-ன் விரிவாக்கம் ........................

## 10.07 இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு

இந்திய ரிசர்வ் வங்கியின் மத்தியத் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு முதல் இந்த மத்தியத் தலைமை அலுவலகம் 33 துறைகளைக் கொண்டுள்ளது. மும்பை, தில்லி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்கள் துணை நிலை ஆளுநர்களின் தலைமையில் செயல்படும் வட்டார வாரியங்களின் கீழ் இயங்கி வருகின்றன. 19 பிராந்திய அலுவலகங்களும் 11 துணை அலுவலகங்களும் ரிசர்வ் வங்கியின் கீழ் செயல்படுகின்றன (2017). இந்திய ரிசர்வ் வங்கி மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

அதில் உள்ளவர்கள் பின்வருமாறு,

அ. ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலை ஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்,

ஆ. பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குநர்கள்

இ. இரண்டு அரசு அதிகாரிகள்

ஈ. நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்).

## 10.08 இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை மூன்று தலைப்புகளில் தொகுக்கலாம்.

1. தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள்
2. பாரம்பரியப் பணிகள் மற்றும்
3. மேம்பாட்டுப் பணிகள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 88 2/17/2021 3:11:14 PM

## I. தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள்

உலகப் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடாக இந்தியா திகழ்கிறது. உலகின் பல நிகழ்வுகளில் இந்தியா முக்கியப் பங்காற்றிட வேண்டுமென்று பல நாடுகள் எதிர்பார்க்கின்றன. இந்தியாவின் தலைமை வங்கியாகவும் உலக நிறுவனங்களின் ஒரு பகுதியாகவும் இந்திய ரிசர்வ் வங்கி உள்ளது. இது வளர்ந்த நாடுகளில் உள்ள வங்கிகளின் தரத்திற்கு ஏற்ப இந்திய வங்கிகளின் தரம் மற்றும் அளவை உயர்த்தும் பணிகளைச் செய்கிறது. அத்தகைய செயல்பாடுகள் தற்போதைய சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

### 1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி

சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கியியல் தீர்வு பேஸல் (BCBS, சுவிட்சர்லாந்து) குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (IBRD – உலக வங்கி) மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் (IMF) டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

### 2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்

நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கி வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கியையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

### 3. பணவியல் உச்ச நிலை அதிகாரி

விலைவாசி நிலைத்தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி நிர்மாணிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கி, கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

### 4. பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்

பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்களான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தகச் சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு (மத்திய வாரிய இயக்குநர்களின் ஒரு குழு) குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

### 5. புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது

இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில் வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

எடுத்துக்காட்டு : கோபால் கிருஷ்ணன் குழு "தகவல் பாதுகாப்பு, மின்னணு வங்கி .. ", ஏப்ரல், 2010

## II. பாரம்பரியப் பணிகள்

### 1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராகச் செயல்படுதல்

இந்திய ரிசர்வ் வங்கி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கணக்கில் பணத்தை ஏற்றுக்கொள்வதோடு, அவர்கள் சார்பாகப் பணம் செலுத்தும் பணிகளையும் செய்கிறது. அரசாங்கக் கடனை நிர்வகித்தல் புதிய கடன்களை வழங்குதல் ஆகிய பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசின் புதிய கடன்களின் அளவு, காலம் மற்றும்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 89 2/17/2021 3:11:14 PM

விதிமுறைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்குகிறது. அரசின் தற்காலிக நிதி தேவைகளைப் பூர்த்தி செய்ய 'வழிகளையும், உபகரணங்களையும்' அரசாங்கத்திற்கு இது வழங்குகிறது. அரசாங்கத்தின் உபரி நிதியை எடுத்து முதலிடும் பணியினைச் செய்கிறது. அரசுகளுக்குள் மற்றும் அரசு துறைகளுக்குள் உள்ள கணக்கு சரிகட்டுதல்களை ரிசர்வ் வங்கி எடுத்துச் செய்கிறது.

### 2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை

ஒரு ரூபாய் நோட்டு தவிர அனைத்து ரூபாய் நோட்டுகளை அச்சிடுவதற்கும் மற்றும் வெளியிடுவதற்கும் இந்தியாவில் முழு அதிகாரமும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் உள்ளது. நல்ல தரமான ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு பொதுமக்களுக்குத் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்வது. இந்திய ரிசர்வ் வங்கியின் கடமை. இது பயன்படுத்த இயலாத ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்களைப் பெற்றுக் கொண்டு மாற்றி தருகிறது. ஒரு ரூபாய் நோட்டு மற்றும் அனைத்து நாணயங்களையும் நிதி அமைச்சகம் தயாரித்து வெளியிடுகிறது. ரூபாய் நோட்டுகள் நாசிக், தேவாஸ், சால்போனி, மைசூர் மற்றும் ஹோஷங்காபா ஆகிய ஐந்து இடங்களில் அச்சிடப்படுகின்றன. (இந்தியாவிற்கு வெளியில் ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படுவதில்லை).

### 3. வங்கியர்களின் வங்கியர்

இந்திய ரிசர்வ் வங்கிக்கும் பிற வங்கிகளுக்கும் இடையேயான உறவு, ஒரு வர்த்தக வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் வைத்துள்ள உறவைப் போலவே உள்ளது. நாட்டின் அனைத்து வணிக வங்கிகளின் நடப்புக் கணக்குகளை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. அனைத்து அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ரொக்க இருப்பு வைத்திருக்க வேண்டும். அனைத்து வங்கிகளும் மாற்றுச்சீட்டுகளை மறுவட்டம் செய்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களை ஈடாக வைத்தும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் கடன் பெற முடியும்.

### 4. கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்

நாட்டில் கடன் பணம் மற்றும் ரூபாய் பணப்புழக்கத்தின் அளவைக் கட்டுப்படுத்துவது மற்றும் வட்டி விகிதத்தினை நிர்வாகம் செய்வது இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கியச் செயல்பாடுகளில் ஒன்று. இந்தச் செயல்பாட்டிற்காக, இந்திய ரிசர்வ் வங்கி, கடன் பண அளவினைக் கட்டுப்படுத்தும் மற்றும் கடன் தரத்தினைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. நாட்டில் வாணிபப் பரிவர்த்தனைகள் மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்குப் போதுமான ரொக்கம் மற்றும் கடன் பணம் (நீர்மைத்தன்மையுடன்) கிடைப்பதை உறுதிப்படுத்துவது இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும்.

### அ. கடன் அளவை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

இந்தியப் பொருளாதாரத்தில் மொத்தக் கடன் தொகை அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் கடன் அளவை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் எனப்படும். இவற்றில் முதல் மூன்று நடவடிக்கைகளின் அதிகரிப்பு நாட்டில் மொத்தப் பணச் சுழற்சி அளவை குறைக்கும்.

#### i. வங்கி வீதக் கொள்கை

வங்கி விகிதம் என்பது இந்திய ரிசர்வ் வங்கி அட்டவணையிடப்பட்ட வங்கிகளுக்கு மாற்றுச்சீட்டுகளை மறு வட்டம் செய்து கடன் வழங்கும் கழிவு விகிதத்தைக் குறிக்கும்.

> மறு வாங்கல் விகிதம் (Repo Rate) என்பது ரிசர்வ் வங்கி அரசின் பிணையங்களை (பிற பிணையங்களும் கூட) வணிக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு கடன் வழங்கும் வட்டி விகிதத்தைக் குறிக்கும். (பின்னிட்டு மறு வாங்கல் விகிதம் (Reverse Repo Rate) என்பது ரிசர்வ் வங்கி அரசு பிணையங்களைக் கொடுத்து வணிக வங்கிகளிடம் கடன் பெறும் வட்டி விகிதத்தைக் குறிக்கும்.)

#### ii. ரொக்க இருப்பு விகிதம்

இது அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தம்மிடமுள்ள மொத்தக் கால மற்றும் கேட்பு வைப்புகளின், விகிதாச்சாரமாக, ரொக்கப் பணமாக இந்திய ரிசர்வ் வங்கியில் வைத்துள்ள பண இருப்பு விகிதத்தைக் குறிக்கும்.

#### iii. சட்டரீதியான நீர்மைத்தன்மை விகிதம்

இது அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தம்மிடமுள்ள மொத்தக் கால மற்றும் கேட்பு வைப்புகளின் விகிதாச்சாரமாகத் தம்மிடமே வைத்துக்கொள்ள வேண்டிய பணம் மற்றும் பணத்திற்குச் சமமான உபகரணங்கள் ஆகியவைகளின் அளவை குறிக்கும்.

#### iv. திறந்த சந்தை செயல்பாடுகள்

நாட்டில் பணப்புழக்கத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ இந்திய ரிசர்வ் வங்கி நேரடியாகப் பணச் சந்தையில் பத்திரங்கள் மற்றும் மாற்றுச்சீட்டுகளை வாங்கவோ அல்லது விற்கவோ செய்கிறது.

### ஆ. கடன் தரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட துறைகளின் மொத்தப் பண அளவில் இந்த முறையானது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

i. கடன் பங்கீடு: குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அல்லது சில துறைகளுக்குக் கடன் வழங்குவதற்கான அதிகபட்ச வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

ii. விளிம்பு தேவைகள்: பிணையமாகச் சமர்ப்பிக்கப்படும் சொத்துகளின் மதிப்பில் எந்த அளவு கழித்து, மீதி தொகையைக் கடனாக வழங்கலாம் என்ற விதியைக் குறிக்கிறது.

iii. நேரடி நடவடிக்கை: இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாத வங்கி அல்லது வங்கிகள் மீது பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கைகளை இந்திய ரிசர்வ் வங்கி எடுக்கும். இது நேரடி நடவடிக்கை என்று அழைக்கப்படுகிறது.

iv. ஒழுக்க நடவடிக்கை: இந்திய ரிசர்வ் வங்கி சில குறிப்பிட்ட காலக் கடன்களைத் தாராளமாகவோ அல்லது கட்டுப்படுத்தியோ வழங்க வங்கிகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

### 5. இறுதி நிலை கடன் ஈவோர்

அவசரகால நேரங்களில் இந்தியாவில் எந்தவொரு வங்கியும் நிதி உதவியைப் பெற இந்திய ரிசர்வ் வங்கியினை அணுகும் போது ரிசர்வ் வங்கி கடன்களை வழங்குகிறது. கடன் பெறும் பிற ஆதாரங்கள் தீர்ந்துவிட்ட நிலையில், அனைத்து வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற முடியும். எனவே இது வங்கிகளுக்கு இறுதி நிலைக் கடன் ஈவோராக விளங்குகிறது.

### 6. தீர்வக அமைப்பு சேவைகள்

இந்திய ரிசர்வ் வங்கி ஒரு தீர்வக அமைப்பை இயக்குகிறது. இந்தியாவின் அனைத்து வணிக வங்கிகளுக்கும் ஒரு தீர்வக முறையைப் பராமரிக்கிறது. ஒரு வங்கி மற்ற வங்கிகளின் மீது அளித்த காசோலைகளின் மொத்த அளவு மற்ற வங்கிகளின் மீது அந்த வங்கியின் உரிமைகோரலைப் பிரதிபலிக்கிறது. இதேபோன்ற உரிமை கோரல்கள் அனைத்து வங்கிகளும் மற்ற வங்கிகள் மீது தீர்வுக்காக ரிசர்வ் வங்கியிடம் முன் வைக்கின்றன. ஒரு நிகர தீர்வானது தீர்வக அமைப்பின் மூலம் கணிக்கப்படுகிறது, அதற்கிணங்க பற்று அல்லது கடன் பதிவு அந்தந்த வங்கியின் நடப்புக் கணக்குகளில் ரிசர்வ் வங்கியால் பதிவு செய்யப்படுகிறது. ரிசர்வ் வங்கியுடன் வங்கிகள் வைத்திருக்கும் ரொக்க இருப்புக்கள் இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. தீர்வக முறையானது நேரத்தைச் சேமிக்கிறது மற்றும் தாள்களின் மூலம் நடைபெறும் வேலைப்பளுவைக் குறைக்கிறது மற்றும் வங்கிகளுக்கு இடையேயான தீர்வக சம்பந்தமான மற்றக் கடினமான பணிகளைத் தவிர்க்கிறது. நாட்டின் அனைத்துத் தீர்வக முறைகளைப் பராமரிக்கின்ற இந்திய ரிசர்வ் வங்கி (மொத்தம் 860) 14 தீர்வக மையங்களை மட்டுமே தன்னகத்தே கொண்டுள்ளது. பாரத ஸ்டேட் வங்கி மூலம் 840 தீர்வகங்களையும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 6 தீர்வகங்களையும் நடத்துகிறது.

### 7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்

தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் இருப்புக்களை இந்திய ரிசர்வ் வங்கி பராமரிக்கிறது. அந்நியச் செலாவணி இருப்புக்கள் போதுமானதாக இல்லாத போது நாட்டின் செலுத்தல் சமநிலையைப் பராமரிக்கப் பன்னாட்டு நாணய நிதியத்திடம் (IMF) இருந்து கடன் பெறுகிறது. மேலும் அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டம், 1999 இன் விதிகளை அமுல்படுத்துதல் மற்றும் அந்நியச் செலாவணி பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்கிறது இந்தியாவில் அந்நியச் செலாவணி சந்தையைச் செழுமைப்படுத்துவதும் பராமரிப்பதும் இந்திய ரிசர்வ் வங்கியின் மற்றொரு கடமையாகும்.

### 8. அந்நியச் செலாவணி விகிதத்தின் பராமரிப்பு

இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பணம் செலுத்தும் வசதிக்காக, இந்திய ரிசர்வ் வங்கி ரூபாயின் அந்நியச் செலாவணி மதிப்பைப் பராமரிக்கிறது. இது வர்த்தகத்தில் குறுகிய கால ஏற்ற இறக்கங்கள் அந்நியச் செலாவணி விகிதத்தினைப் பாதிக்காத வகையில் உறுதி செய்கிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 91 2/17/2021 3:11:14 PM

### 9. நம்பகத் தன்மையுள்ள தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளியீடு

மேலும் இது வங்கியியல் மற்றும் பொருளாதாரத்தின் பிற பிரிவுகளுடன் தொடர்புடைய புள்ளிவிவரங்கள் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் தொகுத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் மாதாந்திர அறிக்கை, வருடாந்திர அறிக்கை மற்றும் பல்வேறு குழு அறிக்கைகள் போன்ற நம்பகத்தன்மையுள்ள விபரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

## III. மேம்பாட்டுப் பணிகள்

இந்திய ரிசர்வ் வங்கியானது தேசிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக மேம்பாட்டு செயல்பாடுகளைச் செய்து வருகிறது.

### 1. பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது

வங்கி முறையின் மீது பொது மக்களின் நம்பிக்கையைப் பேணிக்காப்பது இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும். குறைந்த செலவில் வங்கி சேவையைப் பெறுதல் வங்கி வாடிக்கையாளர்களின் வைப்புகளைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மேலும் மேலும் அதிக நபர்களை வங்கி சேவையைப் பயன்படுத்தத் துண்டுகிறது. வங்கி சேவைகளை வங்கிகள் இல்லாத பகுதிகளுக்கும் பிராந்தியங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொள்கிறது.

### 2. குறை தீர்வு நடவடிக்கைகள்

இந்திய ரிசர்வ் வங்கி 20 வங்கிக் குறைதீர்ப்பு ஆணையாளர்களை 20 மாநிலத் தலைநகரங்களில் (2017 வரை) நியமித்துள்ளது. இந்தியாவில் வங்கிக் குறைதீர்ப்பாளர் திட்டம் (1995 முதல்) சில சேவைகளுக்கு வாடிக்கையாளர் புகார்களைத் தீர்ப்பதற்காக வழங்கப்படுகிற விரைவான மற்றும் குறைந்த செலவு சேவையாகும்.

### 3. வேளாண்மை வளர்ச்சி

வேளாண்மைத் தொழில் இந்திய ரிசர்வ் வங்கியிடம் முன்னுரிமை பெற்ற பிரிவாகக் கருதப்படுகிறது. அனைத்து அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் முன்னுரிமைத் துறையான வேளாண்மைத் துறைக்குத் தாங்கள் வழங்கும் கடன்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி இருக்க வேண்டும். இது இந்தியாவில் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டுக்கான தேசிய வங்கியுடன் (NABARD) நெருக்கமாக இணைந்து செயல்படுகிறது.

### 4. சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முன்னுரிமை துறையில் சேர்க்கப்பட்டுள்ளது. அனைத்து அட்டவணையிடப் பட்ட வங்கிளும் தனித்தனியே சிறப்பு கிளைகளைத் தொடங்கிச் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு நிதியுதவி செய்ய வேண்டும், என இது வழியுறுத்துகிறது

### 5. வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்

ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களுக்கான விதிகளை இந்திய ரிசர்வ் வங்கி எளிதாக்கியது, இதன்மூலம் இப்போது ஏற்றுமதியாளர்கள் நீண்ட காலக் கடன் உதவிகளை வங்கிகளில் இருந்து முன் கூட்டியே பெறலாம்.

### 6. கூட்டுறவு துறையினை ஆதரித்தல்

இந்திய ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்குச் சட்டங்களில் விதிவிலக்களித்தும், மறைமுக நிதியளிப்பு வழங்கியும் உதவுகிறது.

இந்திய அரசு ஜூலை 15, 2010 அன்று ரூபாய் சின்னம் (Rs.) ரூ. என்பதிலிருந்து "₹" ஆக மாற்றம் செய்தது. இது இந்தோனேசியா, மொரிஷியஸ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளின் பணமும் ரூபாய் என்று அழைக்கப்பட்டதால் இந்த ₹ சின்னம் மாற்றம் தேவைப்பட்டது. உலக ரூபாய் நோட்டுகளில் இந்திய ரூபாயின் குறியீடானது (INR) (இந்திய ரூபாய்) எனச் சர்வதேசத் தர நிர்ணய அமைப்பு வழங்கியுள்ளது.

**கலைச்சொற்கள்**

கலைத்தல்

இறுதிக் கடன் வழங்குதல்

தீர்வக மையம்

வங்கி குறைதீர்ப்பாணையம்.

**நமது சிந்தனைக்கு**

பண மதிப்பிழப்பு மற்றும் பண மதிப்பிழப்பு ஈடுசெய்தல் பற்றிய ஒரு விவாதம் வகுப்பறையில் நடத்தலாம்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 92 2/17/2021 3:11:15 PM

### இந்திய ரிசர்வ் வங்கியின் சாதனைகள்

1. உலகின் சிறந்த மத்திய வங்கிகளில் இந்திய ரிசர்வ் வங்கியும் ஒன்று. 2008–2009 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலை காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கி தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியப் பொருளாதாரத்தைக் காப்பாற்றியது.
2. வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு) ஒரு காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் துணை நிறுவனமாக இருந்தது. இவ்வங்கி உலகின் முதல் வகையானதாகத் திகழ்கிறது.
3. 2016–17 இல் மேற்கொள்ளப்பட்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கை ஒரு மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. ஏனெனில் இந்திய ரிசர்வ் வங்கி தலைமையின் செயல்பாடே காரணம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

### பண மதிப்பிழப்பு மற்றும் பண மதிப்பு ஈடுசெய்தல்

இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் பேரில், நவம்பர் 8, 2016 ஆம் ஆண்டு இந்திய அரசு அ) கறுப்பு பணத்திற்கு எதிராகவும், ஆ) சுழற்சியில் உள்ள கள்ள ரூபாய் நோட்டுகளை வெளியேற்றவும், இ) பணம் சார்ந்த வியாபார முறையை ஒழுங்குபடுத்தவும், மற்றும் ஈ) பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் நிதி வலிமையை அகற்றவும் பண மதிப்பிழப்பு நடவடிக்கையினை மேற்கொண்டது. ₹500 மற்றும் ₹1000 ரூபாய் நோட்டுகள் ₹17.118 பில்லியன் மதிப்பு ரூபாய் நோட்டுகள் பண மதிப்பிழப்பிற்கு முன்பாக நாட்டில் புழக்கத்தில் இருந்தன. அவைகள் 2,203 கோடி ரூபாய் நோட்டு காகிதங்களாக இருந்தன. இதில் 98.96% வங்கிகளுக்குத் திரும்ப அனுப்பப்பட்டது. பண மதிப்பிழப்பிற்கு பதிலாகப் பண மதிப்புருவாக்க நடவடிக்கையாக ₹2000 மற்றும் ₹500 ரூபாய் புதிய நோட்டுகள் வெளியிட்டு நிலைமை சமப்படுத்தப்பட்டது.

### மேலும் அறிவதற்கு

1. பிற நாடுகளின் மத்திய வங்கிகளின் பெயர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

   ரஷ்யா நாட்டு மத்திய வங்கியின் பெயர் ரஷ்யா வங்கி

   இலங்கை நாட்டு மத்திய வங்கியின் பெயர் இலங்கை மத்திய வங்கி

   அமெரிக்க ஐக்கிய நாட்டு மத்திய வங்கியின் பெயர் ____________________

   பாகிஸ்தான் நாட்டு மத்திய வங்கியின் பெயர் ____________________

2. பிற மூன்று நாடுகளின் மத்திய வங்கிகளின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்

   i .....................

   ii .....................

   iii .....................

3. நிதி ஆணையம், வங்கி முறைகள், நிதி முறைகள் ஆகியவற்றின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளுதல்.
4. இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர்களின் பெயர்களைச் சேகரித்தல்.
5. இந்திய நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுகளின் பிரதிகள் சேகரித்தல்.

### சூழ்நிலை ஆய்வு

1. சமீபத்திய பத்திரிகைச் செய்தியில் இந்திய ரிசர்வ் வங்கி NPA ஐ குறைப்பதற்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றிய கருத்துகள் மற்றும் பிற கருத்துகள் பற்றிய ஆய்வு.
2. வங்கி குறைதீர்ப்பாணையம் மூலமாக வங்கி வாடிக்கையாளர்களின் குறை தீர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் தீர்க்கப்பட்ட குறைகள் பற்றிய குழு ஆய்வு.
3. இந்திய ரிசர்வ் வங்கி இணையதளத்தினை www.rbi.org.in ஐ பார்வையிட்டு ஏதாவது ஒரு வருடாந்திர அறிக்கையினைப் பற்றி மற்றும் பிற அறிக்கை பற்றிய ஆய்வு.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 93 2/17/2021 3:11:15 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது**

   (அ) மைய வங்கி
   (ஆ) வணிக வங்கி
   (இ) கூட்டுறவு வங்கிகள்
   (ஈ) வெளிநாட்டு வங்கிகள்

2. **இந்திய மைய வங்கி என்பது**

   (அ) பி.என்.பி  (ஆ) எஸ்.பி.ஐ
   (இ) ஐ.சி.ஐ.சி.ஐ  (ஈ) ஆர்.பி.ஐ.

3. **இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, _____ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.**

   (அ) 1936  (ஆ) 1935
   (இ) 1934  (ஈ) 1933

4. **வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல, ___________ க்கு** வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்

   (அ) பொருளாதார வளர்ச்சி
   (ஆ) வர்த்தக வளர்ச்சி
   (இ) தொழில் வளர்ச்சி
   (ஈ) சேவை வளர்ச்சி

5. **கீழ்க்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?**

   (அ) ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்
   (ஆ) பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்
   (இ) அரசாங்க வங்கியாளராக நடத்தல்
   (ஈ) மற்ற வங்கிகளின் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்

**விடைகள்**

1. (அ) 2. (ஈ) 3. (ஆ) 4. (அ) 5. (ஆ)

### II. குறுவிடை வினாக்கள்.

1. சேவை தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?
2. வங்கியின் பொருளை எழுதுக.
3. மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

### III. சிறுவிடை வினாக்கள்.

1. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை? (ஏதேனும் 3)
2. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.
3. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)
2. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.

### குறிப்பு நூல்கள்.


1. ஜோர்டான் ஈ மற்றும் நடராஜன். கே, 2013, "பேங்கிங் தியரி, லா அண்ட் ப்ராக்டீஸ்", 23 வது பதிப்பு, ஹிமாலய பப்ளிஷிங் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், மும்பை -4
2. கந்தசாமி கே. பி. மற்றும் பலர், 2016, "வங்கி சட்டம் மற்றும் பயிற்சி", எஸ். சந்த் & கம்பெனி பிரைவேட். லிமிடெட், புதுத் தில்லி -55
3. மச்சிராசு. எச். ஆர், 2013, "இந்திய நிதி அமைப்பு", 4 வது பதிப்பு, விகாஸ் பப்ளிஷிங் ஹவுஸ் பிரைவேட். லிமிடெட், புது டெல்லி -14
4. இந்திய வங்கியியல் மற்றும் நிதியியல் இன்ஸ்டிடியூட், 2015, "வங்கி விதிமுறைகளும் நடைமுறைகளும்" 3வது பதிப்பு. மேக்மில்லன் பப்ளிஷர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை -2


5GV3US



XI_Tamil_commerce 1-15_001-147.indd 94    2/17/2021 3:11:15 PM

## அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம்

# 11 வங்கிகளின் வகைகள்

5H4YHF

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. பல்வேறு வகையான வங்கிகளைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்
2. பல்வேறு வகையான வங்கிகளின் நடவடிக்கைகளை விவரித்துக் கூற முடியும்
3. ஒரு வங்கியினை மற்றொரு வங்கியுடன் ஒப்பிட்டுக் கூற முடியும்

### 11.01 அறிமுகம்

*பல்வேறு வகையான வங்கிகள், பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை வழங்கி வருகின்றன. அனைத்து வகையான வங்கிகளும் பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டாலும் ஒவ்வொரு வகை வங்கிகளும் வெவ்வேறு துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எனவே அனைத்து வகையான வங்கிகளைப் பற்றி அறிவது முக்கியத்துவம் பெறுகிறது. 88 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்ட அட்டவணையின் மூலம் பல்வேறு வகையான வங்கிகள் பற்றி புரிந்து கொள்ளலாம்.*

### 11.02 வங்கிகளின் வகைகள்

*வங்கிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.*

*I. செயல்பாடுகளின் அடிப்படையில்*

*II. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட தகுதி அடிப்படையில்*

*III. உரிமையாளர் முறை அடிப்படையில்*

### I. செயல்பாடுகளின் அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துதல்

#### 1. மைய வங்கி – பாடம் 10 ஐப் பார்க்கவும்

#### 2. வணிக வங்கிகள்

*இவ்வகை வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன. பிற சில வங்கிகளை ஒப்பிடும் போது இவ்வகை வங்கிகள் சிறிய தொகையிலும், பெரும்பாலும் குறுகிய மற்றும் நடுத்தரக் கடன்களையும் வழங்குகின்றன. பணத்தை அனுப்புதல், விலை மதிப்புள்ள பொருட்களுக்குப் பெட்டக வசதி அளித்தல், காசோலைகளுக்குப் பணம் வழங்குதல், கடன் கடிதங்களை வெளியிடுதல் (Letter of Credit) போன்ற இதர சேவைகளையும் அவைகள் வழங்குகின்றன. ஒரு தலைமை அலுவலகத்தை மையமாகக் கொண்டு, நாடு முழுவதும் கிளை அலுவலகங்களை நிறுவிச் செயல்படுகின்றனர். மேலும் அவர்கள் வணிகர்களுக்கு உத்தரவாதங்களை வழங்குகிறார்கள். ஒரு தொழிலதிபர் அல்லது தொழிற்சாலை நிறுவனர் ஒரு இயந்திரத்தைக் கடனுக்கு வாங்கும்போது அல்லது ஒரு பெரிய ஒப்பந்தத்திற்கு விண்ணப்பிக்கும் போது வங்கியானது வாடிக்கையாளர் பணம் செலுத்த இயலாத நிலைவந்தால் வங்கியானது அப்பணத்தைச் செலுத்திவிடுவதாக உத்தரவாதம் அளிக்கிறது.*

*எடுத்துக்காட்டுகள்: I. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா II. கரூர் வைஸ்யா வங்கி iii. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.*

### 3. வளர்ச்சி வங்கிகள்

தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது, அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும். மேலும் அவை தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இலாபம் ஈட்டுதல் வளர்ச்சி வங்கிகளின் நோக்கம் அல்ல. அதனுடைய குறிக்கோள் நாட்டை முன்னேற்றுவதும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதும் ஆகும். நடுத்தர மற்றும் நீண்ட கால நிதி உதவிகளை ஐந்து முதல் இருபது ஆண்டுகள் வரை வழங்குகிறது. வளர்ச்சி வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதில்லை. அவைகள் தொழிற்சாலைகளின் பங்கு பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தொழில் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனை சேவைகளை இவைகள் வழங்குகின்றன. இந்தியத் தொழில் வளர்ச்சி (IDBI) வங்கியானது 1964 இல் தலைமை வளர்ச்சி வங்கியாக நிறுவப்பட்டது. 2004 இல் பொதுத்துறை வணிக வங்கியாக மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இது தொழில் வளர்ச்சி வங்கி பணிகள் மற்றும் வணிக வங்கி பணிகள் ஆகிய இரண்டு செயல்பாடுகளையும் செய்கிறது. 2008 ஆம் ஆண்டில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி லிமிடெட் (IDBI Limited) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வேளாண்மை தொழிற்துறை வளர்ச்சிக்காக ஒரு வளர்ச்சி வங்கி நிறுவப்பட்டால் அது விவசாய வளர்ச்சி வங்கி என அழைக்கப்படும். வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) அவ்வகையான ஒரு வங்கி.

எடுத்துக்காட்டுகள்:

I. இந்தியத் தொழில் நிதிக் கழகம் – IFCI

II. இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி – SIDBI

III. முத்ரா வங்கி (குறுந்தொழில் வளர்ச்சிக்காக)

### 4. கூட்டுறவு வங்கிகள்

இந்தியாவில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள், சிறிய வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சொந்தமானது. இந்தியக் கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களை அல்லது கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்தியாவில் கிராமப்புறக் கூட்டுறவு வங்கி அமைப்பானது குறுகிய காலக் கடனுக்கான மூன்று அடுக்கு கட்டமைப்பையும் மற்றும் நீண்ட காலக் கடன்களுக்கான இரண்டு அடுக்கு கட்டமைப்பையும் கொண்டுள்ளது (அட்டவணையினைப் பார்க்கவும்). வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) இந்த இரண்டு கடன் கட்டமைப்புக்கும் தலைமை அமைப்பாகச் செயல்படுகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 கீழ் பதிவு செய்யப்படுகின்றன. அவை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் மாநில அரசு ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் செயலாற்றுகின்றன. உறுப்பினர்களுக்கான சேவையைக் கிராமப்புற மற்றும் விவசாய வளர்ச்சிக்காக வழங்குவது கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். இலாபம் ஈட்டுவது அல்ல. பெரிய நகரங்களைத் தவிர்த்துக் கிராமங்களிலும் சிறிய நகரங்கங்களிலும் கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்படுகின்றன. வணிக வங்கிகளுடன் ஒப்பிடுகையில், கூட்டுறவு வங்கிகள் தமது சட்டதிட்டத்திற்கேற்ப குறைந்த பட்ச சேவைகளை வழங்குகின்றன. வணிக வங்கிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் கூட்டுறவு வங்கிகள் வழங்கச் சட்டம் அனுமதிப்பதில்லை. 1963 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (NCDC) கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியளிப்பதற்காக மாநில அரசாங்கங்களுக்கு நிதிகள் மற்றும் மானியங்களை வழங்குகிறது. நீர்ப்பாசனச் சேமிப்பு, நீர்ப்பாசன முறை, வேளாண்மைக் காப்பீடு, கிராமப்புறத் துப்புரவு போன்ற திட்டங்களில் NCDC கவனம் செலுத்துகிறது.

எடுத்துக்காட்டுகள்

I. தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட். (NAFED) 1958 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது பல மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டது.

II. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி – தலைமை அலுவலகம், சென்னை.

III. மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்.

IV. வத்தலகுண்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட், திண்டுக்கல் மாவட்டம்.

### 5. வெளிநாட்டு வங்கிகள்

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வங்கிகள் பெரிய நகரங்களில் மற்றும் துறைமுக

## நில அடமான வங்கிகள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் பற்றி

1. 1920 ல், முதல் நில அடமான வங்கி (LDB) இந்தியாவில் நிறுவப்பட்டது. நில அடமானச் சட்டம் 1930 இல் நிறைவேற்றப்பட்டது. இவைகள் நீண்டகாலக் கடன்களை விவசாயிகளுக்கு வழங்கின. 1960 ஆம் ஆண்டுக்குப் பிறகு நில அடமான வங்கிகள் கிணறு தோண்டுதல், பம்பு செட் நிறுவுதல் போன்ற உற்பத்தித் திட்டங்களுக்கு நிதியளித்தன. அதன் பின்னர் அவைகள் நில மேம்பாட்டு வங்கிகள் என அழைக்கப்பட்டன. நில வளர்ச்சி வங்கிகளின் பரந்த செயல்பாடுகளின் அடிப்படையில் அவைகள் இப்போது SCARDBகள் என்று அழைக்கப்படுகின்றன. இன்றைய தினம் இந்தியாவில், இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் நில வளர்ச்சி வங்கிகள் இல்லை.

2. 1961 ஆம் ஆண்டு தமிழக அரசால் முதல் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் இயற்றப்பட்டது. 1983 இல், அது ரத்து செய்யப்பட்டு, ஒரு புதிய கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் இந்தச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

3. வங்கியின் செயல்பாடு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு நீட்டிக்கப்பட்டால், அவைகள் பல மாநிலக் கூட்டுறவு வங்கி சங்கங்கள் சட்டம், 2002 இன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

4. இந்தியாவில் தொடக்க வேளாண்மை கடன் சங்கங்கள் (92.789 – 88ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்) வங்கிகள் என அழைக்கப்பட முடியாது. அவைகள், வங்கிகள் என்று இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த சங்கங்கள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றால் இந்திய ரிசர்வ் வங்கியின் வைப்பு காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்தின் மூலம் வைப்புக் காப்பீடு கிடைக்காது.

நகரங்களில் தங்கள் அலுவலகங்களை அமைக்கின்றன. பெரும்பாலும் அவை பன்னாட்டு நிறுவனங்கள், ஊழியர்கள் மற்றும் பிற வணிக நிறுவனங்களின் நலன்களுக்குச் சேவை செய்கின்றன. இந்திய வங்கிகளை விட அவர்களின் இலாப விகிதம் அதிகமாக உள்ளது. 2017 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் 42 வெளிநாட்டு வங்கிகள் இருக்கின்றன. இவையனைத்தும் அட்டவணையிடப்பட்ட வங்கிகள் ஆகும். வெளிநாட்டு வங்கிகள் தங்கள் சொந்த நாட்டு வங்கியின் விதிமுறைகளையும், இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்:

I. பாங்க் ஆஃப் அமெரிக்கா – அமெரிக்கா

ii. பார்க்லேஸ் பாங்க் – இங்கிலாந்து

III. டியுட்செ பாங்க் – மேற்கு ஜெர்மனி

### 6. வட்டாரக் கிராமிய வங்கிகள்

வட்டாரக் கிராமிய வங்கிச் சட்டம் 1976 இன் படி மத்திய அரசு, மாநில அரசு மற்றும் ஒரு பங்களிப்பு வங்கி ஆகியோர் கூட்டாக இணைந்து இது அமைக்கப்படுகிறது. 50:15:35 என்ற விகிதத்தில் இவர்கள் பங்கு மூலதனம் வழங்குகின்றனர். இவ்வங்கி கிராமப்புறங்களில் குறைந்த செலவிலான நிறுவனங்களாக நிறுவப்படுகின்றது. இவ்வங்கியின் நோக்கம் கூட்டுறவுச் சங்கங்களோடு சேர்ந்து கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும். அவைகள் கிராமப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி, கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோருக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது. கிராமியக் கடன் வழங்குபவர்களைச் சார்ந்து பொதுமக்கள் வாழும் நிலையைத் தடுக்க இது முயற்சி செய்கிறது. 31.03.2016 அன்று, இந்தியாவில் 56 வட்டாரக் கிராமிய வங்கிகளும் 14,494 கிளைகளும் இருந்தன. இவ்வங்கிகள் வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டுக்கான தேசிய வங்கியால் (NABARD) ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள்:

i. பாண்டியன் கிராம வங்கி, திருமங்கலம், மதுரை, தமிழ்நாடு

ii. பல்லவன் கிராம வங்கி, சேலம், தமிழ்நாடு

### 7. சிறப்பு வங்கிகள்

அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காகச் சில



XI_Tamil_commerce 1-15_001-147.indd 97 2/17/2021 3:11:15 PM

வங்கிகள் உருவாக்கப்படுகின்றன. இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கிச் சட்டம் 1981 இன் படி இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி உருவாக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கம் இந்திய வணிகர்களின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதாகும். ஏற்றுமதி-இறக்குமதி வங்கி தொழில்நுட்ப இறக்குமதி, மேம்படுத்தப்பட்ட பொருள்கள் ஏற்றுமதி, முன் ஏற்றுமதி கடன் மற்றும் பிந்தைய ஏற்றுமதி கடன் மற்றும் வெளிநாட்டு முதலீடு ஆகியவைகளுக்கு நிதி உதவிகளை வழங்குகிறது. தேசிய வீட்டுவசதி வங்கிச் சட்டம் 1987 இன்படி தேசிய வீட்டு வசதி வங்கி தோற்றுவிக்கப்பட்டது. இது இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு முழுமையான துணை நிறுவனமாகும். இந்தியாவில் உள்ளூர் மற்றும் மண்டல அளவிலான வீட்டு வசதி நிதி நிறுவனங்களை மேம்படுத்துவதே தேசிய வீட்டுவசதி வங்கியின் நோக்கம் ஆகும்.

எடுத்துக்காட்டு:

i. இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கி (EXIM வங்கி)

ii. தேசிய வீட்டு வசதி வங்கி (NHB)

## 8. உள்ளூர் பகுதி வங்கிகள்

உள்ளூர் பகுதி வங்கி (LAB) திட்டம் ஆகஸ்ட் 1996 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மற்றும் சிறு நகர்ப்புறப் பகுதிகளில் சிறிய தனியார் வங்கிகளாக உள்ளூர் பகுதி வங்கிகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வங்கியும் அருகில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களை இணைத்துச் சேவை செய்கின்றது. கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதும் (வைப்புகளை ஏற்று கொள்வதும்) அதே பகுதியில் முதலீடு செய்வதும் அவற்றின் முக்கிய நோக்கங்கள் ஆகும். முன்னுரிமை பிரிவுகளுக்கான கடன் இலக்கு, நலிவடைந்தோருக்கான கடன் இலக்கு ஆகியவைகளை உள்ளூர் பகுதி வங்கிகள் பூர்த்தி செய்ய வேண்டும். உள்ளூர் பகுதி வங்கிகள் அமைப்பதற்காக 227 விண்ணப்பங்களை இந்திய ரிசர்வ் வங்கி பெற்றது. 10 விண்ணப்பங்கள் ஒப்புதலுக்காகப் பரிசீலிக்கப்பட்டு 6க்கு வங்கி விதிமுறை சட்டம், 1949 பிரிவு 22 கீழ் உரிமம் வழங்கப்பட்டது. இப்போது மூன்று உள்ளூர் பகுதி வங்கிகள் மட்டுமே செயல்படுகின்றன.

அவைகள்

i. கரையோர உள்ளூர் பகுதி வங்கி, விஜயவாடா, ஆந்திரப் பிரதேசம்.

ii. கிருஷ்ணா பீமா ஸ்ம்ருதி உள்ளூர் பகுதி வங்கி, மஹபூப்நகர், ஆந்திரப் பிரதேசம் மற்றும்

iii. சுபத்ரா உள்ளூர் வங்கி லிமிடெட், கோல்பூர், மகாராஷ்டிரா.

அடிப்படையில் உள்ளூர் பகுதி வங்கி அமைப்பில் மாதிரியில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த வங்கிகளின் செயல்பாடுகளில் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. 20 ஆண்டுகள் கழிந்தும் (1996–2017) உள்ளூர் பகுதி வங்கிகள் கிராமப்புற வளர்ச்சியில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. எனவே உள்ளூர் பகுதி வங்கிகள் தொடங்கிட உரிமம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

## 9. சிறிய நிதி வங்கிகள்

சிறிய நிதி வங்கிகள் (SFBs) வங்கிகள் இல்லாத பகுதிகளிலும் வங்கி சேவை குறைவாக உள்ள பகுதிகளிலும் நிதி உதவி வழங்க ஏற்படுத்தப்பட்ட தனியார் வங்கிகள் ஆகும். அவைகளின் நோக்கங்கள்,

அ. கிராமப்புறச் சேமிப்புக்களைத் திரட்டுதல் (வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்) மற்றும்

ஆ. i. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு

ii. மிகச் சிறிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்கு மற்றும்

iii. மற்ற அமைப்பு சாரா பிரிவு நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்.

செப்டம்பர் 2015 இல், இந்திய ரிசர்வ் வங்கி ஏற்கனவே குறுநிதி செயல்பாட்டில் இயங்கி வந்த வங்கி அல்லாத எட்டு நிதி நிறுவனங்களை (NBFCs) சிறிய நிதி வங்கிகளாக மாற்றம் செய்தும் மேலும் இரண்டிற்கு மட்டும் தற்காலிக உரிமங்களை வழங்கியது. சிறிய நிதி வங்கிகள் மிகக் குறைந்த செலவினாலான கட்டமைப்பைக் கொண்டது. 1949 ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 22 ன் கீழ் அவை உரிமம் பெறுகின்றன.

எடுத்துக்காட்டுகள்:

i. ESAF SFB, திருவனந்தபுரம், கேரளா.

ii. Ujjivan SFB Limited, பெங்களூரு, கர்நாடகா, (10,000 ஊழியர்கள்)

iii. Fincare SFB அகமதாபாத், குஜராத், (25 கிளைகளைப் பல மாநிலங்களில் கொண்டுள்ளது).

## 10. செலுத்தல் வங்கி

சிறு தொழில்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மற்றும் புலம்பெயர்ந்த



XI_Tamil_commerce 1-15_001-147.indd 98 2/17/2021 3:11:15 PM

### நாட்டுப்புற வங்கியாளர்கள், பணம் கடன் வழங்குபவர்கள், சீட்டு நிதிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்

1. மனுஸ்மிருட்டி, பண்டைய சட்ட நூல் இரண்டாம் நூற்றாண்டில் (BCE) பல்வேறு வட்டிவிகிதம் இருந்ததாக வெளிப்படுத்துகிறது. சில சமூக அடிப்படையிலான வணிகர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தனர். இன்று எந்தவொரு தனிநபரும், நிறுவனமும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் கடன் கொடுக்கின்றனர். அவர்கள் அனைவரும் நாட்டுப்புற வங்கியாளர் எனவும், பணம் கடன் வழங்குபவர் எனவும் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் உண்மையில் வங்கியாளர்கள் அல்ல. 2002 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட ஆய்வுக் குழுவின் அறிக்கை கூறுவதாவது, வீட்டுத் தேவைகளுக்காக விவசாயிகள் பெறும் கடன்களில் அகில இந்திய அளவில் 25.7 சதவீதமும், தமிழ்நாட்டில் 53.4 சதவீதமும் சுதேச வங்கியாளர்கள் மற்றும் நாட்டுப்புறக் கடன் வழங்குவோரிடமிருந்து பெறப்படுகிறது. இந்த வட்டி ஈட்டுவோர் நீக்கமற நிறைந்திருப்பதற்கான காரணங்கள்: அ. பிணையத்தின் பேரிலும் பிணையம் இல்லாத நிலையிலும் எந்த நேரத்திலும் வீட்டு வாசலுக்கு வந்து கடன் வழங்குகிறார்கள். ஆ. அவர்கள் தேவையான அளவு பணத்தைத் தேவையான நேரத்தில் வழங்குகிறார்கள். இ. மிகவும் குறைவான ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளார்கள். ஈ. குறைந்த வருமானம் கொண்ட விவசாயிகளுக்கு அல்லது தொழிலாளிகளுக்கு கடன்களை வழங்க வங்கிகளுக்கு விருப்பம் இல்லை.

   கிராமப்புற கடன் வழங்குநர்கள் நாள் ஒன்றுக்கு அதிகபட்ச அளவாக 20 சதவிகிதம் வட்டியை விதிக்கிறார்கள். (ஆண்டு ஒன்றுக்கு 1216 சதவீதம்). இது கிராமிய மொழியில் 'கந்து வட்டி' அல்லது 'விமான வட்டி' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் மற்றும் பிற நாடுகளிலும் இத்தகைய வட்டி ஈட்டுவோர்கள் உள்ளனர். இந்திய அரசின் 1918 ஆம் ஆண்டின் நியாயமற்ற கடன்களின் சட்டம் மற்றும் தமிழக அரசின் 2003 ஆம் ஆண்டின் அதிகபட்ச வட்டியைத் தடைசெய்யும் சட்டம் ஆகியவை இத்தகைய வட்டி விகிதங்களைத் தடை செய்கின்றன.

2. தமிழ்நாடு பணம் கடன் வழங்குபவர்கள் சட்டம் 1975, கடன் வழங்கும் தொழில் செய்ய வட்டாட்சியர் உரிமம் வழங்கிட அனுமதி அளித்துள்ளது. பான்புரோக்கர் உரிமம் பெறத் தமிழ்நாடு பான்புரோக்கர் சட்டம் 1943 அனுமதி அளித்துள்ளது.

3. சீட்டு நிதிகள் சட்டம் 1982, இந்தியா முழுமைக்கும் சீட்டு நிதிகளுக்கு (ஒரு வகை சேமிப்பு திட்டம்) பொருந்தும். சீட்டு நிதி அமைப்புகள் மாநில அரசுகளால் ஒழுங்குபடுத்தப்படுகிது, இந்திய ரிசர்வ் வங்கியால் அல்ல.

4. நிதி நிறுவனங்கள் உறுப்பினர்களிடையே சிக்கன மற்றும் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கின்றன. அவை நிறுமசட்டம் 2013 இன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. சில விதிமுறைகளை நிறைவேற்றும் நிதி நிறுவனங்கள் மட்டுமே இந்திய ரிசர்வ் வங்கியால் பதிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. மற்ற நிதி நிறுவனங்கள் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லை.

   மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை இந்திய ரிசர்வ் வங்கியால் வங்கிகளாக அங்கீகரிக்கப்படவில்லை. அவை இந்திய ரிசர்வ் வங்கியின் கடுமையான கட்டுப்பாட்டின் கீழும் வரவில்லை.

தொழிலாளர்கள் ஆகியோருக்குப் பணம் செலுத்தல் மற்றும் நிதி சேவைகள் பரவலாக்கப்படுவதை விரிவுபடுத்துவதற்காகச் செலுத்தல் வங்கிகள் அமைக்கப்பட்டன. தொடக்கத்தில் இருந்தே இந்த வங்கிகள் முழுமையாக ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்தன. அவைகள் வீட்டில் இருந்தபடியே ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதற்கு, சிறிய கட்டண அடிப்படையில் வங்கி சேவைகளை வழங்குகின்றன. அவைகள் தானியங்கி இயந்திர அட்டை / பற்று அட்டைகள், இணைய வங்கி மற்றும் மூன்றாம் நபர் நிதி பரிமாற்றங்களை வழங்குகிறார்கள். அவைகள் கடன் கொடுக்கவும், கடன் அட்டைகளை வழங்கவும் முடியாது. ஆகஸ்ட் 2015 ல், இந்திய ரிசர்வ் வங்கி பணம் செலுத்தும் வங்கிகளுக்கு 'கோட்பாட்டுடன் கூடிய உரிமங்களை' வழங்கியது.

எடுத்துக்காட்டுகள்:

I. ஏர்டெல் செலுத்தல் வங்கி லிமிடெட்

II. பே டிஎம் செலுத்தல் வங்கி லிமிடெட் மற்றும் – பே டிஎம் செயலி கைபேசி மூலம் பண பரிவர்த்தனை செய்ய உதவுகிறது.

III. இந்திய அஞ்சல் செலுத்தல் வங்கி லிமிடெட் – IPPBs (பொதுத்துறை வங்கி).



XI_Tamil_commerce 1-15_001-147.indd 99 2/17/2021 3:11:15 PM

## 11. பன்முகத்தன்மை கொண்ட மேம்பாட்டு வங்கிகள்

பன்முகத்தன்மை கொண்ட மேம்பாட்டு வங்கி பல நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உறுப்பினர் நாடுகளாக வளர்ந்த நன்கொடை நாடுகள் மற்றும் கடன் பெறும் நாடுகள் உள்ளன. மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கி (IBRD உலக வங்கி), ஆசிய வளர்ச்சி வங்கி, ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி மற்றும் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஆகியவை பல்வகை வளர்ச்சி வங்கிகளில் சில.

## II. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட தகுதி அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துதல்

### அட்டவணையிடப்பட்ட வங்கிகள் மற்றும் அட்டவணையிடப்படாத வங்கிகள்

இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டம், 1934 இரண்டாம் அட்டவணையில் சேர்க்கப்பட்ட விதிமுறைகளை முழுமையாகப் பூர்த்தி செய்த அனைத்து வங்கிகளும் அட்டவணையிடப்பட்ட வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்திய ரிசர்வ் வங்கி விதிகளின்படி, இத்தகைய வங்கிகள் சலுகையில் கடன் வசதி மற்றும் குறைந்த செலவில் பணம் அனுப்புதல் போன்ற வசதிகளைப் பெறுகின்றன.

இந்தியாவில் அட்டவணைப் படுத்தப்படாத வணிக வங்கி (தனியார் துறை, பொதுத்துறை மற்றும் வெளிநாட்டு வங்கிகள்) இல்லை. ஐந்து நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மூன்று உள்ளூர் பகுதி வங்கிகள், ஆகியவை அட்டவணையிடப்படாத வங்கிகளாகச் செயல்படுகின்றன. 1949 ஆம் ஆண்டு வங்கிக் கட்டுப்பாட்டு சட்டம், 22 ஆம் பிரிவின் கீழ் சிறிய நிதி வங்கிகள் மற்றும் செலுத்தல் வங்கிகள் உரிமம் தரப்படவில்லை.

## III. உரிமையாளர் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துதல்

எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 சதவிகிதத்திற்கும் குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால் அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் (மொத்தம் 21) என்று அழைக்கப்படுகின்றன. அனைத்துத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் (19 வங்கிகள், 2017 ல்), பாரத ஸ்டேட் வங்கி (SBI) மற்றும் இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) ஆகியன பொதுத்துறை வணிக வங்கிகள் ஆகும். அவை அனைத்தும் கூட்டு பங்கு நிறும வகை வங்கிகள் ஆகும். பொதுக் கூட்டுரு வகை வங்கிகளும் உள்ளன. ஒவ்வொரு பொதுக் கூட்டுரு வங்கியும் பாராளுமன்றத்தின் தனிச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமானதாக உள்ளன.

எடுத்துக்காட்டுகள்: IFCI, SIDBI, EXIM வங்கி, முதலியன.

தனி நபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் உறுப்பினர்களான பொதுமக்களுக்குச் சொந்தமானவை.

1969 இல், 14 தனியார் வங்கிகள் பெரிய நகரங்களிலும், சிறிய நகரங்களிலும் குவிந்திருந்தன. அவைகளுடைய குறிக்கோள் அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதே. இந்த வங்கிகளின் நிதிகளை வழிமுறைப்படுத்திடவும் தேசிய முன்னுரிமைத் தொழிலான வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்காகவும் அவைகளை அரசு தேசியமயமாக்கியது. தனியார் உரிமையாளர்களின் பங்கு மூலதனத்தை அரசு வழங்கியதுடன்,

### இந்தியாவில் பெரிய அளவிலான வங்கிகளின் தேவை

சீனாவின் தொழிற்துறை மற்றும் வர்த்தக வங்கியானது, உலகின் முதல் முதலிடத்தில் உள்ள பெரிய வங்கியாகும், இது 3,893.23 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்பைக் கொண்டுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இந்தியாவின் மிகப் பெரிய வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கி 100 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்புடன் உலகளவில் 717 ஆம் வரிசையில் உள்ளது. பாரத ஸ்டேட் வங்கி தனது ஐந்து துணை வங்கிகளை இணைத்த மற்றும் பாரதீய மஹிலா வங்கியுடன் 2017 ஏப்ரல் 1 முதல் இணைக்கப்பட்ட பின்பு, இதன் சொத்து மதிப்பு 573 பில்லியன் டாலர் (₹37 டிரில்லியன்) ஆக உயர்ந்தது. இதனால் முதல் 50 வரிசைக்குள் இவ்வங்கி வர வாய்ப்புள்ளது. (பாரத ஸ்டேட் வங்கி இதற்கு முன் 272 வது தர வரிசையிலிருந்தது). ஆஸ்திரேலியாவின் தேசிய வங்கி 578.46 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்புடன் தரவரிசை 49 இல் உள்ளது. உலகில் பெரிய அளவிலான வங்கிகளுடன் போட்டியிட இந்தியாவில் பெரிய அளவிலான வங்கிகள் தேவை. எனவே பல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் இணைப்பு பரிசீலனையில் உள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 100 2/17/2021 3:11:15 PM

அவைகளை அரசு வங்கிகளாக மாற்றி எடுத்துக் கொண்டது. இது வங்கிகளின் தேசியமயமாக்கம் எனப்படுகிறது. 1980 ஆம் ஆண்டில் 6 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. நியூ பாங் ஆப் இந்தியா என்னும் தேசிய வங்கி 1980 இல் பஞ்சா நேஷனல் வங்கியுடன் இணைக்கப்பட்டது, இன்று 19 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மட்டுமே (2017) உள்ளன.

எடுத்துக்காட்டுகள்:

அ. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்: இந்தியன் வங்கி (IB), இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB), ஓரியண்டல் பாங் ஆஃ காமர்ஸ் (OBC).

ஆ. பொதுத்துறை வங்கிகள்: பாரத ஸ்டேட் வங்கி (SBI), இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி லிமிடெட் (IDBI) மற்றும் அனைத்துத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும்.

இ. தனியார் துறை வங்கிகள்: லட்சுமி விலாஸ் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி, கோடக் மஹிந்திரா வங்கி.

**குறிப்பு:** பாரதீய மஹிலா வங்கி 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி தனியாகப் மகளிருக்கென வங்கி சேவை செய்யத் தொடங்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்டது.

### வணிக வங்கி தொடர்பாளர்கள்

வங்கி கிளை / தானியங்கி இயந்திரம் தவிர வேறு இடங்களில் குறைந்தபட்சச் செலவில் வங்கியியல் சேவைகளை வழங்கிட, வங்கிகள் சில்லறை முகவர்களைப் பணியமர்த்துகிறார்கள். அவர்கள் இந்திய ரிசர்வ் வங்கியால் தனி வங்கிகளாக அங்கீகரிக்கப்படுவது இல்லை. வங்கி தொடர்பாளர்கள் மாதிரி முறையானது, 2006 இல் வங்கி மூலம் சேவைகளை ஒவ்வொரு இல்லந்தோறும் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றோர் வங்கி தொடர்பாளார்களாக விண்ணப்பிக்க முடியும். வங்கி தொடர்பாளார்களை ஈடுபடுத்தும் வங்கிகள் அவர்களின் செயல்பாட்டிற்குத் தாங்களே பொறுப்பேற்க வேண்டும். ஒரு நாட்டிலுள்ள ஒரு வங்கி, வெளிநாட்டில் உள்ள மற்றொரு வங்கியை வங்கித் தொடர்பாளராக (நியமன வங்கியாக) செயல்படுத்த முடியும்.

### வங்கி அமைப்புகள்

1. பல வகையான வங்கி அமைப்பு முறைகள் மேலே உள்ள வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் இணையக்கூடிய வகையில் உள்ளன. அவைகள்: அலகு வங்கி, கிளை வங்கி, சில்லறை வங்கி, வணிக வங்கி, உலகளாவிய வங்கி, உறவுமுறை வங்கி, மொத்தவிற்பனை வங்கி, தூய்மை வங்கி, கலப்பு வங்கி, தொடர் வங்கி, குழு வங்கி, பசுமை வங்கி மற்றும் பல. இந்த வங்கி அமைப்பு முறைகள் அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கியால் தனியாக அங்கீகரிக்கப்படவில்லை.

   அமைப்பின் அடிப்படையில் வங்கியானது அலகு வங்கி அல்லது கிளை வங்கியாக இருக்கலாம். கடன் நடைமுறைகளின் அடிப்படையில், அது தூய வங்கி அல்லது கலப்பு வங்கியாக இருக்கலாம். தங்கள் தயாரிப்புகளின் அடிப்படையில் அது சில்லறை வங்கி அல்லது மொத்த வங்கியாக இருக்கலாம். நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அது குறுகிய வங்கி அல்லது உலகளாவிய வங்கியாக இருக்கலாம். உரிமையாளர்கள் பார்வையின் அடிப்படையில் தொடர் வங்கி அல்லது குழு வங்கியாக இருக்கலாம். சில விசேசமான செயல்களின் அடிப்படையில் முதலீட்டு வங்கி, இஸ்லாமிய வங்கி போன்ற வகைகளும் உள்ளன. நவீன காலத்தில் மெய்நிகர் வங்கி அல்லது இணைய வங்கி மற்றும் மொபைல் வங்கி ஆகியவை மிகவும் பிரபலமாக உள்ளன.

2. இஸ்லாமிய வங்கியியல் என்பது இஸ்லாமியக் கோட்பாடுகள் அல்லது சரியத் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை அவைகளுக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு.

   1. வட்டி வழங்குவதும் இல்லை. பெறுவதும் இல்லை.
   2. கடன் பெறும் வியாபார நிறுவனங்கள் இலாபத்தில் ஒரு பகுதியை வங்கிக்கு அளிக்கின்றன. வங்கி தனது இலாபத்தில் ஒரு பகுதியை முதலீட்டாளர்களுக்கும், வைப்புகணக்கு வைத்திருப்பவர்களுக்கும் வழங்குகிறது. பாகிஸ்தான், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட், குவைத் போன்ற நாடுகளில் இந்த வங்கியியல் நடைமுறை உள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 101 2/17/2021 3:11:15 PM

**கலைச்சொற்கள்**

தேசியமயமாக்கல்

வங்கி தொடர்பாளர்கள்

நாட்டுப்புற வங்கியர்

பன்முகத்தன்மை

**சுய சிந்தனைக்கு**

1. பல்வேறு வங்கிகளின் நன்மைகளைப் பற்றிய விவாதம் செய்தல்
2. வங்கியைப் பார்வையிடல் – நீங்கள் பார்வையிட்ட வங்கியைப் பற்றிய ஒரு கட்டுரை எழுதுதல்
3. கடன் தேவையின் போது நீங்கள் வங்கியிலிருந்து எவ்வாறு கடன் பெறுவீர்கள்?

**மேலும் அறிவதற்கு**

1. உங்கள் பகுதியில் உள்ள வணிக வங்கிகள், தொழில்துறை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் பெயர்களைக் குறிப்பிடுக ................................
2. பல்வேறு வகையான வங்கிகளைப் பற்றிய படங்கள் சேகரித்தல்

**சூழ்நிலை ஆய்வு**

1. நீங்கள் வேளாண்மை வங்கியின் மேலாளர், ஒரு விவசாயி உங்கள் வங்கியிலிருந்து ஒரு டிராக்டர் மற்றும் பிற விவசாய உபகரணங்கள் வாங்குவதற்காகக் கடன் வாங்க அணுகுகிறார். கடன் பெற்ற பின் இயற்கைப் பேரழிவுகள் காரணமாக, விவசாயி கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வேறு வழி இல்லை. விவசாயிக்குக் கொடுத்த கடனை எவ்வாறு நீங்கள் திரும்பப் பெறுவீர்கள்?

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?**

(அ) ICICI (ஆ) HSBC
(இ) SIDBI (ஈ) IDBI

**2. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது**

(அ) கிராம சேமிப்பு
(ஆ) வணிகச் சேமிப்பு
(இ) தொழிற்துறை வளர்ச்சி
(ஈ) விவசாய வளர்ச்சி

**3. வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு**

(அ) 1978 (ஆ) 1979
(இ) 1980 (ஈ) 1981

5HDUY3

**விடைகள்**

1 (ஆ) 2 (அ) 3 (இ)

### II. குறுவிடை வினாக்கள்.

1. வணிக வங்கிகளின் பொருள் தருக.
2. தொழிற்துறை வங்கிகள் பற்றி நீவீர் அறிவது யாது?
3. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. உள்ளூர் பகுதி வங்கிகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக. இரண்டு உதாரணங்களைத் தருக.
2. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்தி உதாரணம் தருக. (ஏதேனும் 5)
2. உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.

### குறிப்பு நூல்கள்.


1. நடராஜன். எஸ் மற்றும் பரமேஸ்வரன். ஆர்., 2004, "இந்திய வங்கி", எஸ். சந்த் & கம்பெனி லிமிடெட் பப்ளிகேஷன்ஸ், புதுத் தில்லி.
2. தர்மராஜ். ஈ. 2005, "பேங்கிங் தியரி, லா அண்ட் ப்ராக்டீஸ்", ஸ்கை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. அகர்வால் ஓ. பி, 2012, "நவீன வங்கி இந்தியாவில்", 2 வது பதிப்பு, ஹிமாலய பப்ளிஷிங் ஹவுஸ், மும்பை.
4. முரளிதரன் டி, 2013, "நவீன வங்கி", 3 வது பதிப்பு, பி.ஐ.ஐ கற்றல் தனியார் லிமிடெட், தில்லி –92.

## அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம்
**12**

# வணிக வங்கிகளின் பணிகள்

5HHQZQ

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. வணிக வங்கிகளின் முதன்மை மற்றும் இரண்டாம்நிலை செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்
2. பல்வேறுபட்ட வங்கிச் சேவைகளை விவரித்துக் கூற முடியும்
3. பற்று, கடன் மற்றும் விரைவூக்க அட்டைகளின் பயன்பாடுகளைக் கூற முடியும்.

## வணிக வங்கிகளின் பணிகள்

வணிக வங்கிகள் பல மதிப்புமிக்க சேவைகளை வழங்குகிறது. வணிக வங்கிகளின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்க்கண்ட அட்டவணையின் உதவியுடன் விளக்கப்பட்டுள்ளது.

### 12.01 முதன்மைப் பணிகள்

ஒரு வங்கியின் முதன்மைப் பணிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

i. வைப்புகளை ஏற்றல்

ii. கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்.

iii. கடனை உருவாக்குதல்

### I. வைப்புகளை ஏற்றல்

வணிக வங்கிகள் வழங்கும் அடிப்படை வைப்பு கணக்குகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. இன்றைய தினம் வங்கிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களைக் கவர்ந்து ஈர்ப்பதற்காகக் கூடுதல் வசதிகளை வைப்புக் கணக்குகளுக்கு வழங்குகின்றன. பெரிய அளவிலான வைப்பு கணக்குகளை அ. கேட்பு வைப்புகள் மற்றும் ஆ. கால வைப்புகளாக வகைப்படுத்தலாம்.

### அ. கேட்பு வைப்புகள்

இந்த வைப்புகள் எந்த நாளிலும் கேட்கும் போது திருப்பி அளிக்கப்பட வேண்டும். இது 1. சேமிப்பு வைப்புகள் மற்றும் 2. நடப்பு வைப்புகள் உள்ளடக்கியது.

### 1. சேமிப்பு வைப்புகள்

பொதுமக்கள் இந்தக் கணக்கில் தங்கள் சேமிப்புகளை வைப்புகள் செய்யலாம். ஒரு தனிநபரின் பெயரிலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் பெயரில் இந்தக் கணக்கினைத் தொடங்கலாம். பிரிவு 25–ன்படி நிறுமங்களின் பெயர்களிலும் சேமிப்பு கணக்குகளைத் தொடங்கலாம். வணிக நிறுவனங்கள் சேமிப்பு கணக்குகளைத் தொடங்க அனுமதி கிடையாது. இந்த வைப்புக்குரிய வட்டி விகிதம் நிலையான வைப்புக்குரிய வட்டி விகிதத்தைவிட குறைவாகவே இருக்கும். வங்கியில் உள்ள தொகையையும் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கையையும் கணக்கீட்டு அதன் அடிப்படையில் வட்டி வழங்கப்படுகிறது. வங்கியானது காசோலை புத்தகம், ATM (தானியங்கி பணம் வழங்கும்) அட்டை போன்ற வசதிகளை வழங்குகிறது. ஒரு வங்கியின் தானியங்கி பணம் வழங்கும் அட்டையினை வைத்து மற்ற வங்கியின் ATM களில் இருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பணம் எடுக்க முடியும். இந்த வைப்பு கணக்கில் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில் தண்டனை வட்டி விதிக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் (20 அல்லது 60 தாள்கள் கொண்ட) காசோலைப் புத்தகங்கள் குறிப்பிட்ட கட்டணத்துடன் கிடைக்கும். பதிலாள் நியமனம் பதிவு செய்ய முடியும். சம்பளக் கணக்கும் ஒரு வகை யான சேமிப்புக் கணக்காகும், மாதாந்திர ஊதியம் பெறும் சம்பளதாரர்களுக்கு பல வங்கிகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகை ஏதும் இல்லை என

அனுமதிக்கப்பட்டுள்ளது. சில வங்கிகள் மேல்வரை பற்றுக்கான வசதிகளை வழங்குகிறது. நீண்ட காலத்திற்குச் செயலில் இல்லாத சேமிப்புக் கணக்கு செயல் இழந்த கணக்காக மாற்றப்படும்.

### 2. நடப்பு வைப்புகள்

நடப்பு வைப்பு கணக்கு வணிக நிறுவனங்களுக்கு ஏற்றது. தனிநபர்கள் கூட இந்தக் கணக்கைத் தொடங்க முடியும். இந்தக் கணக்கில் குறிப்பிட்ட தொகை குறைந்தபட்ச இருப்பாகக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் தண்டனை வட்டி விதிக்கப்படும். நடப்பு கணக்கில் வைத்திருக்கும் இருப்புத் தொகைக்கு வட்டி வழங்கப்படுவது கிடையாது. சில வங்கிகள் இந்தக் கணக்கில் உள்ள இருப்புத் தொகைக்கு வட்டி வழங்கிட முன் வந்துள்ளன. வங்கிகள் இந்தக் கணக்கிற்கு வங்கி கட்டணம் வசூலிக்கலாம். வங்கி மேல்வரை பற்று (குறுகிய காலப் பிணையமற்ற கடன்) வசதியினை நடப்பு கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இந்தக் கணக்கிற்குக் காசோலை மூலம் வைப்பு செய்வது அல்லது திரும்பப் பெறுவது தொடர்பான நடவடிக்கையில் உச்ச வரம்பு, எண்ணிக்கை வரம்பு எதுவும் இல்லை. நடப்பு கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் கடன் தகுதியினை, வங்கிகள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றன.

### ஆ. கால வைப்புகள்

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் உள்ள 1.நிலையான வைப்புகள் 2.தொடர் வைப்புகள் இதில் அடங்கும்.

### 1. நிலை வைப்புகள்

ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டிக்கு வைப்பு செய்வதைக் குறிக்கும். நிலையான வைப்புச் சான்றிதழ் (Fixed Deposit Receipts – FDR) வைப்பாளருக்கு வழங்கப்படுகிறது. சேமிப்பு கணக்கை விட வட்டி விகிதம் அதிகமாக இருக்கும். முதிர்வடையும் நாளில் நிலையான வைப்பு செய்த முதல் தொகையுடன் குறிப்பிட்ட காலத்திற்குரிய வட்டியும் சேர்த்து வழங்கப்படும். ஒரு வாடிக்கையாளர் நிலையான வைப்புச் சான்றிதழை வைப்பு செய்வதன் மூலம் கடன் பெற முடியும். முதிர்வடைவதற்கு முன்பே குறிப்பிட்ட அபராதக் கட்டணத்துடன் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறது, ஆனால் இதற்கு வட்டி வழங்கப்படுவது இல்லை. மேலும் பகுதி இறுதித் தொகை பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. நிலையான வைப்பு காலம் 1 மாதம் முதல் 10 வருடங்கள் வரை இருக்கலாம். நிலையான வைப்பு என்பது கால வைப்பு என்றும் அழைக்கப்படுகிறது

### 2. தொடர் வைப்பு

ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு வருடத்திற்கோ அல்லது ஐந்து வருடங்களுக்கோ அல்லது ஒப்பு கொள்ளப்பட்ட காலத்திற்கோ வைப்பு செய்து வருவதைக் குறிக்கும். வட்டி விகிதம் சேமிப்பு வைப்பினை விட அதிகமாகவும் மற்றும் நிலையான வைப்புகளுக்குரிய வட்டி விகிதத்திற்குச் சமமான நிலையிலும் இருக்கும். குறிப்பிட்ட காலம்

### உங்கள் வாடிக்கையாளர் (KYC) விதிமுறைகளைப் பற்றி அறியவும்

KYC (Know Your Customer) என்பது "உங்கள் வாடிக்கையாளரை அறிக" என்று பொருள்படும். வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் முகவரி போன்ற தகவல்களை வங்கிகள் பெற்று வைத்திருக்க வேண்டும் என்பது ஒரு பொதுவான விதிமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த விதி வங்கி சேவைகளை யாரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என உறுதியளிக்க உதவுகிறது. வங்கி கணக்குகள் தொடங்கும் போது இந்த KYC நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இந்த விவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும். ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்க விரும்பும் ஒரு நபர், சமீபத்திய புகைப்படம் ஒன்றுடன் 'ஆள் அடையாளத்திற்கான சான்று ஒன்றும் முகவரிக்கான சான்று ஒன்றும்' சமர்ப்பிக்க வேண்டும்.

ஆறு ஆவணங்கள் இந்திய அரசாங்கத்தால் (Officially Valid Documents-OVDs) 'அதிகாரப்பூர்வமாகச் செல்லுபடியாகும் ஆவணங்கள்' என அறிவிக்கப்பட்டுள்ளன. அவைகள் 1.கடவுச் சீட்டு, 2.ஓட்டுனர் உரிமம், 3.வாக்காளர் அடையாள அட்டை, 4.நிரந்தர கணக்கு எண் (வருமான வரி) அட்டை, 5.UIDAI ஆல் வழங்கப்பட்ட ஆதார் அட்டை மற்றும் 6.தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட (NREGA) அட்டை. ஆகியவற்றில் ஏதேனும் ஒரு அட்டையைக் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். ஆள் அடையாளத்திற்குச் சமர்ப்பிக்கும் அட்டையில் முகவரிச் சான்றுக்கான ஆதாரம் இருந்தால் அதையே முகவரிச் சான்றுக்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு இல்லையெனில் அதிகாரப்பூர்வமாகச் செல்லுபடியாகும் ஆவணங்களில் வேறு ஒரு ஆவணத்தை முகவரிச் சான்றுக்கு ஆதாரமான விவரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 104 2/17/2021 3:11:16 PM

முடிந்தவுடன் வைப்புத் தொகையுடன் வட்டித் தொகையும் சேர்த்து வாடிக்கையாளருக்குத் திரும்பக் கிடைக்கும். ஒருவிதக் கட்டணம் அல்லது தொகை குறைப்பு செய்து முதிர்வடையும் முன்பே கணக்கினை முடித்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இதில் முறையான வருமானமுடைய நபர்கள் சேமிப்பு செய்து ஒரு பெரும் தொகையைப் பெறலாம். எந்த நிறுவனமும் தொடர் வைப்பு கணக்கைத் தொடங்க முடியும். இளவர்கள் அல்லது மாணவர்கள் கூட இந்தத் தொடர் வைப்பு கணக்கைத் தொடங்க முடியும். சில வங்கிகள் இந்த வைப்புக்கு எதிராகக் கடன் வழங்குகின்றன.

## II. கடன்கள் மற்றும் முன்பணம் வழங்குதல்

வணிக வங்கிகளின் இரண்டாவது முக்கியச் செயல்பாடு வட்டி பெறுவதற்காகக் கடன் கொடுப்பதாகும். வங்கிகள் குறிப்பிட்ட அளவு பணத்தை வட்டியுடன் திரும்பச் செலுத்தும் கடனாக வழங்குகின்றன. கேட்புக் கடன்கள் எப்போது வேண்டுமானாலும் திரும்பச் செலுத்த வேண்டும். பருவக் காலக் கடன்களின் காலம் ஒப்பந்தக் காலத்திற்குப் பிறகும் நீட்டிக்கப்படக்கூடும். கடனாகக் குறுகிய காலத்திற்கு (ஒரு வருடத்திற்குள்) வணிகச் சமூகத்திற்கு வழங்கப்படும் கடன் முன்பணம் எனப்படும். ஆனால் இரு சொற்களும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### அ. முன்பணம்

### 1. வங்கி மேல்வரைப் பற்று

இந்தக் கடன் வசதி பெரும்பாலும் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வணிக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இது வங்கி மற்றும் கடன் பெறத் தகுதிவாய்ந்த வாடிக்கையாளர் இருவருக்கும் இடையில் ஏற்படும் உடன்பாடு ஆகும். இத்தகைய வாடிக்கையாளருக்கு (வங்கி கணக்கில் இருப்புத் தொகை இல்லாத பொழுதும்) வழக்கமாக மூன்று மாதக் காலத்திற்குள் செலுத்தக்கூடிய வகையில் மேல்வரைப்பற்றை, வங்கி அனுமதிக்கிறது. இந்தக் கடனை மேலும் சில காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ளலாம். மொத்த கடன் தொகையில் கடன் பெற்ற தொகைக்கு மட்டுமே வட்டி விதிக்கப்படும், அனுமதிக்கப்பட்ட முழு கடன் தொகைக்கும் வட்டி விதிக்கப்பட மாட்டாது, இது ஒரு வகை பிணையமற்ற கடன். நிதி உபகரணங்களைப் பிணையமாகப் பெற்றுக் கொண்டு சில வங்கிகள் மேல்வரை பற்று வழங்குகின்றனர். இது கேட்கும் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

### 2. ரொக்கக் கடன்

இது தொழில் நிறுவனங்கள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு வகையான பிணையக் கடன் ஆகும். சரக்கிருப்பு, மூலப்பொருட்கள், இதர அசையா சொத்துகள் போன்றவற்றை பிணையமாகப் பெற்றுக் கடன் வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தொகையைக் குறுகிய காலக் கடனாக வழங்க அனுமதிக்கப் படுகிறது. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை முழுமைக்கும் வட்டி செலுத்தப்படுவதில்லை, உண்மையாகப் பெற்ற கடன் தொகை அளவிற்கு மட்டுமே வட்டி செலுத்தப்படும். இது கேட்கும் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

### 3. மாற்றுச்சீட்டுகளை தள்ளுபடி செய்தல்

வியாபார வாடிக்கையாளர்கள் வங்கிகளிடம் தொடர்பு கொண்டு வாணிக மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து பணம் வழங்கிட நாடுகிறார்கள். இது ஒரு குறுகிய காலக் கடனுக்கான ஆவணம். மாற்றுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குரிய தள்ளுபடி (வட்டி) கழித்து மீதமுள்ள பணத்தை வர்த்தகர்களுக்குக் கடனாக வங்கி விடுவிக்கிறது. இந்த மாற்றுச் சீட்டு அவமதிக்கப்பட்டால் வங்கி அந்த வாடிக்கையாளரிடம் இருந்து பணத்தைத் திரும்பப் பெற முடியும். இது ஒரு பிணையமற்ற கடன் வகையைச் சேர்ந்தது.

### ஆ. கடன்கள்

குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வணிக வங்கிகள் தகுதிவாய்ந்த பிணையங்களைப் பெற்றுக் கொண்டு தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையினை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் கடன் வழங்குவதை இது குறிக்கிறது. இந்தக் கடன் தொகையினை மொத்தமாக ஒரே தடவையில் அல்லது தவணை முறையில் திரும்பச் செலுத்தலாம். முழு கடன் தொகைக்கும் வட்டி செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வங்கியும் இன்றைய தினம் முன்கடன்களை வழங்கி வருவாயைப் பெருக்கப் பல புதிய வழிகளைக் கண்டறிந்துள்ளன. பொதுவாக வணிக வங்கிகள் பின்வரும் கடன்களை வழங்குகின்றன.

### 1. வீட்டுக் கடன்

கடன் பெறுபவரின் மாத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே நடுத்தர மற்றும் நீண்டகால வீட்டுக் கடன்களை வழங்கி ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே வீட்டினைப் பிணையமாக வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 105 2/17/2021 3:11:16 PM

வாடிக்கையாளர் சமமான மாதத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் (EMI அசல் மற்றும் வட்டியைக் கொண்டது). ஒரு வீட்டின் மொத்தத் தவணையில் செலுத்தி வாங்கிட இயலாத நடுத்தர வகுப்பு வருமானமுள்ள பணியாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்.

### 2. நுகர்வோர் கடன்

நுகர்வோர் சாதனங்களான குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டும் சாதனம், மடிக்கணினி, துணி துவைக்கும் இயந்திரம், தொலைக்காட்சி போன்ற சாதனங்களை வாடிக்கையாளர்கள் வங்கிகளிலிருந்து நுகர்வோர் கடன்கள் மூலம் வாங்க முடியும். வாங்கப்படும் பொருள்கள் நுகர்வோர் கடன் தொகைக்கு ஏற்ப (பிணையத்திற்கான கடன் ஏற்பாட்டினை அசையா சொத்துகளை வைத்திருக்கும் கடன் பெற்றவர் செய்ய வேண்டும்) அடமானப் பொருளாகக் கருதப்படும். கடன் தொகையினை வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சமமான மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

### 3. வாகனக் கடன்

இரு சக்கர வாகனங்கள், சீருந்துகள், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் தனிநபர்களாலும், நிறுவனங்களாலும் வங்கிகளில் இருந்து வாகனக் கடன் மூலம் வாங்க முடியும். வங்கியிடமிருந்து பெற்ற கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் வரை வாகனம் வங்கியின் அடமானத்தில் இருக்கும். வாகனப் பதிவுப் புத்தகம் வங்கியுடன் வைப்பு செய்யப்பட்டு, கடன் தொகை முழுவதுமாகச் செலுத்தப்பட்ட பின்பு வாடிக்கையாளருக்கு ஒப்படைக்கப்படும்.

### 4. கல்விக் கடன்

இளங்கலை, முதுகலை அல்லது தொழில்முறை படிப்பு படிக்கும் மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் ஒவ்வொரு வருடமும் தவணைகளில் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுகிறது. படிப்பினை முடித்த பிறகு ஒரு ஆண்டுக்கு, வேலை வாய்ப்பு பெற மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதன்பிறகு, முழு காலத்திற்கும் கடனுடன் வட்டியைச் சேர்த்து மாணவர்கள் திரும்பச் செலுத்த வேண்டும். வட்டியானது கடன் தொகையின் முதல் தவணை வழங்கிய தேதியில் இருந்து கணக்கிடப்படும்.

### 5. நகைக் கடன்

வாடிக்கையாளர்கள் தங்கள் தங்க நகைகளை அடமானமாக வைத்து வங்கிகளில் இருந்து கடன் பெறலாம். உச்ச அளவு (அதாவது, ஒரு கிராம் சதவிகிதத்தின் மதிப்பில் சதவிகிதத்தில் கடன் பெற முடியும்) இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும். வட்டி ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில் வட்டிக்கு வட்டி விதிக்கப்படும். 12 மாதங்களுக்குள் வாடிக்கையாளர் மீட்டெடுக்க முடியும் அல்லது மீட்டு திரும்ப அடமானம் வைக்க முடியும். மீட்க நினைவூட்டல் தபால்கள் அனுப்பியும் மீட்கப்படாத நகைகளை ஏலமிட்டு வங்கிகள் தங்கள் கடன் பாக்கிகளைத் திரும்ப எடுத்துக் கொள்ளும்.

## III. கடனை உருவாக்குதல்

இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதோடு, ரொக்கக் கடன் சுழற்சிகளை வணிக வங்கிகளின் மூலம் உருவாக்கி, பெரிய அளவில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. வணிக வங்கிகள் வழங்கும் கடன் பணம் மொத்த ரூபாய் பண மதிப்பைவிட பெருமளவில் உள்ளது. கடன்களின் மொத்த அளவு, பயன்கள் மற்றும் துறைகள் இவையனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி வணிக வங்கிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

> 2011 புள்ளிவிபரப்படி, அனைத்து இந்திய வணிக வங்கிகளால் உருவாக்கப்பட்ட கடனின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 75.1% ஆகும். இவ்வாறான கடன் பணம் அமெரிக்காவில் 233.3%, சீனாவில் 145.5%, ஜப்பானில் 340.9% ஆக இருக்கிறது.

## 12.02 இரண்டாம் நிலை பணிகள்

முதன்மைப் பணிகளைத் தவிர வணிக வங்கிகள் பல்வேறு வகையான பிற சேவைகளையும் வழங்குகின்றன, அவை இரண்டாம் நிலை பணிகள் எனப்படுகின்றன.

இந்தச் சேவைகளைப் பொதுவாக I. முகமைப் பணிகள் மற்றும் II. பொதுப் பயன்பாட்டுப் பணிகள் என வகைப்படுத்தலாம்.

## I. முகமைப் பணிகள்

வங்கிகள் வாடிக்கையாளர்களின் முகவர்களாகச் செயல்பட்டுச் சில சேவைகளை வழங்குகின்றன. அவை முகமை செயல்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு,

### 1. நிதி பரிமாற்றம்

வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள், பயணிகள் காசோலைகள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 106 2/17/2021 3:11:16 PM

போன்றவைகளை வெளியிடுவதுடன் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது. வாடிக்கையாளர்கள் பணத்தை எடுத்துச் செல்லத் தேவையில்லை. அவர்கள் வங்கி வெளியிடும் வரைவோலைகளைப் பெறும் நிறுவனங்களுக்குக் கொடுத்தால் போதுமானது. இந்தச் சேவைக்காக வங்கிகள் ஒரு சிறிய தரகுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது.

### 2. காலமுறையில் செலுத்தும் முனைமம், வாடகை, முதலியன

வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி, காப்பீட்டு முனைமம், வாடகை, தொலைபேசி கட்டணம் போன்றவைகளை வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மாதந்தோறும் செலுத்தும் பணியை வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன. இன்றைய காலத்தில் இந்தச் செலுத்தல்களை மின்னணு தீர்வக முறை மூலம் வங்கிகள் எளிமையாக்கி வழங்குகின்றன.

### 3. காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்

வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள் மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது. இதேபோல் வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட காசோலை சரிபார்க்கப்பட்டவுடன் வாடிக்கையாளர் அறிவுறுத்தல்படி பணம் வழங்கப்படுகிறது.

### 4. நிறைவேற்றாளர், அறங்காவலர் மற்றும் சட்டவாதியாக செயல்படுதல்

வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வங்கியானது நிறைவேற்றாளராக செயல்பட்டு அவர்களது மரணத்திற்குப் பிறகு அவர்களது விருப்பத்தை நிறைவேற்றுகின்றது. வங்கி ஒரு அறங்காவலராக இருந்து வாடிக்கையாளர்களின் நிதியைக் கவனித்துக்கொள்கிறது. சட்டவாதிகள் போல் இருந்து வாடிக்கையாளர்களது சொத்துக்கள் பரிமாற்ற ஒப்பந்தத்தில் வங்கி கையொப்பமிடுகிறது.

**காசோலை வரைவிலக்கணம்:** மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 இன் படி, "காசோலை என்பது ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்பட்ட, கேட்கும் போது தரப்பட வேண்டிய ஒரு மாற்றுமுறை உண்டியல் ஆகும்".

**கீறலிட்ட காசோலை:** காசோலையின் இடதுபக்க மேல் மூலையில் இரண்டு இணை குறுக்கு கோடுகள் வரைதலைக் குறிக்கும். இந்த காசோலைக்கு வங்கியின் பணம் வழங்கும் மேசையில் பணம் வழங்கப்படமாட்டாது, ஆனால் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கு மூலம் பணம் வழங்கப்படும் என்பதைக் குறிக்கும்.

### 5. பங்கு சந்தை பரிவர்த்தனைகளை நடத்துதல்

ஒரு டீமேட் மின்னணு கணக்கு வைப்பாளரால் தொடங்கப்படவேண்டும். இக்கணக்கு வாடிக்கையாளரின் சேமிப்பு கணக்கு இருக்கும் வங்கியுடன் வாடிக்கையாளரால் இணைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்பு வாடிக்கையாளர் கேட்டுக் கொள்வதற்கிணங்க அவர் சார்பில் வங்கி இணையம் மூலம் பங்குப் பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்கும் பணியைச் செய்கிறது.

### 6. வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்

வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வருமான வரிக் கணக்கினை ஆண்டுதோறும் தயாரிக்கின்றன. அவர்களுக்கு வரி சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குகின்றன.

### 7. அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்

வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியைச் செய்கிறது.

### 8. தொடர்பாளராகச் செயல்படுதல்

வாடிக்கையாளர்களுக்கு தொடர்பாளராகச் செயல்பட்டு, பயணச் சீட்டு, கடவுச் சீட்டு போன்றவைகளைப் பெறுகிறது.

## II. பொதுப் பயன்பாட்டுப் பணிகள்

முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் முகமை செயல்பாடுகளைத் தவிர, வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களின் பொது நலனுக்காகச் சில சேவைகளை வழங்குகின்றன. அவை பொதுப் பயன்பாட்டு சேவைகள் என அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு.

### 1. கேட்பு வரைவோலை மற்றும் வங்கியாளர்களின் காசோலைகளை வெளியிடல்

கேட்பு வரைவோலைகள் மற்றும் வங்கியர் காசோலைகள் பொது மக்கள் மற்றும்

வாடிக்கையாளர்களின் நலனுக்காக வழங்கப் படுகின்றன. பணத்தை அனுப்புவதற்குப் பதிலாகவும், கல்வி கட்டணம் போன்றவற்றைச் செலுத்துவதற்கும், இந்த வரைவோலைகளை இணைத்து அனுப்பலாம்.

### 2. வாடிக்கையாளர்களின் சார்பாக மாற்றுச்சீட்டுகளின் பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளுதல்

வாடிக்கையாளர்களின் சார்பாக மாற்றுச் சீட்டுகளை ஏற்று கொண்டு, வங்கிகள் அயல்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்குப் பணம் செலுத்துகின்றன. பின்னர், வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றன.

### 3. பாதுகாப்பு பெட்டகங்கள்

மதிப்புமிக்க ஆவணங்கள், நகைகள், முதலியன குறிப்பிட்ட வாடகைக்கு வங்கி பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு பெட்டியில் பாதுகாப்பாக வைக்கும் வசதி உள்ளது. இந்தப் பாதுகாப்பு பெட்டக அறை 'வலுவான அறை' என்று அழைக்கப்படுகின்றது.

### 4. கடன் உறுதி கடிதங்கள்

கடன் உறுதி கடிதம் என்பது இறக்குமதி செய்யும் வாடிக்கையாளர் சார்பில் வங்கிகள் ஏற்றுமதியாளருக்கு இறக்குமதி செய்யும் பொருளுக்குப் பணம் செலுத்த உத்தரவாதம் அளிக்கும் ஒரு ஆவணம் ஆகும். இது பன்னாட்டு வணிகத்தில் மிக முக்கியமான ஆவணமாகும்.

### 5. பயணிகள் காசோலைகள்

வாடிக்கையாளர்கள் இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் பயணம் செய்யும் போது பணத்தை எடுத்துச் செல்லத் தேவையில்லை. பயணிகள் காசோலையில் பணமதிப்பு விவரமும் சொற்களும் அச்சிடப்பட்டிருக்கும். இதைப் பணமாகக் கருதி அனைத்துக் கடைகள், விடுதிகள், பயண முகமை நிறுவனங்கள், முதலியன ஏற்றுக்கொள்கின்றன.

### 6. பரிசு காசோலைகள்

பண மதிப்பு விபரங்கள் அச்சிடப்பட்ட இந்த வகை காசோலைகள் கவர்ச்சிகரமான வடிவமைப்பில் கிடைக்கின்றன. எனவே, இதனைத் திருமண விழாக்கள், பிறந்த நாள் விழாக்கள் போன்ற நிகழ்வுகளுக்கு பரிசாக வழங்கலாம்.

### 7. மேற்கோள் சேவை

வணிக நிறுவனங்கள் தங்கள் வங்கியின் பெயரைப் புதிய வணிக நிறுவனத்திற்கு மேற்கோள் காட்டுவதன் மூலம் அவர்கள் எந்த ஒரு நிறுவனத்துடனும் வர்த்தக ரீதியான புதிய உறவினை ஏற்படுத்த முடியும். வங்கிகள் விருப்பத்துடன் நடுவராக இருந்து தங்கள் வாடிக்கையாளர்களின் நிதி நிலைமை பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

## 12.03 பரவலாக்கப்பட்ட வங்கி சேவைகள்

வங்கியியல் துறையில் இருக்கும் போட்டி அவர்களின் இலாபத்தைக் குறைத்துள்ளது. ஆகையால், வணிக வங்கிகள் புதிய மற்றும் பலதரப்பட்ட நிதியியல் சேவைகளைக் கண்டறிந்து வழங்கிடத் தொடங்கின. அவைகள் வங்கியியல் சேவைகளுக்கு முற்றிலும் மாறானது. அத்தகைய பிற நிதியியல் சேவைகளையும் வங்கிகள் வழங்குகின்றன. இது உலகளாவிய வங்கியியல் என்று அழைக்கப்படுகிறது. அத்தகைய சேவைகள் பின்வருமாறு:

### 1. வங்கி காப்பீட்டுறுதி

இது காப்பீட்டு கொள்கைகளை அல்லது பொருட்களை ஒரு வங்கியானது மற்றொரு காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து வழங்குவதைக் குறிக்கிறது. வங்கிகள் இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (IRDA) விதிகளுடன் இந்திய ரிசர்வ் வங்கியின் விதிகளையும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். கார்ப்பரேஷன் வங்கி, ஓரியண்டல் பாங் ஆப் காமர்ஸ் மற்றும் விஜயா வங்கி ஆகியவை இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுகின்றன. பாரத ஸ்டேட் வங்கியும் BNP பாரிபாஸ் கார்டிவ் என்னும் ஒரு பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து காப்பீட்டு சேவைகளை வழங்குகிறது.

### 2. பெரு வணிகர் வங்கியியல்

பெரு வணிகர் வங்கிகள் வைப்பு பெறுதல், கடன் வழங்குதல் போன்ற வழக்கமான வங்கிகளின் சேவைகளை வழங்குவதில்லை. ஒரு வணிக வங்கி அல்லது அதன் துணை வங்கியானது திட்ட ஆலோசனை வழங்குதல், காப்புறுதியளித்தல், போன்ற ஒரு நிறுவனம் தொடங்குவதற்குத் தேவையான சேவைகளை வழங்குகிறது. இது பெரு வணிகர் வங்கி என்று அழைக்கப்படுகிறது. அவைகள் பெரும்பாலும் பங்குச் சந்தை சேவைகளுடன் தொடர்புடையவை. இந்தியப் பத்திர மாற்றகங்களின் வாரியமும் (SEBI) பெரு வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துகிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 108 2/17/2021 3:11:16 PM

### 3. சில்லறை வங்கியியல் (தனிநபர் வங்கி)

தனி நபர் வங்கியியல் என்பது வங்கி சேவையானது அதிகமான இறுதி நிலை தனி நபர் வாடிக்கையாளர்களை அடைவதை குறிக்கிறது. வைப்புகளை ஏற்றுக்கொள்வது தவிர, தனிநபர் கடன்கள், வாகனக் கடன்கள், நுகர்வு பொருள் கடன்கள், பங்குகள் மீதான எதிரான கடன்கள், பற்று அட்டைகள் மற்றும் கடன் அட்டைகள்,அடமானங்கள் ஆகியன இந்தச் சேவைகளுக்குள் அடங்கும்.

### 4. வீட்டு வசதி கடன்

வீட்டு வசதிக் கடன் அசையா சொத்துகளான நிலம் மற்றும் கட்டிடங்களை பிணையமாகப் பெற்றுக் கொண்டு வழங்கப்படுகிறது. பாரத ஸ்டேட் வங்கி, பேங்க் ஆஃப் இந்தியா போன்ற பல வங்கிகள் வீட்டு வசதிக் கடனுக்காக துணை நிறுவனங்களை அமைத்துள்ளது.

### 5. பரஸ்பர நிதி

முதலீட்டாளர்களின் சேமிப்பினை மூலதனச் சந்தை மற்றும் பணச் சந்தைகளில் பன்முகப்படுத்தப்பட்ட பத்திரங்களில் முதலீடு செய்யும் ஒரு நிதி இடைத்தரகராக இது இருந்து வருகிறது. பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, போன்ற பல வங்கிகள் பரஸ்பர நிதிக்காகத் துணை நிறுவனங்களை அமைத்துள்ளன.

### 6. துணிகர முதலீட்டு நிதி

துணிகர முதலீட்டு நிதியகம் அறிமுகமில்லாத, அபாயகரமான, இளம் மற்றும் சிறிய தனியார் தொழில்களின் புதிய தொழில் முயற்சிகள் தொடங்கக் குறிப்பாகத் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் அறிவு சார்ந்த தொழில்களுக்கான மூலதனத்தை வழங்குகின்றன. பாரத ஸ்டேட் பாங்க், கனரா வங்கி போன்ற பல வணிக வங்கிகள் துணிகர முதலீட்டு நிதிக்காகத் துணை நிறுவனங்களை அமைத்துள்ளன.

### 7. கடன் வசூல் முகமை

கடன் வசூல் முகமை என்பது ஒரு நிதி இடைத்தரகர் (கடன் வசூல் முகமையர்) மற்றும் ஒரு வியாபார நிறுவனம் (கோருபவர்) ஆகியோருக்கு இடையே உள்ள தொடர்ச்சியான நிதியியல் உடன்பாட்டைக் குறிக்கிறது. கடன் வசூல் முகமையர் வாடிக்கையாளர்களின் கணக்குகளை விற்பனையாளர்களிடமிருந்து பணம் கொடுத்து வாங்குகின்றார் . பாரத ஸ்டேட் பாங்க், கனரா வங்கி போன்ற பல வணிக வங்கிகள் கடன் வசூல் சேவைக்காகத் துணை நிறுவனங்களை அமைத்துள்ளன.

## 12.04 மின்னணு வங்கியியல் பணிகள்

தற்போது அனைத்து வங்கிகளும், வங்கி பரிவர்த்தனைக்கான நேரம் மற்றும் செலவை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கிச் சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன. வரைவோலைகள், காசோலைகள் மற்றும் காகித அடிப்படையிலான நிதிப் பரிமாற்றங்களுக்கு இந்தச் சேவை ஒரு மாற்று ஆகும்.

### 1. NEFT – தேசிய மின்னணு நிதி பரிமாற்றம்

இது 2005 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது. இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதி பரிமாற்ற நடவடிக்கைகள் தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன. NEFT செயல்படுத்தப்பட்ட கிளை வங்கிகளில் கணக்குகளைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும். பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை. ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன. NEFT பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை. வங்கி கிளைகளை அடையாளம் காண NEFT மற்றும் RTGS ஆகிய இரண்டும் IFSC (இந்திய நிதி அமைப்பு குறியீடு) – 11 இலக்க எழுத்து எண் குறியீட்டைப் பயன்படுத்துகின்றன. IFSC குறியீட்டினை ஹைதராபாத்தில் உள்ள (IDRBT) வங்கி தொழில்நுட்பத்திற்கான மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் வழங்குகிறது.

### 2. RTGS – உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்புகள்

இது 2013 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது. பரிவர்த்தனைகள் உண்மையான நேரத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன. மற்ற எந்த நடவடிக்கைகளையும் தொகுக்காமல் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் இடையே, ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தீர்வு காணப்படுகிறது. RTGS வசதி வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் 2.00 மணி வரையும் கிடைக்கின்றன. சுமார் 2,700 பில்லியன் ரூபாய் மதிப்புள்ள 60,000 பரிவர்த்தனைகள், 10,000



XI_Tamil_commerce 1-15_001-147.indd 109 2/17/2021 3:11:16 PM

நகரங்கள், 52,000 வங்கி கிளைகள் உள்ளடக்கிய சேவைகளை RTGS பாதையில் ஒரு நாளில் செய்கிறது. RTGS பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை. RTGS பரிவர்த்தனைக்கான குறைந்தபட்ச வரம்பு ₹2 லட்சம் ஆகும்.

### 3. மின்னணு தீர்வக சேவைகள்

1995 இல் ரிசர்வ் வங்கியால் மின்னணு தீர்வக சேவைகள் தொடங்கப்பட்டது. இது ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு நிதி பரிமாற்றம் செய்யப்பயன்படும் ஒரு வகை மின்னணு முறையாகும். "ECS – வரவு" முறையானது சம்பளம், பங்காதாயம், வட்டி, ஓய்வூதியம் போன்றவற்றை அனுப்புவதற்குப் பயன்படுகின்றது. மேலும் "ECS – பற்று" முறையானது மாதாந்திர தொலைபேசி கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள், சமமான மாதாந்திர தவணைத் தொகைகளை (EMI) செலுத்திப் பற்று செய்வதற்குப் பயன்படுகிறது. வங்கி கணக்கு வைத்திருக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் சில படிவங்களைப் பூர்த்தி செய்து வங்கிகளில் சமர்ப்பித்த பின்னர் ECS சேவையைப் பயன்படுத்தலாம். வங்கிகளுக்கு இடையே உள்ள ECS பரிவர்த்தனைகள் தீர்வக மையங்களில் உள்ள வங்கிகளின் நடப்புக் கணக்குகளைக் கொண்டு தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.

### 4. கூட்டிணைப்பு வங்கியியல் தீர்வுகள்

'CORE' என்பது 'மையப்படுத்தப்பட்ட உண்மை நேர இணையப் பரிமாற்றம்' ஆகும். மையப்படுத்தப்பட்ட இணையப் பரிமாற்றம் உள்ள வங்கிகள் அனைத்துக் கணக்குகளின் விபரங்களையும் அனைத்து வங்கிகளின் கிளை விபரங்களையும் கொண்டுள்ளது. ஒரு வாடிக்கையாளர் காசோலை மூலம் உலகெங்கிலும் உள்ள வங்கியின் எந்தக் கிளை அலுவலகத்திலும் பணத்தை எடுக்க முடியும். இதேபோல் யார் வேண்டுமானாலும் இந்தக் கணக்கில் எந்த கிளையிலும் பணத்தை வைப்பு செய்ய முடியும். பரிவர்த்தனை நடவடிக்கைகள், உண்மையான நேரத்தில் மையப்படுத்தப்பட்ட இணையப் பரிமாற்றத்தில் பதிவு செய்யப்படுகிறது. இதனை வங்கியின் எல்லாக் கிளைகளிலும் காண முடியும். இந்த வசதியினைக் கூட்டிணைப்பு வங்கியியல் தீர்வுகள் என்று அழைக்கின்றனர்.

### 5. இணைய வங்கியியல் அல்லது மெய்நிகர் வங்கியியல்

இணைய வங்கியியல் என்பது இணையம் மூலம் கணினிகள் மற்றும் கைபேசியைப் பயன்படுத்தி நடைபெறும் வங்கிப் பரிமாற்றச் செயல்பாடுகளைக் குறிக்கிறது. ஒரு வாடிக்கையாளரால் வீட்டிலிருந்தும் அலுவலகத்திலிருந்தும் அல்லது உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரமும் இதன் மூலம் பரிவத்தனை செய்ய முடியும்.

### 6. கைபேசி வங்கியியல்

பெரும்பாலான வணிக வங்கிகள் சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக்கூடிய கணினி நிரல்களை அதாவது செயலிகள் (App) என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன. சுட்டிகை கைபேசிகளில் இருக்கும் இந்தப் பயன்பாட்டைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்க முடியும். இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியியல் என்று அழைக்கிறோம்.

### 7. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM) மற்றும் பணம் செலுத்தும் (CDM) வசதிகளுடன்

ஒரு வாடிக்கையாளர் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலிருந்து வங்கியால் அவர்களுக்கு வழங்கப்பட்ட தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்க முடியும். இயந்திரம் வாடிக்கையாளர்களின் கணக்கில் இருக்கும் மீதி இருப்பு தொகையையும் காட்டுகின்றன. கடந்த சில பரிவர்த்தனைகளின் அறிக்கையை அச்சிட்டு சிறுதாளில் வழங்குகின்றன. பிற வங்கிகளின் ATM இயந்திரத்தில் அட்டையை வைத்துப் பணம் எடுப்பது எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பயன்பாடுகளுக்கு பிறகு கட்டணம் விதிக்கப்படுகிறது. பண வைப்பு இயந்திர வசதி, பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எப்போது வேண்டு மானாலும் கணக்கில் பணத்தை வைப்பு செய்வதற்குப் பயனுள்ளதாக இருக்கின்றன. இதேபோல் காசோலை வைப்பு இயந்திரங்கள் எந்த நேரத்திலும் காசோலைகளைப் பெற்றுக்கொள்கின்றன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 110 2/17/2021 3:11:16 PM

## 8.IMPS – உடனடி செலுத்தல் சேவை

இந்தியத் தேசியச் செலுத்தல் கழகம் மூலம் நவம்பர் 2010 இல் IMPS அறிமுகப்படுத்தப்பட்டது. கைபேசிகள், இணைய வங்கியியல் மூலம் வங்கியின் வாடிக்கையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கி சாரா கூட்டாளிகள் நிதி பரிமாற்றங்கள் செய்திட IMPS அனுமதி அளிக்கின்றது. அதன் பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் உள்ளன. தற்போதைய அதிகபட்ச உச்சவரம்பு ₹ 2 லட்சம் ஆகும். உண்மையான நேரத்தில் பணம் செலுத்தும் சில்லறை வர்த்தகத்தில் உலக நாடுகளில் இந்தியா முன்னணி நாடாகத் திகழ இச்சேவை வழி செய்துள்ளது.

## 9. குறுந்தகவல்கள் மூலம் நிதி பரிமாற்றம்

*99# என்பது எந்தச் சாதாரண அல்லது விரைவூட்டு கைபேசியிலிருந்து நிதி பரிமாற்றம் செய்வதற்கான எண்ணாகும். இது 2014 இல் தொடங்கப்பட்டது. இந்தியாவில் உள்ள பொதுமக்களில் எவரும் எந்த மூலையிலிருந்தும் வங்கி பரிவர்த்தனைகளைச் செய்ய முடியும்.

## 10. பற்று அட்டைகள்

தானியங்கி பணம் வழங்கும் அட்டையே (ATM




Card) பற்று அட்டை (Debit Card) என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது. விசா அட்டை மற்றும் மாஸ்டர் அட்டை சேவைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விசா கழகம் மற்றும் மாஸ்டர் அட்டை ஆகிய இரண்டின் மூலம் வழங்கப்படுகின்றன. இந்தியத் தேசியச் செலுத்தல் கழகம் வழங்கும் (RuPay) ரூபே அட்டை சேவைகள் மார்ச் 2012 இல் இந்தியாவில் தொடங்கப்பட்டன.

### NACH, BBPS, BHIM

**தேசியத் தானியங்கி தீர்வக இல்லம்** (NACH) 2008 இல் நிறுவப்பட்டது, வலைதள அடிப்படையில் அதிக அளவு மின்னணு வங்கிகளுக்கு இடையிலான அடிக்கடி நடைபெறும் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறும் நடவடிக்கைகளுக்குத் தீர்வாக உள்ளது. வங்கிகள், நிதி நிறுவனங்கள், பொதுக் கழகங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு இது உதவியாக இருக்கும். நாடு முழுவதும் உள்ள பலதரப்பட்ட ECS முறைகளை மையப்படுத்தல் மற்றும் உள்ளூர் தடைகளை நீக்குதல் இதன் நோக்கமாகும்.

**பாரத் கட்டணச் செலுத்தல் அமைப்பு** (BBPS) ஆகஸ்ட் 2016 இல் இந்தியத் ரிசர்வ் வங்கி வழிகாட்டுதலின்படி இந்திய தேசியச் செலுத்தல் கழகத்தால் இயக்கப்படும் ஒரு அமைப்பு ஆகும். இது ஒரு இடத்தில் அனைத்துக் கட்டணங்களையும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் இந்தியா முழுமைக்கும் கட்டணச் செலுத்தல் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு நம்பகத்தன்மையுடன், உண்மைத்தன்மையுடன் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகளுடன் வழங்குகிறது.

**பாரத் பண இடையாளர்** (BHIM) இந்த செயலி (App). வங்கி தனது வாடிக்கையாளருக்கு எளிமையாக உருவாக்கி, இலகுவான மற்றும் விரைவான செலுத்தல் பரிமாற்றங்களை ஒருங்கிணைந்த செலுத்தல் இடையாளர் (UPI) வழியாகப் பயன்படுத்தச் செய்கிறது. ஒரு வங்கியின் வாடிக்கையாளர், வங்கி செலுத்தல்களுக்காகவும், செலுத்தல் மற்றும் பணம் பெறுதலுக்காகவும் கைபேசி எண்ணை அல்லது மெய்நிகர் செலுத்தல் முகவரியை (VPS) பயன்படுத்தி உடனடி செலுத்தல் நடத்த முடியும். இது டிசம்பர் 2016 இல் தொடங்கப்பட்டது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 111 2/17/2021 3:11:16 PM

### 11. கடன் அட்டைகள்




வாடிக்கையாளர்கள் மற்றும் பிற தகுதியுள்ள நபர்களுக்குக் கடன் அட்டைகளை வங்கிகள், வழங்குகின்றன. இந்த அட்டை மூலம், இந்தியாவில் எந்தக் கடையிலும் பொருள்கள் மற்றும் சேவைகளை முன்பணம் செலுத்தாமல் கடனாக வாங்க முடியும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் கடன் நிலுவைத் தொகையைச் செலுத்திவிட்டால் வட்டி விதிக்கப்படுவதில்லை. வங்கிகளால் வழங்கப்படும் கடன் அட்டை, வைத்திருக்கும் நபரின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

## 12.05 அனைத்து வணிக வங்கிகளின் மொத்தப் பணிகள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து வணிக வங்கிகளும் ஒன்றாக இணைந்து உதவுகின்றன.

### 1. அதிக உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி

வணிக வங்கிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்தித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக்கும் நிதியை வழங்குகின்றன. இதன் விளைவாக அனைத்துத் துறைகளும் அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

### 2. மூலதன உருவாக்கம்

வங்கிகள் மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கின்றன. அவர்களது சிறிய சேமிப்புக்களைப் பாதுகாப்பாகக் குவித்து வைக்கின்றன. இந்த நிதியைப் பொருளாதாரத்தின் உற்பத்தி நோக்கத்திற்காகப் பயன்மிக்க வழியில் பயன்படுத்த முடியும்.

### 3. ஒருங்கிணைந்த நிதி

பேரளவு முதலீட்டுடன் உருவாக்கக் கூடிய ஒரு மிகப் பெரிய தொழிற்சாலையை நிறுவ ஒரே மூலத்திலிருந்து நிதி கிடைக்க வாய்ப்பில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் வணிக வங்கிகள் பல ஒன்றாகச் சேர்ந்து ஒருங்கிணைந்த நிதியை வழங்குகின்றன.

### 4. வங்கி அல்லாத பகுதிகளுக்குச் சேவைகளின் விரிவாக்கம்

வங்கிகள், தமது கிளைகளைக் கிராமங்களில் மற்றும் கிராம சுற்றுப் பகுதிகளில் திறக்கின்றன. எனவே, வங்கி செயல்பாடு இல்லாத பகுதிகளும் வங்கிச் சேவைகள் சென்றடைகின்றன.

### 5. சமநிலை வட்டார மேம்பாடு

வங்கிகள், நிதி உபரியாக உள்ள பகுதியிலிருந்து நிதி பற்றாக்குறை உள்ள மாவட்டங்கள் அல்லது பகுதிகளில் வணிக நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் மற்றும் செயல்பாட்டிற்கும் நிதியை பரிமாற்றம் செய்கின்றன. இந்தச் செயல்பாடு மூலம் பல்வேறு வட்டாரங்கள் சமநிலை வளர்ச்சி சாதனையைப் பெற முடியும்.

### 6. வர்த்தகம் மற்றும் வணிக செயல்பாடுகளை எளிமையாக்கல்

ஒரு நாட்டின் அனைத்து வர்த்தகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் திறமையான செயல்பாட்டிற்கு, எப்பொழுது எங்கு அதிக அளவு நிதி தேவைப்படுகிறதோ, அதற்கான நிதிகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், பரிமாற்றங்கள் செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் நிதி சேகரித்தல் ஆகிய இத்தகைய செயல்பாடுகளை வங்கிகள் செய்கின்றன.

### 7. தொழிற் சாலைகள், வேளாண்மை, குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) மற்றும் சுய உதவிக் குழுக்கள் (SHGs) ஆகியவற்றின் மேம்பாடு

ஒவ்வொரு பிரிவிற்கும் வங்கிகள் நிதியளிப்பதற்காக வெவ்வெறு முறைகளையும் ஆவணங்களையும் வடிவமைக்கின்றன. சிறிய விவசாயிகளுக்கு, நடுத்தர வர்த்தகர்களுக்கு மற்றும் தொழில் புரிபவர்களுக்கு நிதிகளை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக வங்கிகள் சுய உதவிக் குழுக்களுக்குக் குறுகிய கடன் அளித்தல், வர்த்தகர்களுக்கு வங்கி மேல்வரை பற்று கடன் அளித்தல் மற்றும் தொழிற்சாலைகள் நிதியளிப்பிற்கு வைப்பு சான்றிதழ்களை வழங்குதல் பணிகளைச் செய்கின்றன.

### 8. பணவியல் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்

பல்வேறு கிளைகள் திறப்பதன் மூலம் அனைத்துப் பொது மற்றும் வணிக நிறுவனங்களுடன் வங்கிகள் உறவுகளை ஏற்படுத்தியுள்ளன.ஒருநாடு முழுவதிலும் பணவியல் துறைக்கான பரந்த வழிகாட்டு



XI_Tamil_commerce 1-15_001-147.indd 112 2/17/2021 3:11:17 PM

நெறிமுறைகளை இத்தகைய வங்கிகள் இல்லாமல் செயல்படுத்தப்பட முடியாது.

**9. ஏற்றுமதி மற்றும் பன்னாட்டு வணிகத்தை ஊக்குவித்தல்**

வங்கிகள் வெளிநாட்டு கிளைகளைத் தொடங்கி அல்லது வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு உதவி செய்கிறது. கடன் கடித ஆவணங்கள் மற்றும் உலகளாவிய கடன் வசூல் சேவைகளுக்கு ஈட்டுறுதி அளித்து ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு உதவுகிறது.

**10. புதிய தொழில்முனைவோர் மற்றும் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள்**

திட்டக் கடன் மற்றும் புதிய வியாபாரங்களைத் தொடங்கிடக் கடன் ஆகியவற்றை தொழில் முனைவோர் பெறலாம். அதிகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் புதிய வேலை வாய்ப்புக்கான வாய்ப்புகளை உருவாக்கிடத் தேவையான கடன்களை வங்கிகள் வழங்குகின்றன.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| வைப்புகள் | கடன்கள் |
| பற்று அட்டை | கடன் அட்டை |
| சுட்டி அட்டை | கூட்டிணைப்பு வங்கியியல் |

**சுய சிந்தனைக்கு**

அனைத்துத் தானியங்கி பணம் வழங்கும் இயந்திர மையங்களிலும் ஒன்று அல்லது இரண்டு, சில இடங்களில் நான்கு அல்லது ஐந்து இயந்திரங்கள் உள்ளன. அனைத்து இயந்திரங்களின் உட்பகுதியிலும் ரூபாய் நோட்டுகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் அதிகபட்சமான ரூபாய் நோட்டுகள் இயந்திரத்தில் பாதுகாப்பாக வைத்துப் பூட்டப்படுகின்றன. இவ்வாறு அதிக அளவில் பணத்தைப் பூட்டுவதைத் தவிர்ப்பதற்குப் பதிலாக மாற்று வழி ஏதேனும் உள்ளதா என யோசிக்கவும்.

மின்னணு வங்கி முறையின் சேவைகளில் உள்ள பாதுகாப்பு சிக்கல் பற்றி விவாதிக்கவும்.

**மேலும் அறிவதற்கு**

களப்பயணம் – அருகில் உள்ள வங்கிக்கு – வைப்பு, நிலையான வைப்பு, நடப்பு வைப்பு மற்றும் தொடர் வைப்பு ஆகியவற்றிற்கு வங்கி வழங்கும் வட்டி விகிதத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப் படும் பல்வேறு அட்டைகளின் புகைப்பட நகல்களைச் சேகரிக்கவும்.

இன்றைய தினம் பற்று அட்டை, கடன் அட்டை, சுட்டி அட்டை மற்றும் பிற அட்டைகள் அன்றாட பயன்பாட்டுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. எதிர்காலத்தில், எத்தனை வகையான அட்டைகளை நாம் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

**ஆய்வுகள்**

ஒரு நபர் பற்று அட்டையின் கடவுச்சொல்லை மறந்துவிட்டார், கடவுச்சொல்லை எவ்வாறு பெறுவது? அவருக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்குங்கள்.

**பயிற்சி**

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. **மின்னணு வங்கியினை _____________ மூலம் செயல்படுத்தலாம்.**

   (அ) கணினிகள்

   (ஆ) கைபேசிகள்

   (இ) ATM அட்டை

   (ஈ) மேலே உள்ள அனைத்தும்

2. **RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?**

   (அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்

   (ஆ) 50,000

   (இ) 2 லட்சம்

   (ஈ) 5 லட்சம்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 113 2/17/2021 3:11:17 PM

3. **இந்தியாவின் மிகப் பெரிய வணிக வங்கி**

(அ) ஐசிஐசிஐ (ஆ) எஸ்.பி.ஐ

(இ) பிஎன்பி (ஈ) ஆர்.பி.ஐ

4. **எந்த வகையான கணக்கு, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?**

(அ) சேமிப்பு வைப்பு

(ஆ) நிலையான வைப்பு

(இ) நடப்பு வைப்புத்தொகை

(ஈ) தொடர் வைப்பு

5. **எந்த ஒரு வகையான சேவைகள் வணிக வங்கியால் வழங்கப்படுவதில்லை.**

(அ) வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்

(ஆ) வங்கி மேல்வரைப்பற்று

(இ) ரொக்கக் கடன்

(ஈ) உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்

**விடைகள்**

1. ஈ 2. இ 3. ஆ 4. ஈ 5. அ

## II. குறுவிடை வினாக்கள்.

1. கைப்பேசி வங்கியியல் பற்றிக் கூறுக.
2. பற்று அட்டை (Debit Card) – சிறு குறிப்பு வரைக.
3. கடன் அட்டை (Credit Card) – சிறு குறிப்பு வரைக.
4. தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவீர் அறிவது யாது?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
2. உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு (RTGS) பற்றி ஒரு குறிப்பு வரைக.
3. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) விளக்குக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளைப் பற்றி விவரி. (ஏதேனும் 5)
2. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக. (ஏதேனும் 5)

## குறிப்பு நூல்கள்.


1. பாலாஜி. சி.டி. மற்றும் பிரசாத். சி. 2016, வணிகவியல் கோட்பாடு, மார்கம் பப்ளிகேஷன்ஸ், சென்னை
2. நடராஜன். எஸ் மற்றும் பரமேஸ்வரன். 2014, "3. இந்திய வங்கி ", எஸ். சந்த் & கம்பனி லிமிடெட். தில்லி
3. தர்மராஜா. E, 2005, "வங்கி தியரி – லாஸ் அண்ட் ப்ராக்டிஸ்", ஸ்கைச் பப்ளிகேஷன்ஸ்
4. செல்வராஜ். எம். 2014, "நவீன வங்கி" – பவானி பதிப்பகம்.


5HWH2D



XI_Tamil_commerce 1-15_001-147.indd 114 2/17/2021 3:11:17 PM

# அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம்
**13**

# பண்டகக் காப்பு

5I6I41

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. பண்டகக் காப்பகம் மற்றும் பண்டகக் காப்பிடுதலின் பொருளை அறிந்து கொள்ளல்.
2. பண்டகக் காப்பகங்களின் பல்வேறு வகைகளை விளக்கிக் கூற இயலும்.
3. பண்டகக் காப்பகங்களின் பணிகளை அறிந்து கொள்ள இயலும்.
4. பல்வேறு பண்டகக்காப்பு ஆவணங்களைப் பற்றி தெரிந்து கொள்ள இயலும்.

### அறிமுகம்

'Warehouse' என்ற சொல்லில் "ware" என்பது பொருள் அல்லது பண்டத்தைக் குறிக்கும். "பண்டகக் காப்பு" என்பது பொதுவாக தொழிற்சாலைகளுக்கு அருகில் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பாதுகாக்கும் செயலைக் குறிக்கும். பண்டகக் காப்பகம் என்பது பொருட்களைப் பாதுகாத்து வைக்குமிடமாகும். மேலும் பண்டகக் காப்பகம் என்பது தரம் பிரித்தல், தரப்படுத்தல், ஒன்று சேர்த்தல், சிப்பமிடுதல் போன்ற பிற சந்தையிடுகை பணிகளை மேற்கொள்வதற்காக விற்பனை சந்தைக்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகப் பண்டகக் காப்பு துறை நவீன முறையில் மேம்படுத்தப்பட்டுளளது. இது காலத்தடையை நீக்குகிறது.

### 13.01 பண்டகக் காப்பகம்

இது எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பொருட்களைச் சேமித்து வைக்கும் இடமாகவும் மற்றும் வழங்கல் மையங்களாகவும் செயல்படுகிறது. பண்டகக் காப்பகங்களில் சேமிக்கப்படும் பொருட்களின் தன்மையைப் பொறுத்து வடிவமைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற விரைவில் அழுகக்கூடிய தன்மையுடைய பொருட்களை வைத்துப் பாதுகாக்க, குளிர்பதன வசதி கொண்ட சேமிப்பு கிடங்குகள் தேவைப்படுகின்றன. சில மருந்துகள் சரியான வெப்பநிலையில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டும். பெட்ரோல், எண்ணெய் கழிவுகள் போன்ற திரவங்கள் கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட வேண்டும், பார்லி, பருப்பு வகைகள் போன்ற தானியங்கள், காற்றோட்டமுள்ள அறைகளில் பாதுகாக்கப்பட வேண்டும். ஜே. ஸ்டீபன்சனின் கூற்றுப்படி, "ஒரு பண்டகக் காப்பகம் என்பது பண்டங்களைப் பாதுகாப்பதற்காக அல்லது சேமித்து வைப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு இடம் ஆகும்."

### பண்டகக் காப்பீடுதல்

பண்டகக் காப்பீடு என்பது உடனடியாகத் தேவைப்படாத பொருட்களைச் சேதமடைதல் மற்றும் அழிவு ஆகியவற்றிலிருந்து பாதுகாத்து எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கும் ஒரு ஏற்பாடு ஆகும்.

"பண்டகக் காப்பகங்கள் என்பது பொருட்களின் சேமிப்பிற்காக உருவாக்கப்பட்ட ஒரு வணிகக் கட்டிடமாகும். சேமிக்கப்படும் பொருட்கள் என்பது மூலப்பொருட்கள், கட்டுமம் செய்யப்பட்ட பொருட்கள், உதிரி பாகங்கள், முடிவுற்ற பொருட்களான வேளாண்மை பொருட்கள், உற்பத்தி பொருள்கள் போன்றவற்றை உள்ளடக்கியது."

### 13.02 பண்டகக் காப்பகம் மற்றும் பண்டகக் காப்பீடுதல் இடையே உள்ள வேறுபாடுகள்

பண்டகக் காப்பகம் என்பது பொருட்களை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கும் இடமாகும், அதேசமயம் பண்டகக் காப்பு என்பது பொருட்களைச் சேமித்துப் பாதுகாக்கும் ஒரு ஏற்பாடு

ஆகும். பண்டகக் காப்பகத்தின் நோக்கம் என்பது பொருட்களைச் சேமித்து வைப்பது மட்டுமே. பண்டகக் காப்பின் நோக்கம் என்பது பொருட்களின் தரம் மற்றும் அளவு குறையாமல் பாதுகாப்பது ஆகும்.

### பண்டகக் காப்பின் தேவைகள்

#### (அ) பேரளவு உற்பத்தி

தேவையின் அளவை கருத்தில் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். பெரிய தொழிற்சாலைகளில் நவீன உற்பத்தி முறைகளைப் பயன்படுத்திப் பேரளவில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்தகைய பொருட்களுக்கான தேவை நாடு முழுவதும் பரவி உள்ளது. எனவே, இந்தப் பொருட்களைத் தேவையான பொழுது பயன்படுத்த பல்வேறு இடங்களில் பண்டகக் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

#### (ஆ) பொருட்களின் தன்மை

சில பொருட்கள் விரைவில் கெட்டுப்போகும் தன்மை கொண்டவை, எனவே அவைகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும். குளிர்பதன பண்டகக் காப்பகங்களில் அவற்றைச் சேமித்து வைத்தால் அப்பொருட்களின் வாழ்நாளை நீட்டிக்க இயலும்.

#### (இ) பருவகால உற்பத்தி ஆனால் தொடர் நுகர்வு

கோதுமை, சர்க்கரை மற்றும் பருப்பு வகைகள் போன்ற விவசாய விலை பொருட்கள் பருவங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் இந்தப் பொருட்களின் நுகர்வு ஆண்டு முழுவதும் நீடிக்கிறது. இவை சரியாகச் சேமித்து வைக்கப்படவில்லை என்றால், இந்தப் பொருட்கள் கெட்டுப்போகும் வாய்ப்புள்ளது. அவை நுகர்வுக்குப் பயன்படாத நிலை ஏற்படும்.

#### (ஈ) தொடர் உற்பத்தி ஆனால் பருவகால நுகர்வு

சில பொருட்கள் தொடர்ந்து ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை பருவகாலங்களில் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, மழைக்கால அங்கிகள், கம்பளி போர்வைகள், குடை, முதலியவற்றை ஆண்டு முழுதும் உற்பத்தி செய்வதால் அவற்றை பாதுகாக்க வேண்டியுள்ளது. மழை மற்றும் குளிர்காலங்களில் இவற்றின் பேரளவு தேவையைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கிறது.

#### (உ) உற்பத்தி மையங்களுக்கு அருகாமை

பண்டகக் காப்பக மையங்களில் உள்ள பொருட்களை நாடு முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்குத் தடை இல்லாமல் வழங்க வேண்டியுள்ளது. இந்த நோக்கத்திற்காக விற்பனை இடங்களுக்கு அருகாமையில் உள்ள பல்வேறு பண்டகக் காப்பகங்களுக்குத் தொடர்ந்து பொருள் வழங்கப்பட்டு வருகிறது.

## 13.03 பண்டகக் காப்பகங்களின் வகைகள்

பண்டகக் காப்பகங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

### I. உரிமையின் அடிப்படையில்

(அ) தனியார் பண்டகக் காப்பகங்கள்

(ஆ) அரசு பண்டகக் காப்பகங்கள்

(இ) பொதுப் பண்டகக் காப்பகங்கள்

(ஈ) கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்

(உ) பிணையகாப்பு பண்டகக் காப்பகங்கள்

(ஊ) நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்

(எ ) விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்

### II. பண்டங்களின் தன்மைகளின் அடிப்படையில்

(அ) பொதுப் பண்டகக் காப்பகங்கள்

(ஆ) சிறப்பு பொருள் பண்டகக் காப்பகங்கள்

(இ) குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்

(ஈ) தட்பவெப்ப நிலை கட்டுப்பாட்டு பண்டகக் காப்பகங்கள்

### I. உரிமையின் அடிப்படையில்

#### (அ). தனியார் பண்டகக் காப்பகங்கள்

இவ்வகை பண்டகக் காப்பகங்கள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை. அவை அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கானது. பிற உற்பத்தியாளர்கள் அல்லது வியாபார நிறுவனங்களுக்காக உருவாக்கப்பட்டவை அல்ல.

#### (ஆ). அரசு பண்டகக் காப்பகங்கள்

அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அரசு இந்த பண்டகக் காப்பகங்களை உருவாக்கி



XI_Tamil_commerce 1-15_001-147.indd 116 2/17/2021 3:11:17 PM

நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன. அனைத்து அரசு பண்டகக் காப்பகங்கள் பற்றிய விரிவான விளக்கம் இந்த அத்தியாயத்தின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

### (இ) பொதுப் பண்டகக் காப்பகங்கள்

இது பெரிய அளவில் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகக் காப்பகங்களைச் சொந்தமாக அமைக்க முடியாது. அவர்கள் இம்மாதிரியான பண்டகசாலையை பயன்படுத்திக் கொள்ளலாம். தனிநபர் அல்லது நிறுவனங்களால் அமைக்கப்படுபவை. இந்த பண்டகக் காப்பகங்கள் அரசாங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்படுகின்றன.

### (ஈ) கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்

இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்கின்றன. இவ்வகை பண்டகக் காப்பகங்கள் தங்கள் உறுப்பினர்கள் வசதிக்காக அமைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (NCDC)

### (உ) பிணையக் காப்பு பண்டகக் காப்பகங்கள்

இவ்வகை பண்டகக் காப்பகங்கள் அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன. வாணிபக் குறியிடுதல் போன்ற பணிகளும் இங்கு அனுமதிக்கப்படுகின்றன. இவ்வகை பண்டக காப்பகங்கள் அளிக்கும் பிணையக் காப்பு ரசீது மூலம் வங்கிகளில் கடன் பெற முடியும். சுங்க அதிகாரிகளின் நேரடி கட்டுப்பட்டின் கீழ் இப்பண்டகக் காப்பகங்கள் செயல்படுகின்றன.

### (ஊ) நிறுவனமுறை பண்டகக் காப்பகங்கள்

ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டகக் காப்பகங்களை வைத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக வங்கிகள், இரயில்வே துறை போன்றவர்கள் தங்கள் தேவைக்காக பண்டகக் காப்பகங்களை நிறுவிக்கொள்கின்றனர். பல்வேறு போக்குவரத்து முகமைகள் பண்டகக் காப்பகங்களை நிறுவி அங்கிருந்து சரக்குகளை அனுப்புதல், பெறுதல் போன்றவற்றை செய்கின்றனர்.

### (எ) விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்

விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் அதாவது தற்காலிகமாக சரக்குகளை வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும் பயன்படுகின்றன. இவ்வகை பண்டகக் காப்பகங்களை உரிமையாளர்கள் அல்லது மொத்த வியாபாரிகள் வைத்திருப்பர்.

தானியங்கள் மூடிய சேமிப்பகம், குழி சேமிப்பகம் போன்றவை, உணவு தானியங்களின் பெரிய அளவிலான சேமிப்புக்காக பயன்படுத்தப்படுகின்றன.

## II. பண்டங்களின் தன்மைகளின் அடிப்படையில்

### (அ). பொதுவான பண்டகக் காப்பகங்கள்

இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பொது பண்டகக் காப்பகங்கள் ஆகும். இங்கு எலி, பூச்சிகள், ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

**கிராமத் தானிய கிடங்குகள் அல்லது பண்டகக் காப்பகங்கள்**

கிராமங்களில் விவசாயிகள் அறுவடை செய்த உணவு தானியங்களைப் பாதுகாத்து சேமிக்க பூமிக்கடியில் அமைக்கப்பட்ட சேமிப்புக்களங்களைப் பயன்படுத்தினர். இதன் மூலம் பொருட்களை காற்று, மழை மற்றும் திருட்டு உள்ளிட்ட வெளிப்புறத் தாக்குதலிருந்து பாதுகாப்பாக சேமிக்க முடிந்தது. மேலும் மண்ணால் சுற்றுச்சுவர் மற்றும் மூடி கொண்ட கட்டமைப்பை தரையிலே உருவாக்கி பொருட்களை சேமித்தார்கள். முலாம் பூசிய இரும்புப் பெட்டகம் (PAU bin) மற்றும் கான்கிரீட் தொட்டி (Pusa bin), இரப்பர் தொட்டி (Hapur Tekka) ஆகியவை சிற்றளவு தானியக் காப்பகங்களாகப் பயன்படுத்தப்பட்டன. பரந்து மூடப்படும் காப்பகம் (Cap Storage), வேதி மாற்றமடையாப் பெட்டகங்கள் (Silos) ஆகியவை பேரளவு உணவு தானியக் கிடங்குகளாகப் பயன்படுத்தப்பட்டன.

### (ஆ) சிறப்பு பொருட்கள் பண்டகக் காப்பகங்கள்

புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாப்பதற்க்காக இவை சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பண்டகக் காப்பகங்களில் தரம் குறையாமலும் மற்றும் அளவு பாதுகாக்கப்படுகின்றன. பெட்ரோல் மற்றும் எண்ணெய் சேமிப்பகம் ஆகியவற்றிற்கு சிறப்பு வகையிலான செங்குத்து, உருளை சேமிப்பு தொட்டிகள் தேவைப்படுகின்றன.

### (இ) குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பகங்கள்

பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பகங்களில் சேமிக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி, போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சரியான தரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

### (ஈ) தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகக் காப்பகங்கள்

தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டகக் காப்பகங்கள் பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன. இந்த பண்டகக் காப்பகங்களில் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட சூழல் உருவாக்கப்பட்டு மலர்கள் போன்ற மிருதுவாக பொருட்கள் மாசற்ற சூழலில் பாதுகாக்க உருவாக்கப்பட்டன.

### (உ) தானியங்கி பண்டகக் காப்பகங்கள்

ஒரு நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்ட வசதிகள் இங்கு உண்டு. இந்த பண்டகக் காப்பக வளாகத்திற்குள் உட்புற விநியோகிப்பிற்கான செயல்கள், தயாரிப்பு கட்டுமம் செய்தல் (அதாவது பெரிய அளவிலான தயாரிப்புகளை வைத்திருக்கும் தளங்களில்) ஆகிய செயல்கள் தானியங்கிப்பட்டைகளில் எடுத்துச் செல்லப்படுகிறது. இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில்நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

## 13.04 பண்டகக் காப்பகங்களின் பணிகள்

பண்டகக் காப்பகங்கள் கீழ்க்கண்ட செயல்பாடுகளைச் செயல்படுத்துவதன் மூலம் சமூகத்திற்கு மதிப்புமிக்க சேவைகளை அளிக்கின்றன:

### (அ) பொருட்களை பாதுகாத்தல்

உற்பத்தி காலம், நுகர்வு, தேவை, மற்றும் விநியோகத்திற்கு இடையே இடைவெளி அதிகமாக உள்ளது. உபரி பொருட்கள் சரியான இடம் மற்றும் சரியான நேரத்தில் வழங்கும் நோக்கத்திற்காக பாதுகாப்பான முறையில் இங்கு சேமிக்கப்படுகின்றன.

### (ஆ) விலைகளை நிலைப்படுத்தல்

சரக்குகள் தேவைப்படும் போது தொடர்ந்து வழங்குவதன் மூலம் பண்டகக் காப்பகங்கள் விலைகளை நிலைப்படுத்துவதற்கு உதவுகிறது. விலை ஏற்ற இறக்கங்களை சமாளித்து ஆண்டு முழுவதும் ஏறக்குறைய ஒரே சீரான விலைகளில் பொருட்கள் கிடைக்க பண்டகக் காப்பகங்கள் ஒரு கருவியாக செயல்படுகிறது.

### (இ) தேவை மற்றும் வழங்கலையும் சமன்படுத்துதல்

சந்தையில் பொருட்களின் தேவையையும், பகிர்வையும் பண்டகக் காப்பகங்கள் சமன் செய்கிறது. அதாவது பொருட்கள் தேவை இல்லாத போது பண்டகக் காப்பகங்கள் பாதுகாத்து பின்னர் பொருட்கள் தேவைப்படும் பொழுது விநியோகிக்கப்படுகின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**பண்டகக் காப்பகங்கள் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் (WRDA)**

இந்தியாவில் பண்டக அபிவிருத்தி மற்றும் ஒழுங்கமைத்தல் ஒழுங்குமுறை ஆணையம் பண்டகக் காப்பகம் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நாட்டில் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதும், உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இந்தியாவில் பண்டகக் காப்பின் அளவை மேம்படுத்துதல் மற்றும் பொருட்களின் விலை, முதல் மற்றும் இடைத்தரகர்களின் கழிவை குறைப்பதன் மூலமாக, உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விலையில் கிடைக்கச் செய்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 118 2/17/2021 3:11:17 PM

குறிப்பிட்ட பருவ காலங்களில் விளையும் பொருட்கள் பிற பருவ காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்க உதவுகின்றது.

### (ஈ) வியாபார நிதி பெற உதவுதல்

பண்டகக் காப்பகங்களில் வைக்கப்பட்ட பொருட்களுக்கு ஆதாரமாக வழங்கப்பட்ட பண்டகக் காப்பக இரசீதை அடிப்படையாக வைத்து அப்பொருட்களின் உரிமையாளர் வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற முடியும்.

### (உ) இடர்களை ஏற்றல்

பண்டகக் காப்பகங்களில் உள்ள பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டால் பண்டகக் காப்பக உரிமையாளர் பொருட்களின் உரிமையாளருக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்கிறார். இதனால், பண்டகக் காப்பகங்களில் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படுகின்றது.

### (ஊ) விற்பனைக்கு முன்னேற்பாடு

பொருட்களை சந்தையிடுவதற்கு ஏற்ப நவீன கால பண்டகக் காப்பகங்களில் பொருட்களை வகைப்படுத்துதல், கட்டுமம் செய்தல், குறியீடு செய்தல் ஆகிய பணிகளை செய்கின்றன. எனவே பொருட்களை விற்பனைக்கு தகுதியாக்கம் செய்யும் பணிகள் பண்டகக் காப்பகங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

### (ஊ) சந்தை எல்லையை விரிவுபடுத்துதல்

உற்பத்தியாளர் பொருட்களை வெவ்வேறு இடங்களில் விற்பதற்காக பண்டகக் காப்பகங்களை நிறுவியும் அல்லது தேவையான இடங்களில் பண்டகக் காப்பகங்களின் சேவையை வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதன் மூலமும் பொருட்களுக்கான சந்தை விரிவடைகிறது.

### (எ) மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள்

பொருட்களை கலக்குதல், வகைப்படுத்துதல், கட்டுமம் செய்தல் மற்றும் குறியீடு செய்தல் போன்றவற்றை செய்ய பண்டகக் காப்பகங்கள் உதவி செய்கின்றன. இது பொருட்களை விற்பனை செய்யும் நிலைக்கு கொண்டு செல்ல உதவுகிறது.

## 13.05 பண்டகக் காப்பின் நன்மைகளும் குறைபாடுகளும்

### பண்டகக் காப்பின் நன்மைகள்

1. சரக்குகளை சேமித்து வைக்க இட வசதி இல்லாத வியாபாரிகளின் சரக்குகளை பாதுகாக்க பயன்படுகின்றது.

**பயணவழி பரிமாற்ற சேவை**

பல்வேறு இடங்களில் இருந்து பெறப்பட்ட பொருட்களை பண்டகக் காப்பகத்தில் வைத்து கலந்து மறுகட்டுமம் செய்தல் பயணவழி பரிமாற்ற சேவை எனப்படும்.

2. சரக்குகள் மொத்தமாக சேமித்து வைப்பதன் மூலம் வியாபாரிகளின் விநியோக செலவுகளைக் குறைக்கிறது மற்றும் வியாபாரிகள் தங்களுக்கு தேவைப்படும் பொருட்களை சிறிய அளவில் எடுத்துக்கொள்ள உதவுகிறது.
3. இது வழங்கல் வழியை தீர்மானிக்க உதவுகிறது. உற்பத்தியாளர் இதன் மூலம் மொத்த வியாபாரி அல்லது சில்லறை வியாபாரி என யாரை நியமிக்கலாம் என முடிவு செய்ய உதவுகின்றது.
4. இது ஆண்டு முழுவதும் விற்பனைக்கு உதவுகிறது மற்றும் "பொருள் இல்லை" என்ற நிலை ஏற்படாமல் தவிர்க்கிறது.
5. திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இருவருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றது.

### பண்டகக் காப்பின் குறைபாடுகள்

பின்வரும் காரணங்களால் பண்டகக் காப்பகம் சிறப்பாக செயல்பட முடியவில்லை:

1. உற்பத்தி இடத்திற்கும் மற்றும் பண்டகக் காப்பகத்திற்கும் இடையே போதுமான போக்குவரத்து வசதியின்மை.
2. அழுகக்கூடிய மற்றும் அழுகாத பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கு ஏற்ற மாதிரியான சேமிக்கும் வசதியின்மை.
3. பண்டகக் காப்பகத்தின் சிக்கலான நடைமுறைகள் கல்வியறிவு பெறாதவர்கள் மற்றும் விவசாயிகளின் அறியாமை காரணமாக இந்த நடைமுறைகளை பின்பற்ற முடியவில்லை.
4. பட்டியல் குறியீடு (Barcode) தொழில்நுட்பத்தின் சிக்கலான நடைமுறைகளால், சில உற்பத்தியாளர்கள் தங்களின் பொருட்களை சேமிக்க ஆர்வம் செலுத்துவதில்லை.
5. பண்டகக் காப்பகத்தின் மூலம் நிதியுதவி பெறுவதில் தாமதம் ஏற்படுவதால் பொருட்களின் உரிமையாளருக்கு இழப்பு ஏற்படுகின்றது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 119 2/17/2021 3:11:17 PM

## 13.06 பண்டகக் காப்பு ஆவணங்கள்

கீழ்க்கண்ட ஆவணங்கள் பண்டகக் காப்பில் பயன்படுத்தப்படுகிறது.

### அ) பண்டக சான்றாணை

இவ்வகை ஆவணங்கள் பண்டகக் காப்பக காப்பாளரால் பொருட்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இது பொருளின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம். இவ்வகை ஆவணத்தை மேலெழுதுவதன் மூலம் எளிமையாக மற்றவருக்கு உரிமை மாற்றம் செய்யலாம். எல்லா பொருட்களையும் உரிமை மாற்றம் செய்வதற்கு பண்டக சான்றாணை போதுமானது. ஆனால், ஒரு பகுதி பொருட்களை மட்டும் உரிமை மாற்றம் செய்ய வழங்கல் ஆணை (Delivery Order) தேவைப்படுகின்றது. வழங்கல் ஆணையுடன் பண்டக சான்றாணை இணைக்கப்படுதல் வேண்டும்.

### ஆ) பண்டகக் காப்பாளர் இரசீது

பண்டகக் காப்பாளரால் பொருட்களை பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ஆவணமே பண்டகக் காப்பாளர் இரசீது ஆகும். இவ்வகை இரசீது பண்டகக் காப்பகத்தில் பொருட்களை நிபந்தனை அடிப்படையில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக பொருளின் உரிமையாளருக்கும் பண்டகக் காப்பாளருக்கும் இடையே ஏற்படும் உடன்பாட்டைக் குறிக்கிறது. இது உரிமை மாற்றத்தை நிகழ்த்தும் ஆவணம் அல்ல. மேலும் இவ்வாவணம் மாற்றத்தக்கதல்ல.

### இ) துறைமுகச் சான்றாணை

கப்பலில் சரக்குகளை ஏற்றுவதற்கு துறைமுகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்துக்கு பெயரே 'துறைமுகத்தளம்' (Dock) ஆகும். துறைமுகச் சான்றாணை துறைமுக அதிகாரிகளால் பொருட்களை துறைமுகத் தளத்தில் பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படுகிறது. துறைமுக அதிகாரிகளால் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பொருள்களுக்கு கொடுக்கப்படும் அத்தாட்சியே இவ்வாவணமாகும். சரக்கை பெறும் உரிமையை மூன்றாவது நபருக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

### ஈ) துறைமுக இரசீது

துறைமுக அதிகாரிகள் சரக்குகளை பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியாக இவ்வாவணம் சரக்கின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இது உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமல்ல. ஆகவே, பொருட்களை பெறும் உரிமையை மற்றவருக்கு மாற்றம் செய்ய இயலாது.

### உ) வழங்கல் ஆணை

பண்டங்களில் உரிமையாளர் வழங்கல் ஆணையில் குறிப்பிட்டுள்ள நபருக்கோ அல்லது வழங்கல் ஆணையை கொணர்பவருக்கோ குறிப்பிட்ட சரக்குகளை வழங்குமாறு பண்டகக் காப்பகங்கள் காப்பாளருக்கு பிறப்பிக்கப்படும் ஆணையே வழங்கல் ஆணையாகும். பண்டகக் காப்பாளர் வழங்கல் ஆணையில் குறிப்பிட்ட சரக்குகளை வழங்குகிறார். இந்த ஆவணத்தின் மூலமாக உரிமை மாற்றம் நிகழ்கிறது.

## 13.07 இந்தியாவில் பண்டகக் காப்பு

இந்தியா ஒரு விவசாய நாடு என்றாலும், 1950 ஆண்டு வரை பண்டகக் காப்பகத்தின் முக்கியத்துவத்தை உணரவில்லை. விவசாயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16 சதவிகிதமும் மற்றும் இந்திய மக்களில் சுமார் 52 சதவிகிதம் பேருக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது. சரியான பண்டகக் காப்பகம் இல்லாததால்

**பண்டக சான்றாணை மற்றும் பண்டகக் காப்பாளர் இரசீதிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

| பண்டக சான்றாணை | பண்டகக் காப்பாளர் இரசீது |
|---|---|
| 1. உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமல்ல. |
| 2. சரக்கைப் பெற்றுக் கொண்டதற்கான ஒரு அத்தாட்சி மட்டுமல்லாது சரக்கைப் பெறுவதற்கான அதிகாரத்தைத் தரும் ஒரு ஆவணமாகும். | சரக்கைப் பெற்றுக் கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆகும். |
| 3 மற்றவருக்கு இதை மாற்ற இயலும். | இதை மாற்றித்தர இயலாது. |
| 4. இதைப் பிணையமாக வைக்க முடியும். | இதைப் பிணையமாக வைக்க முடியாது. |
| 5. பண்டகச் சான்றாணையை மேலெழுதிக் கொடுப்பதன் மூலம் பொருட்களைப் பண்டகக் காப்பகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். | இந்த இரசீதையும் பொருட்களின் உரிமையாளார் கடிதத்தையும் இணைத்தால் மட்டுமே பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். |



XI_Tamil_commerce 1-15_001-147.indd 120 2/17/2021 3:11:18 PM

விவசாய உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் மேலாக பொருட்கள் வீணாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அகில இந்திய கிராமப்புற கடன் கணக்கீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், விவசாய பண்டக (வளர்ச்சி மற்றும் பண்டகக்காப்பு) கழகச்சட்டம் 1956, தேசிய கூட்டுறவு வளர்ச்சி மற்றும் பண்டகசாலை வாரியம் அமைக்க அரசுக்கு அதிகாரம் வழங்கியது.

**பொதுத்துறையில் பேரளவு பண்டகக் காப்பக வசதிகளை நடத்திவரும் மூன்று பெரிய முகமைகளாவன.**

### (அ) இந்திய உணவுக் கழகம்

இது உணவு தானியங்களைப் பாதுகாக்கும் வசதிகளை வழங்குகிறது. இந்நிறுவனம் பொருட்களைப் பாதுகாக்கும் வசதியை மாநில, மத்திய பண்டகக் காப்பகங்கள், மாநில அரசுகள் மற்றும் தனியார்களிடமிருந்து வாடகைக்கு எடுத்துக் கொள்கிறது. இந்திய உணவுக் கழகம் 74.6 மில்லியன் டன்கள் சரக்குகளை சேமிக்கும் திறன் பெற்றுள்ளது.




(ஆகஸ்ட் 28, 2013 அரசு மாநிலங்கள் அவையில் கூறியது). உணவுக் கொள்கையின் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற 1964 ஆம் ஆண்டின் உணவுச் சட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகம் அமைக்கப்பட்டது:

பொது விநியோக திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உணவு தானியங்கள் விநியோகம்.

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் குறைந்த வாடகையில் பொருட்களைப் பாதுகாத்தல்

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தும் அளவில் பொருட்களைப் பராமரித்தல் மற்றும் பண்டகக் காப்பகங்களில் உள்ள உணவு தானியங்களின் சேமிப்பு அளவினை முறைப்படுத்துதல்.

### (ஆ) மத்திய பண்டக காப்பக கழகம்

இது 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய பண்டகக் காப்பக கழகத்தின் மொத்த சேமிப்பு திறன் 11.17 மில்லியன் டன்கள் ஆகும். இது நாட்டில் மொத்தம் 464 பண்டகக் காப்பகம் மூலம் செயல்படுகிறது. (செப்டம்பர் 30, 2017 வரை).

**மத்திய பண்டகக் காப்பகத்தின் பணிகள்**

1. வேளாண் பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய கருவிகள் மற்றும் பிற பொருட்களின் சேமிப்பிற்கான முகமைகள் ஏற்படுத்துவது.
2. பொருட்களின் உரிமையாளர்களிடம் கடன் வாங்குவதற்கான மாற்றத்தக்க பண்டக இரசீதுகள் வழங்குதல்.
3. தன்னிடம் ஒப்படைக்கப்பட்டப் பொருட்களைக் கவனமாகப் பாதுகாத்து எலிகள், பூச்சிகள் மற்றும் ஈரத்தன்மை, மழை இவற்றிலிருந்து பாதுகாப்பது.
4. கொள்முதல் மற்றும் விற்பனை, சேமித்து வைத்தல் விநியோகித்தல் மற்றும் பொருட்களின் போக்குவரத்து ஆகியவற்றிற்கும் அரசாங்கத்திற்கு ஒரு முகவராக செயல்படும்.
5. முறையாக பொருட்களைத் தரவரிசைப் படுத்துவதன் மூலம் சேமித்தல், சந்தையிடுதல் செலவினங்களைக் குறைக்க உதவுகிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 121 2/17/2021 3:11:18 PM

### ஆ) மாநில பண்டகக் காப்பக கழகங்கள்

*மத்திய பண்டகக் காப்பக கழகத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு ஒவ்வொரு மாநில அரசும் அதன் சொந்த பண்டக காப்பக கழகத்தை நிறுவ முடியும். இதை நிறுவுவதற்கான நிதியை 50 விழுக்காடு மத்திய பண்டக காப்பக கழகமும் 50 விழுக்காடு மாநில அரசும் தருகிறது.*

### இ) தமிழ்நாடு பண்டக காப்பக கழகங்கள்

*இது 1959 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது தமிழ்நாடு பண்டக காப்பக கழகத்தின் சேமிப்பு திறன் 6.83 லட்சம் மெட்ரிக் டன் ஆகும், இதில் 7 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 256 கோட்டங்கள் உள்ளன. இது மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது.*

**கலைச்சொற்கள்**

*பண்டககாப்பகம், பண்டகசான்றாணை, வழங்கல் ஆணை, கப்பல் துறைமுகச் சான்றாணை, துறைமுக இரசீது, இந்திய உணவுக் கழகம், மத்திய பண்டகக் காப்பக கழகம்.*

**மேலும் அறிவதற்கு**

*எதிர்கால பண்டகக் காப்பகம்: எப்படி திறன் தாக்கத்தை ஏற்படுத்தும்?*

*2019ஆம் ஆண்டிலிருந்து, புதிய தொழில் நுட்பமானது பண்டக காப்பு மேலாண்மை அமைப்பு (WMS) மூலம் பண்டகக் காப்பகங்களை திறமையாகவும் மேம்படுத்த உதவும். செயற்கை நுண்ணறிவு, 3D அச்சிடுதல் மற்றும் ஓட்டுநரில்லா வாகனம் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் நீங்கள் நினைப்பதை விட எல்லா இடங்களிலும் பரவலாக கிடங்குகளில் பயன்படுத்தப்படலாம். 2030 ஆம் ஆண்டுக்குள், பண்டக காப்பகங்கள் பங்கு எதிர்காலத்தில் பூஜ்ஜியம் மின்சார பயன்பாட்டினை அடைய முயற்சிக்கும். பண்டகக் காப்பக கட்டிடங்கள் 24 x 7 x 365 செயல்படும். உத்திகளை உருவாக்குவதன் மூலம், பண்டக காப்பகச் செலவுகள் சேமிக்க மற்றும் தீங்கு விளைவிக்கும் காரணங்களை தடுக்கமுடியும். சூரிய ஒளித்தகடு ஆற்றல் பண்டக காப்பகங்களில் முக்கிய ஆதாரமாக மாறும்.*

## பயிற்சி

### I சரியான விடையைத் தெரிவு செய்க.

1. **பண்டகக் காப்பகம் _________ தடையை நீக்குகிறது**

   அ) ஆள்சார்    ஆ) காலத் தடை

   இ) இடர்ப்பாட்டு தடை    ஈ) அறிவுத் தடை

2. **பண்டகக் காப்பகம் __________ மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.**

   அ) சந்தையிடுதல்    ஆ) வரிசைப்படுத்துதல்

   இ) வழங்கல்    ஈ) விற்பனை செய்தல்

3. **_____________ வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.**

   அ) துறைமுகச் சான்றாணை

   ஆ) பண்டகக் காப்பாளர் இரசீது

   இ) துறைமுக இரசீது

   ஈ) பண்டக சான்றாணை

4. **பிணைய அடிப்படையில் பொருட்கள் பாதுகாப்பதற்காக அரசால் உரிமம் வழங்கப்பட்ட பண்டகக் காப்பகங்கள் _________ ஆகும்.**

   அ) பிணைய பண்டகக் காப்பகங்கள்

   ஆ) குளிர் பதன

   இ) பொது

   ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. **பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக _________ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

   அ) ஆவணம்    ஆ) தனியார்

   இ) குளிர் பதன    ஈ) கூட்டுறவு

**விடைகள்**

*1. ஆ   2. இ   3. ஈ   4. அ   5. இ*

### II. குறுவிடை வினாக்கள்.

1. *பண்டகக் காப்பகங்கள் என்றால் என்ன?*
2. *பண்டகக் காப்பகங்களின் பல்வேறு வகைகள் யாவை?*



XI_Tamil_commerce 1-15_001-147.indd 122 2/17/2021 3:11:18 PM

3. பண்டகக் காப்பகங்களின் இரண்டு பணிகள் குறிப்பிடுக.

## III. சிறுவிடை வினாக்கள்.

1. பண்டகக் காப்பாளர் இரசீது – பண்டக சான்றாணை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)

2. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? (ஏதேனும் 5)

2. பண்டகக் காப்பின் நன்மைகளை விவரி.

5IFE5N



XI_Tamil_commerce 1-15_001-147.indd 123 2/17/2021 3:11:18 PM

## அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம்

# 14

# போக்குவரத்து


### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. போக்குவரத்தின் பல்வேறு வகைகளைப் புரிந்து கொள்ள இயலும்.
2. வணிகத்திற்கு போக்குவரத்து ஆற்றும் சேவைகளை விவரித்துக் கூற இயலும்.
3. போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை அறிய இயலும்.
4. பொது சரக்கேற்றி பற்றி அறிந்து கொள்ள இயலும்.

### அறிமுகம்

போக்குவரத்துச் சேவையானது உற்பத்தியாளர்களிடம் இருந்து பொருள்களை நுகர்வோர் இருக்கும் இடத்திற்கு கொண்டு செல்லும் பணியை எளிதாக்குகிறது. போக்குவரத்து ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொதுமக்கள் பயணிக்க உதவுகிறது. போக்குவரத்தின் பல்வேறு வகைகள் பற்றிக் கீழே காண்போம்.




## 14.01 போக்குவரத்து – பொருள்

போக்குவரத்து என்பது, சாலை, தொடர்வண்டி, கால்வாய், கடல் மற்றும் விமான போக்குவரத்து ஆகியவற்றின் செயல்பாடுகள் செம்மையாக இயங்குவதற்கு உறுதுணையாக அமைந்துள்ள எழுத்தர், மன மற்றும் உடல் உழைப்பு சார்ந்த அனைத்து பணிகளையும் ஒரு சேரத் தழுவியுள்ள சொல்லைக் குறிக்கும். பொருட்கள் பயனற்றவையாக இல்லாமல் இருக்க வேண்டுமானால் மக்கள் விரும்புகின்ற பொருட்கள் எங்கும், எப்பொழுதும் எளிதாக கிடைக்கிற வகையில் இருக்க வேண்டும். வணிகவியலின் ஒரு ஒருங்கிணைந்த உட்பிரிவு போக்குவரத்து ஆகும். இது பொருட்கள் மற்றும் மனிதர்களைச் சுமந்து கொண்டு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வதையும், மேலும் இடம் மற்றும் காலப் பயன்பாட்டை உருவாக்கியும் தருகிறது. இது இடத்தடையை நீக்குகிறது.

### வரைவிலக்கணம்

கே.கே.செக்சேனா அவர்கள், "ஒரு இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது பணியைச் செய்கிறது" என்று வரைவிலக்கணம் தந்துள்ளார்.

## 14.02 போக்குவரத்தின் வகைகள்

போக்குவரத்து அமைப்பினை, அவை சார்ந்துள்ள போக்குவரத்து வகைகள், போக்குவரத்துக்கான தேவைகள் மேலும் போக்குவரத்து பயன்பாட்டில் உள்ள உந்து சக்தி ஆகியவற்றைப் பொறுத்து பல்வேறு வழிகளில் வகைப்படுத்தலாம்.

### அ. நிலப் போக்குவரத்து

நில வாகனப் போக்குவரத்து மூலம் மக்கள் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை நிலப்போக்குவரத்து என்றழைக்கிறோம். இது 'மேற்பரப்பு போக்குவரத்து' என்றும் அழைக்கப்படுகிறது.

#### 1. பொதி விலங்குகள்

மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும் சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 124 2/17/2021 3:11:19 PM

என்றழைக்கின்றோம். நவீன போக்குவரத்து சாதனங்களால் எளிதில் அணுகமுடியாத பகுதிகளில் பொதி விலங்குகள் பயன்படுத்தப்படுகின்றன. சாலை போக்குவரத்து மற்றும் இரயில் போக்குவரத்து இல்லாத பகுதிகளில் பொதி விலங்குகள் போக்குவரத்து முக்கியப் பங்கை வகித்துள்ளது என்றால் மிகையாகாது.

### 2. மாட்டு வண்டிகள்

இந்தியாவில் பொருட்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளே ஆகும். இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது. இது விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைக்கும் மற்றும் நுகர்வோர் பொருட்களை கிராமங்களுக்கும் கொண்டு செல்கிறது.

**நடை பாதைகள் போக்குவரத்து**

இது மலைப்பாங்கான பகுதிகள், காட்டுப் பகுதிகள் மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பயன்படுத்தப்படும் மிகவும் பழமையான முறை. இந்த போக்குவரத்துக்காக மனிதர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

### 3. சாலைப் போக்குவரத்து

சாலைப் போக்குவரத்து என்பது குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்திவாய்ந்ததாகவும் உள்ளது. பல்வேறு இடங்களில் சாலைகளை இணைப்பதன் மூலம் நாட்டிலுள்ள பிரதான தேசிய வழியில் இணையாமல் தொலைதூரத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழும் பெரும்பாலான மக்களை இணைத்து அடிப்படை உள்கட்டமைப்புகளை இது வழங்குகிறது. இது நெகிழ்வுத்தன்மை, நம்பகத்தன்மை, வேகம் மற்றும் வீட்டிற்கு அருகாமையிலேயே வழங்கப்படும் சேவை போன்ற எண்ணிலடங்கா நன்மைகள் பலவற்றை வழங்குகின்றன. மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும், அதற்கு துணைபுரியவும் உதவுகிறது.

### 4. இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்

நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும் சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருட்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர். பல்வேறு வகையான வேகமூட்டும் கருவிகள் மற்றும் அதிகமான சுமைகளைச் சுமந்து சென்று இயங்கும் முறைகளையும் உள்ளடக்கிய இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள் சாலைப் போக்குவரத்தின் பரிணாம வளர்ச்சியின் வரவாக கிடைத்துள்ளன. பெட்ரோல் இயந்திரம், பின்னர் டீசல் இயந்திரத்தின் அறிமுகம் இதற்கும் தொடர் வண்டிக்கும் நல்ல போட்டியை வழங்கி வருகிறது.



பொதி விலங்குகள்



மாட்டு வண்டிகள்

### 5. டிராம் வண்டிகள்

19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது. டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும் பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது. அதன் சுமை திறன் மிகப் பெரிய அளவு கொண்டது. இது பெரிய நகரங்களில் அதிகபட்சமாக சமாளிக்க முடியாத போக்குவரத்தின் போது பயன்பட்டது. தற்போதைய இயந்திர பேருந்துகளின் மிகப்பெரிய அறிமுகத்தின் காரணமாக டிராம் வண்டிகள் வெகுவாக குறைந்துள்ளன. சென்னை நகரில் டிராம் வண்டிகள் போக்குவரத்து 1933 ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்தது.

### 6. தொடர்வண்டிப் போக்குவரத்து

ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள



**தொடர்வண்டிகள்**



**டிராம்வேஸ்**

போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது. நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளைச் சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான போக்குவரத்தாக இருக்கின்றன.

தொடர் வண்டிகள் ஒரு அத்தியாவசிய பொது சேவையை வழங்குகிறது. ஒரு பெரிய அளவிலான மூலதன செலவினத் தொகை தண்டவாளங்கள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் முதலியவற்றிற்கு தேவைப்படுகிறது. ஒரு நாட்டின் மிகப்பெரிய பொது பயன்பாட்டிற்காக தொடர் வண்டிகள் உள்ளன. பயனிகளையும், சரக்குகளையும், தண்டவாளத்தில் இயங்கும் தொடர் பெட்டிகள் மூலம் ஏற்றிச் செல்லும் ஒரு வழிமுறையாகும். தொழில்துறைப் புரட்சியில் தொடர் வண்டிகள் போக்குவரத்து முக்கியமானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயல்பாட்டில் இருக்கும் மூன்று வகையான தடங்கள் உள்ளன. அவர்கள் (i) மீட்டர் கேஜ் பாதை (ii) அகல பாதை மற்றும் (iii) குறுகிய பாதை

*இந்திய தொடர்வண்டி உலகிலேயே மிகப் பெரிய தொடர்வண்டி நிறுவனமாகும். இந்திய தேசிய வலைப்பின்னல் இணைப்பானது, உலகின் நான்காவது மிக நீண்ட அளவிலான, அரசுக்கு சொந்தமாக இயக்கக்கூடிய இந்திய தொடர்வண்டியின் இயக்க பாதை 65,000 கிமீ மேல் அடங்கும். இந்த வலைப்பின்னல் இணைப்பானது, 2013 இல் 8 பில்லியன் பயணிகள் (உலகிலேயே அதிகபட்சம்) பயன்பாட்டைக் கொண்டுள்ளது.*

### தொடர்வண்டிப் போக்குவரத்தின் நன்மைகள்

1. நீண்ட தூரத்திற்குள் கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2. தடையற்ற சேவைகளால் நீண்ட தொலைவு பயணத்தை பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3. மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்குச் சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும். சரக்குகள் பொதுவாக மூடப்பட்ட பெட்டிகளில் சுமந்து செல்லப்படுவதால் வெயில் மற்றும் மழை போன்றவைகளால் பாதிக்கப்படுவது கிடையாது.
4. ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர்வண்டி ஓட்ட செலவினங்கள் தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும், மேலும் அது மலிவான போக்குவரத்து முறையை நிரூபிக்கும். அதிக வேகத்துடன் நீண்ட தூரத்தில் சரக்குகளைச் சுமந்து செல்வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்தை விட குறைவான நேரமே தேவைப்படுகிறது.
5. இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
6. இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

### தொடர்வண்டிப் போக்குவரத்தின் குறைபாடுகள்

1. குறுகிய தூரத்திலிருக்கும் எடை குறைந்த பொருள்களைக் கொண்டு செல்ல இயந்திர போக்குவரத்தை விட தொடர்வண்டி போக்குவரத்து செலவின விகிதங்கள் அதிகம்.
2. இது நெகிழ்வானது, இது ஒரு குறிப்பிட்ட பாதையில் இணைக்கப்பட்டுள்ளதால், அது

திட்டமிடப்பட்ட வழிகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது.

3. அது இயங்காத கிராமப்புறங்களில் இயக்க அதிக செலவுகள் காரணமாக போதுமான போக்குவரத்தை வழங்க முடியாது.

4. தண்டவாளங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தலுக்குஅதிகமுதலீடுதேவைப்படுவதால் இதை பயன்படுத்துபவர்களுக்கு கட்டணம் அதிகரிக்கிறது.

5. தொடர்வண்டிகள் முழுமையாக பயன்படுத்தப் படாத நிலையில் மற்றும் சரக்குப் பெட்டிகள் மற்றும் பயணியர் பெட்டிகள் முழுமையாக நிரம்பாத நிலையில் இயக்கப்படும்போது அதனால் ஏற்படும் நிதிச்சுமையை ஏற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

## சமீபத்திய போக்குவரத்து வளர்ச்சி

### a) மெட்ரோ இரயில்

மெட்ரோ ரயில் என்பது ஒரு அதிவிரைவு போக்குவரத்து அமைப்பு (MRTS) ஆகும். இது வசதியான, வேகமான, திறமையான, நம்பகமான மற்றும் பாதுகாப்பான நகர்ப்புற போக்குவரத்து ஆகும். அதிவிரைவு போக்குவரத்து என்பது அதிக இழுவைத்திறன் கொண்ட இரயில், மெட்ரோ இரயில், சுரங்கப்பாதை வழி, குழாய் வழி மற்றும் நிலத்தடி வழி போன்ற அதிக திறன் கொண்ட பொது போக்குவரத்துக்களை உள்ளடக்கியது ஆகும்.

### b) மோனோ இரயில்

மோனோ இரயில் சாதாரண இரயில் போல இருக்கும், ஆனால் அது தொடர் வண்டியில் இருக்கும் இரண்டு இணை சக்கரங்கள் உள்ளது போல் இல்லாமல், நிலை நிறுத்த கீழே உள்ள பகுதியில் தண்டவாளங்களைப் பயன்படுத்திக் கொண்டு இயங்கும். பெரிய நகரங்களைச் சுற்றியுள்ள மக்கள் பயணத்திற்கு பெரும்பாலும் மோனோ இரயில்களைப் பயன்படுத்துகின்றனர். சில மோனோ இரயில்கள், தண்டவாளத்தில் செல்ல காந்தங்களைப் பயன் படுத்துகிறது, தண்டவாளங்கள் மற்றும் மோனோ இரயில் இரண்டிற்கும் உள்ள உராய்வையும் காந்தங்கள் குறைக்கிறது. முதல் மாதிரி மோனோ இரயில் 19 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

### c) புல்லட் இரயில்

உயர் வேக இரயில் என்பது இரயில் போக்குவரத்தின் ஒரு வகை ஆகும், இது பாரம்பரிய இரயில் போக்குவரத்தைவிட வேகமாக இயங்குகிறது,



மெட்ரோ இரயில்




மோனோஇரயில்

இது ஒரு ஒருங்கிணைந்த உருட்டல் அமைப்பு மற்றும் சிறப்பு வழித்தடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது. முதன்முதலாக 1964 ஆம் ஆண்டு ஜப்பானில் செயல்பட்ட இந்த அமைப்பு புல்லட் ரெயில் என்று பரவலாக அறியப்பட்டது. உயர் வேக இரயில்கள் பொதுவாக தொடர்ச்சியாக அமைக்கப்பட்ட நிலையான இரயில் பாதைகளில் இயங்குகின்றன.

### d) குழாய் போக்குவரத்து

இது பொருள்கள் மற்றும் மூலப் பொருள்களை குழாய் மூலம் கொண்டு செல்லும் ஒரு வகை போக்குவரத்து ஆகும். திரவங்கள் மற்றும் வாயுக்கள் குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. கச்சாப் பொருள்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியம், எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் உயிரி எரிபொருள் போன்ற எரிபொருள்கள், கழிவுநீர், குழம்பு மற்றும் நீர் உட்பட பிற திரவங்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கு குழாய் பாதை பயன்படுகிறது. இதை நிறுவ மிக அதிக முதலீடு தேவைப்படுகிறது.

### e) கன்வேயர் போக்குவரத்து

இது பரவலாக அறியப்பட்ட ஒரு வகை போக்குவரத்து, இது போக்குவரத்திற்கான



XI_Tamil_commerce 1-15_001-147.indd 127 2/17/2021 3:11:26 PM



புல்லட் இரயில்



குழாய் போக்குவரத்து



இரும்புக்கயிறு போக்குவரத்து



உயர் சுழற்சி வளையம்

பாதையினை கன்வேயர் பெல்ட் யுக்தியைப் பயன்படுத்தி உள்ளடக்கியுள்ளது. கன்வேயர் பெல்ட் போக்குவரத்து, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சக்கரங்கள், தொடர்ச்சியான சுழற்சியைக் கொண்டு நகருபவை. எஸ்கலேட்டர், மிகப்பெரிய கட்டிடங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் மக்கள் இடம்பெயர்வதற்கு பயன்படுத்தப்படும் கட்டிட உயர்த்திகள் (Elevators) மற்றும் நகரும் படிக்கட்டுகள் (Escalators) ஆகியவை இவ்வகை போக்குவரத்தில் மிகச்சிறந்த உதாரணமாகும்.

### f) கயிறு வழிப் போக்குவரத்து

இரும்புக் கயிறு மூலமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருளையோ அல்லது மக்களையோ சுமந்து செல்லும் போக்குவரத்து ஆகும். இத்தகைய போக்குவரத்து சாலை அமைக்க முடியாத இடங்களிலும் மற்றும் சாலை அமைக்க அதிகமான செலவு ஆகக்கூடிய இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இது மின்சாரத்தின் உதவியுடன் செயல்படுகிறது. மலைப்பாங்கான மிகவும் பின்தங்கிய பகுதிகளுக்கு கயிறு வழி போக்குவரத்து மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

### g) உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து

ஒரு வெற்றிடக் குழாய்க்குள் உந்தப்பட்ட சக்தி கொண்டு அதிக வேகத்தில் பயணியர் கொள்கலங்களை நகர்த்திச் செல்லும் போக்குவரத்து முறையாகும். இவை காந்த சக்தி அல்லது காற்று மிதவைகளின் அடிப்படையில் இயங்குபவை. இதில் பெருமளவு உராய்வு தவிர்க்கப்படுவதால் மணிக்கு 760 மைல் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. இது எதிர்காலத்தில் சிறந்த போக்குவரத்து சாதனமாக விளங்கும். பழமையான சாலை மற்றும் இரயில் போக்குவரத்தைவிட எதிர்காலத்தில் சிறந்த போக்குவரத்து சாதனமாக விளங்கும் என்றால் மிகையாகாது. எலோன்மஸ்க் என்ற தொழில் முனைவோரின் கூற்றுப்படி இது "ஐந்தாம் வகை போக்குவரத்து" (Fifth mode of Transport) என்றழைக்கப்படுகிறது.

## ஆ. நீர்ப் போக்குவரத்து

"நீர் இயற்கை கொடுத்த வெகுமதி ஆகும்." மனித நாகரிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் படிப்படியான பயன்பாடு மூலம் பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு தண்ணீர் வளங்களைப் பயன்படுத்துகிறது. கட்டுமான, வடிவங்கள் உந்துசக்தி, மற்றும் கப்பல்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றம் காரணமாக நீர்ப் போக்குவரத்துகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 128 2/17/2021 3:11:29 PM

*நீர்ப் போக்குவரத்து என்பது மக்களை நகர்த்துவதற்காக கடல், பெருங்கடல், ஏரி, கால்வாய், நதி, முதலியனவற்றில் படகு, கப்பல் அல்லது படகோட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயல்முறை ஆகும். இந்த வகை கட்டுரையில் நீர்ப் போக்குவரத்தை பயன்படுத்திக் கொள்வது பற்றி உள்ளடக்கிய கட்டுரைகள் இல்லை.*

*நீர்ப் போக்குவரத்தில் இரண்டு வகைகள் உள்ளன.*
*(i). உள்நாட்டு நீர்வழி*
*(ii). பெருங்கடல் நீர்வழி*

### (i) உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

*உள்நாட்டு நீர்வழிகளில் நதிகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவை அடங்கும். இது உள் நீர்ப் போக்குவரத்து என்றும் அழைக்கப் படுகிறது. இயற்கையாக இயங்கக்கூடிய ஆறுகள் இயற்கை நீர்வழிகள் என்று அழைக்கப்படுகின்றன. கால்வாய்கள் மற்றும் கால்வாய் ஆறுகள் 'செயற்கை நீர்வழி' வகைக்கு சொந்தமானவை. பொதுவாக சிறிய படகுகளும் விசைப் படகுகளும் நதிக்கரையில் இருக்கும் மக்கள் மற்றும் சரக்குகளைச் சுமந்து செல்லும். ஆறுகள் போதுமான ஆழமாக இருந்தால் பெரிய கப்பல்களும் அவற்றில் எளிதாகச் செல்ல முடியும். மனித முயற்சியால் கால்வாய்கள், கடற்பயணம் மற்றும் நீர்ப்பாசனம் என்ற இரட்டை நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது.*



**படகு இல்லம்**



**உலாப் படகு**

### உள்நாட்டு நீர்வழி நன்மைகள்

*a)* *இது பிற முறைகள் போக்குவரத்தை விட மலிவான பயணமாக கருதப்படுகிறது.*

*b)* *இது பயணத்தின் போது நடுக்கம் மற்றும் குதித்தல் இல்லாத காரணத்தால் அது சுலபமாக பொருட்களைக் கொண்டு செல்கிறது. இது சேதமாகாமல் இருக்க வேண்டிய, கண்ணாடியால் செய்யப்பட்ட பொருட்கள், மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் போன்ற பலவீனமான பொருட்களைக் கொண்டுச் செல்ல மிகவும் பொருத்தமானது.*

*c)* *இது கனரக சுமைகளுக்கு மிகவும் பொருத்தமானது.*

*d)* *நீர் போக்குவரத்துகளில் குறைந்தளவே மாசு உள்ளது.*

*e)* *ஆற்றின் சேவைகள் மற்றும் முதலீட்டின் ஆரம்ப முதலீடு மற்றும் சாலை பராமரிப்பு மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியவற்றோடு ஒப்பிடும் போது செலவுகள் குறைவாகவே உள்ளது.*

### உள்நாட்டு நீர்வழிகளின் குறைபாடுகள்

*a)* *இது மெதுவான போக்குவரத்திற்கு வழிவகுக்கிறது. இதை ஒப்பிடுகையில், இரயில்வே விரைவான, பாதுகாப்பான மற்றும் மலிவான போக்குவரத்தாக உள்ளது.*

*b)* *மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்குகள், கோடைகாலத்தில் ஏற்படும் நீர் பற்றாக்குறைகள் ஆகியன படகுகள் மற்றும் விசைப் படகுகள் போக்குவரத்தினைப் பாதிக்கின்றன.*

*c)* *சில நேரங்களில் ஆறுகள் தங்கள் வழியை மாற்றிக் கொள்கின்றன. இது போக்குவரத்து வழிவகையின் பயன்பாட்டினை நிறுத்தி, நிச்சயமற்ற நிலையை உருவாக்குகிறது.*

### (ii) பெருங்கடல் அல்லது கடல் போக்குவரத்து

*உலகின் நாடுகளில் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உறவுகளின் வளர்ச்சியில் பெருங்கடல் போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது. சர்வதேச வர்த்தகமானது கடல் போக்குவரத்துக்கு அதன் வளர்ச்சிக்கு கடன்பட்டுள்ளது. பெருங்கடல் போக்குவரத்து சர்வதேச வர்த்தகத்திற்கு உதவுவதில் ஒரு பெருமையையும் கொண்டுள்ளது. மலிவான போக்குவரத்து என்பது அதன் சிறந்த நற்பெயர் ஆகும். குறைந்த நிலைக்குச் சென்று, அதிகமான பொருள்களை பெருங்கடலோர நாடுகளுக்கிடையே கொண்டு செல்வதில் இந்த போக்குவரத்து முறை பாராட்டத்தக்கவை.*

## பெருங்கடல் போக்குவரத்து வகைகள்

பெருங்கடல் போக்குவரத்தினை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

### a) கடற்கரை கப்பல்

கடற்கரையோரக் கப்பல் ஒரு நீண்ட கடற்கரையினைக் கொண்டிருக்கக்கூடிய அனைத்து நாடுகளிலும் உள்ள ஒரு முக்கிய போக்குவரத்து வழிவகையாகும். நிலக்கரி, இரும்பு தாது போன்ற அதிகமான சரக்குகளின் இயக்கத்திற்கு இது ஒரு மலிவான உள்நாட்டு போக்குவரத்து சேவை வழிமுறையாகும். பொதுவாக ஒரு நாட்டின் கடலோர கப்பல் போக்குவரத்து அந்நாட்டின் தேசிய கப்பல் போக்குவரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், கடற்கரையோரக் கப்பல் வர்த்தகம் இந்திய கப்பல்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.





### b) வெளிநாட்டு கப்பல்

பயணிகள் மற்றும் பொருட்கள் பெருங்கடல் வழியாக பயணம் செய்வதைக் குறிக்கிறது. உதாரணமாக இந்தியா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள்.

பெருங்கடலில் செல்லும் கப்பல்கள் இரண்டு, அதாவது முறைவழிக் கப்பல் மற்றும் ட்ராம்ப்களாக பிரிக்கப்படுகின்றன:

### (i) முறைவழிக் கப்பல்

ஒரு கடல் முறைவழிக் கப்பல் என்பது பயணிகள் கப்பல் ஆகும், இது பெருங்கடல் அல்லது கடல்களில் பயணம் செய்யும் போக்குவரத்திற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் சரக்குகள் அல்லது அஞ்சல்களை முறைவழிக் கப்பலில் கொண்டு செல்லலாம், பிற நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தலாம் (எ.கா., மகிழ்ச்சிக்குரிய பயணக் கப்பலாக அல்லது மருத்துவமனை சேவைக் கப்பலாக). திட்டமிடப்பட்ட அட்டவணைப்படி கப்பல் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை கப்பலில் பயணம் செய்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவைகள் வரையறுக்கப்பட்ட வழிகளைப் பின்பற்றி, நிலையான இடங்களுக்கு அழைப்பு நேரத்திற்குச் செல்கிறது. சேவையின் ஒழுங்கமைவு, நல்ல வேகம் மற்றும் ஆடம்பரமான வசதிகள் போன்ற பயணிகளுக்குரிய வசதிகளை முறைவழிக் கப்பல்கள் செய்து தருவது சிறப்புக்குரியது.

இரண்டு வகையான முறைவழிக் கப்பல்கள் உள்ளன, அதாவது பயணிகள் முறைவழிக் கப்பல்கள் மற்றும் சரக்கு முறைவழிக் கப்பல்கள் உள்ளன.

### (ii) முறைவழியற்ற கப்பல் (Tramps)

முறைவழியற்ற கப்பல் பெரும்பாலும் சரக்குக் கப்பல்கள். அவைகளுக்கு எந்த குறிப்பிட்ட பாதையும் இல்லை, எந்த கால அட்டவணையினையும் பின்பற்றத் தேவையில்லை. அவைகள் போதுமான

உங்களுக்குத் தெரியுமா?

**சர்வதேசக் கப்பல் Vs வெளிநாட்டுக் கப்பல்**

சர்வதேசக் கப்பல் நிலம் இணைக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு இடையே இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையேயான வெளிநாட்டு வர்த்தகம். வெளிநாட்டுக் கப்பல் என்பது பெருங்கடல் கடந்து செல்ல வேண்டும் என்பதாகும். உதாரணத்திற்கு, இந்தியாவிற்கும் தென்னாப்பிரிக்காவிற்கும் இடையிலான சர்வதேச வர்த்தகம்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 130 2/17/2021 3:11:31 PM

சுமைகள் கிடைக்கும் போது மட்டுமே பயணம் செய்கின்றன. எந்த நேரத்திலும் சரக்குகளை ஏறக்குறைய எந்த துறைமுகங்களுக்கும் எடுத்துச் செல்லலாம்.

### வர்த்தக கப்பல்களின் முக்கிய வகைகள் பின்வருமாறு

*1.பொது சரக்குக் கப்பல் 2. மொத்த சரக்குக் கப்பல்கள் 3. கொள்கலன் கப்பல்கள் 4. தானியங்கி சரக்கேற்றிகள் 5. தொட்டிக் கப்பல்கள் 6. மீன்பிடிக் கப்பல்கள் 7. எண்ணெய்க் கப்பல்கள் 8. பயணிகள் கப்பல்கள் 9. பயணப் படகுகள் 10. தொட்டி மற்றும் தொட்டி படகுகள் 11. சிறப்புக் கப்பல்கள்.*

## இ. விமானப் போக்குவரத்து

*விமானப் போக்குவரத்து வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து முறை ஆகும். வர்த்தக*



**ஆகாய விமானம்**




**காற்றாடி விமானம்**

*விமானப் போக்குவரத்து இப்போது வெளிநாட்டு போக்குவரத்துக்கான மிக முக்கியமான முறையாக உள்ளது. நவீன விமான போக்குவரத்தின் வளர்ச்சியானது ரைட் சகோதரர்களின் விமான கண்டுபிடிப்பைச் சார்ந்தது.*

*விமானப் போக்குவரத்து என்பது காற்றாடி விமானங்கள், வெப்பக் காற்று கூண்டுகள், பிளேம்ப்ஸ், க்ளைடர்ஸ், ஹேங் கிளைடிங், பாராசூட்டிங், விமானம், ஜெட் விமானங்கள் அல்லது விமானத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் வேறு எந்தவொரு பயணத்திலும் பயணிக்கக்கூடிய ஒரு பயணமாகும்.*

### உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள்

*விமானப் பயணத்தை இரண்டு பொது வகுப்புகளாக பிரிக்கலாம். அவை தேசிய / உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் ஆகும். ஒரு விமானம் ஒரே நாட்டின் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணித்தால் அது உள்நாட்டு விமானங்கள் என்று அழைக்கப் படுகிறது. ஒரு விமானம் ஒரு நாட்டின் ஒரு இடத்திலிருந்து வெவ்வேறு நாட்டிற்குச் செல்லும் விமானங்கள் சர்வதேச விமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பயணிகள் உள்நாட்டு அல்லது சர்வதேச விமானங்கள், தனியார் அல்லது பொது விமானத்தில் பயணம் செய்யமுடியும்.*

### விமானப் போக்குவரத்தின் நன்மைகள்

*a) இது ஒரு வழக்கமான, வசதியான, திறமையான மற்றும் விரைவான சேவையை வழங்குகிறது.*

*b) பழங்கள், காய்கறிகள், முட்டை, இறைச்சி போன்ற அழிந்து போகும் பொருட்களை விரைவாக எடுத்துச் செல்ல முடியும்.*

*c) இரயில்வே போன்ற துறைகளைப் போல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பிற்கு அதிக முதலீடு இதற்கு தேவையில்லை.*

*d) அவைகள் பயணிகளுக்கு வசதியான சேவைகளையும் மற்றும் பொருட்களுக்கான பாதுகாப்பையும் வழங்குகின்றன.*

*e) மற்ற போக்குவரத்து மூலம் அனுப்பி வைக்க முடியாத பகுதிகளுக்கு பொருட்களை*

**உங்களுக்குத் தெரியுமா?**

1999 ஆம் ஆண்டில் "விமான மீட்பர்கள்", என்னும் சேவை உயர்தர சிகிச்சை பெறும் நோயாளிகள் தரமான பராமரிப்பு மற்றும் நிர்வாக சேவை பெறுவதற்காக இந்திய விமான அவசர ஊர்தி போக்குவரத்தால் உருவாக்கப்பட்டது. தில்லி, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் அவசர விமான சேவைகள் உள்ளன.

அனுப்புவதற்கு இதனைப் பயன்படுத்தி அனுப்ப முடியும்.

f). வெள்ளம் அல்லது நிலச்சரிவு மற்றும் போர் போன்ற ஆபத்துகளில் இருந்து மனித உயிர்களை காப்பாற்ற பெரிதும் உதவுகிறது.

### விமானப் போக்குவரத்தின் குறைபாடுகள்

a) இது மிகவும் விலையுயர்ந்த போக்குவரத்து முறையாகும். சாதாரண பொது மக்களுக்கு எட்டாத அளவிற்கு அப்பால் விலைகளும் மற்றும் செலுத்தப்படும் கட்டணங்களும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும்.

b) பெரிய சுமைகளையும் எடையையும் சுமப்பதற்கு விமானப் போக்குவரத்து மிகவும் உகந்தது அல்ல.

c) சாதகமற்ற வானிலை காரணமாக திடீரென்று விமான சேவை தொந்தரவு இருக்கலாம், இது நம்பகமான போக்குவரத்து அல்ல.

d) விமானம் கட்டும் தளங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஒரு பெரிய மூலதனச் செலவினம் ஆகும்.

e) ஒவ்வொரு நாடும் அதன் பிராந்தியத்திற்கு மேலே உள்ள விமான இடத்தை கட்டுப்படுத்துகிறது. ஆகையால், ஒரு நாட்டின் விமானம் மற்றொரு நாட்டில் பறக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட நாட்டின் அதிகார மையத்திடம் முன் அனுமதி பெறாமல் மற்றொரு நாட்டின் மேல் பறக்க முடியாது.

## 14.03 தொழிலுக்கான போக்குவரத்தின் சேவைகள்

கடந்த இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக போக்குவரத்து வளர்ச்சியையும் மேம்பாட்டையும் பொருளாதார விளைவுகளையும் கணிசமாக ஏற்படுத்தியுள்ளதால் போக்குவரத்தின் சேவைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் தெரியவந்துள்ளது. அது இடப் பயன்பாட்டையும் காலப் பயன்பாட்டையும் உருவாக்குகிறது.

### அ) உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது

பொருளின் உற்பத்தி நோக்கம் நுகர்வு ஆகும். பயனுள்ள போக்குவரத்து முறை காலம் மற்றும் இட வசதிகளை உருவாக்குவதன் மூலம், பொருட்களின் தேவை மற்றும் பொருட்களின் மதிப்பு ஆகியவற்றில் குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே, போக்குவரத்து திறமையான உற்பத்தி மற்றும் பயன்பாட்டை உருவாக்குகிறது.

### ஆ) அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது.

பொருந்தாத இயற்கை நிலைமைகள் உள்ள அல்லது ஒரு பிராந்தியத்தில் உற்பத்தி செய்ய முடியாத நுகர்வுப் பொருள்களைப் பெற இது உதவுகிறது. போதுமான மற்றும் பயனுள்ள போக்குவரத்து இல்லாமல், பொருட்களின் எண்ணிக்கையளவு அல்லது பல்வேறு வகையளவு தேவையான பொருள்களை இந்த கலப்பு பொருளாதாரத்தில் பெற முடியாது.

### இ) சந்தை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடையச் செய்கிறது

போக்குவரத்தின் முதன்மையான செயல்பாடானது உலகளாவிய பொருட்களின் உட்புற விநியோகத்தை செயல்படுத்துவதாகும். பொருட்களின் விநியோகம் எளிதாக, பொருளாதார ரீதியாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும். தேசிய நில சர்வதேச சந்தைகளை விரிவுபடுத்தும் வாய்ப்பை இது வழங்குகிறது.

### ஈ) விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது

நாடு முழுவதும் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் போக்குவரத்து விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது.

### உ) இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது

மூலப்பொருட்கள், எரிபொருள், உழைப்பு மற்றும் முடிந்த தயாரிப்புகள் மற்றும் மூலதன பயன்பாடு மற்றும் தொழில் நுட்பத்தை எப்படி பயன்படுத்துவது ஆகியன அனைத்து தொழில் துறையின் வளர்ச்சியில் வேளாண்மையிலிருந்து உற்பத்திக்கான ஒரு குறிப்பிடத்தக்க பங்கினை போக்குவரத்து வகிக்கிறது.

### எ) இது விசேசப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது

விசேஷபடுத்துதல் என்பது, சிக்கலான உற்பத்தி செயல்முறையினைப் பகுத்து தனித்தனி எண்ணிக்கையிலான செயல்முறைகளின் பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு செயல்முறையிலும் ஒவ்வொரு தனி நபரும் அல்லது குழுவினரும் நிபுணத்துவம் பெறுகின்றனர். இது பன்னாட்டு அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

### ஏ) உற்பத்தித் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது

உற்பத்தியாளர்களுக்கு புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் தங்கள் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும், பரந்த சந்தையைப் பிடிக்கவும் மற்றும் அதிக லாபம் ஈட்டுவதற்கும் ஏராளமான வாய்ப்பை வழங்குகிறது.

## 14.04 போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்

### a) வழிச் சீட்டு

வழிச்சீட்டு என்பது சரக்குகளை சரக்கேற்றிகள் மூலம் எடுத்து செல்வதற்காக வழங்கப்படும் ஒரு ஒப்புதலாகும். சரக்கேற்றி செல்பவர் இந்த வழிச்சீட்டினை அனுப்பீடு செய்நர் (அ) அனுப்பீடு பெறுநரின் பெயரில் வழங்குவார். வழிச் சீட்டுகளை சரக்கு அனுப்புபவர் அல்லது சரக்கு பெறுபவர் பெயரில் வெளியிடுகிறார். இது போக்குவரத்து ஒப்பந்தத்தின் ஒரு ஆதாரமாக உள்ளது. மேலும் இது ஒரு மாற்றுமுறை ஆவணம் ஆகும். பொருட்களின் உரிமையாளர் வழிச் சீட்டு மூலமும் மேலெழுதுதல் மற்றும் ஒப்படைத்தல் மூலமும் பொருள்களை மாற்ற முடியும். வழிச் சீட்டு தொலைந்து விட்டால் சரக்கு பெறுபவர் உறுதிப்பத்திரம் வழங்கி சரக்கேற்றி செல்பவரிடமிருந்து இருந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்.

### b) இரயில்வே இரசீது

இரயில்வே இரசீது, என்பது இரயில்வே போக்குவரத்திற்காக சரக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் ஒப்புதல் ஆகும். இது ஒரு மாற்றுமுறை ஆவணமாக சேவை புரிகிறது. அதாவது, அது பொருள்கள் வைத்திருப்பவரைத் தலைப்பாகக் காட்டுகிறது. சரக்கு அனுப்புபவரின் அல்லது சரக்கு பெறுபவரின் பெயரில் இது வெளியிடப்படலாம். இரயில்வேயில் இரயில்வே இரசீது வழங்கப்பட்டால் மட்டுமே பொருட்களை ஒப்படைப்பார்கள். இரயில் இரசீது தொலைந்துவிட்டால், சரக்கு பெறுபவர் ஒரு கடனீட்டு பத்திரத்தை வழங்குவதன் மூலம் இரயில்வேயில் இருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பொருட்களின் உரிமையினை மேலெழுதுதல் மற்றும் ஒப்படைப்பு இரசீது வழங்குவதன் மூலம் மாற்றம் செய்யலாம்.

### c) கப்பல் வாடகை ஒப்பாவணம்

சரக்குகள் பெரிய அளவிலான பொருட்கள் ஒதுக்கப்படும் போது கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்குஎடுத்துக்கொள்வது நல்லது. எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது 'கப்பல் வாடகை ஒப்பாவணம்' என்று அழைக்கப்படும். மேலும் இது 'பயண ஒப்பந்தம்' அல்லது 'கால ஒப்பந்தம்' என்றும் அழைக்கப்படும். எந்த நபர் கப்பலை வாடகைக்கு எடுக்கிறாரோ அவர் 'ஒப்பந்ததாரர்' என்று அழைக்கப்படுகிறார். இது கப்பல் ஒப்பந்ததாரர் கட்டுப்பாட்டின் கீழ் கப்பல் மற்றும் குழுவைக் கொண்டு வருகிறது. ஒப்பந்ததாரர் மூன்றாம் நபருக்கு பொறுப்பாக அந்த கப்பலின் மாலுமி மற்றும் குழுவினரின் செயல்பாட்டிற்காக கப்பல் ஒப்பந்தத்தின் சார்பாக பொறுப்பேற்க வேண்டும்.

### d) கப்பல் இரசீது

கப்பல் இரசீது என்பது, ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும். இது கப்பல் நிறுவனத்தால் வழங்கப்படுவது மற்றும் கப்பலின் மாலுமியால் கையெழுத்திடப்பட்டிருக்கும். கப்பலில் வைத்துள்ள பொருட்களை திரும்ப பெற்றுக் கொள்வதற்காக விவரிக்கப்பட்ட ஒப்புக் கொள்ளும் இரசீதை இது குறிக்கிறது. இது பொருட்களின் உத்தியோகபூர்வ ரசீதுகளாகவும் செயல்படுகிறது. இது ஒரு மாற்றுமுறை ஆவணம் ஆகும். முக்கிய உள்ளடக்கங்கள்: ஏற்றுமதி செய்பவர் பெயர், கப்பல் பெயர், பொருட்களை ஏற்றும் இடம், கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள், இறக்க வேண்டிய துறைமுகத்தின் பெயர், சரக்குகள் வழங்கப்படும் அல்லது செலுத்தப்பட வேண்டிய பொருட்கள், யாருக்காக பொருட்கள் ஏற்றப்பட்டதோ, தேதி வாரியாக ஒப்படைத்தல் போன்றவை அதில் இடம்பெற்றிருக்கும்.

பொருள்களின் கட்டுமானம் நல்ல முறையில் இருந்தால், ஒரு தெளிவான கப்பல் இரசீது வழங்கப்படும். ஏதேனும் சில கட்டுமானங்கள் சேதமடைந்திருந்தால் அபராதம் அல்லது குறிப்பிட்ட கப்பல் இரசீது வழங்கப்படும்.

### e) வான்வழி அனுப்பீட்டு இரசீது அல்லது வான் வழிக் குறிப்பு

விமானம் மூலம் பொருட்களை அனுப்பும் பொழுது, எந்த நபரிடம் பொருட்கள் ஒப்படைக்கப்படுவதற்காக ஏற்றிவிடப்படுகிறதோ, அப்பொழுது இந்த ஆவணம் சரக்கு அனுப்புபவரால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது, வான்வழி அனுப்பீட்டு இரசீது மூன்று அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது. ஒரு அசல் இரசீதில் சரக்கு அனுப்புபவர் கையொப்பமிட்டு ஏற்றுபவருக்காக அடையாளமிட்டு குறிப்பிடுவார். இரண்டாவது அசல் இரசீதில் சரக்கு அனுப்புபவர் மற்றும் பொருள்களை ஏற்றுபவர் இருவரும் கையொப்பமிட்டு,

சரக்கு பெறுபவருக்காக அடையாளமிட்டு குறிப்பிடுவார்கள் (பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக) மற்றும் மூன்றாவது அசல் இரசீதில் ஏற்றிவிடுபவர் கையொப்பமிட்டு பொருட்களை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதல் அளித்து சரக்கு அனுப்புபவருக்கு வழங்குவார்.

## 14.05 பொதுச் சரக்கேற்றிகள்

பொதுச் சரக்கேற்றி (Common Carrier) என்பது எந்த ஒரு நபர் பொருட்களை வாடகைக்காக பாரபட்சமின்றி அனைத்து நபர்களுக்காகவும் ஏற்றிச் செல்லும் வியாபாரத்தில் ஈடுபடுபவரை குறிக்கும். வழக்கமான கால அட்டவணையைப் பொறுத்து, நியமிக்கப்பட்ட வழிகளில் சரக்குகளைச் செலுத்தும் நிறுவனங்கள், பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் வாடகைக்கு எடுத்துச் சென்று பொருட்களை வழங்குகின்றன. இரயில்வே மற்றும் கடல் போக்குவரத்து ஆகியவை பொதுச் சரக்கேற்றியின் கீழ் வராது. ஏனென்றால் அவைகள் தனிச் சட்டத்தின் கீழ் வருகிறது. பொதுச் சரக்கேற்றிகளின் பொறுப்பு 1865 ஆம் ஆண்டு சரக்கேற்றுச் சட்டம் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.




உதாரணமாக, நகர பஸ்கள் ஒரு பொதுவான சரக்கேற்றி ஆகும். பொதுவான சட்ட விதிகளின் கீழ், ஒரு பொதுச் சரக்கேற்றி வியாபாரத்தின் போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துகளின் அனைத்து விதமான இழப்புகளுக்கும் பொதுவாக முழுப் பொறுப்பாவார்.

தொழில் நுட்ப முன்னேற்றமானது போக்குவரத்து மிகவும் அதிநவீன வசதிகளை மிக பெரிய வேகத்துடன் எதிர்காலத்தில் உருவாக்கும். வணிக சமூகம் மற்றும் பொதுமக்கள் பெரும் வகையில் உதவுவதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் போக்குவரத்து மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.


SingPost Air Parcel Consignment Note

Speedpost Worldwide Parcel-Consignment Note

speedpost worldwide

Air Parcel X
Speed Surface Parcel

CC 810319113 SG

TO: Name and address of addressee, including country of destination
CALEB TASHA
33645 20TH AVE 8
FEDERAL WAY WA 98003
USA
Tel No. 01234567890

FROM: Name and address of sender
YANG QIHUI
9 TEMASEK BOULEVARD
#08-01 TOWER 3
SINGAPORE 038987
Tel No. 1234567

Itemized list of contents (including number of items)
TOY TRANSFORMER
X 1UNIT

Declared Value (S$) 65

Commercial sample ☐ Documents ☐ Gift X

Sender's instructions in case of non-delivery
Return to sender: X By surface ☐ By air
(Sender to bear return charges)
Treat as abandoned ☐

Yang Qihui
Signature of Sender
Date: 03-Oct-03

FOR VALIDATION USE

Delivery Office Copy


PRESS HARD : YOU ARE MAKING FIVE COPIES

For enquiries, please call 1800-222 5 777 or visit our website: www.speedpost.com.sg

Choose the method of returning undelivered package

Note: there will be return charges for undelivered SpeedPost packages.

**வான் வழி அனுப்பீட்டு இரசீது**


Provide one copy to Carrier
Fax/email one copy to NRRA within 2 days
Keep original for your files

STRAIGHT BILL OF LADING
ORIGINAL – NOT NEGOTIABLE

NRRA Release # 56734
NRRA Transaction # NT07325
Date: 2/21/13

ACME Trucking Company
(Name of Carrier)

| | | | |
|---|---|---|---|
| TO: Consignee | A.A. Paper Mill, Inc. | FROM: Shipper | Anytown Transfer Station |
| Town/City | Concord | Address | 123 Street, Anytown, NH 12345 |
| State & Country | N H USA | Signature | Joseph Jones — Vehicle # |

| No. Shipping Units | HM* | Kind of Packaging, Description of Articles, Special Marks and Exceptions | Weight (subject to correction) | Rate | CHARGES |
|---|---|---|---|---|---|
| 10 | | Bales Cardboard | est. | | |

SAMPLE

AGENT: Northeast Resource Recovery Association
2101 Dover Rd, Epsom, NH 03234
P. (603) 736-4401 F. (603) 736-4402 info@nrra.net

CARRIER: ACME Trucking Company
SIGNATURE: Truck Driver to Sign Here
DATE: Pick up Date inserted here

**கப்பல் இரசீது**




> **கலைச்சொற்கள்**
>
> சரக்குக் குறிப்பு
> சரக்குப் பெட்டகம்
> முறைவழிக் கப்பல்
> நாடோடி

### சுய சிந்தனைக்கு

a) தயாரிப்பாளர் மற்றும் நுகர்வோருக்கு இடையில் புவியியல் பிரிப்பு – கருத்து.

b) வெளி நாட்டிலிருந்து பெட்ரோலியம் இறக்குமதி செய்வது – டாங்கர்கள் அல்லது குழாய்களின் வழியாக போக்குவரத்து – காரணத்துடன் ஆலோசிக்கவும்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. போக்குவரத்து ____________ தடையை நீக்குகிறது**

(அ) நேரம்

(ஆ) இடம்

(இ) ஆள்சார்

(ஈ) அறிவு

**2. வான்வழி அனுப்பீட்டு ரசீது ___________ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது**

(அ) ஒன்று

(ஆ) இரண்டு

(இ) மூன்று

(ஈ) நான்கு

**3. ___________ ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்**

(அ) வழிச் சீட்டு

(ஆ) சரக்குக் குறிப்பு

(இ) கப்பல் வாடகை ஒப்பாவணம்

(ஈ) ஒப்பந்த இரசீது

**4. மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?**

(அ) தொடர்வண்டி

(ஆ) சாலை

(இ) கடல்

(ஈ) விமானம்

5IY68Y

#### விடைகள்

1. ஆ 2. இ 3. அ 4. ஈ

### II. குறுவிடை வினாக்கள்.

1. போக்குவரத்து – வரையறு.
2. போக்குவரத்து மூலம் வழங்கப்படும் ஏதேனும் இரண்டு சேவைகளைப் பற்றிக் கூறுக.
3. நீர் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகள் எழுதுக.

### III. சிறுவிடை வினாக்கள்.

1. கப்பல் வாடகை ஒப்பாவனம் என்றால் என்ன?
2. கப்பல் இரசீது என்றால் என்ன?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5)
2. தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் 5)

### குறிப்பு நூல்கள்.


1. மித்ரா. ஜே. கே. ப்ரின்சிபில்ஸ் ஆஃப் காமர்ஸ், ஏபிஎஸ் பப்ளிஷிங் ஹவுஸ்.
2. குல்ஷான்ஸ். S. & M.P. குப்தா, வணிகவியலின் கூறுகள்.
3. பூஷன். Y. K. வணிக அமைப்பு மற்றும் மேலாண்மை தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள்.

# அலகு – 3 சேவைத் தொழில்கள் – I

அத்தியாயம்
# 15
# காப்பீடு

5J82AL

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. காப்பீட்டின் பொருள்,
2. கோட்பாடுகள் மற்றும் வகைகள்,
3. வியாபார இடர்கள்,
4. இந்தியக் காப்பீட்டு ஒழுங்கு முறை ஆணையத்தின் மூலமான சட்டப் பாதுகாப்பு ஆகியவற்றைத் தெரிந்து கொள்வீர்கள்.

### அறிமுகம்

"மனித வாழ்க்கை நிலையற்றது"

ஒவ்வொரு தொழிலிலும் தீ, திருட்டு மற்றும் விபத்து போன்ற பல்வேறு இடர்கள் உள்ளன. அவற்றில் சில இடர்களைக் காப்பீட்டு நிறுமங்கள் போன்ற அதற்கெனத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மாற்றம் செய்ய இயலும். காப்பீடு நிதி இழப்பீடுகளை வழங்குவதன் மூலம் உறுதியற்ற தன்மையை மாற்றுகிறது. இடர்களைச் சமூக மயமாக்குதலே காப்பீடு ஆகும். காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடு பெறுநரின் இழப்பினைக் குறைக்கின்றது.




### 15.01 காப்பீட்டின் பொருள்

காப்பீடு என்பது காப்பீடு தருநருக்கும் காப்பீடு பெறுநருக்கும் இடையேயான ஒப்பந்தம் ஆகும். காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு தருநர் குறிப்பிட்ட இடர்ப்பாட்டால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதாக ஒப்புதல் அளிக்கும் ஓர் ஒப்பந்தமே காப்பீடு ஆகும். அதற்கு மறுபயனாக காப்பீடு பெறுநர் கால முறைப்படி முனைமம் செலுத்த ஒப்புக்கொள்கிறார். எவர் ஒருவருடைய இடர்ப்பாடுகள் காப்பீடு செய்யப்படுகிறதோ அவர் காப்பீடு பெறுநர் அல்லது காப்பீட்டுறுதி பெறுநர் ஆவார். அதுபோல எவர் ஒருவர் இடர் ஏற்பட்டால் அதனால் எழும் இழப்பை ஈடு செய்வதாக ஒப்புக் கொள்கிறாரோ அவர் காப்பீடு தருநர் அல்லது காப்பீடுறுதி தருநர் அல்லது ஒப்புறுதி அளிப்பவர் என அழைக்கப்படுகிறார்.

காப்பீடு என்பது இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட காரணிகளால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதாகும்.

### காப்பீட்டின் வரைவிலக்கணம்

ஜான் மெர்ஜ் என்பவரது வரைவிலக்கணப்படி "தனி ஒருவருக்கு ஏற்படும் இடரை பலர் ஒன்றிணைந்து தங்களது தோள்களில் பகிர்ந்து கொள்ளும் திட்டமே காப்பீடு" ஆகும்.

### 15.02 காப்பீட்டின் கோட்பாடுகள்

இடரை பலரால் பகிர்ந்து கொள்ளப்படுவதற்காக காப்பீடு ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு காப்பீடு ஒப்பந்தமும் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் உருவாகிறது. பின் வருவன காப்பீட்டின் கோட்பாடுகள் ஆகும்.

**1. மிக்க நம்பிக்கை**

இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும்



XI_Tamil_commerce 1-15_001-147.indd 136 2/17/2021 3:11:33 PM

காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். காப்பீடு பெறுநர் கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கு தெரியப்படுத்திட வேண்டும். காப்பீடு தருநர் காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கு தெரிவித்துவிட வேண்டும். காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் இருவருக்குமிடையே காப்பீட்டு ஒப்பந்தம் தொடர்பாக நல்ல நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு:

திரு. சண்முகம் என்பவர் ஒரு இதய நோயாளி. ஆனால் அவர் எல்.ஐ.சி. நிறுவனத்தில் தனக்கு ஆயுள் காப்பீட்டுறுதி திட்டாவணம் எடுக்கும்போது இந்த உண்மையை மறைத்து விட்டார். அவர் மாரடைப்பால் மரணமடைந்த போது, எல்.ஐ.சி. நிறுவனம் இறந்தவரின் சட்டப் பூர்வ வாரிசுக்கு இழப்பீடு வழங்க மறுத்து விட்டது. ஏனெனில் திரு. சண்முகம் கருப்பொருள் குறித்த உண்மையை தனக்கு இதயநோய் இருக்கிறது என்ற உண்மையை தெரிவிக்காததே காரணம்.

## 2. காப்பீடு பெறுநலன்

காப்பீடு பெறுநருக்கு காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும். காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு செய்யப்படும் சொத்து இருப்பதால் காப்பீடு பெறுநருக்கு பயனும், அச்சொத்து இல்லாமல் போவதால் இழப்பும் அடைவராயின் அவருக்கு அச்சொத்தின் மீது காப்பீடு பெறுநலன் இருப்பதாக பொருள்படும்.

எடுத்துக்காட்டு:

ஒரு வியாபாரி தான் விற்பனைக்கு வைத்திருக்கும் சரக்கிருப்பின் மீது காப்பீடு பெறுநலன் உடையவராவார்.

## 3. ஈட்டுறுதி

ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது. காப்பீட்டின் மூலம் காப்பீடு பெறுநர் ஆதாயம் எதுவும் அடைந்துவிடக் கூடாது என்பதே இத்தத்துவம் ஆகும். இக்கோட்பாடு சொத்து காப்பீட்டிற்கு மட்டுமே பொருந்தும்.

எடுத்துக் காட்டு:

ஒருவர் தனது சரக்கினை ₹ 5,00,000 த்திற்கு காப்பீடு செய்திருக்கிறார். தீ விபத்து ஏற்பட்டு சரக்கு அழிந்து போனால், உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ அத்தொகையை மட்டுமே இழப்பீடாகத் தருவார்.

காப்பீடு செய்த தொகை, உண்மையான இழப்பு இதில் எது குறைவோ அத்தொகை மட்டுமே இழப்பீடாகப் பெற முடியும்.

"ஈட்டுறுதிக் கோட்பாடு ஆயுள் காப்பீட்டிற்குப் பொருந்தாது. ஏனெனில் ஒருவரின் மரணத்தின் மூலம் ஏற்பட்ட உண்மையான இழப்பை மதிப்பிட முடியாது".

## 4. அண்மைக் காரணம்

ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின் அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதை பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். இடர் ஏற்படுவற்கு எது மிக முக்கிய காரணம் என்று கண்டறிந்து அக்காரணம் காப்பீடு ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். காப்பீட்டு ஒப்பந்தத்தின்போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார். இல்லையெனில் இழப்பீடு

உங்களுக்குத் தெரியுமா?

### கருப்பொருள் உண்மை

கருப்பொருள் உண்மை என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தின் வேர் ஆகும். காப்பீடு தருநர் காப்பீட்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது அல்லது மறுப்பது, காப்பீட்டின் நிபந்தனைகளை நிர்ணயம் செய்வது, செலுத்த வேண்டிய முனைமத் தொகையை நிர்ணயம் செய்வது போன்றவைகளைத் தீர்மானிக்கும் எந்த உண்மையும் கருப்பொருள் உண்மை ஆகும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 137 2/17/2021 3:11:33 PM

வழங்க மாட்டார். பிற காரணங்களால் ஏற்பட்ட இழப்பிற்கு காப்பீடு தருநர் பொறுப்பேற்க மாட்டார்.

முன்னர் குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் காப்பீட்டு ஒப்பந்தத்தில் அண்மைக் காரணம் எனக் குறிப்பிட்டிருந்து மிகுந்த வெப்பம் காரணமாக பொருட்கள் அழிந்து போய் இழப்பு ஏற்பட்டால் காப்பீட்டு நிறுவனம் இழப்புக்கு பொறுப்பேற்காது.

## 5. பகிர்ந்தளித்தல்

ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டை காப்பீடு என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும். ஏனெனில் அச்செயல் ஈட்டுறுதி கோட்பாட்டை மீறியதாகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலான இழப்பீடு பெற முடியாது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இழப்பு பகிர்ந்து ஈடு செய்யப்படுகிறது.

எடுத்துக்காட்டு:

ஒரு வியாபாரி தனது தொழிற்சாலைக்கு A எனும் காப்பீட்டு நிறுவனத்திடம் ₹ 10,00,000/- க்கும் B எனும் காப்பீடு நிறுவனத்திடம் ₹ 5,00,000/- க்கும் தீக் காப்பீட்டு திட்டாவணம் எடுத்திருக்கிறார். அவரது தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டு ₹1,50,000/- இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பீட்டை A மற்றும் B ஆகிய காப்பீட்டு நிறுவனங்கள் 2:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் A ₹ 1,00,000/- மும் B ₹ 50,000/- மும் இழப்பீடாக வழங்கும்.

## 6. பகர உரிமை

பகர உரிமை என்பது ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை காப்பீடு தருநர் ஈடு செய்த பின் காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது. அப்படி இலாபம் அடைந்தால் அது ஈட்டுறுதிக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்து விடும். அதாவது ஒரு சொத்துக்கு இழப்பு ஏற்பட்டு அதற்கு இழப்பீடு பெற்ற பிறகு காப்பீடு பெறுநர் அந்த சொத்தை விற்று ஆதாயம் அடைய முடியாது. அதாவது அந்த சொத்தை காப்பீட்டு தருநருக்கு அளித்து விடவேண்டும்.

**எடுத்துக் காட்டு:**

திரு. பாலன் என்பவர் தன் மோட்டார் காருக்கு காப்பீடு செய்திருக்கிறார். ஒரு சாலை விபத்தில் அவரது காரில் உள்ள பாகங்கள் சேதமடைந்து விடுகிறது. அவர் காப்பீடு தருநரிடம் இழப்பீடு கோரி பெற்று சேதமடைந்த பாகங்களை மாற்றி புதிய பாகங்களை பொருத்துகிறார். அதன்பின் அச்சேதமடைந்த பாகங்களை அவர் காப்பீடு தருநருக்கு அளித்து விட வேண்டுமே அன்றி தானே அதனை விற்று கூடுதல் ஆதாயம் அடையக் கூடாது.

## 7. இழப்பை மட்டுப்படுத்தல்

காப்பீடு பெறுநர் காப்பீடு செய்த கருப்பொருளுக்கு விபத்து ஏற்படும் போது காப்பீடு தருநருக்கு ஏற்படும் இழப்பைக் குறைக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வண்ணம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். காப்பீடு பெறுநர் கருப்பொருளுக்கு காப்பீடுதிட்டாவணம் எடுத்தபின் அதன் பாதுகாப்பில் கவனக்குறைவாக இருக்கக் கூடாது என்பதே இந்தக் கோட்பாடாகும். கருப்பொருள் பாதுகாப்புக்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காதபோது விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு காப்பீடு தருநரிடம் இழப்பீடு பெற இயலாது.

## 15.03 காப்பீட்டின் வகைகள்

காப்பீட்டில் பலவகைகள் உள்ளன. அவையாவன.

1. ஆயுள் காப்பீடு அல்லது ஆயுள் காப்பீடுறுதி
2. ஆயுள் சாராக் காப்பீடு அல்லது பொதுக்காப்பீடு பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது : அவையாவன
   (i) தீக் காப்பீடு
   (ii) கடல்சார் காப்பீடு
3. உடல்நலக் காப்பீடு மற்றும்
4. இதரக் காப்பீடுகள்.

### 1. ஆயுள் காப்பீடு

ஆயுள் காப்பீடு என்பது காப்பீடு நிறுவனம் காப்பீடு தருநர் காப்பீடு பெறுநர் செலுத்தும் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு அல்லது ஆண்டு முனைமம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையை முனைமமாகப் பெற்றுக்கொண்டு அவரது ஆயுளை காப்பீடு செய்யும் ஒரு ஒப்பந்தம் ஆகும். காப்பீடு பெறுநரின் ஆயுள் முடியும் போதோ அலலது ஒரு குறிப்பிட்ட கால முடிவிலோ ஒரு குறிப்பிட்ட அளவுத் தொகையை அளிப்பதாக அவருக்கு உறுதி அளிக்கிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 138 2/17/2021 3:11:33 PM

### ஆயுள் காப்பீட்டின் முக்கியத்துவம்

அ) காப்பீடு பெறுநரின் இழப்பால் அக்குடும்பத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்து பாதுகாப்பு வழங்குதல்

ஆ) காப்பீடு பெறுநர் முதுமை எய்தி அவரது வருவாய் ஈட்டும் திறன் குறையும் போது போதுமான தொகை வழங்குதல்.

இ) ஆயுள் காப்பீடு என்பது ஒரு பாதுகாப்பு மட்டுமல்ல இது ஒரு முதலீடும் ஆகும். காப்பீடு பெறுநருக்கு மரணத்திற்கு பிறகோ அல்லது குறிப்பிட்ட கால முடிவிலோ ஒரு குறுப்பிட்ட தொகையை திருப்பி வழங்குகிறது.

### ஆயுள் காப்பீடுத் திட்டாவண வகைகள்

ஆயுள் காப்பீட்டுத் திட்டாவணத்தில் பல வகைகள் உள்ளன அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### i) முழு ஆயுள் திட்டாவணம்

இவ்வகைத் திட்டாவணத்தில் முதிர்வுத்தொகை காப்பீடு பெறுநர் மரணமடைந்த பிறகு அவரின் பயனாளிக்கோ அல்லது அவரின் சட்ட வாரிசுக்கோ அளிக்கப்படும். காப்பீடு பெறுநர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (20 அல்லது 30 ஆண்டுகளுக்கு) முனைமத் தொகை செலுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே முனைமத் தொகை செலுத்த வேண்டியிருப்பினும் திட்டாவணம் காப்பீடு பெறுநரின் மரணம் வரை நீடித்திருக்கும்.

### ii) குறித்த வயதுத்திட்டாவணம்

இத்திட்டாவணத்தில் காப்பீடு பெறுநர் ஒரு குறிப்பிட்ட காலம் முடியும் வரை அல்லது அவரது மரணம் வரை இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை முனைமத்தொகை செலுத்த வேண்டும் அக்குறிப்பிட்ட காலம் முடிவதற்குள் காப்பீடு பெறுநர் மரணமடைந்து விட்டால் காப்பீடு செய்த தொகை அவரது சட்ட பூர்வ வாரிசுகளுக்கு வழங்கப்படும். காப்பீடு பெறுநர் அக்குறிப்பிட்ட காலம் வரை உயிரோடு இருப்பின் குறிப்பிட்ட கால முடிவில் முதிர்வுத்தொகை அவருக்கே வழங்கப்படும். ஆக குறித்த வயதுத் திட்டாவணம் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு முதிர்வடையும்.

### iii) கூட்டு ஆயுள் காப்பீடுத் திட்டாவணம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஆயுளுக்கு கூட்டாக ஆயுள் காப்பீடு செய்வது கூட்டு ஆயுள் காப்பீடுத்திட்டாவணம் எனப்படும். அவர்கள் எவரேனும் மரணமடைந்து விட்டால் மற்ற காப்பீடு பெறுநர்களுக்கு காப்பீடுத் திட்டாவணத் தொகை வழங்கப்படும். அவர்கள் அனைவரும் இணைந்தோ அல்லது அவர்களில் எவரேனும் ஒருவரோ முனைமத் தொகையை தவணை முறையிலோ அல்லது மொத்தமாகவோ செலுத்தலாம்.

வழக்கமாக இத்திட்டாவணமானது கணவன் மனைவி இருவரும் இணைந்தோ அல்லது கூட்டாண்மை நிறுவனத்தில் உள்ள இரு கூட்டாளிகள் இணைந்தோ எடுத்துக்கொள்ளலாம். இவர்களில் எவரேனும் மரணமடைந்து விட்டால் உயிருடன் இருப்பவருக்கு காப்பீடுத் திட்டாவணத் தொகை வழங்கப்படும்.

### iv) ஆண்டுத்தொகை திட்டாவணம்

இத்திட்டாவணத்தின் அடிப்படையில் காப்பீடு பெறுநர் முனைமத் தொகையை ஒரே தவணையாகவோ அல்லது பல தவணைகள் மூலமோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு செலுத்துகிறார். குறிப்பிட்ட காலம் முடிந்தபின் முதிர்வுத் தொகை மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை அல்லது வருடந் தோறும் குறிப்பிட்ட தொகை என்ற முறையில் காப்பீடு பெறுநருக்கு வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மாதந்தோறும் நிலையான வருமானம் வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இத்திட்டாவணம் மிகவும் ஏற்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆயுள் காப்பீடு என்பதை விட ஆயுள் காப்பீடுறுதி என்பதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் மனித உயிருக்கு இடர் ஏற்படுவது நிச்சயம் ஆனால் அது எப்பொழுது ஏற்படும் என்பதே நிச்சய மற்றது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 139 2/17/2021 3:11:33 PM

### v) குழந்தைகளுக்கான குறித்த வயது திட்டாவணம்.

குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்ற செலவுகளை ஈடுகட்டுவதற்காக இத்திட்டாவணம் எடுக்கப்படுகிறது உதாரணம். ஜீவன் அனுராக் காப்பீட்டு திட்டம். இத்திட்டாவணத்தின் படி காப்பீடு பெறுநரான குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் குழந்தை குறிப்பிட்ட வயதை அடையும் வரை முனைமத்தொகை செலுத்தப்படுகிறது. காப்பீட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபரே முனைமத் தொகையை செலுத்துகிறார். முனைமம் செலுத்துபவர் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே இறந்துவிட்டால் முனைமம் செலுத்தத் தேவையில்லை.





## 2. ஆயுள் சாராக் காப்பீடுகள்

மனித ஆயுள் சாராத, சொத்துக்கள் சார்ந்த காப்பீடு இதுவாகும்

### அ) தீக்காப்பீடு

காப்பீடு தருநர் காப்பீடு பெறுநரிடம் முனைமம் பெற்றுக் கொண்டு, அவரின் சொத்துக்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தீயினால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டுவதற்காகச் செய்து கொள்ளும் ஒப்பந்தம் தீக்காப்பீடு ஆகும். இதன் முக்கிய நோக்கம் காப்பீடு பெறுநருக்கு தீயினால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதாகும்.

தீயினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யக் கோரும் கோருமையினை பின் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) உண்மையாகவே இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்

(ii) தீ விபத்து வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது. தற்செயலாக ஏற்பட்டதாக இருக்க வேண்டும்.

தீக்காப்பீட்டின் அடிப்படைக்கூறுகள்

1. தீக் காப்பீட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடும் போதும் இடர் ஏற்பட்ட போதும் காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.
2. தீக்காப்பீட்டு ஒப்பந்தம் மிக்க நம்பிக்கை கோட்பாடு அடிப்படையில் இருக்க வேண்டும்
3. இவ்வொப்பந்தம் ஈட்டுறுதி கோட்பாட்டின் அடிப்படையில் கண்டிப்பாக அமைய வேண்டும்.
4. இழப்பு அல்லது நட்டம், தீயினால் மட்டுமே ஏற்பட்டிருக்க வேண்டும்.

### ஆ. கடல் சார் காப்பீடு

கடல் சார் காப்பீட்டின் படி காப்பீடு தருநர் காப்பீடு பெறுநருக்கு கடல் பயணங்களின் போது ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு அளிப்பதாக செய்து கொள்ளும் ஒப்பந்தம் ஆகும். காப்பீடு தருநர் காப்பீடு பெறுநருக்கு கடல் ஆபத்துகள் மூலம் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதாக உறுதி அளிக்கிறார். கடலில் உள்ள பாறைகளின் மீது கப்பல் மோதுவது கப்பலில் தீ விபத்து ஏற்படுவது, எதிரிகளால் கப்பல் உருக்குலைந்து போவது, கப்பலில் ஏற்றபட்ட சரக்குகள் பாதிப்படைவது, அல்லது கப்பல் வாடகை பெற முடியாமல் போவது ஆகியவை கடல் இடர்களாகும். ஆகவே காப்பீட்டு தருநர் கப்பலுக்கோ அல்லது கப்பலில் ஏற்றப்பட்ட பொருளுக்கோ ஏற்பட்ட சேதத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஈடுசெய்கிறார்.

### கடல் காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடுகள்

1. ஈட்டுறுதி கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது.
2. மிக்க நம்பிக்கை அடிப்படையில் உருவாகிறது
3. இழப்பு ஏற்பட்ட நேரத்தில் காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 140 2/17/2021 3:11:35 PM

4. அண்மைக் காரணக் கோட்பாடு கடலில் ஏற்படும் இழப்புகளுக்கு மட்டுமே பொருந்தும்.

### கடல்சார் காப்பீட்டுத் திட்டாவணவகைகள்

மூன்று வகையான கடல்சார் காப்பீட்டு திட்டாவண வகைகள் பின்வருமாறு

#### i. கப்பல்சார் காப்பீடு

கப்பலுக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு பெறுவதற்காக எடுக்கப்படும் காப்பீடு கடல்சார் காப்பீடு ஆகும். கப்பலுக்கு ஏற்படும் இழப்புகளை மட்டும் காப்பீடு தருநர், காப்பீடு பெருநருக்கு வழங்குவார்.

#### ii. பொருள்சார் காப்பீடு

இவ்வகை காப்பீடு கப்பலில் ஏற்றி அனுப்பப்படும் சரக்குகளுக்கு தீ, களவு, சூறாவளிப்புயல், வெடிப்பொருட்களினால் ஏற்படும் விபத்து, பிறவற்றோடு மோதல் போன்ற காரணங்களால் ஏற்படும் இழப்பிற்கு ஈட்டுறுதி பெற பொருளின் உரிமையாளரால் எடுத்துக் கொள்ளப்படும் காப்பீடு ஆகும்.

#### iii. கப்பல் சத்தக் காப்பீடு

கப்பலில் சரக்குகளை ஏற்றிச் செல்ல கப்பல் நிறுவனத்திற்கு வாடகை தரப்படும். இவ்வாடகை பணம் பெறுவதில் ஏற்படும் இடருக்கு எதிரான காப்பீடு கப்பல் சத்தக் காப்பீடு ஆகும். கப்பலில்பொருட்களை ஏற்றிய உடன் முன்பணமாகவோ அல்லது கொண்டு சேர்த்த பிறகோ வாடகை வசூலிக்கப்படும். கப்பலில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் போது சரக்கிற்கு ஏதும் இழப்பு ஏற்பட்டால் வாடகை வசூலிக்க இயலாமல் போகலாம். அது போன்ற சூழ்நிலையில் வாடகையில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட கப்பல் சத்தக் காப்பீடு எடுக்கப்படுகிறது. ஒரு கடல் சார் காப்பீட்டு ஒப்பந்தம் கப்பல், சரக்குகள், மற்றும் கப்பல் வடகைக் காப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## 3. உடல்நல காப்பீடு

1980களின் காலகட்டம் வரை இந்தியாவில் பெரும்பாலான மருத்துவமனைகள் அரசின் வசமே இருந்ததால் இலவசமாக சிகிச்சை வழங்கப்பட்டது. தனியார் மருத்துவமனைகளின் வருகையும், மருத்துவக் காப்பீட்டின் தேவையும் அதிகரித்ததால் காப்பீட்டு நிறுவனங்கள் பல்வேறு மருத்துவக்காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தின. தற்போது "மருத்துவ கோருமை திட்டாவணம்" (Medical Insurance Policy) முதன்மையான இடத்தை பிடித்துள்ளது.

மருத்துவக் காப்பீடு என்பது காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனிநபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் குறிப்பிட்ட அளவு முனைமம் பெற்றுக் கொண்டு குறித்தகாலத்திற்கு உடல் நலக் காப்பீட்டை வழங்க ஒப்புக்கொள்கிறார். நோய் அல்லது விபத்து குடும்பத்தின் வருவாயை மட்டும் பாதிப்பதில்லை மாறாக பெருமளவு மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தி விடுகிறது. மருத்துவச் செலவுகளில் இருந்து மருத்துவக்காப்பீடு பாதுகாப்பு அளிக்கிறது. இது எதிர்பாராமல் ஏற்படக் கூடிய மருத்துவச் செலவுகளினால் ஏற்படும் நிதி நெருக்கடியிலிருந்து விடுபட இழப்பீடு வழங்குகிறது

### மருத்துவக் காப்பீட்டின் வகைகள்

மருத்துவக் காப்பீட்டினை மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

#### 1. தனிநபர் மருத்துவக் காப்பீடு

தனிநபர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வரை மருத்துவமனை செலவுகளை ஈடுசெய்கிறது.

#### 2. குடும்ப நல திட்டாவணம்

இது ஒரு குடும்பத்திற்கு குறிப்பிட்ட தொகை வரையிலான மருத்துவமனைச் செலவுகளை ஏற்றுக் கொள்கிறது.

#### 3. முதலீடு இணைந்த காப்பீட்டுத் திட்டங்கள்

இத்திட்டம் மருத்துவக் காப்பீடு மற்றும் முதலீட்டுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஆகும். காப்பீட்டு விதிகளுக்கு உட்பட்டு திட்டாவண முடிவில் ஒருகுறிப்பிட்ட தொகையை காப்பீட்டு நிறுவனம் வழங்குகிறது.

### மருத்துவக் காப்பீடு பின்வரும் இழப்பீடுகளை வழங்குகிறது.

**மருத்துவச்செலவுகள்** – மருத்துவமனைச் செலவுகள்/ வீட்டுடை மருத்துவச் செலவுகள் மற்றும் மருத்துவர்களின் சேவைக்கான கட்டணங்களை வழங்குகிறது.

வருவாய் இழப்பு – காப்பீடு பெறுநர் வேலைக்குச் செல்ல இயலாமையால் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுகிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 141 2/17/2021 3:11:35 PM

### கோருரிமைகளின் தீர்வுகள்

மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் கோரப்படும் இழப்பீட்டு கோருரிமைகளுக்கு இருவகையான தீர்வுகள் வழங்கப்படும்.


### i. ரொக்கம்இல்லாமல்

இழப்பீடு கோருகின்ற தொகைக்கு மூன்றாம் நபர் நிர்வகிப்பாளர் (Third Pary Adminisrtaor ) அனுமதி வேண்டும். மருத்துவமனைக்கு மூன்றாம் நபர் நிர்வகிப்பாளர் தொகையை செலுத்துகிறார்.

(மூன்றாம் நபர் நிர்வகிப்பாளர் என்பவர் காப்பீடு தருநருக்கும், காப்பீடு பெருநருக்கும் இடையிலான பொதுவான நபர் ஆவார்)

### ii. திரும்பப் பெறுதல்

காப்பீடு பெறுநர் மருத்துவமனை செலவுகளுக்குரிய பணத்தைச் செலுத்தி உரிய ரசீதுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அந்த ரசீதுகளை இழப்பீட்டுக் கோருரிமை பெற மூன்றாம் நபர் நிர்வகிப்பாளரிடம் அளித்து உரிய தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.




### 4. இதரக் காப்பீடுகள்

### I. மோட்டார் வாகனக் காப்பீடு

இது தானியங்கி வாகன காப்பீடு என்றும் அழைக்கப்படுகிறது. இது பொதுக் காப்பீட்டின் கீழ் வருகின்றது. இத்திட்டம் தற்போது மிகவும் பிரபலமடைந்து முக்கியத்துவம் பெற்று வருகிறது. இக்காப்பீட்டில் காப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் மோதி உயிரிழந்தவருக்கு அல்லது பாதிக்கப்பட்டவருக்கு உரிமையாளர் அளிக்க வேண்டிய இழப்பீட்டைக் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குகின்றன. இக்காப்பீட்டிற்கான முனைமம் உரிய முறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### II. கொள்ளை சார் காப்பீடு

கொள்ளை சார் காப்பீடு சொத்துக் காப்பீட்டில் வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சொத்து சேதமடைதல், திருட்டு, கொள்ளை, வீட்டின் பூட்டை உடைத்துத் திருடுதல், இயற்கையால் ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றிற்கு இழப்பீடு வழங்குகிறது. உண்மையாக ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுகிறது.

1. திட்டாவணம் எடுக்கும் நேரத்தில் பெறுநலன் இல்லாவிட்டாலும், இழப்பு ஏற்படும் நேரத்தில் இருக்க வேண்டும்
2. அண்மைக் காரணக் கோட்பாடு இதற்குப் பொருந்தும் காப்பீடு செய்யும் போது தெரிவிக்கப்பட்ட காரணம் அண்மைக் காரணமாக இருத்தல் வேண்டும்.

### III. கால்நடைக் காப்பீடு

எருதுகள், எருமைகள், பசுக்கள், போன்ற கால்நடை விலங்குகளுக்கு இறப்பு நிகழ்வதால் ஏற்படும் இழப்பிற்கு, இழப்பீடு (நிதியுதவி) வழங்கும் காப்பீடு கால்நடைக் காப்பீடு ஆகும். இறப்பிற்கான காரணம் விபத்து, நோய், கர்ப்பிணித் தன்மை ஆகியவையாக இருக்கலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

**காஸ்கோ காப்பீடு**

காஸ்கோ காப்பீடு ஒரு தன்னார்வ காப்பீடு ஆகும். இக்காப்பீடு தீ விபத்து, இயற்கை பேரழிவு, மோட்டார் வாகனத் திருட்டு, அதில் பொருத்தப்பட்டுள்ள பாகங்கள், பழுதடைதல் சாலையில் மற்ற வாகனத்துடன் மோதுதல் போன்றவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈட்டுறுதி வழங்குகிறது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 142 2/17/2021 3:11:35 PM

### IV. பயிர் காப்பீடு

வறட்சி, வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு வேளாண்மைக் காப்பீடு ஆகும். நெல், கோதுமை, கம்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் போன்ற பயிர்களுக்கு ஏற்படும் இழப்பு மற்றும் சேதங்களுக்கு ஈட்டுறுதி அளிக்கிறது.

### V. விளையாட்டுக் காப்பீடு

இக்காப்பீட்டுத் திட்டம் தொழில் முறை அல்லாத விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது விளையாட்டு உபகரணங்களுக்கு ஏற்படும் சேதம், தனிப்பட்ட விளைவுகள், சட்டப்பூர்வ பொறுப்பு, மற்றும் தனிநபர் விபத்து போன்ற இடர்களுக்கு இழப்பீடு வழங்கும் விரிவான காப்பீட்டுத் திட்டம் ஆகும். காப்பீடு பெறுநர் விரும்பினால் காப்பீடு பெறுநரின் குடும்பத்திற்கும் விரிவாக்கம் செய்து கொள்ளலாம். ஆனால் இக்காப்பீடு தொழில் முறை விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்காது. பேட்மின்டன், கிரிக்கெட், கோல்ப், புல்தரை டென்னிஸ், ஸ்குவாஷ், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட விளையாட்டு சம்பந்தப்பட்ட இடர்களை இக்காப்பீடு உள்ளடக்கி உள்ளது.

### VI. அமர்த்தியா சென் கல்வி திட்டம்

பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்ய இவ்வகைக் காப்பீட்டாவணங்களை வழங்குகின்றன. இத்திட்டாவணம் படித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. அதன்படி திட்டாவணம் எடுக்கும் நாளிலிருந்து குறிப்பிட்ட காலம் வரை, குழந்தைகளின் பெற்றோர் அல்லது சட்டபடியான பாதுகாவலர் விபத்து கலவரம் போன்றவற்றால் முழுமையாகவோ, பகுதியாகவோ பாதிக்கப்பட்டு மரணமடைந்து விட்டாலோ அல்லது நிலையான ஊனமடைந்துவிட்டாலோ காப்பீட்டு நிறுவனம் அக்குழந்தையின் பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு இழப்பு ஏற்பட்ட காலத்திலிருந்து ஒப்பந்தம் முடியும் காலம் அல்லது காப்பீடு அளிக்கப்பட்ட ஆண்டுகாலம் இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை ஈட்டுறுதி வழங்க வேண்டும். திட்ட ஆவணம் குறிப்பிடப்பட்ட தொகைக்கு மிகாமல் ஈட்டுறுதி அளிக்கப்படும்.





### VIII. ராஜேஸ்வரி மகிளா கல்யாண பீமா யோஜனா.

இக்காப்பீட்டுத் திட்டாவணம் மகளிர்க்கு வழங்கப்படுகிறது. விபத்தின் காரணமாக மகளிர்க்கு ஏற்படும் இறப்பு, அல்லது செயலிழப்பினால் ஏற்படும் இழப்புக்காக அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஈட்டுறுதி வழங்கப்படும்.

## காப்பீட்டில் பயன்படுத்தப்படும் சொற்கள்

#### நியமனம்

காப்பீடு பெறுநர் திட்டாவணம் முடிவுறும் முன்னரே இடர் ஏற்பட்டு உயிர் இழக்கும் தருவாயில், திட்டாவணத் தொகையை வேறு யாரிடம் கொடுப்பது என்ற சூழ்நிலைப்பற்றி காப்பீடு சட்டம் 1938 பிரிவு 39 சில விதிமுறைகளை தெரிவிக்கிறது. காப்பீடு பெறுநர் உயிருடன் இருக்கும் போதே, அவரிடம் உங்களைத் தவிர இத்தொகையை வேறு யாரிடம் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவைப் பெற்றுக் கொள்வர். இதன்படி காப்பீடு பெறுநர் குறிப்பிடும் நபர் நியமனம் பெற்றவர்/நியமிக்கப்பட்டவர் (Nominiee) என அழைக்கப்படுவார், இவரே காப்பீடு தொகையினைப் பெற தகுதியுடையவர் ஆகிறார். காப்பீடு திட்டாவணம் முதிர்வடையும்போது, காப்பீடு தொகையினை காப்பீடு பெறுநரே பெற்றுக் கொள்வார்

#### விடுமதிப்பு

விடுமதிப்பு என்பது காப்பீடு பெறுநர் திட்டாவணத்தை தொடரும் நிலையில் இல்லாதபோது அவர் அத்திட்டாவணத்தை முடிவுக்கு கொண்டுவரலாம், அப்பொழுது அவர் குறிப்பிட்ட தொகையை காப்பீட்டு தருநரிடம் இருந்து



XI_Tamil_commerce 1-15_001-147.indd 143 2/17/2021 3:11:37 PM

பெறுவார் இத்தொகை விடுமதிப்பு எனப்படும். விடுமதிப்பு ஒவ்வொரு திட்டாவணத்திற்கும் அதன் காலம் மற்றும் தன்மைக்கு ஏற்றாற்போல விகிதாசார அடிப்படையில் வேறுபடும். விடுமதிப்பானது திட்டாவணம் துவங்கிய காலம் முதல் முடிவுக்கு கொண்டுவரும் காலம் வரையில் செலுத்திய முனைமம் தொகையினைக் கொண்டு கணக்கிடப்பட்டு அளிக்கப்படும்.

### மறுகாப்பீடு

காப்பீட்டு ஒப்பந்தத்தின்படி, காப்பீட்டு நிறுவனம் மற்றொரு காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து இடரின் மொத்த சுமையை பகிர்ந்து (பரவலாக்க) கொள்ள ஒப்பந்தத்தில் ஈடுபடுவது மறுகாப்பீடு எனப்படும். இதன் மூலம் இடரால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யும் தொகையினை மற்றொரு காப்பீட்டு நிறுவனத்துடன் பகிர்ந்து கொள்ளலாம், இடர் பகிரப்படுகின்றது.

### இரட்டைக் காப்பீடு

ஒரு கருப்பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு திட்டாவணங்கள் எடுக்கப்பட்டிருந்தால் அதனை இரட்டை காப்பீடு என்று அழைக்கிறோம்.

## 15.04 தொழில் இடர்கள்

காப்பீடு வியாபாரிகளையும் மற்றவர்களையும் பல்வேறு இடர்களிலிருந்து பாதுகாக்கிறது. எனவே இடரைப்பற்றி படிப்பது அவசியமாகிறது. இடர் என்பது நிச்சயமற்ற அல்லது எதிர்பாராத நிகழ்வுகளால் போதிய அளவு இலாபம் ஈட்டாமலிருத்தல், அதிகமான நட்டம் ஏற்படுவது ஆகியவற்றை குறிக்கும். இடர் என்பது நிச்சயமற்ற தன்மையிலிருந்து மாறுபட்டது.

### தொழில் இடர்களின் தன்மைகள்

தொழில் இடர்களை அதன் தனித்தன்மைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

#### i) உறுதியற்ற தன்மையினால் விளையும் தொழில் இடர்கள்

எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை உறுதியாகக் கூற முடியாத நிலையை உறுதியற்ற தன்மை என்று கூறலாம். இயற்கை பேரிடர்கள், தேவை மற்றும் விலையில் ஏற்படும் மாற்றம், அரசின் கொள்கைகளில் ஏற்படும் மாற்றம், தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றம் ஆகியவை இவ்வகை இடர்களுக்கு எடுத்துக்காட்டு ஆகும். இது போன்ற இடர்களால் எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை உறுதியாக கூற இயலாது.

#### ii) ஒவ்வொரு தொழிலிலும் இடர் என்பது முக்கியமான பகுதியாகும்

ஒவ்வொரு தொழிலிலும் பல வகையான இடர்கள் உள்ளது. எந்த வியாபாரமும் இடர்களை தவிர்க்க இயலாது. ஆனால் இடரின் அளவு தொழில் சார்ந்து வேறுபடலாம் இடரை குறைக்க முடியும், ஆனால் தவிர்க்க முடியாது.

#### iii) தொழிலின். தன்மை மற்றும் அளவுக்கேற்ப இடரின் வீச்சு மாறுபடும்

தொழிலின் தன்மை (உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பொருளின் வகை), தொழிலின் அளவு தயாரிக்கப்படும் அளவு (உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பொருளின் எண்ணிக்கை) ஆகியவை தொழில் இடரின் அளவை தீர்மானிக்கும் காரணிகள் ஆகும். எடுத்துக்காட்டாக நவீன ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் இடர் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். அது போலவே பேரளவு தொழிலுக்கு இடர் ஏற்படும் சாத்தியக் கூறுகள் சிற்றளவு தொழிலை விட அதிகமாக இருக்கும்.

#### iv) இடரை எதிர்கொள்வதற்கான வெகுமதி இலாபம்

"இடர் இல்லையேல் ஆதாயம் இல்லை" என்பது பழங்கால தத்துவம் ஆகும். இத்தத்துவம் அனைத்து வகை தொழிலுக்கும் பொருந்தும் பெருமளவு இடர் ஏற்படும் சாத்தியக் கூறுகள் கொண்ட வியாபாரத்தில் இலாபத்திற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கும்.ஒரு வியாபாரி அதிக இலாபம் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பில் தான் பெருமளவு இடரை எதிர்கொள்கிறார். இடரை எதிர்கொள்வதற்கான வெகுமதி இலாபம் ஆகும்.

### தொழில் இடர்களின் வகைகள்

தொழில் இடர்களின் வகைகள் பின்வருமாறு

#### 1. ஊக இடர்கள்

இலாபம் ஏற்படவும் அதேபோன்று நட்டம் ஏற்படவும் அதிக வாய்ப்புகள் கொண்ட இடர்கள் ஊக இடர்கள் என்று அழைக்கப்படும். சந்தை நிலவரத்தைப் பொறுத்தே இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. சாதகமான சந்தை நிலவரங்கள் நட்டத்தையும் தருகின்றன. எடுத்துக்காட்டு நவீன நல்ல தொழில்நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி நல்ல



XI_Tamil_commerce 1-15_001-147.indd 144 2/17/2021 3:11:38 PM

தரமான பொருட்களை குறைந்த விலையில் உற்பத்தி செய்தல் மூலம் தேவை அதிகரித்து அதிக இலாபம் ஈட்ட முடிகிறது.

### 2. நட்ட இடர்கள்

இவ்வகை இடர்கள் தொழிலில் ஏற்பட்டால் நட்டம் என்பது உறுதியான ஒன்றாகும். இவ்வகை இடர்கள் ஏற்படவில்லை எனில் நட்டத்திற்கான சாத்தியக்கூறு அறவே இல்லை எனலாம்.

எடுத்துக்காட்டு: தீ, களவு அல்லது வேலை நிறுத்தம் காரணமாக ஏற்படும் நட்டம்.

### 3. காப்பீட்டு இடர்கள்

இடர் ஏற்படும் தோராய நட்டத்தை மதிப்பிட்டு காப்பீடு செய்து அதற்கான முனைமம் காப்பீட்டு நிறுமத்திற்கு செலுத்தும் வகையான இடர்கள், காப்பீட்டு இடர்கள் எனப்படுகிறது. நட்டம் ஏற்படும் பொழுது காப்பீட்டு நிறுமம் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின் படி நட்டத்தை ஈடுகட்டும். இயற்கை அல்லது பிறரால் ஏற்படும் இடர்களால் உண்டாகும் நட்டத்தை மதிப்பிட்டு காப்பீட்டு நிறுமம் அதற்குரிய இழப்பீட்டை ஈடுசெய்யும். எடுத்துக்காட்டு சரக்கிருப்பினை தீ அல்லது களவு மூலம் நட்டம் ஏற்படின் இழப்பை மதிப்பிட்டு வழங்கும்.

### 4. காப்பீடு செய்ய முடியா இடர்கள்

எதிர்பாராத இயற்கை பேரிடர்கள், அரசியல் மாற்றங்கள் மற்றும் பொருளாதார சுழற்சி ஆகியவற்றால் ஏற்படும் நட்டம் காப்பீடு செய்ய முடியா இடர்கள் ஆகும். பூகம்பம், பெரு வெள்ளம், புயல் ஆகியவற்றால் ஏற்படும் நட்டம் மதிப்பிட முடியாததாகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக அரசு உதவி செய்யும் அரசுக் கொள்கைமுடிவாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் ஏற்படும் நட்டங்களை காப்பீடு செய்ய முடியது. இவையாவும் நிச்சயமற்ற தன்மை உடையவை.

## தொழில் இடர்களுக்கான காரணங்கள்

தொழில் இடர்கள் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன அவையாவன:

### 1. இயற்கை காரணிகள்

இயற்கை பேரிடர்களான பெரு வெள்ளம், பூகம்பம், மின்னல், பெருமழை, பஞ்சம், புயல் போன்றவை மனிதனால் குறைந்த அளவே கட்டுப் படுத்தக் கூடியவை. இவை காரணமாக அதிக மனித உயிரிழப்புகள், சொத்துகள் சேதமடைதல் மற்றும் வியாபாரத்தில் அதிக நட்டம் ஆகியவை ஏற்படுகிறது.

### 2. மனித காரணிகள்

பணியாளர்களின் நேர்மையற்ற தன்மை, கவனக்குறைவு, அறியாமை, மின்தடை காரணமாக பணி தடைபடுதல், வேலை நிறுத்தம், கலகம் மற்றும் திறமையற்ற மேலாண்மை ஆகியவை மனித காரணிகளாகும்.

### 3. பொருளாதார காரணிகள்

பொருட்களின் தேவை, விலை, போட்டி, வாடிக்கையாளர்களிடம் கடனை வசூல் செய்தல், தொழில் நுட்ப மாற்றம், உற்பத்தி முறையில் மாற்றம் போன்றவற்றில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் இதில் அடங்கும். மேலும் வட்டி வீதம் அதிகரிப்பு, அதிக வரிவிதிப்பு ஆகிய நிதி பிரச்னைகளும் இதில் அடங்கும்.

### 4. பிற காரணங்கள்

எதிர்பாராத அரசியல் பிரச்சனைகள், இயந்திரக்கோளாறு (கொதிகலன் வெடித்தல்), பரிமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

## 15.05 இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம்

இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிறுவனங்கள் யாவும் மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக தனித்துச் செயல்படும் சட்டப்படியான ஆணையம் இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி ஒழுங்கமைப்பு ஆணையம் ஆகும். இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI ACT 1999) சட்டத்தின்படி 2000–ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதராபாத் நகரில் உள்ளது.

இந்தியக் காப்பீடு ஒழுங்கமைப்பு ஆணையத்தின் அமைப்பு முறையில் பத்துபேர் கொண்ட குழுவில்

(i) நடுவண் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர் (ஐந்து ஆண்டுகளுக்கு, உயர்ந்தபட்ச வயது 60)

(ii) ஐந்து முழுநேர உறுப்பினர்கள் (உயர்ந்தபட்ச வயது 62)

(iii) நான்கு பகுதிநேர உறுப்பினர்கள் (5 ஆண்டுகளுக்கு மிகாமல்) என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.



XI_Tamil_commerce 1-15_001-147.indd 145 2/17/2021 3:11:38 PM

**நோக்கங்கள்:**

1. காப்பீடு பெறுநர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாத்தல்
2. காப்பீட்டுத் தொழில் வளர்ச்சி உத்தரவாதம் அளித்தல்
3. நட்டத்தைக் கோருபவர்களுக்கு விரைவாக தீர்த்தல் மற்றும் தவறுகளையும் முறைகேடுகளையும் தடுத்தல்
4. காப்பீடு தொடர்பான நிதிச் சந்தையில் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருதல் ஆகியன.

## கடமைகளும் செயல்பாடுகளும்

இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் 1999 சட்டம் பிரிவு 14–ல் கடமைகளும் செயல் பாடுகளும் தரப்பட்டுள்ளது.

1. காப்பீட்டு நிறுமங்களுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கி ஒழுங்குபடுத்துதல்.
2. காப்பீட்டு முகவர்களாகவும் இடை நிலையர்களாகவும் செயல்படத் தகுதி பெற்றவர்களுக்கு உரிமம் வழங்குதல்.
3. காப்பீட்டுத்துறையில் காப்பீட்டுத் தொழில் புரியும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தி ஊக்குவித்தல்.
4. முனைமத்தொகை, திட்டாவணத் தொகை போன்றவற்றை மேற்பார்வை செய்து சரிப்படுத்துதல்.
5. காப்பீட்டு நிறுமங்களும் முகவர்களும் நிதிநிலை அறிக்கை தயாரிக்க ஏதுவான நெறிமுறைகளைக் குறிப்பிடுதல்.
6. திட்டாவணதாரர்களின் நிதியினைக் காப்பீட்டு நிறுமங்கள் முதலீடு செய்ய ஆலோசனை வழங்குதல்.
7. காப்பீடு நிறுமங்கள் திட்டாவணத் தொகையை செலுத்தும் வகையில், நிதி நிலைமையை பராமரித்தலை உறுதி செய்தல்.

**கலைச்சொற்கள்**

மிக்க நம்பிக்கை
அண்மைக்காரணம்
மட்டுப்படுத்தல்
ஈட்டுறுதி
பகர உரிமை
விடுமதிப்பு

**மாணவர் செயல்பாடுகள்**

1. சஞ்சனா தன்னுடைய தொழிற்சாலையை ₹ 5 இலட்சத்துக்கு தீக் காப்பீடு செய்திருந்தார். தீயினால் ₹ 2 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. காப்பீட்டு நிறுமத்திடமிருந்து எவ்வளவு தொகையைப் பெறுவார்? ஏன்?
2. தொழிலதிபர் ஒருவர் தன் தொழிற்சாலையில் உள்ள சரக்கிருப்பை காப்பீடு செய்தார். தொழிற்சாலைக்குள்ளே மின் கம்பிகளை மாற்றச் சொல்லி மின் வாரியம் அறிவிப்பு கொடுத்துள்ளதை மறைத்துவிட்டார். மின் கம்பியில் ஏற்பட்ட மின் கசிவால் தீப்பிடித்து தொழிற்சாலையே எரிந்து நாசமானது நட்ட ஈடு கோர முடியுமா?

**நமது சிந்தனைக்கு**

டேவிட் பெக்காம் என்ற உலகப் புகழ் பெற்ற கால் பந்து விளையாட்டு வீரர் தன் கால்களை மட்டும் 100 மில்லியன் பவுண்டுகளுக்கும் முழு உடலுக்கு 195 மில்லியன் பவுண்டுகளுக்கும், காயம், சுகமின்மை மற்றும் உருவ மாற்றம் ஆகிய இடர்களுக்காக காப்பீடு செய்தார். இது 12,337.65 மில்லியன் டாலருக்கு சமம்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு _______________ ஆகும்**
   அ) மிக்க நம்பிக்கை
   ஆ) கூட்டுறவு
   இ) பகர உரிமை
   ஈ) அண்மைக் காரணம்

5JGXC9

2. **____________________ ஒரு பொதுக்காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல**
   அ) கடல் சார் காப்பீடு
   ஆ) ஆயுள் காப்பீடு
   இ) மருத்துவக் காப்பீடு
   ஈ) தீ காப்பீடு



XI_Tamil_commerce 1-15_001-147.indd 146 2/17/2021 3:11:38 PM

**3. பின்வருவனவற்றில் எது காப்பீட்டின் பணி அல்ல**

அ) கடன் நிதி அளிப்பு

ஆ) இடர் பகிர்வு

இ) மூலதன திரட்டுதல் உதவி

ஈ) மட்டுப்படுத்துதல்

**4. கீழ்க்கண்டவற்றுள் காப்பீடு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது?**

அ) தன்னிச்சை ஒப்பந்தம்

ஆ) நிபந்தனை ஒப்பந்தம்

இ) ஈட்டுறுதி ஒப்பந்தம்

ஈ ) பகிர்ந்தளித்தல்

**5. பின்வருவனவற்றுள் எது கடல் சார்காப்பீடு வகையினைச் சார்ந்தது?**

அ) பணம் திருப்பத் திட்டாவணம்

ஆ) பொருள் சார் காப்பீடு

இ) கப்பல் சார் காப்பீடு

ஈ) ஆ மற்றும் இ

**விடைகள்**

1. ஆ 2. ஆ 3. இ 4. அ 5. இ

## II. குறுவிடை வினாக்கள்.

1. ஆயுள் காப்பீடுத் திட்டாவண வகைகளைக் குறிப்பிடுக.
2. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. காப்பீட்டின் வரைவிலக்கணம் தருக.
2. பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
3. இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்றால் என்ன?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)
2. காப்பீட்டின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)



XI_Tamil_commerce 1-15_001-147.indd 147 2/17/2021 3:11:38 PM

## அலகு – 4 சேவைத் தொழில்கள் – II

அத்தியாயம் **16**

# இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

5JQTDH

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. தனி உரிமையியல் தொழில் பற்றிய அறிவைப் பெற முடியும்.
2. ஏட்டுக் கடன் முகமை மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி கற்றுக் கொள்ள முடியும்.
3. பெயர்ச்சியலின் அடிப்படைக் கூறுகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.
4. புறத் திறனீட்டல் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

## 16.01 தனி உரிமையியல் (Franchising)

### அ) பொருள் மற்றும் இலக்கணம்

ஒரு வாணிபத்தின் வெற்றியானது அதன் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர்கள் பெறும் மனநிறைவு அல்லது திறனைச் சார்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இன்றைய வாணிபச் சூழலில் உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்தும் பொருட்டும் சர்வதேசச் சந்தையில் நுழைவதற்காகவும் அனைத்து வியாபார நிறுவனங்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இதற்காக பயன்படுத்தப்படும் ஒரு வகையான உரிமை வழங்கல் நிகழ்வு "தனி உரிமையியல்" என அழைக்கப்படுகிறது. மேலும் இதனை தனி உரிமை வழங்கல் முறை எனவும் பகரலாம்.

இம்முறையை பயன்படுத்துவதால் பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகள் உலகளாவிய அளவில் வாடிக்கையாளருக்கு தற்போது கிடைக்கின்றன. எனவே சுருங்கக் கூறின் வியாபார நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்புப் பொருட்களை விநியோகிக்கவும், பகிர்ந்தளிக்கவும் பயன்படுத்தும் ஒரு நிகழ்வைத் தனி உரிமையியல் எனப்படுகிறது.

இந்த தனி உரிமையியல் செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பைக் கொண்டுள்ளனர். அத்தகைய தனி உரிமையாளர்கள் கூட்டமைப்பைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது.

"ஒரு வியாபார நிறுவனத்தில் அதன் வாணிப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து உரிமையும், தொடர் உறவு முறையின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படுமாயின் அந்த நபரை தனி உரிமையாளன் அல்லது தனி உரிமை பெற்றவன் எனக் கூறப்படுகிறது."

மேலும் அந்த வியாபார நடவடிக்கையை இடர்ப்பாடின்றி மேற்கொள்வதற்குத் தேவையான வர்த்தக உதவிகளான பயிற்சி அளித்தல் மற்றும் பொருள்கள் அல்லது சேவைகள் பற்றிக் கூடுதல் செய்திகளை உடனுக்குடன் வழங்குதல், மேலும் அவற்றை மேலாண்மை செய்தல் ஆகியவை இதில் அடங்கும். இதற்கு கைமாறாக ஒரு குறிப்பிட்ட அளவிலான மறுபயனைப் பெற இவர் தகுதியுள்ளவர் ஆவார்.

விக்கிபீடியாவில் விளக்கப்பட்டுள்ளபடி தனி உரிமையியல் என்பது ஒரு குறிப்பிட்ட வர்த்தக நிறுவனத்தின் வியாபார மாதிரிகள் மற்றும் அடையாளங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கு வழங்கும் உரிமைக்கு தனி உரிமை என்று பெயர்.

தனி உரிமம் அளிப்பவருக்காக முதலீடு இல்லாமலும் அதிக பொறுப்புகள் இல்லாமலும் தொடர்ந்து அவரின் பொருள் அல்லது சேவையை அளிக்க தேவையான தொடர் வியாபார அமைப்புகளை ஏற்படுத்தி கொள்ளும் ஒரு மாற்று முறைச் செயலே தனி உரிமம் ஆகும். இம்முறையில் இருவர் பங்கேற்கின்றனர்.

i. தனி உரிமம் வழங்குபவர் (Franchisor)

ii. தனி உரிமம் பெற்றவர் (Franchisee)



XI_Tamil_commerce_16-25_148-254.indd 148 2/17/2021 3:12:22 PM

### (i) தனி உரிமம் வழங்குபவர்

ஒரு வணிகத்தின் உரிமையாளராகவும் அந்த நிறுவனத்தின் செயல்பாடுகளையும், சட்டப்படி தனி உரிமை வழங்க தகுதி வாய்ந்த ஒரு நபரே தனி உரிமை வழங்குபவர் ஆவார். இவரே தான் பெற்றுள்ள காப்புரிமை மற்றும் வியாபார குறியீடுகளை உரிமையியல் ஒப்பந்தத்தின் மூலம் தனி உரிமை பெறுபவருக்கு வழங்குகிறார்.

தனி உரிமம் அளிப்பவர் தேவையான துணை சேவைகளை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அளவு வழங்க கடமைப்பட்டவர் ஆவார். துணை சேவைகள் என்பது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது.

அ) பொருள் அல்லது சேவை சார்புடைய பயிற்சி வழங்குதல்

ஆ) சந்தையிடுகைக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்

இ) விளம்பரம் தொடர்பான செயல்களுக்கு உதவுதல்.

இதற்காக அவர் தனி உரிமம் பெற்றவரிடமிருந்து உரிமைத் தொகை பெறுவதற்கு தகுதி உடையவராக ஆகிறார்.

### (ii) தனி உரிமம் பெற்றவர்

ஒரு வியாபார நிறுவனத்தின் வணிகக் குறியீட்டை சட்டப்படி பயன்படுத்தும் உரிமம் பெற்ற ஒரு தனி நபரை தனி உரிமம் பெற்றவர் என அழைக்கிறோம்.

### ஆ) தனி உரிமையியலின் சிறப்பியல்புகள்:

(*i*) தனி உரிமையியல் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உடன்படிக்கை அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது.

(*ii*) தனி உரிமையியல் கால அளவு 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக இருக்கலாம். மேலும் தொடர்புடைய இருவரின் ஒப்புதலுடன் இந்த தனி உரிமை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கலாம்.

(*iii*) இத்தகைய தனி உரிமை காலத்தில் எந்த ஒரு போட்டி வாணிபத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நடத்த தனி உரிமம் பெற்றவருக்கு உரிமை இல்லை. மேலும் இந்த உடன்படிக்கை காலத்திற்கு முன் தனி உரிமையை ரத்து செய்ய முடியாது என்ற உத்தரவாதத்தை, தனி உரிமை வழங்கியவரால் அளிக்கப்படுகிறது. ஆனால் ரத்து செய்ய வேண்டிய நியாயமான சூழல்கள் ஏற்படுமாயின் அந்த ஒப்பந்தத்தை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே முறிப்பதற்கு அல்லது முடக்குவதற்கு தனி உரிமை வழங்கியவருக்கு உரிமை உள்ளது.

(*iv*) தனி உரிமை ஒப்பந்தப்படி தனி உரிமம் பெற்றவர் குறிப்பிட்ட தொகையை உரிமைத் தொகையாக தனி உரிமம் அளித்தவருக்கு செலுத்த ஒப்புக் கொள்கிறார்.

(*v*) தனி உரிமை கோட்பாட்டின்படி தனி உரிமம் அளித்தவர் தன்னுடைய பொருள் அல்லது சேவையை எந்த முறையில் வழங்குகிறாரோ அல்லது எம்மாதிரியான படிநிலைகளை பின்பற்றுகிறாரோ அதில் சற்றும் வழுவாமல் அவருக்காக வாணிபத்தை ஏற்பாடு செய்து நடத்த உடன்படுகிறார்.

(*vi*) தனி உரிமம் பெற்றவர் தலைமை நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இணங்க தன்னுடைய வாணிபத்தை தனி உரிமை ஒப்பந்த சரத்துக்கள்படி முறையாக செயல்படுத்த வேண்டும்.

(*vii*) தனி உரிமம் அளித்தவர் போதுமான பயிற்சிகளையும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற முறைகளையும் தனி உரிமம் பெற்ற நிறுவனத்திற்கு அளித்தல் வேண்டும்.

### இ) தனி உரிமையியலின் வகைகள்

தனி உரிமையியல் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவை

*i*) தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தக பெயர் தனி உரிமையாக்கல்

*ii*) வணிக வடிவமைப்பு தனி உரிமை.

### i) தயாரிப்பு பொருள் மற்றும் வர்த்தகப் பெயர் தனி உரிமையாக்கல்:

இம்முறையில் உற்பத்தி சார்ந்த பொருட்கள் தொடர்புடையதாக உள்ளது. அப்பொருட்களை விற்கும் நோக்குடன் தனி உரிமம் அளித்தவர் செயல்படுகிறார். உதாரணமாக பதஞ்சலி பொருட்கள், பாரத் பெட்ரோல் மையம், கிட்ஜீ, பிரெஞ்ச் லோப் அவுட்லெட்ஸ் முதலியனவும் மேலும் மாருதி சுஸூக்கியும் ABT மாருதிக்கும் இடையே உள்ள உறவு மற்றும் ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகன முகமை போன்றவற்றை தனி உரிமை கீழ் கொண்டு வரலாம்.

### ii) வணிக வடிவமைப்பு தனி உரிமை

ஒரு வாணிபத்தின் அனைத்து வர்த்தக அம்சங்களையும் உள்ளடக்கிய செயல்பாடுகளை தனி உரிமை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுமாயின் அது வணிக வடிவமைப்பு தனி உரிமை என அழைக்கப்படுகிறது. இந்த தொகுப்பில் பயிற்சி வழங்குதல், நிறுவனத்தின் பெயரை முழுமையாகப்

பயன்படுத்துதல் மற்றும் அதற்கு உறுதுணையாக இருத்தல் போன்றவை இதில் அடங்கும்.

அவ்வாறு அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய தனி உரிமையானது வியாபாரத்தின் அனைத்து பகுதிகளிலும் ஒருமித்த தன்மை ஒரே மாதிரியான சேவை, விரும்பத்தக்க ஒரே மாதிரியான சுற்றுப் புறச்சூழல் மற்றும் அதிக தர நிலை கொண்ட நிறுமச் சேவைகள் வழங்க ஏதுவாக உள்ளது.

உதாரணமாக மெக்டோனால் நிறுவனம், பிஸ்சாஹட், கே.எப்.சி, ஹாட்புரூஸ், டைட்டான், கலர் ப்ளஸ், சோடியாக், லக்மே அழகு பார்லர்.

**இந்தியாவில் 2017–ஆம் ஆண்டின் தலைசிறந்த 10 தனி உரிமை பெற்ற நிறுவனங்கள்**

| நிலை | தனி உரிமையின் பெயர் | தோற்றுவாய் நாடுகளின் பெயர் | இந்தியாவில் தனியுரிமை பெற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | சுரங்கபாதை | அமெரிக்கா | 16 | உணவு மற்றும் பானம் |
| 2 | அலோகா இந்தியா | மலேசியா | 15 | கல்வி மற்றும் பயிற்சி |
| 3 | பாஸ்கின் ராபின்ஸ் | அமெரிக்கா | 24 | உணவு மற்றும் பானம் |
| 4 | கிட்ஸீ | இந்தியா | 14 | குழந்தைகள் |
| 5 | அமெரிக்க டாலர் ஸ்டோர் | இந்தியா | 13 | சில்லறை |
| 6 | மெக்டொனால்டின் | அமெரிக்கா | 21 | உணவு மற்றும் பானம் |
| 7 | காகிதம் | இந்தியா | 22 | சில்லறை |
| 8 | பிளாஸ்டிக் ஸ்மார்ட் சமையலறை | இந்தியா | 14 | சில்லறை |
| 9 | டொமினோஸ் பீஸா | அமெரிக்கா | 21 | உணவு மற்றும் பானம் |
| 10 | பச்பன் (ஒரு விளையாட்டு பள்ளி) | இந்தியா | 13 | குழந்தைகள் |

**இந்தியாவைச் சார்ந்த தனிஉரிமை நிறுவனத்திற்கு உதாரணங்கள்**

KIDZEE
WHERE KIDS LOVE TO LEARN

http://www.kidzee.com/partner-with-us/



*கிட்ஸீ பள்ளியின் தனி உரிமை*

*ஒருங்கிணைந்த தரக் கல்வி*

*குறைந்தபட்ச இட அளவு 2000 – 3000 சதுர அடி*

*குறைந்தபட்ச முதலீடு ₹ 12,00,000*



XI_Tamil_commerce_16-25_148-254.indd 150 2/17/2021 3:12:22 PM

**ஓரியண்டல் கசின்ஸ் தனி வரையறு நிறுமத்துடன் தனிஉரிமை முறையில் இணைக்கப்பட்டது.**




**"ஹால்திராம்" தனிஉரிமை முறையில் 150 வணிக நிறுவனங்களை எடுத்துக் கொள்கிறது.**




| விவரங்கள் | பிரெஞ்சு லோஃப் | வாங்ஸ் கிச்சன் |
|---|---|---|
| தேவைப்படும் இடவசதி | சிறந்த முகப்பு பகுதியுடன் கூடிய தரைத்தளம் | |
| பயன்பாட்டு பரப்பு | 350–500 சதுர அடி பரப்புடைய சாய்தளப்பரப்பு | 800–1000 சதுர அடி பரப்புடைய சாய்தளப்பரப்பு |
| முதலீடு | தோராயமாக ₹ 20–25 இலட்சங்கள் | தோராயமாக ₹ 50–65 இலட்சங்கள் |
| இட அமைப்பு | சென்னை, தமிழகத்தின் பிற பகுதிகள், பெங்களூர், மங்களூர், மைசூர், ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா | |

### ஈ) தனி உரிமையியலின் நன்மைகள்

#### (i) இடர்களைக் குறைத்தல்

தனி உரிமம் பெற்றவர் ஏற்கெனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

#### (ii) வணிக விரிவாக்கம்

பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

#### (iii) விளம்பரச் செலவு

வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால் குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

#### (iv) செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்

தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும்

அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

### உ) தனி உரிமையியலின் குறைபாடுகள்

#### (i) தனி உரிமம் கட்டணம்

மிக அதிகமான தொடக்கக்கால தனி உரிமை கட்டணம் வசூலித்தல். மேலும் வியாபாரம் வளரும் காலங்களில் தனி உரிமை வழங்கியவர் தன்னுடைய கட்டுப்பாட்டை அதிகப்படுத்தும் நோக்குடன் அல்லது தன் உரிமையை நிலைநாட்ட அந்த காலங்களில் அதிகபட்சமான புதுப்பித்தல் கட்டணம் வசூலித்தல் நடக்கிறது.

#### (ii) நிலையான உரிமைத்தொகை செலுத்துதல்

ஒப்பந்தப்படி வியாபாரத்தின் அனைத்து காலங்களிலும் நிலையான உரிமைத்தொகை செலுத்துவதால் தனி உரிமை பெற்றவரின் வருமானம் பெருமளவு குறைகிறது.

#### (iii) தனி உரிமம் அளித்தவரின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்துதல்

தனி உரிமம் பெற்றவர் தரம் குறைந்த பொருட்களையோ அல்லது சேவையோ வழங்கும் போது அது தனி உரிமை அளித்தவரின் நற்பெயர், புகழ் மற்றும் நல்லெண்ணம் போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

#### (iv) சுதந்திரமின்மை

தனி உரிமம் பெற்றவர் தன்னிச்சையாக வியாபாரம் நடத்த முடியாது. அவர் அனைத்து செயல்பாடுகளிலும் தனி உரிமை வழங்கிய நிறுவனத்தின் கொள்கைகளை மற்றும் மேலாண்மை முடிவுகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் அவரின் வியாபார சுதந்திரம் பாதிக்கிறது.

#### (v) குறைந்த அளவு தயாரிப்பு பொருட்களையே கையாள முடியும்

தனி உரிமம் வழங்கியவரால் அனுமதிக்கப்பட்ட தயாரிப்புகளை மட்டுமே கையாள முடியும். புதிதாக ஒரு வர்த்தக உத்தியை தன்னிச்சையாகக் கையாள முடியாது. மேலும் உரிமை வழங்கிய நிறுவனம் அனுமதித்தால் அவ்வாறு செய்யலாம். இதனால் தேவையின் அடிப்படையில் வியாபார அமைவிடங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமை தனி உரிமை பெற்றவருக்கு இல்லை.

### ஊ) முடிவுரை

தனி உரிமையியல் மூலமாக ஒரு நபர் தன்னுடைய வாணிபத்தை நாடு முழுவதுமோ அல்லது வெளி நாடுகளிலோ அல்லது உலகின் எந்த ஒரு பிராந்தியத்திலோ விரிவுபடுத்திக் கொள்ளலாம். புதிதாக வாணிபம் துவங்குபவர்களுக்கு தொடக்க காலத்தில் உள்ள இடர்பாடுகள் களையப்படுகிறது. இதனால் தனி உரிமம் பெற்றவர் ஏற்கனவே சிறந்த முறையில் செயல்படும் ஒரு நிறுவனத்தின் மாதிரியை பின்பற்றி நடக்கவும் தேவையான செயல்பாட்டு உதவிகளைப் பெற்றிடவும் ஏதுவாக அமைகிறது. இன்றைய உலகளாவிய வியாபாரச் சூழலில் மற்ற நாடுகளில் ஒரு நாட்டின் உற்பத்தி பொருட்களை சந்தையிட தனி உரிமையியல் ஒரு சிறந்த முறையாக உள்ளது.

## 16.02 ஏட்டுக்கடன் முகமை (Factoring)

### அ) அறிமுகம்

ஒரு நிறுவனம் தனது பொருட்களை ரொக்கம் மற்றும் கடன் அடிப்படையில் விற்பனை செய்கிறது. கடன் விற்பனையினால் சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் நடப்பு மூலதனமானது கணிசமான அளவு பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகளாக மாறிவிடுவதால் நிறுவனத்தின் நீர்மைதன்மை பாதிக்கிறது. இதனால் அதன் சீரான செயல்பாடுகள் பாதிக்கப்பட்டு வாணிக இடர்பாடுகள் ஏற்படுகின்றன. மேற்கண்ட இடர்களை சமாளிக்கும் பொருட்டு ஒரு தரகு நிதிச் சேவை செயல்படுகிறது. அதற்கு பெறுதல்கள் மீதான தரகு நிதிச்சேவை எனவும் அழைக்கப்படுகிறது. இது ஏட்டுக்கடன் வசூல் முகமை என்றும் அழைக்கப்படும்.

### ஆ) பொருள் மற்றும் இலக்கணம்

நிதி அளிக்கும் நிறுவனத்திற்கும் அல்லது உரிமைப் பேராளுக்கும் (factor) வணிக வாடிக்கையாளருக்கும் (Trade customers) தங்களின் பொருளை விற்கும் அல்லது சேவைகளை செய்யும் ஓர் வணிக நிறுவனத்திற்கும் இடையே ஓர் தொடர்ச்சியான உறவுமுறை ஏற்படுத்தப்படுகிறது. தமது வாடிக்கையாளர்களின் பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டுகளை நிதி நிறுவனம் அதாவது உரிமை பேராள் கொள்முதல் செய்தலே ஏட்டுக்கடன் தரகு வணிகச் சேவையின்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 152 2/17/2021 3:12:22 PM

மையப்பணியாகும். இப்பணியை மேற்கொள்ளும் பொழுதே, உரிமை பேராள் பிற தொடர்புப் பணிகளான வாடிக்கையாளரின் விற்பனைப் பேரேடுகளை நிர்வகித்தல், கொள்முதல் செய்யப்பட்ட கடன்களுக்கு எதிராகக் குறுகிய காலக்கடன் அளித்தல், கொள்முதல் செய்யப்பட்ட கடன்களை வசூல் செய்தல், சூழ்ந்துள்ள கடன் இடர்களை ஏற்றல் போன்றவற்றையும் மேற்கொள்கின்றது. உரிமைப் பேராள் கடன் மற்றும் நிதி சார்ந்த நடவடிக்கைகளில் தமக்குள்ள முன் அனுபவத்தைக் கொண்டு குறிப்பிட்ட சில அறிவுரைகளையும் தருகிறார். மேற்கூறப்பட்ட அனைத்துப் பணிகளையும் தனித்தனியே அளிக்க பலதரப்பட்ட அமைப்புகள் உள்ளன. ஆயினும், இவை அனைத்தையும் ஒரு சேர அளித்தலே உரிமைப் பேராளின் சிறப்பம்சமாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி 1988-ல் கல்யாண சுந்தரம் குழு என்ற ஒரு ஆய்வுக் குழுவை நியமித்தது இக்குழு இந்தியாவில் உரிமை பேராள் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான நடைமுறைகளைக் கண்டறிந்தது. இக்குழு அறிக்கையின் அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி 6 வணிக வங்கிகளுக்கு உரிமைப் பேராள் சேவைகளை வழங்க அனுமதி அளித்தது. பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி போன்ற வங்கிகள் உரிமை பேராள் சேவைகளை மேற்கொண்டு உள்ளன. இவை பாரத் ஸ்டேட் வங்கி வணிக சேவை என வரையறுக்கப்பட்டது. (SBI Commercial Service Limited), கனரா வங்கி உரிமை பேராள் வரையறுக்கப்பட்டது. (Canara Bank Factor Limited) போன்ற வங்கி அமைப்புகளை அமைத்து உரிமைப் பேராள் சேவைகளை மேற்கொண்டுள்ளன.

கடன் விற்பனையின் போது வாங்குவோர் மீதான மாற்றுச் சீட்டு விற்பவரால் எழுதப்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர வாணிபத்தில் இந்த கடன் நடவடிக்கை காரணமாக ஒரு நடைமுறை மூலதனத்தின் குறிப்பிடத்தக்க தொகையைப் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டில் முடங்கிவிடுகிறது. இதன் காரணமாக அந்த நிறுவனத்தில் நீர்மைத் தன்மை பாதிக்கப்படுவதுடன் சீரான வியாபார செயல்பாட்டில் பாதிப்பு அடைகிறது. இந்த பாதிப்பில் இருந்து மீள்வதற்காகவே ஒரு புது விதமான நிதிச் சேவை வளர்ந்த நாடுகளான அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ளது. அதே வழியில் இந்தியாவிலும் இச்சேவை பின்பற்றப்படுகிறது. குறிப்பாக இச்சேவையானது 1991 முதல் நமது நாட்டில் வழக்கில் இருந்து வருகிறது.

### இ) ஏட்டுக்கடன் முகமையின் படிநிலைகள்

இந்த நிதிச் சேவையாளுக்கான ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியில் இருந்து (Facre) பெறப்பட்டது. இதன்பொருள் சொல் அல்லது உருவாக்கு என்பதாகும்.

இந்த ஏட்டுக் கடன் வசூல் முகமை சேவையின் உடன்படிக்கையில் மூன்று நபர்கள் தொடர்பு உடையவர்களாக இருப்பார்கள். வியாபாரத்தில் உள்ள பெறுதல்கள் மீதான ஏட்டுக் கடன் முழுவதும் நிதி நிறுவனத்திடம் விற்கப்படுகிறது.

இதன் காரணமாக

1. உரிமைப் பேராள் தமது வாடிக்கையாளர் கடனை திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பீடு செய்கின்றார். பின் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகளில் எந்தத் தொகை அளவிற்கு மற்றும் கால அளவிற்கு தாம் கொள்முதல் செய்ய தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கின்றார்.

2. எப்பொழுதும் போல வாடிக்கையாளர் பொருட்களை விற்று அதற்குரிய சரக்குப் பட்டியலில், இச்சரக்குப் பட்டியலின் மீதான நிலுவையாக உள்ள தொகையின் உடைமை உரிமைச் சட்டப்படி மாற்றி வழங்கப்படுகிறது.


3. வாடிக்கையாளர், சட்டப்படி உடமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் நகல்களை உரிமைப் பேராள்களுக்கு அனுப்புகிறார்.

4. உடனடியாக உரிமைப் பேராள் அவ்வாறு அனுப்பப்பட்ட சட்டப்படி உடைமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் மதிப்பில் 80 விழுக்காடு வரையிலான குறுகிய கால கடனை தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றார்.

5. பொருட்களை வாங்கியவர் சரக்குப் பட்டியலுக்குரிய தொகையை அளித்த உடன் சரக்குப் பட்டியல் மதிப்பில் மீதமுள்ள 20 விழுக்காடு தொகையை உரிமைப் பேராளானவர் வாடிக்கையாளருக்கு அளிப்பார்.

6. உரிமைப் பேராளால் கொள்முதல் செய்யப்பட்ட கடன்களிலிருந்து 20 விழுக்காடு தக்கவைத்தல் தொகையை கழித்த பின் வரும் தொகையின் மீது வாடிக்கையாளருக்கு உள்ள பணம் எடுத்தல் தகுதியின் (Drawing Eligibility) அடிப்படையில் வாடிக்கையாளர் தமது கணக்கிலிருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்.

**ஏட்டுக்கடன் முகமை வணிகம் செயல்படும் முறையை விளக்கும் படம்**




இந்த நிதிச்சேவையில் மூன்று நபர்கள் உள்ளனர், அவர்கள் 1. பொருளைக் கடன் விற்பனை செய்யும் வியாபாரி (பேராளினின் வாடிக்கையாளர்) 2. கடனாளி (அ) வியாபாரியின் வாடிக்கையாளர் 3. பேராளன் (நிதிச் சேவையை வழங்குநர்)

இம் மூவருக்கும் இடையே நடைபெறும் ஏட்டுக் கடன் முகமை வணிகம் தொடர்பான நடவடிக்கைகளை ஆறு வகையாக விளக்கப் படுகின்றது. அவை:

1. கடனுக்குப் பொருட்களை விற்றல்
2. இடாப்பு தொகைக்கான மாற்றுச் சீட்டை ஏற்றுக்கொள்ளுதல்
3. இடாப்பின் நகலை சமர்ப்பித்தல்
4. இடாப்பு தொகையில் 80 விழுக்காடு பேராளன் செலுத்துதல்
5. வாடிக்கையாளர் (அ) கடனாளி தான் செலுத்தவேண்டிய தொகையை செலுத்துதல்
6. பேராளன் தன்னுடைய கட்டணத்தை கழித்தபின் உள்ள மீதித் தொகையைச் செலுத்துதல்

## ஈ) ஏட்டுக்கடன் முகமையின் இயல்புகள்

### 1. கடன் ஏடுகளைப் பராமரித்தல்

தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமைப் பேராளான் ஏற்றுக்கொள்கிறார்.

### 2. கடன் எல்லைகளை நிர்வகித்தல்

வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக்கொள்கிறார். இதனால் வணிக தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

### 3. ரொக்க முன்பணம்

கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார். இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுவதில்லை.

### 4. வசூல் சேவை

வாடிக்கையாளர்களுக்கு நினைவுகூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.

### 5. தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்

தனி உரிமை பேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

## உ) ஏட்டுக்கடன் முகமையின் முக்கிய வகைகள்

### 1. துணை நாடாத ஏட்டுக்கடன் முகமை

இம் முறையில் உரிமைப் பேராளன் வணிகக் கடன் பெறுதல்கள் தொடர்புடைய இடரான வாராக்கடன் தவிர பிற பணிகளை மேற்கொள்ள சம்மதிக்கிறார். எனவே வாராக்கடன் நட்டத்தால் உரிமைப் பேராளன் பாதிக்கப்படமாட்டார், மாறாக இந்த நட்டம் வாடிக்கையாளரான வணிகரையே சாரும். இதன் காரணமாக உரிமை பேராளன் தான் ஈடாக வழங்கிய அனைத்துத் தொகையையும் திரும்பப் பெற இயலும்.

### 2. துணைநாடும் ஏட்டுக்கடன் முகமை

இம் முறையின்படி வாராக்கடன் இடரை உரிமைப் பேராளான் ஏற்றுக் கொள்கிறார், எனவே வாடிக்கையாளரான வணிகருக்கு வாராக்கடனால் ஏற்படும் நிதிநட்டம் தவிர்க்கப்படுகிறது.

### 3. முதிர்வு ஏட்டுக்கடன் முகமை அல்லது வசூல் ஏட்டுக்கடன் முகமை

இம் முறையில் உரிமைப் பேராளன் கொள்முதல் நாளன்றோ அல்லது முதிர்வு நாளன்றோ செலுத்துவதாக ஒப்புக்கொள்ளலாம்.

**ஊ) ஏட்டுக்கடன் முகமைக்கும் பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமைக்கும் இடையிலான வேறுபாடுகள்**

| வ.எண் | அடிப்படை பண்புகள் | ஏட்டுக்கடன் முகமை | அயல்நாட்டு (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை |
|---|---|---|---|
| 1. | நிதிக்கான அடிப்படை | ஏற்றுமதியின் கடன் தரத்தின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது | வங்கியின் நிதித் தரத்தைப் பயன்படுத்தும் அளவின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது. |
| 2. | கட்டணம் (அ) செலவு | சரக்கை விற்பவர் நிதிச் ச்சேவைக் கட்டணத்தை ஏற்றுக்கொள்கிறார் | அயல்நாட்டுக் கடனாளி நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்கிறார் |
| 3. | பொருந்தும் காலம் | குறுகிய கால முதிர்வுக் கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் | மத்திய கால முதிர்வு கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் |
| 4. | நிதியின் அளவு | பெறுதல்களின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட (அதிக அளவாக 80 விழுக்காடு) சதவீதம் மட்டுமே பேராளனாள் நிதி வகைப்படுகிறது. | பெறுதல்களின் மதிப்பு முழுவதும் (100 விழுக்காடு) பேராளன் நிதி வழங்கப்படுகிறது. |
| 5. | இடர் ஏற்றல் | நிதிச் சேவையில் ஏற்படும் இடர்களை விற்பனையாளருக்கு மாற்றிவிட இயலும். | அனைத்து இடர்களையும் அயல்நாட்டு நிதி தரகு செய்யும் பேராளனே ஏற்றுக்கொள்கிறார். |

**4. எல்லை தாண்டிய (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை**

5JZPFJ

எல்லை தாண்டிய ஏட்டுக்கடன் முகமையின் நடவடிக்கைகளில் நான்கு நபர்கள் அடங்குகின்றனர். அவர்கள்: 1. ஏற்றுமதியாளர், 2. ஏற்றுமதி உரிமைப் பேராளன், 3. இறக்குமதியாளர், 4. இறக்குமதி உரிமைப் பேராளன் ஆவர். இதை அந்நிய (அ) எல்லை தாண்டிய (அ) சர்வதேச ஏட்டுக்கடன் தரகு வணிகம் (Forfaiting) எனவும் அழைக்கப்படுகிறது.

**அயல்நாட்டு (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை**

ஏற்றுமதி வாணிபத்தில் பெறப்படவேண்டிய அனைத்து தொகைகளுக்கும் வாராக்கடன் உள்ளிட்ட அனைத்து இடர்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு அயல்நாட்டு பெறுதல்களை கொள்முதல் செய்துகொள்ளும் முறைக்கு அயல்நாட்டு (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை எனப்படும்.

**எ) முடிவுரை**

வணிக நிறுவனங்கள் தங்களின் குறுகிய கால நிதியில் தொய்வு ஏற்படாமல், சீரான வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு பெறுதற்குரிய மாற்றுச் சீட்டின் அடிப்படையில் நிதியை பெற இந்த ஏட்டுக்கடன் முகமை உதவுகிறது. அதேபோல் அயல்நாட்டு வாணிப நடவடிக்கைகளுக்கு உதவிடும் அயல்நாட்டு (அ) பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை நிதிச் சேவை பயன்படுகிறது.

**இந்தியாவில் உள்ள ஏட்டுக்கடன் முகமை நிறுமங்களுக்கு எடுத்துக்காட்டுகள்**

1. Canbank Factors Limited: http://www.canbankfactors.com
2. SBI Global: http://www.sbiglobal.in
3. IFCI Factors Limited: http://www.ifcifactors.com
4. Export Credit Guarantee Corporation of India Ltd: https://www.ecgc.in/Portal/productnservices/maturity/mfactoring.asp
5. Small Industries Development Bank of India (SIDBI):http://www.sidbi.com/?q=receivable-finance-scheme



XI_Tamil_commerce_16-25_148-254.indd 155 2/17/2021 3:12:23 PM

## 16.03 பெயர்ச்சியியல்

### அ) பொருள்

சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்து பணி பெயர்ச்சியியலில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் எனப்படுகிறது.




### ஆ) பெயர்ச்சியியல் மேலாண்மை

விக்கிபீடியாவின் கூற்றுப்படி: பெயர்ச்சியியல் மேலாண்மை என்பது நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு பொருள் பற்றிய தகவல் மற்றும் மக்கள் ஆற்றல் உள்ளிட்ட பிற வளங்களை ஒரு பொருளின் துவக்கப் புள்ளியிலிருந்து அது நுகர்வோரை சென்றடையும் வரையிலானது. இது நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உற்பத்திப் பொருள்களை சிறந்த முறையில் பகிர்ந்து அளிக்கும் நோக்குடன் செயல்படுகின்றது.

இது பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளின் ஒருங்கிணைந்த பணியாக காணப்படுகிறது.




பெயர்ச்சியியல் மேலாண்மையை செயல்படுத்த உற்பத்திசார்ந்த பல செயல்பாடுகளின் முடிவுகளை ஒருங்கிணைத்தல் அவசியமாகிறது. இதில் உள்ளடங்கிய செயல்கள் அனைத்தும் மதிப்புச் சங்கிலியின் பொதுவான ஓர் அங்கமாக கருதப்படுகிறது.

### இ) தீர்மானித்தல்

பெயர்ச்சியியல் தொடர்புடைய பல உற்பத்தி சார்புடைய செயல்களின் முடிவுகளை ஆய்வு செய்து, தீர்மானித்து, தேவைக்கேற்ப தளர்த்தி, ஒருங்கிணைந்த அமைப்பு முறையாக உற்பத்தி பொருட்களை பகிர்ந்தளித்தலில் ஈடுபடுகிறது. அவைகளாவன.

பொருளின் தயாரிப்பு வடிவமைப்பு, தளவாட அமைவிடம், சந்தை/மூலங்களை தெரிவு செய்தல், உற்பத்திக் கட்டமைப்பு, விநியோகஸ்தர் (அ) வணிகர் வலையமைப்பு வடிவமைப்பு, பண்டகசாலை அமைவிடம், தளவாட வரைபடம் மற்றும் பெயர்ச்சி, பங்கீட்டு வடிவமைப்பு, உற்பத்தித் திட்டம், சரக்கிருப்பு மேலாண்மை, – சரக்கிருப்பின் நிலைகள், போக்குவரத்து – வகையைத் தேர்வு செய்தல், சரக்கை கப்பலில் ஏற்றுதலின் அளவு, வழித்தடத்தை முடிவு செய்தல், மேலும் போக்குவரத்து ஒப்பந்தவியல், தொகுப்பு, மூலப்பொருள்களைக் கையாளுதல் மற்றும் பண்டகசாலை செயல்பாடு போன்றவையாகும்.

### ஈ) பங்குபெறும் முக்கிய நபர்கள்

ஏற்றுமதி செய்பவர் (பெயர்ச்சியியை பயன்படுத்துபவர்), பெயர்ச்சியியல் சேவையை வழங்குபவர் (அளிப்பவர்), ஊர்தியின் வகை – புகைவண்டி, சாலை வழி, ஆகாய வழி, நீர் வழி, குழாய் (அ) கால்வாய் வழி, கயிறு வழி, பண்டகசாலை வழங்குபவர், கூலியாட்கள் வழங்குநர் அமைப்புகள், கடைநிலை சேவைகள் (துறைமுக மற்றும் கப்பல் சுமைதூக்கிகள் போன்றோர்), அரசாங்கம் (பெயர்ச்சி ஒழுங்குபடுத்துதல்).

பெயர்ச்சியியலில் பங்குபெறும் முக்கிய நபர்களை சிறப்பான மற்றும் முறையான வழியில் ஒருங்கிணைந்து செயலாற்றும் மேலாண்மையினால் மட்டுமே குறைவான அடக்க செலவில் நேர்த்தியான மற்றும் முறையான பெயர்ச்சியியல் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்க இயலும்.

### உ) அரசாங்கத்தின் பங்கு


இந்திய அரசாங்கம் பெயர்ச்சியியலில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது என்றால் அது மிகையாகாது. அரசாங்கம் பெயர்ச்சியியலை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் இச்செயலுக்காக

சரக்கு மற்றும் சேவை வரியை விதித்து தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மேலும் இந்தியாவில் நடைமுறையில் உள்ள இதர சட்டங்களான வாகன ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் பொருட்களை பகிர்ந்தளிக்கும் கொள்கைகள் போன்றவற்றைப் பெயர்ச்சியியலில் ஈடுபடும் நிறுவனம் பின்பற்ற வேண்டும்.

### ஊ) பயன்பாட்டு முறையில் வகைப்படுத்துதல்

பல்வேறு அணுகுமுறை பரிமாணங்களின் (அ) கோணங்களின் அடிப்படையில், மாற்று முறைகளை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்து பயன்படுத்துவது குறித்து கருத்தில் கொண்டு பெயர்ச்சியியலைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். அவை:

1. முடிவெடுத்தல்களின் அடிப்படையில்
2. பங்கெடுக்கும் நபர்களின் அடிப்படையில்
3. பெயர்ச்சியியலில் இணைந்துள்ள செயல்களின் அடிப்படையில்
4. பெயர்ச்சியியலில் சேராத செயல்களின் அடிப்படையில்







### எ) அடக்கவிலையின் மூலக்கூறுகள்

கீழ்க்கண்ட செலவினங்கள் பெயர்ச்சியியல் அடக்கவிலையின் முக்கிய மூலக்கூறுகளாக கருதப்படுகிறது.

1. உற்பத்திப் பொருளின் சரக்கிருப்பு
2. குழாய்வழி (அ) கால்வாய் வழி சரக்கிருப்பு
3. பண்டகக் காப்பகத்தில் மற்றும் வணிகரிடம் உள்ள உற்பத்திப் பொருளின் சரக்கிருப்பு
4. முழுமைபெறா போக்குவரத்து நட்டங்கள் மற்றும் காப்பீடு
5. சேமிப்புகிடங்கில் ஏற்படும் நட்டம் மற்றும் காப்பீடு
6. கையாளுகை மற்றும் பண்டகக் காப்பகச் செயல்பாட்டு செலவுகள்
7. பொருள்கட்டுமம் ஆகும் செலவுகள் மற்றும்
8. போக்குவரத்துச் செலவுகள்

### ஏ) பெயர்ச்சியியல் மேலாண்மையின் மாதிரிகள்

செயல்பாட்டு ஆய்வு மற்றும் புள்ளியியல்களின் மாதிரிகளின் அடிப்படையில் பெயர்ச்சியியல் தொடர்புடைய பகுதிகளை முடிவு செய்தல்களை கருத்தில் கொண்டு பெயர்ச்சியியல் மேலாண்மையின் மாதிரிகளை வகுக்கலாம்.

1. முன்னாய்வு மாதிரிகள்
2. கணித கோட்பாட்டு திட்ட மாதிரிகள் (இருப்பிட மாதிரிகள், பகுப்பு மாதிரிகள், பகிர்வு வலையமைப்பு மாதிரிகள்)
3. சரக்கிருப்பு மாதிரிகள்
4. வழிகாட்டு மாதிரிகள்
5. அட்டவணையிட்ட செயல்பாட்டு மாதிரிகள்
6. மாற்று ஏற்பாடுகள் உள்ளடக்கிய பகுப்பாய்வு மாதிரிகள்

### ஐ) பெயர்ச்சியும் உட்கட்டமைப்பும்

ஒரு நிறுவனம் சிறந்த பெயர்ச்சியியல் மேலாண்மையை பெற நல்ல ஒழுங்குமுறை படுத்தப்பட்ட போக்குவரத்து, பண்டகக் காப்பு, உற்பத்திப் பொருட்களைக் கையாளுதல், சிறந்த தகவலுடன் கூடிய உட்கட்டமைப்பு போன்றவைகளின் உதவி தேவைப்படுகிறது. மேலும் இந்தியாவைப் பொருத்தமட்டில் பெரும்பான்மையான போக்குவரத்து முறைகள் சாலை மற்றும் இரயில் வழியாக மட்டுமே

நடைபெறுகிறது. எனவே கடல் (நீர்) மற்றும் கால்வாய் (அ) குழாய் போக்குவரத்து முறையை முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும். அதிக ரூபாய் மதிப்புகொண்ட பொருட்கள் மட்டுமே ஆகாய மார்க்கமாகக் கொண்டு செல்லப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள போக்குவரத்துத் தொடர்பான உட்கட்டமைப்பைப் பயன்படுத்து வதன் மூலம் இதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணலாம். உதாரணமாக சரியான வழியைக் கண்டறிதலில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணலாம். உதாரணமாக சரியான வழியை கண்டறிதலில் உள்ள

5K9KH7

**பெயர்ச்சியியல் மேலாண்மையும் வழங்கல் வழி சங்கிலி மேலாண்மையும்**

| பெயர்ச்சியியல் மேலாண்மை | வழங்கல் வழி சங்கிலி மேலாண்மை |
|---|---|
| தேவைக்கும் அளிப்புக்கும் இடையே உள்ள நிலையான இடைவெளி சரி செய்தல் (அ) நிர்வகித்தலுடன் தொடர்புடையது | மாறும் இயல்பு கொண்ட மதிப்பை மேம்படுத்தும் செயல்களான பொறுப்பேற்றல், தரம் மற்றும் வடிவமைப்பு போன்ற செயல்களை கண்டறிய தொடர்ந்து முயற்சிக்கிறது. எனவே தான் இதை சிறந்த நீண்டகால மேலாண்மையை குறித்து இயங்குகிறது என்கின்றனர். |
| அடக்கவிலையைக் குறைப்பதில் கவனம் செலுத்துகிறது | அடக்கவிலையைக் குறைப்பதில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இலாபத்தை மிகைப்படுத்துதலை நோக்கி (அ) மையப்படுத்தி இயங்குகிறது. |
| அளிப்பு செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | தேவை செயல்பாட்டைஅடிப்படையாகக் கொண்டது. |

சிக்கல்கள், எந்தவிதமான வாகனங்கள் பயன்படுத்துவது, எத்தகைய உந்து சக்தியைப் பயன்படுத்துவது, இறுதிநிலையில் இறக்குமதி இடம்போன்ற சிக்கல்களைச் செயல்படுத்தும் விதம் (அ) முறைகள் இதில் அடங்கும்.

## 16.04 புறத் திறனீட்டல் (Outsourcing)

### அ) பொருள்

சேவை சார்புடைய துறைகளில் தற்போது புறத் திறனீட்டல் முறை பெருகிவருகிறது. அதாவது வெளியாட்களிடம் பணியை ஒப்படைப்புச் செய்து அதை தன் நிறுவனத்தின் மூலம் எப்போதும் போல் சந்தையிடுதலை புறத் திறனீட்டல் அல்லது புற ஒப்படைப்பு என அழைக்கப்படுகிறது. இந்த முறையில் ஒரு நிறுவனம் தன்னுடைய ஒரு சேவையை பல பகுதிகளாகப் பகுத்து, அதில் ஒரு பகுதியோ அல்லது சில பகுதிகளையோ சிறப்பாக குறைந்த செலவில் செய்கிற, வேறு ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு ஒப்பந்த முறையில் வழங்குதலாகும். சாதாரணமாக நாம் வழக்கமான வேலைகளை வெளியாட்களை வைத்து செய்துகொள்வதைத்தான் இது குறிக்கிறது. முதலில் இம்முறை அமெரிக்காவில் சில நிறுவனங்களினால் பின்பற்றப்பட்டது. இவ்வாறு புற ஒப்படைப்பு செய்வதனால் அந்நிறுவனம் தன்னுடைய வழக்கமான பணிகளை, கால நேரத்தை வீண் செய்யாமல் முக்கிய சிக்கல்கள் நிறைந்த செயல்களில் தன் கவனத்தைச் செலுத்த இயலும். தற்போது, இம்முறையானது, பிறநாடுகளில் பிரபலமாகியுள்ளது. இவ்வாறு புற ஒப்படைப்புச் செய்யும் சேவைகளில் மிக முக்கியமானது. விளம்பரங்களை வடிவமைத்தல், விற்பனைக்கு பிந்திய சேவை, கணக்கேடுகளை பராமரிப்புச் செய்தல் போன்றனவாகும்.

இத்தகைய புற ஒப்படைப்புச் செயலால் நிறுவனங்கள் தங்களின் திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கும், அதனை அடையாளம் காட்டவும் சிறிய முறையில் செயலாற்றுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 158 2/17/2021 3:12:24 PM




## ஆ) இயல்புகள்

### 1. இணை மற்றும் கூடுதல் செயல்களை வெளியாட்களுக்கு மாற்றிவிடுதல்

பொதுவாக நிறுவனங்கள் தங்களின் முக்கியமல்லாத, அன்றாட நடவடிக்கைகளை புற ஒப்படைப்புச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக, பராமரிப்புச் செயல்கள், தோட்டக்கலை, பணியாளர் போக்குவரத்து, துப்புரவுப் பணிகள் போன்றவை இதனுள் அடங்கும். நிறுவனத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டுதான் அந்த நடவடிக்கை முதன்மையானதா அல்லது இணையானதா எனவும், மேலும் அதனை புற ஒப்படைப்பு செய்ய உகந்ததா எனவும் முடிவு செய்ய முடியும்.

### 2. ஒப்பந்தத்தின் மூலமே புற ஒப்படைப்புச் செய்ய முடியும்

நிறுவனங்கள் தங்களின் முக்கிய நடவடிக்கையில் கவனம் செலுத்துவதற்காகவும் அதை மேம்படுத்துவதற்காகவும் தான், புற ஒப்படைப்பு முறையினை ஏற்க முன்வருகின்றனர். எனவேதான் இந்த புற ஒப்படைப்பானது வெளியாட்களுடன் ஒப்பந்த அடிப்படையிலான உறவை ஏற்படுத்திக் கொள்கின்றது. இதன் மூலம் புற ஒப்படைப்புச் செய்த வேலையை தொடர்ந்து மேற்கொள்ள ஒப்பந்தம் துணை நிற்கிறது.

### 3. புற ஒப்படைப்பினால் நிறுவனத்தின் செயல்பாட்டுத்திறன் மேம்படுகிறது

இதர நடவடிக்கைகளைப் புற ஒப்படைப்புச் செய்துவிட்டமையால் நிறுவனங்கள் தங்களின் வாணிப நோக்கத்தை அடைய, திறன்பட செயலாற்ற தேவையான காலம் கிடைக்கிறது. இதனால் தங்கள் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்தி, சிறந்த சேவையை வழங்குகின்றன.

### 4. வாடிக்கையாளர்களின் திருப்தி மேம்படுத்தப்படுகிறது

குறித்தகாலத்தில் வாடிக்கையாளர்களுக்கு தேவையான சேவையை, உயர்ந்த தரத்துடன் வழங்குவதால், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர்கிறது. இதன் காரணமாக ஒரே நிறுவன தயாரிப்புப் பொருட்கள் வாடிக்கையாளர்களால் மீண்டும் மீண்டும் வாங்கப்படுகின்றன.

### 5. செலவு குறைகிறது

இன்றைய போட்டிகள் நிறைந்த வாணிபச்சூழலில், வாணிபத்தில் நிலைத்து நிற்கவும், கூடுதல் இலாபம் ஈட்டவும், போட்டியான நல்ல விலையை நிர்ணயம் செய்யவும் முடியும். வேலை பகுப்பாய்வு மற்றும் நல்ல தரத்துடன் கூடிய சிறப்பான சேவையின் காரணமாக குறைவான செலவு என்ற சூழல் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மேலும் உற்பத்தி மற்றும் மேம்பாடு போன்றவற்றை புற ஒப்படைப்பு செய்தலைக் கூறலாம்.

## இ) முதன்மை மற்றும் இணைச் செயல்பாடுகள்

நிறுவனங்கள் தங்களின் இணைச் செயல்பாடுகளில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் முதன்மைச் செயல்பாடுகள் நிறைவடைவதில் கவனம் செலுத்தினால் மட்டுமே நீண்ட காலத்தில் நன்மைகளையும் மற்றும் ஆதாயங்களையும் அடைய முடியும். முதன்மை செயல்பாடுகள் என்பது அனுபவம், நிபுணத்துவம், செயல்திறன் மற்றும் நிபுணத்துவ துறையில் முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கியது. எனவே இணைச் செயல்பாடுகள் பொருத்தமட்டில் வெளிநபர்களில் யார் சிறப்பாக செய்கிறார்கள் என்று ஆராய்ந்து அறிந்து அவர்களிடம் அச்செயல்களை புற ஒப்படைப்புச் செய்வதன் மூலம் வர்த்தக ரீதியான வெற்றியை தற்போதைய வணிக சூழலில் தக்க வைத்துக் கொள்ளலாம்.

## ஈ) நன்மைகள்

### 1. முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது

இதர இணை நடவடிக்கைகளை வெளி நிறுவனங்களிடம் புற ஒப்படைப்புச் செய்வதன் காரணமாக, நிறுவனங்கள் தங்களிடம் உள்ள சில தனித்துவமான திறனை செவ்வனே பயன்படுத்தி முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நோக்கங்களை அடைய இது உதவுகிறது.

### 2. பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கிறது

புற ஒப்படைப்புச் செய்வதனால், தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

வேலைவாய்ப்புகளை உருவாக்கி ஊக்கம் அளிக்கிறது. ஏற்றுமதியை விரிவாக்கம் செய்கிறது. பொருளாதாரத்தின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

### 3. வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கிறது

நிறுவனங்கள் தங்களின் இணை நடவடிக்கைகளை வெளிநபர்களுக்குப் புற ஒப்படைப்பு மூலம் தொடர் வாய்ப்பு அளிப்பதனால், சிறு வாணிப நிறுவனங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்கின்றன. இது புதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான வழியாக அமைவதுடன் அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வழிவகுக்கிறது.

### 4. குறைவான முதலீடு

வெளிநபர்களின் திறமைகளைப் புற ஒப்படைப்பின் மூலம் பயன்படுத்துவதனால் நிறுவனங்கள் தங்களின் இணை நடவடிக்கைகளுக்காகச் செய்யவேண்டிய முதலீட்டுத் தொகை குறைகிறது. இதன் காரணமாக அத்தொகையை வேறு செயலுக்குப் பயன்படுத்துவதன்







மூலம் உற்பத்தியைப் பெருக்கி இலாபத்தை உயர்த்த இயலுகிறது.

### 5. சிறந்த செயலாக்கம்

புற ஒப்படைப்பின் மூலம் நிறுவனங்கள் இரண்டு பயன்களை அடைகின்றது. ஒன்று, புற ஒப்படைப்புச் செய்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் முதன்மைச் செயல்களை திறம்படச் செய்து தங்களை உயர்த்திக்கொள்வது, இரண்டாவது, புற ஒப்படைப்பு பெற்ற நிறுவனங்கள் தங்களின் திறன்களை விரிவாக்குவதன் மூலம் புற ஒப்படைப்புக்கான வாய்ப்புகள் மேலும் பெறும் அளவிற்கு உயர்கின்றன.

## தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் (Business Process Outsourcing)

### பொருள்

வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களைப் பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் என்று பெயர். வாடிக்கையாளர்கள் சேவை மையம் மற்றும் புள்ளிவிவரங்களைக் கணினிமயமாக்குதல் போன்ற செயல்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இந்த முறையானது இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகளில் குறைந்த அளவு கூலி செலவில் வெளி நிறுவனங்கள் தங்களின் வேலைகளைச் சிறப்பாக செய்து கொள்கின்றன. இதனால் நிறுவனங்களின் செலவு குறைகிறது.

### உ) தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் தேவை

1. முதன்மைச் செயல்பாடுகளில் கவனம் செலுத்தல்
2. திறனை உயர்த்திக்கொள்ளுதல் மேலும் நிபுணத்துவம் பெறுதல்
3. செலவுகளைக் குறைத்தல்
4. பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடைதல்
5. அதிக இலாபம் ஈட்டல்
6. வளர்ந்து வரும் தேவைக்கேற்ப சேவைகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளுதல்.

மேற்கூறிய ஆறு செயல்களும் வணிக செயல்முறை புற ஒப்படைப்பின் தேவைகளாகும்.

## அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் (Knowledge Process Outsourcing)

### பொருள்

அறிவு அடிப்படையிலான செயல்களை வெளிநபர்களைப் பயன்படுத்தித் தங்களின் நோக்கங்களைப் பூர்த்திசெய்து கொள்வதை அறிவுசார் செயல்முறை புறத்திறனீட்டல் என்கிறோம்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 160 2/17/2021 3:12:24 PM






இம்முறையினால் வாணிபத்தை வெற்றிகரமாகக் குறைந்த செலவில் நடத்திச் செல்லலாம்.

அறிவுசார்ந்த, தகவல் தொடர்பு சார்ந்த மற்றும் சிறந்த மதி நுட்பம் கொண்ட வேலைகளில் வெளி நபர்களை ஈடுபடுத்தி அவர்களின் திறமைகளைக் கொண்டு மதிப்பு மிக்க செயல்களைச் செய்துகொள்ளும் செயலை அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் என்கிறோம்.

### அறிவுசார் செயல்களை புற ஒப்படைப்பு செய்தலின் தேவை

1. சிறந்த திறமைகளைப் பயன்படுத்தல்
2. அறிவை மட்டுமே பயன்படுத்தும் நோக்கம்
3. சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டறிதல்
4. செலவுகளைக் குறைத்தல்
5. முக்கியச் செயல்பாடுகளில் சிறப்புக் கவனம் செலுத்தல்
6. இடர்பாடுகளைக் குறைத்தல்

ஆகியவை அறிவுசார் செயல்களைப் புற ஒப்படைப்பு செய்தலின் தேவையாகும்.

5KIGIU

## 16.05 மின்னணு வணிகம் (E–Commerce)

### அ) பொருள்

மின்னணு வலைதளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றலுக்கு மின்னணு வர்த்தகம் எனப்படுகிறது. மின்னணு தொழில் என்பது ஒரு விரிவான சொல். இந்த சொல்லில் இணையதளம் மூலம் நிறுமத்திற்கு உள் மற்றும் வெளியில் நடைபெறும் அனைத்து வியாபார நடவடிக்கைகளும் மின்னணு வர்த்தகம் என்ற சொல்லில் உள் அடங்குகின்றது. நிறுமத்திற்கு உள் நடைபெறும் நடவடிக்கைகளை உற்பத்தி, நிதிசார் நடவடிக்கைகள், தரக் கட்டுப்பாடு, பொருட்கள் வழங்கல், வாங்கிய பொருட்களை இருப்பு வைப்பது போன்றவைகளை மின்னணு வர்த்தகம் என்ற சொல் குறிக்கும். இதுமட்டுமின்றி நிறுமத்திற்கு வெளியில் நடைபெறும் சந்தையியல், விற்பனை, வாடிக்கையாளர்சேவை போன்ற நடவடிக்கைகள் மின்னணு வர்த்தகம் என்ற சொல்லில் உள் அடங்கும். ஆனால், மின்னணு வர்த்தகம் என்ற சொல் பெரும்பாலும் நிறுமத்திற்கு வெளியே நடைபெறும் வணிக நடவடிக்கைகளை முக்கியமாக குறிக்கிறது. டெல்லாய்ட்டி சங்கத்தின் 2015 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி இணைய தளத்தின் மூலம் நடைபெறும் சில்லறை வணிகம் இந்தியாவின் மொத்த வருவாயில் 20 விழுக்காட்டிற்கு பங்களிக்கிறது. குறிப்பாக மக்கள் நல்வாழ்வு, கல்வி, நிதிசார் சேவை, நிலம் வாங்கல், விற்றல் துறை, விளம்பரம் போன்ற துறைகள் மின்னணு வர்த்தகத்தில் முக்கிய துறையாக விளங்குகின்றன.

### ஆ) மின்னணு வணிகத்தின் பொதுவான தாக்கங்கள்

i. மின்னணு வணிகப் பிரிவு சுமார் 4 கோடி நபர்கட்கு வேலைவாய்ப்பை நல்கி வருகிறது என்று கூறப்படுகிறது.

ii. இணையதள சில்லறை வணிகம், இணையதள சேவை வர்த்தகம் போன்ற துறைகளில் தொடங்கப்படும் தொழில்களில் ஏராளமான வேலைவாய்ப்பை பெருக்கி வருகிறது.

iii. மின்னணு வணிக நிறுமங்கள் பண்டகங்கள், பொருள் வழங்கீட்டு முனையங்களை அமைத்தல், அளிப்பு சங்கிலித் தொடர்களை ஏற்படுத்தல் போன்ற கட்டமைப்பை உருவாக்கி மின்னணு வர்த்தகத்தை பலமானதாக மாற்ற அதிக முதலீடுகளை செய்து வருகின்றன.

*iv.* மின்னணு வணிக நடவடிக்கைகளின் அபரிவித வளர்ச்சியினால், நிதிசார் சந்தை, இயல் சந்தை மற்றும் செய்தி விவரங்களை காப்பாற்றுதல் போன்ற பல்வேறு துறைகளில் ஏராளமான பொருட்கள் புதியதாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

*v.* மின்னணு வணிக நிறுமங்களின் தொழில் முறையையே மாற்றி வருகின்றன. சமூக வலைதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் அண்மைக் காலங்களில் வணிக நிறுமங்கள் அதிகமான வாடிக்கையாளர்களை கவர்ந்து வருகின்றன.

*vi.* அகன்ற அலைபேசியின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியின் மூலமாக பல வியாபார நிறுமங்கள் இயல் வணிக முறையிலிருந்து மின்னணு வணிக முறைக்கு மாறி வருகின்றன.

*vii.* நவீன வாடிக்கையாளர்கள் பிலிப் கார்ட் மற்றும் அமேசான் இடைநிலையர்கள் மூலமாக மின்னணு வணிகத்தில் அதிகமாக பங்கு பெற்று வருகின்றார்கள்.

### இ) மின்னணு வணிகத்தினால் விற்பனையாளர்களுக்கு ஏற்படும் நன்மைகள்

*i.* விற்பனையாளர்கள் உலகமெங்கும் உள்ள வாடிக்கையாளர்களை அணுக முடிகிறது.

*ii.* இது நடைமுறைச் செலவினங்களைக் குறைத்து, இடைநிலையர்களை அகற்றி விற்பனையாளர்கள் நேரடியாக இறுதி நுகர்வோர்கட்கு பொருட்களை வழங்க முடிகிறது.

*iii.* விற்பனையாளர்கள் பல்வேறு வகையான வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களுடன் கலந்துரையாட வகை செய்கிறது.

*iv.* வணிக நிறுவனங்கள் தங்களின் அனைத்து சந்தையியல் முயற்சிகளையும் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களை நோக்கித் திருப்ப வகை செய்கிறது.

### ஈ) மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்களுக்கு ஏற்படும் நன்மைகள்

*i.* உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருள்களைப் பற்றி வாங்குபவர்கள் மின்னணு வணிகத்தில் அறிய முடிகிறது.

*ii.* பொருளை எப்போது வேண்டுமானாலும் வாங்கும் வாய்ப்பை மின்னணு வணிகம் வழங்குகிறது. மின்னணு வணிகத்திற்கு நேரம் காலம் ஏதும் பொருந்துவதில்லை.

*iii.* பொருள்களை இயல்பாக கடைகளில் சென்று வாங்குவதைக் காட்டிலும் மின்னணு வர்த்தக முறையில் வாங்கும் பொருளின் விலை குறைவாக கிடைப்பதாக கூறப்படுகிறது. காரணம் மின்னணு வணிகர்கள் மின்னணு மூலமாக வாங்கும் பொருள்களுக்கு ஏராளமான விலை சலுகைகளை வழங்குகின்றனர். இடைநிலையர்கள் இல்லாமல் நேரடியாக பொருள்களை விற்பனை செய்ய முடிவதால் பொருளின் விலையையும் குறைக்க இம்முறை சாத்தியமாகிறது.

*iv.* மின்னணு மூலமாக புத்தகம் வாங்குதல், மென் பொருட்கள் வாங்குதல் என்பது கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம். அதாவது உடனடியாக புத்தகம், மென் பொருள் மற்றும் பயன்பாட்டு மென் பொருள் இவைகளை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.

*v.* வாடிக்கையாளர்கள் மின்னணு மூலம் நடத்தப்படும் ஏலத்தில் எளிதாக பங்கு பெற முடிகிறது. மின்னணு ஏலத்தில் வெளிப்படைத் தன்மை அதிகம்.

*vi.* தனி நபர்கள் தாங்கள் உபயோகித்த பொருட்களைக் கூட மின்னணு முறையில் வேறு ஒருவருக்கு எளிதாக விற்பனை செய்ய மின்னணு வணிகமுறை தளம் அமைத்து தருகிறது.

*vii.* பொருளை மின்னணு வர்த்தகத்தில் வாங்குபவர்கள் தங்களுக்குச் சாதகமான முறையில் பேரம் செய்து நல்ல விலையில் பொருளைப் பெற்றிட மின்னணு வர்த்தகம் உதவுகிறது.

### உ) மின்னணு வணிக முறைகள்

#### 1. தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான வணிகம் (B2C)

இம்முறையில் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட வாடிக்கையளருக்கு நேரடியாகப் பொருளை விற்கின்றது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 162 2/17/2021 3:12:25 PM

### 2. தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான வணிகம் (B2B)

வியாபார நிறுமங்கள் தங்களுக்கிடையேயான பொருள் வாங்கல் விற்றல்களை மின்னணு வர்த்தகத்தின் மூலம் செய்து கொள்ளுவது இம்முறையில் அடங்கும். உதாரணமாக ஸ்னாப்டீல், ப்ளிப்கார்ட், அலிபாபா, இன்டாமார்ட், டிரேட்இந்தியா காம், போன்றவை.

### 3. நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம் (C2C)

இம்முறையில் கைபேசி மூலமாகவோ, இணையதள விளம்பரத்தைப் பார்த்தோ, மின்னணு ஏல முறையிலோ அல்லது ஒரு இடத்தில் இருக்கும் வாடிக்கையாளருக்கோ பொருள்களை விற்க முடியும். உதாரணமாக இந்தியன் வென்ட்சர்ஸ் என்னும் கிராப்ட்லி அப்பிளிகேசன் (பொருளை விற்பது வாங்குவது) மூலம் கையால் தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பரந்த அளவில் பரிமாற பயன்படுத்தப்படுகிறது. ஒன்ஸ் அகெயின் ஸ்டோர் டாட் காம் என்பது பெண்களுக்கான நவீன, பயன்படுத்தப்பட்ட பொருள்கள் வாங்குவதற்கான இணையதளம், மற்றவர்கள் குயிக்கர், ஒ எல் எக்ஸ், ஈ பே மூலம் பயன் பெறலாம்.

### 4. வாடிக்கையாளருக்கும் தொழில் நிறுவனத்திற்கும் இடையேயான வணிகம் (C2B)

தானியங்கிகள், மின்னணு பொருட்கள், அறைகலன் மற்றும் இதர பொருட்கள் இணையதளம் மூலமாக வாடிக்கையாளரால், தேவைப்படும் தொழில்களுக்கு விற்கப்படுவது இம்முறையில் அடங்கும். உதாரணமாக நாக்ரி டாட் காம் மற்றும் மான்ஸ்டர் டாட் காம் போன்றவை இந்திய நிறுமங்களால் நடத்தப்படும் மாதிரிகளாகும்.

### 5. தொழில் நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையேயான வணிகம் (B2G)

பொருள் மற்றும் சேவைகள் அரசுத் துறைக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். உதாரணமாக டி சி எஸ் நிறுமம் கடவுச் சீட்டு உரிம விண்ணப்ப நடைமுறையினை வெளிநாட்டு உரிமம் வழங்கிட இந்திய அரசுக்காக தன்னுடைய மென்பொருள் மூலம் பணியை முடித்து வழங்குகிறது.

#### நமது சிந்தனைக்கு

இராணிப்பேட்டை அருகில் தொழில் வளாகத்தில் வாகனங்களுக்கான பற்றவைப்பு சுருள்கள் (ignition voils) சிறிய அளவிலான தயாரிப்பவனாக உன்னை கருதிக்கொண்டு, எவ்வாறு ஏட்டுக் கடன் தரகு முகமை நிதியைக் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறுவாய் என விவரி.

அ. போர்டு இந்தியா, சென்னை.

ஆ. மாருதி சுசுக்கி, குர்கான்.

இ. குன் ஹூண்டாய், சியோல்.

#### கலைச்சொற்கள்

தனி உரிமம் வழங்குபவர்

தனி உரிமம் பெற்றவர்

தரப்படுத்துதல்

நீர்மைத்தன்மை

உரிமைப் பேராள்

வாடிக்கையாளர்கள்

போக்குவரத்து

வடிவமைப்பு

இயக்கம்

செயல்பாடு

பயன்பாடு

கட்டமைப்பு

சிறப்புத்தன்மை

ஆற்றல்

மைய செயற்பாடு

அழைப்பு மையம் (அ) வாடிக்கையாளர் சேவை மையம்

தொழில் செயல்முறை புறத் திறனீட்டல்

அறிவுசாற் செயல்முறை புறத் திறனீட்டல்

மின்னணு வர்த்தகம்

பெயர்ச்சியல் தனி உரிமையியல்

புற ஒப்படைப்பு



XI_Tamil_commerce_16-25_148-254.indd 163 2/17/2021 3:12:25 PM

பொருட்களின் இயக்கம் சார்புடைய நடவடிக்கைகளை அடையாளம் காண்க.

பெயர்ச்சியின் நன்மைகள் ஆய்வு செய்க.

பெயர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை மதிப்பீடு செய்க.

பெயர்ச்சியியலின் தாக்கத்தின் மீதான இலாபகரதன்மையை ஆய்வு செய்தல் மற்றும் சிறப்பாக புரிந்து கொள்ளல்.

ஏதாவது ஓர் வாணிபத்தின் மைய நடவடிக்கைகளைக் கண்டறிக.

இணை நடவடிக்கைகளை புற ஒப்படைப்புச் செய்வதனால் விளையும் நன்மைகளை ஆராய்க.

அறிவுசார் செயல்களை புற ஒப்படைப்புச் செய்தலுக்குத் தேவைப்படும் பகுதிகளை அழைப்பு(அ)வாடிக்கையாளர் மையங்களினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை எவ்வாறு பகுப்பாய்வு செய்து புரிந்து கொள்வாய்?.

## மேலும் அறிவதற்கு

1. உற்பத்திப் பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்து செல்லும் முறையைக் கண்டறிதல்.
2. பெயர்ச்சியியலில் உள்ள தீமைகளையும் பொருட்டு தேவையான வழிகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்க முயற்சித்தல்.
3. இந்தியாவில் எதிர்கால பெயர்ச்சியியல் மேலாண்மை பற்றி ஓர் திட்ட அறிக்கை தயார் செய்தல்.

1. ஒரு நிறுவனத்தின் முதன்மை மற்றும் இணை நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்யும் முறைகளைப் பரிந்துரைக்க.
2. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் மற்றும் அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை போக்கும் வழிகளையும், வாய்ப்புகளையும் பரிந்துரைக்க.
3. எதிர்கால பொருளாதார மேம்பாட்டிற்கு புறத் திறனீட்டலின் பங்கு பற்றி திட்டம் வரைக.

5KSCKH

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது, பயிற்சி அளிக்கிறது, கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது ___________ என அழைக்கப்படுகிறது.**

   அ) தனி உரிமையியல்

   ஆ) ஏட்டுக்கடன் முகமை

   இ) அளிப்புத் தொடர் மேலாண்மை

   ஈ) பரிமாற்றம்

2. **மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ______________ என அழைக்கப்படுகிறது.**

   அ) மின்னணு வணிகம்

   ஆ) இணையதளம்

   இ) வலைதளம்

   ஈ) வர்த்தகம்

3. **உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு ___________ என பெயர்.**

அ) போக்குவரத்து

ஆ) பெயர்ச்சியியல்

இ) வழங்கல் முறை

ஈ) சந்தையியல்

4. **பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை**

அ) உற்பத்திமேம்பாடு

ஆ) செலவுகளை குறைத்தல்

இ) இலாபம் ஈட்டுதல்

ஈ) பண்டகக்காப்பு

5. **புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ___________**

அ) உற்பத்திதிறன் ஆ) செலவு குறைப்பு

இ) திறன் ஈ) அலகுகள்

**விடைகள்**

1. (அ) 2. (அ) 3. (அ) 4. (ஆ) 5. (ஆ)

## II. குறுவிடை வினாக்கள்.

1. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?
2. தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறுக.
3. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
4. பெயர்ச்சியியல் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. தனி உரிமையியலின் வகைகள் யாவை?
2. ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை? (ஏதேனும் 3)
3. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)
2. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி.

## குறிப்பு நூல்கள்.


1. பெயர்ச்சியியல் மற்றும் அளிப்புத் தொடர் மேலாண்மை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் ஜி. ரகுராம் மற்றும் என். ரங்கராஜ், மேக் மில்லன் இந்தியா லிமிடெட்,
2. www.bing.com
3. Solutionsdots.com
4. www.Zigya.com
5. https://m.meritnation.com
6. www.tisparkle.com
7. www.Flatworldsolutions.com
8. Cdn.mos.cms.futurecdn.net
9. www.orbitinformatics.com
10. www.franchiseindia.com

## இணையச் செயல்பாடு


### சேவை வியாபாரம் – மின் வணிகம் – புள்ளிவிவரங்கள்

மின்வணிகம்
அறிவோமா !




**படிகள் :**

- உலாவியில், கொடுக்கப்பட்ட உரலியைத் தட்டச்சு செய்யவும்.விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும். Statistical – The portal for statistics" என்னும் பக்கம் திரையில் தோன்றும்.
- "E– Commerce world wide – Statistics & Facts" என்னும் பக்கம் திரையில் தோன்றும். "E– Commerce world wide – important statistics என்னும் தலைப்பில் 5 மெனுக்கள் இருக்கும்.
- 1. Overview, 2. Digital shoppers. 3. Shopping behaviors, 4. Mobile retail 5. Digital payment
- 'Overview' –ன் கீழ் "Retail e–commerce sales growth worldwide 2014–20121" என்பதைத் தேர்வு செய்யவும். 'Overview' செய்வதற்கு நுழைவுரிமை இலவசம்.
- "Annual retail e–commerce sales growth worldwide 2014–2021" ன் வரைபட விளக்கம் திரையில் தோன்றும். விளக்கப்பட்டைகளின் மீது சுட்டிக்காட்டியை நகர்த்தினால், அதற்குரிய குறிப்பிட்ட தரவுகள் தோன்றும். அந்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்யவும் "Over view" –ல் மற்ற தரவுகளையும் இதுபோன்றே பகுப்பாய்வு செய்யவும்.
- வரைபடத்தையும், தரவையும் கோப்பாக பதிவிறக்க விரும்பினால் வலமேற்புறமுள்ள மெனுவைச் சொடுக்கவும். இலவசமாக உள்நுழைவு செய்ய நீங்கள் பதிவு செய்து கொள்ளலாம்.on the right top. Register when you are asked to register for certain free access.



படி 1



படி 2



படி 3

**செயல்பாட்டிற்கான உரலி :**

https://www.statista.com/

B133_11_COM_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 166
2/17/2021 3:12:26 PM

# அலகு – 5 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள் மற்றும் தொழில் நன்நெறிகள்

அத்தியாயம்

17

## தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள்

### வாடிக்கையாளர்

'நம் வியாபார நிலையத்திற்கு வரும் வாடிக்கையாளர் ஒரு மிக முக்கிய விருந்தாளி.

அவர் நம்மைச் சார்ந்திருக்கவில்லை. நாம் தான் அவரைச் சார்ந்துள்ளோம்.

நம்முடைய வியாபாரத்திற்கு அவர் வெளியாள் அல்ல,

அவர் நம் வியாபாரத்தின் ஒரு பகுதி.

நாம் அவருக்கு சேவை செய்வது ஒரு சலுகையாகாது.

அவருக்கு நாம் சேவை செய்ய அவர் நமக்கு ஒரு வாய்ப்பினை அளிக்கின்றார்'.

– மகாத்மா காந்தி



### அறிமுகம்

தொழில் அமைப்புகள் இலாபம் ஈட்டுவதற்கு பொருளாதார நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்கின்றது. அத்தகைய அமைப்புகள் பல்வேறு சமுதாய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவினை மேற்கொள்கின்றன. (எ.கா) தொழில் நிறுவனம் நகரம், மாநகர விதிகள், சாலைகள் மற்றும் சதுக்கங்கள் போன்ற இடங்களில் பூங்காக்கள் அமைத்து பராமரித்தல், சில தொழில் உரிமையாளர்கள் தங்களின் தொழில் சார்ந்த பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் போன்றவை. மேலும் பல தொழில் உரிமையாளர்கள் தங்கள் அமைப்புப் பணியாளர்களுக்கு சுகாதார வசதி மேற்கொள்கின்றனர். சில பகுதிகளில் உள்ள தொழில் உரிமையாளர்கள் ஏழை நோயாளிகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்துகின்றனர். சில சமயங்களில் சிறிய மற்றும் பன்னாட்டளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதி உதவி அளிக்கின்றனர்.

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

- சமூகப் பொறுப்புணர்வுக் கருத்துக்கள் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும்.
- சமூகப் பொறுப்புணர்வு பற்றி படிப்பதன் அவசியத்தை அடையாளம் காண உதவும்.
- சமூகப் பொறுப்புணர்வின் சாதக மற்றும் பாதக நிலையை அறிய இயலும்.
- சமூகப் பொறுப்புணர்வின் பல்வேறு வகைகளைக் குறிப்பிட வழிவகை செய்யும்.




தொழிலில் சமூகப் பொறுப்புணர்வின் கருவிகள்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 167 2/17/2021 3:12:26 PM

## 17.01 சமூகப் பொறுப்புணர்வின் கருத்து

சமூகப் பொறுப்புணர்வு குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு தொழில் உரிமையாளர்களும் தங்கள் தொழில் மூலம் பெறும் இலாபத்தில் ஒரு பகுதியைச் சமுதாய மேம்பாட்டிற்காகச் செலவழிக்கின்றனர். இத்தகையப் பயன்பாட்டிற்கு தொழில் ஒழுங்குணர்வு பொறுப்பாகும். இத்தகைய பயன்பாட்டிற்கு சமுதாயத்தில் ஆதரவு அளிப்பதோடு, இதனையே தொழில் சமூகப் பொறுப்புணர்வு என்றும் அழைக்கப்படுகின்றது.

### தொழிலில் சமூகப் பொறுப்புணர்வின் கருவிகள்

### சமூகப் பொறுப்புணர்வு இலக்கணம்

"சமுதாயப் பொது நலன் மேம்பாடு கருதி (செயல்படத் தக்க) உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை, உறுதித்தன்மை மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்".

–பீட்டர் எஃப் டிரக்கர்

## 17.02 சமூகப் பொறுப்புணர்வுக்கான தேவை

கீழ்க்கண்ட காரணங்கள் அடிப்படையில் சமூகத்திற்கு தொழில் பொறுப்புணர்வு எதிர்பார்க்கப்படுகின்றன.

### 1. சுய ஆர்வம்

தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு சமுதாய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன. பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர். மக்களின் உயர்தர வாழ்க்கை மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஏழ்மை மற்றும் அறியாமை உள்ளவர்களுக்கும் மற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல். உதாரணமாக, அதிக ஊதியம் வழங்குதல், சாதகமான பணிச்சூழலை ஏற்படுத்துதல், தொழிலாளர்களை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரித்தல், பணியாளர் சுழற்சி மற்றும் வருகைப் பதிவு இன்மையை குறைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

### 2. சமுதாய உருவாக்கம்

நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன. எனவே தொழில் நிறுமங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும். தொழில் செய்பவர்கள் சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் மக்களின் நலன்கருதி நாட்டின் வளங்களைப் பயன்படுத்த வேண்டும். வெற்றிகரமான தொழில் நிறுமங்களால் சமுதாய மகிழ்ச்சிக்கான அடித்தளத்தை ஏற்படுத்த முடியும்.

### 3. சமூக அதிகாரம்

தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக அமைகிறது. நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் வருமானத்தைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றைதீர்மானிக்கும் உயர் பொறுப்பு தொழில் நிறுமங்களுக்கு உண்டு. தொழில் செய்பவர்கள் தங்களின் சமூக அதிகாரத்தினால் விளையும் சமூகப் பொறுப்புகளையும் உணர வேண்டியுள்ளது. சமுதாயப் பொறுப்புணர்வோடு செயல்படாத நிறுமங்களில் அரசு தலையிட்டு ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். எனினும் தொழில் நிறுவனங்கள் ஒழுங்குணர்வு மற்றும் நல்ல சிந்தனையின் அடிப்படையில் சமூக எதிர்ப்பார்ப்புகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

### 4. சமுதாயத்தின் உருவகம்

சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். ஒரு வெற்றிகரமான தொழில் மூலம் தொழிலாளர் மத்தியில் நல்ல உறவுமுறை ஏற்படுத்துதல், நுகர்வோர் மற்றும் பொருள் பகர்வாளர்களுக்கும் உதவிபுரிய இயலும். ஒரு தொழில் நிறுவனத்தின் சமூகக் கடமைகள் மக்கள் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தும் என்றால் மிகையாகாது.

### 5. பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு

தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு



XI_Tamil_commerce_16-25_148-254.indd 168 2/17/2021 3:12:26 PM

அறிந்துள்ளனர். நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றனர். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மூலம் முதலாளிகளுக்குப் பல்வேறு நிலையில் கோரிக்கைகள் வைத்து வருகின்றனர். எளிமையான எதிர்பார்ப்புகள் நிறைவேறாத சூழ்நிலையில் தொழிலாளர்கள் தொழிற்கூடங்களில் அமைதியற்ற சூழலை உருவாக்குகின்றனர். அவ்வாறே நுகர்வோர்களும் தரமற்ற பொருளைப் பெறும்போது நீதிமன்றங்கள் மூலம் தொழிலகங்களில் அமைதியற்ற சூழலை உருவாக்குகின்றனர்.

### 6. தடையற்ற நிறுவனம்

தொழில் நிறுவனங்கள் சமூக உரிமைகளை மறுத்து அதிகப் பயன் அடைந்து வருகின்றனர். உதாரணமாக, அரசு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் கலப்படம், கள்ளச்சந்தை மற்றும் சமூகத்திற்கு எதிரான நடைமுறைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. இருந்தபோதிலும் (அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக தொழில் செய்வது சமூகப் பொறுப்புணர்வு இன்மையைக் குறிக்கின்றது) அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பின்பற்றுவது சமூகப் பொறுப்புணர்வின் அவசியமான ஒன்றாகும். அத்தகையச் செயல்பாடு தொழிலில் தடையற்று முடிவெடுக்கும் உரிமையைப் பாதிக்கிறது.

### 7. சட்டம் மற்றும் ஒழுங்கு

நாட்டின் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதன்மூலம் தொழில் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட இயலும். தொழில் அமைப்புகள் நீண்டகாலமாக நாட்டின் பின் தங்கிய மக்களைச் சுரண்டிவருகின்றன. மேலும் சில நேரங்களில் சட்ட ஒழுங்கினைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்கின்றனர். அதுபோன்ற செயல்கள் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. எனவே அவர்கள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தங்களின் செயல்பாடுகளை உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

### 8. தார்மீக பொறுப்புணர்வு

பெரும்பாலான பெரிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவில், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசால் மட்டுமே தீர்வு காண இயலாது. நிதி மற்றும் மனிதவளம் போன்றவற்றின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும். உதாரணமாக, நாட்டில் காணப்படுகின்ற வட்டார ஏற்றத் தாழ்வுகள், வேலைவாய்ப்பு இன்மை, கல்வியறிவின்மை, அன்னியச்செலாவணி தட்டுப்பாடு மற்றும் இதர பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழில் அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் தொழில் அமைப்புகள் வேறு சில சமூகச் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. அதாவது சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசு படுத்துதல், சுகாதாரமின்மை போன்ற பிரச்சினை களைப் போக்கும் வகையில் தொழில் அமைப்புகள் செயல்படவேண்டும்.

### 9. சமூக – கலாச்சார நெறிமுறைகள்

இந்தியாவில் கலாச்சாரம் மற்றும் பண்பாடு செழித்து வருகின்றன. தொழில் செய்பவர்கள் இத்தகைய கலாச்சார பண்பாட்டின் மூலம் இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி சமுதாயத்திற்கும் மற்றும் அரசுக்கும் உதவிகரமாக இருத்தல் வேண்டும். மேலும் வாய்ப்புகளை சமமாக பகிர்ந்தளித்தல், பணியாளர்கள் மற்றும் நுகர்வோர்களிடையே நல்ல உறவு முறையைப் பேணிக் காக்க தொழில் அமைப்புகள் முன்வர வேண்டும்.

### 10. தொழில் முறைமை

தொழில் நிறுவனங்களை மேலாண்மை செய்வது என்பது ஒரு நிபுணத்துவம் சார்ந்தது. நிறுவனம் சார்ந்துள்ள மேலாண் உரிமையாளர்கள் இலாபத்தின் மீது அதிக அக்கறை கொள்வதால் இலாபம் அனைத்தும் அவர்களையே சேருகின்றது. எனவே ஊதியம் பெறும் மேலாளர்கள் இலாபத்தின் மூலம் பெறும் பயன்பாட்டை அடைய இயலாமல் வெற்று நடைமுறைகளை மேற்கொள்கின்றனர்.

### 11. பொறுப்பாண்மை தத்துவநெறி

மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிடும் போது, யார் ஒருவர் பணம் மற்றும் சொத்தை ஈட்டுகின்றாரோ அவர்கள் அதை சமுதாய நலன்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்கிறார். அதுபோலவே "வியாபார நிறுவனங்கள் தங்கள் சுயலாபத்திற்காக அல்ல, மாறாக சமுகத்தின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்" என்றும் கூறுகின்றார். அதாவது செல்வந்தர்கள் மற்றும் தொழில் அதிபர்களிடமும் உள்ள சொத்து இறைவனால் அவர்கள் வசம் சமூக நலனுக்காக பயன்படுத்த ஒப்படைக்கப் பட்டதால் இவர்கள் கடவுளின் நம்பிக்கையை பெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். எனவே, அவர்கள் தங்களைப் பொறுப்பாண்மையர்களாகக் கருதிச் சமூக நலனிற்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

## 17.03 சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த வாதங்கள்

### சமூகப் பொறுப்புணர்வுக்கு சாதகமான வாதங்கள்

அனுமானத்தின் அடிப்படையில் சமூகப் பொறுப்புணர்வுக்கு சாதகமான வாதங்களைக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

#### 1. பங்குநர்களின் நலன் பாதுகாத்தல்

ஒரு தொழில் நிறுவனம் அதன் கூட்டாளிகளின் அல்லது பங்குதாரர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல்படுகின்றது. உதாரணமாக பங்குதாரர்கள், கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் மற்றும் விநியோகிப்பாளர்கள் போன்றவர்கள். மேலும் தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்கள் மற்றும் உரிமையாளர்கள் மட்டுமன்றி அனைத்து தரப்பினருக்கும் பயன்தரத்தக்க வகையில் செயல்படுதல் வேண்டும். மேற்கூறிய பலதரப்பட்ட பங்குநர்களுக்கு கடமையாற்ற சமூகப் பொறுப்புகளைத் தொழில் நிறுமங்கள் ஏற்க வேண்டியுள்ளது.

#### 2. சமுதாய மேம்பாடு

தொழில், சமுதாயத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. இது சமுதாயத்தின் ஆதரவு உள்ளீடாக விளங்குகிறது. சமூகப் பொறுப்புணர்வின் நடத்தையானது தொழில் மற்றும் சமூகத்திற்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு அவசியமானதாக கருதப்படுகிறது.

#### 3. சமுதாய தாக்கத்தை அளவிடுதல்

ஒரு தொழில் நிறுவனம் தனது செயல்பாட்டிற்கு உட்பட்ட காலத்தில் பல முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இத்தகைய செயல் நடவடிக்கைகள் சமுதாயத்தின் நலன்கள் மற்றும் மதிப்புகள் மீது நிலையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொழில் நிறுவனம் சமுதாயத்தின் நலன் கருதி சட்டப்படி அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்.

#### 4. முறையான சமூக அதிகாரம்

பெரும்பாலான நிறுவனங்கள் சமூக அதிகாரத்தின் மூலம் பலதரப்பட்ட செயல்பாடுகளை போற்றத்தக்க வகையில் மேற்கொள்கின்றன. சமுதாய பொறுப்புணர்வு இன்மையின் மூலம் சமூக அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய சூழலில் சமுதாய பொறுப்புணர்வு மற்றும் சமுதாய அதிகாரம் இடையே சமநிலை இருத்தல் வேண்டும்.

#### 5. சட்டப்பூர்வ தன்மை

இது நிறுமங்களின் சமூகப் பொறுப்புணர்வைப் போற்றத்தக்க ஒரு பண்பாக விளங்குகிறது. சமூகப் பொறுப்புணர்வு தொழிலின் பொருளாதார நோக்கங்களை அடைய பெரிதும் உதவுகிறது. மேலும் சமூக வாழ்க்கையை உயர்த்துவதன் மூலம், தொழிலின் சிறந்த வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் நல்ல நண்பர்களை பெறமுடிகின்றது. சமுதாய பொறுப்புணர்வு தொழில் நிறுமங்களை ஒரு நல்ல கூட்டுரு குடிமகனாக ஆக்குகிறது என்றால் மிகையாகாது.

#### 6. ஆற்றல் (அ) திறன்

தொழில் அமைப்புகள் மற்றும் அதன் நிர்வாகிகள் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் திறமைமிக்கவர்களாக திகழ்கின்றனர். அதுபோன்று சமுதாயத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு திறன்கொண்ட தலைவர்களின் பங்களிப்பை சமுதாயம் எதிர்நோக்குகின்றது.

#### 7. தொழில் முறை நடத்தைகள்

தொழிலில் பண்பட்ட மேலாளர்கள் ஒரு சிறந்த சமூக உணர்வைக் கொண்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. சமூகப் பொறுப்புணர்வு கொண்ட ஒரு மேலாளர் தொழிலில் பண்பட்டவராக கருதப்படுகிறார். அப்படிப்பட்ட நபர் தானாகவே நன்னெறிக் கொள்கையைப் பின்பற்றுகிறார்.

#### 8. பொதுக் கருத்து

சமூகப் பொறுப்பை ஒரு நோக்கமாக ஏற்றுக்கொள்வதன் மூலம் பொதுமக்களின் கருத்துக்களை மேம்படுத்த உதவும். அதன் மூலம் தொழிலுக்கான ஒரு நல்ல மதிப்பை ஏற்படுத்த முடியும். உதாரணமாக, பூங்காக்களை அமைத்தல், மற்றும் விழிப்புணர்வு முகாம் ஏற்படுத்துதல் போன்ற செயல்களை மேற்கொள்ளுதல்.

### சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான வாதங்கள்

#### 1. கருத்து தெளிவின்மை

சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் தெளிவாக வரையறுக்கப்படாமல் உள்ளது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 170 2/17/2021 3:12:27 PM

இத்தகைய சூழ்நிலையில் சமூகப் பொறுப்புணர்வு கோட்பாட்டை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது.

### 2. பொருளாதார இலக்குகளை தளர்த்தல்

சமூகப் பொறுப்புணர்வை ஏற்றுகொள்வதன் மூலம், வணிகப் பொருளாதார இலக்குகளையும் சமரசம் செய்கின்றன. தொழில் என்பது ஒரு பொருளாதாரம் சார்ந்த நிறுவனமாகும். மேலும் அதன் உரிமையாளர்களுக்கு அதிகபட்ச இலாபம் ஈட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. இந்நிலையில் சமூகப் பொறுப்புணர்வுக் கொள்கையை நிறைவேற்றுவது அதன் பிரதான நோக்கமாகிய அதிகபட்ச இலாபத்தை ஈட்டல் என்ற பொருளாதாரக் கொள்கைகளை பின்னடையச் செய்கின்றது.

### 3. சமூகத்திறன் இன்மை

தொழில் அமைப்புகள் மற்றும் அதன் மேலாளர்கள் சமூகம் சார்ந்த கடமைகளைப் பற்றி நன்கு அறிவதில்லை. இதனால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம் (Government and Non Government Agencies) போன்ற சிறப்பு சமூக சேவை நிறுவனங்கள் சமூகப் பிரச்சினைகளை அல்லது சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

### 4. நுகர்வோர் மீதான சுமை

தொழில் அமைப்புகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் ஈடுபடுகின்றபோது, அதற்கான செலவு அதிகரிக்கின்றது. அத்தகைய செலவினங்களை ஈடுகட்ட தொழில் நிறுவனங்கள் பொருளின் விலையை உயர்த்தி அந்தச் சுமையை நுகர்வோர்களுக்கு மாற்றிவிடுகின்றன. சுருங்கக் கூறின் சமூகப் பொறுப்புணர்வு தத்துவத்தை நிறைவேற்றும் செலவு இறுதியாக நுகர்வோரைத் தாக்குகிறது என்றால் மிகையாகாது.

### 5. அதிகாரமற்ற பொறுப்பு

தொழில் அமைப்புகள் பொருளாதாரம் சார்ந்த அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால், அது சமூகம் சார்ந்த அதிகாரங்கள் கொண்டவை அல்ல. சமூக அதிகாரத்தை சமூகப் பொறுப்புணர்வுடன் திணிப்பது ஓர் நியாயமற்றதாகும். சமூக செயல்பாடுகளில் தலையிடுவதற்கு தொழிலை அனுமதித்தால் அதன் செயல்பாடுகள் சமுதாய மதிப்பிற்கு நிலையான தீங்கினை விளைவிக்கும்.

### 6. பொறுப்புகளை தவறாக பயன்படுத்துதல்


சமூகப் பொறுப்புக்களை ஏற்பதன் மூலம், நிறுமத்தின் திட்டங்களை நிறைவேற்றும் நேரம் மற்றும் வளங்கள் குறைகின்றன. இதனால் தொழில் அமைப்புகள் மேலும் நலிவடைய வாய்ப்பு உள்ளது.

### 7. அளவுகோல் இன்மை

வணிகத்தில் எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு இலாபம் ஒரு பொதுவான அளவுகோலாக விளங்குகிறது. வியாபார அமைப்புகளின் மீது சமுதாய பொறுப்பை திணிப்பதன் மூலம் வியாபார முடிவு எடுக்கும் துல்லியமாக இலாபம் என்ற பொது அளவுகோலால் சரியாக அளக்க முடிவதில்லை. செயல்முறை எப்பொழுதும் சிக்கலானதாகவும் நடைமுறைக்கு மாறானதாகவும் அமைகிறது.

### 8. முறையற்ற பங்கு

வளங்கள் மற்றும் ஆற்றல்களை முறையாக பயன்படுத்துவது ஒரு தொழிலின் முக்கிய பங்காகும். மேலும் சட்டம் மற்றும் தொழில் நன்னெறிகட்கு உட்பட்டு முதலீடு செய்து அதன் மூலம் ஈட்டும் வருவாயைப் பெறுதல் வேண்டும். தொழில் நிறுவனம் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு செலவு செய்வதை தவிர்த்து






XI_Tamil_commerce_16-25_148-254.indd 171 2/17/2021 3:12:27 PM

தொழில் அமைப்பின் பொருளாதார செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் நாட்டம் செலுத்துதல் நல்லது.

### 9. அதிக சுமை உடைய பொறுப்பு

தொழில் நிறுவனங்கள் ஏற்கனவே பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகின்றது. அதாவது பொருட்கள் மற்றும் பணிகள் வழங்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருதல், தொழில் நுட்பங்களை மேம்படுத்தல் மற்றும் வரி செலுத்துதல் மூலம் பொதுக் கட்டுப்பாட்டிற்கு பெருமளவில் பங்களிக்கின்றன. இந்நிலையில் கூடுதலாக சமூகப் பொறுப்புகளை தொழில் அமைப்புகளின் மீது திணிப்பது எவ்விதத்தில் நியாயம் என எதிர்ப்பு குரலும் ஒலிக்கின்றது.

## 17.04 சமூகப் பொறுப்புணர்வின் வகைகள்

சமூகப் பொறுப்புணர்வினை நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம் அவைகள் பின்வருமாறு.

### 1. பொருளாதார பொறுப்புணர்வு

அடிப்படையில் தொழில் அமைப்புகள் அனைத்தும் தங்களின் பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ள இயங்கி வரும் அமைப்புகளாகும். அப்படி பொருளாதார நலனை அடைய முனையும் பொழுது சமூகப் பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. உதாரணமாக மக்களுக்கு தேவைப்படும் பொருள்களை தரமாக வழங்குதல், நியாயமான இலாபம் ஈட்டல், நுகர்வோரின் புகார்களை தீர்த்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற பலசமூகப்பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன.

### 2. சட்டப் பொறுப்புணர்வு

ஒவ்வொரு தொழில் அமைப்புகளும் அதற்கான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்துவதற்கான வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய சட்ட திட்டங்கள் சமுதாய நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே, எந்த ஒரு வியாபார அமைப்பும் ஒரு சமூக பொறுப்புணர்வை உள்ளுணர்வாகக் கொண்டு செயல்படும் அமைப்பாக இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

### 3. தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு

இது சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பாகும். ஆனால் இப்படிப்பட்ட பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிடப்படாதவையாகும். உதாரணமாக ஒரு நிறுவனம் தனது பொருட்கள் குறித்து விளம்பரம் மேற்கொள்ளும்போது அத்தகைய விளம்பரம் மத உணர்வுகள் மற்றும் மக்களின் கண்ணியம் மதிக்கத்தக்க வகையில் இருத்தல் வேண்டும். இத்தகைய பொறுப்புகளை தொழில் அமைப்புகள் தானே விருப்பப்பட்டு கடைபிடிக்க வேண்டும்.

### 4. தன் விருப்ப பொறுப்புணர்வு

இத்தகைய பொறுப்பு ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் தன்னார்வ நடவடிக்கைகளை குறிக்கின்றது. உதாரணமாக, கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்தல் அல்லது வெள்ளம் மற்றும் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவி செய்தல். மேலும் தொழில் அமைப்புகள் தங்களின் மூலதனத்தை ஊக வாணிபத்தில் முதலீடு செய்வதை தவிர்த்து, ஒரு நல்ல பலன் தரத்தக்க நிறுவனத்தில் முதலீடு செய்வது முதலீட்டாளர்களின் வருமானத்தை உயர்த்துதல் போன்ற பொறுப்புகள் தன் விருப்ப பொறுப்புகளாகும்.

## 17.05 பல்வேறு ஆர்வக் குழுக்களுக்கான பொறுப்புணர்வுகள்

தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டபின் தொழிலில் அக்கறை கொண்ட பல்வேறு குழுக்களுக்கு ஆற்ற வேண்டிய பொறுப்புகள் கீழ்க்கண்டவாறு விவாதிக்கப்படுகின்றது.

ஒரு தொழில் அமைப்பு பொதுவாக உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், பணியாளர்கள், பொருள் பகிர்வாளர்கள், வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள் அரசாங்கம் மற்றும் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அத்தகைய அக்கறை கொண்டவர்களை தொழில் நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டவர்கள் அல்லது பல்வகை பங்குநர்கள் என அழைக்கப்படுகிறார்கள். தொழில் அமைப்புகளின் செயல்பாடுகள் இவர்களை நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குகிறது என்றால் மிகையாகாது.

1. தொழில்
2. முதலீட்டாளர்கள்
3. பணியாளர்கள்
4. அரசாங்கம்
5. போட்டியாளர்கள்
6. சமுதாயம்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 172 2/17/2021 3:12:27 PM




**சமுதாயம் சார்ந்த தொழில் சமூகப் பொறுப்புணர்வு**

7. வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள்

8. விநியோகிப்பாளர்கள்

## பல்வேறு ஆர்வ குழுக்களின் தொழில் சார்ந்த பொறுப்புணர்வுகள்

### 1. உரிமையாளர்கள் மீதான பொறுப்புணர்வு

எவர் ஒருவர் சொந்த மூலதனம் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்கி அதில் ஏற்படும் இடர்களை ஏற்கின்றாரோ அவரே தொழிலின் உரிமையாளராவார். அத்தகைய உரிமையாளர் ஏற்கும் தொழில் தொடர்பான பொறுப்புணர்வுகள் கீழ்வருமாறு.

a. தொழிலைச் சிறப்பாக இயக்குதல்.

b. மூலதனம் மற்றும் வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.

c. மூலதனத்தின் மீதான வளர்ச்சியை வரவேற்கும் வகையில் இருத்தல்.

d. நியாயமான வருமானம் தொடர்ந்து அளிக்கத்தக்க வகையில் மூலதனத்தை முறையாக முதலீடு செய்தல் போன்றவைகளாகும்.

### 2. முதலீட்டாளர்கள் மீதான பொறுப்புணர்வு

தொழிலுக்குத் தேவையான நிதியினை மூலதனமாக கீழ்க்கண்ட வழிகளில் எவர் ஒருவர் அளிக்கின்றாரோ அவரே முதலீட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றார். அதாவது, பங்குகள், பத்திரங்கள், வைப்புகள் மற்றும் பிற. மேலும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களும் இத்தகைய பிரிவில் உள்ளடங்குவார்கள்.

முதலீட்டாளர்களின் பொறுப்புகள் பின்வருமாறு

a. மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

b. முதலீட்டின் மீதான வட்டியைத் தொடர்ந்து செலுத்துதல்.

c. குறித்த காலத்திற்குள் மூலதனத்தொகையை திருப்பிச் செலுத்துதல் போன்றவைகளாகும்.

### 3. பணியாளர்கள் மீதான பொறுப்புகள்

எந்த ஒரு தொழில் அமைப்பிற்கும் பணியாளர்கள் அல்லது தொழிலாளர்கள் மிகவும் அவசியமாகும். இத்தகைய பணியாளர்கள் நிறுவனத்தின் நலன் கருதி தங்களுடைய திறனை முழுமையாக செலவிடுகின்றனர். இந்நிலையில் தொழில் அமைப்புகள் அவர்களின் நலனில்அக்கறைகொள்வதுமிகமுக்கியபொறுப்புகளில் ஒன்றாகும். பணியாளர்கள் மனநிறைவு பெறுவதன் மூலம் நிறுவனத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் வெற்றி பெறுகின்றன. தொழில் அமைப்பில் பணியாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வுகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 173 2/17/2021 3:12:27 PM

a. பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்.

b. பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்.

c. நல்ல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருதல்.

d. பணிப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல். அதாவது, வருங்கால வைப்பு நிதி, குழுக் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் பணி ஓய்வு பயன்பாடு போன்ற வசதிகள்.

e. அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் அதாவது வீட்டுவசதி, போக்குவரத்து வசதி, சிற்றுண்டி, சாலை வசதி, குழந்தை காப்பகங்கள் மற்றும் பிற வசதிகள்.

f. குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்.

### 4. பொருள் அளிப்பாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வுகள்

உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகளுக்கு தேவையான கச்சாப்பொருட்களை யார் வழங்குகின்றாரோ அவரே பொருள் வழங்குநர் எனப்படுவார். நுகர்வோர்களுக்கு தேவையான முடிவுற்ற பொருட்களை வழங்கும் சிலரை பகிர்வாளர்கள் என அழைக்கப்படுகிறார்கள். வழங்குநரின் பொறுப்புகள் பின்வருமாறு.

a. பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொடர் ஆணையை வழங்குதல்.

b. நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்புறுதிகளை வழங்குதல்.

c. கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல்.

d. கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல்.

### 5. வாடிக்கையாளர் தொடர்பான பொறுப்புகள்

வாடிக்கையாளரின் ஆதரவு இல்லாமல் எந்த தொழிலும் செயல்படுவதில்லை. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வில் வாடிக்கையாளர்கள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர். தொழில் கீழ்க்கண்ட வசதி வாய்ப்புகளை கட்டாயமாக வழங்கவேண்டும். அவைகள் பின்வருமாறு.

a. பொருட்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்க வகை செய்ய வேண்டும்.

b. பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்தில் மேம்பட்டு இருத்தல் வேண்டும்.

c. பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு மற்றும் அது தொடர்புடைய தலைப்புகள் பற்றி இந்த அத்தியாயத்தின் மூலம் கற்ற பிறகு சமூகப் பொறுப்புணர்வின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் வணிகச் சூழல் மற்றும் பாதுகாப்பு குறித்து ஒரு தொழில் அமைப்பு மேற்கொள்ளும் அக மற்றும் புறச் சூழல் சார்ந்த படிநிலைகள், நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து பின்வரும் பாடத்தில் படிக்கலாம்.

### வெற்றிக் கதைகள்

இந்தியாவில் பெரு நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த செயலுக்கான எடுத்துக்காட்டுகள் (*Corporate Social Responsibility Examples in India*)

#### டாட்டா குழுமம்

இந்தியாவில் டாட்டா குழுமம் பல்வேறு பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) திட்டங்களை மேற்கொள்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை சமுதாய மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு திட்டங்கள் ஆகும். அதாவது மகளிர் சுய உதவி குழுக்களை உருவாக்கி அதன் மூலம் அதிகாரம் அளித்தல் மற்றும் வருவாய் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஊரக சமுதாய மேம்பாடு, மற்றும் சமுதாய நலன் சார்ந்த திட்டங்கள் போன்றவற்றை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக எண்ணற்ற கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடை மற்றும் உதவித்தொகை போன்றவற்றை டாட்டா குழுமம் வழங்கிவருகின்றன.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 174 2/17/2021 3:12:27 PM

## மஹிந்திரா & மஹிந்திரா

Mahindra

இந்திய மோட்டார் உற்பத்தியாளர் மஹிந்திரா (Mahindra) மஹிந்திரா 1954– ஆம் ஆண்டு கே.சி. (K.C) என்ற கல்வி அறக்கட்டளையை நிறுவியது. அதனைத் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டு மஹிந்திரா அறக்கட்டளை துவக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கம் கல்வியை மேம்படுத்துவதாகும். இந்த நிறுவனம் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின் தங்கியுள்ளவர்களின் கல்வி மேம்பாட்டு திட்டங்களில் முதன்மை கவனம் செலுத்தி வருகிறது சி.எஸ்.ஆர் (CSR) திட்டங்கள் மூலமாக கல்வி உதவித் தொகை, நிதி மானியங்கள், வாழ்வாதாரப் பயிற்சி, பின் தங்கிய பகுதி மக்களுக்கு சுகாதாரம், குடிநீர், பாதுகாப்பு மற்றும் பேரழிவு நிவாரணத் திட்டங்கள் போன்றவற்றைச் செய்து வருகின்றன. மேலும் எம் & எம் நான்கிகாளி மூலம் (Nanhikali) பெண் கல்விக்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. மஹிந்திரா பெருமை பள்ளி மூலம் அளித்துவரும் தொழில் பயிற்சி பின்தங்கிய பகுதிவாழ் மக்களுக்கு உயிர்நாடியாக உள்ளது. மேலும் சுகாதார பாதுகாப்பு வசதிகளை மேற்கொள்கின்றன.

## கலைச்சொற்கள்

*பொருளாதார நடவடிக்கை*
*இலாபம்*
*தொழில்*
*பங்குதாரர்கள்*
*ஒளிமயமான*
*வாழ்க்கைத் தரம்*
*வளர்ச்சி*
*சமுதாயம்*
*வளங்கள்*
*தர்மம்*

## சுய சிந்தனைக்கு

*1. தொழில் நிறுவனங்களின் நெறிமுறை சார்ந்த மற்றும் நெறிமுறை சாராத செயல்பாடுகளை அடையாளம் காண்க.*

*2. தொழில் அமைப்புகள் எந்த அளவிற்கு சமூகப் பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுதல்.*

*3. சமுதாயத்தில் சிறு, குறு மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வின் தாக்கம் பற்றி ஆய்க.*

*4. தொழில் அமைப்புகள் சமுதாயப் பொறுப்புணர்வு பெறுவதன் மூலம் பல்வேறு பங்குதாரர்களின் பயன்பாடுகள் குறித்து வேறுபடுத்திக் காட்டுக.*

## மேலும் அறிவதற்கு

*1. தொழில் அமைப்புகளின் இலாபத்தின் மீது சமூகப் பொறுப்புணர்வின் தாக்கத்தை மதிப்பீடு செய்க.*

*2. சமூகப் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் வழிமுறைகளைக் கணிக்க.*

*3. சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகள் குறித்து ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்கள் மேற்கொள்ளும் நிலையைப் படத்தின் மூலம் வெளிப்படுத்துக.*

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது.**

அ) சட்டம்

ஆ) நெறிமுறை

இ) ஒழுங்குணர்வு

ஈ) பொருளாதாரம்

5L7GZV



XI_Tamil_commerce_16-25_148-254.indd 175 2/17/2021 3:12:27 PM

**2. சமூகப் பொறுப்புணர்வு தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களை தவிர __________ க்கும் உண்டு.**

அ) பங்குதாரர்கள்

ஆ) பணியாளர்கள்

இ) அரசு

ஈ) நிறுவனம்

**3. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு என்பது நிறுவனத்திற்கு எவ்வாறு உதவுகிறது?**

அ) இலாபத்தை அதிகரித்தல்

ஆ) இலாபம்

இ) நிலைத்தன்மை

ஈ) சமநிலை

**4. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது.**

அ) அதிக விலை

ஆ) குறைந்த விலை

இ) நியாயமான விலை

ஈ) மிதமான விலை

**5. பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது.**

அ) நியாயமான ஊதியம்

ஆ) சரியான வசதிகள்

இ) சமூகப் பாதுகாப்பு

ஈ) சுரண்டல்

**விடைகள்**

1. இ 2. ஈ 3. இ 4. இ 5. ஈ

## II. குறுவிடை வினாக்கள்.

1. சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக.
2. தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?
3. தொழில் முறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. சமூகப்பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.
2. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 3)

## IV. பெருவிடை வினாக்கள்.

1. சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)
2. சமூகப் பொறுப்புணர்வை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?

## குறிப்பு நூல்கள்.


1. சி.பி. குப்தா – வணிகச் சுற்றுச் சூழல்
2. பேராசிரியர் எம்.பி. சுக்லா, டாக்ஸ்மான்ஸ் வெளியீடு, வணிகச் சுற்றுச்சூழல்
3. கே. அஸ்வத்தாப்பா, ஹிமாலய பப்ளிஷிங் ஹவுஸ், 12 வது பதிப்பு 2014, வர்த்தகத்தின் அத்தியாவசியம்
4. சுற்றுச் சூழல் – ஏ.சி. ஃபெர்னாடோ, ரெஃப்டேட் ஜனவரி 2011, வெளியீட்டாளர் – பியர்சன் இந்தியா, தொழில்
5. சுற்றுச் சூழல் டாக்டர் வி. ராதா, பிரசன்னா பதிப்பகம், சென்னை, வணிகச் சுற்றுச் சூழல்




XI_Tamil_commerce_16-25_148-254.indd 176 2/17/2021 3:12:27 PM

## இணையச்செயல்பாடு


### இந்தியாவில் CSR திட்டங்கள்

வணிக நிறுவனங்களின் சமூக நலத் திட்டங்களை (CSR) அறிவோமா!





படிகள்:

- உலாவியில், கொடுக்கப்பட்ட உரலியை தட்டச்சு செய்யவும் ( அல்லது) விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும். "CSRBOX" என்ற தளம் திரையில் தோன்றும். அதன் முகப்புப் பக்கத்தில் "NEWS & STORIES" –ஐச் சொடுக்கி, கீழே தோன்றும் பட்டியலில் "Impact stories" –ஐத் தேர்வு செய்யவும்.
- திரையில் தோன்றும் "Impact stories" –ஐ சுட்டியின் உதவியால் கீழே நகர்த்தி, கல்வி தொடர்பான CSR செயல்பாட்டினைத் தேர்ந்தெடுக்கவும். உனக்குப் பிடித்தமான, மனதைத் தொட்ட, வெற்றிக் கதைகளைக் குறிப்பெடுத்து, நண்பர்களோடும், ஆசிரியர்களோடும் பகிர்ந்து கொள்ளவும். மேலும் தமிழ்நாட்டின் CSR திட்டங்களைப் பற்றியும் ஆய்ந்தறியவும்.




படி 1




படி 2

செயல்பாட்டிற்கான உரலி:

https://csrbox.org/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

B133_11_COM_TM

# அலகு – 5 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள் மற்றும் தொழில் நன்நெறிகள்

அத்தியாயம்
**18**

# தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு.". – குறள் 423

5LB4NS

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. தொழில் நன்நெறிகள் குறித்த கருத்தை நன்கு புரிந்து கொள்ள முடியும்
2. தொழில் நன்நெறிகளின் முக்கிய கூறுகளை அடையாளம் காண முடியும்
3. தொழில் நன்னெறிகளை அறிய முடியும்
4. நிறுவன ஆளுகை மற்றும் பன்னாட்டுத் தரம் மற்றும் இந்தியாவில் உள்ள பன்னாட்டு நிறுமங்கள் பற்றி புரிந்து கொள்ள முடியும்

### அறிமுகம்

இந்த அத்தியாயத்தில் நிறுவன ஆளுகை மற்றும் பன்னாட்டு தரஅளவீடுகள், இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் பற்றி அறிதல் மற்றும் தொழில் தர்மம் பற்றிய கருத்துக்கள் சுருக்கமாக விவாதிக்கப்பட்டுள்ளது. தொழில் அமைப்புகளின் குறுகிய மற்றும் நீண்ட கால செயல்பாட்டிற்கு தொழில் தர்மம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அது போலவே ஆளுகை நடத்தைக் குறியீடு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார வளர்ச்சியில் பன்னாட்டு நிறுவனங்களின் பங்கு, அதன் சிறப்பியல்புகள் மற்றும் பன்னாட்டு தரஅளவீட்டுகோல்களின் தேவைகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

டாடா குழுமத் தலைவர் திரு. ரத்தன் டாடா குறிப்பிடும் போது "தொழில் அமைப்புகள் தங்களின் தனிப்பட்ட நலனுக்கு அப்பாற்பட்டு சமுதாய நலனை உள்ளடக்கிச் செயல்பட வேண்டும்". மேலும் "பணம் சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாக கொண்டுள்ள ஒரு தொழிலை ஓர் ஏழ்மை வகை தொழில் எனலாம்" என்று ஹென்றி ஃபோர்டு, (நிறுவனர் – ஃபோர்டு மோட்டார் கழகம்) குறிப்பிடுகிறார்.

வியாபார நன்நெறி என்ற சொல் (Ethics) கிரேக்க (Greek) என்ற மொழியிலிருந்து தோன்றியது, இது தனி நபரின் அடிப்படை வாழ்க்கைக்கு ஏற்புடையது. சரியான அல்லது தவறான, நன்மை மற்றும் தீமையை தீர்மானிக்க உதவும் ஒழுங்குணர்வின் மூலமாக பெறப்பட்ட நடத்தையை இது நிர்வகிக்கிறது. இதுவே நன்நெறி எனப்படும். காலப்போக்கில் இது கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறுபடுகிறது. உதாரணமாக, அரசியலில் லஞ்சம் வாங்குவது அல்லது பணம் சம்பாதிப்பது ஒரு காலத்தில் ஏற்புடையதாக இருக்கலாம், ஆனால் வேறொன்றில் இருக்காது என்பதை அறிவோம். தற்போது, தொழிலில் நன்நெறி தவிர்க்க இயலாத ஒன்றாகும் என்பதை நாம் உணர வேண்டும்.

### 18.01 தொழில் நன்நெறிகள் – கருத்து

தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு தொழில் நன்நெறிமுறைகள், ஒழுங்குணர்வு

தரத்திற்கு ஓர் இலக்கணமாகும். இத்தகைய தரநிலைகள் தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன. மேலும் தொழில் நெறிமுறைகள் வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது.

சமுதாய பார்வையில் தொழில் அமைப்புகள் பொதுமக்களுக்கு தேவையான பொருள்கள் மற்றும் பணிகளை வழங்கும் அமைப்பாக கருதப்படுகிறது. அதே சமயம் தனிப்பட்ட பார்வையில் லாபம் ஈட்டுவதை முதன்மை நோக்கமாக கொண்டுள்ளது. ஆனால் தனி ஒரு மனிதனின் பார்வையில் இலாபம் ஈட்டும் சுயநலம் மிகுந்த அமைப்பே வணிக நிறுவனம் எனவும் கருதப்படுகிறது. இதில் யாருடைய பார்வை தவறு என்று விவாதிக்க முடியாது. ஒட்டு மொத்தமாக எந்த ஒரு தொழில் அமைப்பின் தனிப்பட்ட நோக்கத்தையும் மற்றும் சமூக நோக்கத்தையும் இணைக்கும் பாலமாக வியாபார நன்நெறி விதிகள் செயல்படுகின்றன.




நன்நெறி செயல்கள் எப்போதும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படும் தன்மை கொண்டது. உதாரணமாக, வாடிக்கை யாளரிடமிருந்து நியாயமான விலையை வசூலிப்பதோடு, பொருட்களை சரியான எடையில் அளித்தல், தொழிலாளர்களை சரியான முறையில் வழி நடத்துவது மற்றும் நியாயமான முறையில் இலாபம் ஈட்டுவது போன்றவைகள். தர்மம் மற்றும் முறையான இலாபங்கள் இரண்டும் நீண்டகாலமாக ஒன்றாக இணைந்து செயல்பட வழி வகுக்கிறது. இது வாழ்க்கை தரம் மற்றும் தொழிலின் தரத்தையும் மேம்படுத்துகிறது.

## 18.02 தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள்

தொழில் அமைப்புகள் சிறப்பாக செயல்படுவதற்கு சில அடிப்படை தொழில் நெறிமுறைகள் அவசியமாகிறது. அவைகள் பின்வருமாறு.

### 1. உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு

நன்னெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும். அப்படி நன்னெறி விதிமுறைகளை உருவாக்குவதில் உயர்மட்ட மேலாண்மையின் தார்மீக ஆதரவு இன்றியமையாதது. தார்மீக நன்நெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம் பெறச் செய்ய வேண்டும். இவ்வாறு அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கிய குழு ஏற்படுத்தும் நன்நெறி விதிமுறைகள் அனைவரின் பேராதரவுடன் சீராக செயல்படும் என்பதில் ஐயமில்லை. மேற்கூறிய நன்னெறி குழுவிற்கு உயர்மட்ட மேலாண்மையின் ஆதரவு எப்போதும் இருந்திடல் வேண்டும்.

### 2. நன்நெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்

தொழில் அமைப்புகள் நன்னெறி விதிகளை உருவாக்கி அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும். இந்த நன்நெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும். உதாரணமாக உற்பத்தி, விற்பனை, ஆள் சேர்த்தல், தரக்கட்டுப்பாடு, நிதி திரட்டல், நிதியை முதலீடு செய்தல், பணியாளர் நலன், திறன் மதிப்பீடு, வளங்களை சேமித்தல், பொருள் வடிவமைப்பு, நல்வாழ்வு திட்டங்கள் செயலாக்கம் போன்ற ஒவ்வொரு பகுதிக்கும் பொருந்தக்கூடிய நன்நெறி விதிகளை உருவாக்கி அனைத்து துறைகளுக்கும் அதனை பரப்ப வேண்டும். அனைத்து துறைகளும் நன்நெறி விதி குறித்து தெளிவான ஒரு கருத்தைப் பெற்றிடவேண்டும்.

### 3. நன்நெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்

மேற்கூறிய நன்நெறி விதிமுறைகளை ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைபிடிக்கின்றனவா என ஆய்வு செய்ய கண்காணிப்பு அவசியம். இதனை நன்னெறி கண்காணிப்பு (Ethics Monitoring) என்று அழைப்பர். அதாவது தொழில் அமைப்பின் ஒவ்வொரு துறையும் எந்த அளவிற்கு நன்நெறியை நடைமுறையில் கடைபிடிக்கின்றன என கண்காணிக்க ஒரு வித கட்டுப்பாடு அமைப்பை உருவாக்க வேண்டும். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பு இல்லாத நிலையில் நன்நெறி விதிகள் ஒரு ஏட்டளவில் இருப்பதால் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றாகும்.

### 4. அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்

நன்நெறி விதிகளுக்கு பணியாளர்களின் முழு ஆதரவைத் திரட்ட நன்நெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப் பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி அவர்களின் எண்ணப்போக்கை அறிந்து அதற்கு ஏற்றப்படி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நன்நெறி குழு (Ethical Committee) உருவாக்கப்பட வேண்டும்.

### 5. நன்நெறி பலனை அளத்தல்

நன்நெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய நன்நெறி தணிக்கை (Ethical Audit) அவசியம். ஆனால் சில வகை செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம். உதாரணமாக ஊழியரின் ஆற்றல், ஒழுக்கம், பொருளின் தரம், கவனம் போன்றவைகள். இருப்பினும் அவைகளுக்கும் எண் வடிவம் அளித்து தொழிலமைப்பின் ஒவ்வொரு செயலையும் நன்நெறி விதிகள் என்ற தர அளவுகோல்களைக் கொண்டு அளத்தல் அவசியம். இதனால் தொழில் அமைப்பு முழுவதும் நன்நெறி பெற்ற ஒரு மதிக்கத்தக்க நிறுமமாக மாறும் என்பதில் ஐயமில்லை.


## 18.03. தொழில் நெறிமுறையின் விதிகள்

நன்நெறி நெறிமுறை ஆவணம் நன்நெறி நடத்தைகள், கொள்கைகள் மதிப்புகள் மற்றும் அதன் நோக்கங்களை வரையறுக்கிறது. ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய தரம் பற்றி தெளிவான கருத்தை இது தெரிவிக்கிறது. அவர்கள் முடிவெடுப்பதற்கு இது வழிகாட்டியாகவும் விளங்குகிறது.




**கீழ்க்கண்டவை தொழில் நெறிமுறையில் உள்ளடங்கும். அவையாவன:**

1. நியாயமான விலையில் பொருள்களை வழங்குதல்
2. நல்ல தரமான பொருள்களை வழங்குதல், போலியான மற்றும் தரக்குறைவான பொருள்கள் வழங்குவதை அறவே தவிர்த்தல்
3. நுகர்வோர்க் குறைகளை கேட்டறிந்து அவற்றுக்கு உரிய காலத்திற்குள் தீர்வு காணுதல்
4. பொருள்கள் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதை தவிர்த்தல்
5. சந்தையிடுகையில் பதுக்கல் மற்றும் பற்றாக்குறையைச் செயற்கையாக ஏற்படுத்துதல் கூடாது
6. போட்டியை ஒழிக்கும் ஒற்றை நோக்கத்தின் அடிப்படையில் விலை குறைப்பு செய்து போட்டியே இல்லாமல் செய்யக்கூடாது
7. தவறான தகவல் அல்லது மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களை விளம்பரத்தில் உள் சேர்ப்பதைத் தவிர்த்தல்
8. பணியாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்குதல் மற்றும் அவர்களைத் தவறாக பயன்படுத்துதல் / சுரண்டலை தவிர்த்தல்
9. பணியாற்றுவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தருதல்
10. சுற்றுப்புறச் சூழல் மாசு கட்டுபாட்டைக் குறைத்து உற்பத்தி நடவடிக்கைக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்
11. கணக்கு மற்றும் பதிவேட்டு ஆவணப் புத்தகங்களை முறையாக பராமரித்தல் மற்றும் கையாளுதல்
12. தொடர்ந்து வரி செலுத்துதல்
13. பல்வேறு தொழில் நட்டம் / இழப்புகள் பற்றி புகார் அளித்தல் மற்றும் அரசின் விதிமுறைகளை ஒருபோதும் அவமதித்தல் கூடாது.






XI_Tamil_commerce_16-25_148-254.indd 180
2/17/2021 3:12:29 PM

## 18.04 பெருநிறுவன ஆளுகை

"நிறுமங்களில் முறையான ஆளுகை மூலம் அந்நாடுகளின் உலகப் பொருளாதாரம் தீர்மானிக்கப்படுகிறது எனக் கூறுகிறார்" – திரு. ஜேம்ஸ் உல்சன், முன்னாள் உலக வங்கி தலைவர், 1999.

### பெருநிறுவன ஆளுகையின் பொருள்

பெரு நிறுவன ஆளுகை என்பது ஓர் வணிக நிர்வாக முறையாகும். மேலும் அனைத்துப் பங்குதாரர்களின் நலன் கருதி தொழில்களை முறையாக இயக்கி கட்டுப்படுத்தப்படும் ஒரு பழக்க முறையாகும். பெருநிறுவன ஆளுகையானது தொழில் நெறிமுறை, நியாயமான தொழில் நடைமுறைகள், வெளிப்படைத்தன்மை, வெளிப்பாடு என்ற கூறுகளை உள்ளடக்கியது. இது அனைத்துப் பங்குதாரர்களின் நலன் பயக்கும் தத்துவமாகும்.

பெருநிறுவன ஆளுகை கோட்பாடு அதன் தலைமை நிர்வாகிகள், இயக்குனரவை குழு, பல்வேறு துறையின் மேலாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் உரிமை மற்றும் பொறுப்புகளை பற்றி விரிவாக விளக்குகிறது. நிறுமத்தின் நோக்கங்களை வடிவமைத்து அதன் செயல்பாடுகளை உன்னிப்பாக கண்காணிக்க உதவுகிறது.

பெருநிறுவன ஆளுகையின் மூலம் தனிப்பட்ட நபரின் இலக்குகள், சமுதாயத்தின் இலக்குகள் மற்றும் பொருளாதார இலக்குகள் ஆகியவற்றிற்கிடையே சமநிலையை பெற்றிட இக்கோட்பாடு வழிகோலுகிறது. உதாரணமாக இன்போசிஸ், விப்ரோ, ரிலையன்ஸ் மற்றும் இந்துஸ்தான் யூனிவர் லீவர் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் பெருநிறுவன ஆளுகையின் செயல் நெறிமுறை மற்றும் வழிகாட்டுதல் முறைகள் மூலம் தங்களின் செயல்பாட்டினை கணிசமாக உயர்த்துகிறது.

### இலக்கணம்

பெருநிறுவன ஆளுகைக்கான இலக்கணம் பல்வேறு அறிஞர்களால் பலவாறு வரையறுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றை கீழ்காணலாம்.

"பெருநிறுவன ஆளுகை என்பது சம்பந்தப்பட்ட தொழில் அமைப்பில் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை போன்றவற்றை மேப்படுத்தும் ஒரு செயல்" – உலக வங்கி.

"பெருநிறுவன ஆளுகை என்பது எந்த ஒரு நிறுமத்தையும் திறம்பட செம்மையாக இயக்கி, வழிநடத்தி , கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை".

"பெருநிறுவன ஆளுகை என்பது எந்த ஒரு நிறுமத்தையும் செம்மையாக இயக்கி, திறம்பட வழிநடத்தி, கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை". – கேட்பரி குழுமம்.

### பெருநிறுவன ஆளுகையின் பயன்கள்

பெருநிறுவன ஆளுகை தத்துவத்தின் ஒரு முக்கியக் கூறான வெளிப்படைத்தன்மையான மேலாண்மையின் மூலம் எந்த ஒரு நாட்டிலும் சமச் சீரான பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. பெருநிறுவன ஆளுகை கோட்பாட்டின் மூலம் அனைத்து பங்குதாரர்களின் நலம் மற்றும் பாதுகாப்பு பெருமளவு பேணிக்காக்கப்படுகிறது.

### பெருநிறுவன ஆளுகையின் பயன்பாடுகள் சிலவற்றை கீழ் காணலாம்

1. நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.
2. தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.
3. பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்
4. முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்
5. நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன.
6. பங்கு விலையின் மீது நேர்மறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.
7. பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள் தங்களின் குறிக்கோள்களை அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது
8. தேவையற்ற கழிவு / விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்
9. நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் (Image) கூட்டுகிறது.
10. அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டைச் சரியான முறையில் கையாளுகிறது.
11. வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.
12. தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 181 2/17/2021 3:12:29 PM

## 18.05 இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்கள்

### பொருள்

இந்திய பொருளாதாரம் பல்வேறு கோணங்களில் மிக வேகமாக வளர்ந்து வருவதோடு பன்னாட்டு நிறுமங்களுடன் போட்டியிடும் அளவிற்கும் (முதலீடு மற்றும் பணியாளர்கள் அடிப்படையில்) வளர்ந்துள்ளது. மேலும் பல ஆண்டுகளாக பல்வேறு நாடுகளில் உலகளாவிய அளவில் வர்த்தகம் கொண்டுள்ளதால் அதிக அளவில் லாபம் ஈட்டும் வகையில் பன்னாட்டு நிறுமங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய இந்த சூழ்நிலையில் பன்னாட்டு நிறும கோட்பாடு முக்கியத்துவம் பெறுகிறது.

### இலக்கணம்

பன்னாட்டு நிறுமம் (MNC) பல நாடுகளில் செயல்படும் ஆனால் அதன் தலைமை நிர்வாகம் ஒரு நாட்டிலிருந்து மட்டுமே நிர்வகிக்கப்படுகிறது என வரையறுக்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தொழில் செய்யும் ஓர் அமைப்பே பன்னாட்டு நிறுமம் ஆகும். இது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது அதாவது ஏற்றுமதி மற்றும் பல்வேறு நாடுகளில் உற்பத்தி மேற்கொள்ளல். பன்னாட்டு நிறுமங்கள் என்பது ஒரு நாட்டை தலைமையிடமாக கொண்டு செயல்படும் நிறுவனமாகும். அது சமயம் அதன் இதர வசதிகள் பிற பகுதிகளில் அமைந்துள்ளன.

எந்த ஒரு நிறுமம் ஒரு பன்னாட்டு நிறுவனம் அல்லது கழகம் (MNC) குறிப்பிடப்படுகிறதோ, அந்த நிறுவனம் அதன் செயல்பாடு அல்லது உற்பத்தி அல்லது சேவை வழங்குதலை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் நிர்வகிக்கிறது. இது தலைமை இடத்தை ஒரு நாட்டிலும் அதன் கிளைகளை பல நாடுகளிலும் கொண்டுள்ளது. பன்னாட்டு நிறுமங்கள் எந்த ஒரு நாட்டை தலைமை இடமாக கொண்டு செயல்படுகிறதோ அந்த நாட்டை சொந்த நாடு (Home Country) எனவும், அதே சமயம் எந்தெந்த நாடுகளில் கிளைகள் அமைத்து செயல்படுகிறதோ அந்த நாட்டை வரவேற்கும் நாடு (Host Country) என்றும் அழைக்கப்படுகிறது. உலகமயமாக்கம் மூலம் பன்னாட்டு உறவுகளில் எந்த அளவிற்கு முக்கிய பங்கு வகித்தாலும், பன்னாட்டு நிறுவனம் ஒரு நாட்டின் பொருளாதாரம் மட்டுமின்றி உலக பொருளாதாரத்திலும், தாக்கத்தை ஏற்படுத்துகிறது

### பன்னாட்டு நிறுமங்களின் இயல்புகள்

பன்னாட்டு நிறுமங்களின் முக்கிய இயல்புகள் அல்லது கூறுகளை கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

1. உலகளாவிய வாய்ப்புகள் இருப்பதாக கருதினாலும் சில நாடுகளில் மட்டுமே இந்நிறுவனங்கள் தொழிலை நடத்துகிறது.
2. பன்னாட்டு அளவில் தங்கள் சொத்துக்களில் ஒரு கணிசமான பகுதியை முதலீடு செய்கிறது.
3. இவ்வகை நிறுவனங்கள், மிகப்பெரிய நிறுவனங்கள்/ தொழில் அமைப்புக்களை கொண்டு இயங்கி வருகின்றது.
4. இந்நிறுவனங்கள் பன்னாட்டு அளவில் உற்பத்தியை மேற்கொள்கிறது மற்றும் பல நாடுகளில் தொழிற் கூடங்களையும் இயக்கி வருகிறது.
5. உலகளாவிய கண்ணோட்டத்தில் நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள பன்னாட்டு நிறுமங்கள் வகை செய்கின்றது.
6. பன்னாட்டு நிறுமங்கள் ஒரு சில நாடுகளில் மட்டும் உற்பத்தி செய்து பல்வேறு நாடுகளில் விற்பனையை மேற்கொள்கிறது.
7. பன்னாட்டு நிறுமங்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக பெரு நிறுவனங்களின் தொழிலில் ஒருங்கிணைக்கப் படுகின்றன.

### பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா?

இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் தேவைக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றை கீழ்க்காணலாம்.

1. இந்தியாவில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு இருப்பது
2. உலக அளவில் பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தைப் பெறுகிறது
3. அரசின் சாதகமான கொள்கைகள் மூலம் அன்னிய நேரடி முதலீடு பெருமளவு இந்தியாவிற்குள் வருவது
4. 1991- ஆம் ஆண்டிற்கு பிறகு இந்தியா பின்பற்றி வரும் தாராளமயமாக்கல் கொள்கை
5. அரசு கொள்கைகளை தளர்த்தி அதன் மூலம் பன்னாட்டு முதலீட்டை ஈர்க்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 182 2/17/2021 3:12:29 PM

### முக்கியச் செய்திகள்

1. உலக அளவில் இந்தியா தொழிற்சாலை உற்பத்தியில் 10-வது இடத்தில் உள்ளது.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 27.6% உற்பத்தி துறையில் உள்ளது.
3. குறிப்பிட்ட சில பொதுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளது.
4. தாராளமயமாக்கம் மூலம் பன்னாட்டு நிறுமங்கள் (MNCs) ஈர்த்து அதன் மூலம் உள்நாட்டு தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிறது.
5. சேவைகள் வெளியீட்டில் இந்தியா 15வது இடத்தில் உள்ளது.

வெளிநாட்டு நுகர்வோர் மத்தியில் இந்திய பொருள்கள் மற்றும் பணிகளின் தேவைகளை அதிகரித்து உள்ளது.

கடலுக்கு அடியில் நார் இழை போன்ற கம்பிகள் (Fibre Optical Cable) மூலம் பரந்த அளவில் பின்னல்வலை போன்று உலகளவில் இந்தியா தொடர்பு கொண்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரம் பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கி வருகிறது. குறிப்பாக இளம் பட்டதாரிகள் மனதில் ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கி, இந்திய பொருளாதார வளர்ச்சி குறித்து பெருமைப்படும்படி செய்துள்ளது.

### இந்தியாவில் முதன்மையான பன்னாட்டு நிறுமங்கள்

புகழ் பெற்ற பன்னாட்டு நிறுமங்களின் பெயர்களை கீழ்காணலாம்.

- ஐ.பி.எம் (IBM)
- மைக்ரோசாப்ட் நிறுவனம் (Micro Soft Company)
- பெப்சிகோ (Pepsico)
- சோனி (Sony)
- வோடபோன் (Vodofone)
- ரீபோக் (Reebok)
- நோக்கியா (Nokia)

இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் ஊடுருவல் அதன் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு மிகவும் பயன் உள்ளதாகவும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புகளையும் அளித்து வருகிறது.

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| நன்நடத்தை | சுரண்டல் |
| ஒழுங்குணர்வு | சமுதாயம் |
| இயந்திர நுட்பம் | அமைப்பு |
| சூழ்நிலை | கண்காணித்தல் |
| நியாயவிலை | நியாயமற்ற முறை. |

### நமது சிந்தனைக்கு

- நன்நெறி நடைமுறைகளைப் பின்பற்றும் பெயர் பெற்ற அமைப்புகள் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
- தற்போது நடைமுறையில் உள்ள புகழ் பெற்ற அமைப்பு பின்பற்றும் நெறிமுறை செயல்களை அதன் உண்மை நடைமுறை வாழ்க்கையோடு ஒப்பிட்டு ஆய்வுகள் உருவாக்கவும்.
- எந்த ஒரு அமைப்பு நெறிமுறை குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது எனக் கண்டுபிடி, நீண்டகால ஓட்டம் மற்றும் குறுகிய கால ஓட்டத்தில், எத்தகைய நெறிமுறை குறியீட்டைப் பின்பற்றுவது என நியாயப்படுத்துகிறது.

### மேலும் அறிவதற்கு

1. பணம் சம்பாதிப்பது தொழிலில் மட்டுமே வாழ்க்கையில் ஒரு முக்கிய நோக்கம் அல்ல.
2. சுற்றுச்சூழல் மற்றும் சட்டம் போன்றவற்றின் நெறிமுறைகளை மாணவர்கள் கருத்தில் கொள்வதன் மூலம் தனி நபர் வருவாய் அல்லது தொழிலின் வருவாயை அதிகரிக்க இயலும்.
3. தலைமையால் நடவடிக்கைகளை மேற்கொள்வது நடவடிக்கைகளை மேலும் திறம்படச் செயலாற்ற வெளிப்புற நபர்களின் பகிர்வு.
4. மதிப்பீட்டு முறையை அனைத்து அமைப்புகளும் ஏற்றல்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?**

(அ) வணிகத்தின் வெற்றி

(ஆ) விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

(இ) ஒழுக்கவியல்

(ஈ) தொழில்முறை நிர்வாகம்

**2. நெறிமுறைகளுக்கான தேவைகள் ……………………….**

(அ) உயர்மட்ட மேலாண்மை

(ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்

(இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளார்கள்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

**3. பின்வருவனவற்றில் எது ஒரு தொழில் நிறுவனத்தில் பயனுள்ள நன்னெறி நடைமுறைகளை உறுதி செய்யவில்லை?**

(அ) ஒரு வெளியீட்டின் குறியீடு

(ஆ) பணியாளர்களின் ஈடுபாடு

(இ) இணக்க வழிமுறைகளை நிறுவுதல்

(ஈ) இவற்றில் எதுவும் இல்லை

**4. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழி நடத்த வேண்டும்.**

(அ) பொது நடத்தை

(ஆ) அமைப்பு நடத்தை

(இ) நேர்மையான நன்னெறி நடத்தை

(ஈ) தனிநபர் நடத்தை

**5. நிலையான நடைமுறைகளுக்கு வழிவகுக்கும் பணியாளர்களின் நெறிமுறை நடத்தை என்பது ………………**

(அ) நன் நடத்தை

(ஆ) நெறிமுறை நடத்தை

**விடைகள்**

1. இ 2. ஈ 3. அ 4. இ 5. ஈ

### II. குறுவிடை வினாக்கள்.

1. நன்நெறி என்றால் என்ன?
2. தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
3. பெருநிறுவன ஆளுகை இலக்கணம் தருக.

### III. சிறுவிடை வினாக்கள்.

1. தொழில் நெறிமுறைகளின் கருத்து என்ன?
2. பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? (ஏதேனும் 3)

### IV. பெருவிடை வினாக்கள்.

1. தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்.
2. பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

### குறிப்பு நூல்கள்.


1. தொழில் சூழல் – சி.பி. குப்தா (Business Environment – C.P. Guptha)
2. தொழில் படிப்புகள் – தான்பாட் ராய் (Business Studies – Dhanpat Rai)
3. தொழில் தர்மம் மற்றும் மதிப்புகள் – முனைவர் நேரு வஸ்தா மற்றும் முனைவர் நமிதா ராஜ்பட் (Business Ethics and Values – Dr. Neeru Vaasishth and Dr. Namita Rajput)




XI_Tamil_commerce_16-25_148-254.indd 184 2/17/2021 3:12:29 PM

அலகு – 6 தொழில் நிதியியல்

அத்தியாயம்
19

# தொழில் நிதிமூலங்கள்

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று

உண்டாகச் செய்வான் வினை. – குறள் 758

5LJZQF

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. தொழில் நிதியியலின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விளக்க முடியும்.
2. தொழில் நிதியின் தேவை பற்றி விளக்க முடியும்.
3. தொழில் நிதி திரட்டும் வழி மூலங்களை வகைப்படுத்த முடியும்.
4. சேமிப்பு மற்றும் முதலீட்டின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

## அறிமுகம்

சென்ற பாடத்தில் காப்பீட்டின் பொருள் மற்றும் முக்கியத்துவம் குறித்துக் கற்றறிந்த பின், இந்தப் பாடத்தில் தொழில் நிதியியல் குறித்து விளக்கமாக அறிந்து கொள்ளலாம். இதில் தொழில் நிதியின் தேவை, தொழில் நிதி திரட்டும் வழி மூலங்கள், சேமிப்பின் முக்கியத்துவம் மற்றும் தனி நபர் முதலீட்டு வழிகள் ஆகியவை குறித்து விரிவாக அறிந்து கொள்வோம்.

உடலின் ரத்த ஓட்டத்தைப் போன்று நிறுவனங்களுக்கு நிதி என்பது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. எந்த தொழில் நிறுவனமும் நிதி இல்லாமல் செயல்பட இயலாது. தொழில் நிறுவனங்களுக்கு இரண்டு வகையான நிதி தேவைப்படுகிறது. அவை



நிலைமுதல் மற்றும் நடை முறை முதல் ஆகியவை ஆகும்.

நிலைமுதல் என்பது பொறிகலன், இயந்திரம், அறைகலன், கட்டுமானப் பொருத்துகள், வாகனங்கள் போன்றவற்றை வாங்கத் தேவைப்படும் முதல் ஆகும். நடைமுறை முதல் என்பது தொழிலின் அன்றாட செலவுகளான கச்சாப் பொருட்கள் வாங்குதல், பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் கூலி வழங்குதல், தொலைபேசி கட்டணம், உள்தூக்கு கூலி மற்றும் வெளிதூக்கு கூலி, மின்சாரக் கட்டணம், காப்பீட்டு முனைமம், எழுதுபொருள் செலவுகள் ஆகியவற்றை செய்ய தேவைப்படும் முதல் ஆகும்.

தொழில் நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது தோற்றுவிப்பாளர் நிறுவனத்திற்கான நிதி தேவையை அறிந்து, அதற்கேற்றவாறு அந்நிதியை திரட்டும் வழி மூலங்களைக் கண்டறிதல் வேண்டும். நிதியின் மூலங்கள் என்ற சொல் ஒரு



XI_Tamil_commerce_16-25_148-254.indd 185 2/17/2021 3:12:29 PM

நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிதியைத் திரட்டும் பல்வேறு வழிகளைக் குறிக்கிறது. இந்த பாடத்தில் தொழில் நிதி திரட்டும் ஒவ்வொரு வழி மூலத்தை பற்றியும் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

## 19.01 தொழில் நிதி – பொருள்

தொழில் நிதி என்பது தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள பொருளாதார வளங்களைக் குறிக்கிறது. இதில் உரிமையாளர் முதலீடு செய்யும் தொகையும் மற்றும் தொழிலிற்காக வாங்கிய கடனும் அடங்கும். முக்கியமாகத் தொழில் நிதி என்பது ஒரு நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளைச் சுமூகமாக நடத்திச் செல்லத் தேவையான நிதியை, முதல் மற்றும் கடன் மூலம் ஏற்பாடு செய்வதாகும்.

**இலக்கணம்**

தொழில் நிதியியலுக்கு ஆர்.சி. ஆஸ்போர்ன் கீழ்கண்டவாறு வரைவிலக்கணம் தருகிறார்.

"நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி, அதை முறையாகப் பயன்படுத்துவதற்கான செயலினைக் குறிப்பதாகும்."

பி.ஓ. வீலர் அவர்களின் கூற்றுப்படி "தொழில் நிதியியல் என்பது முதலீட்டுக்கான நிதியைப் பெறுவதும், அதை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுவனங்களின் ஒட்டு மொத்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வணிகச் செயல்பாடுகள் ஆகும்."

மேற்கூறிய வரைவிலக்கணங்கள், தொழில் நிதியியல் என்பது நிதியைத் திரட்டுவது மட்டுமல்லாது, திரட்டிய நிதியைப் பயனுள்ள வகையில் திறமையாகவும் சிறப்பாகவும் பயன்படுத்துதலைக் குறிக்கும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## தொழில் நிதி – இயல்புகள் மற்றும் முக்கியத்துவம்

### தொழில் நிதியியலின் இயல்புகள்

மேலே உள்ள வரையறையிலிருந்து தொழில் நிதியின் பின்வரும் பண்புகளை அறியலாம்.

1. தொழில் நிதி என்பது தொழிலில் பயன்படுத்தப்படும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நிதிகளை உள்ளடக்கியதாகும்.
2. சிறிய, நடுத்தர மற்றும் பேரளவு நிறுவனங்கள் போன்ற அனைத்து வகை நிறுவனங்களுக்கும் நிதி தேவைப்படுகிறது.
3. தொழில் நிதியின் அளவு வியாபார நிறுவனங்களின் தன்மை மற்றும் செயல்பாட்டின் அளவை பொறுத்து மாறுபடும். அதாவது, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு குறைந்த அளவு நிதி ஆதாரம் போதுமானது. ஆனால் பேரளவு நிறுவனங்கட்கு அதிக நிதி தேவைப்படுகிறது.
4. தொழில் நிதியின் தேவை காலத்திற்கு ஏற்ப மாறுபடும். இதை வேறு வகையில் கூறுவதனால், தொழில் சுறுசுறுப்பாக இயங்கும் உச்சகட்டக் காலத்தில் தொழில் நிதி தேவை அதிக அளவிலும், மந்தமான காலங்களில் நிதித் தேவை குறைவாகவும் இருக்கும்.
5. ஒரு நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகளின் அளவு மற்றும் அதன் செயல்பாட்டு எல்லையை அந்நிறுவனத்தின் தொழில் நிதியின் அளவே தீர்மானிக்கிறது.

### தொழில் நிதியின் முக்கியத்துவம்

போதுமான நிதி இருந்தால்தான் தொழில் நிறுவனத்தால் ஆக்கபூர்வமாகத் திறமையுடன் செயல்பட முடியும். போதுமான நிதி இல்லாத நிலையில், ஒரு நிறுவனம் அதன் செயல் எல்லையை விரிவாக்க இயலாது. எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும், அது தனக்கு தேவையான நிதியைச் சிறப்பான முறையில் திரட்டுவதிலும் பயன்படுத்துவதிலும் மற்றும் பல்வேறு துறைகளுக்கு அதனைப் பகிர்ந்து அளிப்பதிலும்தான் அடங்கியிருக்கிறது.

### தொழில் நிதியின் முக்கியத்துவத்தைப் பின்வரும் கூற்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

1. போதுமான நிதியைப் பெற்றுள்ள நிறுவனம் எளிதில் எந்த ஒரு புதிய தொழில் முயற்சியையும் மேற்கொள்ள முடியும்.
2. நிறுவனத்தின் பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான மூலப்பொருட்களை விநியோகிப்பாளரிடமிருந்து எளிய சொற்பகர்வுகளில் வாங்குவதற்கு, தொழில் நிதி உதவுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 186 2/17/2021 3:12:29 PM

3. நல்ல நிதி நிலையில் உள்ள நிறுவனங்கள், சம்பளம், கூலி, வட்டி, பயன்பாட்டு கட்டணங்கள், செலவுகள் ஆகிய நிதி சார் பொறுப்புகளை உரிய நேரத்தில் தீர்க்க முடியும்.

4. வலுவான நிதி நிலையுடன் செயல்படும் நிறுவனங்கள் தொழில் சூழலில் இருந்து எழும் எதிர்பாராத இடர்களான பொருளாதார மந்தநிலை, வணிகச் சுழற்சி, கடுமையான போட்டி, நுகர்வோர் விருப்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றைத் திறமையாக கையாள முடியும்.

5 வலுவான நிதி நிலையுடன் உள்ள நிறுவனங்கள், திறமையான மனித வளங்களைத் தன் வசம் கவர்ந்திழுக்க முடிகிறது. நவீன தொழில்நுட்பத்தை எந்த இன்னலுமின்றி அறிமுகப்படுத்த முடிகிறது.

## 19.02 தொழில் நிதி ஆதாரங்களின் வகைகள்

தொழில் நிதிகளின் பல்வேறு ஆதாரங்களை பின்வரும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) கால அளவின் அடிப்படையில்

ஆ) உரிமை அடிப்படையில்

இ) உருவாக்க அடிப்படையில்

### அ) கால அளவின் அடிப்படையில்

தொழில் நிதித் தேவைகளை தேவைப்படும் கால அளவின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை:

i) குறுகிய கால நிதி

ii) நடுத்தர கால நிதி

iii) நீண்டகால நிதி

அதாவது நீண்டகால நிதி என்பது (5 ஆண்டுகளுக்கு மேல்), நடுத்தர கால நிதி என்பது (1 ஆண்டுக்கு மேல் ஆனால் 5 ஆண்டுகளுக்கு மிகாமல்) மற்றும் குறுகிய கால நிதி என்பது (ஒரு வருடத்திற்குள்) தேவைப்படும் நிதி ஆகியவை ஆகும். எந்தவொரு தடையும் இல்லாமல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவை பயன்படுகின்றன. இவற்றில் நீண்ட கால நிதியானது பங்குகள்(Shares), கடனீட்டு பத்திரங்கள்(Debentures), வணிக வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிலிருந்து பெறப்படும் கடன்கள், மற்றும் இருத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் (Retained Earnings) போன்றவற்றின் மூலம் திரட்டப்படுவதாகும். நடுத்தர கால நிதியானது குத்தகை (Leasing), வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிலிருந்து பெறப்படும் நடுத்தரக் காலக் கடன்கள் போன்றவற்றின் மூலம் திரட்டப்படுகிறது. குறுகிய கால நிதியானது, பொது வைப்பு, தொழில் கடன், வாடிக்கையாளர் தரும் முன்பணம், பந்தகக் கடன், ரொக்கக்கடன், வங்கி மேல்வரைப்பற்று, அடகுக்கடன், அடமானம் போன்றவற்றின் மூலம் திரட்டப்படுகிறது. இம்மூன்று நிதி ஆதாரங்களைப் பற்றி விரிவாக காண்போம்.

### குறுகிய கால நிதி ஆதாரங்கள்

குறுகிய கால நிதியானது ஒரு வருட காலத்திற்குள் தொழில் நிறுமங்கட்குத் தேவைப்படும் நிதியினைக் குறிக்கும். பல்வேறு வகையான குறுகிய கால நிதிகள் பின்வருமாறு.

#### 1. கடன்களும் முன்பணங்களும்

கடன் என்பது கடன் கோருபவரின் கடன் கணக்கில் ஒட்டு மொத்தக் கடன் தொகையையும் ஒரே வீச்சில் வரவு வைக்கப்பட்ட தொகையைக் குறிக்கும். கடன் பெறுநர் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட தொகை, அனைத்தையும் ஒட்டு மொத்தமாக பெற்று பயன்படுத்துகிறார். கடன் பெற்ற தொகையை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகளில் திருப்பிச் செலுத்துவார். ஆனால் இந்தக் கடனுக்கான வட்டி, கடன் அனுமதிக்கப்பட்ட நாளில் இருந்து திருப்பி அடைக்கும் நாள் வரையிலான காலத்திற்கு மொத்தக் கடன் தொகையின் மீது கணக்கிடப்படும். இவ்வகை கடன்கள் பிணையத்தை வைத்துக் கொண்டோ அல்லது பிணையம் இல்லாமலும் வழங்கப்படலாம். கடன் மற்றும் முன்பணங்கள் வழக்கமாக நிலைவைப்பு ரசீது, சரக்குரிமை ஆவணங்கள், பங்குகள், மற்றும் கடன்பத்திரங்கள் போன்ற ஒரு சில பிணையங்களை ஈடாக பெற்றுக்கொண்டு வழங்கப்படுகிறது.

#### 2. வங்கி மேல்வரைப்பற்று

வங்கி மேல்வரைப்பற்று என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில் வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும். எவ்வளவு தொகை கடனாகப் பெறப் படுகிறதோ அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாடிக்கை யாளருக்கான உரிய மேல்வரைப்பற்றின் உச்ச வரம்பு அவரின் நடப்பு கணக்கில் சராசரியாக புழக்கத்திலுள்ள வரவிருப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 187 2/17/2021 3:12:30 PM

### 3. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்

சரக்குகளைக் கடன் அடிப்படையில் விற்கும்போது, விற்பவர் வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார். மாற்றுச்சீட்டு சராசரியாக 15 நாள் முதல் அதிகபட்சம் 180 நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையறுக்கப்படுகிறது. இந்நிலையில் சரக்கைக் கடனுக்கு விற்ற விற்பனையாளர் மாற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு முன்பாக பணத்தைப் பெற முடியாத நிலையில் உள்ளார். எனவே அந்த நிலையில், மாற்றுச்சீட்டை தான் கணக்கு வைத்துள்ள வங்கியில் தள்ளுபடி செய்து, பணத்தைப் பெற்றுக் கொள்கிறார். மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.

### 4. வியாபாரக்கடன்

வியாபாரக்கடன் என்பது ஒரு வணிகர் பிறிதொருவருக்கு சரக்கு மற்றும் சேவையைப் பெறுவதற்காகத் தருகின்ற கடனைக் குறிக்கும். அதாவது தரப்படும் கடன் வாங்கிய பொருளுக்கான தொகையைப் பொருளை வாங்குபவர் உடனே செலுத்தாமல், ஒரு குறிப்பிட்ட தவணை காலத்திற்குப் பிறகு செலுத்த அனுமதிக்கப்படுகிறார் எனலாம். உடனடியாக வாங்கிய பொருட்களும்/ சரக்குகட்கு பணம் செலுத்தாமல், அதனை ஒரு சில தவணைகளில் செலுத்த வகை செய்யும் ஏற்பாடே தொழில் கடன் ஆகும். இவ்வகை தொழில் கடன்கள் ஒரு சில நேர்மையான மற்றும் நற்பெயர் ஈட்டிய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் சலுகையாகும். இவை இருப்புநிலை குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் பற்பல கடனீந்தோர் அல்லது செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு என குறிப்பிடப்படும்.

இம்முறையில் கடனில் சரக்குகளைக் கொள்முதல் செய்ய எந்த ஒரு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. மேலும் எந்தச் சொத்தையும் ஈடாகத் தரவேண்டிய அவசியம் இல்லை. எனவே இக்கடன் வங்கிக் கடனைவிட சால சிறந்ததாக கருதப்படுகிறது. சுருங்கக் கூறினால் கடனில் கொள்முதல் செய்த சரக்கின் மதிப்பை தவணை முறையில் செலுத்த வகை செய்யும் ஏற்பாடே வியாபாரக்கடன் எனலாம்.

### 5. அடகு கடன்

கடன் பெறுநர் அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடமே இருக்கும். கடனாளி கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு, அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார். ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக்கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின் அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

### 6. பந்தகக் கடன் (அசையும் சொத்துகள் மீதான கடன்)

பந்தகக் கடன் என்பது அசையும் சொத்துக்களின் மூல ஆவணங்களை கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடனாகும். அடகு கடனில் சொத்தின் உடமையை வைத்து கடன் பெறப்படுகிறது. மாறாக பந்தகக் கடனில் அசையும் சொத்தின் மூல ஆவணங்களை ஈடாக கொடுத்து கடன் பெறப்படுகிறது. இவ்வகை கடனில் அசையும் சொத்தின் உடமை கடனாளியிடம் இருப்பதால் இதைப் பயன்படுத்தி கடனாளி கடனை அடைக்க தடை ஏதும் இல்லை. பொருளின் உரிமை கடனாளரிடம் இருப்பினும் பொருளைப் பயன்படுத்தக் கடனாளிக்கு அனுமதி உண்டு. கடனாளி கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை அவருக்குக் கொடுத்துவிட்டு அடகு வைத்த பொருளை ஏலம் விட்டு அதன் மூலம் கடன் மற்றும் வட்டித் தொகையை வசூலித்துக் கொள்வார். வழக்கமாக வாகனங்கள், சரக்குகள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அசையும் சொத்துகளை ஈடாக வைத்துப் பந்தகக் கடன் தரப்படுகிறது.

### 7. அடமானம்

அசையா சொத்தினை ஈடாக வைத்து நிதி திரட்டும் முறைக்கு அடமானம் என்று பெயர். கடனாளி நிலம், கட்டிடம் போன்ற அசையாச் சொத்தின் உரிமை ஆவணங்களைக் கடனாளரிடம் பிணையாக ஈந்து கடனைப் பெறுவார். கடன் தொகை முழுவதும் திருப்பி அடைத்த பிறகு ஈடாக கொடுத்த பிணையங்களைக் கடனாளி திரும்பப் பெறலாம்.

### 8. பிணையக் கடன்

நிலை வைப்பு இரசீது, ஏட்டுக்கடன், காப்பீட்டு திட்ட ஆவணங்கள், அளிப்பு இரசீது, பங்குகள், கடன்பத்திரங்கள், நிறும முறிகள் (Bonds), சரக்குரிமை ஆவணங்கள், ரயில் இரசீது, கப்பல் தலைவர் இரசீது, பொறுப்பாண்மையர் இரசீது, பண்டக இரசீது போன்ற



XI_Tamil_commerce_16-25_148-254.indd 188 2/17/2021 3:12:30 PM

சரக்குரிமை ஆவணங்களைக் கடனாளியிடமிருந்து பிணையமாகப் பெற்றுக்கொண்டு வழங்கப் படுகின்ற கடனுக்கு பிணையக்கடன் என்று பெயர்.

### 9. தூய கடன் / பிணையமற்ற கடன்

தூய / பிணையமற்ற கடன் என்பது எவ்விதமான பிணையங்களையும் ஈடாகப் பெறாமல் கடன் பெறுநரின் குணநலன்கள், திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் அவரின் செயல் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுவதாகும்.

### 10. வணிகத்தாள்

வாக்குறுதித் தாளின் வடிவத்தில் எவ்விதப் பிணையமும் இல்லாமல் நிறுமங்களால் பணச்சந்தையில் வெளியிடப்படும் ஓர் ஆவணத்திற்கு வணிகத்தாள் என்று பெயர். கூட்டுப் பங்கு நிறுமங்கள், இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற முதன்மை முகவர்கள் (Primary Dealers) மற்றும் அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் ஆகியவை வணிகத்தாளை வெளியிட தகுதி பெற்ற நிறுவனங்களாகும். இவ்வகை வணிகத்தாள் முதன்முதலில் 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவ்வகைத் தாள்கள் இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் பிரிவு 45 ன் கீழ் வெளியிடப் படுகிறது. இது ஒரு குறுகிய கால நிதி திரட்டும் ஆவணமாகச் செயல்படுகிறது. குறைந்தபட்சம் 7 நாட்கள் முதல் அதிகபட்சமாக 365 நாட்கள் தவணையில் முதிர்வடையுமாறு இவ்வகை பத்திரங்கள் வெளியிடப்படுகிறது.

### 11. வாடகை கொள்முதல் நிதி

சிறு தொழிலகங்கள் தங்களுக்கு வேண்டிய இயந்திரங்கள், பொறிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்களை வாங்கும் பொழுது அதனுடைய முழு மதிப்பையும் செலுத்தாமல், அதன் ஒரு பகுதியை முன்பணமாகச் செலுத்திவிட்டு, அப்பொருளை வாங்கும் முறைக்கு வாடகை கொள்முதல் முறை என்று பெயர். வாடகை கொள்முதல் முறையில் பெறப்பட்ட சொத்தினை வைத்துக் கடன் பெற்றவர் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதிலிருந்து கிடைக்கும் வருவாயை வைத்துக் கொண்டு வாடகை கொள்முதலில் வாங்கிய பொருளின் மதிப்பைத் தவணைகளில் திருப்பி அடைக்க வேண்டும். கடைசி தவணையைச் செலுத்திய பிறகு அப்பொருளின் மீதான உரிமை, கடன் பெற்ற பயனாளிக்கு மாற்றி தரப்படும். அண்மைக்காலங்களில் தேசிய சிறுதொழில் கழகம் போன்ற பல நிறுவனங்கள் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகை கொள்முதல் முறையில் வாங்குவதற்கு உதவி செய்து வருகின்றன.

### 12. கடன் வசூல் முகமை

கடன் வசூல் முகமை என்பது ஏட்டுக்கடனை விற்று அல்லது அதனை அடகு வைத்து நிதி திரட்டும் ஒரு முறையாகும். இம்முறையில் கடன் விற்பனை செய்த நிறுவனம், அந்தக் கடனை வசூலிக்கும் பொறுப்பினை முகவருக்கு விற்று விடுகிறது. சம்பந்தப்பட்ட முகமை கடனாளியிடமிருந்து நேரடியாகக் கடனை வசூலித்துக்கொள்ளும். கடன் வசூல் முகமை ஏட்டுக் கடனாளிகளை தள்ளுபடியில் வாங்குகிறது. ஆனால் வழங்கிய ஏட்டுகடனில் முழுமதிப்பையும் கடனாளியிடமிருந்து வசூலிக்கிறது.

உதாரணமாக வசூல் முகமை ரூ 1 கோடிக்கு கடன்களை கொள்முதல் செய்தாக வைத்துக் கொண்டால், அதற்கு ரூ. 90 லட்சம் மட்டுமே விற்பனை செய்த நிறுமத்திற்கு தரும். இந்த இடைவெளி (ஏட்டுகடனின் மொத்த மதிப்பு – வட்டம்) வசூல் முகமையின் இலாபமாக விளங்குகிறது. கடனாளிகளை விற்பனை செய்த நிறுமத்திற்கு உடனடியாக பணம் கிடைக்கிறது. மேலும் கடனை வசூல் செய்யும் முகமைக்கு இலாபம் கிடைக்கிறது.

## நடுத்தர கால நிதி ஆதாரங்கள்

### 1. வங்கிக்கடன்

ஓராண்டுக்கு மேல் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் வங்கிகளால் வழங்கப்படும் அனைத்துக் கடன்களும் நடுத்தர காலக் கடன் எனப்படுகிறது. வங்கிகள் வழங்கும் வெவ்வேறு வகையான கடன்கள் குறித்து நீண்ட கால நிதி ஆதாரம் என்ற தலைப்பில் விரிவாக விவாதிக்க உள்ளோம். எனவே அதற்கான விளக்கத்தினை அப்பகுதியில் அறியலாம்.

### 2. நிதி நிறுவனக்கடன்

நிதி நிறுவனங்கள் ஓராண்டுக்கு மேல் ஐந்து ஆண்டுகளுக்கு இடையிலான காலத்திற்குக் கடன் வசதி தருகின்றன. இவைகளை நடுத்தர கால நிதி நிறுவனக்கடன் என்று கூறுகிறோம். பலவகையான நிதி நிறுவனக்கடன்களை நீண்ட கால நிதி ஆதாரம் என்ற தலைப்பில் விரிவாகத் தெரிந்து கொள்ளவிருக்கிறோம்.

### 3. குத்தகை நிதி

குத்தகை நிதி என்பது தேவைப்படும் சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்து உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் செயலைக் குறிக்கும். தொடக்க நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் பொறுத்தவரையில்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 189 2/17/2021 3:12:30 PM

தளவாடங்கள், கருவிகள் மற்றும் இதர சொத்துகளை ஒட்டு மொத்தமாக பணம் செலுத்தி வாங்குவது என்பது கடினமான ஒன்றாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் குத்தகை நிதி முறை இந்நிறுவனங்களுக்கு மிகப்பெரிய வரமாக விளங்குகிறது. இம்முறையில் தனி நபர் அல்லது நிறுமம் சொத்துகளைத் தன்னுடைய சொந்த முதலீட்டில் வாங்கி அச்சொத்துகளைத் தேவைப்படும் தொழில் நிறுவனங்களுக்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கி, அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.

சொத்துகளின் மீது உரிமை கொண்ட நிறுவனங்ளுக்கு 'குத்தகைக்கு விடுபவர்' என்று பெயர். சொத்துகளைக் குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 'குத்தகை எடுத்தவர்' என்று பெயர். இங்கு ஒப்பந்தமானது 'குத்தகை ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் குத்தகை தொடர்பான அனைத்துச் சொற்பகர்வுகள் (terms and conditions) தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இந்த ஒப்பந்தத்தில் குத்தகை காலம், குத்தகை தொகை, அதை செலுத்தும் முறை, பராமரிப்பு செலவுக்கு ஒதுக்கீடு செய்தல் போன்ற நிபந்தனைகள் குறிப்பிடப்படுகின்றன. குத்தகை காலம் முடிந்த பின்பு குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்திய சொத்தை குத்தகைக்கு விட்டவரிடம் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அல்லது மாறாக குத்தகைக்கு விட்டவர் குத்தகைக்கு எடுத்த பொருளின் மீதான முழு மதிப்பை பெற்றுக்கொண்டு, குத்தகைக்கு எடுத்தவருக்கு உரிமையை மாற்றிக் கொடுக்கலாம்

## நீண்ட கால நிதி ஆதாரங்கள்

ஐந்து ஆண்டுகளுக்கு மிகையான காலத்திற்கு வழங்கப்படும் நிதிகளுக்கு நீண்ட கால நிதிகள் என்று பெயர். நீண்டகால தொழில் நிதிகளின் பல்வேறு ஆதாரங்கள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

### 1. பங்குகள்

நிறுமங்கள் தங்களுக்குத் தேவைப்படும் பெருமளவு முதல் நிதியைப் பங்குகள் மூலமாகத் திரட்டுகிறது. பங்கு மூலதனம் என்பது நிறுமத்தின் நிதி தேவையைக் கணக்கிட்டு, அவைகளைச் சிறு சிறு அலகுகளாகப் பிரித்துப் பங்குகள் வடிவில் பொதுமக்களுக்கு வெளியிட்டு அதன் மூலம் நிதியைப் பெறுவது ஆகும். ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு பெயரளவு மதிப்பு உண்டு. இந்திய நிறுமச்சட்டம் 2013-ன் படி 'பங்கு மூலதனத்தின் ஒரு சிறு அலகு பங்கு என அழைக்கப்படுகிறது'. பங்குகளை வாங்கிய நபர் பங்குதாரர் என்று அழைக்கப்படுகிறார்.

அவருக்கு நிறுமத்தின் சொத்துக்களிலும் நிறுமம் ஈட்டும் லாபத்திலும் உரிமை உண்டு. பொதுவாகப் பங்குகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன 1. நேர்மை பங்குகள் 2. முன்னுரிமை பங்குகள்.

#### i. நேர்மைப் பங்குகள்

நேர்மைப் பங்குகள் மூலமாக நிறுமங்கள் திரட்டும் முதலுக்கு நேர்மை பங்கு முதல் என்று பெயர். நேர்மை பங்குகள் மூலமாக நிறுமங்கள் தங்களுக்குத் தேவைப்படும் நீண்ட கால நிதியினைத் திரட்டுகின்றன. இந்தப் பங்குகளுக்கு ஆண்டு பங்காதாயம் பெறுவதற்கோ அல்லது நிறுமத்தை கலைக்கும்போது முதலைத் திரும்பப் பெறுவதற்கோ எந்த முன்னுரிமையும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு நேர்மை பங்குதாரருக்கும் அவர் வாங்கியுள்ள பங்கின் எண்ணிக்கையைப் பொறுத்து அவருக்கு வாக்குரிமை வழங்கப்படுகிறது. இதன்படி அதிகப் பங்குகளை வாங்கிய நேர்மை பங்குதாரரே நிறுமத்தின் மேலாண்மையில் ஆதிக்கம் செலுத்துவார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகிறது.

#### ii. முன்னுரிமைப் பங்குகள்

முன்னுரிமைப் பங்குகள் மூலமாக நிறுமங்கள் திரட்டும் முதலுக்கு முன்னுரிமை பங்கு முதல் என்று பெயர். முன்னுரிமை பங்குநர்கள், இலாபம் வரும் ஆண்டுகளில் நேர்மை பங்குநர்களுக்கு பங்காதாயம் வழங்குவதற்கு முன்பாக, பங்காதாயம் பெறுவதில் முன்னுரிமை பெற்றவர்கள். மேலும் நிறுமக் கலைப்பின் போது, நேர்மை பங்குதாரர்களுக்கு முன்பாகப் பங்கு முதலைத் திரும்பப் பெறுவதில் முன்னுரிமை பெற்றவர்கள். சுருங்கக்கூறின் முன்னுரிமை பங்குதாரர்கள் ஆண்டு பங்காதாயம் பெறுவதிலும், நிறுமக் கலைப்பின்போது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும் முன்னுரிமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னுரிமை பங்குநர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

### 2. கடன் பத்திரங்கள்

கடன் பத்திரம் என்பது நிறுமத்தின் மூலம் திரட்டப்பட்ட கடன்கள் குறித்த வெளிப்படையான அத்தாட்சியாகும். கடன் பத்திரங்கள் நிறுமத்திற்கு தேவையான நீண்ட கால முதலைத் திரட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கடன் பத்திரதாரர் என்று அழைக்கப்படுகிறார். நிறுமம் இலாபம் ஈட்டினாலும்

அல்லது நட்டம் ஏற்பட்டாலும் கடன் பத்திரதாரர்களுக்குக் கண்டிப்பாக வட்டி வழங்கப்பட வேண்டும். வட்டியைச் செலுத்தத் தவறினால் நிறுமம் கலைப்புக்குள்ளாக நேரிடும். ஏனெனில் நிறுமம் வட்டியைத் தர மறுக்கும் பட்சத்தில் கடன் பத்திரதாரர்கள் நீதி மன்றத்தை நாடி நிறுமத்தை கலைக்கக் கோரி மனுதாக்கல் செய்ய உரிமை பெற்றவர்கள். மேலும் கடன் பத்திரதாரர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

### 3. இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்

எந்த ஒரு நிறுமமும் தான் ஈட்டிய ஒட்டு மொத்த லாபத்தையும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதில்லை. மாறாக ஈட்டிய வருவாயின் ஒரு பகுதியைப் பங்குநர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள லாபத்தைச் சேமித்து நிறும வளர்ச்சியில் மறுமுதலீடு செய்கின்றன. இதற்கு இருத்திவைக்கப்பட்ட ஆதாயம் (அல்லது) இலாபத்தை மறு உழவு செய்தல் (ploughing Back of Profits) என்று பெயர். அதாவது தனிமனிதன் தான் ஈட்டிய வருவாய் அனைத்தையும் செலவு செய்யாமல் எதிர்பாராமல் ஏற்படக் கூடிய செலவுகளைச் சமாளிக்க, அதில் ஒரு பகுதியைச் சேமித்து வைப்பது போன்று,நிறுமங்களும் அவற்றின் வளர்ச்சி, தொழில் விரிவாக்கம், தொழில் பன்முனையாக்கம் (diversification), புதிய பொருள் அறிமுகம் போன்ற பல நடவடிக்கைகளுக்காக இருத்திவைக்கப்பட்ட ஆதாய நிதியைப் பயன்படுத்தி வருகின்றது. மேலும் நட்டம் வரும் காலங்களில் பங்காதாயம் வழங்கவும் இந்த நிதி பெரிதும் உதவுகிறது. இவ்வகை நிதியைப் பயன்படுத்துவதில் எந்தவிதச் சட்டச் சடங்குகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. எனவே இவ்வகை நிதி மிகவும் எளிதாக திரட்டக் கூடியதாகவும் மற்றும் சிக்கனமானதாகவும் கருதப்படுகிறது.

### 4. பொது வைப்பு

பொதுமக்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம், தங்கள் சேமிப்பை வைப்புத் தொகையாக முதலீடு செய்வது நாம் அறிந்ததே. அதுபோல பொதுமக்கள் நிறுமங்களின் வைப்புகளில் முதலீடு செய்யலாம். நிறுமங்கள் தங்களின் வைப்பு திட்டங்களைக் குறித்து விரிவான விளம்பரம் செய்கின்றன. நிறுமத்தின் நிலைவைப்பில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் எந்தவிதச் சடங்குகளையும் பின்பற்றாமல், இதற்கென வழங்கப்படுகின்ற படிவங்களில் கேட்கப்படும் சிறு விவரங்களைப் பூர்த்தி செய்து அளிப்பதன் மூலமாக எளிய முறையில் முதலீடு செய்ய முடியும்.

நிறும வைப்புக்குத் தரப்படும் வட்டியானது வங்கிகளின் வட்டி விகிதத்தை விடக் கூடுதலாக இருப்பதால், முதலீட்டாளர்களின் கவனத்தை அதிகம் ஈர்க்கின்றது. இவ்வகையில் நிதி திரட்டும் போது, நிறுமம் எந்தச் சொத்தையும் ஈடாகத் தர வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இவ்வகை முதலீடுகள் நிறுமங்களுடைய நிர்வாகக் கட்டுப்பாட்டை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. எனவே பொதுவைப்பு நிறுமங்கட்கு ஒரு வரப்பிரசதமாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

### 5) வணிக வங்கிகளில் இருந்து நீண்ட காலக் கடன் பெறுதல்

பல்வேறு நோக்கங்களுக்காக, வெவ்வேறு காலகட்டங்களில் நிதி பெற, வணிக வங்கிகள் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. தற்போது வங்கிகள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட காலக் கடன்களையும் வழங்குகின்றன. வங்கிகளிலிருந்து பெறப்படும் நீண்ட காலக் கடனை மொத்தமாகவோ அல்லது பல தவணைகளிலோ திருப்பிச் செலுத்தலாம். தொழில் நிறுவனங்களின் சொத்துக்களைப் பிணையாகப் பெற்று வங்கிகள் நீண்ட காலக் கடன்களை வழங்குகின்றன. தற்போது நீண்டகாலக் கடன்களைப் பெறுவதற்கான வழிமுறைகள் இந்திய ரிசர்வ் வங்கியால் எளிமையாக்கப்பட்டுள்ளது.

### 6) நிதி நிறுவனக் கடன்கள்

தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட கால நிதி வழங்குவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் இந்தியாவில் பல்வேறு நிதி நிறுவனங்களை நிறுவியுள்ளன. இந்த நிறுவனங்கள் ஒரு நாட்டின் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. கடன் உதவி மட்டுமல்லாமல், அவர்களுக்காகச் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளுதல், தொழில்நுட்ப உதவி அளித்தல், மேலாண்மையில் உதவி செய்தல் ஆகிய சேவைகளையும் கடன் பெறும் நிறுவனங்களுக்கு வழங்குகின்றன.


பொதுவாக அந்நிறுவனங்கள் நீண்ட கால நிதியை, தொழில் விரிவாக்கம், நிறுவனத்தை மறுசீரமைத்தல், நவீனமயமாக்கல் ஆகிய செயல்களுக்கு வழங்குகின்றன. கடன் பெற்ற நிறுவனங்கள் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த நீண்ட கால அவகாசம் தரப்படுகிறது. எனவே கடன் பெற்ற நிறுவனங்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதைச் சுமையாக உணர்வதில்லை. நிதி நிறுவனங்கள், குறிப்பாக தர மதிப்பீட்டு நிறுவனங்களால், கடன் தர மதிப்பீடு வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு தாராளமாக நீண்ட காலக் கடன்களை அளிக்கின்றன.

## ஆ. உரிமை அடிப்படையில் நிதி ஆதாரங்கள்

உரிமையின் அடிப்படையில் தொழில் நிதியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

### 1. உரிமையாளர் நிதி

நிறுவனங்களின் உரிமையாளரால் வழங்கப்படும் நிதி உரிமையாளர் நிதி எனப்படும்.



P.19.1

உரிமையாளர் என்பவர் ஒரு தனி மனிதராகவோ, நிறுவனத்தின் கூட்டாளிகளாகவோ அல்லது நிறும பங்குதாரர்களாகவோ இருக்கலாம். இது தனி நபர் முதல், கூட்டாளிகள் முதல், அல்லது பங்குகள் மூலம் திரட்டப்பட்ட நிதியைக் குறிக்கிறது. இருத்திவைக்கப்பட்ட இலாபத்தை தொழிலில் மறுமுதலீடு செய்தல் (லாப மறு உழவு) உரிமையாளர் நிதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின் வாழ்நாளில் இந்த நிதி திருப்பித் தரப்பட வேண்டியதில்லை. நிறுவனத்தின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையை உரிமையாளர் நிதி வழங்குகிறது.

### 2. கடனாகப் பெறப்பட்ட நிதிகள்

கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, கடன் பத்திரங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன், பொது வைப்பு, தொழில் கடன், குத்தகை நிதி, வணிகத் தாள், கடன் வசூல் முகமை, முதலியவற்றைக் கூறலாம்.


1. இந்தக் கடன்கள் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.
2. கடனாளி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒப்புக்கொண்ட வட்டியைச் செலுத்துவதற்குச் சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார்.
3. பத்திரங்கள், நிலம், கட்டிடம், சரக்கிருப்பு, வாகனங்கள், இயந்திரம், நிலைச்சொத்து ஆவணங்கள் போன்றவற்றைப் பிணையமாக வைத்து நிதி பெறப்படுகிறது.

## இ. உருவாக்குதல் அடிப்படையில் நிதி ஆதாரங்கள்

உருவாக்குதல் அடிப்படையில் நிதி ஆதாரங்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

### 1. அக நிதி ஆதாரங்கள்

இது வியாபார நிறுவனங்கள் தாங்களே உருவாக்கிக்கொள்ளும் அனைத்து நிதி ஆதாரங்களையும் உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக, இருத்திவைக்கப்பட்ட ஆதாயம், பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள், கடனாளிகளிடம் பெற வேண்டிய தொகை, பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் ஆதாயம் போன்றவை. இந்த நிதி ஆதாரங்கள் தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை மட்டும் பூர்த்தி செய்ய உதவுகிறது.



P 19.3

ஆதாரம் www.rbi.org.in

## 2. புற நிதி ஆதாரங்கள்

தொழில் நிறுவனத்திற்கு வெளியில் இருந்து உருவாக்கப்படும் அனைத்து நிதி ஆதாரங்களையும் வெளிப்புற நிதி ஆதாரங்கள் எனலாம். எடுத்துக்காட்டாகப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் பெறப்படும் கடன், பொது வைப்புகள், கடன் வசூல் முகமை, குத்தகை, வாடகை கொள்முதல் நிதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## 19.03 தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகள்

தொழில் நிதி மூலத்தைத் தேர்ந்தெடுப்பதில் பல்வேறு காரணிகள் பங்கு பெறுகின்றன. இந்தக் காரணிகள் குறித்துச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

### 1. நிதி திரட்டும் செலவு

தொழில் நிறுவனங்கள் நிதி திரட்டுவதற்கு முன்பாக அதனைத் திரட்ட ஆகும் செலவுகளை ஆய்வு செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக வட்டி

### உங்களுக்குத் தெரியுமா

#### முறைசாரா கடன் வழங்குபவர்கள்

தமிழ்நாட்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில், மற்றும் இந்தியா முழுவதும் பரவலாகச் செயல்படும் கடன் வழங்கும் ஒரு சில குழுக்கள் அல்லது தனிநபர்கள் "உள்ளூர் முறைசாரா கடன் வழங்குபவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். கடன் வழங்குவதிலும் அதை வசூலிப்பதிலும் முறையற்ற நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அவை

i) அதிக வட்டி வசூலிக்கின்றனர்.

ii) பணம் மற்றும் ஆள் பலத்தின் மூலம் கடன்களை வசூல் செய்தல்.

iii) முக்கியமாகக் கடன் வாங்கியவர்களை இழிவுபடுத்துகின்றனர், சில நேரங்களில் இது தற்கொலையில் முடிகிறது.

iv) நிதி அளிப்பதில், திட்டத்தை விட அதில் உள்ள கடனாளர்களுக்கே அதிக முக்கியத்தும் தருதல்.

இவற்றைத் தடுக்க இந்திய மைய வங்கி மற்றும் பல்வேறு மாநில அரசாங்கங்கள் பல சட்டக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றன, ஆனால் அவை அத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்படாமல் உள்ளன.

தகவல் தொழில்நுட்பத்தில் விரைவான வளர்ச்சியினால் தனிப்பட்டோரின் நிதித்தேவையில் பெருமளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நண்பர்களுக்குள் கடன் வழங்குதல் நகர்ப்புறச் சம்பளதாரர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக உள்ளது.

https://www.faircent.com/ போன்ற வலைதளங்கள் ஊதியதாரர்களுக்கு அவசரகாலக் காலங்களில் தேவைப்படும் கடனை நியாயமான வட்டியில் பெற உதவுகிறது.

சிறிய தொழில் நிறுவனங்கள் நிதியைப் பெறுவதற்கு நேர்மையற்ற 'முறைசாரா' ஆதாரங்களை நாடுவதைக் கைவிட்டு, சட்ட நெறிமுறைகளைப் பின்பற்றிக் கடன் பெறுதல் ஊக்குவிக்கப்பட வேண்டும். தொழில் முனைவோர் MSME, STAND UP INDIA, முத்ரா ஆகிய கடன்களைப் பெற https://udyamimitra.in போன்ற இணையதளங்களை அணுகலாம்.

https://www.vidyalakshmi.co.in/ போன்ற இணையதளங்கள், பல்வேறு வங்கிகளிலும் மற்றும் இதர நிதி நிறுவனங்களிலும் மேற்படிப்புக்காக நியாயமான வட்டி விகிதத்தில் கல்வி கடன் பெற மாணவர்களுக்கு உதவுகின்றன. மேலும் இந்த இணையதளம் தேசியக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு வழிகாட்டும் இணையதளங்களை அணுகத் தேவையான இணைப்புகளை (linkage) அளித்து உதவுகிறது.

விகிதம் குறைவாக இருக்கும் போது, பொது வைப்பு, கடன் பத்திரங்கள், மற்றும் குறித்த காலக் கடன்கள் ஆகியவை விரும்பத்தக்க வழிமுறைகளாக விளங்குகின்றன பங்குகள் வெளியிட செய்ய வேண்டிய செலவினை விட மேற்கூறிய வழிமுறைகளில் பணம் திரட்டும் செலவு மிகவும் குறைவானதாகவே உள்ளது.

### 2. நிறுவனத்தின் நிதித் திறன்

நிதிநிலையில் வலுவாக உள்ள நிறுவனங்கள், உடனடியாக வட்டி செலுத்தவும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் மூலதனத்தைத் திரும்பப் பெறும் திறனையும் கொண்டுள்ளன. அத்தகைய நிறுவனங்கள் கடன் பெறப் புற மூலங்களை நாடலாம். மறுபுறம், நிலையற்ற நிதிநிலையைக் கொண்டுள்ள நிறுவனங்கள், சொந்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதே நல்லது.

### 3. தொழில் அமைப்புகள்

நிதி ஆதாரத்தினை தேர்வு செய்வது என்பது, தொழிலின் அமைப்பு முறையோடு நெருங்கிய தொடர்புடையது எனலாம். தனிவணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வெளியிட முடியாது. எனவே அவ்வகை நிறுவனங்கள் வங்கிக் கடன், குத்தகை, வாடகை கொள்முதல் நிதி, கடன் வசூல் முகமை போன்ற பல குறுகிய கால ஆதாரங்களை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மாறாக கூட்டுப்பங்கு நிறுமங்கள், அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் பங்குகள், கடனீட்டு பத்திரங்கள், பொது வைப்பு போன்ற நீண்ட கால ஆதாரங்களிலிருந்து நிதி திரட்டும் வாய்ப்பை பெற்றுள்ளன.

### 4. கால அளவு

தொழில் நிதி, அது தேவைப்படும் கால அளவைப் பொறுத்து மாறக்கூடியது. எடுத்துக்காட்டாக, குறைந்த காலத்திற்கு மட்டுமே நிதி தேவைப்படும் போது, வங்கி நிதி ஆதாரங்களான, வங்கி மேல்வரைப்பற்று , ரொக்கக் கடன், மாற்றுச்சீட்டை வட்டம் செய்தல், அடமானம், அடகு கடன், குத்தகை, வாடகை கொள்முதல் நிதி, கடன் வசூல் முகமை போன்ற ஆதாரங்கள் சரியான வழிமுறைகளாகும். நீண்ட காலத்திற்கு நிதி தேவைப்படின், பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், குறித்த கால கடன்கள் போன்றவை சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன.

### 5. வணிக இடர்

சொந்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் எந்த இடர்களுக்கும் வாய்ப்பில்லை. ஆனால் கடன் நிதியைப் பயன்படுத்துவது ஆபத்தில் முடியலாம். கடன் நிதி தொழிலை ஆபத்தில் தள்ளிவிடும் தன்மை கொண்டது. வட்டி மற்றும் முதலைத் திருப்பிச் செலுத்தத் தவறும் நிறுவனங்கள் கலைப்புக்கு உள்ளாக நேரிடலாம். இதனால் தொழில் உலகில் அப்படிப்பட்ட நிறுவனங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படலாம்.

### 6. நிர்வாகக் கட்டுப்பாடு

பங்குதாரர்கள்தான் நிறுமங்களின் உண்மையான உரிமையாளர்கள். அவர்கள் நிறுவனத்தின் நிர்வாகத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டை செலுத்த உரிமை பெற்றவர்கள். தற்போதுள்ள பங்குதாரர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டைத் தங்களிடமே தக்க வைத்துக்கொள்ள விரும்பினால் ,அவர்கள் நிதித் தேவையைப் பூர்த்தி செய்ய அதிகப் பங்குகளை வெளியிடக்கூடாது. அவர்கள் கடன் ஆதாரங்களை நாட வேண்டும். கடன் ஆதாரங்கள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டைப் எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. எனவே நிர்வாகக் கட்டுப்பாட்டை இழக்க விரும்பாத நிறுமங்கட்கு கடன் நிதி ஆதாரங்களே சாலச்சிறந்தது.

### 7. வளர்ச்சி நிலை

வளர்ந்த ஒரு நிறுவனத்தைக் காட்டிலும், புதியதாக தொழில் துவங்கிய நிறுமம் நிதி திரட்டுவதில் இன்னலைச் சந்திக்கலாம். எனவே இவ்வகை நிறுமங்கள் ஆரம்பக் காலகட்டத்தில் தன் சொந்த நிதி ஆதாரங்களையே மிகவும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. ஆனால் வியாபார உலகில் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பின், தன் சொத்துக்களைப் பிணையமாக வைத்துக் கடன் பெறலாம். அந்த சமயங்களில் புற மற்றும் அக நிதி திரட்டும் முறைகளை நாடலாம்.

### 8. நிறுவனத்தின் கடன்தர மதிப்பீடு

கடன் பத்திரங்கள், மற்றும் சரக்களிப்போரிடம் கடன் பெறுதல் போன்ற சில நிதி ஆதாரங்கள் நிறுமச் சொத்துக்களை அடமானம் செய்ய வழிகோலுகிறது. இதன் விளைவாக நிதிச் சந்தையில் கடன் பெற்ற நிறுவனத்தின் கடன் தர மதிப்பீடு வெகுவாக பாதிக்கப்படலாம். மாறாக பங்கு முதல், இருத்திவைக்கப்பட்ட ஆதாயம், பிணையற்ற கடன்கள் மூலம் நிதி திரட்டும்போது எவ்வித சொத்துக்களையும் அடமானம் செய்ய வேண்டியதில்லை. இது நிதிச் சந்தையில் நிறுவனங்களின் நற்பெயரைக் கூட்ட உதவுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 194 2/17/2021 3:12:31 PM

## 19.04 சேமிப்பு – சேமிப்பின் முக்கியத்துவம்



எல்லோரையும் காப்பாற்ற பணம் சேமிக்கவும்

எந்த ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் சேமிப்பு முக்கிய அங்கம் வகிக்கிறது. வருமானத்திற்கும், நுகர்வுக்கும் இடையே உள்ள வேறுபாடே சேமிப்பு என அழைக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் குறிப்பிட்டால், ஒரு விதமான தியாகத்தையே இது குறிக்கிறது. பணத்தைச் சம்பாதிப்பது என்பது சுலபமாக இருக்கலாம், ஆனால் அதைச் சரியான வழியில் முதலீடு செய்வது என்பது கடினமானது. நாம் அமைதியான வாழ்வு வாழ்வதற்குச் சேமிப்பு முக்கியமானதாகும். சேமிப்பு மகிழ்ச்சியான எதிர்காலத்திற்கு வழி வகுக்கிறது. சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக 'உலகச் சேமிப்பு நாள்' கொண்டாடப்பட்டு வருகின்றது. அகில உலகச் சேமிப்பு வங்கி கூட்டமைப்பு (The International Savings Bank Congress) அக்டோபர் 31ஆம் நாளை 'உலகச் சேமிப்பு நாள்' என்று அறிவித்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள் சேமிப்பின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகின்றன.

வைப்புக் கணக்கு, சிறு சேமிப்பு திட்டங்கள், பரஸ்பர நிதிகள், ஆயுள் காப்பீட்டுத் திட்ட ஆவணங்கள், அரசு நிறுமங்களின் பத்திரங்கள், பங்குகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படும் பணம் ஒரு நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

1. வங்கி வைப்புகளில் முதலீடு செய்யப்படும் பணம் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வேலைவாய்ப்பினைத் தோற்றுவிக்கவும், வறுமையைப் போக்கவும் உதவியாக இருக்கிறது.
2. வங்கி வைப்புகளில் முதலீடு செய்யப்படும் சேமிப்புகள், ஒரு நாட்டின் தொழில் மற்றும் வேளாண் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகிறது.
3. அரசு கடன் பத்திரங்கள் (Government Bonds) மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் சேமிப்புகள், ஒரு நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மற்றும் அவற்றை வலுப்படுத்தவும் பெரும் அளவில் பயன்படுகின்றன.
4. அதிக அளவு சேமிப்பு என்பது, ஒரு நாட்டின் பலத்தைக் குறிக்கிறது. இது பொருளாதார மந்த காலத்தில் ஏற்படக்கூடிய இன்னல்களை எதிர்கொள்ள உதவுகிறது.
5. சேமிப்பை அதிகரிப்பதால், பணவீக்கத்தால் ஏற்படும் மோசமான விளைவுகளை மிக எளிதாக எதிர்கொள்ள முடியும். அதன் விளைவாக அதிகரிக்கும் விலைவாசியினைக் கட்டுக்குள் வைத்திருக்க இயலும்.

## 19.05 தனிநபர் முதலீட்டு வழிகள்

நிதி பாதுகாப்பு (financial security) கருதியே மக்கள் தங்கள் சேமிப்புகளை முதலீடு செய்கின்றனர். அவர்கள் தங்கள் சேமிப்புகளைப் பலதரப்பட்ட செயல்களுக்காகப் பலதரப்பட்ட வழிகளில் முதலீடு செய்கிறார்கள். அவர்கள் பல்வேறு கடன்பத்திரங்களில் முதலீடு செய்து, தங்கள் முதலீட்டின் மீதான லாபத்தைப் பெற ஒரு குறிப்பிட்ட காலம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

பணத்தை முதலீடு செய்யும் போது மூன்று முக்கிய கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும் அவை 1. தேவைப்படும் போது பணமாக்கும் தன்மை (liquidity) 2. இலாபமீட்டும் திறன் (profitability) மற்றும் 3. பாதுகாப்பு (Safety). சில முதலீடுகள் சந்தையில் உடனடியாகவும், எளிதாகவும் எந்தவித நட்டமும் இன்றி பணமாக மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவை. அந்த முதலீடுகளை எளிதில் பணமாக்கக் கூடிய முதலீடுகள் (liquid investment) என்று அழைக்கலாம். வங்கி வைப்புத்தொகை, அரசாங்கக் கடன்பத்திரங்கள், பரஸ்பர நிதிகள், பொன், வெள்ளி, பிளாட்டினம் போன்ற விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம், அதே சமயத்தில் வேறு குறிப்பிட்ட முதலீடுகள் உடனடியாகப் பணமாக்குதல் தன்மை அற்றவைகளாக இருக்கலாம். ஆனால் அவை முதிர்வு காலத்தில் அதிக வருமானம் தருபவைகளாக இருக்கும். பங்குகள், அசையாச் சொத்துகள், கடன் பத்திரங்கள், பொது வைப்பு, நிலை வைப்பு, பணம் திரும்பப்பெறும் காப்பீட்டு திட்டாவணங்கள், இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.

இன்னும் சில முதலீடுகள் அதிக வருவாய் ஈட்டும் தன்மை கொண்டவை, உதாரணமாக



XI_Tamil_commerce_16-25_148-254.indd 195 2/17/2021 3:12:31 PM

சூதாட்டம், குதிரைப்பந்தயம், லாட்டரி சீட்டு, போன்றவை. ஆனால் அதில் செய்யப்படும் முதலீட்டுக்கு அறவே பாதுகாப்பு என்பது இல்லை. எனவே தனிப்பட்ட முதலீட்டாளர்கள் தங்கள் உபரி நிதியை, முதலீடு செய்வதற்கு முன்பாக, அவற்றின் பணமாக்கும் தன்மை, இலாபமீட்டும் திறன், முதலீட்டு பாதுகாப்பு இவற்றைக் கருத்தில் கொண்டு சட்டபூர்வமான முறையில், நன்னெறிப்படி புத்திசாலித்தனமாக முதலீடு செய்தல் வேண்டும்.

தனிப்பட்ட முதலீட்டாளருக்கான முதலீட்டு வழிகளில் சில பின்வருமாறு.

### 1. பொது வருங்கால வைப்பு நிதி

இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப்பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும். இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு. இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம். இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப்பெற முடியாது. இதன் மூலம் முதலீட்டாளர் தாங்கள் முதலீடு செய்த பணத்தின் கூட்டு வட்டியைப் பெற முடியும். முதிர்வு காலத்திற்குப் பிறகும் முதிர்வு தொகையைத் திரும்பப் பெற வேண்டிய தேவை ஏற்படவில்லையென்றால், மேலும் 5 ஆண்டுகளுக்கு இதன் காலத்தை நீட்டித்துக்கொள்ளலாம். இருப்பினும் முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித்தேவை ஏற்பட்டால், இந்தக் கணக்கிலிருந்து கடன் பெற்று நிதிக் நெருக்கடியை சமாளித்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

### 2. பரஸ்பர நிதி

பரஸ்பர நிதி என்பது நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித்திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும். இதன் மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர். பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டாளர்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன. இலாப நோக்கடைய திட்டம், உடனடியாக பணமாக்கும் திட்டம், பாதுகாப்பான திட்டம், மற்றும் இந்த மூன்றையும் உள்ளடக்கிய சமச்சீர் திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. முதலீட்டாளர்கள் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, சரியான முதலீட்டு திட்டத்தினை தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.

### 3. நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்

தனிநபர், பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாகப் பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்துச் சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம். அவை, விற்கப்படும் பல்வேறு பங்குகளின் சந்தை விலை, பங்கு வெளியிடும் நிறுவனத்தின் மதிப்பு, லாபப் பங்கீட்டுத்தொகை வழங்குவதில் உள்ள தொடர்நிலை, அந்த நிறுவனம் ஈடுபட்டிருக்கும் திட்டங்களின் தன்மை, அந்த நிறுவனம் ஈடுபட்டுள்ள தொழில் துறையின் எதிர்காலம், போன்ற தகவல்கள் முதலீடு செய்வதற்கு முன்பு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நீண்ட காலத்தில் செய்யப்படும் பங்கு முதலீடு, நல்ல வருவாயைத் திரும்ப அளிக்கக்கூடியதாக இருக்கலாம். இருப்பினும் பங்கு முதலீட்டில் உத்திரவாதமளிக்கப்பட்ட வருவாய் இல்லாததனால், அதில் அதிக அளவில் அபாயமும் உள்ளது எனலாம்.

### 4. அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்

அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும். ஒரு வீட்டு மனை (Plot) அல்லது அடுக்குமாடி குடியிருப்பு (flat) வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது. ஒரு நிலப்பிரிவு அமைந்துள்ள இடம் மற்றும் அங்குள்ள பிற அடிப்படை வசதிகளைப் பொறுத்து அசையாச் சொத்தின் மதிப்பு பல மடங்கு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்ய விரும்புவோர், அந்தச் சொத்துகளின் உரிமைப்பத்திரங்களின் உண்மைத்தன்மையை மிகுந்த கவனத்தோடு ஆய்வு செய்த பிறகே, அதில் முதலீடு செய்யும் முடிவை மேற்கொள்ள வேண்டும். ஆனால் விலையுயர்ந்த உலோகங்களின் முதலீட்டில் உள்ளது போல, உடனடியாக பணமாக்கும் தன்மை இதில் இல்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

### 5. விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்

தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும். சந்தை நிலைக்கேற்றார்போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாகஆனால்உறுதியாகஅதிகரித்துக்கொண்டு



XI_Tamil_commerce_16-25_148-254.indd 196 2/17/2021 3:12:31 PM

இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும். மேலும் முதலீட்டாளர் தற்போது நடைமுறையில் உள்ள தங்கம் வைப்புத் திட்டம் (Gold Deposit Scheme) தங்கம் பரிமாற்ற தொழில் நிதி (Gold ETF-Gold Exchange Traded Fund) தங்கக் கட்டிகள் (Gold Bar) தங்கம் பரஸ்பர நிதி (Gold Mutual Fund) ஆகிய குறுகிய காலப் பயன் அளிக்கும் திட்டங்களில் முதலீடு செய்யலாம்.

### 6. அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்

அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன. அவை 1. அஞ்சலக சேமிப்பு கணக்கு (Postal Savings Account) 2. அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு (Postal RD) 3. அஞ்சலக நிலை வைப்பு கணக்கு (Fixed Deposit/Time Deposit) 4. அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம் (MIS) 5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் (SCSS), 6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு (PPF) 7. தேசியச் சேமிப்பு பத்திரங்கள் (NSC) 8. கிசான் விகாஸ் பத்திரங்கள் (KVP), 9. சுகன்யா சம்ரித்தி கணக்கு (SSA), ஆகியவை ஆகும். அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டார்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.

### 7. பொது வைப்புகள்

நல்ல வருவாய் தரும் நோக்கில் ஆராய்ந்தால் வங்கிகளில் நிலை வைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட, பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை. இதில் முதலீட்டாளர் முதலீட்டு கால அளவை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது. பொது வைப்பு வசூலிக்கும் நிறுவனங்கள் அந்த வைப்புத் தொகைக்கு எந்தவிதக் காப்பீட்டு வசதியையும் அளிப்பதில்லை. இது இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் வருவதும் அல்ல. நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.

### 8. நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள்)

தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிறும முறிகள்(பத்திரங்கள்) சீரிய முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும். அரசாங்கத்தின் துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களும் நிதி நிறுவனங்களும் பத்திரங்களை வெளியிடுகின்றன. இந்தியாவில் நான்கு வகையான கடன் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. அவை

1. அரசாங்கக் கடன் பத்திரங்கள்
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனக் கடன் பத்திரங்கள்
3. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் பத்திரங்கள்
4. வரி சேமிப்பு கடன் பத்திரங்கள் ஆகும்.

பொதுமக்களிடமிருந்து கடன் பெற்று அரசாங்கத்தினால் அளிக்கப்படும் ஒப்புதல் சான்றிதழ் பத்திரங்கள் (BOND) எனப்படும். மாறாக பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் தங்கள் மூலதனத்திற்காகப் பொது மக்களிடமிருந்து கடன் பெற்று அளிக்கும் ஒப்புதல் சான்றிதழ் கடன்பத்திரங்கள் (DEBENTURE) எனப்படும். நிறுமங்களால் பெறப்படும் கடன்கள் நிறும சொத்துக்களை பிணையமாகக் கொண்டவை.

### 9. காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி

ULIP என்பது ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும். இது காப்பீடு செய்பவருக்கு இழப்பை ஈடுசெய்வதோடு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில், பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

### 10. வங்கி வைப்புகள்

#### நிலைவைப்பு

நிலைவைப்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முதலீட்டாளர் தங்கள் பணத்தை முதலீடு செய்ய உதவுகிறது. குறைந்த அளவு ஏழு நாட்கள் முதல் அதிகளவு பத்து ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு இந்தக் கணக்கினைத் துவக்கலாம். நிலைவைப்பு கணக்கு வைத்திருப்போர். அந்த நிலை வைப்பு ரசீதின் பேரில் கடன் பெறலாம். அந்தக் கணக்கு வைத்திருப்போர் முதிர்வு தேதிக்கு முன்பாக வைப்புத்தொகையைப் திரும்பப் பெற முடியாது.

#### தொடர் வைப்பு

நிரந்தர, சீரான வருவாயை விரும்புபவர்கள் தொடர் வைப்பு கணக்கில் முதலீடு செய்யலாம். இந்த வைப்புக்கணக்கின் காலம் குறைந்த அளவு 1 வருடம், அதிக அளவு 10 வருடங்கள் ஆகும். தொடர் வைப்பு கணக்கு வைத்திருப்போர் முதிர்வு தேதிக்கு முன்பாக அதில் உள்ள தொகையை எடுக்க முடியாது, இருப்பினும் செலுத்திய தவணைத் தொகைகளின் மேல் கடன் பெறலாம்.

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| தொழில் நிதி | தனிப்பட்ட சேமிப்பு |
| தொழில் கடன் | பங்குதாரர்கள் |
| குத்தகை | அடமானம் |

### சூழ்நிலை ஆய்வு

கோகுல் ஸ்டீல் லிமிடெட் இந்தியச் சந்தையில் கடன் தர மதிப்பீடு பெற்ற பேரளவில் எஃகு உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும். இப்போது ஆசியச் சந்தையில் தன்னுடைய விற்பனையை விரிவாக்கம் செய்வதற்காக நவீனத் தொழில்நுட்பம் கொண்ட இயந்திரங்களில் முதலீடு செய்ய முடிவு செய்கிறது. முதலீடு பெரிய அளவில் இருப்பதால் நீண்ட கால நிதி தேவைப்படுகிறது. இது நேர்மை பங்குகளை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டத் தீர்மானிக்கிறது. பங்கு வெளியீடு என்பது அதிக நடைமுறை செலவை உள்ளடக்கியது. இவ்வகை செலவுகளை ஈடுசெய்ய, நிறுவனம் நிதிச்சந்தையை நாட முடிவு செய்துள்ளது.

1. மேற்கண்ட செயலுக்கு அந்த நிறுமம் எந்த நிதிச்சந்தை ஆவணத்தைப் பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.
2. அந்த ஆவணத்தின் மூலம் எவ்வளவு காலத்திற்குள் நிதியைத் திரட்டமுடியும்?
3. இந்த ஆவணத்தின் வேறுபயன்கள் இருப்பின் அதனைக் குறிப்பிடுக.

### நமது சிந்தனைக்கு

*1) நிதி நிறுவனங்களின் செயல்பாடுகள்*

*2) கொத்தடிமைகளாக பணியாற்றும் பணியாளர்களுக்கான நிதித்தேவை பூர்த்தி செய்தல்*

### மேலும் அறிவதற்கு

1. *சிறிய தொழில் முனைவோர்களுக்கு ஏற்றுமதி நிதி*
2. *இளம் பட்டதாரிகளால் நடத்தப்படும் மென்பொருள் நிறுவனங்களுக்கான நிதி*

### பயிற்சி

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.**

   அ. நிதி மேலாண்மை

   ஆ. வங்கி

   இ. பண மேலாண்மை

   ஈ. இவற்றில் ஏதுமில்லை

5LQ946

2. **உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு ____**

   அ. கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை

   ஆ. வணிக வங்கி கடன்

   இ. பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை

   ஈ. தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

3. **கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான _________ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்**

   அ. பங்காதாயம் ஆ . இலாபம்

   இ. வட்டி ஈ. இவை எதுவும் இல்லை

4. **பொது வைப்பு ______ இடமிருந்து நேரடியாகத் திரட்டப்பட்ட வைப்புத்தொகையாகும்.**

   அ . பொதுமக்கள் ஆ. இயக்குநர்கள்

   இ. தணிக்கையாளர்கள்

   ஈ. உரிமையாளர்கள்

5. **நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் __________**

   அ. கடனீந்தோர்

   ஆ. உரிமையாளர்கள்

   இ. கடனாளிகள்

   ஈ. இவை எதுவும் இல்லை



XI_Tamil_commerce_16-25_148-254.indd 198 2/17/2021 3:12:31 PM

### விடைகள்

1. அ  2. ஈ  3. இ  4. அ  5. ஆ

## II. குறுவிடை வினாக்கள்.

1. கடன் பத்திரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.
2. கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.
3. அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.

## III. சிறுவிடை வினாக்கள்.

1. தொழில் நிதியியல் – வரைவிலக்கணம் தருக.
2. அடகுக் கடன் என்றால் என்ன?
3. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)
2. ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

## திட்டச்செயல்.

1. உங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு வங்கியை அணுகி, சிறு தொழில் நிறுவனங்களுக்கு எந்தெந்த வழிகளில் கடன் வழங்கப்படுகிறது என்பதைக் கேட்டறிந்து குறிப்புகளைச் சேகரிக்கவும்.
2. நவீன் என்பவர் தோல் பைகளை (leather bags) தயாரிக்கும் நிறுவனத்தை ₹ 10,00,000 / – மூலதனத்துடன் ஒரு தனிவணிகராக தொடங்கினார், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் தனது வணிகத்தை ஒரு கூட்டுப்பங்கு நிறுமமாக விரிவாக்க முடிவு செய்துள்ளார். நீங்கள் ஒரு வணிகவியல் பிரிவு மாணவர் என்ற முறையில், அவரது நிறுமத்திற்கு நீண்டகால நிதி திரட்ட எந்த வகையான ஆலோசனைகளை அவருக்கு வழங்குவீர்கள் என்பதை பதிவு செய்யவும்.

## குறிப்பு நூல்கள்.


1. தொழில் நிதியியல், R.M. ஸ்ரீவத்சவா மற்றும் மற்றவர்கள் 1996 ஹிமாலயா பப்ளிஷிங் ஹவுஸ், மும்பை.
2. நிதி மேலாண்மை, ஏ.மூர்த்தி 2016 மார்கம் வெளியீடுகள் சென்னை 17.

# அலகு – 6 தொழில் நிதியியல்

அத்தியாயம்
# 20

## பன்னாட்டு நிதி

5LTVS3

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. பன்னாட்டு நிதியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூற முடியும்.
2. அந்நிய நேரடி முதலீடு குறித்து விளக்கிக் கூற முடியும்.
3. அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி அறிய முடியும்
4. உலகளாவிய வைப்பு இரசீது மற்றும் அமெரிக்க வைப்பு இரசீது ஆகியவற்றின் பொருள் குறித்து அறிய முடியும்.

முந்தைய பாடத்தில் தொழில் நிதியியல் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்தக் கொண்ட பின்பு, இந்த பாடத்தில் பன்னாட்டு நிதி பற்றியும், நிறுவனங்கள் பன்னாட்டு நிதிகளைத் திரட்டும் பல்வேறு வழிகளைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

### 20.01 பன்னாட்டு நிதி

பன்னாட்டு நிதியியல் என்பது நிதிப் பொருளாதாரயியலின் ஒரு பகுதியாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஏற்படும் நிதி பரிமாற்றங்களைப் பற்றியது ஆகும். அந்நிய நேரடி முதலீடு மற்றும் நாணய மாற்று விகிதம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. பன்னாட்டு நிறுவனங்களின் நிதி மேலாண்மையில் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் பன்னாட்டு நிதியியல் முக்கிய பங்காற்றுகிறது.

#### பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம்

பன்னாட்டு வர்த்தகத்தில் பங்கு பெறும் பொருட்கள் மற்றும் சேவைப் பரிமாற்றத்தில் பன்னாட்டு நிதி ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

பன்னாட்டு நிதியின் முக்கியத்துவங்களைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

1. பன்னாட்டு நிதியியல் பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீட்டு மதிப்புக்களையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களையும் நிர்ணயிப்பதில் உதவி புரிகிறது.
2. இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.
3. இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும், சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.
4. பன்னாட்டு நிதி அறிக்கை அமைப்பின் (IFRS) மூலம் பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கைகளை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது.
5. இது பன்னாட்டு நிதி அமைப்புக்களின் அடிப்படை கட்டமைப்புகளை அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றிடையே சீர்நிலையைப் பராமரிப்பதற்கும் உதவுகிறது.
6. பன்னாட்டுப் பணவியல் நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள், பல்வேறு நாடுகளிடையே எழும் நிதி சார்ந்த பிரச்சனைகளில் தலையிட்டு அவற்றை சுமூகமாக தீர்க்க உதவுகின்றன.

### 20.02 அந்நிய நேரடி முதலீடு

ஒரு நாட்டில் (தாய்நாடு) இருக்கும் முதலீட்டாளர் வேறொரு நாட்டில் (வரவேற்கும் நாடு) இருக்கும் சொத்துக்களையோ அல்லது நிறுமங்களையோ, மேலாண்மை செய்யும் நோக்கோடு வாங்கும் செயல், அந்நிய நேரடி முதலீடு எனப்படும். முதலீடு செய்யும் நிறுமம், பங்குகளை வாங்கிய நிறுமத்தில், தாங்கள் வாங்கிய பங்குகளின் அளவுக்கு ஏற்பக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும், மற்றும் முடிவுகளை எடுக்கும் உரிமையையும் பெறுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 200 2/17/2021 3:12:32 PM

## அந்நிய நேரடி முதலீட்டின் வடிவங்கள்

பின்வரும் வடிவங்களில் அந்நிய நேரடி முதலீடு செய்யப்படுகிறது

1. அந்நிய நாட்டில் புதிய கிளை அல்லது புதிய நிறுவனங்களை ஏற்படுத்துவது.
2. இப்போது இருக்கிற நிறுவனங்களுக்கு விரிவாக்கமாக, புதிய கிளை அல்லது துணை நிறுவனத்தை அந்நிய நாட்டில் ஏற்படுத்துவது.
3. அந்நிய நாட்டில் இருக்கிற நிறுவனங்களை வாங்குவது.

1999க்கு முன்பு இந்தியாவிற்குள் அந்நிய நேரடி முதலீடு குறிப்பிட்ட துறைகளில் சாதாரணமாக 40 சதவீதப் பங்குகளை வாங்கி முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் உயர்தொழில்நுட்பம் வாய்ந்த ஏற்றுமதி இறக்குமதி தொடர்புடைய துறைகளில் இந்த முதலீட்டு சதவீதம் உயர்வாகவே அனுமதிக்கப்பட்டிருந்தது. பொருளாதாரத் தாராளமயமாக்களுக்குப் பிறகு, இந்த உச்சவரம்பு நீக்கப்பட்டு, சில குறிப்பிட்ட துறைகளில் மட்டும், 100 சதவீதம் வரை அந்நியப் பங்கு முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

## இலக்கணம்

ஒரு நாட்டில் உள்ள தனிநபரோ அல்லது ஒரு நிறுமமோ, அயல்நாட்டில் உள்ள நிறுவனத்தின் வணிகச் சொத்துக்களில் உரிமைபெறும் நோக்குடன் அல்லது நிறுவனத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் முதலீடு செய்வது அல்லது புதிய வணிக முயற்சியை ஏற்படுத்துவது அந்நிய நேரடி முதலீடு எனப்படும்.

## அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகள்

### 1. தேசிய வருமானத்தை உயர்த்துதல்

வளர்ந்து வரும் நாடுகள் தங்களின் தேசியப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக்கொள்ள இந்த அந்நிய நேரடி முதலீடுகள் பெரிதும் உதவுகின்றன.

### 2 .பாதகமான செலுத்து நிலையைத் தீர்த்தல்

அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு, அயல்நாட்டு செலவாணிகளைப் பெற்றுத்தருகிறது. இது அந்த நாட்டின் பாதகமான அயல்நாட்டு செலுத்து நிலையைத் தீர்க்க உதவுகிறது.

### 3. பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல்

அந்நிய நேரடி முதலீடு தொழில்நுட்பம், புதிய மேலாண்மைத்திறன், சந்தையிடுகை திறன்கள் ஆகியவற்றை முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகிறது. இவை வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகின்றன.

### 4. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில், ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

### 5. வரவேற்கும் நாட்டில் போட்டியை ஊக்குவித்தல்

அந்நிய நேரடி முதலீட்டின் மூலம், வரவேற்கும் நாட்டில் ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால் வளரும் நாடுகளில் உள்ள நிறுவனங்கள் மிகுந்த செயல்திறனோடும் ஆற்றலோடும் செயல்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் நுகர்வோர்களுக்குப் பலதரப்பட்ட பொருட்கள் உயர் தரத்துடன் நியாயமான விலையில் கிடைக்க வாய்ப்புள்ளது.

## அந்நிய நேரடி முதலீட்டின் குறைபாடுகள்

### 1. உள்நாட்டு வளங்களைத் தீர்த்தல்

அந்நிய நேரடி முதலீட்டாளர்கள் வரவேற்கும் நாடுகளில் உள்ள நீர், காடுகள், தாதுப்பொருட்கள் ஆகிய இயற்கை வளங்களை விரைவில் தீர்த்து விடும் அபாயம் உள்ளது. இதனால் உள்நாட்டில் உள்ள சாதாரண குடிமகனுக்கு தேவைப்படும் இயற்கை வளங்கள் கிடைக்காமல் போகலாம்.

### 2. அதிகப்படியான முதல் வெளியேறுதல்

அயல்நாட்டு நிறுமங்கள் பங்காதாயம், குத்தகைக் கட்டணம் போன்றவை மூலம் பெருமளவு உள்நாட்டு பணத்தை வெளியே கொண்டு செல்கின்றன. இதனால் உள்நாட்டில் பணப்புழக்கம் குறைந்து விடும் வாய்ப்புள்ளது.

### 3. தொழில் நுட்பத்தை மாற்றாமை

சில அயல்நாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்குத் தாங்கள் கண்டுபிடித்து வைத்துள்ள தொழில் நுட்பத்தை அப்படியே தருவதில்லை. அவை



XI_Tamil_commerce_16-25_148-254.indd 201 2/17/2021 3:12:32 PM

பெரும்பாலும் இரண்டாம் தர தொழில்நுட்பத்தையே, முதலீடு செய்யும் நாட்டிற்கு கொண்டு வருகின்றன. உயர் தொழில்நுட்பத்தினை தங்களின் சொந்த நாட்டிலேயே வைத்துக்கொள்கின்றன. இத்தகைய நிலையில் அன்னிய முதலீட்டைப் பெறும் நாட்டிற்குப் புதிய தொழில்நுட்பம் கிடைக்காமல் போகிறது. இதனால் உள்நாட்டுப் பொருளாதாரம் உயராமல் போகும் சூழல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

### 4. உழைப்பு சுரண்டல்

அயல்நாட்டு நிறுமங்கள் வளரும் நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் உழைப்பை, மிகக்குறைவான கூலி மற்றும் ஊதியம் கொடுத்து சுரண்டி வருகின்றன. அவர்கள் உள்ளூரில் உள்ள மக்களை, மேலாண்மையில் உயர்பதவியில் அமர்த்துவதில்லை. தம் சொந்த நாட்டு தொழிலாளர்களுக்கு வழங்கும் எந்தச் சலுகைகளையும் முதலீடு செய்யும் நாடுகளில் உள்ள தொழிளாளர்களுக்கு அந்நிறுவனங்கள் வழங்குவதில்லை. இப்படியாக அவை வளரும் நாடுகளில் உள்ள தொழிளாளர்களின் உழைப்பை சுரண்டி வருகின்றன.

### 5. ஏகாதிபத்தியச் சூழலை உருவாக்குதல்

அந்நிய நேரடி முதலீட்டின் மூலம் ஒரு நாட்டில் நுழையும் பன்னாட்டு நிறுமங்கள், அந்த நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்றி ஏகாதிபத்திய நிலையை ஏற்படுத்துகின்றன. அவைகள் அந்நிய முதலீட்டை பெறும் ஒரு நாட்டில் ஆரோக்கியமான போட்டிச்சூழலை உருவாக்குவதில்லை மாறாகப் போட்டியை அறவே ஒழித்து தம் மேலாதிக்கத்தைச் செலுத்துகின்றன.

### அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள்

ஒரு தனிப்பட்ட முதலீட்டு நிறுவனம், முதலீட்டு நிதி, ஒய்வு கால நிதி ஆகியவை, வேறு நாட்டின் நிதிச்சந்தையில் முதலீடு செய்வதே, அயல்நாட்டு நிறுவன முதலீடு ஆகும். இது குறுகிய காலத்தில் திரும்பப் பெறும் வாய்ப்பு உள்ள முதலீடு ஆகும்.

அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் இந்தியப் பொருளாதாரத்தில் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றனர். 1992முதல் அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள், நிறுமங்களால் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைகளில் வெளியிடப்படும் பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள், ஆணைப்பத்திரங்கள் போன்ற அனைத்துப் பிணையங்களிலும் முதலீடு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இதுவரை சுமார் 1450க்கும் மேற்பட்ட அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் இந்தியப் பங்கு மாற்றக வாரியத்தில் (SEBI) தங்களைப் பதிவு செய்து இருக்கிறார்கள்.

## 20.03 பன்னாட்டு நிதிச் சந்தை

### தொழில் நிதிக்கான பன்னாட்டு நிதி மூலங்கள்

உலகளவில் நிதியைத் திரட்ட ஏராளமான அமைப்புகள் உள்ளன. 1990ம் ஆண்டிற்கு பின், சீரமைக்கப்பட்ட இந்தியப் பொருளாதார அமைப்பு, இந்திய நிறுமங்கள் இந்தியாவுக்கு வெளியே தங்களின் வியாபாரச் செயல்பாடுகளை வளர்த்துக்கொள்ள வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. பல இந்திய நிறுமங்கள் தற்போது தங்களுக்குத் தேவையான நிதியை, அயல்நாட்டு நிதிச்சந்தையிலிருந்து திரட்ட முடிகிறது.

அத்தகைய நிதியைப் பெறும் வழிமுறைகள் பின்வருவனவாகும் .

### 1. வணிகவங்கிகள்

பல்வேறு வணிக வங்கிகள் வியாபார முன்னேற்றத்திற்காக, அயல்நாட்டு பணக்கடனை அளிக்கின்றன. இந்தக்கடனும் சேவைகளும் பல்வேறு வங்கிகளால், பல்வேறு நாடுகளில் பல்வேறு வகைகளில் வழங்கப்படுகிறது.

### 2. பன்னாட்டு முகமைகளும் வளர்ச்சி வங்கிகளும்

பன்னாட்டு வியாபார வளர்ச்சியில் பன்னாட்டு முகமைகளும் வளர்ச்சி வங்கிகளும் முக்கியப் பங்காற்றுகின்றன.உலகில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு தவணைக்கடன்களையும், மானியங்களையும் அவர்களின் முன்னேற்றத்திற்காக வழங்குகின்றன. பன்னாட்டு நிதிக்கழகம், ஏற்றுமதி இறக்குமதி வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை, உலகளாவிய முகமைகளாக செயல்பட்டு பன்னாட்டு நிதித்தேவையை பூர்த்தி செய்கின்றன.

### 3. பன்னாட்டு மூலதனச் சந்தை

இந்தியப் பன்னாட்டு நிறுமங்கள் பன்னாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து பணக்கடனையும் மற்றும் அயல்நாட்டு செலாவணிகளையும் திரட்டுகின்றன. இதற்கு முக்கிய நிதி கருவியாக வைப்பு இரசீதுகள் பயன்படுகின்றன.

### 4. வைப்பு இரசீதுகள்

ஒரு வைப்புத்தொகை ரசீது என்பது, வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மை பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும், ஒரு

மாற்றுமுறை ஆவணமாகும். அயல்நாட்டிலிருந்து பெருமளவு முதலீட்டைத் திரட்டுவதற்காக அவைகள் வெளியிடப்படுகின்றன. எந்த ஒரு அயல்நாட்டு முதலீட்டாளரும் செலாவணி வேறுபாடு, கணக்கியல் நடை முறைகளில் வேறுபாடு, மொழித்தடை இவைகளை பொருட்படுத்தாமல் அந்நியநாட்டு பங்குகளில் முதலீடு செய்திட வைப்பு ரசீதுகள் பெரிதும் உதவுகின்றன.

## 20.04 உலகளாவிய வைப்பு இரசீதுகள்

அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு ரசீது எனப்படும். இது அமெரிக்கா தவிர்த்து பிற நாடுகளில் உள்ள வெளிநாட்டு பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது.

### உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிடும் வழிமுறைகள்

#### படிநிலைகள்

1. உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிடும் நிறுமம், தன் பங்குகளை உள்நாட்டு காப்பக வங்கிக்கு மாற்றித்தரும்.
2. பிறகு உள்நாட்டு காப்பக வங்கி அயல்நாட்டில் உள்ள வைப்பு வங்கிக்கு உலகளாவிய வைப்பு இரசீதை வெளியிட வேண்டுகோள் வைக்கும்.
3. அயல்நாட்டு வைப்பு வங்கி உள்நாட்டு செலாவணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்குகளை அந்நாட்டு செலாவணியின் மதிப்பில் அல்லது பொதுவாக ஏற்கப்படும் செலாவணியில் மாற்றும்.
4. இறுதியாக, அயல்நாட்டு வைப்பு வங்கி இந்தப் பங்குகளை விரும்பும் முதலீட்டாளர்களுக்கு விற்கும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

உலகளாவிய வைப்பு ரசீதின் மூலம் நிதி திரட்டும் நிறுவனங்களுக்கான எடுத்துக்காட்டுகள்

SBI BAJAJ AUTO WIPRO ITC
ICICI BANK GAIL Reliance infrastructure Ltd
L&T INFOSYS TECHNOLOGIES
HDFC BANK HINDALCO
MTNL TATA MOTORS

### உலகளாவிய வைப்பு இரசீதின் சிறப்பம்சங்கள்

1. இது மற்ற மாற்றுமுறை சாதனங்களைப் போலவே தடையின்றி வியாபாரம் செய்யப்படும் மாற்றுமுறை பிணையமாகும்.
2. கடந்த மூன்றாண்டுகளாக வலுவான நிதிநிலையில் செயல்பட்டுவரும் நிறுமங்களுக்கு பன்னாட்டு உலகளாவிய வைப்பு இரசீதுகள் மூலம் நிதிச்சந்தையில் நுழைய அனுமதி தரப்படுகிறது. இருப்பினும் இவற்றைப்பெற நிறுமங்கள், அந்நிய முதலீட்டு முன்னேற்ற வாரியத்திடமும் மற்றும் அமைச்சகத்திடமும் தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும்.
3. உலகளாவிய வைப்பு இரசீதுகள் அனைத்து நாட்டு முதலீட்டாளர்களுக்கும், அவர்கள் நாட்டுச் செலாவணியில் அல்லது பொதுவாக ஏற்கப்படும் செலாவணியில் வெளியிடப்படுகிறது.
4. உலகளாவிய வைப்பு இரசீதுகள் அந்தந்த நாட்டுப் பணமதிப்பில் குறிப்பிடப்பட்டாலும் அவற்றின் பங்கு மதிப்பு உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.
5. உலகளாவிய வைப்பு இரசீதை வைத்திருப்பவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கிற்கு உரிய பங்காதாயம் மற்றும் பங்கு மேலூதியம் பெற உரிமை பெற்றவராவார்.
6. முதலீட்டாளர் உலகளாவிய வைப்பு இரசீதை நேர்மைப்பங்குகளாக மாற்றி, உள்நாட்டு பாதுகாவலர் மூலம் விற்றுக்கொள்ளலாம். வெளியீடு நிகழ்ந்த பிறகு 45 நாட்கள் கழித்து இவ்வாறு செய்ய முடியும்.
7. உலகளாவிய வைப்பு இரசீதினை வழங்கும் நிறுமம், ஒரே தனிப்பட்ட அமைப்பின் மூலம் தனது அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றுகிறது.

## 20.05 அமெரிக்க வைப்பு இரசீதுகள்

அமெரிக்க வைப்பு இரசீது என்பது, அமெரிக்காவைச்சாராத ஒரு நிறுமம், அமெரிக்க நிதிச்சந்தையில் கலந்து கொள்ளும் பொருட்டும், அமெரிக்கக் குடிமக்கள் அந்நியப் பிணையங்களில் முதலீடு செய்யும் வகையிலும், டாலரில் மதிப்பிடப்பட்டிருக்கும் மாற்றத்தக்க பிணையமாகும்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 203 2/17/2021 3:12:32 PM

**அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிடும் முறைகள்**

**படிநிலைகள்**

1. முதலாவதாக, நிறுமங்கள் தங்களுடைய பங்குகளின் உரிமையை உள்நாட்டு வைப்பக வங்கிகளுக்கு மாற்றித்தர வேண்டும்.
2. பிறகு உள்நாட்டு வைப்பக வங்கிகள் அமெரிக்க வைப்பு வங்கிகளுக்கு வேண்டுகோள் விடுக்கும்.
3. ரூபாயின் மதிப்பில் இருக்கும் பங்குகளை டாலர் மதிப்பில் வைப்பு ரசீதுகளாக அமெரிக்க வைப்பு வங்கிகள் மாற்றித்தரும்.
4. இறுதியாக, தேவைப்படும் முதலீட்டாளருக்கு இவற்றை அமெரிக்க வைப்பக வங்கிகள் வெளியிடும்.




American Depository Receipt (ADR) of Sony Corporation, Japan

P 6.2.2

**அமெரிக்க வைப்பு இரசீதுகளின் சிறப்பம்சங்கள்**

1. அமெரிக்க வைப்பு இரசீதுகள் அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும்.
2. அமெரிக்கக் குடிமக்களாக இருக்கிற முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும்.
3. வெளியிடும் வைப்பக வங்கி அமெரிக்காவில் இருக்கவேண்டும்.

**உலகளாவிய இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

| வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது GDR | அமெரிக்க வைப்பு இரசீது ADR |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்குமேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்குப் பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த இதர பங்கு மாற்றகங்கள்<br>எ.கா. இலண்டன் பங்கு மாற்றக வாரியம், லக்சம்பர் பங்கு மாற்றக வாரியம் போன்றவை. | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும் |
| ஒப்புதல் | உலகளாவிய இரசீதை வெளியிட அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை | அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | உலகளாவிய இரசீதுகள் பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப்பங்குகளாக வெளியிடப்படும். | பல அமெரிக்க வைப்பு இரசீதுகள் தொடர்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைபங்குகளாக வெளியிடப்படும். |
| மாற்றுகைத்தன்மை | உலகம் முழுவதும் மாற்றக் கூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

4. அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் (Securities and Exchange Commission) சம்மதத்தைப்பெறவேண்டும்.

5. இவை அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் படிநிலைப்படி பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு வெளியிடப்படும்.

## 20.06 அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரங்கள்

அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது உள்நாட்டு பணத்தைத் தவிர, பிற நாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகை பத்திரம் ஆகும். வேறுவகையில் சொல்வதானால் நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காக வெளியிடப்படுவதே அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரம் ஆகும்.

**அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரத்தின் சிறப்பம்சங்கள்:**

1. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்பது இந்திய நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும் ஒரு வகை பத்திரம் ஆகும்.

2. இவை கடனீட்டுப்பத்திரங்களைப்போல பட்டியலிடப்பட்டு அயல்நாட்டு பங்கு மாற்றகங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.

3. இது மாற்றத்தக்க கடன் ஆவணமாகும். இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.

4. இதனை வைத்திருப்பவர்களுக்கு முன்குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக்கொள்ளவும் உரிமை தரப்படுகிறது.

5. குறிப்பிட்ட காலத்திற்குப்பின் இவைகளை நேர்மை பங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக்கொள்ளமுடியும்.

6. இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் (External Commercial Borrowing) தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைப்படியே பயன்படுத்தப்படவேண்டும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்**

அ உரிமை சான்றிதழ்

ஆ வைப்பு இரசீது

இ உரிமை இரசீது

ஈ மாற்றுப் பத்திரம்

5LZ55T

**2. வைப்பு இரசீது வெளியீடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது**

அ. பன்னாட்டு சந்தை

ஆ. உள்ளூர் சந்தை

இ. தற்போதைய பங்குதாரர்கள்

ஏ. மேற்கண்ட அனைத்தும்

**3. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது**

அ. கனடா

ஆ. சீனா

இ. இந்தியா

ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**4. அமெரிக்க சந்தை தவிர்த்து, உலகச் சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது**

அ. உலகளாவிய வைப்பு இரசீது

ஆ. பன்னாட்டு வைப்பு இரசீது

இ.வெளிச்சந்தை வைப்பு இரசீது

ஈ. மாற்றுப் பத்திரம்

**5. __________ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.**

அ. அரசு பத்திரங்கள்

ஆ. அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்

இ. பெருநிறுவன பத்திரங்கள்

ஈ. உலகளாவிய வைப்பு இரசீது

**விடைகள்**

*1. ஆ 2. அ 3. ஈ 4. அ 5. ஆ*

### II. குறுவிடை வினாக்கள்.

1. அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் என்பது குறித்து நீ அறிவது யாது?
2. வைப்பு இரசீது என்றால் என்ன?
3. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?
4. அமெரிக்க வைப்பு இரசீது என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது? (ஏதேனும் 3)
2. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்றால் என்ன?
3. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.

### IV. பெருவிடை வினாக்கள்.

1. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
2. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளை விவரி.

### குறிப்பு நூல்கள்.


1. *International Finance by Neeraj, Neeraj Publications*
2. *International Trade Finance Taxmann publishers pvt ltd 2017*
3. *www.ibef.org*




XI_Tamil_commerce_16-25_148-254.indd 206 2/17/2021 3:12:33 PM

அலகு – 6 தொழில் நிதியியல்

அத்தியாயம்
**21**

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல். – குறள் 675

5H3RTQ

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பொருள், பங்கு மற்றும் முக்கியத்துவம் பற்றி விளக்கிக் கூற முடியும்
2. இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு இவர்களின் பங்களிப்பைப் புரிந்து கொள்ள முடியும்
3. சுய உதவிக் குழுக்களின் பொருளை விவரிக்க முடியும்.
4. சுய உதவிக் குழுக்களின் குறிக்கோள் களையும் சிறப்பியல்புகளையும் புரிந்து கொள்ள முடியும்.




## 21.01 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

### அறிமுகம்

பன்னாட்டு நிதியியலின் முக்கியத்துவம், பன்னாட்டு அளவில் நிதி திரட்டுவதற்கான பல்வேறு ஆதாரங்கள், அந்நிய நேரடி முதலீடு மற்றும் அதன் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றைப் பற்றி முந்தைய பாடத்தில் விரிவாகப் படித்த பின்பு, இந்த பாடத்தில், பொருளாதார வளர்ச்சிக்குக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு குறித்து முக்கியக் கருத்துகளை மாணவர்களுக்கு விளக்குகிறது. மேலும் சுய உதவி குழுக்கள் – பொருள் – குறிக்கோள்கள் – சிறப்பம்சங்கள் – செயல்பாடுகள் பற்றி தற்போது விரிவாகப் படிக்கலாம் .

தொழில்முனைவு என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திறவுகோலாக விளங்குகிறது. தொழில்முனைவோர்களை மேம்படுத்துவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத் துறை, இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது. இது கிராமப்புறம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் தொழில்மயமாக்கலுக்கு உதவுகிறது. தொழில்முனைவு, வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கிறது. இது நாட்டின் தேசிய வருமானம் மற்றும் வளங்களை அனைத்துப் பகுதிகளுக்கும் சீராக பகிர்ந்தளிக்கிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 207 2/17/2021 3:12:33 PM

மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள், போக்குவரத்து (மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள்), பழுது பார்க்கும் கடைகள் (repair shops), குடிசைத் தொழில்கள், சிறிய கைத்தொழில்கள், கைத்தறி, கைவினை தொழில்கள் ஆகியவற்றை குறு நிறுவனங்களுக்கு உதாரணமாக கூறலாம்.

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் – வரைவிலக்கணம்

'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம் 2006'–ன் படி இவை இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### A. உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்

தொழில்துறையின் நிறுவனங்கள் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 ன் படி முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழிற்துறை தொடர்பான உற்பத்தி அல்லது உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் குறிக்கின்றன. இவை இயந்திரம் மற்றும் தளவாடங்களில் செய்யப்படும் முதலீடுகளின் உச்ச வரம்பின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டிருக்கிறது.

### B. சேவை தொழில் நிறுவனங்கள்

சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பணிச்சேவை சார்ந்த நிறுவனங்களாகும்.

உற்பத்தி தொழில் நிறுவனங்கள்/ இயந்திரம் மற்றும் உற்பத்தி தொழில் ஆலைகளின் முதலீடுகளின் உச்சவரம்பு, சேவை தொழில் நிறுவனங்கள் / உபகரணங்களின் முதலீடுகளின் உச்சவரம்பு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 21.02 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம்

### 1. அதிக வேலை வாய்ப்புகள்

பெரிய வர்த்தக நிறுவனங்களை காட்டிலும், நிறுவனங்கள் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன. இத்தகைய நிறுவனங்கள், பெரும்பாலும் உள்ளூரில் கிடைக்கும் உழைப்பாற்றலை நம்பி இருப்பதால் நாட்டில் உள்ள ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறது.

### 2. குறைந்த உற்பத்தி செலவு

இம்மாதிரியான நிறுவனங்கள் நடத்தப் பயிற்சி பெற்ற அல்லது அதிக ஆற்றல் படைத்த தொழிலாளர்களோ அல்லது தொழில் கல்வி பயின்ற உழைப்பாளர்களோ தேவைப்படுவதில்லை. நிறுவனங்கள் குறைந்த ஊதியத்தில் பணியாளர்களை நியமிப்பதால், உற்பத்தி செலவுகள் வெகுவாக குறைகிறது. இதன் விளைவாக பெரிய அளவிலான நிறுவனங்களை விட, இவற்றால் குறைந்த செலவில் உற்பத்தியை மேற்கொள்ள முடிகிறது.

### 3. குறைந்த முதலீடு

இவற்றைத் தொடங்குவதற்குப் பேரளவு முதல் தேவைப்படுவதில்லை. இவைகளின் உரிமையாளர்கள் உள்ளூரில் இருப்பதால் தனக்கு அருகாமையில் உள்ள உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். கைவினை பொருட்கள் மற்றும் பாரம்பரியக் குடும்பத் தொழில்களை ஊக்குவிப்பதில், இந்த நிறுவனங்கள் பெருமளவு உதவுகின்றன. இந்த நிறுவனங்கள் சிற்றூர் மற்றும் பேரூரில் உள்ள உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும் சுயதொழில் செய்பவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன.

| நிறுவன வகை | உற்பத்தி தொழில் நிறுவனங்கள் | சேவை தொழில் நிறுவனங்கள் |
|---|---|---|
| | (இயந்திரம் மற்றும் உற்பத்தி ஆலைகளின் முதலீடுகளின் உச்சவரம்பு ) | (உபகரணங்களின் முதலீடுகளின் உச்சவரம்பு) |
| குறு நிறுவனம் | ₹25 இலட்சத்திற்குள் | ₹10 இலட்சத்திற்குள் |
| சிறு நிறுவனம் | ₹25 இலட்சத்துக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல் | ₹10 இலட்சத்துக்கு மேல் ₹2 கோடிக்கு மிகாமல் |
| நடுத்தர நிறுவனம் | ₹5 கோடிக்கு மேல் ₹10 கோடிக்கு மிகாமல் | ₹2 கோடிக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல் |

### 4. விரைந்து முடிவெடுத்தல்

இவற்றின் அன்றாட நடவடிக்கைககளை மேற்கொள்ளத் தொழில் படிப்பு பயின்ற மேலாளர்களைப் பணியமர்த்த வேண்டிய அவசியம் இல்லை. பெரும்பாலும் இந்த நிறுவனங்களை அவற்றின் உரிமையாளர்களே நிர்வாகம் செய்கின்றனர். எனவே சிறந்த முடிவுகளை விரைந்து எடுப்பது சாத்தியமாகிறது.

### 5. பங்களிப்பு உதவி

பெரிய உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் பிற பொருட்களைத் தயாரித்து கொடுத்து பேரளவு உற்பத்திக்கு துணை புரிவதில் இவை முக்கியப் பங்காற்றுகின்றன.

### 6. சமுதாயத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்குதல்

வருமானம் மற்றும் வளங்கள் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுத்து அவற்றைப் பரவலாக்குவதன் மூலம் சமுதாயத்தில் பொருளாதாரச் ஏற்றத்தாழ்வுகளைக் களைவதில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்போரையும், இலாபம் மிகுந்த தொழில் துறையில் பங்கு பெறச் செய்வதன் மூலம் சீரான பொருளாதாரப் பகிர்வுக்கு வழி வகை செய்கிறது.

### 7. அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சி

இந்நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம், இந்தியாவில் தொழில் ரீதியாக பின்தங்கியுள்ள பகுதிகளை வளர்ச்சி அடையச் செய்யலாம். இதன் மூலம் நாடு முழுவதும், சீரான தொழில் வளர்ச்சியை பெற இயலும். இவை உள்ளூர்களிலேயே வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவதால், சிற்றூர் மற்றும் பேரூர்களில் வசிக்கும் மக்கள், நகர்ப்புறம் நோக்கி வேலைக்காக இடம் பெயர்வது தடுக்கப்படுகிறது.

### 8. சுய வேலைவாய்ப்பு உருவாக்கி, சுயசார்பை மேம்படுத்துதல்


இத்துறையானது தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன. இது சமுதாயத்தில் சுய வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் சுயசார்பை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் தனிநபர் வருமானம் வெகுவாக உயர்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது.

### 9. உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு அதிகப் பங்களிப்பு

நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றுமதியில் 40 சதவீதமும், இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது. இவ்வகை நிறுவனங்கள் உலகின் பல்வேறு நாடுகளின் அந்நியச் செலாவணியை ஈட்ட மிகவும் உதவுகின்றன.

## 21.03 இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமும், நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றுமதியில் 40 சதவீதமும் இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது. 6000 க்கு மேற்பட்ட பொருட்களை இவை உற்பத்தி செய்கின்றன. 3.6 கோடி நிறுவனங்கள் வாயிலாக, 8 கோடி நபர்களுக்கு இவை வேலைவாய்ப்பு அளிக்கின்றன.




## 21.04 தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும், பல்வேறு விதமான பொருட்களைத் தயாரிக்கின்றன. இவற்றில் முன்னிற்பவை ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலானவை. தமிழ் நாட்டில் இத்துறையில் 12.94 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, சுமார் 81 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. (source cms.tn.gov.in – 12.12.2017)



XI_Tamil_commerce_16-25_148-254.indd 209 2/17/2021 3:12:33 PM

### புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS)

கல்வி கற்ற இளைஞர்கள் மற்றும் முதல் தலைமுறை தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக, "புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் 2013' என்ற திட்டத்தை தமிழக அரசால் துவக்கி வைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல், தொழில் தொடங்கத் திட்டங்கள் தயாரித்தல்,புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ள நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிகத் தொடர்பு அமைத்துத் தருதல் ஆகிய உதவிகளை அளித்து வருகிறது.




Manufacturing of Coir fibre from coconut husk
source http://www.msmeonline.tn.gov.in/needs

### குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள்

குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பல வங்கிகளும் மற்றும் நிதி நிறுவனங்களும் நிதி உதவி வழங்கி வருகின்றன. அவையாவன

#### a. வணிக வங்கிகள்

i. பொதுத்துறை வங்கிகள் (எ.கா.) பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி

ii. தனியார் துறை வங்கிகள் (எ.கா.) ஐசிஐசிஐ, ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் பாங்க், எச்டிஎப்சி, கரூர் வைஸ்யா பாங்க், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி.

#### b. வட்டார ஊரக வங்கிகள்

(எ.கா.) பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, வள்ளலார் கிராம வங்கி

#### c . கூட்டுறவு வங்கிகள்

(எ.கா.) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி (TNSC bank) , மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

#### d. குறும நிதி நிறுவனங்கள்

(எ.கா.) முத்ரா வங்கி

#### e. வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்

(எ.கா) தேசியச் சிறுதொழில் கழகம் லிமிடெட் (NSIC) இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI)

### குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை (MUDRA)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்யவும், புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ₹ 20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ₹ 3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் 'குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை' (முத்ரா வங்கி) தொடங்கப்பட்டது.

குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தவும், தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவு படுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

## 21.05 சுய உதவிக் குழுக்கள்

கிராமப்புற வளர்ச்சி இந்தியாவின் முன்னேற்றத்தின் பிரதானத் தூண்களில் ஒன்றாகும். இந்தியா சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்குப் பின்னரும், பல கிராமங்கள் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களில் பின் தங்கியுள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் , இந்தியாவில் கிராமப்புறத்தில் 33.8 சதவீத மக்களும் நகர்ப்புறத்தில் 20.09 சதவீத மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வறுமையை எதிர்த்துப் போராடும் ஒரு இயக்கமாக சுய உதவிக்குழு உருவாகி உள்ளது. இது ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. சுய உதவி குழுவை சில பொது இலக்குகளை அடைய உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு எனலாம்.

சுய உதவிக் குழு என்பது ஒரு சிறிய முறைசாரா தன்னார்வச் சங்கம் ஆகும். உறுப்பினர்கள்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 210 2/17/2021 3:12:33 PM

**சாதனையாளர் வெற்றிக் கதை**

பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட் என்ற நிறுமம் முதன்முதலில் திரு. முருகேசன் மற்றும் அவரது 5 மகன்கள் மூலம் ரூபாய் 700 மூலதனத்துடன் துவங்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும், இந்நிறுவனத் தயாரிப்புகள் சிறந்த தரம் வாய்ந்த வர்த்தகக் குறியீடாக அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வளர்ந்துள்ளன. எப்போதும் விலையை விட, தரத்திற்காகப் பொருட்கள் விற்பனையாகும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

அவர்கள் வெற்றி அடையக் கடின உழைப்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்களது பல தயாரிப்புகள் புதுமையானது மட்டுமல்லாமல், நவீன அம்சங்களைக் கொண்டவையாகும்.

எரிபொருள் சேமிப்பு இன்றியமையாத தேவையாகக் கருதப்படும் இந்தக் காலகட்டத்தில், மற்ற நிறுவனத் தயாரிப்புகளுடன் ஒப்பிடுகையில், இவர்கள் தயாரிக்கும் சமையல் எரிவாயு அடுப்புகளானது சிக்கனமான எரிபொருள் செயல்திறன் கொண்டவை. இந்தியத் தரநிர்ணய ஆணையம் இவர்களுடைய சமையல் எரிவாயு அடுப்புகளுக்கு "GREEN LABEL" என்று புதிய அங்கீகாரக் குறியீட்டை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனம் அதன் தயாரிப்புகளை ஜப்பான், கனடா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இதே காலகட்டத்தில் ஏற்றுமதி ரூ 89 லட்சத்திலிருந்து ரூ 5.76 கோடியாக அதிகரித்துள்ளது.

அவர்களது முயற்சிகள் மற்றும் சிறந்த செயல்திறனை அங்கீகரிக்கும் விதமாக, மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சகம், தரமான தயாரிப்புக்கான தேசிய விருது 2010 முதல் பரிசு (சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் பிற உபகரணங்கள் தயாரிப்புக்காக) வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்தியது.

Source : Press Information Bureau, Government of India, Ministry of Micro, Small & Medium Enterprises

ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்து கொள்ளவும், ஒருமைப்பாடு மற்றும் கூட்டுப் பொறுப்பு ஆகிய பண்புகளைப் பெறவும் இக்குழுக்கள் உதவுகின்றன. சேமிப்பைத் திரட்டி, அதன் மூலம் கடன் வசதிகளை நல்குவதும் இக்குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) யின் கூற்றுப்படி "சுய உதவிக்குழு என்பது, ஒரே வகையான சமூகப் பொருளாதார நிலையில் உள்ள கிராமப்புற ஏழைகளின் ஒருங்கிணைந்த குழு ஆகும். பொது நிதியை உருவாக்க, அவர்கள் கூட்டாக இணைந்து, தங்களால் இயன்ற சிறுதொகையினைத் தொடர்ந்து முறையாகச் சேமித்து, அந்நிதியை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக அல்லது அவசர கடன் தேவைக்காக உறுப்பினர்களுக்கு வழங்க ஒப்பு கொண்டு இயங்கும் ஒரு அமைப்பாகும்.

### சுய உதவிக் குழுவின் நோக்கங்கள்

1. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.
2. முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.
3. பெண்களின் திறமையை உருவாக்கி ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடச் செய்வது
4. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மனங்களில் சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்
5. பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.
6. கடன் வட்டம் அல்லது சுழல் நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
7. உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
8. எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மைக்கான திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
9. உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு, அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வுப் பயிற்சியினை அளித்தல்.
10. குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல். திறமையான மற்றும் சிக்கனமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லுதல்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 211 2/17/2021 3:12:34 PM

11. உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்துதல்.

12. வாழ்க்கை சுழற்சியில் எல்லா நிலைகளிலும், பெண்களுக்கான மனித உரிமைகளை உறுதி செய்தல்.

### சுய உதவிக்குழுவின் சிறப்பம்சங்கள்

1. "முதலில் சேமிப்பு. பிறகு கடன்" என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.
2. சுய உதவிக்குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
3. சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
4. குழுக்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
5. அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்.
6. ஒவ்வொரு குழுவிலும் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.
7. ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.
8. சுய உதவிக்குழு கூட்டமானது, ஓய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அதிகப் பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.
9. குழுக்கள் தங்களுக்குள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். நிதி பரிமாற்ற நடவடிக்கைகளில் அவை கூட்டுப்பொறுப்பு ஏற்க வேண்டும்.




SHG meeting source http://www.tamilnadumahalir.org

10. ஒவ்வொரு குழுவும், தன் உறுப்பினர்கள் தங்களின் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

### சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்

1. உறுப்பினர்களின் முடிவு எடுக்கும் திறனை மேம்படுத்துகிறது.
2. உறுப்பினர்களுக்கு எழுத்தறிவு குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்கிறது.
3. வசதியற்றோருக்கு நிதிப் பரிமாற்றங்களில் திறன் பெற வாய்ப்பு அளிக்கிறது.
4. சரியான கணக்குகளை உறுதிப்படுத்தப் பல ஏடுகளும், பதிவேடுகளும் பராமரிக்கப்படுதல்.
5. தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தேவையான பயிற்சி அளித்தல்.
6. ஆண்டுதோறும் தகுதிபெற்ற தணிக்கையாளரிடம் ஆண்டுத் தணிக்கைக்காகக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.
7. குழு உறுப்பினர்களுக்கு அனுமதிக்கக்கூடிய கடன் தொகையைத் தீர்மானித்தல்.

### வங்கி கடன் இணைப்பு முறை (கடன் வழங்கும் வழிமுறைகள்)

சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க மூன்று வெவ்வேறு முறைகள் உள்ளன. முதலாவது முறையில் வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு, நேரடியாக கடன் வழங்குகின்றன. இரண்டாவது முறையில் வங்கிகள் அரசு சாரா அமைப்புகள் (NGO) மூலம், சுய உதவிக்குழுக்களில் உள்ள சிறு தொழில்முனைவோருக்குக் கடன் வழங்குகின்றன. மூன்றாவது முறையில் அரசு சாரா அமைப்புகளைச் செயலாக்குநராகக் கொண்டு வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அளிக்கின்றன. இந்த மூன்று முறைகளில் அரசு சாரா நிறுவனங்களைச் செயலாக்குநராகக் கொண்டு நேரடியாகக் கடன் அளிக்கும் முறையே பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

### இந்தியாவில் சுய உதவிக் குழுக்கள்

டிசம்பர் 2017 ன் படி இந்தியாவில் 45,67,090 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தச் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5,02,65,933 ஆகும். அடிப்படை அல்லது தொடக்க நிலையில் மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதில், சுய உதவிக்குழுக்களின் முக்கியத்துவத்தை அறிந்து, இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள் இவற்றுக்கான முறையான அங்கீகாரம் அளித்துள்ளன.

| | தமிழ்நாடு |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3,11,663 |
| சுய உதவிக்குழுக்களில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | 35,76,693 |
| சுய உதவிக் குழுக்களின் மொத்தச் சேமிப்பு | ₹ 186814.79 லட்சம் |
| சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் குறு நிறுவனங்களின் எண்ணிக்கை | 9754 |
| சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் குறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை | ₹ 40182 லட்சம் |

**ஆதாரம்:** *http://www.nrlm.gov.in Dec 19th 2017*

### தமிழ்நாட்டில் சுய உதவிக்குழுவின் தொடக்கம், வளர்ச்சி

பெண்களின் சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஊரகப் பெண்களின் திறனை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் 1983ல் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக்கழகம் (வரையறுக்கப்பட்டது) என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு 1989 செப்டம்பரில் விவசாய முன்னேற்றத்திற்கான உலக நிதியத்தின் (International Fund for Agricultural Development) உதவியோடு தர்மபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களை துவங்கி வைத்தது. இத்திட்டத்தின் வெற்றியினால் "மகளிர் திட்டம்" என்ற திட்டம், 1997–98ல் மாநில அரசின் நிதி உதவியோடு, பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்தச் சுய உதவிக்குழு மிகச் சக்தி வாய்ந்த இயக்கமாக செயல்பட்டு, இன்று மாநிலத்தில் பல வசதியற்ற மகளிரின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

#### கலைச்சொற்கள்

உற்பத்தி நிறுவனங்கள்

பணி நிறுவனங்கள்

குறு நிறுவனங்கள்

சிறு நிறுவனங்கள்

நடுத்தர நிறுவனங்கள்

சுய உதவிக் குழு

#### திட்டச்செயல்

1. உங்கள் ஊரில் செயல்படும் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள் குறித்து ஒரு அறிக்கையைத் தயார் செய்யவும்.
2. ஒருகைவினைத்தொழில்மேற்கொள்ளப்படும் தொழில் நிறுவனத்தைப் பார்வையிட்டு அந்த வணிகத்தின் தன்மை மற்றும் நோக்கத்தை அறிந்து கொள்ளவும். இத்தொழிலை விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம் செய்ய எந்த வகை நிதி ஆதாரங்களை நாடலாம் என்பதைப் பதிவு செய்யவும்.

#### நமது சிந்தனைக்கு

1. புதிய தொழில் முனைவோராகப் பெண்களின் பங்கு
2. புதிய தொழில் முனைவோருக்கான வருமான வரி விலக்கு

#### மேலும் அறிவதற்கு

1. சிறிய & நடுத்தர நிறுவனங்களின் அகில உலகக் கூட்டமைப்பு (WASME)
2. அந்நிய நேரடி முதலீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு



XI_Tamil_commerce_16-25_148-254.indd 213 2/17/2021 3:12:34 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு**

   (அ) 2004

   (ஆ) 2007

   (இ) 2006

   (ஈ) 2008

5M917G

2. **நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் _______ பங்களிப்பு இன்றியமையாதவை.**

   (அ) தொழில்துறை உற்பத்தி

   (ஆ) ஏற்றுமதி

   (இ) வேலைவாய்ப்பு

   (ஈ) மேற்கூறிய அனைத்தும்

3. **சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து ______ஏற்படுத்த வேண்டும்.**

   (அ) பொது நிதி

   (ஆ) குழு தொகுப்பு நிதி

   (இ) குழு நிதி

   (ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

4. **சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ______ வேறுபட்ட முறைகள் உள்ளன.**

   (அ) 1 (ஆ) 2

   (இ) 3 (ஈ) 4

5. **உற்பத்தி துறையின் கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு_______ லட்சத்திற்கு மிகக்கூடாது.**

   (அ) 10 (ஆ) 20

   (இ) 25 (ஈ) 50

**விடைகள்**

1. இ 2. ஈ 3. ஆ 4. இ 5. இ

### II. குறுவிடை வினாக்கள்.

1. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
2. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?
3. சுய உதவிக் குழு என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.
2. இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் 3)
3. சுய உதவிக் குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி.

### IV. பெருவிடை வினாக்கள்.

1. முத்ரா வங்கி – விளக்குக.
2. சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)

### குறிப்பு நூல்கள்.

1. வணிக அமைப்பு – விஜய் நிக்கோலே இம்ப்ரிண்ட்ஸ் லிட்
2. www.slideshare.net
3. planningcommission.nic.in/
4. cms.tn.gov.in

அலகு – 7 வியாபாரம்

அத்தியாயம் 22

# வியாபாரத்தின் வகைகள்

குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை. – குறள்

5HCHVD

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. வியாபாரத்தின் பொருள்
2. வியாபாரத்தின் இயல்புகள் மற்றும்
3. வியாபாரத்தின் வகைகள்

ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்

### அறிமுகம்

இதற்கு முந்தைய பாடம் தொழில் நிதி குறித்து விளக்கியது. இந்த பாடம் வியாபாரத்தின் வகைகள் குறித்து விளக்குகிறது. முற்காலத்தில் 'பண்டமாற்று முறையில்' பொருட்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது. பணம் என்ற ஒன்று கண்டு பிடிக்கப்பட்டபின் அனைத்துப் பொருள்களும் பண மதிப்பின் அடிப்படையில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. பணப்பரிமாற்றத்தினால் விற்பனை நடவடிக்கைகள் எளிதாகிறது. உற்பத்தியாளர்கள் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்தபின் அவர்களே நாடெங்கிலும் பரவிக்கிடக்கும் நுகர்வோர்களுக்கு நேரடியாக அவற்றை விற்பனை செய்வது மிகவும் கடினம். வியாபாரிகள் மற்றும் இடைநிலையர்கள் உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் இணைப்பதால் பொருட்களை எங்கு வேண்டுமானாலும் விற்கவோ, வாங்கவோ முடிகிறது.



### 22.01 வியாபாரம் – பொருள்

இலாபம் ஈட்டும் நோக்கில் பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம் ஆகும். பொருட்களையும் சேவைகளையும் தேவையுடையவர்கள் மற்றும் அதற்கான தொகையை செலுத்த தயாராக உள்ளவர்களுக்கு வியாபாரம் பொருட்களையும் சேவைகளையும் கொண்டு சென்று சேர்க்கிறது. பொருட்களின் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கிடையில் வியாபாரம் இடையீட்டாளராகச் செயல்படுகிறது.

### வியாபாரத்தின் வகைகள்

பொருட்களை வாங்குபவர் மற்றும் விற்பவர் வாழும் புவியியல் நிலப்பரப்பு அடிப்படையில் வியாபாரத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 215 2/17/2021 3:12:36 PM

1. உள்நாட்டு வியாபாரம்

2. பன்னாட்டு வியாபாரம்

பின் வரும் பிரிவுகளில் நீங்கள் அவற்றை தெரிந்து கொள்ளலாம்.

## 22.02 உள்நாட்டு வியாபாரம்

### பொருள்

சந்தை நடவடிக்கைகளான பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதும் விற்பதும் ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெற்றால் அது உள்நாட்டு வியாபாரம் எனப்படும். ஒரே நாட்டிற்குள், ஒரே இடத்தில், கிராமத்தில், மாநிலத்தில், அல்லது பல்வேறு மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் இது ஆகும். உள்நாட்டு வியாபாரத்தை உள்ளூர் வியாபாரம் எனவும் அழைக்கலாம்.

### உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள்

பின் வருவன உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் ஆகும்

1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்
2. உள் நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்
3. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
4. உள்நாட்டு வியாபாரம் இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
5. இதில் போக்குவரத்து இடர்ப்பாடு பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது
6. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்
7. இதன் நோக்கம் அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்
8. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்
9. ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனிநபர்களிடமிருந்து பொருட்கள் வாங்கப்படுகிறது.
10. உள்நாட்டுப் போக்குவரத்துச் சாதனங்கள் மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.
11. இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை எனினும் பொருட்களை வாங்குபவர் மாநில அரசுக்கு மாநில சரக்கு மற்றும் சேவை (SGST) வரியும், மத்திய அரசிற்கு மத்திய சரக்கு மற்றும் சேவை வரியும் (CGST) செலுத்த வேண்டும்.

**உதாரணம்:** காஷ்மீரில் விளையும் ஆப்பிள் தமிழ்நாட்டில் விற்கப்படுதல்

### உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள்

உள்நாட்டு வியாபாரம் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

1. மொத்த வியாபாரம் 2. சில்லறை வியாபாரம்

### மொத்த வியாபாரம்

மொத்த வியாபாரம் என்பது பொருட்களை உற்பத்தி செய்பவரிடம் மொத்தமாக வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு குறைந்த அளவில் விற்கும் நடைமுறை வணிகச் செயலாகும்.

### சில்லறை வியாபாரம்

சில்லறை வியாபாரம் என்பது மொத்த வியாபாரியிடம் பொருட்களை வாங்கி நுகர்வோருக்கு சிறிய அளவில் பொருட்களை வழங்கும் நடைமுறை வணிகச் செயலாகும்

## 22.03 பன்னாட்டு வியாபாரம்

### பொருள்

வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த வாங்குபவர் மற்றும் விற்பவர்களிடையே நடைபெறும் வியாபாரம் பன்னாட்டு வியாபாரம் ஆகும். ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு பொருட்களையும் சேவைகளையும் பரிமாற்றம் செய்வதாகும். வெளிநாட்டு வியாபாரம் என்பது ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து நடைபெறும் வியாபாரம் ஆகும். பெரும்பாலும் கப்பல்கள் மற்றும் ஆகாய விமானங்கள் மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இரண்டு வகை பணமதிப்புகள் இங்கு கையாளப்படுகிறது

**உதாரணம்:** எரிபொருள் மற்றும் விமானம்





XI_Tamil_commerce_16-25_148-254.indd 216 2/17/2021 3:12:36 PM

### பன்னாட்டு வியாபாரத்தின் வகைகள்

### அ) இறக்குமதி

உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறலாம். இந்தியா இயந்திர சாதனங்களையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. விரைவான இயந்திரமயமாக்கலுக்காகவும், நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இறக்குமதி மிகவும் தவிர்க்க இயலாதது ஆகிறது.

### ஆ) ஏற்றுமதி

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**உதாரணம்**

1. இந்தியா இரும்பு, எஃகு போன்றவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது.
2. இந்தியா, இங்கிலாந்து நாட்டிற்கு தேயிலையை ஏற்றுமதி செய்கிறது.
3. மதுரையில் இருந்து சிங்கப்பூருக்கு மல்லிகைப்பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உள்நாட்டில் தேவைக்கு மிகுதியாயுள்ள பொருட்களை விற்பதற்கும், உள்நாட்டு இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கும், தேசிய வருமானத்தை உயர்த்துவதற்கும், நிறைவேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசு வருவாயை அதிகரிக்கவும் வெளிநாட்டு வியாபாரம் மிகவும் அவசியம் ஆகும்.



**இறக்குமதி / ஏற்றுமதி**

### இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்

| ஏற்றுமதிப் பொருட்கள் | இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| பெட்ரோலியப் பொருட்கள் | எண்ணெய் முதலான சுரங்க எரிபொருள் |
| நகைகள் | வைரம் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள் |
| ஆட்டோமொபைல்ஸ் | மின்சார இயந்திர சாதனங்கள் |
| பயோகெமிக்கல் | கணினி உள்ளிட்ட இயந்திரங்கள் |
| மருந்துப் பொருட்கள் | ஆர்கானிக் கெமிக்கல் |

### இ) மறு ஏற்றுமதி

ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**உதாரணம்:** இந்தியாவில் சூரத், நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து அவற்றை துண்டாக்கி பட்டை தீட்டி மீண்டும் ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு மறு ஏற்றுமதி செய்கிறார்கள்

**சிங்கப்பூர், துபாய், ஹாங்காங் ஆகிய நாடுகள் உலகின் மிகப்பெரிய மறு ஏற்றுமதி மையங்கள் ஆகும்**

உள்நாட்டு உற்பத்தி மிகுதி. உள்நாட்டு வளங்களை முழுவதும் பயன்படுத்துதல், அந்நிய செலாவணி ஈட்டுதல், நாட்டின் வருமானத்தை அதிகப்படுத்துதல் வேலைவாய்ப்பினைப் பெருக்குதல் மற்றும் அரசு வருவாயை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஏற்றுமதி வியாபாரங்கள் நடைபெறுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 217 2/17/2021 3:12:36 PM

## சாதனைக் கதை:



**இந்திரா நூயி**

இந்திரா நூயி என்ற முகம் இந்தியப் பெண் தொழில் முனைவோர்கள் மத்தியில் மிகவும் பிரவலமானது. இவர் முன்னால் பெப்சி நிறுவனத்தின் தலைவர். சென்னையில் பிறந்தவர். சென்னை கிறிஸ்துவக் கல்லூயில் 1976 ல் இளம் அறிவியல் பட்டம் பெற்றார். யேல் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுநிலைப்பட்டமும் கொல்கத்தா ஐ.ஐ.எம் கல்வி நிலையத்தில் நிதி மற்றும் சந்தையில் துறையில் முதுநிலைப்பட்டம் பெற்றார். மோட்டா ரோலா, ஏசியா, ப்ரவுன் போவரி ஆகிய நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தவர். தனது வாழ்வின் ஆரம்பக்கட்டங்களில் ஜான்சன் அன் ஜான்சன் மற்றும் மேட்டூர் பேர்ட் செல் பின்னலாடை நிறுவனங்களில் உற்பத்திப் பிரிவு மேலாளராகப் பணியாற்றியுள்ளார். பின் பெப்சி கோ நிறுவனத்தில் 1994ல் பணியில் சேர்ந்து 2006ல் தலைமைச் செயல் அதிகாரி (CEO) மற்றும் தலைவர் என்ற மிக உயர்ந்த நிலைக்கு வந்தார். 2018ல் பன்னாட்டு கிரிக்கெட் வாரியத்தின் (ICC) சுதந்திர பெண் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். தொழில் துறையில் அவர் புரிந்த சாதனைகளுக்காகவும், இந்தியாவின் கூட்டுப்பங்கு நிறும (Corporate) தலைமைகளுக்கு முன்மாதிரியாக பணியாற்றிய தற்காகவும் மத்திய அரசு அவருக்கு 'பத்ம பூசன்' விருது வழங்கி கௌரவித்தது. அவரது திறம்பட்ட தலைமை மூலம் அவர் அந்நிறுவனத்தைச் செயல் ஊக்கப்படுத்தி அதன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 30 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஒப்பந்தங்களில் ஈடுபடும் நிலைக்கு உந்தித் தள்ளிச் சாதனைப் படைத்திருக்கிறார்.




## கலைச்சொற்கள்

உள்நாட்டு வியாபாரம்

மொத்த வியாபாரம்

சில்லறை வியாபாரம்

வெளிநாட்டு வியாபாரம்

ஏற்றுமதி

இறக்குமதி

மறுஏற்றுமதி

வியாபாரம்

## நமது சிந்தனைக்கு

1. மாணவர்கள் அருகில் உள்ள உள்நாட்டு வியாபார நிலையம் ஒன்றிற்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்படும் வணிக நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கவும்.
2. மாணவர் அருகாமையில் உள்ள சில்லறை விற்பனை நிலையம் ஒன்றிற்கு சென்று அங்கு நடந்தேறும் வணிக நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கவும்.

## மேலும் அறிவதற்கு

1. எதிர் வரும் காலங்களில் தற்போதைய கடைகள் மற்றும் வணிக நிலையங்களின் செயல்பாட்டில் மாபெரும் மாற்றம் ஏற்படலாம். பொருட்களை வாங்குபவர் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்காமல், தமது வீட்டில் இருந்தே கைப்பேசி மற்றும் மின அஞ்சல் மூலமாக பொருட்களை வாங்க ஆணை அனுப்பியவுடன் வணிக நிறுவனங்கள் நுகர்வோரின் இருப்பிடங்களிலேயே கொண்டு சென்று வழங்கும் நிலை ஏற்படலாம்.
2. எதிர் வரும் காலங்களில் பொருட்களின் விற்பனைக் காட்சியகம், காட்சிப்படுத்துதல், சாளரக் காட்சி போன்ற விற்பனைக்கான ஏற்பாடுகள் எதுவும் இருக்க வாய்ப்புகள் இல்லாமல் போகலாம். மாறாக பொருட்களின் உற்பத்தியாளர் பொருட்களுக்கு அடையாளக் குறியீட்டு எண்களை வழங்கி. பொருள் தேவைப்படுவோர் கைப்பேசி மற்றும் மின்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 218 2/17/2021 3:12:36 PM

*அஞ்சல் மூலம் பொருள்களை ஆணை செய்து பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்படலாம். அப்போது சில்லறை விற்பனை நிலையங்கள். கடைகள் போன்ற விற்பனை ஏற்பாடுகள் இல்லாமலே போகலாம். எனவே மாறும் சூழ்நிலைகளை எதிர்கொண்டு வணிக வாய்ப்புகளை வசப்படுத்த மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.*

### சூழ்நிலை ஆய்வு

திரு. ரமேஷ் தனது வணிகவியல் முதுநிலைப் பட்ட மேற்படிப்பை முடித்தவுடன் விசைத்தறி இயந்திரங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபார நிலையம் ஒன்றைத் தொடங்க நினைக்கிறார். பல்வேறு அம்சங்களைத் திறம்பட ஆய்வு செய்தபின் விசைத்தறிகளை உள்நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்குவதை விட வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து இறக்குமதி செய்தால் அதிக இலாபம் ஈட்டலாம் என்பதைக் கண்டறிகிறார். உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் வாங்கி உள்நாட்டு வளர்ச்சிக்கு உதவுவது சிறந்ததா? அல்லது வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடம் வாங்கி தான் கொள்ளை இலாபம் ஈட்டி தனது பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வது ஏற்றதா? எனது அவருக்கு உங்களின் ஆலோசனையை வழங்குக.

**உங்களுக்குத் தெரியுமா?**

**உள்நாட்டு வியாபார மேம்பாட்டு நிறுவனம் (ITDO)**

உள்நாட்டு வியாபார மேம்பாட்டு நிறுவனம் (ITDO) இந்தியாவில் உள்நாட்டு வியாபாரத்தை வளர்ப்பதற்காகவும், மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் ஆகிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் இந்திய அரசால் உரிய சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுத் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வமைப்பு பின்வரும் வழிகளில் அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் செயல்படுகிறது.

1. உள்நாட்டு வியாபாரம் மற்றும் அது தொடர்பான சேவைகளை மேம்படுத்துவது தொடர்பான பொதுக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைத்தல், இந்திய வணிக மற்றும் தொழில் கூட்டமைப்பின் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், மற்றும் அதன் செயல் விளைவை அறிதல்
2. உள்நாட்டு வியாபார வளர்ச்சிக்குத் தேவையான நிலத்தினைப் பெறக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைத்து அமைச்சரவை, உள்ளாட்சி அமைப்புகள், ஆகியவற்றை ஒருங்கிணைத்து நிலத்திற்கான விலை நிர்ணயம் குறித்த அடிப்படை அம்சங்களை அடையாளம் காணல், மற்றும் அவற்றை உள்நாட்டு வியாபார முதலீட்டாளர்களுக்கு வழங்கல்
3. உள்நாட்டு வியாபார அங்காடி மேலாண்மையை மேம்படுத்துவது தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்து, இந்திய வணிக மற்றும் தொழில் கூட்டமைப்பு மற்றும் அவற்றின் பொதுச் சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றை நடைமுறைப்படுத்தல்
4. மொத்த மற்றும் சில்லறை வியாபாரப் பிரிவுகளின் போட்டித் திறன், செயல்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் அதனை மேம்படுத்தும் கொள்கைகள், மற்றும் திட்டங்களை வகுத்தல்
5. வியாபாரக் கடைகள் மற்றும் அதன் அமைவிடங்களை நிர்வகித்தல் தொடர்பான சட்டங்களை உருவாக்குதல், அவர்களின் ஊழியர்களை மேலாண்மை செய்ய உரிமம் வழங்குதல்.
6. வியாபார நடவடிக்கைகளைப் பதிவு செய்வதில் உள்ள சட்டத் திட்டங்களை எளிமைப்படுத்துதல்.
7. வணிகக் குறிகள், வணிகத் தரவுகள், மக்களாட்சி குறிகாட்டிகள், வடிவமைப்புகள், தொழில் மாதிரிகள், மற்றும் வணிகப் பெயர்கள் ஆகியவை தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்கு உதவுவது
8. வியாபாரம், சரக்குகள், சந்தை, உள்நாட்டு உற்பத்தித் திறன் ஆகியவை தொடர்பான தகவல்களைப் பெற்று, நிர்வகித்துச் சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் பொதுத் தொழிற் சங்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் பின் ஆளுமை மூலம் அத்தகவல்களைத் தேவையானவர்கள் பெற்றுக் கொள்ள வகை செய்தல்.
9. உள்நாட்டு வியாபாரம் மற்றும் வர்த்தகப் பதிவுகள் குறித்த சட்டதிட்டங்கள் மற்றும் தீர்மானங்களை ஆராய்தல் மற்றும் முன் மொழிதல்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 219 2/17/2021 3:12:37 PM

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. வெளிநாட்டில் இருந்து சரக்குகள் வாங்கப்படுவது _________என அழைக்கப்படும்

   அ. இறக்குமதி  ஆ. ஏற்றுமதி

   இ. மறு ஏற்றுமதி  ஈ. மீண்டும் ஏற்றுமதி

2. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது _________

   அ. வெளிநாட்டு வியாபாரம்

   ஆ. உள்நாட்டு வியாபாரம்

   இ. மறு ஏற்றுமதி வியாபாரம்

   ஈ. வியாபாரம்

3. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது

   அ. வியாபாரம்  ஆ. தொழிற்சாலை

   இ. வணிகம்  ஈ. வர்த்தகம்

4. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் _________

   அ. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது

   ஆ. அத்தியாவசியப் பொருட்களையும் சேவை-களையும் சிக்கன விலையில் வழங்குவது

   இ. தேசிய வருமானத்தை உயர்த்துவது

   ஈ. அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்தல்

5. உள்நாட்டு வியாபாரத்தை_________ வகைகளாகப் பிரிக்கலாம்

   அ. மூன்று

   ஆ. நான்கு

   இ. இரண்டு

   ஈ. ஐந்து

M8QVZT

**விடைகள்**

1. அ 2 இ 3 அ 4 ஆ 5 இ

### II. குறுவிடை வினாக்கள்.

1. வியாபாரத்தின் பொருள் தருக.
2. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?
3. இறக்குமதி என்றால் என்ன?
4. மறுஏற்றுமதி என்பதன் பொருள் யாது?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை? விளக்குக.
2. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக.

### IV. பெருவிடை வினாக்கள்.

1. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)
2. வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.

## அலகு – 7 வியாபாரம்

அத்தியாயம்
# 23
# வழங்கல் வழிகள்

ஒன்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண் பொருள்

ஏனை இரண்டும் ஒழுங்கு – குறள் 760

H8SHPH

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின் மாணவர்கள்

1. வழங்கல் வழிகள் – பொருள் மற்றும் வகைகள்
2. பல்வேறு வகை வணிக இடைநிலையர்கள்
3. மொத்த வியாபாரிகளின் பண்புநலன்கள் மற்றும் சேவைகள்
4. சில்லறை வியாபாரிகள் பண்பு நலன்கள் மற்றும் சேவைகள்
5. மொத்த வியாபாரி மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள்

ஆகியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

### அறிமுகம்

பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் அப்பொருள்கள் நுகர்வோரைச் செவ்வனே சென்றடைய உரிய வழிகளைத் தேர்வு செய்கின்றனர். உற்பத்தி செய்த பொருள் இறுதிநிலை நுகர்வோரால் வாங்கிப் பயன்படுத்தும் போது தான் உற்பத்திச்செய்யப்பட்ட பொருள் பணமாக மாறுகிறது. சிக்கனமான செலவில் பொருள்களை அளித்திடவும், பெருமளவிலான வாடிக்கையருக்கு பொருட்களை வழங்கிடவும், வாடிக்கையர்களை தக்க வைத்துக் கொள்வதற்கும் பொருட்களை வழங்குவதற்கான சிறந்த வழியினையோ, அல்லது பல்வேறு வழங்கல் வழிகளை ஒன்றிணைத்து சிறந்த வழங்கல் வழியினைத் தேர்வு செய்கிறார்.

### 23.01 வழங்கல் வழி – பொருள்


வழங்கல் வழி என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரைச் சென்றடைய உதவும் பாதை ஆகும். இடைநிலையர்கள் இன்றி பொருட்களை நேரடியாக விநியோகித்தால் அது நேரடி வழங்கல் வழியாகும். வழங்கல் வழியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைநிலையர்கள் விநியோகப் பணிகளைச் செய்தால் மறைமுக வழங்கல் வழியாகும். கோடிக்கணக்கான நுகர்வோரைப் பொருட்கள் சென்றடைய இடைநிலையர்கள் உதவுகின்றனர். வழங்கல் வழி மூலமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் நுகர்வோர்களிடம் பொருட்கள் சென்றடைகிறது. தொழிற்சாலைப்பொருட்கள்,நுகர்வுப்பொருட்கள், அழுகும் தன்மையுடைய பொருள்கள் மற்றும் நீண்ட காலம் பயன்படுத்தும் பொருட்கள் என அனைத்து வகையான பொருட்களையும் தேவைப்படும் அளவுகளில் தேவைப்படும் நேரத்தில் நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கிறது. பொருட்களைப் போலவே சேவைகளையும் விநியோகிக்கிறது.

### வழங்கல் வழி – வரைவிலக்கணம்

E.W. கண்டிஃ மற்றும் ஸ்டில் ஆகியோரது கூற்றுப்படி "உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரின் பயன்பாட்டிற்கெனப் பொருட்களை நேரடியாகவோ,



XI_Tamil_commerce_16-25_148-254.indd 221 2/17/2021 3:12:37 PM




மறைமுகமாகவோ அனுப்புவதில் ஈடுபட்டுள்ள அனைத்துமே வழங்கல் வழி ஆகும்

அமெரிக்கச் சந்தையியல் ஆய்வுக் கழகக் கூற்றின் படி "ஒருங்கிணைந்த வணிக அமைப்பு மற்றும் பிற வணிக முகவர்கள் வணிகப் பொருட்களையோ, உற்பத்திப்பொருட்களையோ, சேவைகளையோ மொத்தமாகவும், சில்லறையாகவும் சந்தையிடும் நோக்கோடு மேற்கொள்ளும் எல்லாக் கூட்டமைப்புகளும் வழங்கல் வழி எனப்பெயர் பெறும்

## 23.02 வழங்கல் வழிகளின் வகைகள்

1. இடைநிலையர் அடிப்படையாகக் கொண்ட வழங்கல் வழிகள்
2. பொருட்கள் மற்றும் சேவைகளின் வகைகள் அடிப்படையிலான வழங்கல் வழிகள்
3. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தை அடிப்படையிலான வழங்கல் வழிகள்

### I. இடைநிலையர் அடிப்படையிலான வழங்கல் வழிகள்

#### அ. நேரடி வழங்கல் வழிகள்

#### 1. இடைநிலையர்கள் இன்றி

ஒரு உற்பத்தியாளர் தனது நிறுவனத்தின் மூலமாகவோ, தனது கிளைகள் மூலமாகவோ, அல்லது தனது விற்பனைக் குழு மூலமாகவோ தனது உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் முயற்சியை மேற்கொள்ளுதல் ஆகும். உற்பத்தி செய்த பொருள்களை விநியோகிப்பது முதல் பின்னூட்ட முடிவுகளை சேகரிப்பது வரை அனைத்தையும் உற்பத்தியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். சில உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்திப் பொருள்களை நேரடியாக நுகர்வோரின் வீட்டிற்கே சென்று விற்கின்றனர்.




#### 2. அஞ்சல் வழி வணிகம் அல்லது தொலைபேசி வழி வணிகம்

அஞ்சல் வழி மூலமாகவோ, கைபேசி வாயிலாகவோ வாடிக்கையரிடமிருந்து ஆணைகளைப் பெற்று அவர்களுக்குப் பொருட்களை அனுப்பி வைக்கின்றனர். தேவைப்படும் வாடிக்கை யாளர்களுக்கு விலைப்பட்டியல் அனுப்பி, ஆணைகளைப் பெற்று, பொருட்களை அனுப்பி வைக்கின்றனர்.

#### 3. மின்னணு வணிகம்

சில உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு இணையம் மூலமாக வலைதளங்களை உருவாக்கி அதன் மூலம் ஆணைகளைப் பெற்றுத் தங்களின் பண்டகச் சாலைகளில் இருந்து இடைநிலையர் உதவியின்றி நேரடியாக அனுப்பி வைக்கின்றனர்.

#### 4. நேரடி விற்பனை அல்லது பல்முனை வணிகம்

சில தயாரிப்பாளர்கள் நாடெங்கும் தனது கிளைகளை நிறுவி அதன் மூலம் வாடிக்கையாளர்களை உருவாக்குகின்றனர். பல்வேறு கழிவுகளை வழங்கி அவர்கள் மூலமாகப் புதிய வாடிக்கையர்களை ஈர்த்து அவர்களுக்குத் தங்கள் கிளைகள் மூலம் நேரடியாகப் பொருட்களை விற்கின்றனர்

#### ஆ. மறைமுக வழங்கல் வழிகள்

#### 1. ஒப்பந்த விநியோகிப்பாளர் அல்லது ஒப்பந்த தளவாடங்கள்

பேரளவு உற்பத்தியாளர்கள் தங்களது முழு கவனத்தையும் உற்பத்தியில் செலுத்தும் பொருட்டு பண்டகக்காப்பிடல், போக்குவரத்து செய்தல், பகிர்ந்தளித்தல் போன்றவற்றை வெளிப்பணி மாற்ற முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்து விடுகின்றனர். ஒப்பந்ததாரர்கள் ஆணைகளைப்


XI_Tamil_commerce_16-25_148-254.indd 222 2/17/2021 3:12:37 PM

பெறுவது பொருட்களை அனுப்பி வைப்பது, பணம் பெறுவது ஆகியவற்றைக் கழிவு அடிப்படையில் செய்து கொடுத்து விடுகிறார்கள்

### 2. உற்பத்தியாளர் – மதிப்பு கூட்டப்பட்ட மீள் விற்பனையாளர்

இவ்வகை மீள் விற்பனையாளர்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தியாளர்களிடம் பெற்று நுகர்வோருக்கு முழுதிருப்தி அளிக்கும் வண்ணம் பல்வேறு மதிப்பு கூட்டப்படும் பணிகளைச் செய்து அவற்றை வாடிக்கையாளர்களுக்கு விற்கின்றனர். மைக் ரோ சாப்ட் நிறுவனம் தனது மீள் விற்பனையாளராக அவெண்ட் அண்ட் ரெடிங்டன் நிறுவனத்தை அமர்த்தியுள்ளது. இவ்வகை மீள் விற்பனையாளர்கள் அப்பொருளுக்கு மிக உயர்ந்த தொழில் நுட்ப ஆதரவினை வழங்குகின்றனர். ஒரு சூரிய ஒளி மின்சாரச் சாதனம் உற்பத்தியாளர் தனது மீள் விற்பனையாளராகக் கட்டுமான நிறுவனங்களை அமர்த்திக்கொண்டால் அந்நிறுவனங்கள் அடுக்குமாடி குடியிருப்பை வாங்குபவர்களுக்கு இச்சாதனங்களை விற்றுவிடலாம்.

### 3. உற்பத்தியாளர் – வழங்கல் வழிக் கூட்டாளி – நுகர்வோர்

உற்பத்தியாளருக்கும் வழங்கல் வழிக் கூட்டாளிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதனடிப்படையில் உற்பத்தியாளர் வழங்கல் வழிக் கூட்டாளியின் தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வழங்கல் வழிக் கூட்டாளி விநியோகிக்கும் தனது பொருள் மற்றும் சேவைகளுக்கு சான்றளிக்கிறார். இவர்கள் இருவரும் ஒருங்கிணைந்து குறிக்கோளை எட்ட முயற்சிக்கின்றனர். அமெரிக்கக் கணினித் தொழில் நுட்ப நிறுவனமான டெல் இந்தியாவில் இன்கிரேம் ஐரிஷ், ரெடிங்டன், நியோர்ட்ரிக், எச்.சி.எல் ஆகிய நிறுவனங்கள் வழங்கல் வழிக் கூட்டாளிகளாக ஒப்பந்தம் செய்து செயல்பட்டு வருகிறது. S1, VAR, Consultatnts, MSPS, 1svs ஆகியோரும் வழங்கல் வழிக் கூட்டாளி என அழைக்கப்படுகிறார்கள்.

### 4. உற்பத்தியாளர் – தனி உரிமை முகமை நுகர்வோர்

உற்பத்தியாளர் இவ்வழங்கல் வழியின் மூலம் பொருட்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விநியோகிக்கிறார். (இது குறித்துத் தனி உரிமை முகமை அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்)

### 5. உற்பத்தியாளர் – சில்லறை வியாபாரி – நுகர்வோர்

பொருட்களைப் பண்டகக்காப்பு செய்தல், இருப்பு வைத்தல், போக்குவரத்து செய்தல், விநியோகம் செய்தல் ஆகிய பணிகளைத் தானே செய்து பொருட்களை நுகர்வோருக்கு விற்பதற்காகச் சில்லறை வணிகர்கள் அடங்கிய வலையமைப்பினை உருவாக்குகின்றனர். தனித்துவ அடையாளக் குறியீடு உள்ள பொருட்கள் மற்றும் சந்தையில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுப் பிரபலமான பொருட்கள் ஆகியவை இம்முறை மூலம் விநியோகிக்கப்படுகிறது

### 6. உற்பத்தியாளர் – மொத்த வியாபாரிகள் – சில்லறை வியாபாரிகள் – நுகர்வோர்

உற்பத்தியாளர்கள் பொருட்களை உற்பத்தி செய்ததும் உடனே மொத்த வியாபாரிகளுக்கு விற்று விடுகின்றனர். மொத்த வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்தல். பண்டகக் காப்பு செய்தல், போக்குவரத்து செய்தல், விநியோகம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். மொத்த வியாபாரிகள் பல்வேறு உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஒன்று திரட்டிச் சிறிய அளவுகளில், தேவைக்கேற்ப சில்லறை வியாபாரிகளுக்கு விற்கின்றனர். சில்லறை வியாபாரிகள் இறுதிநிலையில் உள்ள நுகர்வோருக்கு விற்கின்றனர்

### 7. உற்பத்தியாளர்கள் – முகவர்கள் – மொத்தவியாபாரிகள் – சில்லறை வியாபாரிகள் – நுகர்வோர்கள்

மேற்கூறிய வழங்கல் வழியில் கூடுதலாக உற்பத்தியாளருக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் இடையில் முகவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். முகவர்கள் விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் மீன்பிடி படகு உரிமையாளர்களிடம் இருந்து விவசாய பொருட்கள் மற்றும் மீன்கள் போன்றவற்றை வாங்கி அவற்றை ஒன்று திரட்டி, மொத்த வியாபாரியிடம் இருந்து ஆணைகளைப் பெற்று அவற்றை அனுப்பி வைக்கின்றனர். முகவர்கள் தாங்கள் செய்யும் வியாபாரத்தின் அளவுக்கு ஏற்பக் கழிவுத்தொகை பெறுகின்றனர்.

### 8. உற்பத்தியாளர் – அங்கிகரிக்கப்பட்ட வியாபாரிகள் – நுகர்வோர்

நுகர்வோரிடம் உள்ள தொடர்பினைச் சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு உற்பத்தியாளர் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளை(Authorised Dealer) அமர்த்தித் தங்களின் உற்பத்திப் பொருள்களை



XI_Tamil_commerce_16-25_148-254.indd 223 2/17/2021 3:12:37 PM




முழுவதையும் இவர்கள் மூலமே விநியோகம் செய்கின்றனர். இவ்வகை டீலர்கள் தங்களை அமர்த்திய உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருளை மட்டுமே, உற்பத்தியாளரின் வணிகக் குறிகளைப் பயன்படுத்திச் சிறு சிறு அளவுகளில் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கின்றனர். இயந்திரங்களை விற்பனை செய்வதுடன் அதனை நிறுவுதல் போன்ற சேவைகளைச் செய்து தருகின்றனர். பந்தயக் கார்கள் போன்றவை இவ்விதம் விற்பனை செய்யப்படுகிறது.

### II. பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையிலான வழங்கல் வழிகள்

#### அ. நுகர்வோர் பொருட்களுக்கான வழங்கல் வழிகள்

மளிகைப் பொருட்கள், ஆடை வகைகள் போன்ற நுகர்வோர் பொருட்களை வாங்குவது அடிக்கடி நடைபெறுகிறது.இவைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தக்கூடியவை. ஆனால் குளிர் சாதனப்பெட்டி,தொலைக்காட்சி,எல்.இ.டி.விளக்குகள், மின்விசிறி,மடிக்கணினி போன்றவை நீடித்துழைக்கும்

**B 2 B மற்றும் B 2 C**

மொத்த வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளர் களுக்கும் இடையேயான, மொத்த வியாபாரி களுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் இடையேயான வாங்குதல் மற்றும் விற்றல் வியாபாரங்கள் B 2 B நடவடிக்கைகள் எனப்படும். ஒரு புறம் உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள், மறுபுறம் நுகர்வோர் இவர்களுக்கு இடையிலான வணிக நடவடிக்கைகள் B 2 C எனப்படும்.

பொருட்கள் ஆகும். ஒரு முறை வாங்கிய பின் நீடித்து உழைப்பதால் மீண்டும் அவை பல ஆண்டுகளுக்குப் பிறகே வாங்கப்படும். அவற்றிற்கு நிறுவுதல், சேவைகள், உதிரிப்பாகங்கள், ஆகியவை தேவைப்படும். ஒரு நகரத்தில் விரைந்து தீர்ந்து விடும். நுகர்வோர் பொருட்களுக்கான சில்லறை விற்பனை நிலையங்கள், நீடித்து உழைக்கும் பொருட்களை விற்கும் சில்லறை விற்பனை நிலையங்களைவிட எண்ணிக்கையில் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் இவை இரண்டுக்குமான வழங்கல் வழிகள் ஒரே அளவில் உள்ளன.

#### ஆ. தொழிற்சாலைப் பொருள்களுக்கான வழங்கல் வழிகள்

தொழில்துறை இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்யக் குறைந்த எண்ணிக்கையான வழங்கல் வழிகளே போதுமானது. ஏனெனில் இவ்வகைப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்துபவர் குறைந்த எண்ணிக்கையினரே. உற்பத்தியாளர் அல்லது விநியோகிப்பாளரிடம் இயக்குதல், பராமரித்தல் போன்றவற்றில் தொழில் நுட்ப உதவிகள் தேவைப்படுகிறது. உற்பத்தியாளர் தனது விற்பனையாளர் மூலமோ அல்லது தனது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரி மூலமோ இயந்திரச் சாதனங்களை விற்பனை செய்கிறார். துல்லிய நுண்ணோக்கி இயந்திரங்கள் இவ்வகையிலேயே விற்கப்படுகின்றன

#### இ. சேவைகளுக்கான வழங்கல் வழிகள்

சேவைகளை இருப்பு வைக்க இயலாது. உரு வங்கி நடவடிக்கை அல்லது செல்லிடப்பேசி இணைப்பு ஆகியவை குறிப்பிட்ட நுகர்வோருக்குக் குறித்தநேரத்தில்உருவாக்கப்பட்டுவழங்கப்படுகிறது. பெரும்பாலும் நேரடி வழங்கல் வழி மூலம் உற்பத்தியாளர் தனது கிளைகள் மூலம் சேவைகள் நல்குகிறார். தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்களின் வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் தேவைக்கேற்ற மென் பொருளை உருவாக்கி வழங்குகின்றன. காப்பீட்டு நிறுவனங்கள் தனது கிளைகள் மூலம் முகவர்களை அமர்த்தி வாடிக்கையருக்கு காப்பீட்டுத் திட்டங்களை வழங்குகின்றன. சேவைகள் சந்தைப்படுத்துதலில் உற்பத்தியாளரின் வலைதளம் வாடிக்கையாளருடன் தொடர்பினை ஏற்படுத்த உதவுகிறது.

### iii. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தை அடிப்படையிலான வழங்கல் வழி

உள்நாட்டு அல்லது பன்னாட்டு அளவில் செயல்படும் இடைநிலையர்கள் குறித்து பின்வரும் பத்திகளில் விளக்கமாகக் காணலாம். பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பன்னாட்டு விநியோகம் இரு அமைப்புகளை உள்ளடக்கியது. அவை உள்நாட்டு விநியோக அமைப்பு, வெளிநாட்டு விநியோக அமைப்பு ஆகும். வெளிநாட்டு வர்த்தகங்கள், ஏற்றுமதி வணிகர்கள், ஏற்றுமதி



XI_Tamil_commerce_16-25_148-254.indd 224 2/17/2021 3:12:37 PM

வணிக நிறுவனங்கள் (Export Trading Houses), ஏற்றுமதி முகவர்கள், மாநில வணிக அமைப்புகள் (State Trading Organisations), இணை வினைகள், உரிமங்கள், ப்ரான்சைசிங் ஆகியோர் இடைநிலையர் பணிகளைச் செய்கின்றனர்.

## 23.03 வழங்கல் வழியைத் தீர்மானிக்கும் காரணிகள்

பொருட்களின் விநியோகிக்க ஏற்ற வழங்கல் வழிகளைத் தீர்மானிக்கும் காரணிகள் பின் வருமாறு

### 1. பொருட்களின் தன்மைகள்

பருவகால உற்பத்திப் பொருட்களைக் குறுகிய வழங்கல் வழி மூலமே விநியோகிக்க முடியும். நுகர்வோரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் மலிவான பொருட்கள் நேரடியாக நுகர்வோருக்கு அளிக்கப்படுகிறது. தரமான பொருட்கள் இடைநிலையர் மூலமாகவே விநியோகிக்கப்பட வேண்டும். வாகனங்களைப் (டிரக் (Truck)) பயன்படுத்திக் குறுகிய வழங்கல் வழி மூலம் வழங்கப்படுகிறது. பூக்கள், பால் முதலிய விரைவில் அழியும் தன்மையுடைய பொருள்களின் ஆயுள் மிகவும் குறைவு, ஆதலால் அவை விரைவாக நுகர்வோரைச் சென்றடைய வேண்டும். குளிர்சாதனப் பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம் போன்ற தொழில் நுட்பப் பொருட்களுக்கு விற்பனைக்கு முன்னும், பின்னும் தொழில் நுட்ப ஆலோசனைகள் தேவைப்படுவதால் அவை உற்பத்தியாளரால் நேரடியாகவோ அல்லது குறைந்த பட்ச இடைநிலையர் வாயிலாகவோ விநியோகிக்கப்பட வேண்டும்.

### 2. சந்தையின் தன்மைகள்

பொருட்களுக்கான சந்தையின் அளவு வழங்கல் வழியைத் தீர்மானிக்கிறது. பொருட்கள் அதிகமான புவியியல் பரப்பில் விநியோகிக்கப்பட்டால் அதிக எண்ணிக்கையிலான இடைநிலையர் வேண்டும். குறைந்த பரப்பளவில் மட்டுமே வினியோகிக்கப்பட்டால் இடைநிலையரின்றி நேரடியாகவே விநியோகிக்கலாம்.

### 3. நுகர்வோர் எண்ணிக்கை

சில வாடிக்கையாளர்களால் மட்டும் பெருமளவு பொருட்கள் வாங்கப்படுமானால் மையப்படுத்தப்பட்ட விநியோக அமைப்பே போதுமானது. பெருமளவு நுகர்வோரால் குறைந்த அளவுப் பொருட்கள் மட்டுமே வாங்கப்படுமானால் அதிக எண்ணிக்கையிலான இடைநிலையர் தேவைப்படுவர்.

### 4. இடைநிலையர் காரணி

அனுபவமுள்ள மற்றும் அதிக அளவில் பொருட்களை விற்கும் திறமையுடைய இடைநிலையர் மட்டுமே உற்பத்தியாளரால் விரும்பப்படுவர். இடைநிலையர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பொருள்களின் அடக்க விலையும் அதிகரித்து விடும். எனவே குறைந்த எண்ணிக்கையிலான இடைநிலையர்கள் மட்டுமே பொருள்களை விநியோகிக்கப் பயன்படுத்த வேண்டும். விநியோகச் செலவைக் குறைப்பதன் மூலம் விற்பனை விலையைக் குறைக்கின்ற போட்டியாளரே அதிக எண்ணிக்கையிலான பொருட்களை விற்க இயலும். இடை நிலையர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது உற்பத்தியாளருக்கு அதிகப் பிரச்சனைகளை உருவாக்கி விடும். குறைந்த எண்ணிக்கையிலான இடைநிலையராலேயே தரமான நுகர்வோர் சேவையை வழங்க முடியும். சில பகுதிகளில் இடைநிலையர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. மற்றச் சில இடங்களில் உற்பத்தியாளரின் கொள்கைகள் இடைநிலையரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

### 5. தயாரிப்பாளரின் திறன்

நிதிவளம் நிறைந்த உற்பத்தியாளர் உயர் தொழில் நுட்ப வழங்கல் வழியினை உருவாக்கிப் பொருட்களின் அடக்க விலையினைக் குறைக்கிறார். பெரு நகரங்கள், மற்றும் நகரங்களில் கிளைகளை நிறுவி அதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான பொருட்களை விற்பனை செய்கின்றனர். நுகர்வோர் எதிர்பார்க்கும் அனைத்துத் தரமான சேவைகளையும் நல்குகின்றனர். சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தனது உற்பத்திப்பொருட்களை விநியோகிக்க இடைநிலையரின் உதவியினை நாடுகின்றனர். ஒரே உற்பத்தியாளரின் பல்வேறு உற்பத்திப் பொருட்களை விநியோகிக்க வேண்டியிருப்பின் நீண்ட விநியோக அமைப்பு முறை தேவைப்படுகிறது. விநியோகச் செலவைப் பல்வேறு பொருட்களுக்குப் பகிர்ந்து கொள்கின்றனர்.

### 6. வழங்கல் வழியின் செலவும், நேரமும்

இடைநிலையர் வழங்கும் தரமான சேவையுடன் வழங்கல் வழியின் செலவினம் தொடர்புடையது. சாதாரணமான பொருட்கள் சிக்கனமான விலையில் உரிய நேரத்தில் நுகர்வோரைச் சென்றடைய வேண்டும்.

### 7. பொருளுக்கான சேவைகளின் தேவை

நிறுவுதல், இயக்கிக் காண்பித்தல் முதலான சேவைகள் தேவைப்படும் இயந்திரச் சாதனங்கள்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 225 2/17/2021 3:12:38 PM

போன்றவற்றை விநியோகிக்கக் குறைந்த அளவிலான வழங்கல் வழி தான் உகந்தது. உற்பத்தியாளரால் அல்லது அவரால் பயிற்று விக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் தேவையான தொழில் வழியே இவ்வகை பொருட்களுக்குப் போதுமானது.

### 8. பொருளின் வாழ்க்கை சுழற்சி

ஏற்கனவே சந்தையில் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்களுக்குச் சாதாராண வழங்கல் வழியே போதுமானது, ஆனால் சந்தையில் புதிதாக அறிமுகமாகும் பொருட்களுக்கு அனுபவமுள்ள இடைநிலையர் மூலம் சந்தை இடல் வேண்டும்.

## 23.04 இடைநிலையர்கள்

தொடக்க நிலை உற்பத்தியாளரிடமிருந்து இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர்கள் ஆவர்.

இத்தகு பரிமாற்றப்பணியில் ஈடுபட்டுள்ள இடை நிலையர்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. வணிக முகவர்கள்
2. வியாபார இடைநிலையர்கள்

## 23.05 வணிக முகவர்கள்

வணிக முகவர்கள் பணி வழி இடைநிலையர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஒரு வியாபாரி தம் சார்பாகப் பொருட்களை வாங்கவும், விற்கவும் இவரை நியமிக்கிறார். இவருக்குப் பொருட்களை அடமானம் செய்து கடன் பெறவும் உரிமையுண்டு. பொருட்களுக்கு உரிமையாளர் ஆக உரிமையில்லை. இவர் செய்யும் வியாபாரத்தின் அடிப்படையில் இவர் 'கழிவு' பெறுகிறார்.

### வணிக முகவர்களின் வகைகள்

1. தரகர்கள்
2. தன் பொறுப்பு முகவர்கள்
3. கழிவு முகவர்கள்
4. பிணை முகவர்கள்
5. ஏலமிடுநர்
6. பண்டகக் காப்பாளர்கள்

### 1. தரகர்கள்

மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி வியாபாரத்தை இலாபகரமாக நிறைவேற்றி அதற்கெனக் கழிவு பெறும் நபரையே தரகர் என்பர். அவரது சேவைக்கு வழங்கப்படும் ஊதியம் 'தரகு' ஆகும். அவர் வாங்குபவரையும், விற்பவரையும் ஒன்றிணைந்து பேரத்தை முடித்து ஒப்பந்தத்தை உறுதி செய்கிறார். பொருளின் உரிமையாளர் தரகருக்குப் பொருளின் உடைமையையோ, உரிமையையோ அளிப்பதில்லை. ஒப்பந்த முடிவுகளுக்கும், பொறுப்புகளுக்கும் இவர் ஒரு போதும் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்பதில்லை.

ஆடைகள், அறைகலன், உணவு , மரப்பொருட்கள், இரும்பு எஃகு பொருட்கள் ஆகியவை தரகர் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. பொருளின் உரிமையாளர் வெவ்வேறு பகுதிகளுக்கு அப்பகுதியில் உள்ள தரகரை நியமிக்கின்றனர். எனவே அவர்களுக்குப் பொருள் குறித்த தொழில் தொடர்புகள் நிறைய உள்ளன. பெரும்பாலும் ரியல் எஸ்டேட் எனப்படும் வீட்டு மனை, நிலம் விற்பனை செய்யும் தொழிலில் வாடிக்கையாளர்கள் தரகர்களை அமர்த்துகின்றனர். இத்தரகர் வாங்குபவருக்கும், விற்பவருக்கும் இடையில் செயல்படுகிறார்.

### 2. தன் பொறுப்பு முகவர்கள்

உற்பத்தியாளர் தம் பொருளை விற்பனை செய்யப் பொருட்களை ஒப்படைத்து நியமனம் செய்யப்படும் வணிக முகவர் தன் பொறுப்பு முகவர் ஆவார். பொருட்களின் உரிமையைப் பெறாமல் பொருட்களைப் பெற்று இருப்பு வைத்துக் கொண்டு செயல்படுகிறார். இவர் பொருளின் உரிமையாளர் பெயரை வெளியிடாமல் தன் பொறுப்பில் பொருள்களைத் தனது பெயரிலிலேயே விற்பனை செய்கிறார். இவர் தாம் விற்கும் பொருளுக்குரிய பணத்தைத் தாமே பெற்று இரசீது வழங்கும் உரிமை உடையவர். இவரது நடவடிக்கைகளுக்கு இவரே பொறுப்பாவார். இவரது நடவடிக்கைகளுக்காக இவர் மற்றவர் மீதும், மற்றவர்கள் இவர் மீதும் வழக்குத் தொடுக்க முடியும். தனக்குச் சேரவேண்டிய கழிவு முதலான தொகைக்காகத் தன் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொருள் மீது பற்றுரிமை உள்ளவர்.

### 3. கழிவு முகவர் அல்லது அனுப்பீடு பெறுநர்

தனக்கு கிடைக்கும் கழிவிற்காகப் பொருட்களை வாங்கி விற்பவரே கழிவு முகவர் ஆவார். இவரது நடவடிக்கை தொடர்பான அனைத்து இடர்களையும் பொருளின் உரிமையாளர் ஏற்கிறார். இவர் எவ்வித



XI_Tamil_commerce_16-25_148-254.indd 226 2/17/2021 3:12:38 PM

இடரையும் ஏற்பதில்லை. எனினும் இவர் தரகரிடமிருந்து மேம்பட்டவராக உள்ளார். விற்பனை விலை மற்றும் விற்பனை தொடர்புடைய முடிவுகளை எடுக்க உரிமைபெற்றவர். கழிவு முகவர் பொருள் பற்றிய சிறப்பறிவும் சந்தைநிலவரங்கள் குறித்து நிபுணத்துவமும் உடையவர். இவர் பொருளின் உரிமையைப் பெறுவதில்லை எனினும் பொருளைப் பெற்றுத் தனது பொறுப்பில் வைத்துக்கொண்டு தன் பெயரிலேயே விற்பனை செய்கிறார்.

### 4. பிணை முகவர்

எந்த ஒரு முகவர் கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருளுக்கு உரிய விலையை வசூலித்துத் தருவதாகத் தன்னுடைய முதல்வருக்கு உத்தரவாதம் அளிக்கிறாரோ அவரே பிணை முகவர் ஆவார். கடனுக்குப் பொருட்களை வாங்கியவர் உரிய விலையைச் செலுத்தத் தவறும் போது அந்த நட்டத்தைப் பிணை முகவரே ஏற்கிறார். இதற்காக அவருக்கு வழக்கமாக வழங்கப்படும் கழிவுடன் கூடுதலாக 'பிணை கழிவு' வழங்கப்படுகிறது. பிணை முகவர் கடன் விற்பனை செய்யும் போது வாங்குபவரின் நாணயத்தன்மை, நம்பகத்தன்மை, திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து பின் விற்பனை செய்கிறார்.

### 5. ஏலதாரர்

பொருட்களின் உரிமையாளர் சார்பாகப் பொருட்களை ஏலத்தின் மூலம் விற்றுத்தரும் பணியை மேற்கொள்பவரே ஏலதாரர் ஆவார். ஏல விற்பனை தொடர்பான விபரங்கள் தெளிவாக முன் கூட்டியே விளம்பரம் செய்யப்படவேண்டும். ஏலப்பொருட்கள், ஏலம் நடைபெறும் இடம், தேதி, நேரம், ஏலம் எடுக்கும் விதிமுறைகள் முதலானைவை முன்னதாகவே செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் ஒலி பரப்பு சாதன அறிவிப்புகள் மூலம் பொது மக்களுக்குத் தெரிவித்து விட வேண்டும். இந்த ஏல வியாபாரம் இரு வகைப்படும். அவை ஒதுக்கீட்டு ஏல முறை ஒதுக்கீடற்ற ஏல முறை என அழைக்கப்படும்.

ஒதுக்கீட்டு ஏல முறை என்பது பொருளின் உரிமையாளர் நிர்ணயம் செய்த குறைந்தபட்ச விலைக்குக் கீழே ஏலம் கேட்கப்படுமானால் அப்பொருள் விற்கப்படமாட்டாது. ஒதுக்கீடற்ற ஏல முறை என்பது அதிகபட்ச விலைக்கு ஏலம் கேட்பவருக்குப் பொருளை விற்க ஏலமிடுபவர் கடமைப்பட்டவர். ஏலதாரர் உரிமையாளர் விரும்பிய தொகைக்கு ஏலம் கேட்கப்படும் போது ஏலதாரர் மேசையின் மீது மரச் சுத்தியலால் ஒரு தட்டுத் தட்டி ஒலிப்பணியை முடித்துவைப்பார். இதற்கு ஏல முடிவு விலை (Knocked down price) என்று பெயர் அதிகபட்ச விலை ஏற்கப்பட்டவுடன் ஏலதாரர் பொருளை வாங்குபவருக்கும், விற்பவருக்கும் இடையில் முகவராக இருந்து விற்பனைப் பணியை முடித்து வைப்பார். அவரின் இப்பணிக்குப் பொருளின் உரிமையாளரிடமிருந்து தமக்குரிய கழிவுத் தொகையைப் பெற்றுக் கொள்வார். ஏலத்திற்கு முன்பே விற்பனையாளருக்கும் ஏலதாருக்கும் இடையே கழிவுத் தொகை குறித்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருக்கும். அதனடிப்படையில் ஏலதாரர் செய்து கொடுத்த விற்பனைக்குக் கழிவு பெறுகிறார்.

### 6. பண்டகக் காப்பாளர்

பண்டகக் காப்பக உரிமையாளர் தமது பண்டகச் சாலையில் வியாபாரியின் பொருளை வைத்துக் காப்பிடுவதற்காகப் பொருட்களைப் பெற்றுக் கொள்கிறார். மிகுந்த கவனத்துடனும், பொறுப்புணர்வுடனும் அப்பொருளைத் தமது பண்டகச்சாலையில் பாதுகாக்கிறார். அவரின் இப்பணிக்காக ஒரு தொகை ஊதியமாக வழங்கப்படும். தமக்குரிய தொகை கிடைக்காத போது அப்பொருளைத் தம்மிடமே வைத்துக்கொள்ள அப்பொருள் மீது இவருக்கு 'பற்றுரிமை' உண்டு. பொருளின் உரிமையாளரிடமிருந்து பாதுகாப்பாக வைப்பதற்காகவும் பெற்றுக் கொள்ளும் பொருள்களுக்கு 'பண்டகக் காப்பாளர் இரசீது (அ) சான்றிதழ் எனும் இரசீது வழங்குகிறார். பண்டகம் வைத்திருப்பவர் பொருளைச் சேமக்காப்பு செய்வதற்காகப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை ஆவணமே பண்டகக் காப்பாளர் இரசீது ஆகும். எனினும் இது சரக்குரிமை ஆவணம் ஆகாது. "பண்டகக் காப்பாளர்" பண்டகச் சான்றாணை" வழங்கினால் அது சரக்குரிமை ஆவணமாகக் கருதப்படும்.



### வியாபார இடைநிலையர்கள்

வியாபார இடைநிலையர் என்பவர் இலாபம் பெறும் நோக்குடன் தமது பெயரிலேயே பொருளை வாங்கி விற்கும் இடையீட்டாளர் ஆவார். பொருட்களின் உரிமையையும் உடைமையையும்

பெற்றுக் கொண்டு பொருட்களை விற்பனை செய்கின்றனர். அவர்கள் தமது பெயரிலேயே செயல்பட்டு வியாபாரத்தில் ஏற்படும் இடர்களை ஏற்கின்றனர். வியாபார இடைநிலையர்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மொத்த வியாபாரி
2. சில்லறை வியாபாரி

### வியாபார மொத்த விற்பனையாளர்

இவர்கள் பொருட்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ளும் மொத்த வியாபாரிகள் ஆவர். சில நேரங்களில் விநியோகிப்பாளர், விற்பனையாளர் ஆகவும் செயல்படுகின்றனர். இவர்களை முழு சேவை மொத்த வியாபாரி, வரையறுக்கப்பட்ட சேவை மொத்த வியாபாரி என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

### 1. முழு சேவை மொத்த வியாபாரி

முழு சேவை மொத்த வியாபாரி என்பவர் வாடிக்கையாளருக்குப் பல்வேறு பரந்த பணிகளைச் செய்பவர் ஆவார். பொருட்களை வைப்பிடுதல், பண்டகசாலைகளை ஏற்படுத்துதல், வாங்குபவருக்குக் கடனுதவி அளித்தல், நுகர்வோருக்கு உதவி விற்பனை பணியாளர்களைப் பணியமர்த்தல், மற்றும் வாடிக்கையாளர்களுக்குச் சரக்குகளை வழங்குதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

### 2. வரையறுக்கப்பட்ட சேவை மொத்த வியாபாரி

வரையறுக்கப்பட்ட சேவை மொத்த வியாபாரி என்பவர் வாடிக்கையருக்குச் சில குறிப்பிட்ட சேவைகளை மட்டுமே செய்து பொருள்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்பவர் ஆவார். வாடிக்கையாளருக்குப் பொருள்களை அவருடைய இல்லங்களுக்கே சென்று வழங்குதல், கடன் உதவி செய்தல், விற்பனைப் பணியாளரைப் பணியமர்த்துவது முதலான சேவைகளை இவர் செய்வதில்லை. பொருட்களைப் பெருமளவில் மொத்தமாகக் கொள்முதல் செய்வதால் பெருமளவில் தள்ளுபடி பெற்றுக் குறைவான விலையில் பொருள்களை வாங்குகிறார். எனவே இவரால் மற்ற சில்லறை வியாபாரியின் விற்பனை விலையைக் காட்டிலும் குறைவான விலைக்குப் பொருட்களை விற்க முடிகிறது.

### 3. உடைமை ஏற்காமல் உரிமை மாற்றும் வியாபாரிகள்

இவர்கள் மற்றொரு வகை வரையறுக்கப்பட்ட சேவை மொத்த வியாபாரிகள் ஆவார்கள். பொருளின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் இவர்கள் உடமையைப் பெற்றுக் கொள்வதில்லை. பொருட்களைக் கையாள்வதுமில்லை. விற்பனையாளரிடமிருந்து பெருமளவில் ஆணைகளைப் பெற்று அவற்றை நேரடியாக உற்பத்தியாளருக்கு அனுப்பிப் பொருள் விற்பனையாளரைச் சென்றடைய ஏற்பாடு செய்து அதற்குரிய கழிவு பெறுகின்றனர்.

### 4. அஞ்சல் வழி மொத்த வியாபாரி

அஞ்சல் வழி மொத்த வியாபாரி என்பவர் விலைப்பட்டியல் தயாரித்து வாங்கத் தகுதியுள்ள நபர்களுக்கு அனுப்பிவைத்து அதன் மூலம் ஆணைகளைப் பெற்றுப் பொருட்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

### 5. வாகனத் தனி வணிகர்கள் (அ) வாகன மொத்த வியாபாரிகள்

இவர்கள் அழுகிக் கெடும் தன்மையுள்ள (உதாரணம் மீன்) பொருட்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று வாகனங்களில் வைத்தே நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு விற்று விடுகின்றனர்.

### 6. தனி வணிகர்கள்

புத்தகங்கள் பருவ இதழ்கள், உள்ளாடைகள், போன்ற சிறப்பு தயாரிப்பு பொருட்களைத் தமது சொந்தக் காட்சிப் பெட்டிகளில் வைத்து மற்ற விற்பனையகங்களில் வைத்து விடுகின்றனர். பொருளின் உரிமை இவரது வசமே உள்ளது. விற்பனையகங்களின் உரிமையாளர் இவற்றை விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை சென்று எத்தனை எண்ணிக்கையிலான பொருட்கள் விற்பனை செய்யப்படுள்ளதோ அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொண்டு இரசீது வழங்குகின்றனர்.

## 23.06 மொத்த வியாபாரம்

### பொருள்

பொருட்களை மிகப்பெரிய அளவிலும், மொத்தமாகவும் வாங்கி, விற்கும் வியாபாரம் மொத்த வியாபாரம் என ஆகும். மொத்த வியபாரத்தில்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 228 2/17/2021 3:12:38 PM



ஈடுபட்டுள்ளோரை மொத்த வியாபாரிகள் எனலாம். மொத்த வியபாரிகள் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக மொத்தமாக வாங்கி அவற்றைச் சிறிய அளவில் சில்லறை வியாபாரிகளுக்கோ அல்லது தொழிற்சாலை உபயோகிப்பாளருக்கோ விற்கிறார். மொத்த வியாபாரி என்பவர் முதல் இடையீட்டாளர் ஆவார். இவர் உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார். மொத்த வியாபாரி பெரிய அளவில் ஆணைகளை அளித்து உற்பத்தியாளரிடமிருந்து மொத்தமாக பொருட்களைப் பெற்று அவற்றைச் சிறிய அளவில் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கின்றனர். இவ்வகையில் அவர் உற்பத்தியாளர்களுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் சேவை புரிகிறார்.

### வரைவிலக்கணம்

கண்டிஃப் மற்றும் ஸ்டில் ஆகியோரது கூற்றின் படி "மொத்த வியாபாரிகள் வணிகப் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து மொத்தமாக வாங்கி. சில்லறை வியாபாரிகளுக்கோ அல்லது பிற வியாபாரிகளுக்கோ விற்பனை செய்வார்களே தவிர நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்ய மாட்டார்".

"ஈவ்லின் தாமஸ் என்பவரது கூற்றின் படி ஒரு உண்மையான மொத்த வியாபாரி உற்பத்தியாளராகவோ சில்லறை வியாபாரியாகவோ இல்லாமல் இந்த இருவருக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்பவராவார்".

## 23.07 மொத்த வியாபாரியின் சிறப்பியல்புகள்

பின்வருபவை மொத்த வியாபாரியின் சிறப்பியல்புகள் ஆகும்.

1. மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்
2. மொத்த வியாபாரிகள் பொருட்களை மொத்தமாக வாங்கிச் சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. மொத்த வியாபாரிகள் ஒரு குறிப்பட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கினறனர்.
4. பொருட்களை விநியோகம் செய்ய முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
5. இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
6. மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு கடனுதவி அளிக்கின்றனர்.
7. மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவி செய்து தருகின்றனர்.
8. நகரங்கள் பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

### மொத்த வியாபாரியின் வகைகள்

#### 1. தயாரிப்பாளர் மொத்த வியாபாரி

இவ்வகை மொத்த வியாபாரி பொருள்களைத் தயாரிப்பதுடன் கூடுதலாக மொத்த வியாபாரப் பணிகளிலும் ஈடுபடுவார். அவர் தான் தயாரிக்கும் பொருட்களை மொத்த வியாபாரம் செய்வதோடு மற்றதயாரிப்பாளர்கள்தயாரிக்கும்பொருட்களையும் மொத்த வியாபாரம் செய்வார்.

#### 2. சில்லறை மொத்த வியாபாரி

இவ்வகை மொத்த வியாபாரிகள் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய இரண்டையும் மேற்கொள்வர். உற்பத்தியாளரிடமிருந்து பெருமளவில் கொள்முதல் செய்து இருப்பு வைத்து அவற்றைத் தனது சில்லறை விற்பனையகங்கள் மூலம் நேரடியாக நுகர்வோருக்கு விற்பார்கள். எடுத்துக்காட்டு சூப்பர் பஜார்.

#### 3. வணிக மொத்த வியாபாரி

இவ்வகை மொத்த வியாபாரி பொருட்களை உற்பத்தி செய்வதோ, அவற்றை நேரடியாக நுகர்வோருக்கு விற்பதோ இல்லை. இவர். முறையான மொத்த வியாபாரி அல்லது தரமான மொத்த வியாபாரி ஆவார். இவர் உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை மொத்தமாக வாங்கி அவற்றைச் சிறிய



XI_Tamil_commerce_16-25_148-254.indd 229 2/17/2021 3:12:39 PM

அளவில் சில்லறை வியாபாரிக்கு விற்பனை செய்வார். சிறப்பீடுபாட்டின் அடிப்படையில் மொத்த வியாபாரிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### அ. பொது வர்த்தக மொத்த வியாபாரிகள்


இவ்வகை மொத்த வியாபாரிகள் மளிகை, மின் சாதனப் பொருட்கள், மருந்துகள், ஆடை வகைகள் எனப் பல்வேறு வகையான பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆவார்கள். இவர்களது வணிகத்தில் இவர்களுக்குள்ள சிறப்பீடுபாடு காரணமாக இவர்களின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

### ஆ. ஒரே வகைப் பொருட்களின் மொத்த வியாபாரிகள்

இவ்வகை மொத்த வியாபாரிகள் ஒரே வகைப் பொருளின் பல்வேறு தயாரிப்பாளர்களின் தயாரிப்புகளை வாங்கி விற்கும் நடைமுறை பணியைச் செய்பவர்கள். எடுத்துக்காட்டாக குளிர்சாதனப்பெட்டி விற்பனை செய்யும் மொத்த வியாபாரி பல்வேறு தயாரிப்பாளர்களின் தயாரிப்புகளையும் வைத்திருப்பார்.

### இ. சிறப்புப்பொருள் மொத்த வியாபாரி

இவ்வகை மொத்த வியாபாரிகள் ஒரே ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டும் விற்பனை செய்யும் சிறப்புப் பொருள் விற்பனையாளர் ஆவார். எடுத்துக்காட்டாக ஒரு மொத்த வியாபாரி டாடா டீ மட்டும் விற்பனை செய்தால் அவர் சிறப்புப் பொருள் மொத்த வியாபாரி ஆவார்



## 23.08 சில்லறை வியாபாரம்

### பொருள்

நுகர்வோர்களுக்குச் சிறிய அளவில் பொருள்களை விநியோகம் செய்வதில் ஈடுபட்டுள்ள வணிகம் சில்லறை வணிகம் எனப்படும். பொருள்களை உற்பத்தி செய்த உற்பத்தியாளரிடமிருந்து இறுதிநிலையில் உள்ள நுகர்வோர் அல்லது பொருளை வாங்கிப்பயன்படுத்துவோருக்கு பொருள்களைப் பரிமாற்றம் செய்யும் பணியில் இறுதிநிலையில் இருந்து பொருட்களை விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்வது சில்லறை வியாபாரம் ஆகும். நேரடியாக நுகர்வோருக்குப் பொருட்களை விற்பனை செய்வதே சில்லறை வணிகம் ஆகும். பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்வதில் சில்லறை வியாபாரம் பல்வேறு பணிகளைச் செய்கிறது. பொருட்களின் பல்வேறு வகைகளைக் கொள்முதல் செய்து, அவற்றை ஒன்றுதிரட்டி, முறையாக இருப்பு வைத்துச் சிறு அளவில் விற்பனை செய்வது சில்லறை வணிகம் ஆகும்.

**சில்லறை வியாபாரம்**



### வரைவிலக்கணம்

ஈவ்லின் தாமஸ் என்பவரது கூற்றின்படி "நுகர்வோரின் தேவைகளைச்செவ்வனே பூர்த்தி செய்யும் பொருளாதாரச் சங்கிலியில் இறுதியாக இருப்பவர் சில்லறை வியாபாரி ஆவார்".

கண்டிஃ மற்றும் ஸ்டில் ஆகியோரது கூற்றுப்படி ஒரு சில்லறை வியாபாரி என்பவர் வியாபாரியாகவும் சில நேரங்களில் முகவராகவும் செயல்பட்டுச் சிறு நுகர்வோருக்கு விற்பனை செய்வதையே தனது முக்கியப் பணியாகக் கொண்டுள்ளார்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 230 2/17/2021 3:12:39 PM



## 23.09 சில்லறை வியாபாரியின் பண்பு நலன்கள்

பின்வருபவை சில்லறை வியாபாரியின் பண்பு நலன்கள் ஆகும்.

1. சில்லறை வியாபாரிகள் பல்வேறு பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.
2. சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகப் பொருட்களை வாங்கி அவற்றைச் சிறு அளவில் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.
3. முக்கியச் சந்தைப் பகுதிக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயோ சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.
4. பொதுவாக மொத்த வியாபாரியிடம் கடன் அடிப்படையில் சரக்குகளை வாங்கி, நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு விற்கின்றனர்.
5. சில்லறை வியாபாரிகள் நுகர்வோரிடம் நேரடித்தொடர்பிலும், உற்பத்தியாளரிடம் இருந்து விலகியும் (மொத்த வியாபாரி மூலம் தொடர்பு கொண்டு) இருப்பார்.

## 23.10 மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

### 1. இணைப்புச் சங்கிலி

மொத்த வியாபாரி உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார். வழங்கல் வழியில் மொத்த வியாபாரி முதல் இணைப்புச் சங்கிலி ஆவார். சில்லறை வியாபாரி இறுதி இணைப்புச் சங்கிலி ஆவார்.

### 2. செயல்பாட்டு அளவு

மொத்த வியாபாரம் பெருமளவில் நடப்பதால் தொழிலுக்கு மிகப் பெரும் அளவு முதல் தேவைப்படுகிறது. ஆனால் சில்லறை வியாபாரம் சிறு அளவில் மட்டுமே நடப்பதால் சிறிய அளவு முதல் தொகையே போதுமானது.

### 3. கிடைக்கும் பொருள்கள்

மொத்த வியாபாரி ஒரே வகையான பொருட்களை மட்டுமே வாங்கி விற்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி பலதரப்பட்ட நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பலவிதமான பொருட்களை வாங்கி விற்பார்.

### 4. செயல்பாடு

மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் விற்பனை செய்கிறார். ஆனால் சில்லறை வியாபாரிகள் நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்கிறார்.

### 5. விற்பனையின் நோக்கம்

மொத்த வியாபாரி மறுவிற்பனைக்காகப் பொருட்களை விற்பனை செய்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி நுகர்வுக்காகப் பொருட்களை விற்பனை செய்கிறார்.

### 6. அளிப்பின் மூலம்

மொத்த வியாபாரிகள் பொருட்களை முகவர் அல்லது மொத்த வியாபாரியிடம் அதிக எண்ணிக்கையில் பொருள்களை வாங்குகின்றனர். ஆனால் சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகள் அல்லது அவரது முகவரிடம் சிறு எண்ணிக்கையில் பொருட்களை வாங்குகின்றனர்.


### 7. இடவமைப்பு

ஒரு மொத்த வியாபாரி தனது வியாபாரத்தைப் பெரிய வணிக நகரங்களில் நிறுவி அதைச் சுற்றியுள்ள மற்றப் பகுதிகளுக்கும் பரவச் செய்கிறார். ஆனால் ஒரு சில்லறை வியாபாரி சிறு கிராமம் முதல் பெரு நகரங்கள் வரை தனது வணிக நிலையத்தை நிறுவி அக்குறிப்பிட்ட பகுதியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.

பொருள்களையும் சேவைகளையும் விநியோகிப்பதை வழங்கல் வழிகள் எளிதாக்குகிறது.பொருள்களும் சேவைகளும் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்குத் தடங்களின்றி சென்றடைய வழங்கல் வழிகள் மிக முக்கியப் பங்காற்றுகிறது.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 231 2/17/2021 3:12:39 PM



**சாதனையாளர் வெற்றிக் கதை**

**முனைவர் ஆரோக்கியசாமி வேலுமணி**

*"நிலமில்லா விவசாயியின் மகனாக வாழ்க்கையைத் தொடங்கி ₹ 2158 கோடிக்கு அதிபதியான சக்கரவர்த்தி".*

திரு. வேலுமணி பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் காலத்தில் அரசின் சலுகைகள் கிடைத்தால் மட்டுமே படிக்க முடியும் என்கிற அளவிற்கு ஏழ்மையில் இருந்தார். இன்று இந்தியா, வங்காளம், நேபாளம் உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளில் 1,122 கிளைகளுடன் செயல்படும் உலகின் மிகப் பெரிய தைராய்டு பரிசோதனை நிறுவனத்தின் அதிபராக உயர்ந்திருக்கிறார்.

1979ல் கோயம்புத்தூரில் உள்ள ஜெமினி காப்சூல்ஸ், நிறுவனத்தில் மாதம் ₹ 150 ஊதியம் பெறும் வேதியியலராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். மூன்று ஆண்டுகளில் அந்நிறுமம் வியாபார ரீதியாக வீழ்ச்சி அடைந்த போது தன்னுடைய பணியை இழந்தார்.

BARC யில் 14 ஆண்டுகள் பணியாற்றிய பின் அவர் அப்பதவியைத் துறந்தார். தனக்குக் கிடைத்த சிறப்பறிவைப் பயன்படுத்தித் தைராய்டு நோயைக் கண்டுபிடிக்கும் பரிசோதனைக் கூடத்தை நிறுவ முடிவெடுத்தார். அவர் தனது 37 வயதில் தனக்குக் கிடைத்த ஓய்வூதியப் பணிக்கொடை ₹ 1,00,000 த்தை முதலீடு செய்து தெற்கு மும்பை பைகுல்லாவில் தனது தைரோ கேர் பரிசோதனைக் கூடத்தை நிறுவினார்.

மே.2006 – நிலவரப்படி தைரோ கேர் நிறுவனத்தின் மதிப்பு ₹ 3377 கோடி ஆகும். தைரோ கேர் நிறுவனத்தின் மொத்தப் பங்குகளில் 64% பங்குகள் வேலுமணிக்கு சொந்தமானது. அவரது பங்கின் பண மதிப்பு ₹ 2158 கோடி ஆகும்.

ஆனால் வேலுமணி மற்றும் அவரது குழுவினருக்கு இச்சாதனை முடிவன்று. தைரோகேர் நிறுவனம் கேன்சர் நோயைக் கண்டறியும் நிறுவனம் ஒன்றைத் தனது துணை நிறுவனம் ஆகத் தோற்றுவித்துள்ளது.

**கலைச்சொற்கள்**

வழங்கல் வழிகள்
ஏலமிடுநர்
வணிக முகவர்
வியாபார இடைநிலையர்
மொத்த வியாபாரிகள்
சில்லறை வியாபாரிகள்
சில்லறை வியாபாரம்,

**நமது சிந்தனைக்கு**

1. மாணவர்கள் அருகில் உள்ள மொத்த வியாபார நிலையத்துக்குச் சென்று அங்கு நடைபெறும் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்தல்
2. மாணவர்கள் அருகில் இரு சக்கர வாகன விற்பனை நிலையத்திற்குச் சென்று அங்கு என்ன வகையான வழங்கல் வழி பின்பற்றப்படுகிறது எனத் தெரிந்து கொள்ளல்

**மேலும் அறிவதற்கு**

1. மாணவர்கள் எதிர்காலத்தில் வளர்ச்சியடைய உள்ள SoHo (Small office – Home Office) முறையைப் பற்றியும்.எதிர் காலத்தில் அதன் முக்கியத்துவம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்
2. மாணவர்கள் எதிர் காலத்தில் வளர்ச்சியடையக்கூடிய இணைய வழி விற்பனை (Online trading) முறையின் முக்கியத்துவம் பற்றியும் எதிர்காலத்தில் அதன் வளர்ச்சி பற்றியும் தெரிந்துக்கொள்ளல்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 232 2/17/2021 3:12:40 PM

## சூழ்நிலை ஆய்வு

ரமா இண்டஸ்ட்ரீஸ் எனும் நிறுவனம் நாகரீகக் காலணிகளைத் தயாரிப்பதற்காகக் கூட்டுருவாக்கம் செய்யப்பட்டது. இந்த நிறுவனம் காலணி தயாரிப்புக்களான சந்தையில் புதிய நிறுவனம் ஆகும். அந்நிறுவனம் மாவட்டந்தோரும் மொத்த வியாபாரிகளை நியமித்து அவர்களே மாவட்டத்தின் பிரத்தியேக விற்பனையாளராகச் செயல்படுவார்கள் என வாய்மொழி உறுதியும் வழங்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அந்நிறுவனம் மொத்த வியாபாரி மூலம் இல்லாமல் நேரடியாகச் சில்லறை வியாபாரிகள் மூலம் விற்பனை செய்தால் போட்டியாளர்களின் விலையை எதிர்கொள்ள முடியும் விற்பனை அளவும் அதிகரிக்கும், இலாபமும் அதிகரிக்கும். அவர் நேரடியாக மொத்த வியாபாரிகள் நீக்கத்தை ஆதரித்தார்.

அ. நிறுவனம் விற்பனை மேலாளரின் ஆலோசனையை ஏற்கலாமா? நேரடியாகச் சில்லறை வியாபாரிகள் மூலம் விற்பனை செய்யலாமா?

ஆ. அதிக லாபம் ஈட்டுவதற்காக மொத்த வியாபாரிகளை நீக்கினால் அந்நிறுவனம் என்ன மதிப்புகளைப் புறந்தள்ளியதாகும்?

### பதில்கள்

அ. இல்லை அந்நிறுவனம் விற்பனை மேலாளரின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும். சில்லறை விற்பனையாளர்கள் மூலம் நேரடியாகப் பொருட்களை விற்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் புதிய பொருளை அறிமுகப்படுத்திச் சந்தையை உருவாக்குவதில் மொத்த வியாபாரிகள் தான் பெரு முயற்சி எடுத்துள்ளனர். ஏற்கனவே அந்நிறுவனம், மொத்த வியாபாரிகளுக்கு அம்மாவட்டத்தில் தாங்கள் பிரத்தியேக விற்பனையாளராகச் செயல்படலாம் என வாய்மொழி உறுதிமொழி அளித்திருப்பதால் அதைத் தற்போது மீறிச் சில்லறை வியாபாரிகளை நியமித்தால் அது நிறுவனத்தைப் பற்றிய மோசமான மதிப்பீடுகளை உருவாக்கி விடும். மேலும் அந்த மொத்த வியாபாரிகள் போட்டிப் பொருட்களைத் தீவிரமாக விற்பனை செய்ய நேரிட்டால் அந்நிறுவனத்தின் விற்பனை பாதிக்கப்பட்டு விடும்

ஆ. பரஸ்பர நம்பிக்கை, ஒற்றுமை, உறவு களுக்கான முக்கியத்துவம் ஆகிய மதிப்பீடுகள் புறந்தள்ளப்படும்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடைநிலையர் _________ ஆவார்.**

   *அ. உற்பத்தியாளர் ஆ. தரகர்*

   *இ. சில்லறை வியாபாரி ஈ. வாடிக்கையாளர்*

2. **வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?**

   *அ. மொத்த வியாபாரி*

   *ஆ. உற்பத்தியாளர்*

   *இ. சில்லறை வியாபாரி*

   *ஈ. வாடிக்கையாளர்கள்*

M8H5DJ

3. **உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் _________**

   *அ. உற்பத்தியாளர் ஆ. மொத்த வியாபாரி*

   *இ. சில்லறை வியாபாரி ஈ. நுகர்வோர்கள்*

4. **வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்வர் ____________**

   *அ. தரகர் ஆ. கழிவு முகவர்*

   *இ. விற்பனை முகவர் ஈ. இருப்பு வைத்திருப்பவர்*

5. **வியாபார இடைநிலையர்களை _________ வகைகளாகப் பிரிக்கலாம்.**

   *அ. மூன்று ஆ. இரண்டு*

   *இ. ஐந்து ஈ. நான்கு*

### விடைகள்

*1. இ 2 அ 3 ஆ 4 அ 5 ஆ*

### II. குறுவிடை வினாக்கள்.

1. *இடைநிலையர் என்பவர் யார்?*

2. *சில்லறை வியாபாரி வரைவிலக்கணம் தருக.*

3. தரகர் என்பவர் யார்?

4. வியாபார இடைநிலையரின் வகைகள் தருக.

5. வணிக முகவர்கள் என்பவர் யார்?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. வணிக முகவர்களின் வகைகள் யாவை?

2. மொத்த வியாபாரிகளின் பண்புநலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள் யாவை?

2. மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)

3. சில்லறை வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)



XI_Tamil_commerce_16-25_148-254.indd 234 2/17/2021 3:12:40 PM

# அலகு – 7 வியாபாரம்

அத்தியாயம்
# 24

# சில்லறை வியாபாரம் செய்தல்

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் – குறள் 754

M8Z52G

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. சில்லறை வியாபாரம் செய்தலின் பொருள் புரிந்துகொள்ள முடியும்
2. சில்லறை வியாபார அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்
3. தொழில் வர்த்தகச் சங்கங்களின் பங்கினை அறிய முடியும்

## 24.01 பொருள்

நுகர்வோருக்கு நேரடியாக பொருள்களையும் சேவைகளையும் சிறிய அளவில் விற்பனை செய்யும் நடைமுறை சில்லறை வியாபாரம் செய்தல் (Retailing) ஆகும்.

## 24.02 சில்லறை வியாபார அமைப்புகளின் வகைகள்

செய்யும் தொழிலின் அளவு, விற்கும் பொருள்களின் தன்மை, விலை மற்றும் சேவை மற்றும் தொழில் அமைப்பின் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**சில்லறை வியாபாரிகள்**

**சுற்றாடும் / நகரும் வியாபாரிகள்**

1. சுமை தூக்கி மற்றும் வாகனத்தில் விற்கும் வியாபாரிகள்
2. நடைபாதை வியாபாரிகள்
3. சந்தை வியாபாரிகள்
4. இடம் பெயர் வியாபாரிகள்

**நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள்**

1. தெருக்கடை வியாபாரிகள்
2. பொதுப் பண்டக சாலைகள்
3. ஒரே வகை பண்டக சாலைகள்
4. சிறப்பு பண்டக சாலைகள்
5. பயன்படுத்திய பொருட்கள் விற்போர்

**நிலையிட பேரளவு சில்லறை வியாபார அமைப்புகள்**

1. துறைவாரிப் பண்டகச் சாலைகள்
2. மடங்கு கடைகள்
3. சிறப்பங்காடிகள்
4. நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலைகள்
5. வாடகைக் கொள்முதல் முறை விற்பனை
6. அஞ்சல் வழி வியாபாரம்
7. தானியங்கி விற்பனை எந்திரங்கள்
8. வணிக வளாகங்கள்
9. தொலைத் தொடர்பு வழி சந்தை
10. இணையதள சந்தை



XI_Tamil_commerce_16-25_148-254.indd 235 2/17/2021 3:12:40 PM

அ. சுற்றாடும் அல்லது நகரும் வியாபாரிகள்

ஆ. நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள்

இ. நிலையிட பேரளவு சில்லறை வியாபாரிகள்

### I. சுற்றாடும் வியாபாரிகள்

வியாபாரம் செய்வதற்கென்று நிலையான இடமில்லாமல் வாடிக்கையாளர் இருக்குமிடங்களுக்கே சென்று விற்பனை செய்பவர்கள் சுற்றாடும் வியாபாரிகள் எனப்படுவர். இவர்களை நகரும் வியாபாரிகள் (Mobile Traders) என்றும் அழைப்பர். குறைந்த விலையுடைய அன்றாடம் பயன்படுத்தக்கூடிய காய்கறி, பழங்கள், மீன், துணிவகைகள், புத்தகங்கள் முதலானவற்றை இவ்வகையினர் விற்பனை செய்வர். இவ்வியாபாரத்திற்கு குறைந்த முதலீடு போதுமானது.



### 1. சுமை தூக்கி மற்றும் வாகனத்தில் விற்கும் வியாபாரிகள்

பொருள்களைதம்தலையிலோஅல்லதுமுதுகிலோ தூக்கிக்கொண்டு வீடு வீடாக நடந்து சென்று வியாபாரம் செய்பவர்கள் சுமை தூக்கி வியாபாரிகள் (Peddlers) என அழைக்கப்படுவர். ஏதேனும் ஒரு வசதியான வண்டியில் பொருட்களை வைத்துப் பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், குடியிருப்புகள் மற்றும் பொது இடங்களுக்குச் சென்று கூவிக்கூவி விற்பனை செய்பவர்கள் வாகனத்தில் விற்கும் வியாபாரிகள் (Hawkers) என்பர்.

### 2. நடைபாதை வியாபாரிகள்

வீதிகள் குறுக்கிடும் இடங்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக பூ, பழம், காய்கறி, புத்தகங்கள் போன்றவற்றைக் கொண்டுவந்து விற்பனை செய்பவர்கள் நடைபாதை வியாபாரிகள் எனப்படுவர்.



### 3. சந்தை வியாபாரிகள்

ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது தேதியிலோ (ஞாயிற்றுக்கிழமைகளில், வெள்ளிக்கிழமைகளில், பத்தாம் தேதியில்) என நடைபெறும் சந்தைகளுக்குச் சென்று விற்பவர்கள் **சந்தை வியாபாரிகள்** எனப்படுவர். குறைந்த விலையுடைய ஒரு குறிப்பிட்ட வகையான அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மட்டும் இவர்கள் வியாபாரம் செய்வர். எடுத்துக்காட்டு: பொள்ளாச்சி, இராணிப்பேட்டை மற்றும் மணப்பாறை ஆகிய இடங்களில் நடைபெறும் வாரச் சந்தைகள்.



### 4. இடம்பெயர் வியாபாரிகள்

மக்கள் நெருக்கம் மிகுந்த வியாபாரம் நடக்குமிடங்களில் தற்காலிகமாக கடை வைத்து சில நாட்கள் மட்டும் தங்கி இருந்து விற்பனை செய்பவர்கள் **இடம்பெயர் வியாபாரிகள்** எனப்படுவர். மேலும் இவர்கள் இடம் விட்டு இடம் சென்று வீட்டு உபயோகப்பொருட்களான துணிகள், பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், காலணிகள் ஆகியவற்றை விற்பது மற்றும் பழுதுபார்ப்புகள் செய்தல், முதலானவைகளில் ஈடுபடுபவர்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 236 2/17/2021 3:12:41 PM

## II. நிலையிட சில்லறை வியாபாரிகள்

நிலையான இடத்தில் கடை அமைத்து பொருட்களை வைத்து வியாபாரம் செய்யும் சில்லறை வியாபாரிகளே **நிலையிட சில்லறை வியாபாரிகள்** எனப்படுவர். நுகர்வோர்களை நோக்கி இடம் விட்டு இடம் பெயராது அதே இடத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து விற்பனை மேற்கொள்வர்.

இவர்கள் விற்பனை செய்யுமிடம், பொருட்களின் அளவு மற்றும் தன்மையைப் பொறுத்து இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ. நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள்

ஆ. நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள்

### நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள்

குறைந்த மூலதனத்தைக் கொண்டு அளவான பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஓர் இடத்தில் நிலையாக வியாபாரம் செய்பவர்கள் **நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள்** எனப்படுவர்.

#### 1. தெருக்கடை வியாபாரிகள்

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்களின் முனைகளிலோ, திரும்பும் இடங்களிலோ கடை அமைத்து ஆடைவகைகள், பொம்மைகள், தின்பண்டங்கள், குளிர்பானங்கள் போன்றவை விற்பவர்கள் **தெருக்கடை வியாபாரிகள்** என்பர். மொத்த வியாபாரிகள் மற்றும் உள்ளூர் முகவர்களிடம் பொருட்களை கொள்முதல் செய்து விற்பர்.



#### 2. பொதுப் பண்டகசாலை




நுகர்வோர் தங்கள் வீட்டின் அருகிலேயே தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஏற்றவாறு அனைத்து வகைப்பொருட்களையும் குறைந்த அளவில் வாங்கி வைத்து வியாபாரம் செய்யும் இடம் **பொதுப் பண்டகசாலை** எனப்படும். நுகர்வோர்களுக்கு வசதியாக பெரும்பாலான நேரங்களில் கடை திறந்திருக்கும். தெரிந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதியும் உண்டு. பல சரக்கு, மளிகை, அழகு சாதனங்கள், தின்பண்டங்கள், எழுதுபொருட்கள், குளிர்பானங்கள் உள்ளிட்டவை பொருட்கள் விற்பனை செய்வர்.

#### 3. ஒரே வகை பண்டகசாலை

ஒரு குறிப்பிட்ட வகை பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரே வகை பண்டகசாலை எனப்படும். ஆயத்த ஆடைகள் மட்டும் விற்கும் கடைகள்,காலனிகள் மட்டும் விற்கும் கடைகள் எழுதுபொருட்கள் மட்டும் விற்கும் கடைகள், அறைகலன் மட்டும் விற்கும் கடைகள் போன்றவை இதில் அடங்கும்.

#### 4. சிறப்பு பண்டகசாலைகள்

ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் **சிறப்பு பண்டகசாலைகள்** எனப்படும். இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர் முதலியன அடங்கும்.

#### 5. பயன்படுத்திய பொருட்கள் விற்போர்

பயன்படுத்திய பொருட்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் முதல் தரமல்ல என்று ஒதுக்கிய

பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வோர் **பயன்படுத்திய பொருட்கள் விற்போர்** என்படுவர். அறைகலன், புத்தகங்கள், பாத்திரங்கள், ஆடைகள், வாகனங்கள் உள்ளிட்டவை இவ்வாறு விற்கப்படுகின்றன.

### III. நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள்

அதிக மூலதனத்துடன் பேரளவு பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஒரு இடத்தில் பேரளவில் சில்லறை வியாபாரம் செய்யும் நிறுவனங்கள் **நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள்** எனப்படும்.

பேரளவு நிலையிடச் சில்லறை வியாபார நிறுவனங்கள் பின்வருமாறு.

1. துறைவாரிப் பண்டக சாலைகள்
2. மடங்குக் கடைகள்
3. சிறப்பங்காடிகள்
4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
5. வாடகைக் கொள்முதல் மற்றும் தவணைமுறை விற்பனை நிலையங்கள்
6. அஞ்சல் வழி விற்பனையகங்கள்
7. தானியங்கி விற்பனை எந்திரங்கள்
8. வணிக வளாகங்கள்
9. தொலைத் தொடர்புச் சந்தை
10. மின்னணு வழி வர்த்தகம்

#### 1. துறைவாரிப் பண்டக சாலைகள்

ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகைப் பொருட்களை விற்பனை செய்யும் வகையில் பல துறைகளைக் ஒரே கூரையின் கீழ் கொண்டு இயங்கி வரும் மிகப்பெரிய சில்லறை வியாபார அமைப்பே **துறைவாரிப் பண்டக சாலைகள்** எனப்படும். நிர்வாகச் செயல்பாடுகள் யாவும் பொது மேலாளர் அல்லது மேலாண்மை இயக்குநர் ஒருவரால் மேலாண்மை செய்யப்படும். அவர் அனைத்துத் துறைகளுக்கும் துறை மேலாளர்களை நியமிப்பார் கொள்முதல், விற்பனை மற்றும் கணக்கு பராமரிப்புகள் தனித்தனியாகவும் ஒட்டு மொத்தமாகவும் செய்யப்படும். எடுத்துக்காட்டு: ஸ்பென்சர்ஸ், சென்னை.



**சிறப்பியல்புகள்:**

**1. பேரளவு அமைப்பு;**

அதிக முதலீடு செய்து உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும் பெரிய சில்லறை வியாபார நிறுவனம் துறைவாரிப் பண்டசாலை ஆகும்.

**2. பல்பொருள் விற்பனை**

மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும் ஒரே இடத்தில் 'குண்டூசி முதல் வாகனம் வரை' விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன் பெறமுடியும். மேலும் ஒரே பொருளின் பல வகைகளும் இங்கு கிடைக்கும்.

**3. துறைகளின் ஒருங்கிணைப்பு**

பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையான பொருட்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.

**4. வாங்கும் வசதிகள்**

வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுதுபோக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால் குடும்பமாக வந்து பொருட்களை வாங்க முடிகிறது.

**5. மையக் கொள்முதல்**

அனைத்து வகைப் பொருள்களும் ஒரு மையத்தின் மூலம் நேரடியாகத் தயாரிப்பாளிடமிருந்து பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

**நன்மைகள்**

**1. வாங்கும் வசதிகள்**

தேவையான பொருட்களை வாங்க வெவ்வேறு இடங்களுக்குச் செல்லாமல் ஒரே இடத்தில் ஒரே கூரையின் கீழ் அனைத்தையும் வாங்கிக் கொள்ளலாம். நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகின்றன.

**2. மகிழ்வுடன் வாங்குதல்**

ஓய்வறைகள், உணவகங்கள், குழந்தைகள் விளையாட்டு வசதிகள் முதலியவை இங்கு இருப்பதால் மகிழ்வுடனும் மன நிறைவுடனும் வாடிக்கையாளர்கள் பொருட்கள் வாங்க முடிகிறது.

**3. மைய இடஅமைவு**

பொதுவாக துறைவாரிப் பண்டகச் சாலை நகரின் மையப்பகுதியில்தான் அமைந்திருக்கும். ஆகவே, நகரின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், பிற ஊர்களிலிருந்தும் நுகர்வோர் எளிதாக வந்து செல்லும் வசதியைத் தருகிறது.

**4. இடைநிலையர்கள் நீக்கம்**

தயாரிப்பாளிடமிருந்து பொருட்களை நேரடியாக, கொள்முதல் செய்து சொந்த பண்டக காப்பகங்களில் சேர்த்து வைத்து விற்பனை செய்வதால் முகவர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் உள்ளிட்ட இடைநிலையர்கள் தவிர்க்கப்படுகின்றனர். அதனால் விலை குறைவாக தரமான பொருட்களை வாங்க முடிகிறது.

**5. பேரளவால் உண்டாகும் சிக்கனங்கள்**

தேர்ந்த வல்லநர்களைக் கொண்டு பேரளவு கொள்முதல், விற்பனை, கணக்கு பராமரித்தல், நிர்வாகம் செய்யப்படுவதால் எல்லா நன்மைகளும் கிடைக்கின்றன.

**குறைபாடுகள்**

**1. கூடுதல் நடைமுறைச் செலவு**

நகரின் மைய இடத்தில் அமைவதாலும், விளம்பரம், வாடிக்கையாளருக்கான வசதிகள், ஊதியம், பராமரிப்பு, உள்ளிட்டவை கூடுதல் செலவுகளை உண்டாக்குகிறது.

**2. அதிக விலை**

நடைமுறைச் செலவுகள் கூடுவதால் பண்டங்களின் விலை கூடுதலாகவே இருக்கிறது. செல்வந்தர்கள் மட்டுமே வாங்கக் கூடிய வகையில் அமைகிறது.

**3. தொலைவு**

இது மக்கள் வசிக்கும் வீடுகளிலிருந்து தொலைவில் இருப்பதால் உடனுக்குடன் வாங்க வேண்டிய சில பொருள்களுக்காக நகரின் மையப்பகுதிக்குச் செல்ல மக்கள் தயங்குவர்.

**4. நேரடித் தொடர்பின்மை**

உரிமையாளருக்கு ஒவ்வொரு வாடிக்கை யாளருடன் நேரடித் தொடர்பு இல்லாததால், தனிப்பட்ட கவனம் செலுத்த முடிவதில்லை. எனவே நுகர்வோர் சிறிய சில்லரை கடைகளுக்கே செல்ல விரும்புகின்றனர்.

**5. அதிக முதலீடு**

துறைவாரிப் பண்டக சாலை தொடங்கவும் தொடர்ந்து நடத்தவும் அதிக முதல் மற்றும் மேலாண்மை செய்ய திறமையான மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைப்படுவர்.

**6. அதிக இடர்பாடு**

நகரின் மைய இடத்தில் உள்ளதாலும் அதிக அளவு நடைமுறைச் செலவுகளாலும் நட்டம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். மேலும் விலை ஏற்றத்தாழ்வு களாலும் நுகர்வோரின் விருப்பமாற்றத்தினாலும் அதிக நட்டம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## 2. மடங்கு கடைகள்

தயாரிப்பாளர்கள் (அ) இடைநிலையர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்துத் ஒரே மாதிரியான தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லறை கடைகள் **மடங்கு கடைகள்** என்கிறோம். தொடர் பண்டகச் சாலைகள் (chain stores) எனவும் அழைக்கப்படுகிறது. இவை ஐரோப்பாவில் மடங்குக் கடைகள் என்றும், அமெரிக்காவில் தொடர்பண்டகச் சாலைகள் என்றும் அழைப்பர். பெரும்பாலும் ஒரே வகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படும். எடுத்துக்காட்டு: பாட்டா.

**இயல்புகள்**

**1. அமைவிடம்**

போதுமான அளவுக்கு வாடிக்கையாளர்கள் அணுகுவதற்கு ஏற்றவாறு மக்கள் நெருக்கம் மிகுந்த வாழ்விடங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் இவ்வகைக் கடைகள் அமைந்திருக்கும்.

**2. பொருளின் தன்மை**

அன்றாட வாழ்வில் தேவைப்படுகின்ற நீண்ட காலம் பயன்படும் ஒரு சில வகையான பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படும் எடுத்துக்காட்டாக




பாட்டா ஷூ கம்பெனி காலணிகள், பாலிஷ், சாக்ஸ் வகைகள் அடங்கியவை மட்டும் விற்கப்படுவது.

### 3. மைய மேலாண்மை

இக்கடைகளில் விற்கப்படும் பொருள்கள் யாவும் ஓரிடத்தில் தயாரிக்கப்படுவதாகவோ அல்லது மையக் கொள்முதல் செய்யப்படுவதாகவோ இருக்கும். தலைமை அலுவலகத்திலிருந்து கிளைகளுக்குப் பொருட்கள் தேவைக்கேற்றவாறு அனுப்பப்படுகின்றன. கிளை மேலாளர்கள் கிளை மேலாண்மை செய்து பொறுப்பேற்கின்றனர். தலைமை அலுவலகம் அனைத்துக் கிளைகளின் விற்பனை, சரக்கிருப்பு, கணக்குகள் போன்றவற்றைக் கண்காணிக்கிறது.

### 4. ஒரே விலை, ரொக்க விற்பனை

அனைத்துக் கடைகளிலும் பொருட்களின் ஒரே விலையை நிர்ணயித்து ரொக்கத்திற்கு மட்டும் பொருட்கள் விற்கப்படுகின்றன.

### 5. விற்பனையாளரின் பணி

வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பொருள்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவதற்கு முழு ஒத்துழைப்பையும் இங்குள்ள விற்பனையாளர்கள் நல்குவர்.

### 6. நெகிழ்வுத் தன்மை

விற்பனையின் அளவைப் பொறுத்தும், வாடிக்கையாளரின் வசதிக்கேற்றவாறும் நகரின் ஒரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம் அல்லது புதிய கிளைகளைத் திறக்கலாம்.

### நன்மைகள்

### 1. பேரளவின் சிக்கனம்

மடங்குக் கடைகள் யாவையும் தயாரிப்பாளர் அல்லது மொத்த வியாபாரி சொந்தக் கடைகளாக நடத்துகின்றனர். பேரளவுக் கொள்முதல், ஒரே விளம்பரம், மைய மேலாண்மை போன்றவை மூலம் சிக்கனம் ஏற்படுவதால் விலை குறைக்கப்படுகிறது.

### 2. இடைநிலையர்கள் நீக்கம்

இக் கடைகளில் நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்கப்படுவதால், இடைநிலையர்களை இது நீக்குகிறது.

### 3. வாராக்கடன் இல்லை

பொருள்கள் யாவும் ரொக்கத்திற்கு மட்டுமே விற்கப்படுவதால், வாராக் கடன் ஏற்படுவதில்லை. மேலும் நடைமுறை முதல் குறையவும் வாய்ப்பில்லை.

### 4. வாங்குமிட வசதி

நகரின் முக்கிய இடங்களில் கடைகள் அமைவதால் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியதில்லை. கடையின் தோற்றம் ஒரே மாதிரியாக இருப்பதால்,எளிதாக,கண்டுபிடிக்கலாம். பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாங்க விற்பனையாளர் உதவி செய்வர்.

### 6. நம்பகத்தன்மை

பொருட்களின் விலை மற்றும் தரம், விற்பனையாளரின் உதவி, முதலியன மடங்கு கடைகளின் மீது நன்மதிப்பைப் பெறுகின்றது.

### குறைபாடுகள்

### 1. ஒரு சில பொருட்கள் மட்டும் விற்பனை

மடங்குக் கடையில் குறிப்பிட்ட சில வகைப் பொருட்களை மட்டும் விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்கள் அவற்றை மட்டுமே வாங்க முடியும்.

### 2. வசதிகள் இல்லாமை

இக்கடைகளில் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் கடன் விற்பனை, வீட்டு விநியோகம், ஓய்வறை, விளையாடுமிடங்கள் போன்ற வசதிகள் கிடைப்பதில்லை.

### 3. நேரடித் தொடர்பின்மை

உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை. ஊழியர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரிடமும் ஊக்கத்துடன் பணியாற்ற வாய்ப்பில்லை.

### 3. சிறப்பங்காடிகள்

தேவையான பொருள்கள் அனைத்தும் பல்வேறு தரம், ரகம், வகை, விலை வாரியாகப் பிரித்து வைத்து நுகர்வோர்கள் தானே எடுக்கும் வகையில் அடுக்கி வைத்து விற்பனை செய்யும் ஒரு பேரளவு சில்லறை பண்டக சாலை சிறப்பங்காடி எனப்படும். இங்கு பெரும்பாலும் மளிகைப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், பாத்திரங்கள், ஆடை வகைகள், மின்சார, மின்னணு சாதனங்கள், மருந்துகள் முதலியவை விற்கப்படுகின்றன.




#### சிறப்பியல்புகள்

1. சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.
2. பொருட்கள் யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக அறைகலன் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
3. வாடிக்கையாளர்கள் தேவையான பொருட்களை தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்திவிட்டு வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
4. இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
5. துறைவாரிப் பண்டகசாலை போன்று அமைந்திருப்பதால் ஒரே கூரையின் கீழ் அனைத்து வகைப் பொருட்களையும் வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது.
6. இதை அமைக்க அதிக முதலீடு தேவைப்படுகிறது.

### 4. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் ( Consumer Co–operative Stores)

நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை ஒரு சில்லறை விற்பனை நிலையமாகும். நுகர்வோர்கள் அனைவரும் சேர்ந்து இவற்றைத் தங்களுக்காகவே தொடங்கி தாமாகவே நடத்தி தங்களின் உறுப்பினர்களுக்கே பொருட்களையும் சேவைகளையும் குறைந்த விலையில் விற்பனை செய்து பயனடைகிறார்கள். இது குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினர் ஒன்று சேர்ந்து குறைந்த பட்சம் 25 நபர்களைக் கொண்டு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்து உருவாக்கப்படுகிறது.

கூட்டுறவு பண்டகசாலையின் தொடக்க முதல், உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் பங்குகளின் மூலம் கிடைக்கிறது. உறுப்பினர்களால் ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற விதிப்படி மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குழு மூலம் மேலாண்மை செய்யப்படுகிறது.தமிழ்நாட்டில் இவ்வகை கூட்டுறவு பண்டகசாலைகள் மிகவும் புகழ்பெற்றுவிளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, சென்னை காமதேனு மற்றும் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடிகள், வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி முதலியன.




### 5. வாடகைக் கொள்முதல் முறை மற்றும் தவணை முறை விற்பனை

#### வாடகைக் கொள்முதல் முறை

வாடகைக் கொள்முதல் முறை என்பது பொருள் வாங்குவோர் அதன் விலையைப் பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் நீடிக்கும் தவணைகளில் செலுத்த ஒப்புக் கொள்ளும் முறை ஆகும். இது ஒரு வகைக் கடன் விற்பனை முறை. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவுடன் பொருள்களை எடுத்துச்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 241 2/17/2021 3:12:44 PM

சென்று பயன்படுத்துகிற பொழுதும் அதன் உரிமை அவர் இறுதித் தவணை செலுத்தும் வரை விற்பவரிடமே இருக்கும். வாங்குபவர் பொருளின் விலையில் ஒரு பகுதியை முன்பணமாகச் (down payment) செலுத்தி, மீதத் தொகையை தவணைகளில் செலுத்துகிறார். தவணைத் தொகையைச் செலுத்த தவறினால் பொருளை மீண்டும் பெற்றிடும் உரிமை விற்பவருக்கு உண்டு. நெடுநாள் பயன்தரும் விலை உயர்ந்த பொருள்களான குளிர்சாதனப் பெட்டி, துணிதுவைக்கும் எந்திரம், தொலைக்காட்சி மடிக்கணிணி முதலியவை இவ்வகையில் விற்கப்படுகிறது.

### தவணை முறை விற்பனை

இம்முறையில் பொருளின் விலையுடன் வட்டியும் சேர்த்து மொத்த தொகையில் முதல் தவணை மட்டும் பொருளை எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். இதனை நீட்டிய செலுத்துகை முறை (Deferred Payment System) என்கிறோம். முதல் தவணையை செலுத்திய உடனே வாங்குபவர் அப்பொருளின் உரிமையாளராகிறார். வாங்குபவர் தவணைத் தொகையை செலுத்தத் தவறினால் விற்பவர் அத்தொகையைப் பெறுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கலாம். எடுத்துக்காட்டு: இரு சக்கர மோட்டார் வாகனம் தவணைமுறை விற்பனை.

உரிமை மாற்றம், முன் பணம் செலுத்துதல், ஆகியவை இவ்விரு முறைகளுக்கும் உள்ள வேறுபாடுகளாகும்.

## 6. அஞ்சல் வழி வியாபாரம்

வாடிக்கையாளரிடமிருந்து ஆணைகளைப் பெற்று பொருட்களை அஞ்சல் வழியாக அவர்களின் வீட்டிற்கே அனுப்பி வியாபாரம் செய்வதை **அஞ்சல் வழி வியாபாரம்** என்கிறோம். இவ்வகையில் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் நேரடித் தொடர்பில்லை.

### செயல்முறை

### 1. விளம்பரம் செய்தல்

விற்கப்படும் பொருட்களைப் பற்றிய விவரம் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, கைபேசி போன்றவைகள் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது.

### 2. ஆணை பெற்று சரக்கை அனுப்புதல்

சரக்கனுப்பக் கோரும் ஆணைகளைப் பெற்றவுடன், முறையாகக் கட்டுமம் செய்யப்பட்டு, பதிவுப் பார்சல் அஞ்சல் வழியில் வாடிக்கையாளரின் அஞ்சல் நிலையத்திற்கோ, வங்கிக்கோ (மதிப்பு, செலுத்தத்தக்க அஞ்சல் Value Payable Post) அனுப்பப்படுகிறது.

### 3. உரிய தொகையைப் பெறுதல்

வாடிக்கையாளர் பொருள்களின் விலையை முன்கூட்டியே முழுவதுமாகவோ அல்லது சரக்கைப் பெற்ற உடனேயோ செலுத்தலாம். இவ்வகையில் வாரக் கடன் ஏற்படுவதில்லை.

அழுகும் பொருள்கள் யாவும் அஞ்சல் வழி வணிகத்துக்கு உகந்ததல்ல. புத்தகங்கள், கைக்கடிகாரங்கள் போன்ற எடை குறைவான, சிறிய பொருட்கள் மட்டுமே ஏற்றவை.

## 7. தானியங்கி விற்பனை எந்திரங்கள்

தானியங்கி விற்பனை எந்திரம் என்பது எந்திரம் வழியாக பொருட்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு பொருட்கள் விற்கும் எந்திரம் ஆகும். இது நாணயங்கள், அட்டைகள் அல்லது வில்லைகள் கொண்டு இயக்கக்கூடியது. வாங்குபவர் நாணயம் அல்லது அட்டையை எந்திரத்தினுள் செலுத்தினால் குறிப்பிட்ட அளவுள்ள பொருள் வெளியில் வரும். அதைப் பெற்றுக் கொள்வர். இவை வங்கிகளில் தானியங்கி ரொக்கம் எடுக்கும் எந்திரம் (ATM) போன்று செயல்படுகிறது. தொடர்வண்டி



நிலையங்கள், விமான நிலையங்கள், பெட்ரோல் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் இத்தகைய எந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு: தானியங்கி ஆவின் பாலகம், தேநீர், குளிர்பானங்கள்.

இவ்வகை சில்லறை விற்பனை மேற்கத்திய நாடுகளில் பிரபலமடைந்துள்ளது. தற்போது இந்தியாவிலும் பிரபலமாகிக் கொண்டு வருகிறது.

### 8. வணிக வளாகங்கள்

நவீன காலத்திற்கேற்றவாறு வளர்ச்சி பெற்ற துறைவாரிப் பண்டகசாலைகளே வணிக வளாகங்கள் எனப்படுகிறது. சிறப்பங்காடிகளை விடப்பெரிய பல அடுக்கு மாடி கொண்ட கட்டடத்தில் சிறிய கடைகள் முதல் பெரிய கடைகள் வரை தனித்தனி உரிமையாளர்கள் கொண்டு ஆடம்பரப் பொருட்கள் உட்பட அனைத்துவகை பொருட்களும் இங்கு விற்கப்படுகின்றன.

பொழுதுபோக்கு வசதிகள், உணவகங்கள், கம்பியில்லா தொலைத் தொடர்பு (Wi Fi), குழந்தைகள் விளையாட்டுகள், திரைப்படம், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் இங்கு உள்ளன. குடும்பத்துடன் நாள் முழுக்க பார்க்க பொருள்வாங்க வசதியாக பொருட்காட்சி போன்று அமைக்கப்பட்டுள்ளது எடுத்துக்காட்டு: போரம் – சென்னை.

### 9. தொலைத் தொடர்புச் சந்தை

தொலைத் தொடர்புச் சந்தையிடுதலை இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. தொலை பேசிச் சந்தையிடுகை
2. தொலைக்காட்சி சந்தையிடுகை

#### 1. தொலை பேசிச் சந்தையிடுகை

விற்பவர்கள் அப்பொருள்களை வாங்கும் திறன் மிக்கவர்களை தொலைபேசியிலோ அல்லது கை பேசியிலோ தொடர்பு கொண்டு பொருட்கள் அல்லது சேவைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைப்பர். விருப்பமுள்ள வாடிக்கையாளர் பின் நேரடியாக விற்பனையகத்திற்குச் சென்று வாங்குவதையே தொலைப் பேசி சந்தையிடுதல் என்கிறோம்.

காப்பீடு, நிதி வழங்குதல், கடன் வழங்குதல், கடன் அட்டை உள்ளிட்டவை இவற்றில் அடங்கும். இதில் இடைநிலையர்கள் இல்லாததால் வீண் அலைச்சல் குறைகிறது.

#### 2. தொலைக்காட்சி சந்தையிடுகை

விற்பவர் விற்கும் பொருள் அல்லது சேவையைப் பற்றி விரிவாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்கிறர்கள். மேலும் செயல்படும் விதத்தையும் காட்சிப் படுத்தும் பொழுது அதனைக் காணும் வாடிக்கையாளர்கள் கவரப்பட்டு வாங்க தூண்டப்படுவர். தொலைபேசி எண்ணும் இணையதள முகவரியும் காட்சிப் படுத்துவதால் வாங்க விழையும் நபர்கள் ஆணையை அனுப்புவார். ஆணையைப் பெற்றவுடன் வாடிக்கையாளரின் வீட்டுக்குச் சென்று பொருட்கள் வழங்கப்படும். எடுத்துக்காட்டு: இயங்கும் மேசை (Tablemate) மற்றும் வீட்டுச் சாதனங்கள்.

பொருளின் விலையை, முன் கூட்டியே பற்று அட்டை அல்லது கடன் அட்டை மூலம் செலுத்தலாம் அல்லது வீட்டிற்குப் பொருள் வந்து சேர்ந்தவுடன் ரொக்கமாக அல்லது கோடிட்ட காசோலையாகச் செலுத்தலாம்.

### 10. இணைய தள சந்தை

தயாரிப்பாளர்கள் அல்லது மொத்த வியாபாரிகள் தங்கள் பொருட்களை இணைய தளத்தில் மின்னஞ்சல் (e-mail) பிம்பங்கள் (Images), குறும்படங்கள் (Videos) ஆகியவை வைத்து விளம்பரம் செய்கிறார். வாடிக்கையாளர்கள் பொருளின், தரம், விலை, சிறப்பியல்புகள் ஆகியவற்றைப் பார்த்து தேர்ந்தெடுத்து இணையத்தின் வாயிலாக ஆணையிட்டு ரொக்கம் செலுத்தி தங்களின் வீட்டின் அருகிலியே பெற்றுக் கொள்கிறார்கள். பிலிப்கார்ட், அமேசான், ஸ்னாப்டீல் போன்ற இணைய தள செயலி (Apps) மூலம் நெடுநாள் நீடிக்கும் தன்மையுடைய பொருட்களை விற்கின்றனர்.





XI_Tamil_commerce_16-25_148-254.indd 243 2/17/2021 3:12:44 PM

### கலைச்சொற்கள்

| | |
|---|---|
| சுமைதூக்கி | இடம்பெயர் வியாபாரி |
| தொடர் பண்டக சாலை | கூவி விற்பவர் |
| சிறப்புப் பண்டகச்சாலை | வர்த்தகச் சங்கம் |

### தன் சிந்தனைக்கு

1. மக்கள் வாழ்விடங்களுக்கு அருகில் பல பொருட்கள் கிடைக்கின்றன. தயாரிப்பாளர்களிடமிருந்து அவை எவ்வாறு கடைகளுக்கு, எப்படி வந்து சேர்ந்தன என்று அறிவாயா?
2. உங்கள் ஊரில் உள்ள நிலையிட சில்லறை வியாபாரிகளை நீங்கள் வகைப்படுத்துக.
3. உங்கள் பகுதியில் இரண்டாம் தர பொருட்கள் விற்பனையாளர் இருக்கிறார்களா? அவர் விற்கும் பொருள்கள் எவை? பட்டியலிட்டு எழுதுக.
4. ஒரே வகைப் பொருள்கள் விற்பனை செய்யும் இரண்டு சில்லறைப் பண்டக சாலைகளின் சிறப்பியல்புகளை வேறுபடுத்திக் காட்டுக.

### பயிற்சி

H92DRA

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **சில்லறை வியாபாரிகள் ______________ அளவில் பொருட்களை வைத்திருப்பர்.**
   (அ) சிறிய (ஆ) பெரிய
   (இ) நடுத்தர (ஈ) அளவான
2. **சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் ____________ அடங்குவர்.**
   (அ) இடம்பெயர் வியாபாரிகள்
   (ஆ) சுமை தூக்கும் வியாபாரிகள்
   (இ) பொதுப் பண்டகச் சாலைகள்
   (ஈ) வாகனத்தில் விற்போர்
3. **ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் ____________ என அழைக்கப்படுகிறது.**
   (அ) சந்தை வியாபாரிகள்
   (ஆ) ஒரே வகை பண்டகச்சாலைகள்
   (இ) பொதுப் பண்டகச் சாலைகள்
   (ஈ) தெருக் கடை வியாபாரிகள்
4. **நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ______________ என்பர்.**
   (அ) மடங்கு கடைகள்
   (ஆ) முகவர்கள்
   (இ) தெருக்கடை வியாபாரிகள்
   (ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

### விடைகள்

1 அ 2 இ 3 ஆ 4 ஈ

## II. குறுவிடை வினாக்கள்.

1. மடங்குக் கடையின் பொருள் யாது?
2. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?
3. சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)
2. மடங்கு கடைகளின் குறைபாடுகள் யாவை? விளக்குக. (ஏதேனும் 3)

## IV. பெருவிடை வினாக்கள்.

1. துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளைக் விவரி.
2. சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)

## குறிப்பு நூல்கள்.


1. *Jagdish Bhagwathi 20 B, Free Trade Today, Fifth Edition, Sultan Chand & Sons, New Delhi.*
2. *Bhatia.S.C. 2018, Retail Management, Atlantic Publishers and Distributors.*

# அலகு – 8 பன்னாட்டு வணிகம்

அத்தியாயம்
**25**

# பன்னாட்டு வணிகம்

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. –குறள் 758

H961F7

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. பன்னாட்டு வணிகத்தின் பொருளை விளக்க முடியும்
2. பன்னாட்டு வணிகம் உள்நாட்டு வணிகத்தோடு எவ்வாறு வேறுபடுகிறது என்பதை அறிய முடியும்
3. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை விவரிக்க முடியும்
4. பன்னாட்டு வணிகத்தின் வகைகளை விவாதிக்க முடியும்

## 25.01 பன்னாட்டு வணிகத்தின் தன்மை


*உலகில் உள்ள அனைத்து நாடுகளும் வெவ்வேறு வகையான இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. ஆனால் எந்த ஒரு நாடும் தனக்கு தேவையான அனைத்து இயற்கை வளங்களையும் ஒருங்கே பெற்றிருக்கவில்லை. நிலவியல் அமைப்பின் காரணமாக சில நாடுகளில் குறிப்பிட்ட சில இயற்கை வளங்கள் பெருமளவில் கிடைக்கின்றன. அந்த வளங்கள் பல நாடுகளில் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை. இந்த காரணி அயல் நாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாகிறது. வேறு வகையில் கூறுவோம் எனில் உபரியான வளங்களைக் கொண்டுள்ள நாடுகள் அந்த வளங்களைப் பற்றாக்குறையான நாடுகளோடு பரிமாறிக்கொள்ளுதல் அயல் நாட்டு வியாபாரம் ஆகும்.*

*உதாரணமாக. வளைகுடா நாடுகள் பெட்ரோலிய வளத்தை அதிகம் பெற்றுள்ளன. ஆனால் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத இயற்கை வளங்களைப் பெற்றிருக்கவில்லை. எனவே அவை தன்னிடம் அதிகமாக உள்ள பெட்ரோலிய வளத்தை மற்ற நாடுகளுக்குக் கொடுத்து அங்கிருந்து தனக்குத்*

**உங்களுக்குத் தெரியுமா?**

**18 ஆம் நூற்றாண்டுக்கு முன் பன்னாட்டு வணிகத்தில் சில வணிக வழித் தொடர்புகள் (Routes) .**

1. *உப்பு வழி வணிக தொடர்பு– இந்தியாவிலிருந்து எகிப்து.*
2. *பட்டு வழி வணிகத் தொடர்பு– சீனாவிலிருந்து இந்தியா.*
3. *வாசனை திரவியங்கள் வழி வணிகத் தொடர்பு – இந்தியாவிலிருந்து ஐரோப்பா.*



## சோழர்களும் பன்னாட்டு வணிகமும்

சோழர்கள் பன்னாட்டு வணிகத்திலும் கடல்சார் செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கினர். கடல் கடந்து சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் வணிகம் பரவியது. 9 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவில் பெருமளவில் கடல் சார் வணிக நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. உள்நாட்டுக்குள்ளேயும் கடல் கடந்தும் வியாபாரம் தென்னிந்தியாவில் கூட்டமைப்பு மூலம் பெருகி இருந்தது. மணிகிராமம் மற்றும் அய்யாவோ கூட்டமைப்புகள் இரண்டும் பெயர் பெற்றவை. சோழர் நிர்வாகம் தமிழ்நாடு வணிகர்கள் சங்கம் தென்கிழக்கு ஆசியா மற்றும் சீனாவிலுள்ள அய்யாவோலே மற்றும் மணிகிராமம் கூட்டமைப்பாக மேம்படுத்த ஊக்கப்படுத்தியது. இவ்வியாபாரப் பணிகள் யாவும் இந்திய தீபகற்பத்தின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையில் உள்ள துறைமுகங்களில் சோழர் காலத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தேவையான தானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றைப் பெறுவது அவசியமாகிறது.

அதே போன்று சில வளர்ந்த நாடுகள் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளைக் குறைவான விலைக்கு உற்பத்தி செய்கின்றன. வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகள் தொழில் நுட்ப வளர்ச்சியின்மை காரணமாக அவ்வாறு உற்பத்தி செய்ய இயலவில்லை. இது போன்ற சூழ்நிலையில்தான் இந்த நாடுகள் தமக்குத் தேவையானப் பொருட்களை மற்ற நாடுகளிருந்து வாங்குவதற்கு அயல் நாட்டு வியாபாரம் வழி வகுக்கிறது. இதன் காரணமாக அயல் நாட்டு வியாபாரம் அவசியமாகிறது .

சுருங்கக் கூறின், நாடுகளுக்கிடையே இயற்கை வளங்கள் சமமாக அமையப்பெறாததும், சில நாடுகள் குறிப்பிட்டப் பொருட்களை உற்பத்தி செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதும், பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாறிக்கொள்ளுதல் அவசியமாகிறது. இந்த பரிமாற்றமே அயல் நாட்டு வியாபாரம் ஆகும்.

நாம் வசிக்கும் இன்றைய உலகில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாறிக்கொள்ளுதலில் உள்ள தடைகள் அதிக அளவில் குறைந்துள்ளன. தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக நாடுகளுக்கிடையே வியாபாரம் என்பது எல்லையற்றதாகவும் உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணையும் வகையிலும் மாற்றம் அடைந்துள்ளது. தற்கால உலகமானது உலகளாவிய கிராமம் என்று அழைக்கப்படுகிறது. தேசிய பொருளாதாரம் என்பது எல்லைகள் இல்லாததாகவும் உலகப்பொருளாதாரத்தோடு அதிகமாக ஒருங்கிணைக்கப்பட்டதாகும். தகவல் தொழில் நுட்பத்தில்(ICT) மற்றும் போக்குவரத்தில் ஏற்பட்ட அசுர வளர்ச்சியின் காரணமாக அயல் நாட்டு வியாபாரத்தில் அதிக நிறுவனங்கள் ஈடுபட்டு அதிக இலாபத்தையும் விரைவான பொருளாதார வளர்ச்சியையும் அடைய முயல்கின்றன.

இந்தியா நீண்ட காலமாக மற்ற நாடுகளோடு வியாபாரம் செய்து வருகிறது. பண்டைய காலத்தில் இருந்தே அயல் நாட்டு வியாபாரத்தில் மிக முக்கியப் பங்கை ஆற்றி வருகிறது. தற்போது உலகப் பொருளாதாரத்தோடு மிக வேகமாக இணைந்து வெளிநாட்டு வணிகத்தையும் முதலீடுகளையும் அதிகரித்துள்ளது.

## 25.02 பன்னாட்டு வணிகத்தின் கருத்து,பொருள், மற்றும் வரைவிலக்கணம்

### பன்னாட்டு வணிகத்தின் கருத்து

இன்று வணிகம் உலக அளவில் வளர்ந்து வருகிறது. மேலும் இலாபம் ஈட்ட வேண்டும் என்ற தூண்டுதல் பல நிறுவனங்களை உலக வியாபாரத்தில் ஈடுபட வைக்கிறது. வணிக சந்தையில் உள்ளூர் நிறுவனங்களைக் காட்டிலும் உலகளாவிய நிறுவனங்கள் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. இவை பன்னாட்டு நிறுமங்கள் (MNC) அல்லது நாடு கடந்த நிறுமங்கள் (TNC) என்று அழைக்கப்படுகிறது. இவ்வகை நிறுவனங்கள் உலகம் செயல்பாட்டுத்தளம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. உதாரணம். ஷெல், யுனி லீவர், மற்றும் நெஸ்ட்லே. இவைகளை பிரான்சு அல்லது ஜெர்மன் அல்லது டச்சு நிறுவனங்கள் என்று கருத முடியாது. இவைகளுக்கு தனியே உள்ளூர் சந்தை இல்லை. இவ்வகை நிறுவனங்களை பல்வேறு நாடுகளைச் சார்ந்த மக்களே நிர்வகிக்கிறார்கள். இவ்வகை நிறுவனங்கள் தங்களது பொருட்கள் மற்றும் சேவைகளை உலகெங்கிலும் உள்ள தனது துணை நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கின்றன.

## உலகமயமாக்கலில் இந்தியாவின் பங்கு

பன்னாட்டு வணிகம் சீர்திருத்தத்தின் புது யுகத்தில் நுழைகிறது. வளர்ச்சிப்பாதையில் இந்தியாவும் விலக முடியாது. இந்தியா பெருங்கடன் தொல்லை மற்றும் செலுத்தல் சமநிலைப் பிரச்சினைகளில் உள்ளது. 1991 ல் பன்னாட்டு நாணய நிதியம் மூலம் செலுத்தல்சமநிலையின்பற்றாக்குறையைப் போக்க நிதி உதவி நாடியது. அப்போது பணம் வழங்குவதற்கு முன் இந்தியாவில் கூட்டமைப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு பெற்ற நிதியை திரும்பச் செலுத்த வகை செய்தது. இந்தியா வேறு வழி இல்லாமல் ஏற்றுக் கொண்டது. பன்னாட்டு நாணய நிதியம் இந்தியப் பொருளாதாரக் கொள்கை களைத் தளர்த்தச் செய்தது. சீர்த்திருத்த முறைகளில் வேகம் குறைந்து சென்றாலும் உலகப் பொருளாதாரத்தோடு இணைந்து செல்வதிலும் உலகமயமாக்கலிலும் இந்தியா முழுமையாக ஈடுபட்டுள்ளது. அது ஒரு புறமிருக்க, பன்னாட்டு நிறுமங்கள் இந்தியச் சந்தையில் பொருட்களையும் சேவைகளையும் விற்பதிலும், இந்திய நிறுமங்கள் வெளி நாடுகளுக்குப் பொருட்களும் சேவைகளும் சந்தைப்படுத்துவதிலும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றன.

பன்னாட்டு வணிகம் நாடுகளின் எல்லைகளைக் கடந்து செயல்படுகிறது. இது சரக்கு, சேவைகள், தொழில் நுட்பம் நிர்வாக அறிவு மற்றும் மூலதனம் மற்ற நாடுகளுக்கு மாற்றுவதை உள்ளடக்கியது. பன்னாட்டு வணிகம் பல ஆண்டுகளாக நடைபெற்றுவந்த போதிலும் பன்னாட்டு நிறுமங்களின் வருகைக்குப் பிறகே அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### பொருள்

பன்னாட்டு வணிகம் என்பது நாடுகளின் புவியியல் எல்லைகளைக் கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளையும் குறிக்கும். இது சரக்கு மற்றும் சேவைகளின் பரிமாற்றம் மட்டுமல்லாமல் மூலதனம், பணியாளர்கள், தொழில் நுட்பம், காப்புரிமை, வணிகக்குறி, அறிவுசார் உரிமை, மற்றும் பதிப்புரிமைகளை உள்ளடக்கியது.

### வரைவிலக்கணம்

ரோஜர் பென்னட் கூற்றுப்படி, "நாட்டின் எல்லைகளைக் கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளும் பன்னாட்டு வணிகம் ஆகும்".

ஜான் டி டேனியல் மற்றும் லீ எச் ரேடெப் அவர்களின் கூற்றுப்படி, "பன்னாட்டு வணிகம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நடைபெறும் வணிக நடவடிக்கைகள் ஆகும்".

## 25.03 பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள்

பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான சில வழிமுறைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (Exporting and Importing)
2. ஒப்பந்த உற்பத்தி (Contract Manufacturing) or (Outsourcing)
3. உரிமம் மற்றும் உரிமையாளர் (Licensing or Franchising)
4. இணைவினை (Joint Venture)
5. அயல் நாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment)

### 1. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

ஏற்றுமதி என்பது உள் நாட்டிலிருந்து வெளி நாட்டிற்கு சரக்கு மற்றும் சேவைகளை விற்பனை செய்வதாகும். அதே போன்று இறக்குமதி என்பது வெளி நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதாகும்.

### 2. ஒப்பந்த உற்பத்தி

ஒரு வெளி நாட்டு நிறுவனம் தான் உற்பத்தி செய்யும் பொருட்களின் சில உதிரி பாகங்களை தன்னுடைய தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகும். இதற்கு வெளியாட்களிடம் பணியை ஒப்படைப்பது (புறத்திறனீட்டல்)(Outsourcing) என்று பெயர்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 247 2/17/2021 3:12:44 PM

### 3. உரிமம் வழங்குதல்

ஒரு நிறுவனம் வெளி நாட்டு நிறுவனத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி தன்னுடைய இயந்திரம், வியாபார இரகசியம், மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்த கட்டண (Royalty) அடிப்படையில் அனுமதி அளிக்கிறது. உதாரணம். மெக்டனால்ட்,(McDonald,) பிஸ்ஸா ஹட் (Pizza Hut). அவ்வாறு அனுமதி வழங்கும் நிறுவனம் உரிமம் வழங்குபவர் (Licensor) என்றும் அனுமதி வழங்கப்படும் நிறுவனம் உரிமம் பெறுபவர் (Licensee) என்றும் அழைக்கப்படுகிறது.

### 4. இணைவினை

இணைவினை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் இணைந்து பங்குகள் மூலம் புதிய நிறுவனத்தை உருவாக்க ஒப்புகொள்ளும் உடன்பாடு ஆகும். மேலும் இவை வருவாய், செலவுகள் மற்றும் சொத்துக்களைப் பங்கிட்டுக்கொள்கின்றன. இது மூன்று வழிகளில் உருவாக்கப்படலாம்,

1. அயல் நாட்டு முதலீட்டாளர் உள் நாட்டு நிறுமத்தில் பங்கு பெறுதல்.
2. உள் நாட்டு நிறுமம் எற்கனவே செயல்படும் அயல் நாட்டு நிறுமத்தில் பங்கேற்றல்.
3. அயல் நாட்டு நிறுமம் மற்றும் உள் நாட்டு நிறுமம் இணைந்து புதிய நிறுவனத்தை உருவாக்குதல்.

## 25.04 பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக்கூறுகள்

### பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக்கூறுகள் பின்வருமாறு

### 1. நாடுகளின் பங்கேற்பு

பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிக நடவடிக்கைகளின் தொகுப்பே பன்னாட்டு வணிகம் ஆகும்.

### 2. அன்னிய செலாவணி பயன்படுத்துதல்

ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டோடு பொருட்கள் மற்றும் சேவைகளை அயல் நாட்டு நாணய மதிப்பில் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

### 3. சட்டப்பூர்வ கடமைகள்

அயல் நாட்டு வணிகம் அந்தந்த நாடுகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகள் அடிப்படையிலேயே நடைபெறுகிறது. சில வகையான பொருட்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்ய அரசின் அனுமதி பெறவேண்டும். பன்னாட்டு வணிகத்தில் அரசாங்கம் நேரடியாக தலையிடுகிறது என்றால் மிகையாகாது.

### 4. அதிகப்படியான ஆவணங்கள் தயாரித்தல்

பன்னாட்டு வணிகத்தில் அதிக வணிக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பன்னாட்டு வணிகத்தில் தொடர்புடைய நபர்கள் அதிகமான ஆவணங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

### 5. வேறுபடும் பொருளாதார சூழல்

பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடும் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார சூழல், சட்ட ரீதியான கட்டமைப்பு, நிறுவன அமைப்பு, நிதி மற்றும் வணிக கொள்கை, வளங்களின் கிடைப்புத்தன்மை, உற்பத்தி நுட்பங்கள் போன்ற காரணிகளால் பொருளாதார சூழல்கள் வேறுபடுகின்றன.

## 25.05 பன்னாட்டு வணிகத்தின் முக்கியத்துவம்

### 1. வளங்களின் சமமற்ற பகிர்வு

உலக நாடுகள் அனைத்தும் எல்லா இயற்கை வளங்களையும் சமமாகவோ அல்லது சமனற்ற முறையிலோ பெற்றிருக்கின்றன. அனைத்து நாடுகளிலும் இயற்கை வளங்கள் சமமான அளவில் அல்லது சீராக அமையப்பெறவில்லை. இதன் காரணமாக இயற்கை வளங்களை உபரியாக கொண்டுள்ள நாடுகள் தங்கள் நாட்டில் கிடைக்காத பற்றாக்குறையான வளங்களை வேறு நாடுகளோடு பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டியதாகிறது. இயற்கை வளங்களின் சமச்சீரற்ற பகிர்வால் உலக நாடுகள் பன்னாட்டு வணிகத்தின் மூலம் பொருட்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

உதாரணமாக,பெட்ரோலிய வளங்கள் வளைகுடா நாடுகளில் அதிக அளவில் கிடைக்கின்றன. ஆனால் மற்ற வளங்களைக் கொண்டிருக்கவில்லை. எனவே அவை பெட்ரோலிய வளங்களை மற்ற நாடுகளோடு பரிமாற்றம் செய்துகொண்டு அங்கிருந்து தனக்கு தேவையான உணவுப்பொருட்கள், மருந்துகள், காய்கறிகள் மற்றும் பிற பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றன.

### 2. உற்பத்திக் காரணிகளின் சீரற்ற கிடைப்புத்தன்மை

நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் (நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம்)



XI_Tamil_commerce_16-25_148-254.indd 248 2/17/2021 3:12:44 PM

கிடைப்புத்தன்மை சீரற்ற முறையில் அமைந்துள்ளது. பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்திக் காரணியைத் தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழிவகுக்கிறது.

### 3. சிறப்புத் தேர்ச்சி

சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள், திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவநிலை,இயற்கைவளங்களின்கிடைப்புத்தன்மை, மற்றும் தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால் சில பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

உதாரணமாக, கோயமுத்தூர் பருத்தி ஆடைகளுக்கும், திருப்பூர் பின்னலாடை பொருட்களுக்கும், சேலம் மாம்பழத்திற்கும், வேலூர் தோல் பொருள் உற்பத்திக்கும் சிறப்புத் தேர்ச்சி பெற்று விளங்குகிறது. இந்த சிறப்புத் தேர்ச்சி அதிக அளவில் இவ்வகைப் பொருட்களை உற்பத்திச் செய்யத் தூண்டுகிறது. பன்னாட்டு வணிகம் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தேவையான நாடுகளுக்கு பரிமாற்றம் செய்வதற்கு உதவி புரிகிறது.

### 4. அடக்க விலை குறைவு

உலக நாடுகளுக்கிடையே பொருட்களுக்கான உற்பத்தி செலவு, சமூக பொருளாதார, புவியியல், மக்கள்தொகை, தொழில் நுட்ப மற்றும் நிலவும் அரசியல் சூழல் காரணமாக வேறுபடுகிறது. இதன் காரணமாக சில நாடுகள் மற்ற நாடுகளை விட மிக விலை குறைவாகவும் தரமானதாகவும் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இதன் மூலம் பன்னாட்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் குறைவான விலையில் பொருட்களை இறக்குமதி செய்து மற்ற நாடுகளுக்கு இலாபகரமான விலையில் ஏற்றுமதி செய்கின்றன.


## 25.06 உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும்இடையே உள்ள வேறுபாடுகள்

| அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1. பொருள் | உள் நாட்டு வணிகம் ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | பன்னாட்டு வணிகம் நாடுகளின் எல்லைகளைத்தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| 2. வியாபாரத்தில் பங்கு பெறுவோர் | ஒரு நாட்டில் உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத்தாண்டி உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| 3. உற்பத்திக் காரணிகளின் இயக்கம் | உற்பத்திக் காரணிகள், உழைப்பு, முதல், தொழில் நுட்பம் ஆகியவை தடையில்லாமல் நாட்டின் எல்லைக்குள் இடம்பெயர முடியும். | உற்பத்திக் காரணிகள், உழைப்பு, முதல், தொழில் நுட்பம் ஆகியவை தடையில்லாமல் நாட்டின் எல்லைத்தாண்டி இடம்பெயர முடியும். |
| 4. நுகர்வோரின் தன்மை | உள் நாட்டு வணிகத்தில் நுகர்வோர் ஒரு நாட்டின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளார்கள். | பன்னாட்டு வணிகத்தில் உலக நாடுகளின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளார்கள். |
| 5. வியாபார முறை | உள் நாட்டு வணிகம் ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பன்னாட்டு வணிகம் பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| 6. பயன்படுத்தும் நாணய மதிப்பு | உள் நாட்டு வணிகத்தில் உள்ளூர் நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | பன்னாட்டு வணிகத்தில் அயல் நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 7. போக்குவரத்து | உள் நாட்டு வணிகத்தில் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | பன்னாட்டு வணிகத்தில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |
| 8. இடர் | உள் நாட்டு வணிகத்தில் ஏற்படும் இடரின் அளவு குறைவு. | பன்னாட்டு வணிகத்தில் ஏற்படும் இடர், தொலை தூரம், சமூக பொருளாதார அரசியல் நிலைகள் மற்றும் அயல் நாட்டு நாணய மதிப்பில் ஏற்படும் மாற்றம் போன்ற காரணங்களால் அதிகமாகிறது. |
| 9. சந்தையின் அளவு | சந்தையின் அளவு நாட்டின் எல்லைக்குட்பட்டது | சந்தையின் அளவு பரந்த அளவில் உள்ளது மற்றும் ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து செல்கிறது. |
| 10. சுங்கத்தீர்வை செலுத்துதல் | சுங்கத்தீர்வை செலுத்த பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறைவு. சுங்கத்தீர்வையும் மிகக் குறைவு. | சுங்கத்தீர்வை செலுத்த பின்பற்றவேண்டிய நடைமுறைகள் சிக்கலானவை. சுங்கத்தீர்வையும் அதிகம். |

## 25.07 பன்னாட்டு வணிகத்தின் வகைகள்

பன்னாட்டு வணிகத்தை மூன்று வகைகளாக




பிரிக்கலாம். அவையாவன 1. இறக்குமதி வியாபாரம் 2. ஏற்றுமதி வியாபாரம் 3. மறு ஏற்றுமதி வியாபாரம்

### 1. ஏற்றுமதி வியாபாரம்

ஒரு நாட்டினுடைய வியாபார நிறுவனம் சரக்கு மற்றும் சேவைகளை மற்ற நாட்டில் உள்ள வியாபார நிறுவனத்திற்கு விற்பனை செய்தால் அதுவே ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். ஏற்றுமதி வியாபாரம் என்பது உள் நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை அயல் நாட்டிற்கு விற்பனை செய்வது ஆகும். எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் கைவினைப்பொருட்கள், தோல் பொருட்கள், மின்னணு பொருட்கள், மூலிகை பொருட்கள் ஆகியவற்றை மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்கிறது.

### 2. இறக்குமதி வியாபாரம்

ஒரு நாட்டினுடைய வியாபார நிறுவனம் சரக்கு மற்றும் சேவைகளை மற்ற நாட்டில் உள்ள வியாபார நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்தால் அதுவே இறக்குமதி வியாபாரம் எனப்படும். இறக்குமதி வியாபாரம் என்பது அயல் நாட்டிலிருந்து பொருட்களை வாங்கி உள் நாட்டிற்கு கொண்டு வருவது ஆகும். எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் பெட்ரோலிய பொருட்கள், மின்னணு பொருட்கள், இயந்திரம், மற்றும் மருத்துவ உபகரணங்களை மற்ற நாடுகளிலிருந்து கொள்முதல் செய்வது ஆகும்.

### 3. மறு ஏற்றுமதி வியாபாரம்

ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பொருட்களை மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் மறு ஏற்றுமதி வணிகம் எனப்படும். எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது மறுஏற்றுமதி வணிகம் எனப்படும்.

இப்போது ஈரானுக்கும் நேபாளத்திற்கும் இடையே ஏன் இந்தியா வந்துள்ளது என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். ஏன் நேபாளம் நேரடியாக ஈரானிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யவில்லை? இதற்கான காரணங்களை ஆராய்வோம்.



XI_Tamil_commerce_16-25_148-254.indd 250 2/17/2021 3:12:45 PM

### மறு ஏற்றுமதி வணிகத்திற்கான காரணங்கள்

பின்வரும் காரணங்களால் ஒரு நாடு பிற நாட்டிலிருந்து நேரடியாகப் பொருட்களைக் கொள்முதல் செய்ய முடியாது.

I. ஒரு நாடு பொருட்களை இறக்குமதி செய்யும் நாட்டோடு எந்த வணிக வழித்தடமும் இல்லாமல் இருந்தால்

II. பொருட்களை இறக்குமதி செய்த பிறகு அவற்றை மேலும் மாற்றம் செய்வதற்கோ அல்லது முடிவுற்ற பொருளாக மாற்றவோ போதிய வசதிகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நாடுகளில் இல்லாமல் இருந்தால்

III. இரண்டு நாடுகளுக்கிடையே வணிக ஒப்பந்தம் இல்லாமல் இருந்தால்.

IV. ஏற்றுமதியாளருக்கும் இறக்குமதியாளருக்கும் இடையே சரியான பொருளாதார உறவு இல்லாமல் இருந்தால்.

### மறு ஏற்றுமதி வணிகத்தின் சிறப்புக் கூறுகள்

### கீழ்க்கண்டவை மறு ஏற்றுமதி வணிகத்தின் சிறப்புக் கூறுகள் ஆகும்

1. இறக்குமதி தீர்வை விதிக்கப்படுவதில்லை
2. இவ்வகை பொருட்கள் மறுசீரமைக்கப்பட்டு மற்றும் மறு கட்டுமம் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது
3. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மறு ஏற்றுமதி செய்யப்படும் வரை பிணைய மீந்த பண்டக சாலையில் வைக்கப்படுகிறது.

## 25.08 பன்னாட்டு வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்

### நன்மைகள்

### 1. புவியியல் நிபுணத்துவம்

உலக நாடுகள் அனைத்தும் தாங்கள் கொண்டுள்ள இயற்கை வளங்கள், மனித ஆற்றல் தொழில்நுட்பம், மூலதனம், ஆகியவை அடிப்படையில் வேறுபடுகின்றன.சில நாடுகள் கனிம வளங்களை அதிகம் கொண்டவையாகவும் வேறு சில நாடுகள் உற்பத்தி தொழில் நுட்பம் மூலதன கருவிகள்,திறமையான மனித உழைப்பு ஆகியவற்றை அதிக அளவில் கொண்டுள்ளவையாகவும் இருக்கின்றன.ஆகவே உலக நாடுகள் ஒவ்வொன்றும் மக்களின் வாழ்க்கை தேவைக்காக தன்னிடம் உபரியாக உள்ள வளங்களை கொடுத்து பற்றாக்குறையான வளங்களை மற்ற நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு பன்னாட்டு வணிகம் தேவையாகிறது. பன்னாட்டு வணிகம் இல்லையெனில் அனைத்து நாடுகளும் எல்லா பொருட்களையும் தாங்களே உற்பத்தி செய்ய வேண்டிய நிலைக்கு உந்தப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் தனக்கு தேவையான பொருட்களை தானே உற்பத்தி செய்து தன்னிறைவு அடைவதென்பது சாத்தியமற்றது. ஆனால் பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் தன்னால் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் பற்றாக்குறையான பொருட்களை மற்ற நாடுகளிலிருந்து வாங்குவதற்கும் வழிவகுக்கிறது. பன்னாட்டு வணிகம் பன்னாட்டுச் சிறப்புத் தேர்ச்சிக்கு உதவுகிறது

### 2. இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்துதல்

பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு உதவி செய்கிறது. ஒவ்வொரு நாடும் தன்னிடம் இயற்கையாகவே அமைந்துள்ள வளங்களைப் பயன்படுத்தி அதிகப் பொருட்களை உற்பத்தி செய்ய முயல்கிறது. இந்த அதிகப்படியான பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத நாடுகளோடு பரிமாறிக்கொள்ள பன்னாட்டு வணிகம் உதவி செய்கிறது.

### 3. பொருளாதார வளர்ச்சி

வளரும் நாடுகள் இயந்திரம், தொழில் நுட்பம், மற்றும் கருவிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதன் வாயிலாக விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது. எடுத்துக்காட்டாக. சீனா, இந்தியா, பிரேசில், மற்றும் தென்கொரியா போன்ற நாடுகள் குறைவான பொருளாதார வளர்ச்சியிலிருந்து அதிக பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பன்னாட்டு வணிகம் காரணமாக உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் கூட பன்னாட்டு வணிகத்தின் மூலமாக மூலப்பொருட்களை இறக்குமதி செய்து முடிவுற்ற பொருட்களாக ஏற்றுமதி செய்து விரைவான பொருளாதர வளர்ச்சியை அடைந்திருக்கின்றன.

### 4. வேலைவாய்ப்பை உருவாக்குதல்

பன்னாட்டு வணிகம் வேளாண்மை மற்றும் தொழில் துறையை வளர்ச்சி மற்றும் விரிவடைய செய்வதன் காரணமாக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது. மேலும் ஏற்றுமதி மற்றும்

இறக்குமதி நிறுவனங்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பையும், அனுப்புகை மற்றும் அகற்றீட்டு முகவர், சரக்காணை இல்லம், போன்ற இடை நிலையர் மூலம் மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது.

### 5. வாழ்க்கைத்தரம் மேம்படுதல்

பன்னாட்டு வணிகத்தின் வாயிலாக உள் நாடடில் உற்பத்தி செய்ய முடியாத பல்வேறு விதமான பொருட்களை வெளி நாட்டிலிருந்து வாங்கிப் பயன்படுத்தமுடிகிறது. நாடுகளுக்கு இடையே சரக்கு மற்றும் சேவை பரிமாற்றம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.

### 6. விலை சமனிலைப்படுத்துதல்

உலகச்சந்தையில் தினந்தோறும் விலை மாற்றம் அடையக்கூடிய பல்வேறு பொருட்களின் விலையை பன்னாட்டு வணிகம் சமப்படுத்துகிறது. எப்பொழுதெல்லாம் குறிப்பிட்ட பொருட்களின் விலை உள் நாட்டில் உயருகிறதோ அப்பொழுது மற்ற நாட்டிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்து விலையை சமன் செய்கிறது. அதே போன்று குறிப்பிட்ட பொருட்களின் விலை குறையும்போதெல்லாம் அந்த பொருட்களை அதிக அளவில் மற்ற நாடுகளுக்கு ஏற்றமதி செய்வதன் மூலம் விலையை நிலைப்படுத்துகிறது. உலக நாடுகளில் பொருட்களின் விலை அதிக ஏற்றத்தாழ்வாக இல்லாமல் இருப்பதற்கு பன்னாட்டு வணிகம் உதவி செய்கிறது.

### 7. அதிக இலாபத்திற்கான வாய்ப்பு

பன்னாட்டு வணிகம் வியாபார நிறுவனங்களை அதிகமான பொருட்களை உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்பதன் வாயிலாக அதிக இலாபத்தை ஈட்ட உதவுகிறது.

### 8. முழுத்திறனையும் பயன்படுத்துதல்

பன்னாட்டு வணிகம் உலக நாடுகளில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் அதிக அளவில் சரக்கு மற்றும் பொருட்களை உலகச் சந்தையில் விற்பதற்கு உதவி செய்கிறது. இதன் மூலம் அந்நிறுவனங்கள் தன்னுடைய இயந்திரம் மற்றும் தொழில் நுட்பத்தை முழுமையான அளவில் பயன்படுத்துகிறது. மேலும் பேரளவு உற்பத்தியின் நன்மைகளான, குறைந்த விலையில் மூலபொருட்கள் வாங்குதல், ஏற்றிச்செல் கட்டணத்தில் சலுகை, குறைவான உற்பத்தி செலவு, எளிதான கடன், அதிக இலாபம், போன்றவற்றை அடைய பன்னாட்டு வணிகம் உதவுகிறது. உள் நாட்டு வியாபாரத்தை விட பன்னாட்டு வணிகத்தின் மூலம் உள் நாட்டு தொழிற்சாலை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக செயல்பட வழிவகுக்கிறது.

### 9. பன்னாட்டு அமைதி

உலக நாடுகள் தனித்தனியே இயங்கினாலும் பன்னாட்டு வணிகம் மற்ற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது. மேலும் கலாச்சாரம், பண்பாடு, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவற்றை பரிமாறிக்கொள்ள உதவுகிறது. பன்னாட்டு வணிகம் உலக மக்களிடையே கலாச்சார சமூக உறவுகளை வளர்க்க உதவுகிறது. ஒட்டு மொத்தமாக உலக அமைதிக்கு வழிவகுக்கிறது.

## குறைபாடுகள்

### 1. பொருளாதார சார்பு

பன்னாட்டு வணிகம் ஒரு நாடு இறக்குமதிக்காக மற்ற நாடுகளை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய சூழ் நிலையை உருவாக்குகிறது. இறக்குமதி செய்யும் நாடு தானே சுயமாக அப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் தன்னிறைவு அடைவதற்கும் எந்த முயற்சியும் மேற்கொள்வதில்லை. இதனால் இறக்குமதி செய்யும் நாடு தானாகவே ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு அடிமையாகும் சூழல் ஏற்படுகிறது.

### 2. உள்நாட்டுத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு

பன்னாட்டு வணிகம் உள் நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது. மேலும் கட்டுப்பாடற்ற இறக்குமதியும், அயல் நாட்டு நிறுவனங்களின் கடுமையான போட்டியும் உள் நாட்டுத்தொழில்களை முற்றிலும் அழிக்கக் கூடும். அயல் நாட்டு நிறுவனங்கள் உள் நாட்டில் சந்தையைக் கைப்பற்றும் நயவஞ்சக நோக்குடனே தங்கள் பொருட்களை உற்பத்தி விலைக்கும் குறைவாக விற்கின்றன. இந்த நிலைக்கு கொட்டுதல் (குவித்தல் ) (DUMPING) என்று பெயர். மக்கள் குறைவான விலையால் கவர்ந்திழுக்கப்பட்டு அயல் நாட்டுப் பொருட்களை வாங்க முயலும்போது அதே பொருட்களை உற்பத்தி செய்யும் உள் நாட்டு நிறுவனங்கள் போட்டியை சமாளிக்க முடியாமால் வியாபாரத்தை விட்டு செல்லக்கூடிய நிலை ஏற்படும் சூழல் எற்படலாம். இது உள் நாட்டு நிறுவனங்களை முற்றிலும் அழித்துவிடும் நிலைக்குத் தள்ளப்படும் சாத்தியக் கூற்றை ஏற்படுத்துகிறது. உள் நாட்டு வியாபாரத்தை விட்டு வெளியேறியவுடன் அயல்நாட்டு நிறுவனங்கள் விலையை உயர்த்தி மக்களை சுரண்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

### 3. ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல்

பன்னாட்டு வணிகம் ஆடம்பரப்பொருட்கள், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் ஆகியவற்றை அதிகம் கொள்முதல் செய்ய வழிவகுக்கிறது. இது மக்கள் நலனைப் பாதிக்கிறது. மேலும் அன்னிய செலாவணியை அதிகம் ஈட்டுவதற்காக அத்தியாவசியப் பொருட்களை அதிகம் ஏற்றுமதி செய்வதன் மூலம் உள் நாட்டில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் மக்கள் அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழல் உருவாகிறது.

### 4. இயற்கை வளங்களை தவறாகப் பயன்படுத்துதல்

அரிய இயற்கை வளங்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதன் மூலம் அவை வெகு விரைவாக வெறுமையாகிவிடுகின்றன. இதனால் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டில் சுற்றுச்சூழல் பேரழிவை ஏற்படுகிறது.

### 5. அரசியல் சுரண்டல்

பன்னாட்டு வணிகம் உலக நாடுகளிடையே பொருளாதாரச் சார்பு நிலையை உருவாக்குகிறது. இது நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமைகிறது. பன்னாட்டு நிறுமங்கள் உலக நாடுகளின் அரசுக் கொள்கை முடிவுகளை தங்களுக்குச் சாதகமாக மாற்றுகின்றன. காலப்போக்கில் பன்னாட்டு நிறுமங்கள் பணபலத்தின் மூலம் நாட்டின் ஆட்சியாளர்களை தங்கள் கைப்பாவையாக மாற்றிவிடுகின்றன. எடுத்துகாட்டாக, வெள்ளையர்கள் வியாபார நிமித்தமாக பல நாடுகளுக்குச் சென்று அடிமைப்படுத்தி நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்துள்ளார்கள்.

### 6. நாடுகளுக்கிடையே போட்டி

ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் போட்டி நாடுகளுக்குகிடையே போட்டியாக உருவெடுக்கிறது. இது நாடுகளுக்கிடையே சச்சரவுகளை உருவாக்கிப் போர் ஏற்படக்கூடிய சூழலை உருவாக்குகிறது.

### 7. கலாச்சார சீரழிவு

பன்னாட்டு வணிகம் நாட்டின் கலாச்சார சீரழிவிற்குக் காரணமாக அமைகிறது. இளைய தலைமுறையினர் அன்னிய நாட்டு மோகத்தில் தங்கள் வாங்கும் சக்தியையும் மீறி பொருட்களை வாங்கி தங்களை சமுதாயத்தில் மேம்பட்டவர்களாக காட்ட முற்படுகின்றனர். இது பழமையான வாழ்வியல் முறையை அழிக்கிறது.

### கலைச்சொற்கள்

1. பன்னாட்டு வணிகம்
2. ஏற்றுமதி வியாபாரம்
3. இறக்குமதி வியாபாரம்
4. மறு ஏற்றுமதி வியாபாரம்
5. சிறப்புத்தேர்ச்சி
6. இயற்கை வளங்கள்

### நமது சிந்தனைக்கு

1. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வணிகத்தில் ஆர்வம் செலுத்துதல்
2. ஏற்றுமதியாளராக முயற்சி செய்தல்

### மேலும் அறிவதற்கு

1. பன்னாட்டு வணிகத்தின் எதிர்கால வளர்ச்சி
2. பன்னாட்டு வணிகத்தின் பரந்த அளவிலான வளர்ச்சி

### பயிற்சி

#### I. சரியான விடையைத் தெரிவு செய்க.

1. நாடுகளுக்கிடையே சரக்கு. சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம், மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது

   அ) பன்னாட்டு வியபாரம்

   ஆ) பன்னாட்டு வணிகம்

   இ) மறு ஏற்றுமதி வியாபாரம்

   ஈ) உள்நாட்டு வியாபாரம்

2. சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ___________ எனப்படும்

   அ) இறக்குமதி

   ஆ) ஏற்றுமதி

   இ) மறு ஏற்றுமதி வியாபாரம்

   ஈ) பன்னாட்டு வியாபாரம்



XI_Tamil_commerce_16-25_148-254.indd 253 2/17/2021 3:12:45 PM

3. **நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக்கொள்ளப்பட்டால் அது_____ எனப்படும்**

அ) பன்னாட்டு வியாபாரம்

ஆ) பன்னாட்டு வணிகம்

இ) மறு ஏற்றுமதி வியாபாரம்

ஈ) உள்நாட்டு வியாபாரம்

4. **உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ____ எனப்படும்**

அ) உள்நாட்டு வியாபாரம்

ஆ) ஏற்றுமதி

இ) அயல் நாட்டு வியாபாரம்

ஈ) இணைவினை

**விடைகள்**

1. ஆ 2. இ 3. அ 4. ஆ

## II. குறுவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?
2. ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?
3. இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?
4. மறுஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக் கூறுகள் ஏதேனும் மூன்றை விளக்குக.
2. மறுஏற்றுமதியின் சிறப்புக் கூறுகளை விவரி.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
2. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

# அலகு – 8 பன்னாட்டு வணிகம்

அத்தியாயம்
26

# ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்

"செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.".

– குறள் 677

H9EHGU

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. ஏற்றுமதி வணிகத்தின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை விளக்க முடியும்
2. ஏற்றுமதி வணிக நடைமுறைகளை விவாதிக்க முடியும்
3. ஏற்றுமதி வணிகத்தில் இடைநிலையர்களின் பங்கு குறித்து எடுத்துரைக்க முடியும்
4. இறக்குமதி வணிக நடைமுறைகள் மற்றும் இடைநிலையர்கள் குறித்தும் விவரிக்க முடியும்.

## 26.01 ஏற்றுமதி நடைமுறை

இன்றைய நவீன உலகில் ஏற்றுமதி வணிகம் மிகுந்த முக்கியத்துவத்தை அடைந்திருக்கிறது. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் வளர்ச்சியின் மிக முக்கிய குறியீடாக ஏற்றுமதி வணிகம் உருவாகியுள்ளது. எந்த ஒரு நாடும் தனக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் தானே உற்பத்தி செய்து கொள்ள முடியாது. ஒவ்வொரு நாடும் பொருட்களை வாங்குதல் விற்றல் என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. எனவே அனைத்து நாடுகளும் பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடவேண்டியுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவை பன்னாட்டு வணிகம் எனும் நாணயத்தின் இரண்டு பக்கங்களாக உள்ளன. சுருங்கக் கூறின், ஒவ்வொரு நாடும் தன்னிடம் உபரியாக உள்ள பொருட்களை ஏற்றுமதி செய்வதும் பற்றாக்குறையாக உள்ள பொருட்களை இறக்குமதி செய்வதும் நடைமுறையில் உள்ளது. ஏற்றுமதியில் ஈட்டப்படும் அன்னியசெலாவணியை பயன்படுத்தி தன்னால் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள முடிகிறது.

இந்தியா, பங்களாதேஷ், தென்கொரியா போன்ற வளரும் நாடுகள் தங்களுக்கு தேவையான இயந்திரம், கருவிகள், மூலப்பொருட்கள், பெட்ரோலியப்பொருட்கள், கனிம வளங்கள், தொழில்நுட்பம் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அன்னிய செலாவணி அதிகம் தேவைப்படுகிறது. இந்திய அரசு ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிக்க அரசாங்கம் ரொக்கச்சலுகை, வரிச்சலுகை, நிறுவனங்களின் உதவி, சலுகை அடிப்படையிலான வட்டி வீதம், கட்டமைப்பு வசதி, கடன் உதவி, வரிவிலக்கு, போன்ற வசதிகளை வழங்குகிறது. இந்திய அரசு ஏற்றுமதியை அதிகரிக்க பல்வேறு வகையான நிறுவனங்களை உருவாக்கி உள்ளது.

### இந்தியாவில் பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான நிறுவனங்கள்

#### ஏற்றுமதி இறக்குமதி வங்கி

இறக்குமதி வங்கியை நிறுவியது. இதனுடைய முக்கிய நோக்கம் ஏற்றுமதிக்கு துணைபுரியும்

**இந்திய அரசாங்கம் அயல் நாட்டு வணிகத்தை ஊக்குவிப்பதற்காகவும் நிதி உதவி செய்வதற்காகவும் 1982 ஆம் ஆண்டு (முற்றிலும் அரசுக்குச் சொந்தமான) ஏற்றுமதி**

| பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்தும் நிறுவனங்கள் | நோக்கம் |
|---|---|
| 1. இந்திய வணிகத்துறை | பிற நாடுகளுடன் சர்வதேச வர்த்தக மற்றும் வணிக உறவுகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குதல் ஏற்றுமதி மேம்பாட்டு நடவடிக்கைக–ளைத் தொடங்குதல் ஏற்றுமதி சார்ந்த அலகுகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்கு செய்தல். |
| **2. ஏற்றுமதி வளர்ச்சிக்குழு** | குறிப்பிட்ட ஏற்றுமதி சார் பொருட்களின் ஊக்குவிப்பு மற்றும் மேம்பாடு செய்தல். |
| **3. ஏற்றுமதி ஆய்வுக் குழு** | தரமான கட்டுப்பாட்டு மற்றும் ஏற்றுமதிக்கு முந்தைய ஆய்வு மூலம் ஏற்றுமதி வர்த்தகத்தை மேப்பாடு செய்தல். |
| **4.அயல் நாட்டு வணிகத்திற்கான இந்திய நிறுவனம்** | பன்னாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு பயிற்சி அளித்து, பன்னாட்டு வணிகத்தின் பிரிவுகளில் ஆய்வுகளை நடத்துகிறது. |
| **5. பண்டக கட்டுமத்திற்கான இந்திய அரசு நிறுவனம்** | சரக்குகளை கட்டுமம் செய்வதற்கான பயிற்சியை வழங்குதல் |
| **6. சரக்குகள் வாரியம்** | பாரம்பரியமிக்க பொருட்கள் உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல் |
| 7. இந்திய வணிக மேம்பாட்டு நிறுவனம் | வர்த்தக கண்காட்சிகளை நடத்துதல் மற்றும் புதிய பொருட்களை ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட வணிக மற்றும் வியாபாரத் தகவல்களை வழங்குதல் |
| 8.மாநில வாணிகக் கழகம் | உலகின் பல்வேறு வணிகக் கூட்டாளி நாடுகளிடையே வர்த்தகத்தை மேம்படுத்துதல் |
| 9. உலோகங்கள் மற்றும் கனிம வர்த்தக கழகம் | நிலக்கரி, இரும்புத்தாது, உற்பத்தி வேளாண் மற்றும் தொழில்துறை உற்பத்தி விவசாய உரங்கள் போன்ற முதன்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளை கையாளுதல் |
| 10 ஏற்றுமதி மற்றும் கடன் பொறுப்புறுதி கழகம் | இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி கடன் காப்பீடு வழங்குதல் |

*நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது ஆகும்.*

### முக்கிய பணிகள்

1. *ஆலை, இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளைப் பெற ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு நேரடியாக வழங்குகிறது.*
2. *இது ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பங்குகள், கடன் பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புறுதி அளிக்கிறது.*

3. வணிக வங்கியால் தள்ளுபடி செய்யப்பட்ட குறுகிய கால ஏற்றுமதி உண்டியல்களை 90 நாட்களுக்கு மிகாமல் மறு-தள்ளுபடி செய்து கடன் வழங்குகிறது.

4. அயல்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு கடனுதவி செய்து இந்திய மூலதனப் பொருட்களை வாங்க செய்கிறது.

5. ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு நிதிஉதவி அளிக்கிறது.

6. இது சர்வதேச வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வெளிநாட்டு வணிகம் பற்றிய சந்தை மற்றும் கடன் தகவலைச் சேகரித்து வழங்குகிறது.

### பன்னாட்டு வணிகத்தில் வணிக வங்கிகளின் பங்கு

வணிக வங்கிகள் இரண்டு வழிகளில் கடனுதவி செய்கிறது.

1. ஏற்றுமதிக்கு முந்தைய நிதி உதவி
2. ஏற்றுமதிக்குப் பிந்தைய நிதி உதவி

### 1. ஏற்றுமதிக்கு முந்தைய நிதி உதவி

இவ்வகை நிதி உதவி ஏற்றுமதியாளர்கள் மூலப்பொருளை வாங்கி முடிவுற்ற பொருட்களாக உருவாக்கி ஏற்றுமதி செய்வதற்கு வழங்கப்படுகிறது. இவ்வகை கடன் ஏற்றுமதி ஆனணகள் மற்றும் கடன் கடித அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

### 2. ஏற்றுமதிக்குப் பிந்தைய நிதி உதவி

இவ்வகை நிதி உதவி மாற்றுச்சீட்டுகள், கப்பல் ஆவணங்கள் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன் கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில் சரக்கு ஏற்றிய நாள் முதல் ஏற்றுமதி தொகை பெறும் வரை, மூலதன தேவைக்கும் காப்பீட்டு கட்டணம், முகவர் கழிவு, ஏற்றுமதி அபிவிருத்தி, ஆகிய செலவுகளுக்காக வழங்கப்படுகிறது

### ஏற்றுமதி வணிகத்தின் நோக்கங்கள்

1. பொருட்கள் தேவைப்படும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவி செய்தல்.
2. பேரளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தையை விரிவாக்குதல்.
3. ஏற்றுமதியின் மூலம் அன்னிய செலாவணியை ஈட்டுதல்
4. நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரித்தல்.
5. ஏற்றுமதி சார்ந்த மற்றும் ஏற்றுமதி தொடர்புடைய நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குதல்.
6. சுங்க வரி மற்றும் தீர்வைகளின் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டுதல்
7. நாடுகளுக்கிடையே பரஸ்பர புரிதல் மற்றும் கூட்டுறவை மேம்படுத்துதல்.
8. பேரளவு உற்பத்தியின் மூலமாக வளங்களை உத்தம அளவிற்கு பயன்படுத்தும் நிலையை அடைதல்.

### ஏற்றுமதி வணிக நடைமுறைகள்

### 1. வியாபார தகவல் வினவல்

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரிடமிருந்தோ அல்லது அவரின் முகவரிடமிருந்தோ பொருட்களை இறக்குமதி செய்வதற்கான எழுத்து மூலமான விசாரணையை பெறுகிறார். இதன் முதற்கட்டமாக கீழ்கண்ட தகவல்களை தருமாறு ஏற்றுமதியாளரிடம் கோருகிறார்

அ) பொருட்களின் அளவு,வடிவம், தரம், வணிகக்குறி பெயர் குறித்த விவரம்

ஆ) தயாராக உள்ள பொருட்களின் அளவு

இ) பொருளின் விலை

ஈ) கப்பலில் பொருட்களை அனுப்புவதற்கான நிபந்தனைகள்

உ) பணம் செலுத்துவதற்கான நிபந்தனைகள்

ஊ) பொருட்கள் விநியோகிக்கப்படும் கால அளவு

எ) இறக்குமதி விசாரணை செல்லுபடியாகும் கால அளவு

### 2. சரக்காணை பெறுதல் மற்றும் ஏற்றுமதி ஆணையை உறுதிப்படுத்துதல்

இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப்பிறகு சரக்கை வாங்குவதற்கான சரக்காணையைத் தானோ அல்லது தன் முகவர் மூலமோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார். சரக்காணை என்பது சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும். சரக்காணை இரண்டு நகல்களில் தயாரிக்கப்பட்டு ஒரு நகலை ஏற்றுமதியாளருக்கு அனுப்பி விட்டு மற்றொன்றை இறக்குமதியாளர் தன்னிடம் வைத்துக்கொள்வார்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 257 12/16/2020 4:23:42 PM

**சரக்காணை மூன்று வகைப்படும்**

**i. வெளிப்படை சரக்காணை**

இவ்வகைச் சரக்காணையில் சரக்கின் வகை, அளவு, தரம், விலை, கட்டும முறை, ஆகியவை ஏற்றுமதியாளரின் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கும்.

**ii. வரையறுக்கப்பட்ட சரக்காணை**

இவ்வகைச் சரக்காணையில் இறக்குமதியாளரே சரக்கின் வகை, அளவு, தரம், விலை, கட்டும முறை, ஆகியவற்றைக் குறிபிட்டிருப்பார். அதை ஏற்றுமதியாளர் முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும்.

***iii. உறுதி செய்யும் சரக்காணை***

இவ்வகை சரக்காணையை இறக்குமதியாளரோ அவரது முகவரோ உறுதி செய்வர். இறுதி சரக்காணை பின்னர் அனுப்பப்படும்.

**3. நாணய உறுதி கடிதம் ஏற்பாடு செய்தல்**

இத்தருணத்தில் இறக்குமதியாளரின் பணம் செலுத்தும் திறனை ஏற்றுமதியாளர் அறிய வேண்டும். எனவே அவர் இறக்குமதியாளரை நாணய உறுதி கடிதம் எற்பாடு செய்து தருமாறு கோருகிறார். இறக்குமதியாளர் மீது ஏற்றுமதியாளர் வரையும் மாற்றுமுறை உண்டியல் தன்னிடம் வரும்போது அதற்கு பணம் தருவதாக இறக்குமதியாளரின் வங்கி அளிக்கும் உறுதி மொழி அடங்கிய கடிதமே நாணய உறுதி கடிதம் ஆகும். நாணய உறுதி கடிதம் நன்கு அறிந்த இறக்குமதியாளருக்கு மட்டுமே வழங்கப்படும்.

Indent

LSK & Co.

Indent No. R/85/99
Dated April 20, 2018

23, Broad Street
Thomas Square,
London

M/S Nilgris Tea Company
18. Market Road, Ooty.

Dear sir,

Please purchase and ship to us the following goods

| Mark | Description of Goods | Remarks |
|---|---|---|
| ii S & C LONDON | 200 Cases of 100 Kg. each of CTC Ooty Tea No 15 | |

Please issue the above goods for the amount of Invoice adding 10% profit and for yo reimbursement. Ship the goods by the first available steamer of the Movendhan Steamship & c Please draw on us in favour of the Grindlay's Bank, with which we have arranged that your draft c us, with documents attached shall be accepted as cash, discount and premium being placed on o account.

Yours faithfully
For LSK & Co.
Sd/ Lawerence
Vice President ( Purchase)

**உங்களுக்குத் தெரியுமா?**

**சரக்காணை உள்ளடக்கம்**

1. அனுப்பப்பட்ட பொருட்களின் அளவு
2. பொருட்களின் வடிவமைப்பு
3. விலை
4. கப்பல் ஏற்றுமதிக்கான தன்மை
5. ஏற்றும் முறை
6. விநியோக காலம்
7. கட்டணம் செலுத்தும் முறை

பின்னர் ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் பணம் செலுத்தும் திறனை பற்றி ஐயப்படதேவையில்லை.

**4. ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் குறியீட்டு எண் பெறுதல்**

ஏற்றுமதியாளர் குறியீட்டு எண் பெற அயல் நாட்டு வணிகப் பொது இயக்குனரின் மண்டல அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஏற்றுமதியாளர் தான் அனுப்பும் அனைத்து கப்பலிடு ஆவணங்களிலும் இந்த குறியீட்டு எண்ணைக் குறிப்பிட வேண்டும். ஆனால் சொந்த பயன்பாட்டுக்கோ அல்லது வேளாண்மை பயன்பாட்டுக்கோ பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டால் இந்த எண்ணைக் குறிப்பிடவேண்டியதில்லை

**5. உறுப்பினர் சான்று பெறுதல்**

ஏற்றுமதியாளர் அரசு வழங்கும் ஏற்றுமதி தொடர்பான சலுகைகளை பெற வேண்டுமெனில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவிடம் உறுப்பினர் சான்று பெறவேண்டும்

**6. பொருட்களை உற்பத்தி செய்தல்/ கொள்முதல் செய்தல் / கட்டுமம் செய்தல்**

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்தோ, கொள்முதல் செய்தோ வைத்திருக்க வேண்டும். ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்ய தேவைப்படும் மூலப்பொருட்களுக்கு சுங்கத்தீர்வை செலுத்த வேண்டி இருப்பின் அதிலிருந்து விலக்குப் பெற உரிய படிவத்தில்

letter of credit sample

Name and Address of Bank

Date:___________

Irrevocable letter of Credit No. _________

Beneficiary: Commodity Credit Corporation    Account Party: Name of Exporter
Address of Exporter

Gentlemen:

We hereby open our irrevocable credit in your favor for the sum or sums not to exceed a total of _________dollars ($_______), to be made available by your request for payment at sight upon the presentation of your draft accompanied by the following statement:

**(Insert applicable statement)/2**

This Letter of Credit is valid until ______________/3, provided, however, that this Letter of Credit will be automatically extended without amendment for ___________/4 from the present or any future expiration date thereof, unless at least thirty (30) days prior to any such expiration date the Issuing Bank provides written notice to the Commodity Credit Corporation at the U.S. Department of Agriculture, 14th and Independence Avenue, S.W., Stop 1025, Washington, D.C. 20250-1025, of its election not to renew this Letter of Credit for such additional ______________/5 period. The notice required hereunder will be deemed to have been given when received by you.

This letter of Credit is issued subject to the Uniform Customs and Practice for Documentary Credits, 2007 Revision, International Chamber of Commerce Publication No. 600

(Name of Bank)

By: _____________

ஏற்றுமதி ஆனணயாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஏற்றுமதி ஆணையாளர் சரிபார்த்து சான்று ஒன்றை வழங்குவார். எனினும் ஏற்றுமதியாளர் ஏற்கனவே சுங்கத்தீர்வை செலுத்தியிருப்பின் அதை திரும்பப் பெறும் சுங்கவரி திருப்பி செலுத்தும் இயக்குனர் (Director of Drawback) அவர்களுக்கு விண்ணப்பித்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் குறிப்பிட்ட பொருட்களை தொழிற்சாலையிலிருந்தோ அல்லது சந்தையிலிருந்தோ தருவித்துகொள்ள வேண்டும். இறக்குமதியாளர் குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பொருட்கள் கட்டுமம் செய்யப்படவேண்டும். அவ்வாறு நிபந்தனைகள் எதும்குறிப்பிடப்படவில்லையெனில்,ஏற்றுமதியாளர் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கட்டுமம் செய்ய வேண்டும். மேலும் கட்டுமக்குறியீடு என்பது இறக்குமதியாளரை எளிதில் அடையாளம் காணும் வகையில் செய்யப்படவேண்டும். கட்டுமக்குறியீட்டில் இறக்குமதியாளரின் பெயர், சேரவேண்டிய துறைமுகம், சரக்கின் எடை, ஆகியவை குறிப்பிடப்படவேண்டும்.

### 7.ஏற்றுமதி ஆய்வு சான்று

பொருட்கள் கட்டுமம் செய்யப்பட்ட பிறகு ஏற்றுமதியாளர் ஏற்றுமதி ஆய்வு முகமைக்கு விண்ணப்பித்துச் சான்று பெற வேண்டும். ஏற்றுமதி ஆய்வாளர் கட்டுமமுறையில் திருப்தி அடைந்தால் சான்று ஒன்றை வழங்குவார். இச்சான்று பொருட்களைக் காப்பீடு செய்வதற்குப் பயன்படும்.

### 8.பொருட்களை காப்பீடு செய்தல்

ஏற்றுமதியாளர் சரக்கை அனுப்புவதற்கு முன் உரிய நிறுவனத்தில் காப்பீடு செய்தல் வேண்டும். காப்பீடு என்பது கப்பல் சேதமடைதல், ஒன்றோடு ஒன்று மோதுதல், கப்பல் மூழ்குதல், தீ, கடல் நீர் கப்பலில் புகுதல் போன்ற இடர்களுக்காகச் செய்யப்பட வேண்டும்.

### 9.தோற்றுவாய் சான்றிதழ்

இறக்குமதி ஏற்றுமதி வணிக நடைமுறையில் தோற்றுவாய்ச்சான்று மிக முக்கிய ஆவணமாகும். இச்சான்று ஏற்றுமதி செய்யப்படும் பொருள் குறிப்பிட்ட நாட்டில்தான் உற்பத்தி செய்யப்பட்டது என்ற உறுதிமொழியை விளம்புகிறது. இந்தியாவில் வணிக வங்கிகள்,



XI_Tamil_commerce 26-33_255-324.indd 259    12/16/2020 4:23:43 PM



Export Inspection Council Of India

Ministry of Commerce & Industry
Govt. of India

Certificate of Approval

In exercise of the powers conferred by the Export of Milk Products (Quality Control, Inspection and Monitoring) Rules, 2000 vide Notification No. S.O. 2720, dated 28 November 2000, published in the Gazette of India : Part - II, Section 3, Sub Section (ii), dated 16 December 2000,

M/s Malabar Regional Co-operative Milk Producers' Union Ltd.
(Name of the Plant)

having their registered office at ....... MRCMPU Ltd., Head Office Peringolam
........ Kozikode
(Address of the registered office)

is hereby granted approval/renewal of approval for a period of two years,

valid upto and including 21.06.2012 .......... under Approval No. MP-03-005/10

for processing of Ghee

..........for export.
(Scope of Approval)

in its plant situated at ...... Wayanad Dairy, Chuzali, Kalpetta,
P.O. Wayanad 673121
(Location of the Plant)

subject to the conditions that the plant should continue to meet the requirements of GOI Notification Number S.O. 2720 dated 28 November 2000 effective from 16 December 2000.

Place : New Delhi
Date : 11.10.2010

Signature :
Name : Dr. S. L. Saxena
Designation : Director (I&QC)

3rd Floor, NDYMCA Cultural Centre Building, 1 Jai Singh Road, New Delhi - 110 001
Tel : +91-11-23365540, 23748189 Fax :+91-11-23748024
E.mail : eic@eicindia.org Web : www.eicindia.org

இந்திய வணிக மற்றும் தொழில் கூட்டமைப்பு, ஏற்றுமதி வளர்ச்சிக்குழு போன்றவை இச்சான்றை வழங்க அதிகாரம் பெற்ற நிறுவனங்களாகும். இச்சான்று இருமுனை வணிக ஒப்பந்தம் உள்ள நாடுகளில் இறக்குமதியாளர், இறக்குமதி தீர்வையிலிருந்து சலுகை பெற உதவுகிறது.

### 10.வாணிகத் தூதுவர் இடாப்பு

பல நாடுகளில் இறக்குமதி வரியானது சரக்கின் மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இடாப்பில் கண்டுள்ள தொகை சரியானதுதானா என்று இறக்குமதியாளர் நாட்டிலுள்ள சுங்க அதிகாரிகள் முதலில் உறுதி செய்துகொள்ள விரும்புவர். இதன்படி இறக்குமதியாகும் சரக்கின் மதிப்பு சரியானதுதான் என்று சான்று பகரக்கூடிய ஆவணமே வாணிகத் தூதுவர் இடாப்பு ஆகும்.


இதற்கான படிவத்தில் ஏற்றுமதியாளர் விவரங்களைப் பூர்த்தி செய்து, அவர் நாட்டில் பணிபுரியும் (இறக்குமதியாளர் நாட்டு) வாணிகத் தூதுவரிடம் கையொப்பம் பெற்று இறக்குமதி யாளருக்கு அனுப்பி வைப்பார். இறக்குமதி நாட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| Registration No. ...............(Optional)<br>1. Exporter (Name and Office Address) | 3. Country Ref. No. ..................<br><br>SOUTHERN AFRICAN DEVELOPMENT COMMUNITY (SADC)<br>*CERTIFICATE OF ORIGIN* | | | |
| 2. Consignee (Name and Office address) | | | | |
| 4. Particulars of transport: | 5. For official use only | | | |
| 6. Marks and numbers; number and kind of package, description of goods<br><br>(i) Marks &Nos. (ii) Description of goods | 7. Customs Tariff No. | 8. Origin Criterion (See overleaf) | 9. Gross weight or other quantity | 10. Invoice No. & date (Optional) |
| 11. CUSTOMS ENDORSEMENT<br>Declaration certified<br>Export Document (2)<br>Form....................N°<br>Customs Office....................<br>Issuing Country or Territory...........<br>..........................................<br>Date.......................................<br>..........................................<br>Signature | 12. CERTIFICATION<br>..........................................<br>..........................................<br>..........................................<br>Signature...................................<br>Certificate of Customs or other Designated Authority<br>STAMP | | | |

சுங்க அதிகாரிகள் சரக்கு கட்டுமத்தை திறந்து பார்க்காமலே இடாப்பில் குறிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் சுங்கத்தீர்வை விதிப்பர்.

### 11. அனுப்புகை முகவரை அமர்த்துதல்

ஏற்றுமதியாளர் ஏற்றுமதி ஆய்வுச் சான்று பெற்ற பிறகு சரக்கை அனுப்ப சுங்க அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். பொதுவாக இந்த அனுமதி



Your Company, Inc. INVOICE
Address
City, State, ZIP (555) 555-555

SOLD TO:
Name
Address
City, State, ZIP

SHIPPED TO:
Same

| | |
|---|---|
| INVOICE NUMBER | 536524 |
| INVOICE DATE | March 16, 2015 |
| OUR ORDER NO. | 726278 |
| YOUR ORDER NO. | 1892727 |
| TERMS | Net 30 |
| SALES REP | Name |
| SHIPPED VIA | Air |
| F.O.B. | City, State |
| PREPAID or COLLECT | COLL |

Sales Tax Rate: 5.00%

| QUANTITY | DESCRIPTION | UNIT PRICE | AMOUNT |
|---|---|---|---|
| 120 | Product | 10.00 | $1,200.00 |
| 120 | Product | 10.00 | 1,200.00 |
| | | SUBTOTAL | 2,400.00 |
| | | TAX | 120.00 |
| | | FREIGHT | |
| | | | $2,520.00 PAY THIS AMOUNT |

DIRECT ALL INQUIRIES TO:
Name
(555) 555-555
email: someone@somename.com

MAKE ALL CHECKS PAYABLE TO:
Your Company, Inc.
Attn: Accounts Receivable
Address
City, State, ZIP

THANK YOU FOR YOUR BUSINESS!

பெறும் பணிக்காக தன் சார்பாக அனுப்புகை முகவரை நியமிக்கிறார். அனுப்புகை முகவர் தான் செய்யும் இந்தப் பணிக்காகக் கழிவைப் பெற்றுக்கொள்கிறார்.

### 12. துறைமுகத்திற்கு சரக்கை அனுப்புதல் மற்றும் முகவருக்குத் தகவல் தருதல்

ஏற்றுமதியாளர் சரக்கைத் துறைமுகத்திற்கு இரயில் அல்லது லாரி மூலம் அனுப்பிவிட்டு அதற்குரிய இரயில் ரசீது அல்லது லாரி இரசீதை அனுப்புகை முகவருக்கு அனுப்பி வைப்பார்.

### 13. அனுப்புகை முகவர் பின்பற்ற வேண்டிய சுங்க நடைமுறைகள்

#### i. துறைமுக நகரத்திலிருந்து சரக்கை பெற்றுக்கொள்ளுதல்


துறைமுக நகரத்திற்கு சரக்கு வந்தடைந்தவுடன் ரயில் இரசீது அல்லது லாரி இரசீதை கொடுத்து சரக்கைப் பெற்று கொள்கிறார். சரக்கை அனுப்பும் வரை பண்டகத்தில் வைத்துப் பாதுகாக்கிறார்.

#### ii. கப்பலிடு ஆணை பெறுதல்

அனுப்புகை முகவர் கப்பல் நிறுவனத்தை அணுகி சரக்கை அனுப்புவதற்கான இடத்தை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும். முன்பதிவு செய்த பிறகு கப்பல் நிறுவனம் கப்பல் ஆணையை வழங்கும். இதில் கப்பல் தலைவருக்கு சரக்கை ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கும். மேலும் இதில் கப்பலின் பெயர், அனுப்பபடும் சரக்கின் தன்மை, சரக்கு அனுப்பபடும் நாள், சரக்கின் எடை, சேர வேண்டிய துறைமுகம், மற்றும் செலுத்தப்பட்ட சத்தம் போன்ற விவரங்கள் அடங்கி இருக்கும்.

#### iii. கப்பல் வாடகை முறி

கப்பல் வாடகை முறி என்பது கப்பல் உரிமையாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் அல்லது அவரது முகவருக்கும் இடையே முழு கப்பலையோ அல்லது கப்பலின் ஒரு பகுதியையோ குறிப்பிட்ட கப்பல் பயணத்திற்கோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கோ சரக்கை ஏற்றிச்செல்ல செய்து கொள்ளும் உடன்பாடு ஆகும். குறிப்பிட்ட கப்பல் பயணத்திற்கு உடன்பாடு செய்து கொண்டால் அது கப்பல் பயண வாடகை முறி (Voyage Charter) எனப்படும். குறிப்பிட்ட காலத்திற்கு உடன்பாடு செய்து கொண்டால் அது கால வாடகை முறி (Time Charter) எனப்படும்.



PRINTED WITH SOY INK

YOUR COMPANY NAME
Address
CITY, STATE, ZIP CODE
Phone Number
Advertising Line

SHIPPING ORDER

SHIPPER NUMBER 001001

SHIPPED TO
ADDRESS
CITY

DATE SHIPPED
CUSTOMER'S ORDER NUMBER
OUR NUMBER
SHIPPED VIA

| QUANTITY ORDERED | QUANTITY SHIPPED | DISCRIPTION |
| --- | --- | --- |

HOW PACKED
RECD. BY

PRINTED IN U.S.A.

Thank You

இதில் கப்பலின் பெயர், சரக்கேற்றுமிடம், சேரவேண்டிய துறைமுகம், ஏற்றுமதியாளரின் பெயர், மற்றும் சத்தம் (Freight) போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும்

### 14. சரக்கை அகற்றுதல் தொடர்பான சுங்க நடைமுறைகள்


ஏற்றுமதியாளரோ அல்லது அவரது முகவரோ கப்பல் சீட்டுகளை மூன்று படிகளில் தயாரிக்கிறார். கப்பல் சீட்டில் கீழ்கண்ட விவரங்கள் அடங்கி இருக்கும்.

அ) ஏற்றுமதியாளரின் பெயர் மற்றும் முகவரி

அ) சரக்கு பற்றிய விவரம்

இ) சரக்கின் அளவும் மதிப்பும்

ஈ) அடையாளக்குறிகளும் கட்டுமங்களின் எண்ணிக்கையும்



Association of Ship Brokers & Agents (U.S.A.), Inc.
October 1977

CODE WORD FOR THIS CHARTER PARTY:
ASBATANKVOY

TANKER VOYAGE CHARTER PARTY

PREAMBLE

Place ____ Date ____

IT IS THIS DAY AGREED between ____

chartered owner/owner (hereinafter called the "Owner") of the ____

SS/MS ____ (hereinafter called the "Vessel")

உ) சேர வேண்டிய துறைமுகம்

ஊ) சரக்கேற்றுமிடம்

சரக்கின் தன்மைக்கேற்ப மூன்று வகையான கப்பல் சீட்டுக்கள் தயாரிக்கப்படும். அவை சுங்கத்தீர்வை கொண்ட பொருட்கள், சுங்கத்தீர்வை இல்லா பொருட்கள் மற்றும் சுங்கத்தீர்வை திரும்ப பெற வேண்டிய பொருட்கள் ஆகியனவாகும். அனுப்புகை முகவர் சுங்கத்தீர்வை கொண்ட பொருட்களுக்கு சுங்க அதிகாரிகளால் தீர்மானிக்கப்படும் ஏற்றுமதி சுங்கத்தீர்வையை செலுத்தவேண்டும்.

### i. துறைமுக கட்டணம் செலுத்துதல்

அனுப்புகை முகவர் ஏற்றுமதி கட்டணம் செலுத்திய பிறகு சரக்கை துறைமுகத்திற்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். அவர் துறைமுக செலுத்து சீட்டை இரண்டு நகல்களில் பூர்த்திசெய்து கப்பல் சீட்டின் ஒரு நகலை இணைத்து துறைமுக அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அவர் துறைமுக கட்டணத்தையும் செலுத்த வேண்டும். துறைமுக அதிகாரிகள் செலுத்து சீட்டின் ஒரு நகலை வைத்துக்கொண்டு மற்றொன்றை முகவருக்கு வழங்குவர். இந்த கையொப்பமிட்ட நகலே துறைமுக இரசீது (Dock Receipt or Port Trust Receipt) எனப்படும்.

### ii. சரக்கை அனுப்ப அனுமதி பெறுதல்

அனுப்புகை முகவர் சரக்கை துறைமுகத்திற்குக் கொண்டு செல்கிறார். துறைமுகத்திலுள்ள சுங்க தடுப்பு அதிகாரிகள் கப்பல் இரசீதில் குறிப்பிட்டுள்ளபடி சரக்குகள் உள்ளனவா என ஆய்வு செய்கின்றனர். இவர் சரக்கைக் கப்பலில் ஏற்ற சுங்க ஏற்றுமதி அனுமதிச் சீட்டு ( Customs Export Pass) ஒன்றை வழங்குவர். அல்லது கப்பலில் ஏற்றலாம் என மேலொப்பமிட்டு வழங்குவார்.

### iii. கப்பல் தலைவர் இரசீது

கப்பல் தலைவர் அல்லது அவரது உதவியாளர் கப்பலில் சரக்கை பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது ஆகும். இதில் சரக்கின் அளவு, கட்டுமங்களின் எண்ணிக்கை,கட்டும நிபந்தனைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும். கப்பல் தலைவர் அல்லது அவரது உதவியாளர் சரக்கின் கட்டுமத்தில் திருப்தி அடைந்தால் தூய இரசீது (Clean Receipt) வழங்குவார். கட்டுமத்தில் குறைபாடு இருப்பின் குறைபாடுடைய இரசீது (Foul Receipt) வழங்குவார். அனுப்புகை முகவர் தூய இரசீது பெற வேண்டும். இல்லையெனில் காப்பீட்டு நிறுவனம் இடர் ஏற்பட்டால் எந்த பொறுப்பையும் ஏற்காது.

### iv. கப்பல் இரசீது

கப்பல் இரசீது என்பது கப்பல் உரிமையாளரோ அல்லது அவர் முகவரோ குறிப்பிட்ட சரக்கை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் நல்ல முறையில் கொண்டு சேர்க்கப்படும் என்பதற்கான சான்று ஆகும். இதில் கீழ்கண்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.

1 . கப்பலின் பெயர்

2 . சரக்கு அனுப்பப்படும் நாள்

3 . சரக்கேற்றுமிடம்

4 .சேரும் துறைமுகம்

5 . ஏற்றுமதியாளர் பெயர் மற்றும் முகவரி

6 .இறக்குமதியாளர் பெயர் மற்றும் முகவரி

7 . கட்டுமங்களின் எண்ணிக்கை


8 . சரக்கின் தன்மை

9 . அடையாளக் குறியீடுகள்

10 . செலுத்த வேண்டிய சத்தம்

## 15. வாணிக இடாப்பை தயாரித்தல் மற்றும் வங்கியில் ஆவணங்களை தாக்கல் செய்தல்.

இறக்குமதியாளருடன் செய்துகொண்ட நிபந்தனைகள் அடிப்படையில் ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கு தொடர்பாக வாணிக இடாப்பை மூன்று நகல்களில் தயாரிக்கிறார். அதன் பிறகு ஏற்றுமதியாளர் ஏற்றுமதி தொடர்புடைய


MATES RECEIPT
COPY NOT-NEGOTIABLE
No. 12667
Convent, LA, 7/21/08
RECEIVED THIS DAY IN APPARENT GOOD ORDER AND CONDITION,
ABOARD THE VESSEL: M/V UBC SYDNEY From
ZEN-NOH GRAIN CORPORATION
OPERATING
ZEN-NOH GRAIN ELEVATOR
CONVENT, LOUISIANA
FOR THE ~~ORDER~~ ACCOUNT OF ZEN-NOH GRAIN CORPORATION
1,194,818 12/56 bushels of U.S. NO.2 OR BETTER YELLOW CORN said to weigh 66,909,820 pounds
Stowage: HOLD NOS. 1,2,3,4,5.
L.S.
L.S.
30.350.095 mt
QUALITY & QUANTITY UNKNOWN



XI_Tamil_commerce 26-33_255-324.indd 262 12/16/2020 4:23:44 PM

அனைத்து ஆவணங்களையும் (வாணிக இடாப்பு, காப்பிட்டு திட்டாவணம், தோற்றுவாய்ச் சான்று, வாணிகத்தூதுவர் இடாப்பு போன்றவை) தன்னுடைய வங்கிக்கு அனுப்பி வைக்கிறார். மேலும் அந்த ஆவணங்களை இறக்குமதியாளரின் வங்கிக்கு அனுப்பி வைக்குமாறும், இறக்குமதியாளர் மாற்று ச்சீட்டிற்கு பணம் செலுத்த ஒப்புகொண்ட பிறகு, அவற்றை அவரிடம் ஒப்படைக்குமாறு நிபந்தனை விதிக்கிறார்.

### 16. பணம் செலுத்தபெறல்

#### 1. மாற்றுச்சீட்டு மூலம் பணம் செலுத்தப்பெறல்

மாற்றுச்சீட்டு இரண்டு வகைப்படும்

#### i) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள் ஒப்படைத்தல்

இம்முறையில் இறக்குமதியாளரின் வங்கிப் பணம் செலுத்திய பிறகே, இறக்குமதியாளரிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்படும்

#### ii) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள் ஒப்படைத்தல்

இம்முறையில் இறக்குமதியாளர்,ஏற்றுமதியாளர் வரைந்த மாற்றுச்சீட்டிற்கு ஒப்புதல் தெரிவித்த பிறகே ஆவணங்கள் ஒப்படைக்கப்படும். இறக்குமதியாளரின் வங்கி ஏற்றுமதியாளரின் வங்கியின் மூலம் மாற்றுச்சீட்டின் முதிர்வு நாளிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ பணத்தை செலுத்தும்.

### கப்பல் இரசீது உள்ளடக்கம்

1. கப்பல் பெயர்
2. ஏற்றுமதி தேதி
3. ஏற்றிய இடம்
4. இலக்கு துறைமுகம்
5. ஏற்றுமதியாளர் முகவரி மற்றும் பெயர்
6. இறக்குமதியாளர் முகவரி மற்றும் பெயர்
7. பொருட்களின் விளக்கம்
8. பொதிகளின் எண்ணிக்கை
9. பொருட்களில் தனித்துவமான குறி
10. வாடகைத் தொகை

#### 2. வங்கிச் சான்று மூலம் பணம் செலுத்தப்பெறல்

ஏற்றுமதியாளர் தன்னுடைய வங்கியிலிருந்து ஏற்றுமதி சார்ந்த அனைத்து ஆவணங்களும் இறக்குமதியாளருக்கு அனுப்பப்பட்டுவிட்டது எனவும், அன்னிய செலாவணி கட்டுப்பாட்டின்படி பணம் செலுத்தப்படும் என்ற சான்று ஒன்றை பெறவேண்டும்.

### ஏற்றுமதி வணிக ஆவணங்கள்

#### சரக்கு தொடர்பான ஆவணங்கள்

1. சரக்காணை
2. தோற்றுவாய் சான்றிதழ்
3. ஏற்றுமதி ஆய்வு சான்று

உங்களுக்குத் தெரியுமா?

### கப்பல் இரசீதின் மாதிரி

சென்னை தமிழன் என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட 1000 எண்ணிக்கை கொண்ட சரக்கு (கட்டும குறியீடு SE-01) ரேபல் ரேஞ்ஸ் கப்பலில் (கப்பல் தலைவர் உதயகுமார்) நல்ல நிலையில் ஏற்றப்பட்டு சிகாகோ துறைமுகத்தில் பல்லவன் & கோ விடமோ அல்லது அவரது முகவரிடமோ நிபந்தனைகளுக்கு உட்பட்டு சரக்கு கட்டணம் செலுத்திய பிறகு ஒப்படைக்கப்படும்.

முத்திரை

மூவேந்தன் கப்பல் நிறுவனம்

கையொப்பம்

நாள். 20-பிப்ரவரி-2018



XI_Tamil_commerce 26-33_255-324.indd 263 12/16/2020 4:23:44 PM

### கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள்

| அடிப்படை | கப்பல் இரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|
| 1. பொருள் | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணமாகும். | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது பெரும் கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும் |
| 2. மாற்றும் தன்மை | இதை எளிதில் மேலெழுதுதல் வாயிலாக மூன்றாம் நபருக்கு மாற்றித்தர முடியும் | இதை மூன்றாம் நபருக்கு மாற்றித் தர முடியாது. |
| 3. கடன் பெறுதல் | இதைப் பிணையமாக வைத்துக் கடன் பெறலாம் | இதைப் பிணையமாக வைத்துக் கடன் பெற முடியாது |
| 4. குத்தகை | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் அல்ல. | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் ஆகும். |

### ஏற்றுமதி ஆவணங்கள்

**1. சரக்கு தொடர்பான ஆவணங்கள்**

1. சரக்காணை
2. தோற்றுவாய் சான்றிதழ்
3. ஏற்றுமதி ஆய்வு சான்று

**2. சரக்கு அனுப்புகை தொடர்பான ஆவணங்கள்**

1. கப்பல் துணைத்தலைவர் இரசீது
2. கப்பல் சீட்டு
3. கப்பல் ஆணை
4. கப்பல் இரசீது
5. கடல்சார் காப்பீட்டு திட்டாவணம்
6. வணிக தூதுவர் இடாப்பு
7. இரயில் ரசீது / லாரி ரசீது

**3.பணம் செலுத்துகை தொடர்பான ஆவணங்கள்**

1. நாணய உறுதி கடிதம்
2. வாணிக இடாப்பு
3. மாற்றுச்சீட்டு
4. வங்கிச் சான்று செலுத்துகை

**சரக்கு அனுப்புகை தொடர்பான ஆவணங்கள்**

1. *கப்பல் துணைத்தலைவர் இரசீது*
2. *கப்பல் சீட்டு*
3. *கப்பல் ஆணை*
4. *கப்பல் இரசீது*
5. *கடல்சார் காப்பீட்டு திட்டாவணம்*
6. *வணிக தூதுவர் இடாப்பு*
7. *இரயில் ரசீது / லாரி ரசீது*

**பணம் செலுத்துகை தொடர்பான ஆவணங்கள்**

1. *நாணய உறுதி கடிதம்*
2. *வாணிக இடாப்பு*
3. *மாற்றுச்சீட்டு*
4. *வங்கிச் சான்று செலுத்துகை*



XI_Tamil_commerce 26-33_255-324.indd 264 12/16/2020 4:23:44 PM

**ஏற்றுமதி வணிகத்தின் முக்கிய இடை நிலையர்கள்**

கீழ்க்கண்ட இடைநிலையர்கள் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபடுகிறார்கள்.

1. அனுப்புகை முகவர் (Forwarding Agent )
2. கழிவு முகவர் (Commission Agent )
3. ஏற்றுமதி வணிக இல்லம் (Export Trading House)

1. அனுப்புகை முகவர்

2. கழிவு முகவர்

3. ஏற்றுமதி வணிக இல்லம்

### 1. அனுப்புகை முகவர்

ஏற்றுமதியாளர் சரக்கை அனுப்புவது தொடர்பான சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற அனுப்புகை முகவரை நியமிக்கிறார். அனுப்புகை முகவர் ஏற்றுமதியாளருக்கு கீழ்க்கண்ட வழிகளில் உதவுகிறார்.

1. ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி தொடர்பான அனைத்து சட்ட நடைமுறைகளையும் தெரிவிக்கிறார்
2. ஏற்றுமதியாளருக்கு போக்குவரத்து மற்றும் சரக்கு கையாளுதல் தொடர்பான செலவுகள் பற்றிய தகவல் தருகிறார்.
3. சரக்கைக் கட்டுமம் செய்தல், குறியீடு செய்தல் போன்ற பணிகளில் ஏற்றுமதியாளருக்கு உதவுகிறார்.
4. ஏற்றுமதியாளர் சரக்கை அனுப்ப போக்குவரத்து வசதி செய்து உதவுகிறார்.
5. சுங்க நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உதவுகிறார்.
6. ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் பெறுதல் ஆகியவற்றில் உதவுகிறார்.
7. போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சி குறித்த தகவலை ஏற்றுமதியாளருக்கு தருகிறார்.

### 2. கழிவு முகவர்

கழிவு முகவர் கழிவு அடிப்படையில் செயல்படும் பன்னாட்டு முகவர் ஆவார். இவர் தன் சொந்த பெயரில் செயல்படுகிறார். இவரின் சிறப்பு, விலை நிலவரம் பற்றிய தேர்ந்த அறிவு பெற்றிருப்பது ஆகும். இவர் தன்னுடைய இறக்குமதி வாடிக்கையாளருக்கு சரக்கை குறிப்பிட்ட விலையில் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்றுமதியாளர் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுப்பி வைக்கிறார். சரக்கை அனுப்பியதும் அவருக்கும் ஏற்றுமதியாளருக்கும் உள்ள உறவு முடிந்து விடுகிறது. இது தற்காலிக உறவு முறை ஆகும். இந்த வியாபார நடவடிக்கை நிறைவு பெற்றதும் தனக்குரிய கழிவைப் பெற்றுகொள்கிறார்.

### 3. ஏற்றுமதி ஆணை நிலையம்

இந்தியாவில் ஏற்றுமதியை அதிகரிக்கவும், உலக சந்தையை வலுவூட்டவும் ஏற்றுமதி வளர்ச்சியை அதிகரிக்க பல்வேறு உதவிகளை செய்யவும், ஏற்றுமதி ஆணை நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள், வணிக நிறுவனங்கள், ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் ஏற்றுமதி தொழில் மண்டலம் (Export Processing Zone), மின்னணு தொழில் பூங்கா ஆகியவை அடங்கும்.

**பணிகள்.**

1. உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கான சந்தையைக் கண்டறிதல்
2. இறக்குமதியாளர் அல்லது அவரது முகவரைக் கண்டறிந்து ஏற்றுமதி செய்வதற்கான பதிலைப் பெறுதல்
3. சரக்கின் வடிவத்தை சந்தை தேவை, தரம், சரக்கை அளிப்பவரின் திறனுக்கு ஏற்றவாறு நிறுவுதல்
4. சரக்கை அனுப்ப போக்குவரத்தை தெரிவு செய்வதற்கு முன் அதன் விலை சேவையின் தரம், பாதுகாப்பை கருத்தில் கொள்ளுதல்.
5. சரக்கை குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்ப தயார் செய்தல்.
6. சரக்கை வாங்குபவரின் கடன் செலுத்துத்திறனை அறிதல்
7. நடவடிக்கைகளைப் பேசி முடித்தல்
8. சரக்கை காப்பீடு செய்தல்
9. வணிக நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல் மற்றும் சரக்கு மற்றும் சேவைக்கான தொகை செலுத்துதல்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 265 12/16/2020 4:23:44 PM

**இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (2011–12 முதல் 2016–17 வரை)** (₹ மதிப்பு கோடியில்)

| வருடம் | ஏற்றுமதி | இறக்குமதி | வணிக இருப்பு |
|---|---|---|---|
| 2011–2012 | 1,465,959 | 2,345,463 | –879,504 |
| 2012–2013 | 1,634,318 | 2,669,162 | –1,034,844 |
| 2013–2014 | 1,905,011 | 2,715,434 | –810,423 |
| 2014–2015 | 1,896,348 | 2,737,087 | –840,738 |
| 2015–2016(P) | 1,716,378 | 2,490,298 | –773,920 |
| 2015–2016 April to October | 998,212 | 1,501,291 | –503,079 |
| 2016–2017 April to October(P) | 1,039,797 | 1,396,352 | –356,554 |

ஆதாரம்: இந்திய அரசின் வர்த்தத் துறையின் ஆண்டறிக்கை 2016–2017 புதுதில்லி (P)–நிகழ்நிலை விவரம்

**இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி வணிகக் கூட்டாளிகள்** (₹ மதிப்பு கோடியில்)

| வரிசை | நாடுகள் | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 73,030.43 | 58,932.74 | 68,246.12 | 34,523.14 |
| 2 | ஐ அ எமிரேட் | 259,427.52 | 263,859.28 | 283,008.01 | 151,756.00 |
| 3 | அமெரிக்க | 201,852.69 | 198,140.14 | 208,939.49 | 98,227.09 |
| 4 | சவுதி அரேபியா | 68,029.68 | 41,796.44 | 34,253.90 | 50,685.41 |
| 5 | சுவிட்சர்லாந்து | 6,538.75 | 6,421.29 | 94,114.93 | 16,302.67 |
| 6 | சிங்கப்பூர் | 46,061.97 | 46,456.71 | 48,153.70 | 13,680.91 |
| 7 | ஜெர்மனி | 83,118.57 | 79,306.61 | 6,543.02 | 26,624.71 |
| 8 | ஹாங்காங்க் | 24,674.35 | 23,038.41 | 23,400.69 | 2,901.97 |
| 9 | இந்தோனேஷியா | 28,084.74 | 18,446.42 | 28,436.72 | 11,304.92 |
| 10 | ஈராக் | 35,614.11 | 50,531.32 | 64,115.09 | 33,830.51 |
| | மொத்தம் | 826,432.81 | 786,929.37 | 859,211.67 | 439,837.32 |
| | சதவீதம் | 43.58 | 45.85 | 46.46 | 46.91 |
| | மற்ற நாடுகள் | 1,069,915.60 | 929,448.66 | 990,217.07 | 497,863.92 |
| | சதவீதம் | 56.42 | 54.15 | 53.54 | 497,863.92 |
| | மொத்தம் | 1,896,348.41 | 1,716,378.03 | 1,849,428.74 | 53.09 |

ஆதாரம்: இந்திய அரசின் வர்த்தகத் துறையின் ஆண்டறிக்கை 2016–2017 புதுதில்லி



XI_Tamil_commerce 26-33_255-324.indd 266 12/16/2020 4:23:44 PM

10. பன்னாட்டு வணிகம் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல்.

11. கோருரிமைகளை தீர்வு செய்தல்

## 26.02 இறக்குமதி நடைமுறை

### பொருள்

அயல் நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வது இறக்குமதி வணிகம் ஆகும். உதாரணமாக, பிரான்ஸ் நாட்டிலிருந்து வேதிப்பொருட்களை இந்திய நிறுவனம் கொள்முதல் செய்வது ஆகும். சரக்கை கொள்முதல் செய்பவரை இறக்குமதியாளர் அயல்நாட்டு விற்பனையாளரை ஏற்றுமதியாளர் எனவும் அழைக்கின்றனர்

### இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள்

#### 1. விரைவான தொழில்மயமாக்கம்

வளரும்நாடுகள் விரைவாக தொழில்மயமாக வேண்டுமெனில் தங்களுக்கு தேவையான தொழில்நுட்பம், பற்றாக்குறையான மூலபொருட்கள். மூலதன பொருட்கள், (இயந்திரம், கருவிகள்) போன்றவற்றை பிற நாடுகளில் இருந்து இறக்குமதியின் மூலமாக கொள்முதல் செய்ய வேண்டும்.

#### 2. நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றல்

உள் நாட்டில் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான அளவில் பொருட்கள் கிடைப்பதில்லை அல்லது உற்பத்தி செய்ய முடிவதில்லை, எனவே அவ்வகை பொருட்களை பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பற்றாக்குறையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

#### 3. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

உள்நாட்டு நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவையான கைபேசி, மகிழ்வுந்து, மடிக்கணினி, தொலைக்காட்சிப்பெட்டி, ஒலி சாதனம், துணி துவைக்கும் இயந்திரம் மற்றும் நறுமணப்பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி வணிகத்தின் மூலம் வாங்கிப் பயன்படுத்தி தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்கின்றனர்.

#### 4. பொருள் பற்றாக்குறையை சமாளித்தல்

புயல், நில நடுக்கம், வறட்சி, ஆழிப்பேரலை, கடுமையான விலையேற்றம், போன்ற சூழ்நிலைகள் காரணமாக உணவுப்பொருட்கள், காய்கறிகள், மற்றும் பிற முக்கிய பொருட்களை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து பொருட்களின் பற்றாக்குறையை சமாளிக்கலாம்.

#### 5. நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துதல்

பல நாடுகள் தங்களின் பாதுகாப்பை அதிகரிக்க இராணுவம் சார்ந்த கருவிகளை பிற நாடுகளிலிருந்து வாங்கி, தங்களுடைய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்றன.

### இறக்குமதி வணிக நடை முறைகள்

பன்னாட்டு வணிக கொள்கையின் காரணமாக இறக்குமதி நடை முறைகள் ஒவ்வொரு நாட்டிற்கும் இடையே வேறுபடுகிறது. இந்திய அரசும் இறக்குமதி நடைமுறைகளை வகுத்துள்ளது. அவற்றை கீழே காண்போம்.

#### 1. இறக்குமதி உரிமம் பெறுதல்

இறக்குமதியாளர் இறக்குமதி உரிமத்தை அயல்நாட்டு வணிகப் பொது இயக்குனரிடமிருந்தோ (Director General of Foreign Trade) அல்லது அனுமதி பெற்ற மண்டல அதிகாரியிடமிருந்தோ (Regional Authority) பெற வேண்டும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கட்டுப்படுத்தப்பட்ட பொருள் (Restricted Goods) தடைசெய்யப்பட்ட பொருட்கள் (Prohibited goods) மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் (Canalised Goods) என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட வகையைச் சாராத பொருட்களை இறக்குமதி செய்ய எவ்வித தடையும் இல்லை. இதற்கு இறக்குமதி உரிமம் தேவை இல்லை. இறக்குமதி உரிமம் மூலதனப் பொருட்களுக்கு 24 மாதமும் மற்ற பொருட்களுக்கு 18 மாதமும் செல்லுபடியாகும். இறக்குமதி உரிமத்தை சரக்கை அகற்றீடு செய்வதற்கும் அன்னிய செலாவணி பெறுவதற்கும் பயன்படுத்தவேண்டும்.

இறக்குமதியாளர் இணையதளத்தின் மூலம் படிவம் ANF-1A மற்றும் பிற ஆவணங்களையும் பதிவு செய்து மின்னணு குறியீட்டு எண் (e-IE CODE) பெற்றுக்கொள்ளலாம்



XI_Tamil_commerce 26-33_255-324.indd 267 12/16/2020 4:23:44 PM

## 2. வியாபார தகவல் வினவல்

இறக்குமதி உரிமத்தைப் பெற்ற பிறகு ஏற்றுமதியாளரிடமோ அல்லது அவரின் முகவரிடமோ வியாபார விசாரணை மேற்கொள்ளவேண்டும். இறக்குமதியாளர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் கீழ்கண்ட தகவல்களைத் தருமாறு கோருகிறார்.

1. சரக்கின் அளவு, வடிவம், மற்றும் தரம்
2. சரக்கின் எண்ணிக்கை
3. சரக்கின் விலை
4. சரக்கை அனுப்புவதற்கான நிபந்தனைகள்
5. பணம் செலுத்துவதற்கான நிபந்தனைகள்
6. சரக்கு அனுப்பப்படும் கால அளவு
7. வியாபார விசாரணையின் கால அளவு

இறக்குமதியாளர் வியாபார விசாரணை மேற்கொண்ட பிறகு விலைப்பட்டியலை அனுப்பி வைக்க வேண்டும்.

## 3 . அன்னிய செலாவணி பெறுதல்

இறக்குமதியாளர் தான் இறக்குமதி செய்த சரக்கிற்குரிய தொகையை, அயல் நாட்டு பண மதிப்பில் செலுத்த அன்னிய செலாவணியை பெற வேண்டும். அன்னிய செலாவணி பெறுவதற்கு அனுமதி பெற்ற நபரால் வழங்கப்பட்ட படிவத்தில் இறக்குமதி எண்ணை குறிப்பிட்டு அதனுடன் தேவையான ஆவணங்களை இணைத்து இந்திய ரிசர்வ் வங்கியின் அன்னிய செலாவணி துறைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கி விண்ணப்பத்தை ஆய்வு செய்து அன்னிய செலாவணியை வழங்கும்.

**ON THE LETTERHEAD OF THE EXPORTER**

To

The Commissioner of Customs
Custom House
**Chennai 600 001**

Dear Sir,

Sub : **AD CODE, IFS CODE, IE CODE, BANK DETAILS – REGN. FOR KATTUPALLI PORT**

I/We wish to inform you that we are maintaining Current Account Number ................. with ................... Bank, ................... Branch, Chennai, Tamilnadu.

IMPORT EXPORT CODE :
BANK BRANCH CODE :
IFS CODE :
AUTHORISED DEALER CODE :
BANK ACCOUNT NUMBER :
BANK NAME :
BRANCH ADDRESS :

I/We hereby declare that the above particulars are correct and certified that the above particulars are correct.

For ..........

Signature verified without any obligation
In the bank or any of its officials
For ........................ Bank

Authorised Signatory.

Authorised Signatory

**உங்களுக்குத் தெரியுமா?**

இறக்குமதியாளர் இணையதளத்தின் மூலம் படிவம் ANF-1A மற்றும் பிற ஆவணங்களையும் பதிவு செய்து மின்னணு குறியீட்டு எண் (e-IE CODE) பெற்றுக்கொள்ளலாம்

## 4 . சரக்காணை அனுப்புதல்

இறக்குமதியாளர்சரக்காணையைநேரடியாகவோ அல்லது சரக்காணையகத்தின் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். சரக்காணையில் சரக்கின் வகை, வடிவம், விலை, அளவு, தரம், கட்டுமம் செய்வதற்கான நிபந்தனைகள், காப்பீடு, சரக்கு வினியோகம் செய்யப்படும் போக்குவரத்து முறை, சரக்கு வினியோகம் செய்யப்படும் முறை, வினியோகம் செய்யப்படும் காலஅளவு போன்றவிவரங்கள் இடம்பெற்றிருக்கும்.

## 5 . நாணய உறுதி கடிதம் ஏற்பாடு செய்தல்

அயல் நாட்டு ஏற்றுமதியாளர் இந்திய இறக்குமதியாளரைப் பற்றியும் அவரின் பணம் திருப்பி செலுத்தும் திறனைப் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.எனவே அயல் நாட்டு ஏற்றுமதியாளர், இறக்குமதியாளரைத் தன் பெயரில் நாணய உறுதிக் கடிதம் ஏற்பாடு செய்து தருமாறு கோருகிறார். நாணய உறுதி கடிதம் என்பது இறக்குமதியாளர் சார்பாக அவரின் வங்கி ஏற்றுமதியாளருக்கு செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படும் அல்லது ஏற்றுமதியாளரின் வங்கி அனைத்து ஆவணங்களையும் இணைத்து வரையும் மாற்று சீட்டிற்கு பணம் செலுத்தப்படும் என்ற உறுதி மொழி அடங்கிய ஆவணமாகும். நாணய உறுதிக் கடிதம் நல்ல நிதி நிலைமை உள்ள இறக்குமதியாளாருக்கு மட்டுமே வழங்கப்படும். சரக்கு இறக்குமதி செய்த பிறகு ஏற்றுமதியாளரின் வங்கி அனைத்து ஆவணங்களையும் இறக்குமதியாளரின் வங்கிக்கு அனுப்பி பணத்தை செலுத்துமாறு கோரும்.

## 6 . கப்பலிடு ஆவணங்களைப் பெறுதல்

இறக்குமதியாளர் அனைத்து கப்பலிடு ஆவணங்களையும் அறிவுரை குறிப்புடன் (Advice Note) சேர்த்து ஏற்றுமதியாளரிடமிருந்து பெற



XI_Tamil_commerce 26-33_255-324.indd 268 12/16/2020 4:23:44 PM

வேண்டும். அறிவுரை குறிப்பு என்பது இறக்குமதியாளர் குறிப்பிட்ட சரக்கு அனுப்பப்பட்டுவிட்டது எனவும், அதை உரிய துறைமுகத்திற்கு வந்த பிறகு அதை பெற்றுக்கொள்ள உடன்பாடு செய்துகொள்ளுமாறு ஏற்றுமதியாளரின் குறிப்புரை அடங்கியது ஆகும். கப்பல் தலைவர் இறக்குமதி துறைமுக அதிகாரிக்கு குறிப்பிட்ட சரக்கு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டது என்ற தகவலை இறக்குமதி பொது அறிக்கை (Import General Manifesto) மூலம் தகவல் தெரிவிக்கிறார். துறைமுக அதிகாரி உரிய இறக்குமதியாளருக்கு தகவல் தெரிவிக்கிறார்.

### 7 . அகற்றீட்டு முகவரை நியமித்தல்

இறக்குமதி துறைமுகத்திலிருந்து சரக்கை அகற்றீடு செய்வதற்கு பல்வேறு சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. பொதுவாக இறக்குமதியாளர் இந்த சுங்க நடைமுறைகளை தன்னால் பின்பற்ற முடியாத நிலையில் சரக்கை துறைமுகத்திலிருந்து வெளியே கொணர்வதற்கு அகற்றிவிட்டு முகவரை நியமித்து அவருக்கு அதிகாரத்தை வழங்குகிறார். இறக்குமதியாளர் இறக்குமதி செய்யப்பட்ட சரக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும், சரக்கை துறைமுகத்திலிருந்து வெளியே கொணர்வதற்கு ஏதுவாக அகற்றீட்டு முகவருக்கு அனுப்பி வைக்கிறார். அகற்றீட்டு முகவர் கழிவு அடிப்படையில் இப்பணியை செய்கிறார்.

### 8 . சுங்க நடைமுறைகளைப் பூர்த்தி செய்தல்

அகற்றீட்டு முகவர் இறக்குமதியாளர் சார்பாக இறக்குமதி செய்யப்பட்ட சரக்கை வெளியே கொணர்வதற்கு பின்வரும் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

#### (i) சரக்கை வெளியே கொணர்வதற்கு ஒப்புகை பெறுதல்

அகற்றீட்டு முகவர் கப்பல் தலைவர் இரசீதில் இறக்குமதியாளரின் மேலொப்பம் பெற்று சரக்கை வெளிக்கொணர்வதற்கு கப்பல் நிறுவனத்தை அணுகுகிறார். சரக்கு கட்டணம் செலுத்தப்படவில்லை எனில் அதை செலுத்துகிறார். கப்பல் நிறுவனம் சரக்கு கட்டணம் செலுத்தப்பட்டவுடன் சரக்கை கப்பலிலிருந்து வெளியே கொணர்வதற்கு தனியாக ஒரு ஆணை அல்லது கப்பல் இரசீதில் மேலொப்பம் இட்டு வழங்கும். இதுவே சரக்கை அகற்றீடு செய்வதற்கான ஆதாரமாகும்.

#### (ii) துறைமுகக் கட்டணம் செலுத்துதல்

அகற்றீட்டு முகவர் துறைமுகக் கட்டணம் செலுத்துவதற்கு உரிய விண்ணப்பத்தை இரண்டு நகல்களில் Landing and Shipping Dues அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வலுவலகம் இறக்குமதி செய்யப்பட்ட சரக்கின் மீது துறைமுகக் கட்டணத்தை விதிக்கும். அக்கட்டணத்தை அகற்றீட்டு முகவர் துறைமுக செலுத்து சீட்டின் (Dock Challan ) மூலமாக செலுத்தவேண்டும். துறைமுக கட்டணம் செலுத்தப்பட்ட பிறகு இறக்கும் மற்றும் கப்பல் கட்டண (Landing and Shipping Dues) அலுவலகம் அந்த விண்ணப்பப் படிவத்தில் துறைமுகக் கட்டணம் செலுத்தப்பட்டது என்று முத்திரையிட்டு அல்லது தனியாக இரசீது ஒன்றை வழங்கும். இதற்கு துறைமுகக் கட்டண இரசீது (Port Trust Dues Receipt ) என்று பெயர்.

#### (iii) நுழைவு சீட்டு தயாரித்தல்

சுங்கத்தீர்வை செலுத்துவதற்கு நுழைவுச்சீட்டு மூன்று படிகளில் தயாரிக்கப்படவேண்டும். நுழைவுச்சீட்டில் இறக்குமதியாளரின் பெயர் மற்றும் முகவரி, கப்பலின் பெயர், சரக்கு பற்றிய முழு விவரம், கட்டுமங்களின் எண்ணிக்கை, இறக்குமதி ஏற்றுமதி குறியீட்டு எண் (IEC), ஏற்றுமதி நாட்டின் பெயர், மற்றும் செலுத்தப்படவேண்டிய சுங்கத்தீர்வை போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும். நுழைவு சீட்டு மூன்று வண்ணங்களில் வழங்கப்படும். இலவச பொருட்களுக்கு கருப்பு வண்ணத்திலும், உள்நாட்டில் பயன்படுத்தகூடிய பொருட்களுக்கு நீல வண்ண படிவமும் மறு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு ஊதா வண்ண படிவமும் வழங்கப்படும். சுங்க அதிகாரிகள் நுழைவுச்சீட்டின் அடிப்படையிலேயே இறக்குமதி தீர்வையை கணக்கிடுகிறார்கள்.

இறக்குமதியாளருக்கோ அல்லது அகற்றீட்டு முகவருக்கோ இறக்குமதி செய்யப்படும் சரக்கு பற்றிய முழு விவரம் தெரியவில்லை எனில் பார்வைச் சீட்டு (Bill of Sight) ஒன்றைத் தயாரிக்க வேண்டும். அதில் இறக்குமதி பொருள் பற்றி தங்களுக்கு தெரிந்த தகவல் அனைத்தையும் தெரிவிக்கவேண்டும். மேலும் தங்களால் சரக்கு பற்றிய முழு விவரத்தையும் அளிக்க முடியவில்லை என்ற குறிப்பையும் தெரிவிக்க வேண்டும். இது போன்ற சூழ்நிலைகளில் சுங்க அதிகாரிகள் சரக்கு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த பிறகே இறக்குமதி தீர்வை கணக்கிட இயலும்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 269 12/16/2020 4:23:44 PM

### (iv) இறக்குமதி தீர்வை செலுத்துதல்

அகற்றீட்டு முகவர் நுழைவுச்சீட்டுடன் மற்ற ஆவணங்களையும் இணைத்து சுங்க அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் தீர்வைக்குட்பட்ட சரக்கிற்கு அதற்குரிய இறக்குமதி தீர்வை செலுத்த வேண்டும்.

### (v) துறைமுக விடுவிப்பு ஆணை பெறுதல்

சுங்கத் தீர்வை செலுத்திய பிறகு துறைமுக மேற்பார்வையாளர் சரக்கை சரிபார்க்குமாறு நுழைவுசீட்டில் குறிப்பிட்டு ஆய்வு அதிகாரிக்கு அறிவுறுத்துகிறார். ஆய்வு அதிகாரி தனது அறிக்கையை நுழைவு சீட்டில் குறித்து துறைமுக மேற்பார்வையாளருக்கு அனுப்புகிறார்; அவர் விடுவிப்பு ஆணை வழங்குகிறார்.

### (vi) துறைமுகத்திலிருந்து சரக்கை வெளிக்கொணர்தல்

அகற்றீட்டு முகவர் துறைமுக அதிகாரிகளிடம் துறைமுக கட்டண செலுத்துச்சீட்டு, கப்பல் இரசீது, நுழைவுச்சீட்டு ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்து இறக்குமதி செய்யப்பட்ட சரக்கை துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு வருகிறார். இறக்குமதி செய்யப்பட்ட சரக்கு மீண்டும் மறுஏற்றுமதி செய்யபட வேண்டுமெனில் அவற்றை பிணையமிந்த பண்டக சாலையில் வைப்பிட்டு துறைமுக சான்றாணை (Dock Waarrant ) பெற வேண்டும்.

### (vii) இறக்குமதியாளருக்கு சரக்கை அனுப்புதல்

அகற்றீட்டு முகவர் சரக்கை இரயில் அல்லது லாரி மூலம் உரிய இரயில் இரசீது/லாரி இரசீது பெற்றுக்கொண்டு இறக்குமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார்.

### (viii) இறக்குமதியாளருக்கு குறிப்பு அனுப்புதல்

அகற்றீட்டு முகவர் சரக்கை இறக்குமதியாளருக்கு அனுப்பிய பிறகு இரயில் ரசிது/ லாரி இரசீது உடன் அவர் செய்த செலவுகள் பற்றிய அறிக்கையுடன் அவருக்கு செலுத்த வேண்டிய கழிவுத் தொகையையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கிறார்.

### 9. சரக்கை பெற்றுக்கொள்ளுதல்

இறக்குமதியாளர் உரிய இரயில் நிலையத்திலோ அல்லது லாரி நிறுவனத்திலோ இரயில் இரசீதை அல்லது லாரி இரசீதை கொடுத்து சரக்கைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### 10. இறக்குமதிக்கான தொகையைச் செலுத்தி கணக்கைத் தீர்த்தல்

இறக்குமதியாளர் கீழ்கண்ட வழிகளில் இறக்குமதிக்கான தொகையைச் செலுத்தலாம்.

1. இறக்குமதியாளர் தொகையைச் செலுத்திய பிறகு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்
2. இறக்குமதியாளர் மாற்றுச்சீட்டிற்கு தொகையைச் செலுத்திய பிறகு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

**சுங்க அதிகாரிப் பட்டியலின் மாதிரி**

<table>
<tr><th colspan="12">Bill of Entry</th></tr>
<tr><td colspan="3">Vessel</td><td colspan="2">Master or Agent</td><td>Port of Shipment</td><td colspan="3">Port of Destination</td><td colspan="3">Importer's Name and Address</td></tr>
<tr><td colspan="2">Packages</td><td colspan="2">Quantity</td><td rowspan="2">Description of each class of Goods</td><td colspan="2">Real Value as per Sea Customs Act</td><td colspan="3">Value on which duty is assessed</td><td colspan="2">Duty</td></tr>
<tr><td>Number</td><td>Marks</td><td>Unit</td><td>Amount</td><td>Rate</td><td>Amount</td><td>Tariff Rate</td><td>Add Value</td><td>Amount</td><td>Rate</td><td>Amount</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="12">Total Value ₹___________<br>Total Duty ₹____________</td></tr>
</table>

3. இறக்குமதியாளர் மாற்றுச்சீட்டினை ஏற்றபிறகு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

### இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தபடும் ஆவணங்கள்

(i) இறக்குமதி உரிமம் (Import license)

(ii) சரக்காணை (Indent)

(iii) நாணய உறுதி கடிதம் (Letter of Credit)

(iv) நுழைவுச்சீட்டு (Bill of Entry)

(v) பார்வைச் சீட்டு (Bill of Sight)

(vi) துறைமுகக் கட்டண இரசீது (Port Trust Dues Receipt)

(vii) கப்பல் இரசீது (Bill of Lading)

(viii) மாற்றுச்சீட்டு (Bill of Exchange)

(ix) குறிப்புரை (Advice Note)

### இறக்குமதி வணிக இடை நிலையர்கள்

#### 1. சரக்காணையகங்கள் இறக்குமதி முகவர்

இவ்வகை இடைநிலையர்கள் குறிப்பிட்ட வணிகத்தை பற்றிய பட்டறிவும் சிறப்பு தேர்ச்சியும் பெற்றவர்கள். இறக்குமதியாளர் இவர்களின் சேவைகளைப் பயன்படுத்திகொள்ள உடன்பாடு செய்து கொள்கிறார். இவர்கள் அயல் நாட்டு ஏற்றுமதியாளருக்கும் உள்நாட்டு இறக்குமதியாளருக்கும் இடையே செயல்பட்டு சரக்காணை நிறைவு பெறுவதற்கு காரணமாக இருக்கிறார். இதற்காக தனக்குரிய கழிவை பெற்றுக்கொள்கிறார்.

**இந்தியாவின் முக்கிய இறக்குமதி வணிகக் கூட்டாளிகள் நாடுகள் (மதிப்பு ₹ கோடி)**

| வரிசை | நாடுகள் | 2013-2014 | 2014-2015 | 2015-2016 | 2016-2017 | 2017-2018 |
|---|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 309,234.96 | 369,565.36 | 404,043.38 | 411,093.52 | 241,603.57 |
| 2 | ஐ அ எமிரேட் | 135,613.46 | 133,420.60 | 142,678.20 | 149,655.40 | 75,526.59 |
| 3 | அமெரிக்கா | 174,126.66 | 159,624.88 | 126,981.39 | 144,237.12 | 73,060.39 |
| 4 | சவுதி அரேபிய | 220,515.49 | 171,220.87 | 132,579.98 | 133,945.75 | 36,403.90 |
| 5 | சுவிட்சர்லாந்து | 78,209.64 | 135,367.33 | 126,074.29 | 54,906.18 | 63,805.46 |
| 6 | சிங்கப்பூர் | 112,338.18 | 78,181.10 | 79,098.18 | 77,704.41 | 56,757.88 |
| 7 | ஜெர்மனி | 44,107.06 | 34,088.62 | 39,635.91 | 115,619.29 | 41,194.34 |
| 8 | ஹாங்காங் | 89,035.42 | 91,845.35 | 85,363.11 | 90,081.93 | 62,408.53 |
| 9 | இந்தோனிசியா | 111,637.70 | 82,720.09 | 85,799.57 | 84,404.33 | 50,896.11 |
| 10 | ஈராக் | 41,063.47 | 67,918.84 | 47,734.89 | 47,541.69 | 22,212.35 |
| | மொத்தம் | 1,315,882.04 | 1,323,953.03 | 1,269,988.91 | 1,309,189.62 | 723,869.12 |
| | சதவீதம் | 48.46 | 48.38 | 51 | 50.79 | 50.99 |
| | மற்ற நாடுகள் | 1,399,538.74 | 1,412,723.96 | 1,220,307.40 | 1,268,471.75 | 695,623.91 |
| | சதவீதம் | 51.54 | 51.62 | 49.00 | 49.21 | 49.01 |
| | மொத்தம் | 2,715,420.78 | 2,736,676.99 | 2,490,296.31 | 2,577,661.37 | 1,419,493.03 |

ஆதாரம்: இந்திய அரசின் வர்த்தகத் துறையின் ஆண்டறிக்கை 2016-2017 புதுதில்லி



XI_Tamil_commerce 26-33_255-324.indd 271 12/16/2020 4:23:45 PM

### இவரின் பணிகள்

1. அயல் நாட்டு ஏற்றுமதியாளருக்கு சரக்காணைகள் அனுப்புவதற்கு உதவி செய்கிறார்
2. இறக்குமதி செய்ய வேண்டிய சரக்குகள் கிடைக்குமிடம், மற்றும் கடன் வசதிகள் போன்றவை குறித்து தகவல்கள் தருகிறார்.
3. ஏற்றுமதியாளர்களிடம் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டு அவர்களிடம் மாதிரிப்பொருட்களைப் பெற்று இறக்குமதியாளரிடம் காண்பித்து சரக்காணை பெறுவதற்கு உதவுகிறார்.

### 2 . அகற்றீட்டு முகவர்

அகற்றீட்டு முகவர் துறைமுகத்திலிருந்து சரக்கை வெளிக்கொணர்வதிலும் இறக்குமதியாளருக்கு அனுப்பி வைப்பதிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். இவர் இறக்குமதியாளர் சார்பாக அனைத்துச் சுங்க நடைமுறைகளையும் பின்பற்றி சரக்கைத் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு வருகிறார். இப்பணிக்காக உரிய கழிவைப் பெற்றுக்கொள்கிறார்.

#### கலைச்சொற்கள்

1. ஏற்றுமதி வணிகம்
2. இறக்குமதி வணிகம்
3. ஏற்றுமதி வளர்ச்சிக்குழு
4. நாணய உறுதி கடிதம்
5. வாணிக தூதுவர் இடாப்பு
6. தோற்றுவாய்ச் சான்றிதழ்
7. அனுப்புகை முகவர்
8. அகற்றீட்டு முகவர்
9. சரக்காணையகங்கள்
10. கப்பல் வாடகை முறி
11. கப்பல் ஆணை
12. கப்பல் இரசீது
13. கப்பல் தலைவர் இரசீது
14. வாணிக இடாப்பு

#### நமது சிந்தனைக்கு

i. எதிர்காலத்தில் இறக்குமதி வணிக நடைமுறை–களைக் குறைத்தல்

ii. பன்னாட்டு வணிகத்தில் ஆர்வம் செலுத்துதல்

#### மேலும் அறிவதற்கு

1. இறக்குமதி வணிக நடைமுறைகள்
2. இறக்குமதி வணிகத்தில் ஈடுபடும் அமைப்புகளைப் பற்றி கற்றல்.

#### பயிற்சி

H9K5UK

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. EPC யின் விரிவாக்கம்**

அ) ஏற்றுமதி செயல்முறை குழு

ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக்குழு

இ) ஏற்றுமதி சரக்கேற்றி குழு

ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

**2. STC யின் விரிவாக்கம்**

அ) மாநில பயிற்சி மையம்

ஆ) மாநில பயிற்சி சபை

இ) மாநில வணிக மையம்

ஈ) மாநில வணிக கழகம்

**3. இறக்குமதியாளரால் தயாரிக்கப்பட்டு சரக்கை வாங்குவதற்கு ஏற்றுமதியாளருக்கு அனுப்பபடும் ஆவணம்_______________ ஆகும்**

அ) இடாப்பு

ஆ) சரக்காணை

இ) விசாரனை

ஈ) கப்பல் வாடகை முறி

**4. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது**

அ) அனுப்புகை இரசீது

ஆ) கப்பல் இரசீது

இ) கப்பல் துணைத்தலைவர் இரசீது

ஈ) வாணிகத்தூதுவர் இடாப்பு



XI_Tamil_commerce 26-33_255-324.indd 272 12/16/2020 4:23:45 PM

5. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர்

அ) அகற்றீட்டு முகவர்

ஆ) அனுப்புகை முகவர்

இ) கழிவு முகவர்

ஈ) தன் பொறுப்பு முகவர்

**விடைகள்**

1. ஆ  2. ஈ  3. ஆ  4. ஆ  5. அ

## II. குறுவிடை வினாக்கள்.

1. சரக்காணை என்றால் என்ன?
2. சரக்காணையின் வகைகளைக் குறிப்பிடுக.
3. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. சரக்காணையின் உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
2. கப்பல் தலைவர் இரசீது என்றால் என்ன?
3. இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் யாவை? (ஏதேனும் 3)

## IV. பெருவிடை வினாக்கள்.

1. இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை?
2. கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?




XI_Tamil_commerce 26-33_255-324.indd 273 12/16/2020 4:23:45 PM

## இணையச்செயல்பாடு


### (வணிகப் பகுப்பாய்வு) வர்த்தகப் பகுப்பாய்வு

**"TRADE ANALYTICS" வழி ஏற்றுமதி, இறக்குமதி அறிவோமா!**





படிகள்:


- கீழ்க்காணும் உரலியை உலாவியில் தட்டச்சு செய்யவும் (அல்லது) விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.
- தற்போது திரையில் தோன்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் (Ministry of commerce and Industry) பக்கமானது, ஏற்றுமதி, இறக்குமதி பற்றிய தரவுகளைக் காண்பிக்கும். முதல் பக்கத்தில் இறக்குமதி குறித்த தரவுகளைக் (Import data) காணலாம். மேலும், இறக்குமதி மதிப்பு (Import Value), முக்கிய இறக்குமதிச் சரக்குகள் (Top Commodities) முக்கியத் துறைமுகங்கள் (Top ports), நிலவியல் வாரியான இறக்குமதி (Geography wise imports), துறைமுகங்களுக்கு கொண்டு வரப்படும் சரக்குகள் (Commodities across ports) போன்றவை விளக்கப்படங்களாக கொடுக்கப்பட்டிருக்கும்.
- சுட்டிக்காட்டியை விளக்கப்படத்தின் மீது நகர்த்தினால், அந்தந்த தரவுகள் முன்னிலைப்படுத்தப்படும். Commodities Across Port" ல் தேவையான சரக்குகளின் பொருள்களின் மீது இரு முறை சொடுக்கிட, அவற்றைப் பற்றிய விவரங்களைப் பெறலாம்.
- இதே போல "Export" –ஐச் சொடுக்கி, ஏற்றுமதி தரவுகளைப் பற்றி அறியவும்.



படி–1



படி–1



படி–1

செயல்பாட்டிற்கான உரலி:

http://commerce.gov.in/analytics/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

B133_11_COM_TM



XI_Tamil_commerce 26-33_255-324.indd 274 12/16/2020 4:23:46 PM

# அலகு – 8 பன்னாட்டு வணிகம்

அத்தியாயம்
27

# பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்

"கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை." – குறள் 736

H9NSIH

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. உலக வர்த்தக அமைப்பின் பொருள், நோக்கம், பணிகள் ஆகியவற்றை விளக்கமுடியும்.
2. உலக வங்கியின் முக்கியத்துவம் பணிகளை விவாதிக்கமுடியும்.
3. பன்னாட்டு நிதியத்தின் முக்கியத்துவம் பணிகளை புரிந்துக் கொள்ளமுடியும்.
4. தெற்காசிய ஆசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு பற்றி விவரிக்க முடியும்.




## 27.1 உலக வர்த்தக அமைப்பு

1950 களில் பல்வேறு நாடுகளுக்கிடையான பன்னாட்டு வணிகம் கடினமான நடைமுறைகளை உள்ளடக்கியதாக இருந்தது. உலக அரங்கில் நடைபெறும் வணிகத்தை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் ஒரு தனிப்பட்ட அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்விளைவாக 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று 23 நாடுகள் ஒன்று சேர்ந்து சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் (General Agreement on Tariff and Trade GATT ) உருவாக்கப்பட்டது. இது 1948 ஆம் ஆண்டு சனவரி 1 அன்று நடைமுறைக்கு வந்தது. இது ஒரு பன்னாட்டு உடன்படிக்கை ஆகும். இது பன்னாட்டு வணிகத்தை நடத்துவதற்குரிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்கி உள்ளது. காட் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. ஆனால் காட் – ற்கு மாற்றாக ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டியதின் அவசியம் ஏற்பட்டது எனவே காட் – ற்கு பதிலாக 1995 ஆம் ஆண்டு சனவரி 1 அன்று உலக வர்த்தக அமைப்பு (WTO) உருவாக்கப்பட்டது.

### பொருள்

உலக வர்த்தக அமைப்பு 1995 சனவரி 1 அன்று நிறுவப்பட்டது. காட் சில மாற்றங்களுடன் உலக வர்த்தக அமைப்பாக மாற்றப்பட்டது. 2016 சூலை 29 வரை 164 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளன. உலக வர்த்தக அமைப்பை உருவாக்கிய மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 275 12/16/2020 4:23:47 PM

அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைச்சரவை உலக வர்த்தக அமைப்பின் மிக உயர்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாகும். இது ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது பன்முக வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்க அதிகாரம் இதற்கு அளிக்கப்படுகிறது. உலக வர்த்தக அமைப்பின் அன்றாட பணிகள் பொதுகுழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலக வர்த்தக அமைப்பு சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ளது

### உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள்

**உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் பின்வருமாறு.**

1. உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.
2. உறுப்பு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு உலகின் பல்வேறு வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்.
3. பன்னாட்டு வணிகத்தில் ஒரு ஒருங்கிணைந்த, மேலும் நிறைவேற்றத்தக்க மற்றும் நீடித்த வர்த்தக முறையை ஊக்குவிக்கிறது.
4. பன்னாட்டு அளவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்தல்.
5. முழு வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த நிலையான வருமானம் ஆகியவற்றை உறுதி செய்தல்/
6. சுற்றுச்சூழலை பாதுகாத்தல்.

### உலக வர்த்தக அமைப்புப் பணிகள்

1. இது உறுப்பினர் நாடுகளில் வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை மூலம் நிறைவேற்ற உதவுகிறது.
2. உறுப்பினர் நாடுகளில் எழும் வர்த்தகம் சார்ந்த பிரச்சினைகள் தீர்க்க உதவுகிறது.
3. வர்த்தக தடைகளை குறைப்பதற்காக இது பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய குறியீடுகளை அமைக்கிறது.
4. பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் (IBRD) இணைந்து உலகளாவிய பொருளாதார கொள்கைகள் வகுப்பதில் உதவி புரிகிறது.
5. உலக வர்த்தக மற்றும் வர்த்தக தொடர்புடைய அறிவுசார் சொத்து உரிமைகள் (TRIPS) பற்றிய பொது ஒப்பந்தம் தொடர்பான உடன்படிக்கையை இது மேற்பார்வை செய்கிறது.
6. உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை இது ஒழுங்குபடுத்துகிறது.

### உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள்

1. சர்வதேச சமாதானத்தை ஊக்குவிப்பதோடு, பன்னாட்டு வர்த்தகம் நடத்துவதற்கு ஒரு உகந்த சூழலை உருவாக்குகிறது.
2. இது உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் வர்த்தக ரீதியான பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது.
3. இது தடையற்ற வர்த்தகத்தின் மூலம் வருமானத்தை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.
4. உலக வணிக அமைப்பு உறுப்பு நாடுகளுக்கிடையே கட்டுப்பாடுகள் மற்றும் கட்டண தடைகளை நீக்கியுள்ளது. இது உறுப்பு நாடுகளுக்கிடையே சுதந்திரமான வர்த்தகம் நடை பெறுவதற்கு உதவுகிறது. உறுப்பு நாடுகளின் செலுத்தல் சம நிலையில் ஏற்படும் நிலையை சரி செய்ய இறக்குமதியில் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது.
5. இது வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவையான மூலதனத்தை வழங்குவதன் மூலம், வர்த்தக தொடர்புடைய விடயங்களில் அவர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது.
6. உலக வணிக அமைப்பு மண்டல மற்றும் சர்வதேச மாநாட்டை ஒழுங்குபடுத்துகிறது. இவ்வாறு வளரும் நாடுகளில் உலக வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், உலகளாவிய ரீதியில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை உறுப்பு நாடுகள் அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துகிறது.
7. உறுப்பினர் நாடுகளிடையே கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை மேம்படுத்துவதன்மூலம் உலக மக்கள் பல்வேறு விதமான பொருட்கள் வாங்கி பயன்படுத்த வகை செய்கிறது.
8. உலக வர்த்தக அமைப்பு வர்த்தகத் தடைகளை குறைத்துள்ளது இதன் மூலம் உலகம் முழுவதும் வர்த்தகம் பெருகி தேசிய வருமானம் மற்றும் மக்களின் வருமானம் ஆகியவை அதிகரிக்க உதவுகிறது

9. உறுப்பினர் நாடுகளில் ஒருவரோடு ஒருவர் வர்த்தக உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு தளத்தை உலக வணிக அமைப்பு வழங்குகிறது. உலக வா்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் இல்லாத நிலையில் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளோடு பல பலதரப்பட்ட உடன்படிக்கைகளைச் செய்ய வேண்டியிருக்கும். இது ஒரு கூரை கீழ் அனைத்து நாடுகளுக்கும் வருவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

10. உலக வர்த்தக அமைப்பு கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது. இது மானியங்கள் மற்றும் குவிப்பு பற்றிய விதிகளை உருவாக்கியுள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

### உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கைகள்

#### 1. GATT ஒப்பந்தம்

GATT என்பது உலக வணிக அமைப்பு உடன்படிக்கைகளில் ஒரு முக்கிய பகுதியாகும். இது கட்டணமில்லா தடைகளைச் சமாளிக்க சிறப்பு உடன்பாடு அடங்கியுள்ளது

#### 2. ஜவுளி மற்றும் ஆடை ஒப்பந்தம் (Agreement of Textiles and Clothing)

இந்த ஒப்பந்தம் வளர்ந்து வரும் நாடுகளால் ஜவுளி மற்றும் ஆடைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஒதுக்கீட்டு கட்டுப்பாடுகள் அகற்றப்படுவதற்கு உருவானது. இது முக்கியமாக வளரும் நாடுகள் தங்கள் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதிகளை விரிவாக்க உதவுகிறது.

#### 3. வேளாண் ஒப்பந்தம் (Agreement of Agriculture)

விவசாயத்தில் இலவச மற்றும் நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்வதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கை வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய பொருட்கள் ஏற்றுமதி செய்வதில் தங்கள் இறக்குமதி மற்றும் மானியங்கள் மீதான சுங்க கடன்களைக் குறைக்கும். ஆனால் வளரும் நாடுகளில் விவசாயம் மீது இந்த நாடுகளில் அதிக சார்பு இருப்பதை கருத்தில் கொண்டு பரஸ்பர சலுகையை வழங்குவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

#### 4. சேவை வணிகம் மீதான பொது ஒப்பந்தம் (General Agreement on Trade in Services )

இந்த உடன்படிக்கையின் கீழ், அனைத்து உறுப்பு நாடுகளும் சேவை வர்த்தகத்தில் உள்ள கட்டுப்பாடுகளை அகற்ற வேண்டும். இது சேவைகளில் உள்ள வர்த்தகமானது மிகவும் விருப்பமான நாடு (Most Favoured Nation) என்ற கொள்கையால் நிர்வகிக்கப்படுகிறது. அதாவது சேவை வழங்குநர்களின் தகுதி மற்றும் சேவை வழங்குநரின் தேசிய நிலையை அடிப்படையாகக் கொண்டு நாடுகளுக்கு வணிக ஒப்பந்தத்தை வழங்க வேண்டும். இது வெளிநாட்டு சேவை வழங்குநர் மற்றும் உள்ளூர் சேவை வழங்குநருக்கு இடையில் பாகுபாடு காட்டுவதைத் தடுக்கிறது. இந்த உடன்படிக்கை படி அனைத்து உறுப்பினர் நாடுகளும் சேவை வர்த்தகம் தொடர்பான அனைத்து சட்டங்களையும் வெளியிட வேண்டும்.

#### 5. அறிவுசார் சொத்து உரிமைகள் வாணிகத்தொடர்புடைய அம்சங்கள் மீதான உடன்படிக்கை (TRIPS) (Agreement on Trade–Related Aspects of Intellectual Property Rights)

பதிப்புரிமை, வர்த்தக முத்திரை, புவியியல் குறிப்பீடு, தொழில்துறை வடிவமைப்பு, காப்புரிமை, ஒருங்கிணைந்த சுற்றுகள் மற்றும் வெளிப்படுத்தப்படாத தகவல்களின்



XI_Tamil_commerce 26-33_255-324.indd 277 12/16/2020 4:23:47 PM

வடிவமைப்பு ஆகியவை ஏழு அறிவார்ந்த பண்புகளைப் பொறுத்து நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஏழு குறைந்தபட்ச பாதுகாப்புக் கொள்கையை இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

## உலக வர்த்தக அமைப்பின் செயல்பாடுகள் மீதான எதிர்மறை கருத்துக்கள்

*உலக வர்த்தக அமைப்பின் செயல்பாடுகள் மீது கீழ்கண்ட விமர்சனங்கள் வைக்கப்படுகிறது.*

### 1. தங்கு தடையற்ற வணிகம் வளரும் நாடுகளை விட வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிக நலன் தருவதாக குற்றம் சாட்டப்படுகிறது

*வளரும் நாடுகள் தங்கள் நாட்டில் உள்ள புதிய தொழிற்சாலைகளை காப்பாற்ற ஒரு வித வணிக பாதுகாப்பு முறைகளை கையாள்கின்றன. பல வளர்ச்சியடைந்த நாடுகள் குறிப்பிட்ட நிலை வரை இந்த வணிக பாதுகாப்பு முறையை பயன்படுத்தி தங்கள் நாட்டில் உள்ள தொடக்க நிலை தொழில்களை காப்பாற்றி கொள்கின்றன. ஆனால் வளரும் நாடுகளுக்கு இந்த வணிக பாதுகாப்பு முறைகள் பயன்படுத்த தங்கள் நாட்டில் உள்ள தொடக்க நிலை தொழில்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதில் பன்னாட்டு நிறுவனங்களின் தலையீடு இருக்ககூடும் என ஐயம் எழுகிறது.*

### 2. மிகவும் நெருக்கமான நாடு கோட்பாடு

*இது உலக வணிக அமைப்பு விதிகளின் மிக முக்கிய கோட்பாடு ஆகும். இந்த விதியின் கீழ் உறுப்பினர் நாடுகள் தங்கள் நாட்டில் உள்ள உள் நாட்டு நிறுவனங்களுக்கும் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் பாரபட்சம் காட்ட வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. . அதாவது, உலக வர்த்தக அமைப்பு வளரும் நாடுகளை தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதை தடுக்கிறது. இந்த நடவடிக்கை பன்னாட்டு நிறுவனங்களுக்கு நியாயமற்ற நன்மைகளை வழங்குகிறது. இவ்வாறாக உலக வர்த்தக அமைப்பு பாரபட்சமாக செயல்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.*

### 3. வேளாண்மை மீதான கட்டணத்தை குறைப்பதில் தோல்வி அடைந்துள்ளது

*அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் தங்கள் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு வேளாண் பொருட்களுக்கு அதிக வரி விதித்து தங்கள் நாட்டு விவசாயிகளை பாதுக்காக்கின்றன. இதை உலக வர்த்தக அமைப்பினால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் வளரும் நாடுகளில் வேளாண் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.*

### 4. வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள விவசாயிகளின் நலனைப் புறக்கணிக்கிறது

*வளர்ந்து வரும் நாடுகள் தங்களின் முதன்மைத்தொழிலான விவசாயப்பொருட்களை உற்பத்தி செய்வதில் சிறந்து விளங்குகின்றன. அவை தங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு குறுகிய காலத்தில் மற்ற தொழில்களையும் வளர்ச்சியடைய செய்வதற்கு சில வரி விதிப்பு பாதுகாப்பு முறைகள் தேவைப்படுகின்றன. ஆனால் வளா்ந்த நாடுகள் இந்த வரி விதிப்பு பாதுகாப்பு முறைகளை தங்களுக்கு மட்டும் பயன்படுத்திகொள்கின்றன. இதனால் உலக வர்த்தக அமைப்பு வளா்ந்து வரும் நாடுகளில் உள்ள விவசாயிகளின் நலனை முற்றிலுமாக புறக்கணிக்கிறது.*

### 5. சுற்றுச்சூழல் பாதுகாப்பை புறக்கணிக்கிறது

*சில நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் பேரளவில் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. உலக வர்த்தக அமைப்பு அப்பொருட்களை அதிக அளவில் இறக்குமதி செய்ய தூண்டுகிறது. மேலும் மொத்த உள் நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மட்டுமே செயல்படுகிறதேயொழிய சுற்றுச்சூழல் பாதிப்பைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. இன்றைய சூழலில் புவி வெப்பமயமாதல், மற்றும் அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் பேரழிவு போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தராமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க மட்டுமே முக்கியத்துவம் தருகிறது*

### 6. சமூகப் பண்பாட்டு காரணிகளை புறக்கணிக்கிறது

*உலக வர்த்தக அமைப்பானது பன்னாட்டு நிறுவனங்களை ஊக்குவித்து உள் நாட்டு நிறுவனங்களை வணிக உலகை விட்டு விரட்டச்*

செய்கிறது. பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சியானது பல வளரும் நாடுகளின் கலாச்சாரத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் அழிக்கும் என அஞ்சப்படுகிறது.

### 7. வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள மக்கள் உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை வாங்க இயலாமை

உலக வர்த்தக அமைப்பு வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்து உரிமைகளின் மூலம் காப்புரிமை மற்றும் பதிப்புரிமை ஆகியவற்றைப் பாதுகாக்க முயலுகிறது. இச்செயல் உயிர் காக்கும் மருந்துகளின் விலையேற்றத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதனால் வரும் நாடுகளில் வாழும் மக்கள் தங்களால் அம்மருந்துகளை நியாயமான விலையில் வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது.

## 27.02 உலக வங்கி

மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி ( International Bank for Reconstruction and Development )




மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி உலக வங்கி என்று அழைக்கப்படுகிறது. இது புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்திடவும் 1944 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் வாஷிங்டன் நகரத்தில் அமைந்துள்ளது. உலக நாடுகள் அனைத்திலும் இதன் அலுவலகம் அமைந்துள்ளது.

### உலக வங்கியின் நோக்கங்கள்

1. முதல் உலகப்போரால் பாதிக்கப்பட்ட நாடுகளை புனரமைத்தல், வளர்ச்சியடையச் செய்தல் மற்றும் உறுப்பு நாடுகளை முன்னேற்றுவதற்கு நீண்ட கால மூலதனத்தை வழங்குதல்
2. உறுப்பினர் நாடுகளில் மூலதன முதலீட்டை ஊக்குவித்தல்.
3. உறுப்பினர் நாடுகளில் உள்ள சிறிய மற்றும் பெரிய அலகுகள் மற்றும் அந்நாடுகளில் துவங்கப்பட்ட தொழில் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான உத்தரவாதங்களை வழங்குதல்.
4. போரால் பாதிக்கப்பட்ட நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகளாக மாற்றும் வகையில் வளர்ச்சி திட்டங்களை அமல்படுத்துவதை உறுதி செய்தல்
5. நீண்ட கால மூலதனத்தை வழங்குவதின் மூலம் வாணிக செலுத்து நிலையிலும் பன்னாட்டு வணிகத்திலும் சமமான வளர்ச்சியை உறுதி செய்தல்.

### உலக வங்கியின் பணிகள்

1. போரில் பாதிக்கப்பட்ட நாடுகளின் புனரமைப்புக்கு உதவுதல்.
2. பொருளாதார வளர்ச்சி மற்றும் பன்னாட்டு வணிகத்தின் சீரான வளர்ச்சியை ஊக்குவித்தல்.
3. உறுப்பினர் நாடுகளில் திறனேற்றம் (Capacity building) மற்றும் போக்குவரத்து, சாலை மேம்பாடு, உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவித்தல் மற்றும் வளர்த்தல்.
4. போதுமான வளங்களை வழங்குவதன் மூலம் வளரும் நாடுகளில் விவசாய மற்றும் தொழில்துறை வளர்ச்சி ஊக்குவித்தல்.
5. உறுப்பினர்கள் நாடுகளில் சுகாதாரம், கல்வி, மற்றும் சிறிய அளவிலான நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு தேவையான வளங்களை வழங்குதல்.
6. வறுமை அகற்றுதல், உற்பத்தித்திறனை உயர்த்துதல், தொழில்நுட்ப ஆதரவு அளித்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதன் மூலம் உறுப்பினர் நாடுகளின் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.

### உலக வங்கியின் கூட்டு நிறுவனங்கள்

#### 1. பன்னாட்டு வளர்ச்சி சங்கம்

இது 1960 இல் அமைக்கப்பட்டது. இது பொருளாதார வளர்ச்சிக்கு சலுகைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உறுப்பினர் நாடுகளுக்கு கடன்களை வழங்குகிறது. இது உறுப்பினர் நாடுகளின் கடனுக்கான ஆதாரங்களை உருவாக்குகிறது. இது பின்தங்கிய நாடுகளின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு உதவுகிறது. இது

மேலும் பின்தங்கிய நாடுகளின் சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு விவசாயம், மனித வள மேம்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கிறது.

### 2. சர்வதேச நிதி நிறுவனம்

இது வளர்ந்து வரும் நாடுகளில் தனியார் துறையை கட்டமைப்பதற்கான ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குகிறது. இதன் தலைமையகம் வாஷிங்டன் நகரத்தில் அமைந்துள்ளது இது 1956 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் 184 நாடுகள் உறுப்பினராக உள்ளன. இது வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு வறுமையை அகற்றுதல் , கல்வி மற்றும் சுகாதார நலன்களை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் முதலீட்டு விவசாய வாய்ப்புகள் ஆகியவற்றில் முதலீடு செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

### 3. பன்னாட்டு முதலீட்டு உத்தரவாத நிறுவனம்

இது அரசியல் இடர் காப்பீடு மற்றும் கடன் மேம்பாட்டு உத்தரவாதங்களை வழங்கும் பன்னாட்டு நிதி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் வழங்கிய உத்தரவாதம், வளரும் நாடுகளில் உள்ள அரசியல் மற்றும் வணிக ரீதியான இன்னல்களுக்கு எதிராக வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பாதுகாக்கிறது. இதன் தலைமை அலுவலகம் வாஷிங்டனில் இருக்கிறது. இது வளர்ந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிக்கிறது.

### 4. தகராறு தீர்வுக்கான பன்னாட்டு மையம்

தகராறு தீர்வுக்கான பன்னாட்டு மையம் ஒரு தன்னாட்சி நிறுவன அமைப்பாகும், இது பன்னாட்டு அளவில் ஏற்படும் தகராறுகளைச் சுமுகமான முறையில் சமரசம் செய்து வைக்கும் மன்றமாக செயல்படுகிறது இது 1966 இல் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் வாஷிங்டனில் அமைந்துள்ளது.

## 27.03 பன்னாட்டு நாணய நிதியம்

இது ஒரு பன்னாட்டு அமைப்பு ஆகும்.இதன் தலைமையகம் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளது. இது 1945 டிசம்பர் 27 அன்று ப்ரெட்டன் வுட் (Bretton Wood Conference) மாநாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இதில் 189 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இது உறுப்பினர் நாடுகள் தங்களுடைய வாணிப செலுத்து நிலையில் ஏற்படும் சமமற்ற நிலையைச் சரி செய்யக் குறுகிய கால கடனை வழங்குகிறது.



### பன்னாட்டு நாணய நிதியத்தின் நோக்கங்கள்

(I) பன்னாட்டு நாணய ஒத்துழைப்பை ஊக்குவித்தல்

(ii) சமச்சீரான பன்னாட்டு வணிகத்தை உறுதிப்படுத்துதல்

(iii) பரிமாற்ற விகிதத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல்

(iv) பல் முனை செலுத்துதலை ஊக்குவிப்பதன் மூலம் பரிமாற்ற கட்டுப்பாடுகளை நீக்குதல் அல்லது குறைத்தல்.

(v) நாடுகளின் வாணிப சமநிலையில் சமநிலையை சரிசெய்வதற்கு உறுப்பு நாடுகளுக்கு பொருளாதார உதவி வழங்குதல்

(vi) செலுத்து சம நிலையில் ஏற்படும் சமமற்ற நிலையை குறைத்தல்

### பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகள்

1. இது பன்னாட்டு அளவில் குறுகிய கால கடன் நிறுவனமாக செயல்படுகிறது.
2. இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண சரிகட்டுதல்களை செய்வதற்கு உதவுகிறது
3. இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தே வைத்துள்ளது. அதிலிருந்து கடன் வாங்கக்கூடிய உறுப்பினர் நாடுகள் நாணய மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்.
4. நல்ல வலுவான பொருளாதார மற்றும் நிதிக்கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 280 12/16/2020 4:23:47 PM

5. உறுப்பு நாடுகளின் பயனுள்ள கொள்கைகளை வலுப்படுத்தவும் செயல்படுத்தவும் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி அளிக்கிறது. வங்கியியல், நிதி, நாணய மற்றும் பரிமாற்றக் கொள்கைகளை வடிவமைப்பதில் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.

6. உறுப்பினர் நாடுகளின் வாணிக சமநிலையில் ஏற்படும் சமமற்ற தன்மையைச் சரி செய்ய உதவுகிறது.

**சிறப்பு எடுப்பு உரிமைகள்**

*1969 ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியம் சிறப்பு எடுப்பு உரிமையை துணை பன்னாட்டு நாணய ஒதுக்கீட்டுச் சொத்தாக உருவாக்கப்பட்டது. இது காகித தங்கம் என விவரிக்கப்படுகிறது. தொடக்கத்தில் சிறப்பு மதிப்பு 1973 ஆம் ஆண்டுவரை ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான 0.888671 கிராம் தங்கம் நிகரமாக நிர்ணயிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் பிரிட்டன் வுட் சிஸ்டம் சரிந்த பிறகு SDR நாணயங்களின் கூடை என மறுகட்டமைக்கப்பட்டது. 2016அக்டோபர் முதல் சிறப்பு*

உங்களுக்குத் தெரியுமா?

### உலக வங்கிக் குழுவுடன் இணைந்த அமைப்புகள்

### (Affiliates of World Bank Group)

**பன்னாட்டு மேம்பாட்டுச் சங்கம் (IDA):**

இது 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உறுப்பினர் நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கான கடன், சலுகையுடன் கூடிய நிபந்தனைகளைக் கொண்டு வழங்குகிறது. வளரும் நாடுகளுக்கு வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு உதவி புரிகிறது. மேலும் பின் தங்கிய மற்றும் வளரும் நாடுகளுக்கு மருத்துவம், கல்வி, வேளாண்மை, மனித வள மேம்பாடு ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது.

**பன்னாட்டு நிதிக் கழகம் (IFC):**

வளரும் நாடுகளின் தனியார் துறை வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கும் பன்னாட்டு நிறுவனம் பன்னாட்டு நிதிக் கழகம் ஆகும். இது 1956 ல் தொடங்கப்பட்டு வாஷிங்டன் நகரில் தலைமையிடமாகக் கொண்டு 184 உறுப்பு நாடுகளுடன் இயங்குகிறது. வளராத மற்றும் வளரும் நாடுகளின் மேம்பாட்டுக்குத் தேவையான மற்றும் அம்மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு அடிப்படையான வறுமை ஒழிப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் வளர்ச்சி, வேளாண் வளர்ச்சி இதர சேவைத் தொழில்கள் மேம்பாடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்த நிதி உதவி வழங்கி வருகின்றது.

**பன்னாட்டு முதலீட்டு பொறுப்புறுதி முகமை (MIGA)**

அரசியல் இடர்ப்பாட்டுக் காப்பீடு மற்றும் கடன் விரிவாக்கப் பொறுப்புறுதி ஆகியவற்றை வழங்கும் ஒரு பன்னாட்டு நிதி நிறுவனம் ஆகும். இதன் மூலம் அந்நிய நேரடி முதலீடு பெறுவதற்கான பாதுபாப்பை வளரும் நாடுகளுக்கு வழங்குகிறது. வாஷிங்டன் நகரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்குகிறது. இது அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கிறது.

**பன்னாட்டு முதலீட்டுப் பிரச்சினைகள் தீர்வு மையம் (ICSID)**

நாடுகளிடையே ஏற்படும் முதலீட்டுப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து வைக்கும் தன்னிச்சையான நிறுவனம் ஆகும். 1966 ஆம் ஆண்டு வாஷிங்டன் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

எடுப்பு உரிமையில் அமெரிக்க டாலர், யூரோ, சீன ரென்மின்பி, ஜப்பானிய யென் மற்றும் பிரிட்டிஷ் பவுண்ட் ஸ்டெர்லிங் ஆகிய நாணயங்கள் உள்ளடங்கியுள்ளன சிறப்பு எடுப்பு உரிமையின் மதிப்பு தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியக இணையதளத்தில் தினசரி இடுகையிடப்படுகிறது.

லண்டன் பங்கு மாற்றக விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டாலரில் ஒவ்வொரு கூடை நாணய மதிப்பின் குறிப்பிட்ட அளவு தொகை கணக்கிடப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியம் உறுப்பினர் நாடுகளுக்கு தங்களின் பங்களவு (Quota ) அடிப்படையில் சிறப்பு எடுப்பு உரிமையை ஒதுக்கீடு செய்கிறது.பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பினர் சுதந்திரமாக பொருந்தக்கூடிய நாணயங்களை சிறப்பு எடுப்பு உரிமயை தன்னார்வ பரிமாற்றத்தால் அல்லது பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிமுறைகளின் படி மாற்ற முடியும். உறுப்பு நாடுகளுக்கு பன்னாட்டு நாணய நிதியம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வாங்குவது மட்டுமல்லாமல், வணிக செலுத்து நிலையில் ஏற்படும் சமமற்ற நிலையையும் சரிசெய்ய முடியும்.

## பன்னாட்டு நாணய நிதியமும் இந்தியாவும்

### 1. இந்திய ரூபாயின் எளிமையான மாற்றீடு

பன்னாட்டு நாணய நிதியம் உருவாக்கப்பட்ட பின்னர் இந்திய ரூபாயின் மதிப்பு தனித்துவம் பெற்று விளங்குகிறது. முன்னதாக இது பவுண்டு ஸ்டெர்லிங் உடன் இணைக்கப்பட்டு அன்னிய செலாவணியின் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது. அதன் மதிப்பானது இப்போது தங்கத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு எளிதாக மாற்றக்கூடிய செலாவணியாக மாறியுள்ளது.

### 2. வளர்ச்சி நடவடிக்கைகளுக்கான கடன்

பன்னாட்டு நாணய நிதியத்திடம் பல வளர்ச்சி திட்டங்களுக்காக பல வகையான கடன் வசதிகளை இந்தியா பெற்றுள்ளது.

### 3. வெளிநாட்டு நாணயத்தை வாங்குவதற்கான திறன்

வளர்ந்துவரும் தேவையை பூர்த்தி செய்ய இந்திய அரசாங்கம் வெளிநாட்டு நாணயங்களை அவ்வப்போது வாங்குகிறது.

### 4. நிபுணர் ஆலோசனை

பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆலோசனையை இந்தியா பெற்று வருகிறது. ஐந்தாண்டு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் இந்தியாவுக்கு மிக முக்கியஆலோசனைகளை வழங்கி வருகிறது.

### 5. சரியான உதவி

வாணிக செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாக்குறையை தற்காலிகமாக அகற்றுவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சரியான நேரத்தில் உதவி பெற்றுள்ளது. 1966 ல் பாகிஸ்தானுடனான போருக்குப் பின்னர் இந்தியாவிற்கு பன்னாட்டு நாணய நிதியம் உதவியளித்தது. இது கச்சா எண்ணெய் பற்றாக்குறையை சமாளிக்க பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி பெற்றது. 1980 க்கும் 1983 க்கும் இடையில் இந்தியாவில் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்த நிலையை சரிகட்ட பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து உதவியைப் பெற்றுள்ளது

### சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR)

பன்னாட்டு நாணய நிதியத்தால் பன்னாட்டு காப்புச் சொத்தாக 1969 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே சிறப்பு எடுப்பு உரிமைகள் எனப்படுகிறது. இது காகித தங்கம் (Paper Gold) என அழைக்கப்படுகிறது. தொடக்கத்தில் இதன் மதிப்பு 0.888671 கிராம் சுத்தத் தங்கம் ஒரு அமெரிக்க டாலருக்கு சமமானது என 1973 ஆம் ஆண்டில் பிரிட்டன் உட் முறை நசிவுக்குப்பின் இதனை அந்நியச் செலாவணிகளின் கூடை (Basket of Currencies) என சொல்லப்பட்டது. 2016 அக்டோபர் 1 ஆம் நாள் முதல் சிறப்பு எடுப்பு உரிமை கூடைக்குள் அமெரிக்கா டாலர், ஈரோ, சீன ரென்மின்பி, ஜப்பானிய யென் மற்றும் பிரிட்டிஷ் பவுண்ட் ஸ்டெர்லிங் உள்ளடங்கியுள்ளது. அதன் மதிப்பு தினந்தோறும் பன்னாட்டு நாணய நிதிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது,

இலண்டன் பூஜ்ய நேரக் கணக்கின்படி அமெரிக்கா டாலர் மதிப்பின்படி ஒவ்வொரு கூடைச் செலாவணி மதிப்பிடப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியம் உறுப்பு நாடுகளுக்கு உரிய விகிதப்படி சிறப்பு எடுப்பு உரிமைகள் ஒதுக்கப்படுகின்றது. மேலும் செலுத்தல் சமநிலைக்கேற்றவாறு தேவைப்படும் நிதியை உறுப்புநாடுகள் பன்னாட்டு நாணய நிதியத்தில் குறைந்த வட்டியில் பெற்றுக் கொள்கிறது.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 282 12/16/2020 4:23:47 PM

*6.* **இயற்கைப் பேரழிவின் போது நிதி உதவி**

*பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து இந்தியா அதிக நிதி உதவியைப்பெற்று வெள்ளம், பஞ்சம், பூகம்பம், சீனா மற்றும் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு போன்றவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்துள்ளது.*

*7.* **உலக வங்கியில் உறுப்பினர்**

*பன்னாட்டு நாணய நிதியத்தில் இந்தியா உறுப்பினராக உள்ளதின் அடிப்படையில் உலக வங்கியில் உறுப்பினராக முடியும்.*

*8.* ***1991* பொருளாதார நெருக்கடியில் உதவி**

*1990 ம் ஆண்டு இந்தியா கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. நொடிப்பு நிலையை அடையும் தருவாயில் தங்கத்தை பன்னாட்டு நாணய நிதியத்தில் அடகு வைத்து வாணிக செலுத்து நிலையில் ஏற்பட்ட நெருக்கடியை சமாளித்தது.*

## 27.04 தெற்காசிய நாடுகளின் வட்டார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு

*தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு தெற்கு ஆசியாவில் உள்ள நாடுகளுக்கிடையேயான அமைப்பாகும் மேலும் இது அந்த நாடுகளின் புவியியல் சார்ந்த அரசியலுக்கான சங்கம் ஆகும்*

*இதில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், ஸ்ரீலங்கா, பாக்கிஸ்தான் மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகள் உறுப்பினராக உள்ளன. இது டிசம்பர் 8, 1985 இல் நிறுவப்பட்டது. இதன் அலுவலகம் வங்காளதேசத்தில் உள்ள டாக்காவில் அமைந்துள்ளது.*

### சார்க் அமைப்பின் நோக்கங்கள்.

1. *ஆசிய மக்களின் நலனை மேம்படுத்துதல்*
2. *உறுப்பு நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான சமூக வேலைத்திட்டம் மற்றும் கலாச்சார அபிவிருத்தியை அடைதல்.*
3. *உறுப்பு நாடுகளுக்கிடையே சுய நம்பிக்கையை வலுப்படுத்தல்*
4. *உறுப்பினர் நாடுகளுக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்துதல் மற்றும் பிற வளரும் நாடுகள் மற்றும் சர்வதேச மற்றும் வட்டார அமைப்புகளுக்கிடையே கூட்டுறவை வலுப்படுத்துதல்*
5. *வட்டாரத்தில் உள்ள உறுப்பினர் நாடுகளுக்கிடையே சமரசப் போக்கை நிலை நாட்டுதல்*

### சபை (Council)

*சார்க் (SAARC) இல் உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள் அடங்கிய சபையே அதிக அதிகாரம் கொண்ட அமைப்பாகும். இது இரண்டு ஆண்டுகளில் ஒரு முறை கூடுகிறது. இது நேபாளத்தில் அமைந்துள்ளது. சார்க் செயலகம் உறுப்பினர்களால் நியமிக்கப்படும் செயலாளர் தலைமையில் செயல்படுகிறது*

### சார்க் அமைப்பின் பணிகள்

1. *வளர்ச்சித் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்*
2. *நாடுகளுக்கிடையேயான பிராந்திய முன்னுரிமையை தீர்மானித்தல்*
3. *பிராந்தியத்திற்குள் மற்றும் வெளியே ஒத்துழைப்பு திரட்டுதல்*
4. *உறுப்பு நாடுகளுக்கு நிதிஉதவி செய்யும் நடைமுறைகளை கையாளுதல்*

உங்களுக்குத் தெரியுமா?

**Liberalised Exchange Rate Management System (LERMS)**

தாராள மயமாக்கப்பட்ட பரிவர்த்தனை விகிதம் மேலாண்மை முறை (LERMS) 1992–93 ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. LERMS இன் கீழ், சரக்குகள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்பவர்களும் மற்றும் வெளிநாட்டில் இருந்து அனுப்பப்படும் பெறுநர்கள் ஆகியோர் தங்கள் அந்நிய செலாவணி ரசீதுகளின் பெரும்பகுதியை சந்தை விலையில் விற்கலாம். இதேபோல், சரக்குகள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்ய வேண்டியவர்கள் அல்லது வெளிநாடுகளுக்கு பயணத்தை மேற்கொள்ள வேண்டியவர்கள், இத்தகைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு,

தங்கள் பரிவர்த்தனைகள் தாராளமயமாக்கப்பட்ட பரிமாற்ற கட்டுப்பாட்டு அமைப்பின் கீழ் தகுதியுடையதாக இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து அந்நியச் செலாவணியை வாங்கலாம், சந்தை நிர்ணயிக்கப்பட்ட விலையில். எவ்வாறாயினும், குறிப்பிட்ட முன்னுரிமை பெற்ற இறக்குமதி மற்றும் பரிவர்த்தனைகளுக்கு, இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ விகிதத்தில் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கலைச்சொற்கள்

1. உலக வர்த்தக அமைப்பு
2. உலக வங்கி
3. பன்னாட்டு நாணய நிதியம்
4. தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பு

### சுய சிந்தனைக்கு

i. உலக வர்த்தக அமைப்பின் மிக முக்கியப் பங்கு

ii. உலகம் ஒரு உலகளாவிய கிராமம் மாறுவதற்கு IMF, IBRD, SAARC போன்றவற்றின் பங்கு

### மேலும் அறிவதற்கு

1. உலக வர்த்தக அமைப்பு-புதிய உடன்படிக்கைகள்
2. பன்னாட்டு வணிகத்தில் IMF, IBRD, SAARC ஆகியவற்றின் பங்கு

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் கையெழுத்தான நாள்**

அ) 30 அக்டோபர் 1947

ஆ) 29 அக்டோபர் 1947

இ) 28 அக்டோபர் 1947

ஈ) 26 அக்டோபர் 1947

H9U1H8

**2. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்**

அ) 1-1-1996

ஆ) 1-1-1997

இ) 1-1-1995

ஈ) 1-1-1994

**3. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்**

அ) நியூயார்க்

ஆ) இலண்டன்

இ) ஜெனிவா

ஈ) பிரேசில்

**4. உலக வர்த்தக அமைப்பின் தினசரி அலுவல் ---------டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது**

அ) மேலாண்மைக்குழு

ஆ) பொதுக்குழு

இ) நிர்வாகக்குழு

ஈ) பொதுச்சபை

**5. உலக வங்கி அமைந்திருப்பது**

அ) வாஷிங்டன் DC

ஆ) நியுயார்க்

இ) டோக்கியோ

ஈ) ஹாங்காங்க்

### விடைகள்

1. அ   2. இ   3. இ   4. ஆ   5. அ



XI_Tamil_commerce 26-33_255-324.indd 284    12/16/2020 4:23:48 PM

## II. குறுவிடை வினாக்கள்.

1. உலக வர்த்தக அமைப்பு என்றால் என்ன?
2. உலக வங்கி என்பதன் பொருள் யாது?
3. சிறப்பு எடுப்பு உரிமைகள் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஏதேனும் மூன்று நோக்கங்களை குறிப்பிடுக.
2. சார்க் அமைப்பின் பணிகள் யாவை?
3. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை? (ஏதேனம் 5)
2. பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

# அலகு – 8 பன்னாட்டு வணிகம்

அத்தியாயம்
**28**

# செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு. – குறள் 733

H9XNK5

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. செலுத்தல் சமநிலையின் பொருள் வரைவிலக்கணம் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றை விளக்க முடியும்
2. வாணிப சமநிலையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றை விளக்க முடியும்

வாணிபச் சமநிலை மற்றும் செலுத்தல் சமநிலை ஆகியவை பன்னாட்டு வணிகத்தில் முக்கிய கூறுகளாக உள்ளன.

## 28.01 செலுத்தல் சமநிலை

### பொருள்

குறிப்பிட்ட ஒரு காலபகுதியில் ஒரு நாட்டின் குடியிருப்போர்களுக்கும், மற்ற நாடுகளின் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் முறையான பதிவுகளின் ஒரு அறிக்கையை செலுத்தல் சமநிலை ஆகும். (உதாரணமாக ஒரு வருடம்).

இவற்றில், ஏற்றுமதியில் ஏற்படும் செலுத்துதல்கள் மற்றும் பெறுதல்கள் , ஒரு நாட்டின் குடியிருப்போரால் பெறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுள் அடங்கும். இறக்குமதியின் போது அவர்களால் செலுத்தப்பட்ட தொகை, வழங்கப்பட்ட சேவைகள் நம் நாட்டிலிருந்து வெளிநாட்டினருக்கு மாற்றப்பட்ட மூலதனம் உள்ளிட்டவையும் அடங்கும்.

### செலுத்தல் சமநிலையின் நோக்கம்

பன்னாட்டு வணிகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு நிறுவனத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் போன்ற பணப் பரிமாற்றங்களின் நிகர விளைவை ஆய்வு செய்யும் ஒரு கருவியாகும்.

செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டு அரசின் பணம் சார்ந்த, பொதுநிதி சம்பந்தமான, மற்றும் வாணிபக் கொள்கைகளை வடிவமைக்க உதவுகிறது. அரசு தன் கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக, முக்கிய வியாபார நிறுவனங்களின் செலுத்தல் நிலையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. ஒரு நாடு தன்னுடைய வளர்ச்சிக்கான நிதியைப் பெற, போதுமான பொருளாதார விளைவுகளைப் பெற்றுள்ளதா என்பதை எடுத்துக்காட்டுகிறது. இது ஒவ்வொரு காலாண்டிற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ இதற்கான அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும்.

### செலுத்தல் சமநிலையின் நிகர முடிவு

செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டின் ஏற்றுமதி அதன் இறக்குமதியை விட அதிகமாக இருந்தால் மிகையாக இருக்கும். இந்த நிலை அரசாங்கம் மற்றும் குடியிருப்போர்கள் பாதுகாப்பாக இருப்பதைக் குறிக்கிறது. அவை உள்நாட்டு



XI_Tamil_commerce 26-33_255-324.indd 286 12/16/2020 4:23:48 PM

உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தை வழங்கும் நிலையில் இருக்கும். இந்தச் சாதகமான நிலையில் மற்ற நாடுகளுக்குக் கடன் கொடுக்கவும், அந்நாட்டுப் பொருட்களை வாங்கவும் முடியும். இதன் விளைவாகக் குறுகிய காலத்தில் அதன் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். அதிக ஏற்றுமதி காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி காலப்போக்கில் அதிகரிக்க முடியும். இது வலுவான உள்நாட்டு சந்தையை உருவாக்குகிறது. இது நாணய மாற்று விகித ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாக்கிறது.

ஒரு நாட்டின் இறக்குமதியானது, ஏற்றுமதியை விட அதிகமாக இருந்தால், பற்றாக்குறை நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையானது, இறக்குமதி செய்வதற்குத் தேவையான தொகையை, பிற நாடுகளிடம் கடனாகப் பெற வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்கிறது. இது தற்காலிகமாகக் குறுகிய காலப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குகிறது. இது எதிர்காலத்தில் தங்கள் சம்பளத்தைக் கடனாகக் கொடுக்க ஒப்புக்கொண்டு,தற்போதைய படிப்பு செலவுக்கு மாணவர்கள் வங்கியிலிருந்து கல்விக் கடனைப் பெறுவதைப் போன்றது

### வரைவிலக்கணம்

பன்னாட்டு நாணய நிதியத்தின் கூற்றுப்படி, "அறிக்கையளிக்கும் நாடுகளின் குடியிருப்போர்களுக்கு இடையிலான குறிப்பிட்ட ஒரு காலத்திலான அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான ஒரு அறிக்கையே குறிப்பிட்ட ஒரு காலத்திற்கான செலுத்தல் நிலை ஆகும்."

### டோமினி சல்வடோரின் கூற்றுப்படி

"குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வழக்கமாக ஒரு காலண்டர் ஆண்டில், மற்ற அனைத்து நாடுகளின் குடியிருப்பவர்களுடன் ஒரு நாட்டின் குடியிருப்பவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் கொள்கைப்படி பதியப்படும் ஒரு தொகுப்பு அறிக்கையே செலுத்தல் நிலை ஆகும்."

### செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள்

செலுத்தல் சமநிலை முக்கிய அம்சங்கள் பின்வருமாறு

1. இது ஒரு நாடு மற்றும் உலகின் பிற நாடுகளுக்கு இடையேயான அனைத்துப் பொருளாதாரப் பரிமாற்றங்களுக்கான முறையான பதிவு ஆகும்.
2. இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 12 மாதக் காலத்திற்கோ தயாரிக்கப்படுகிறது. அதாவது பொதுவாக 12 மாதங்கள்.
3. இது கண்ணுக்குப் புலனாகக்கூடிய மற்றும் கண்ணுக்குப் புலனாகாத பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்களை உள்ளடக்கியது.
4. இது நடப்புக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கில் பதிவு செய்யப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
5. பொருளாதார நடவடிக்கைகள் இரட்டைப் பதிவு முறை கோட்பாட்டின்படி பதிவு செய்யப்படுகின்றன. அதன்படி, பெறுதல்கள் வரவு பக்கத்திலும், செலுத்துதல்கள் பற்று பக்கத்திலும் பதிவு செய்யப்படுகின்றன.
6. இது அயல்நாட்டு வணிகத்தில் ஒரு நாட்டின் நிலையை எடுத்துக்கூறுகிறது.
7. பிற நாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையை விட, பெறுதல்கள் அதிகமாக இருக்கும் போது செலுத்தல் நிலை சாதகமான அல்லது உபரி நிலையைக் காட்டுகிறது. பிற நாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையை விட, பெறுதல்கள் குறைவாக இருக்கும்போது அது பாதகமான அல்லது பற்றாக்குறை நிலையைக் காட்டுகிறது.
8. வெப்பநிலைமானி மனித உடல் வெப்ப நிலையைக் காட்டுவது போல, செலுத்தல் நிலை நாட்டின் ஆரோக்கியமான பொருளாதார நிலையை அறியப் பயன்படுகிறது. சாதகமான செலுத்தல் சமநிலை ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும், பாதகமான செலுத்தல் சமநிலை ஒரு நாட்டின் பொருளாதாரப் பின்னடைவையும் குறிக்கிறது.

## 28.02 வாணிபச் சமநிலை

### பொருள்

வாணிபச் சமநிலை என்பது ஒரு வருடத்தில், ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதியை விட அதன் இறக்குமதி அளவு குறைவாக இருந்தால், அது சாதகமான வாணிபச் சமநிலையைக் காட்டுகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதியை விட அதன் இறக்குமதி அளவு அதிகமாக இருந்தால், அது பாதகமான வாணிபச் சமநிலையைக் காட்டுகிறது.

செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை

செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### செலுத்தல் சமநிலை உள்ளமைப்பு

செலுத்தல் சமநிலையில் நான்கு இனங்கள் உள்ளன. அவை நடப்புக்கணக்கு, மூலதனக் கணக்கு, ஒரு பக்கமான செலுத்தல்கள் கணக்கு, அலுவல் சார்ந்த தீர்வு கணக்கு

இவற்றில் நடப்புக்கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்

### நடப்புக்கணக்கு

செலுத்தல் நிலையின் நடப்புக் கணக்கில் இரு இனங்கள் உள்ளன

1. கண்ணுக்குப் புலனாகக்கூடிய வாணிபம் – பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

2. கண்ணுக்குப் புலனாகா வாணிபம் – வங்கியியல், கப்பல் துறை, காப்பீடு, பயணம் மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள்.

### மூலதனக் கணக்கு

மூலதனக் கணக்கில் மூன்று இனங்கள் உள்ளன

1. தனியார் மூலதனம் (Private capital)
2. வங்கி மூலதனம் (Banking capital)
3. அலுவல்சார்ந்த மூலதனம் (Official capital)

### 1. தனியார் மூலதனம்

தனியார் மூலதனம் அயல்நாட்டு முதலீடுகள், நீண்ட காலக் கடன்கள் மற்றும் அயல்நாட்டு நாணய வைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

### செலுத்தல் சமநிலை, வாணிபச் சமநிலை – வேறுபாடுகள்

| வேறுபாட்டின் அடிப்படைகள் | செலுத்தல் சமநிலை | வாணிபச் சமநிலை |
|---|---|---|
| 1. பொருள் | குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் குடியிருப்போர்களுக்கும், மற்ற நாடுகளின் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளின் ஒரு அறிக்கையே ஆகும். | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவைக் குறிக்கிறது. |
| 2. நடவடிக்கைகளின் தன்மை | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவுசெய்கிறது | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும். |
| 3. மூலதன நடவடிக்கைகளின் பதிவு | இது மூலதன நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது | இது மூலதன நடவடிக்கைகளைப் பதிவு செய்வதில்லை |
| 4. நடவடிக்கை உள்ளமைப்பு | இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும் | செலுத்தல் சமநிலையின் நடப்பு கணக்கின் ஒரு பகுதி ஆகும் |
| 5. நிகர விளைவு | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும். | இது சாதகமாவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும் |
| 6. பொருளாதார நிலையைக் காட்டுதல் | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது. | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதில்லை |
| 7. பாதகமான நிலையைச் சரிசெய்தல் | பாதகமான செலுத்தல் சமநிலை பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. | பாதகமான வாணிப நிலையை, சாதகமான செலுத்தல் சமநிலையாக மாற்றலாம். |



XI_Tamil_commerce 26-33_255-324.indd 288 12/16/2020 4:23:48 PM

**நடப்புக் கணக்கு**

| வரவினங்கள் | பற்றினங்கள் |
|---|---|
| *1. பொருட்களின் ஏற்றுமதிகள் (கண்ணுக்குப் புலனாவது)* | *1. பொருட்களின் இறக்குமதிகள் (கண்ணுக்குப் புலனாவது)* |
| *2. கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதிகள்* | *2. கண்ணுக்குப் புலனாகாத இறக்குமதிகள்* |
| *1. அயல்நாட்டில் செய்யப்பட்ட போக்குவரத்து சேவைகள்*<br>*2. அயல்நாட்டில் செய்யப்பட்ட வங்கியியல் சேவைகள்*<br>*3. அயல்நாட்டில் செய்யப்பட்ட காப்பீட்டு சேவைகள்*<br>*4. வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள்*<br>*5. அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளால் உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள்* | *1. அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட போக்குவரத்து சேவைகள்*<br>*2. அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட வங்கியியல் சேவைகள்*<br>*3. அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட காப்பீட்டு சேவைகள்*<br>*4. அயல்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் சேவைகள்*<br>*5. அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட ஏனைய சேவைகள்*<br>*6. உள்நாட்டில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடனுக்கு அளிக்கப்பட்ட வருமானம்* |

### 2. வங்கி மூலதனம்

*அந்நியச் செலாவணியைக் கையாள அதிகாரம் கொண்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புக்களின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது.*

### 3. அலுவல்சார்ந்த மூலதனம்

*அலுவல்சார்ந்த மூலதனத்தில், அயல்நாட்டு நாணயம், அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துக்கள் போன்றவை அடங்குகின்றது.*

**கலைச்சொற்கள்**

*1. செலுத்தல் சமநிலை*

*2. வாணிப சமநிலை*

*3. நடப்புக் கணக்கு*

*4. மூலதனக் கணக்கு*

**எதிர்கால கற்றல்**

1. செலுத்தல் சமநிலை மற்றும் வாணிப சமநிலையின் தாக்கம்
2. உலகளாவிய கிராமத்தின் தேவை குறித்து

**நமது சிந்தனைக்கு**

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு செலுத்தல் சமநிலை ஒரு கருவி
2. செலுத்தல் சமநிலை மற்றும் வாணிப சமநிலையின் முக்கியத்துவம்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை
   - அ) செலுத்தல் சம நிலை
   - ஆ) வாணிப சம நிலை
   - இ) பெறுதல் செலுத்தல் அறிக்கை
   - ஈ) கணக்கியல் அறிக்கை

2. செலுத்தல் சம நிலை உள்ளடக்கியது
   - அ) நடப்பு கணக்கு
   - ஆ) முதல் கணக்கு
   - இ) பெறுதல் செலுத்தல் கணக்கு
   - ஈ) நடப்பு கணக்கு மற்றும் முதல் கணக்கு

3. அயல் நாட்டு நீண்ட கால கடன் மற்றும் அயல் நாட்டு நாணய காப்பு பதியப்படுவது
   - அ) அலுவல் சார்ந்த மூலதனம்
   - ஆ) தனியார் மூலதனம்
   - இ) வங்கி மூலதனம்
   - ஈ) அலுவல் சார்ந்த மூலதனம் மற்றும் தனியார் மூலதனம்

4. அலுவல் சார்ந்த மூலதனம் என்பது
   - அ) இந்திய ரிசர்வ் வங்கியின் அயல் நாட்டு நாணய மதிப்பு
   - ஆ) அரசின் சிறப்பு எடுப்பு உரிமை
   - இ) அ மற்றும் ஆ இரண்டும்
   - ஈ) அயல் நாட்டு மூலதனம்

5. செலுத்து சம நிலையின் உபரி வெளிக்காட்டுவது
   - அ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்
   - ஆ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்
   - இ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சம நிலைக்கு அதிகமாக இருத்தல்.
   - ஈ) இவையனைத்தும்

**விடைகள்**

*1. அ  2. ஈ  3. ஈ  4. இ  5. அ*

### II. குறுவிடை வினாக்கள்.

1. செலுத்தல் சமநிலை என்றால் என்ன?
2. வாணிப சமநிலை என்றால் என்ன?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. நடப்புக் கணக்கின் வரவுப் பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை? (ஏதேனும் 3)
2. மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் ஐந்தினை விவரி.
2. செலுத்தல் சமநிலைக்கும் வாணிபச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

## அலகு – 9 இந்திய ஒப்பந்தச் சட்டம்

அத்தியாயம் 29

# ஒப்பந்தத்தின் கூறுகள்

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.
– குறள் 516

HA7JLS

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. ஒப்பந்த சட்டத்தின் பொருள் மற்றும் இலக்கணம் புரிந்து கொள்ள இயலும்.
2. ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகளைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்.
3. பல்வேறு வகையான ஒப்பந்தங்களைப் பற்றி தெரிந்து கொள்ள இயலும்.

## 29.01 அறிமுகம்

சட்டத்தைப் பற்றி அனைவரும் அறிந்து இருக்க வேண்டும் ஏனென்றால் சட்டத்தைப் பற்றி ஒருவர் அறிந்திருக்கவில்லை, என்பதால் அவருக்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க முடியாது.

வாழ்க்கையில் சரியான நடத்தைக்கும், சமுதாயத்தின் முறையான ஒழுங்குமுறைக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு விதியே சட்டமாகும். சமுதாயத்தில் அமைதி, ஒற்றுமை, நீதி, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு ஆகியவற்றைச் சட்டத்தின் உதவியால் ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு நாட்டிலும் அரசியலமைப்புச் சட்டம், உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம், வரி சட்டம், தொழிலாளர் சட்டம் மற்றும் வணிகச் சட்டம் போன்ற சட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு சட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட துறை செயல்படுகிறது.

### இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872

வணிகச் சட்டத்தில் ஒரு கிளையே இந்திய ஒப்பந்தச் சட்டமாகும். வியாபாரம் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்பந்தச் சட்டம் உதவியாக இருக்கின்றது. இது வணிகர்களை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தங்களின் உரிமைகளையும், கடமைகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும். மேலும் அந்தக் கடமைகளை செய்யத் தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய தீர்வுகளைக் காண உதவுகின்றது.

இந்திய ஒப்பந்தச் சட்டம் நம் அனைவரையும் ஏதோ ஓர் விதத்தில் பாதிக்கிறது.

எடுத்துக்காட்டாக புத்தகம் வாங்குதல், திரைப்படம் பார்த்தல், வங்கியிடம் கடன் பெறுதல், பேருந்தில் பயணம் செய்தல் போன்ற தினசரி வாழ்வின் பல நடவடிக்கைகள் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆகும்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் பெரும்பாலும் ஆங்கில பொது சட்டத்தின் அடிப்படையிலேயே இயற்றப்பட்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியா முழுவதிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இது



XI_Tamil_commerce 26-33_255-324.indd 291 12/16/2020 4:23:48 PM




இந்தியாவில் வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் அனைத்து விதிகளையும் தெளிவாக வரையறுத்துள்ளது.

**இந்திய ஒப்பந்தச் சட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை**

அ. பொது ஒப்பந்தங்கள்

ஆ. சிறப்பு ஒப்பந்தங்கள்

### ஒப்பந்தத்தின் பொருள்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டு சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையாகும். சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்படிக்கை ஒப்பந்தங்கள் அல்ல. ஒரு "உடன்படிக்கை" என்பது 'ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும் அல்லது உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும் ஆகும். ஒரு முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஒரு உறுதிமொழி உருவாகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிதலே உடன்படிக்கை என அழைக்கப்படுகின்றது. அடிப்படையில், ஓர் ஒப்பந்தமானது ஒரு நபர் செய்த முனைவை மற்றொரு நபர் ஏற்கும் பொழுது உருவாகிறது.

உடன்படிக்கை = முனைவு + ஏற்பு

ஒப்பந்தம் = உடன்படிக்கை + சட்டம் மூலம் நடைமுறைப்படுத்துவது




### வரைவிலக்கணம்

**முனைவு (முன்மொழிவு)(Offer) [பிரிவு 2 (a)**

"ஒருவர் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்காகவோ அல்லது செய்யாமலிருப்பதற்காகவோ தன்னுடைய விருப்பத்தை மற்றொருவருக்கு உணர்த்தி, அதன் மூலம் அச்செயலை செய்வதற்கோ அல்லது செய்யாமல் இருப்பதற்கோ அவருடைய இசைவைப் பெறமுயன்றால், முதலாமவர் முன் மொழிந்ததாகக் கூறலாம்".

**ஏற்பு 2 (b) (Acceptance)**

முன்மொழிதல் யாருக்கு செய்யப்பட்டதோ அவரே அதை ஏற்றுக்கொள்வதாகக் கூறியவுடன் அவ்வாறு செய்யப்பட்ட முன்மொழிதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**உடன்படிக்கை 2 (e) (Agreement)**

"ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்" உடன்படிக்கையாகும்.

சுருக்கமாக, ஒப்பந்தம் = முனைவு + ஏற்பு.

**மறுபயன் (Consideration)**

போலக்கின் இலக்கணம் (Definition of Pollock)

"ஒருவரின் வாக்குறுதியைப் பெற மற்றவரால் அளிக்கப்படும் விலையே மறுபயனாகும். அவ்வாறு மதிப்பைப் பெறும் பொருட்டு செய்யப்பட்ட வாக்குறுதி செயல்படுத்த கூடியதாகும்.

**இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 2 (d) ன் படி**

"வாக்குறுதி அளிப்பவரின் விருப்பத்தின் படி, வாக்குறுதி பெறுபவரோ அல்லது மற்றவரோ எதையேனும் செய்திருந்தாலும் அல்லது செய்யாமல் தவிர்த்தாலும் அல்லது செய்வதாகவோ அல்லது செய்யாமல் இருப்பதாகவோ வாக்குறுதி அளித்திருந்தனர் என்ற பொழுதில், அச்செயல் தவிர்த்தல் அல்லது வாக்குறுதிக்கான மறுபயன் என அழைக்கப்படும்".

**ஒப்பந்தம் 2 (h) (Contract)**

"சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்".



XI_Tamil_commerce 26-33_255-324.indd 292 12/16/2020 4:23:48 PM

## 29.02 சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள்

பிரிவு 10 படி அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களாகும். எப்பொழுது எனில் உடன்படிக்கை நபர்களின் தன்னிச்சையான இசைவு, தகுதி வாய்ந்த நபர்கள், சட்டப்பூர்வமான நோக்கம், சட்டபூர்வமான மறுபயன் மற்றும் செல்லாத ஒப்பந்தம் என அறிவிக்கப்படாத ஒப்பந்தம் ஆகியவை இன்றியமையாத கூறுகள் ஆகும்.

### 1. முனைவும் ஏற்பும்

ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.

### 2. சட்ட உறவு முறை

ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள் நோக்கம் தமக்கிடையே ஓர் சட்ட உறவுமுறையை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும். சமூக தன்மையுடைய உடன்படிக்கைகளில் சட்ட உறவுமுறை இல்லை என்பதால், அவை ஒப்பந்தங்களாக முடியாது.

### 3. சட்டப்பூர்வமான மறு பயன் (பிரிவு 2(d))

மறுபயன் என்பது எதையேனும் திரும்பப் பெறுதல் ஆகும். மறுபயன் இல்லாத உடன்படிக்கை செல்லாத உடன்படிக்கையாகும். மறுபயன் ரொக்கமாகவோ அல்லது பொருளாகவோ, சேவையாகவோ, உழைப்பாகவோ, ஆலோசனை யாகவோ, அறிவாகவோ இருக்கலாம். மறுபயன் என்பது சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்க கேடானதாகவோ அல்லது பொது கொள்கைக்கு எதிரானதாகவோ இருக்கக் கூடாது.

### 4. சட்டப்பூர்வமான நோக்கம் (பிரிவு 23)

உடன்பாட்டின் நோக்கம் சட்டத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். இதன் நோக்கம் சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிரானதாவோ இருக்கக் கூடாது. சட்டத்திற்குப் புறம்பாக ஒப்பந்தம் மேற்கொள்ள இயலாது.

### 5. தன்னிச்சையான இசைவு (பிரிவு 13 மற்றும் 14)

உடன்படிக்கை நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களிடம் மனமொத்த இசைவு தர வேண்டும். அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில், ஒரே நோக்குடன் உடன் பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும். பின் வரும் காரணங்களால் ஏற்படாத இசைவு தன்னிச்சையான இசைவு எனலாம். அவை வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு, மோசடி, திரித்துக் கூறுதல் அல்லது தவறு ஆகியவற்றைக் கூறலாம்.

### 6. ஒப்பந்த தகுதி (பிரிவு 11)

ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதியை உடைய நபர்களால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகின்றது. பின் வரும் நபர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபடத் தகுதியுடையவர் என சட்டம் கூறுகின்றது.

(அ) சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்,

(ஆ) மனச் சமநிலை உடையவர்,

(இ) சட்டத்தினால் தகுதியற்றவர் என அறிவிக்கப்படாத நபர்கள்.

### 7. தெளிவுடைமை (பிரிவு 29)

ஒரு ஒப்பந்தம் செல்லத் தகுந்ததாக இருக்க வேண்டும் எனில் அதன் நிபந்தனைகள் தெளிவாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக $X$ என்பவர் "நான் என்னுடைய சீருந்தை விற்க ஒப்புக்கொள்கிறேன்" என $Y$ யிடம் கூறுகிறார். $X$ என்பவரிடம் நான்கு சீருந்துகள் உள்ளன. இங்கே $X$ எந்த சீருந்தை விற்கப் போகிறார் என குறிப்பிடப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தில் நிபந்தனைகள் தெளிவாக இல்லை.

### 8. நிறைவேற்றும் தன்மை (பிரிவு 56)

செய்து கொள்ளும் உடன்பாடு நிறைவேற்றப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். செயல்படுத்த முடியாத ஒன்றை செய்வதாக மேற்கொள்ளும் உடன்பாடு செல்லாத ஒன்றாகும். எடுத்துக்காட்டாக 'ஒரு புதிய கிரகத்தைக் கண்டறிவதாக $A$ என்பவர் $B$ க்கு வாக்களிக்கிறார். இந்த உடன்படிக்கை ஆரம்ப நிலையிலே செயல்படுத்த முடியாது எனவே இந்த ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 293 12/16/2020 4:23:48 PM

## 9. சட்டத்தால் செயல்படுத்தும் திறன்

சட்டத்தால் செயல்படுத்தப்படும் திறன் கொண்டதாக ஒப்பந்தம் இருந்தல் வேண்டும். சட்டத்தால் சில உடன்படிக்கைகள் சட்டவிரோதமானது அல்லது செல்லாதது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 10. தேவையான சட்டச் சடங்குகள்


ஒரு ஒப்பந்தம் வாய்மொழி அல்லது எழுத்தில் இருக்கலாம். எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தம் எழுதி, பதிவு செய்து மற்றும் சான்றிதழ் பெறவேண்டும். சட்டப்பூர்வ நடைமுறைகள் மேற்கொள்ளாவிட்டால், ஒப்பந்தத்தை சட்டத்தால் செயல்படுத்த முடியாது. எடுத்துக்காட்டாக ஒரு காலம் கடந்த கடனை வழங்குவதற்கான வாக்குறுதி அளித்த ஒருவர் அதை எழுத்தில் அளித்தல் வேண்டும்.

**'எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளே, ஆனால் எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் அல்ல'**

உடன்பாடுகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது.

(அ)சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தம் – செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் எதுவுமில்லை.

(ஆ) சட்டத்தால் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒப்பந்தம் – சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றிற்கு தேவையான இன்றியமையாத கூறுகள் உள்ளன.




**ஒப்பந்தத்திற்கும் உடன்படிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

| வ.எண் | அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|---|
| 1 | வரைவிலக்கணம் | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும் | உடன்பாடு என்பது மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும் உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும் |
| 2 | செயலாக்கத் தன்மை | அனைத்து ஒப்பந்தங்களும் செயல் படுத்த முடியும். | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது |
| 3 | பரஸ்பர உறவு | ஒப்பந்தம் என்பது உடன்படிக்கை உள்ளடக்கியது | உடன்படிக்கையில் எல்லா ஒப்பந்தமும் உள்ளடங்கவில்லை. |
| 4 | செல்லக்கூடியது | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும் | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும் |
| 5 | சட்டபூர்வமான கடமை | அனைத்து ஒப்பந்தங்களுக்கும் சட்டப்பூர்வமான கடமை உள்ளன | சட்டபூர்வமான கடமையானது அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை |



XI_Tamil_commerce 26-33_255-324.indd 294 12/16/2020 4:23:49 PM

## 29.03 ஒப்பந்தங்களின் வகைகள்

### I சட்டப்படி செல்லக்கூடிய தன்மை அடிப்படையில்

#### 1. செல்தகு ஒப்பந்தம்

சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஓர் உடன்படிக்கையே சட்டப்படி செல்தகு ஒப்பந்தம் ஆகும். எடுத்துக்காட்டு S என்பவர் தன்னுடைய மகிழ்வுந்தை ₹5,00,000-க்கு T என்பவருக்கு விற்பனை செய்ய ஒப்புக்கொள்கிறார். அதேபோல T என்பவரும் மகிழ்வுந்தை வாங்க ஒப்புக்கொள்கிறார். இது ஒரு செல்தகு ஒப்பந்தமாகும்.

#### 2. செல்லாத ஒப்பந்தம் 2(j)

சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தம் செல்லாத ஒப்பந்தம் ஆகும். செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் இதில் இல்லை. எடுத்துக்காட்டு கடத்தல் பொருட்கள் வாங்க அல்லது விற்க மேற்கொள்ளும் ஒப்பந்தம் செல்லாத ஒப்பந்தமாகும்.

#### 3. தவிர்தகு ஒப்பந்தம் 2(i)

உடன்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் விருப்பப்படி, ஆனால் மறுதரப்பினரின் விருப்பமின்றி நடைமுறைப் படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே தவிர்தகு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு, மோசடி, திரித்துக் கூறுதல் அல்லது தவறு ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் தவிர்தகு ஒப்பந்தங்களாகின்றன.

#### 4. சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம்

இது சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். சட்டத்தை மீறுகிற தன்மையுடைய அல்லது ஒழுக்கக்கேடான அல்லது அடிப்படை பொதுக் கொள்கை விதியை மீறுகின்ற ஒப்பந்தம், சட்டத்துக்கு முரணான ஒப்பந்தமாகும்.

சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம் எல்லாம் செல்லாத ஒப்பந்தம் ஆகும். ஆனால் செல்லாத ஒப்பந்தம் எல்லாம் சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம் அல்ல.

(அ) சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம் போன்று செல்லாத ஒப்பந்தத்திற்கு அந்த மாதிரியான தண்டனைகள் இல்லை

(ஆ) சட்டத்திற்கு முரணான ஒப்பந்தம் தொடக்கத்திலிருந்தே செல்லாத ஒப்பந்தங்கள் ஆகும். சில சமயங்களில் செல்தகு ஒப்பந்தங்கள் பின்னர் செல்லாத ஒப்பந்தங்களாக மாறலாம்.

#### 5. நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தங்கள்

இது சட்டத்தால் செயல்படுத்த முடியாத குறைபாடுடைய ஒப்பந்தங்கள் ஆகும். எடுத்துக்காட்டாக எழுத்து வடிவின்மை, முறையான முத்திரைகள் இன்மை போன்றவை. நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தங்கள் அதிலுள்ள நபர்களால் செல்லக்கூடிய ஒப்பந்தம் ஆகலாம். ஆனால் இதை நீதிமன்றமானது கட்டாயப்படுத்த முடியாது.

### II உருவாக்க அடிப்படையில்

#### 1. வெளிப்படை ஒப்பந்தம்

ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்கள், அதன் நிபந்தனைகளையும், கூறுகளையும் ஏற்றுக் கொள்வதாக வெளிப்படையாக உடன்பட்டால், அது வெளிப்படையான ஒப்பந்தம் எனப்படுகிறது. ஒப்பந்தத்தை எழுத்து வடிவிலோ அல்லது வாய்மொழியாகவோ வெளிப்படுத்தலாம். வெளிப்படையான வாக்குறுதி வெளிப்படையான ஒப்பந்தத்தை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக P என்பவர் என்னுடைய மிதிவண்டியை ₹ 1,000-க்கு வாங்கி கொள்கிறாயா? என Q என்பவரிடம் கேட்க. Q என்பவர் ஆம் என கூறுகிறார்.

#### 2. உட்கிடை ஒப்பந்தம்

எழுத்து மூலமாக இல்லாமல் ஈடுபடுபவர்களின் நடத்தை மூலமே ஏற்படும் ஒப்பந்தம் உட்கிடை ஒப்பந்தம் ஆகும். எழுத்து மூலம் முனைவோ அல்லது ஏற்போ இன்றி செய்யப்படும் ஒப்பந்தம் உட்கிடையான ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டு A என்பவர் ஒரு பேருந்தில் ஏறினார் எனில் அவர் அந்த பேருந்து பயணத்திற்கு உண்டான பணத்தை அளிக்க உள்ளார் இது உட்கிடை ஒப்பந்தம் ஆகும்.

#### 3. போல்வு ஒப்பந்தம்

இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தமாகும். பொதுவாக இது ஒப்பந்தமே அல்ல. ஒரு நபர் ஒருவரின் இழப்பால் மற்றோருவர் தன்னை வளப்படுத்தி கொள்ளக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலானது வேறு வகையில் கூறினால் ஒரு தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க மற்றொரு தரப்பினர் இடையே ஏற்படும் தன்னிச்சையான ஒப்பந்தமாகும்.

### 4. மறைமுக ஒப்பந்தம்

ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் நடத்தையையும் மற்றும் ஊகத்தின் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தம் மறைமுக ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் பணத்தைப் பெறுதல்.

### III நிறைவேற்ற அடிப்படையில்

### 1. நிறைவேறிய ஒப்பந்தம்

ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடும் இரு நபர்கள் ஒப்பந்தப்படி அவரவர்களின் கடமையை முடிக்கும்போது அவ்வொப்பந்தம் நிறைவேறிய ஒப்பந்தமாகும். உதாரணமாக, வியாபாரி ஒருவர் ரொக்கத்திற்கு தொலைக்காட்சி ஒன்றை விற்கிறார். இதில் விற்பவர், வாங்குபவர் ஆகிய இருவரும் தங்கள் கடமையை நிறைவேற்றி உள்ளார்கள்.

### 2. நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம்

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு நபர்களிடையே கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அவ்வொப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டு *A* என்பவர் *B* என்பவருக்கு ₹*20,000*க்கு கட்டில் ஒன்று செய்து தர ஒப்புக்கொள்கிறார். எனினும் *A* இன்னும் கட்டிலைத் தயார் செய்யவில்லை என்றும் *B* என்பவர் அதற்கான தொகையைச் செலுத்தவில்லை என்று வைத்துக்கொள்ளுவோம், அது நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம் ஆகும்.

### 3. ஒரு தலை ஒப்பந்தம்

இதில் ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களில் ஒருவர் மட்டுமே தனது வாக்குறுதி அல்லது கடமையை நிறைவேற்றிய பிறகு மற்றொரு நபர் தனது கடமையை நிறைவேற்றுவார். எடுத்துக்காட்டாக *X* என்பவர் பொருட்களை வாங்கி வருவதாக ₹*10,000* *Y* என்பவருக்கு தருவதாக கூறுகின்றார். *Y* என்பவர் பொருட்களை கொண்டு வந்த பிறகே *X* என்பவர் பணத்தை தருகின்றார்.இதில் *Y* பொருட்களைக் க்கொண்டு வரும் பொழுதே ஒப்பந்தம் உருவாகின்றது.

### 4. இருதலை ஒப்பந்தம்

ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது இரு தரப்பினரும் தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டியிருப்பின், அத்தகைய ஒப்பந்தம் இரு தலை ஒப்பந்தம் எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக *R* என்பவர் ₹*10,00,000* மதிப்புள்ள மகிழ்வுந்தை விற்பனை செய்ய *S*–க்கு வாக்குறுதி அளிக்கின்றார். *S* என்பவர் பதிலுக்கு பணம் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார்.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| ஒப்பந்தம் | ஒப்புதல் |
| மறுபயன் | வற்புறுத்தல் |
| முன்மொழிதல் | செல்லாத |
| ஏற்றுக்கொள்ளல் | செல்லுபடியாகும் |
| முனைவு | ஏலம் |
| வாக்குறுதி | செயல்படுத்தக்கூடிய |
| சட்டம் | |

**நமது சிந்தனைக்கு**

1. A என்பவர் ஒரு லாரியிலிருந்து 10 மூட்டை சர்க்கரையை 5 நிமிடங்களில் இறக்குவதற்கு B என்பவருக்கு ₹.20.000 தருவதற்காக ஒப்புக்கொள்கிறது. இது செல்லக்கூடிய ஒப்பந்தமா?
2. X என்பவர் "ஒரு மருத்துவரான நீங்கள் என் மனைவியை கட்டணம் பெறாமல் சிகிச்சை அளித்தால், ₹.10,000 தருவதாக வாக்குறுதி அளிக்கிறேன்" என Y என்பவருக்கு கடிதம் எழுதுகிறார். ஆனால் X வாக்குறுதி அளித்தப்படி பணம் செலுத்தவில்லை. Y என்பவருக்கு உன்னுடைய அறிவுரை யாது?
3. P என்பவர் காலம் கடந்த செலுத்தாத ₹ 10,000 கடனைத் தருவதாக ஒப்புக்கொண்டு உறுதிமொழிப் பத்திரத்தில் எழுதிக் Q கொடுக்கிறார். இது செல்லக்கூடிய ஒப்பந்தமா? சரியான காரணத்தைத் தருக.

## மேலும் அறிவதற்கு

1. இந்த பாடத்தை படித்த பிறகு, சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றிமையாத கூறுகளை அடையாளம் காண முடியும்.
2. இந்த பாடத்தை படித்த பிறகு, முனைவு மற்றும் ஏற்பின் பொருள் எளிதாகிவிடும்
3. மறுபயன், திரும்ப செலுத்துவதற்கான தேவையும் புரிந்து கொள்ள முடியும்.
4. ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை தெளிவாக வரையறுக்கலாம்.
5. போல்வு ஒப்பந்தங்கள் பொருளை அறிந்து பின்னர் அதை மற்ற ஒப்பந்தங்களில் இருந்து வேறுபடுத்தலாம்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை**

    (அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு

    (ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு

    (இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி

    (ஈ) ஒப்பந்தம்

2. **ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்"**

    (அ) உடன்பாடு (ஆ) ஒப்பந்தம்

    (இ) முனைவு (ஈ) ஏற்பு.

3. **செல்லாத ஒப்பந்தம் குறிப்பது**

    (அ) சட்டத்துக்கு முரணான ஒப்பந்தத்தின் இயல்பு

    (ஆ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு

    (இ) சட்ட நடைமுறைகளை மீறுவதான ஒப்பந்தம்

    (ஈ) பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடு.

4. **செல்லுபடியாகக் கூடிய ஏற்பு**

    (அ) அறுதியிட்டுக் கூறுதல்

    (ஆ) தகுதியற்றது

    (இ) அறுதியிட்டுக் கூறுதல் மற்றும் தகுதியற்றது

    (ஈ) நிபந்தனையுடையது.

5. **இளவருடன் செய்யும் ஒப்பந்தம்**

    (அ) செல்தகு ஒப்பந்தம்

    (ஆ) செல்லாத ஒப்பந்தம்

    (இ) தவிர்தகு ஒப்பந்தம்

    (ஈ) மற்றோரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்

**விடைகள்**

*1.* (ஈ) *2.* (அ) *3* (ஆ) *4* (இ) *5* (ஆ)

### II. குறுவிடை வினாக்கள்.

1. சட்டம் என்றால் என்ன?
2. ஒப்பந்தம் என்றால் என்ன?
3. இந்திய ஒப்பந்தச் சட்டம் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவை?

### III. சிறுவிடை வினாக்கள்.

1. முனைவு என்றால் என்ன?
2. உடன்படிக்கை என்றால் என்ன?
3. செல்லாத ஒப்பந்தம் என்றால் என்ன?

### IV. பெருவிடை வினாக்கள்.

1. சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் யாவை? (ஏதேனும் 5)
2. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
3. நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை?

MACSZI



XI_Tamil_commerce 26-33_255-324.indd 297 12/16/2020 4:23:49 PM

அத்தியாயம்
30

# ஒப்பந்த நிறைவேற்றம்

HAGFNF

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. ஒப்பந்த நிறைவேற்றத்தின் பொருள் மற்றும் அதன் இன்றியமையாத கூறுகளைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்.
2. நிறைவேற்றத்தின் நேரமும் மற்றும் இடமும் பற்றிய விதிகளைத் தெரிந்து கொள்ள இயலும்.
3. கூட்டு உரிமைகள் மற்றும் கூட்டுப் பொறுப்புகளின் ஒப்படைப்பு பற்றி புரிந்து கொள்ள இயலும்.

## 30.01 ஒப்பந்தங்களின் நிறைவேற்றம்

ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிவிட்டால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். பிரிவு 37 படி நிறைவேற்றம் ஒப்பந்த சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் செயல்படுத்த முடியவில்லை எனில், ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நபரும் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களாக உள்ளனர். இருவருமே தங்களின் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமோ அல்லது நிறைவேற்றுவதற்காக முனைவு செய்வதன் மூலமோ நிறைவேற்றலாம்.

ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட இரண்டு வழிகள் உள்ளன.அவை

1. உண்மையான நிறைவேற்றம்

2. நிறைவேற்றுவதற்கான முனைவு

### 1. உண்மையான நிறைவேற்றம்

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தங்கள் கடமைகளைச் செய்தால் அது உண்மையான நிறைவேற்றம் ஆகும். இதில் ஒப்பந்தப்படி நபர்கள் அவர்கள் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.

### 2. நிறைவேற்றுவதற்கான முனைவு

வாக்குறுதி அளித்தவர் ஒப்பந்தத்தின் கீழ் தான் ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்ற முன்வந்தும் அதை வாக்குறுதி பெற்றவர் ஏற்க மறுக்கிறார். இது நிறைவேற்றுவதற்கான முனைவு அல்லது முயற்சி செய்த நிறைவேற்றம் என்கிறோம். எனவே இது உண்மையான நிறைவேற்றம் கிடையாது. ஆனால் நிறைவேற்றத்திற்கு சமமாகக் கருதப்படும்.

### சட்டப்படி செல்லக்கூடிய ஓர் ஒப்பந்தப் புள்ளியின் இன்றியமையாத கூறுகள். (பிரிவு 38)

ஒரு ஒப்பந்தப் புள்ளியில் கீழ்க்கண்ட இன்றியமையாத கூறுகள் இருக்க வேண்டும்

i) அது நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்

ii) ஒப்பந்தத்தின் முழுக்கடமையும் நிறைவேற்றும் வகையில் இருக்க வேண்டும், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை மட்டும் நிறைவேற்றுவதாக இருக்கக்கூடாது.

iii) ஒரு நபர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற விருப்பம் உடையவராகவும், நிறைவேற்றக்கூடிய நிலை-யிலும் இருக்க வேண்டும்.

iv) இது சரியான நேரத்திலும் இடத்திலும் செய்யப்படுதல் வேண்டும்.

v) இது சரியான வடிவத்தில் இருக்க வேண்டும்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 298 12/16/2020 4:23:49 PM

vi) இது ஒரு சரியான நபரால் நிறைவேற்றப்பட வேண்டும் அதாவது வாக்குறுதி பெறுபவருக்கு அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட முகவரால் செய்யப்படுதல் வேண்டும்.

vii) ஒப்பந்தப் புள்ளியின் படி பொருட்களைப் பரிசோதிக்க வாக்குறுதி பெறுபவருக்கு ஒரு நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும்.

viii) அது கூட்டாக வாக்குறுதி பெறுவர்களுள் யாரேனும் ஒருவருக்குச் செய்யப்படலாம்.

### யார் நிறைவேற்ற கோரிக்கையை விடுக்கலாம்?

1. வாக்குறுதி பெறுபவர் (Promisee)
   வாக்குறுதி பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தைக் கோர உரிமையுள்ள நபர்.
2. சட்டரீதியான பிரதிநிதி (Legal Representative) – சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தைக் கோரலாம்.
3. மூன்றாவது நபர் (Third Person) – விதிவிலக்காக சில சூழ்நிலைகளில் அயலார் கூட நிறைவேற்றத்தைக் கோரும் உரிமை பெறுகிறார்.

## 30.02 ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?

### i) வாக்குறுதி அளித்தவரால் (பிரிவு 40)

ஒப்பந்தம் வாக்குறுதி அளித்தவராலோ அல்லது அவருடைய சட்டரீதியான பிரதிநிதியாலோ அல்லது அவரால் பணியமர்த்தப்பட்ட தகுதியுடைய ஏதேனும் வேறு நபராலோ நிறைவேற்றப்பட வேண்டும். தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் அவை வாக்குறுதி அளித்தவராலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு: –** X என்பவர் ஓவியம் ஒன்றை வரைந்து தருவதாக Y என்பவருக்கு வாக்குறுதி அளிக்கிறார். X இவ்வாக்குறுதியை தானே நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், இதில் X என்பவரின் தனிப்பட்ட ஆற்றல் அடங்கியுள்ளது.

### ii) முகவர் (பிரிவு 40)

வாக்குறுதி அளித்தவரின் தனிப்பட்ட ஆற்றலை நம்பி ஒப்பந்தம் உருவாக்கபடவில்லையெனில் அத்தகைய ஒப்பந்தத்தில் வாக்குறுதி அளித்தவரின் முகவரும் நிறைவேற்றலாம்.

### iii) சட்டரீதியான பிரதிநிதி (பிரிவு 37)

தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் வாக்குறுதி அளித்தவர் ஒப்பந்தத்தைத் தனிப்பட்ட முறையில் நிறைவேற்ற வேண்டும். அந்நிலையில் வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால் அந்த ஒப்பந்தம் முடிவடைகிறது. ஆயினும் தனிப்பட்ட ஆற்றலை நம்பியில்லாத ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, வாக்குறுதி அளித்தவரின் சட்டரீதியான வாரிசுதாரர் அவரது மறைவிற்கு பிறகு நிறைவேற்றலாம்.

உதாரணம்: M என்பவர் தனது மகிழ்வுந்தை ஒரு வாரம் கழித்து ₹1,00,000க்கு N என்பவருக்கு விற்க உறுதியளிக்கிறார். ஆனால், ஒப்பந்தத்தின் 5 நாட்களுக்கு பிறகு M இறந்து விடுகிறார் எனினும் M என்பவரின் சட்டரீதியான பிரதிநிதிக்கு இதற்கான பொறுப்பை எடுத்துக்கொள்கிறார், M–ன் பிரதிநிதிக்கு ₹ 1,00,000 செலுத்தி N என்பவர் மகிழ்வுந்தை பெற்றுக் கொள்ளலாம்.

### iv) மூன்றாவது நபர் (பிரிவு 41)

வாக்குறுதி பெறுபவர் மூன்றாம் தரப்பினர் ஒப்பந்தம் நிறைவேற்றுவதை ஒப்புக்கொண்டால், வாக்குறுதி அளித்தவரே அதனை நிறைவேற்ற வேண்டும் என வற்புறுத்த இயலாது.

### v) கூட்டு வாக்குறுதிகள்

#### (அ) கூட்டு பொறுப்புகளின் ஒப்படைப்பு (பிரிவு 42)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக வாக்குறுதிகளை அளித்திருந்தால், அனைவருமே இணைந்து நிறைவேற்ற வேண்டும். ஏதேனும் ஒரு கூட்டு வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுதாரும் பிற உயிருள்ள கூட்டு வாக்குறுதி அளித்தவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

எல்லா வாக்குறுதி அளித்தவர்களும் இறந்துவிட்டால், ஒவ்வொருவருடைய வாரிசுதாரும் சேர்ந்து வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

#### (ஆ) கூட்டு உரிமைகளின் ஒப்படைப்பு (பிரிவு 45)

பல நபர்கள் கூட்டாக ஒரு நபரிடமிருந்து வாக்குறுதி ஒன்றைப் பெறும் பொழுது, அனைவருமே இணைந்து அவ்வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று கோரும் உரிமை உண்டு. ஏதேனும் ஒரு கூட்டு வாக்குறுதி பெற்றவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுதாரும் பிற உயிருள்ள கூட்டு



XI_Tamil_commerce 26-33_255-324.indd 299 12/16/2020 4:23:49 PM

வாக்குறுதி பெற்றவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரலாம்.

கூட்டாக வாக்குறுதி பெற்ற அனைவரும் இறந்துவிட்டால், ஒவ்வொருவருடைய வாரிசுதாரும் சேர்ந்து வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரலாம்.

### vi) வாக்குறுதி நிறைவேற்றத்தின் நேரமும் மற்றும் இடமும் (பிரிவு 46 முதல் 50 வரை)

ஒப்பந்தத்தாரர்களுக்கு இடையேயான உடன் படிக்கையைப் பொறுத்து ஒப்பந்தத்தினுடைய நிறைவேற்றத்தின் நேரமும் இடமும் அமைகின்றன.

**எடுத்துக்காட்டு:** A என்பவர் C என்பவருக்கு ₹ 10,000 தருவதாக B என்பவரிடம் வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் A என்பவர் C க்கு அத்தொகையை அளிக்க தவறி விட்டார். இங்கு அத்தொகையை அளிக்குமாறு கோர வேண்டியவர் B யே அன்றி C அல்ல.

சாதாரணமாக மூன்றாம் நபர் ஒருவரின் பயனுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பினும், அம்மூன்றாம் நபர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு கோரமுடியாது. ஆனால், சில சூழ்நிலைகளில் ஒப்பந்தத்திற்கு அயலார் கூட அதனை நிறைவேற்றக் கோரும் உரிமையைப் பெறுகிறார். வாக்குறுதி வழங்குபவர் இறந்து விட்டால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியிடம் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரலாம்.

### ஒரு ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தின் நேரம், இடம் மற்றும் விதம் பற்றிய சட்ட விதிகள்

ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தின் நேரம், இடம் மற்றும் விதம் ஆகியவை ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் முடிவு செய்து கொள்ள வேண்டும். இது தொடர்பாக ஒப்பந்த சட்டத்தில் 46 முதல் 50 வரை பல்வேறு சட்ட விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பான சட்ட விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

#### 1. நேரம் நிர்ணயிக்கப்படாமை (பிரிவு 46)

நிறைவேற்றுவதற்குரிய நேரம் நிர்ணயிக்கப்படவில்லை எனில், ஒரு வாக்குறுதி அளித்தவர் ஒரு நியாயமான காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். நியாயமான காலம் எது என்பது ஒப்பந்தத்தையும் அல்லது ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் எண்ணம் ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

#### 2. நிறைவேறுதற்குரிய காலமும் இடமும் குறிப்பிட்டப்பட்டிருந்தால் (பிரிவு 47)

சில சமயங்களில், நிறைவேற்றுதற்குரிய காலமும் இடமும் குறிப்பிட்டப்பட்டிருந்தும், வாக்குறுதி பெற்றவர் அதை நிறைவேற்றுமாறு கேட்காமல் இருக்கின்றார், இவ்வித சமயங்களில் வாக்குறுதி அளிப்பவர் தனது வாக்குறுதியை குறிப்பிட்ட நாளில், வணிக நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

#### 3. ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றம் (பிரிவு 48)

ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கான நாள் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் வாக்குறுதி பெறுவர் கேட்கும் போழுது தான் வாக்குறுதி அளிப்பவர் தனது வாக்குறுதியை செய்து முடிக்க வேண்டும்.

#### 4. இடம் குறிப்பிடாமல், விண்ணப்பிக்காமல் இருக்கும் போதும் (பிரிவு 49)

சில சமயங்களில், ஒப்பந்தத்தில் வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டிய இடம் குறிப்பிடப்பட்டிருக்காது. மேலும் வாக்குறுதியும், வாக்குறுதி பெற்றவரின் விண்ணப்பம் இன்றி நிறைவேற்றப்படக்கூடியதாக இருக்கும். இவ்வித சமயங்களில், வாக்குறுதியை அளித்தவர் வாக்குறுதி பெற்றவரிடம், நிறைவேற்றம் எங்கு செய்யப்பட வேண்டும் என்று கேட்டு, அவர் நியமித்த இடத்தில் அதை நிறைவேற்ற வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** A என்பவர் B என்பவருக்கு ஒரு நாளைக்கு குறிப்பிட்ட நாளில் 1,000 கிலோ அரிசியை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கிறார். B என்பவர் அதை பெறுவதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்தை நிர்ணயிக்க வேண்டும். பிறகு A என்பவர் அத்தகைய நிர்ணயித்த இடத்தில் அரிசியை வழங்க வேண்டும்.

#### 5. நிறைவேற்றும் விதம் மற்றும் காலம் (பிரிவு 50)

வாக்குறுதி பெற்றவர், வாக்குறுதி நிறைவேற்றும் விதமும் மற்றும் காலமும் நிர்ணயித்து பிறகு அதன் படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும். எடுத்துக்காட்டு: A என்பவரும் B என்பவரும்



XI_Tamil_commerce 26-33_255-324.indd 300 12/16/2020 4:23:49 PM

*பரஸ்பரம் ஒருவர் மற்றொருவருக்கு கடன் பட்டுள்ளனர். அதாவது A என்பவர் ,Bயிடம் ₹ 1,000 கடன் வாங்கியுள்ளார். அதுபோல B என்பவர் , A யிடம் ₹1,500 கடன் வாங்கியுள்ளார். B தாம் அதிகமாக பெற்ற ₹ 500 ஐ Aக்கு அளித்துவிட்டார். இதோடு Aக்கு Bக்கும் இடையே உள்ள கணக்கு தீர்ந்து விடுகின்றது.*

## 30.03 இருதரப்பு வாக்குறுதிகள் (பிரிவு 2 (f)

*ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிக்கு மறுபயனாக அளிக்கும் பொழுது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகின்றன.*

**எடுத்துக்காட்டு:** X என்பவர் தனது வீட்டை ₹ 5,00,000 க்கு Y என்பவருக்கு விற்பனை செய்வதாக வாக்களிக்கிறார்.

இதில் வாக்குறுதிகள் இருதரப்புமாக உள்ளன. X வீட்டை ₹ 5,00,000க்கு Y என்பவருக்கு வழங்குவதாக வாக்குறுதியை அளிக்கிறார். அதே போல் Y என்பவர் ₹ 5,00,000 பணத்தை கொடுத்து வீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான உறுதிமொழி அளிக்கிறார்.

### இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள்

### 1. இருதரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி

*ஒவ்வொருவரும் மற்றவர் அவருடைய வாக்குறுதியை நிறைவேற்றுகிறாரா என காத்திராமல் அவரவர் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், இந்த வாக்குறுதி இருதரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி எனப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, X என்பவர் ஜூன் 10 அன்று அரிசி வழங்குவதற்கு உண்டான பணத்தை வழங்குவதற்கு Y ஒப்புக்கொள்கிறார். அதே போல Y என்பவர் ஜூன் 18 ம் தேதி அரிசி வழங்க சம்மதித்தார்.*

### 2. இருதரப்பு மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள்

*இவ்வித வாக்குறுதிகளில் ஒரு நபரின் நிறைவேற்றம், மற்றவர் தம்முடைய வாக்குறுதியை முன் கூட்டியே நிறைவேற்றுவதை பொறுத்து அமைகின்றது. இது பரஸ்பரமான மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள் எனப்படும், உதாரணமாக A என்பவர் கட்டிடம் கட்ட B என்பவரிடம் ஒப்புக்கொள்கிறார். அதே போல B என்பவர் கட்டுமானத்திற்கு தேவையான சிமெண்ட் வழங்க A யிடம் ஒப்புக்கொள்கிறார். எனவே, A வாக்குறுதி B வாக்குறுதியை நிறைவேற்றுவதைப் பொறுத்தது.*

### 3. இருதரப்பு மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள்

*இரண்டு வாக்குறுதிகளும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்படும் பொழுது, அவை பரஸ்பர மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள் எனப்படும்.*

### செலுத்தல்களை ஒதுக்கி வைத்தல் [பிரிவு 59 – 61]

*கடனாளி ஒருவர் மற்றவரிடமிருந்து பல்வேறு கடன்களைப் பெற்றிருந்து,அக்கடன்கள் முழுவதையும் தீர்க்கப் போதுமான அளவை விடக் குறைந்த ஓர் தொகையைச் செலுத்தும் பொழுது, அத்தொகையை அவருடைய எந்தக் கடனைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டும் என ஓர் பிரச்சனை ஏற்படுகின்றது.*

*கடனாளி ஒருவர் ஒரு கடனீந்தோரிடம் பல தனித் தனிக் கடன்களைச் செலுத்த வேண்டிய நிலையில், அனுப்பிய தொகை அனைத்துக் கடன்களையும் தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லையெனில் குறிப்பிட்ட ஒரு கடனுக்கு அத்தொகையைப் பயன்படுத்தல் செலுத்துப் பகிர்வு என்று பெயர்.*

*செலுத்தல்களை ஒதுக்கி வைத்தல் தொடர்பான விதிகள் 59 முதல் 61 வரையிலான சட்டப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன :*

### 1. தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் பொழுது

*குறிப்பிட்ட கடனைத் தீர்க்க, தான் அனுப்பும் தொகையைப் பயன்படுத்துமாறு கடனாளி வேண்டுகோள் விடுக்க முடியும். அத்தொகை கடன்*

**உங்களுக்குத் தெரியுமா?**

(i) நேரம், இடம் மற்றும் விதம் ஆகியவை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட முக்கியமானவை ஆகும்.

(ii) செல்லத் தக்க நிறைவேற்ற ஒப்பந்தப் புள்ளி எப்பொழுதும் ஒப்பந்தம் நிறைவேற அவசியமானதாகும்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 301 12/16/2020 4:23:49 PM

அளித்தவர் ஏற்றுக்கொண்டால் அவர் அவ்வாறே அக்கடனைத் தீர்க்க பயன்படுத்த வேண்டும்.

உதாரணமாக X என்பவர் ₹20,000, ₹30,000 மற்றும் ₹50,000 என Y என்பவரிடம் மூன்று விதமான கடன்களைக் பெற்றுள்ளார். X என்பவர் ₹50,000 Y க்கு அனுப்புகிறார். X மூன்றாம் கடனுக்கு எதிராக பணம் செலுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது. Y மூன்றாவது கடனுக்கு எதிராக மட்டுமே கடனை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

### 2. தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக் காட்டாத பொழுது [60]

கடனாளி அளித்த தொகை எந்தக் கடனை அடைக்க பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டாத பொழுது கடன் அளித்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப அத்தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

உதாரணம் P என்பவர் Q என்பவரிடம் பல கடன்களைப் பெற்றுள்ளார் இருப்பினும்

P பெற்ற கடன்களில் ஒன்றான ₹10,000 அடைக்குமாறு Q என்பவர் கேட்கும் பொழுதும், P என்பவர் கோரிய பணத்தை செலுத்துகிறார்.

### 3. கடனாளி சுட்டிக் காட்டவும் கடனளித்தவர் ஒதுக்கீடு செய்யவும் தவறும் பொழுது [61]

ஒப்பந்த நபர்கள் எக்கடனுக்கு என ஒதுக்கீடு செய்யவில்லை எனில், கால வரிசைப்படி முதன்முதலில் பெறப்பட்ட கடனைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். ஒரு வேளை, கடன் அனைத்தும் ஒரே நிலையில் இருப்பின், விகிதாச்சார அடிப்படையில் அவை தீர்க்கப்படும்.

**கலைச்சொற்கள்**

வாக்குறுதி

வாக்குறுதி பெறுபவர்

வாக்குறுதி வழங்குபவர்

ஊக்குவிப்பு

பகுதி நிறைவேற்றம்

தவணை

நிபந்தனையற்ற

சட்ட பிரதிநிதி

ஒப்பந்தப்புள்ளி

**நமது சிந்தனைக்கு**

நிறைவேற்றத்தை அடையாளம் காணவும் உண்மையான நிறைவேற்றம் அல்லது நிறைவேற்றத்திற்கான முயற்சி வேறுபடுத்தி அறியலாம்.

நிறைவேற்றத்தின் நேரம் மற்றும் இடம் பற்றிய சட்ட விதிகளைப் புரிந்து கொள்ளலாம்.

**மேலும் அறிவதற்கு**

ஒரு ஒப்பந்தங்களின் நிறைவேற்ற வழிகளைப் பட்டியலிடலாம்.

ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தில் ஈடுபட்டுள்ள நபர்ளை அடையாளம் காணலாம்

**பயிற்சி**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **செல்லத்தக்க நிறைவேற்றம் ஒப்பந்த நபர்கள் தங்களுடைய கடமையை செய்வது, அந்த ஒப்பந்தம்**

   (அ) ஒப்பந்த நிறைவேற்றம்

   (ஆ) நடைமுறைப்படுத்தப்படும்

   (இ) செல்லாதது

   (ஈ) இவை எதுவும் இல்லை

2. **பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?**

   (அ) வாக்குறுதி வழங்குபவர் மட்டும்

   (ஆ) வாக்குறுதி வழங்குபவரின் சட்ட பிரதிநிதிகள்

   (இ) வாக்குறுதி வழங்குபவரின் முகவர்

   (ஈ) இவை அனைத்தும்

**3.** *A, B, C* **கூட்டு ஒப்பந்தத்தின்படி ₹***50,000 D* **என்பவருக்கு செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு முன், *C* இறந்து விடுகிறார் . இங்கே, ஒப்பந்தம்**

(அ) *C* யின் மரணத்தினால் ஒப்பந்தம் செல்லாது

(ஆ) *C*, சட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து *A* மற்றும் *B* ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(இ) *A* மற்றும் *B* மட்டும் தனியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

(ஈ) *A, B* மற்றும் *D* க்கு இடையே ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**4. இவர்களில் யார் வாக்குறுதியின் நிறைவேற்றத்தைக் கோர முடியாது?**

(அ) வாக்குறுதி பெறுபவர்

(ஆ) கூட்டு வாக்குறுதி அளித்தவர்கள்.

(இ) ஒரு வாக்குறுதி பெறுபவர் மரணத்தின் போது, அவரது சட்ட பிரதிநிதி.

(ஈ) ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர்

**5. மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?**

(அ) வாக்குறுதி அளிப்பவர்

(ஆ) வாக்குறுதி பெறுபவர்

(இ) முகவர்

(ஈ) சட்டரீதியான பிரதிநிதி

**விடைகள்**

1 (அ) 2 (ஈ) 3 (ஆ) 4 (ஈ) 5 (இ)

## II. குறுவிடை வினாக்கள்.

1. ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற வழிகள் யாவை?
2. சட்டரீதியான பிரதிநிதி என்பவர் யார்?
3. முகவர் என்பவர் யார்?
4. இருதரப்பு வாக்குறுதிகள் என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. ஒப்பந்த நிறைவேற்ற கோரிக்கையை யார் விடுக்கலாம்?
2. ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
3. இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. சட்டப்படி செல்லக்கூடிய ஓர் ஒப்பந்தப் புள்ளி-யின் இன்றியமையாத கூறுகள் யாவை? (ஏதேனும் 5)
2. செலுத்தல்களை ஒதுக்கி வைத்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் கூறுக.

அத்தியாயம் 31

# ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை

HAQBQ3

## கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. ஒப்பந்தம் விடுவிப்பு பொருள் மற்றும் அதன் வழிகளையும் புரிந்து கொள்ள இயலும்.
2. இயலாது போதலால் ஏற்படும் ஒப்பந்த விடுவிப்பு பற்றிய பகுப்பாய்வு செய்ய இயலும்
3. ஒப்பந்த மீறுகை என்பது ஒப்பந்த விடுவிப்பு வழிகளில் ஒன்று என அறிந்து கொள்ள இயலும்.
4. ஒப்பந்த மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு கிடைக்கக்கூடிய தீர்வுகளைத் தெரிந்து கொள்ள இயலும்.

## 31.01 ஒப்பந்த விடுவிப்பு

ஒப்பந்த விடுவிப்பு என்பது ஒப்பந்த நபர்களின் உறவு முடிவுக்கு கொண்டுவருவதை குறிக்கும். ஒப்பந்தம் ஒன்றின் மூலம் உருவாக்கப்பட்ட உரிமைகள், கடமைகள் செய்தல் முடியும் போது, ஒப்பந்தம் விடுவிக்கப்படுகின்றது. சில நேரங்களில் மற்ற உரிமைகளும் மற்றும் பொறுப்புகள் ஒப்பந்த விடுவிப்பு விளைவாக தோன்றலாம்.

### ஒப்பந்தம் விடுவிக்கப்படும் வழிகள்

### 1. நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தமது கடமைளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்படும். நிறைவேற்றம் என்பது உடன்பாட்டின் படி இருக்க வேண்டும். வாக்குறுதி அளித்தப்படி குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

### நிறைவேற்றம் இரண்டு வகைப்படும்

அ. உண்மையான நிறைவேற்றம்

ஆ. நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்.

### 2. இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு

ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உடன்படிக்கை இருதரப்பு ஒத்துக்கொள்வதன் மூலம் உடன்பாட்டை முடிக்கலாம். உடன்பாட்டின் விளைவாக ஒப்பந்தம் ஏற்படுவது போல, அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒன்றிணைந்து உடன்பாட்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம். இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு பின்வரும் ஏதேனும் வழிகளில் இருக்கலாம். அவை

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், வெளிப்பத் டையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்.

இருதரப்பு விடுவிப்பு பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படலாம். அவை

பரிமாற்றம் , திருத்தம், தள்ளுபடி, ரத்து செய்தல், தளர்த்துதல் ,இணைப்பு

### 3. இயலாது போதலால் விடுவிப்பு

சில நிகழ்ச்சிகளால், ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனால், அது இயலாது போதலால் விடுவிப்பு எனப்படும். அதனால் ஒப்பந்த நபர்கள் தமது கடமைகளில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

நிறைவேற்றம் இயலாது போதல் இரண்டு வகைப்படும்(பிரிவு 56). அவை

1, உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை

2. ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை

உடன்படிக்கை ஏற்படும் பொழுதே அது நிறைவேற்றப்பட முடியாது என்பது



XI_Tamil_commerce 26-33_255-324.indd 304 12/16/2020 4:23:50 PM

(1) ஒப்பந்த நபர்களுக்கு தெரிந்து இருக்கலாம் (2) ஒப்பந்த நபர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்

அதே போல ஒரு ஒப்பந்ததை உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை அல்லது இடையில் இயலாமல் போதலால் விடுவிப்பு போன்றவை

(1) ஒப்பந்த நபர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில நிகழ்வுகள் அல்லது

(2) வாக்குறுதி அளித்தவர் அல்லது வாக்குறுதி பெறுபவரின் சில செயல்களால் ஏற்படலாம்.

#### 4. காலம் கடந்து போவதால் விடுவிப்பு

வரையறை சட்டம் 1963 படி ஒப்பந்தம் ஒன்று குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அதனால் பாதிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட காலத்திற்குள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரும் உரிமையை இழந்து விடுகிறார்

#### 5. சட்டத்தினால் விடுவிப்பு

சட்டத்தினால் விடுவிப்பு என்பது சட்டத்தின் தலையீட்டினால் ஒப்பந்தம் ஒன்று விடுவிக்கப்படுவதை இது குறிக்கும். இது பின் வரும் ஏதேனும் வழிகளில் செய்யப்படலாம்.

#### (1) இறப்பு

தனிப்பட்ட ஆற்றலை நம்பியுள்ள ஒப்பந்தங்களில், வாக்குறுதி அளித்தவர் இறந்தவுடன் அவ்வொப்பந்தம் முடிவுக்கு வந்துவிடும்.

#### (2) இணைப்பு

ஒரு நபரின் குறைந்த அளவு உரிமையானது அவருக்கு வந்துசேரும் உயர்ந்த அளவு உரிமையுடன் இணைப்பதைக் குறிக்கும். இதில் குறைந்த அளவு உரிமையுள்ள ஒப்பந்தம் விடுவிக்கப்படும்.

#### (3) நொடிப்பு நிலை

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் நொடிப்பு நிலை அடைந்து விட்டால் அவருடைய அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுகின்றார்.

#### (4) அங்கீகாரமற்ற திருத்தம்

ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர் அடுத்தவரின் அனுமதியின்றி ஒப்பந்தத்தில் நிபந்தனைகளில் திருத்தம் செய்வாரேயெனில், ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்

## 31.02 ஒப்பந்த மீறுகையும் அதற்கான தீர்வுகளும்

### ஒப்பந்த மீறுகை

ஒப்பந்த ஈடுபட்டுள்ள நபர்கள் அனைவரும் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் தமது கடமைகளைச் செய்ய தவறுதல் ஒப்பந்த மீறுகை எனப்படும்.

ஒப்பந்தத்தை மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு பின்வரும் தீர்வுகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

1. ஒப்பந்தத்தை ரத்து செய்தல்.
2. திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு
3. தடையுத்தரவிற்கான வழக்கு
4. பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு
5. ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு

#### 1. ஒப்பந்தத்தை ரத்து செய்தல்.

ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒருவர் ஒப்பந்தத்தை மீறும் பொழுது, மற்றவர் அவ்வொப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதிக் கொள்ளலாம். மேலும் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தில் தமக்குள்ள அனைத்து கடமைகளிலிருந்து அவர் விடுவிக்கப்படுகின்றார்.

> எடுத்துக்காட்டு M என்பவர் N என்பவருக்கு குறிப்பிட்ட நாள் அன்று மோட்டார் வண்டி வழங்குவதாக வாக்குறுதி அளிக்கிறார். அதே போல் குறிப்பிட்ட நாள் அன்று மோட்டார் வண்டிக்குறிய பணத்தை N அளிப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் N அந்த நாளில் பணத்தை அளிக்க மறுக்கிறார்.

#### 2. திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு

சில சமயங்களில் இழப்பீடுகள், ஒப்பந்த முறிவிற்கான போதுமான ஓர் தீர்வாக இருக்காது. இச்சமயங்களில் நீதிமன்றம் ஒப்பந்தத்தின் கூற்றுப்படி அவரது வாக்குறுதியை நிறைவேற்றுமாறு ஆணையிடலாம். ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 305 12/16/2020 4:23:50 PM

திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கு நீதிமன்றம் ஆணையிடக் கூடிய சில சூழ்நிலைகள் பின்வருமாறு.

(1) ஒப்பந்தம் நிறைவேற்றப்படாததால் ஏற்பட்ட இழப்பைப் பணத்தைக் கொடுத்து ஈடு கட்ட முடியாத பொழுது

(2) ஒப்பந்தம் நிறைவேற்றப்படாததால் ஏற்படும் இழப்பைப் பெற முடியாத பொழுது

(3) ஒப்பந்தம் நிறைவேற்றபடாததால் ஏற்பட்ட உண்மையான நட்டத்தை நிர்ணயிக்கத் தர அளவுகள் ஏதும் இல்லாத பொழுது

ஆயினும் திட்டவட்டமான நிறைவேற்றம் பின்வரும் சூழ்நிலைகளில் நீதிமன்றத்தால் ஆணையிடப்படமாட்டாது

(1) இழப்பீடு போதுமான தீர்வாக அமையும் பொழுது

(2) ஒப்பந்தம் நிபந்தனைகள் தெளிவாக இல்லாத பொழுது

(3) ஒப்பந்தம் இரு தரப்பினர்க்கும் பொருந்தாத பொழுது

(4) ஒப்பந்தம் திரும்பப் பெறும் தன்மை உடைய பொழுது

(5) பொறுப்பான்மையை மீறும் வகையில் பொறுப்பான்மையர் ஈடுபடும் ஒப்பந்தங்கள்

(6) ஒப்பந்தம் தனிநபர் ஆற்றலை உட்கொண்டிருக்கும் பொழுது

(7) பொது நிறுமங்கள் அமைப்பு முறையேடு மீறிய ஒப்பந்தங்களில் ஈடுபடும் பொழுது

(8) ஒப்பந்த நிறைவேற்றத்தை நீதிமன்றத்தால் மேற்பார்வையிட முடியாத பொழுது

### 3. தடையுத்தரவிற்கான வழக்கு

ஒரு குறிப்பிட்ட செயலை ஒரு நபர் செய்யாதிருக்குமாறு தடைப்படுத்தும் வகையில் அமையும் நீதிமன்றத்தின் ஆணை தடையுத்தரவு ஆகும். ஒரு நபர் ஒரு செயலைச் செய்யமாட்டேன் என வாக்குறுதி அளித்த நிலையில், அச் செயலைச் செய்யாதிருக்க நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்கலாம்.

பின்வரும் வழக்குகளில் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்கலாம்

i) தவிர்க்கக்கூடிய ஒப்பந்தம் இருந்தால்.

ii) செல்லாத ஒப்பந்தமாக இருந்தால் அல்லது

iii) செல்லாத ஒப்பந்தம் எனக் கண்டுபிடித்தால்

### 4. பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு

ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர் வாக்குறுதியை நிறைவேற்றிய பின்னர் மற்றொரு நபர் ஒப்பந்தத்தை மீறுவதால் பணிக்கு ஏற்ற தொகை என்ற கூற்று எழுகிறது. "எவ்வளவு ஈட்டப்பட்டதோ அவ்வளவு" என்ற சொல்லின் பொருள் 'பணிக்கு ஏற்ற தொகை' எனப்படுகிறது. ஒப்பந்தத்தின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டு, மறுபகுதி நிறைவேற்றப்பட முடியாமல் தடை ஏற்பட்டால், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை முடித்த நபருக்கு இழப்பீடு கிடைக்க வகை செய்கிறது.

பணிக்கு ஏற்ற தொகையைப் பெற கோரிக்கைவிடக் கூடிய சூழ்நிலைகள்

அ) ஒரு ஒப்பந்தம் செல்லாதது என கண்டுப்பிடிக்கப்படும் பொழுது

ஆ) கைம்மாறு கருதாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கமில்லாமல் ஏதேனும் செய்யப்படும் பொழுது

இ) ஒரு நபர் முழு ஒப்பந்தத்தையும் நிறைவேற்ற தவறுதல் அல்லது நிறைவேற்றாமல் விட்டு விடும் பொழுது

ஈ) ஒரு ஒப்பந்தம் பிரித்தளிக்கக் கூடியதாக இருந்தால்

உ) ஒரு ஒப்பந்தம் மோசமாக நிறைவேற்றப்பட்டால்.

### 5. ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு

இழப்பீடு என்பது ஒப்பந்தம் மீறுகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில் தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும்.ஆகவே பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தம் மீறுகைக்கு காரணமான நபர் மீது இழப்பீடு பெறும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 ன் பிரிவு 73, ஒப்பந்தத்தை மீறும் நபர் அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்புள்ளது. இழப்பீடு நான்கு வகைகளாக உள்ளன, அவை

i) சாதாரண இழப்பீடுகள்

ii) சிறப்பு இழப்பீடுகள்

iii) பழிவாங்கும் தன்மையுள்ள அல்லது முன்மாதிரி இழப்பீடுகள் மற்றும்

iv) பெயரளவு இழப்பீடுகள்.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| ஒப்பந்த விடுவிப்பு | பரிமாற்றம் |
| ஒப்பந்த மீறுகை | வெளியேற்றம் |
| தடையுத்தரவு | ரத்து செய்தல் |



XI_Tamil_commerce 26-33_255-324.indd 306 12/16/2020 4:23:50 PM

### நமது சிந்தனைக்கு

1. ஒப்பந்த விடுவிப்பு பற்றிய சட்ட வழிகளை விளக்குக.
2. ஒப்பந்த விடுவிக்கப்படும் வழிகள் யாவை?

### மேலும் அறிவதற்கு

1. ஒப்பந்த நிறைவேற்றத்ததை மீறுவதால் ஏற்படும் விளைவுகளை அறியலாம்.
2. ஒப்பந்த விடுவிப்பு வழிகள் மற்றும் ஒப்பந்த விடுவிப்பு செய்யப்பட்டதால் ஏற்படும் விளைவுகளை அறியலாம்.
3. ஒப்பந்தம் மீறுகைக்கான தீர்வுகளின் சரியான சட்டரீதியான தீர்வுகளைக் கூறுக.

### பயிற்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **ஒரு செல்லத்தகு ஒப்பந்த நிறைவேற்றத்தில் ஒப்பந்த நபரின் கடமை**

   (அ) ஒப்பந்தம் விடுவிப்பு செய்யப்பட்டது

   (ஆ) நடைமுறைப்படுத்தப்படும்

   (இ) செல்லாதது

   (ஈ) இவை எதுவும் இல்லை

2. **செயல்படாத ஒரு ஒப்பந்தம் சட்ட பிரிவு 56 இன் கீழ்**

   (அ) தவிர்க்கக்கூடிய

   (ஆ) செல்லாத

   (இ) செல்லக்கூடியது

   (ஈ) நிறைவேற்ற முடியாதது

3. **பல்வேறு சூழ்நிலைகளில் ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது அந்த ஒப்பந்தம்**

   (அ) தவிர்க்கக்கூடிய

   (ஆ) செல்லாத

   (இ) செல்லக்கூடியது

   (ஈ) இவற்றில் எதுவும் இல்லை

4. **இருதரப்பு ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்படுவது**

   (அ) பரிமாற்றம்

   (ஆ)ரத்து செய்யதல்

   (இ) திருத்தம்

   (ஈ) மேலே கூறப்பட்டவை அனைத்தும்

5. **ஒப்பந்த மீறலுக்குக் கொடுக்கப்பட்ட இழப்பீடு**

   (அ) சேதம் (ஆ) ஊதியம்

   (இ) பணம் (ஈ) காசோலை

### விடைகள்

1 (அ) 2 (அ) 3 (ஆ) 4 (ஈ) 5 (அ)

## II. குறுவிடை வினாக்கள்.

1. இருதரப்பு உடன்படிக்கை மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை?
2. நிறைவேற்றம் இயலாது போதலின் வகைகள் யாவை?
3. இழப்பீடு எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. ஒப்பந்தத்தை மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு எந்தெந்த வகையில் தீர்வுகள் கிடைக்க வாய்ப்புள்ளது?(ஏதேனும் 3)
2. எந்தெந்த வழக்குகளில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கலாம்?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக.
2. இழப்பீடு என்றால் என்ன? பல்வேறு வகையான இழப்பீடு யாவை?

HAVK3T



XI_Tamil_commerce 26-33_255-324.indd 307 12/16/2020 4:23:50 PM

## அலகு – 10 நேர்முக மற்றும் மறைமுக வரிகள்

அத்தியாயம் **32**


# நேர்முக வரிகள்

MAZ7RQ

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. நேரடி வரிகளின் பொருள் மற்றும் வகைகளை அறிந்து கொள்ள இயலும்.
2. வருமான வரிகளின் சிறப்புக் கூறுகளை புரிந்து கொள்ள இயலும்.
3. வருமான வரிகளின் அடிப்படை கருத்துக்களை விளக்க இயலும்.
4. மொத்த வருமானம், முழு மொத்த வருமானம் பற்றி புரிந்து கொள்ள இயலும்.




## 32.01 வரி என்பதன் பொருள்

எந்த விதமான பயனையும் நேரடியாகத் திரும்பப் பெறும் எதிர்ப்பார்ப்பற்ற, அரசால் சுமத்தப்படும் ஓர் கட்டாயக் கட்டணமே வரியாகும். அதாவது, மக்களால் அரசுக்கு அளிக்கப்படும் ஓர் கட்டாயக் கட்டணம் அல்லது பங்களிப்பே வரியாகும். ஒரு நபர் வரி கட்ட வேண்டிய நிலையில் இருப்பார் எனில், அவ்வரியைக் கட்ட வேண்டியது அவரது சட்டக் கடமையாகும். அரசினுடைய மிக முக்கிய வருவாய் வரியின் மூலமாகவே ஈட்டப்படுகிறது. இவ்வரி வருவாயானது குடிமக்களின் நலத் திட்டங்களுக்கும் நாட்டின் பாதுகாப்பிற்கும், கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

## 32.02 வரிகளின் வகைகள்

இந்தியாவில் வரிகள் பின்வரும் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 1. நேர்முக வரிகள்

தனி நபரின் வருமானம் அல்லது அவரின் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு அவரால் செலுத்தப்படும் வரி நேர்முக வரிகள்ஆகும். இந்தியாவில் அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**உதாரணங்கள்**

- வருமான வரி
- மூலதன ஆதாய வரி
- சொத்து வரி
- பத்திர பரிவர்த்தனை வரி
- வங்கியில் மேற்கொள்ளும் பண பரிவர்த்தனை மீதான வரி (ரூ 50000 மேல்)
- பயன்கள் வரி

### 2. மறைமுக வரிகள்

சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரியாகும். உதாரணம் சரக்கு மற்றும் சேவை வரி.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 308 12/16/2020 4:23:50 PM

## 32.03 வருமானவரி

ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமான வரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரி சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது நபர் என்பவர் தனி நபராகவோ அல்லது செயற்கை நபராக இருக்கலாம்.

### வருமான வரியின் அடிப்படை கருத்துக்கள்

### 1. மதிப்பீட்டிற்குரியவர் : பிரிவு 2(7)

"சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீட்டிற்குரியவராவார்" மேலும் தன்னுடைய வருமானம் அல்லது நட்டம் அல்லது தனக்கு வரவேண்டிய பாக்கித் தொகை ஆகியவற்றிற்காக வருமான வரிச்சட்டத்தின் கீழ் வருமான வரி மதிப்பீட்டு நடவடிக்கைக்கு உட்பட்ட ஒவ்வொரு நபரும் மதிப்பீட்டிற்குரியவர் என்ற சொல்லில் அடங்குவர்.

வருமான வரிச் சட்டம் மூன்று வகையான மதிப்பீட்டிற்குரியவர்களைக் கண்டுணர்ந்துள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்திய வரி விதிப்பு முறை**

இந்திய வரி விதிப்பு முறை உலகிலேயே மிக பழமையான வரிவிதிப்பு முறையாகும். இந்திய அரசியலமைப்பு சட்டம் நன்கு கட்டமைக்கப்பட்ட வரி விதிப்பு முறையை வழங்கியுள்ளது. வரி நிர்வாகம் மக்களாட்சி அடிப்படையில் மத்தியஅரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டம் பிரிவு 246(ஏழாவது அட்டவணை)-ல் மத்திய, மாநில அரசுகளுக்கான சட்டமுறை வரி அதிகாரம் குறித்து தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

### 2. நபர் ( பிரிவு 2(31)

"நபர்" என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர்.

1. தனிநபர்
2. இந்து கூட்டுக் குடும்பம்
3. கூட்டுப் பங்கு நிறுமம்
4. கூட்டாண்மை நிறுவனம்
5. பல நபர்களின் சங்கம் அல்லது தனிநபர்களின் குழுமம்.(கூட்டுறவு)
6. உள்ளாட்சி நிர்வாகம்
7. சட்ட ரீதியான செயற்கை நபர்கள்

### 3. மதிப்பீட்டு ஆண்டு (பிரிவு 2(9) )

ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிப்பிற்குட்படும். இதுவே மதிப்பீட்டு ஆண்டு எனப்படுகிறது. ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி முடியும் காலகட்டமே மதிப்பீட்டு ஆண்டு என்று அழைக்கப்படும்.

### 4. முந்தைய ஆண்டு (பிரிவு 3)

வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு முந்தைய ஆண்டு எனப்படுகிறது. முந்தைய ஆண்டு என்பது எப்பொழுதும் ஏப்ரல் 1-ல் தொடங்கி மார்ச் 31-ல் முடியக்கூடிய வகையில் 12 மாதங்கள் கொண்டதாக இருக்கும். மேலும் இது நிதியாண்டு என்றும் அழைக்கப்படும்.

### 5. வருமானம் (பிரிவு 2(24))

வருமானம் வரிச்சட்டத்தின் பிரிவு 2(24) வருமானம் என்ற சொல்லுக்கு இலக்கணம் வழங்கியுள்ளது. அதன்படி, வருமானம் என்ற சொல்லில் பின்வருவன அடங்கியுள்ளன.

1. வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட இலாபம் மற்றும் ஆதாயம்
2. பங்காதாயம்
3. தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெறும் நன்கொடைகள்.
4. ஊதியத்திற்கு மாற்றாக பெறும் இதர வருமானங்கள்.
5. ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறுவிதமான ஊக்கத்தொகைகள்.
6. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெறும் வட்டி, ஊதியம், ஊக்கத்தொகை, கழிவு அல்லது மேல் வருமானம்.
7. மூலதன ஆதாயங்கள்.
8. தமது உறுப்பினர்களுடன் கூட்டுறவுச் சங்கமாக வங்கியில் வணிகத்தை மேற்கொண்டு பெற்ற இலாபங்களும் ஆதாயங்களும்.
9. குதிரைப் பந்தயம் சீட்டு விளையாட்டுகள் மற்றும் அதே வகையான ஏனைய விளையாட்டுகள் உள்ளிட்ட பந்தயங்கள்,



XI_Tamil_commerce 26-33_255-324.indd 309 12/16/2020 4:23:50 PM

குறுக்கெழுத்துப்போட்டிகள், பரிசுச்சீட்டுகள் ஆகியவற்றில் கிடைத்த பரிசுத் தொகைகள்.

10. கருதப்பட்ட வருமானங்கள்.

11. சேமநல நிதி அல்லது ஓய்வுகால நிதி போன்றவைகள் மூலமாகப் பெறப்பட்ட தொகை.

12. பிரதான காப்புறுதி காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடுதல் சிறப்புத் தொகை (Bonus).

13. வியாபாரத்தோடு தொடர்பில்லாமல் ஏதேனும் செயலில் ஈடுபட்டு இருப்பின் அல்லது தொழில் நுட்ப அறிவு காப்புரிமை மற்றும் பதிப்புரிமை இவைகளைப் பகிர்ந்து கொள்ளாமல் ஏதேனும் தொகை எந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்டிருந்தாலும்.

14. இயக்குநர் அல்லது நிறுமத்தில் கணிசமான அக்கறை கொண்ட ஒரு நபர் அல்லது அவரது உறவினர் அல்லது இயக்குநர் ஒருவரின் உறவினர் ஆகியோரால் நிறுமத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பயன் அல்லது மேல் வருமானம்.

15. பிரிவு 56(2) (vi)–ன் படி பெறப்பட்ட நன்கொடை

16. மற்றவை.

## 6. வேளாண் வருமானம்: பிரிவு 2(IA)

பிரிவு 2(IA)ன் படி, விவசாயம் சார்ந்த வருமானத்தில் அடங்குவன: பின்வருமாறு

1. இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்

2. விவசாய விளை பொருட்களைச் சந்தைக்கோ அல்லது விற்பனைக்கோ தகுந்ததாக மாற்றுவதற்கென பெறப்பட்ட ஏதேனும் கட்டணம், விவசாயம் விளைபொருட்களைப் பதனம் செய்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் அவ்வித நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம்

3. குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு பண்ணைக் கட்டடத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்

4. நாற்றுப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்று அல்லது இளஞ்செடி மூலம் பெறப்பட்ட வருமானம்

இந்த வேளாண் வருமானம் முழுவதும் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது மொத்த வருமானத்தில் சேர்க்கப்படாது.

## வருமானங்களின் தலைப்புகள் (பிரிவு 14)

வருமான வரிச்சட்டம் 1961, 14ல் ஒரு மதிப்பீட்டிற்குரியவரின் மொத்த வருமானத்தை கணக்கிடுவதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின் கீழ் ஒரு மதிப்பீட்டிற்குரியவரின் வருமானங்கள் ஐந்து தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்புக்கான வருமானங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படுகின்றன.

ஐந்து தலைப்புகளின் கீழ் வருமானங்கள் பின்வருமாறு:

1. சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15–17)
2. வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு 22–27)
3. வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28–44)
4. மூலதன ஆதாயங்கள் (பிரிவு 45–55)
5. ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு 56–59)

## முழு மொத்த வருமானம்: பிரிவு (80b(5))

மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து தலைப்புகளின் வருமானங்கள் வருமான வரிச் சட்டத்தின் படி தனித்தனியாக கணக்கிடப்படும். இத்தலைப்புகளின் கீழ் பெறப்படும் வருமானத்தின் கூட்டுத் தொகையிலிருந்து நட்டங்கள் ஏதேனும் இருப்பின் அவை கழிக்கப்பட்டு கிடைக்கும் தொகையே முழு மொத்த வருமானம் என அழைக்கப்படுகிறது.

| வருமானம் | ₹ |
| --- | --- |
| 1. சம்பள வருமானம் | xxxx |
| 2. வீட்டு சொத்திலிருந்து வருமானம் | xxxx |
| 3. வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் வருமானம் | xxxx |
| 4. மூலதன ஆதாயங்கள் | xxxx |
| 5. ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் | xxxx |
| **முழு மொத்த வருமானம்** | xxxx |



XI_Tamil_commerce 26-33_255-324.indd 310 12/16/2020 4:23:50 PM

### மொத்த வருமானம் (பிரிவு 2(45))

முழு மொத்த வருமானத்திலிருந்து 80 c முதல் 80 U வரையிலான பிரிவுகளின் கீழ் கழிவுகளைக் கழித்த பின் கிடைக்கும் தொகையே மொத்த வருமானமாகும்

| | |
|---|---|
| முழு மொத்த வருமானம் | xxxx |
| கழிக்க : கழிவுகள் (பிரிவு 80 c முதல் 80 U) | xxxx |
| **மொத்த வருமானம்** | xxxx |

**கழிவுகள் (80 c)**

சேம நல காப்பு நிதியில் தொழிலாளரின் பங்களிப்பு, ஆயுள் காப்பீட்டு முனைமம் செலுத்தியது. குழந்தைகளின் கல்விக் கட்டணம், தேசிய சேமிப்பு பத்திரத்தில் முதலீடு, வீட்டுக் கடன் திருப்பி செலுத்தியது முதலியன.

### தனிநபர் வருமானத்திற்கான வருமான வரி கணக்கிடுதல்

### கணக்கீட்டு ஆண்டு 2021–2022

| மொத்த வருமானம் | வருமான வரி வீதம் |
|---|---|
| ₹ 5,00,000 வரை | இல்லை |
| ₹ 5,00,001 முதல் 7,50,000 வரை | 10% |
| ₹ 7,50,001 முதல் 10,00,000 வரை | 15% |
| ₹ 10,00,001 முதல் 12,50,000 வரை | 20% |
| ₹ 12,50,001 முதல் 15,00,000 வரை | 25% |
| 15,00,000 த்திற்கு மேல் | 30% |

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| நேரடி வரி | மறைமுக வரி |
| முந்தைய ஆண்டு | கணக்கீட்டு ஆண்டு |
| விவசாய வருமானம் | மதிப்பீடு செய்யப்படும் நபர் |

**மேலும் அறிவதற்கு**

1. நேர்முக வரிவிதிப்பு முறையின் புதிய யுக்திகள்

**நமது சிந்தனைக்கு**

1. வரி விதிப்பு முறையை எளிதாக்குதல்

**பயிற்சி**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. வருமான வரி என்பது**

அ) வியாபார வரி

ஆ) நேரடி வரி

இ) மறைமுக வரி

ஈ) சேவை வரி

HB5G5G

**2. கணக்கீட்டு ஆண்டு என்பது**

அ) ஏப்ரல் 1 முதல் மார்ச்சு 31 வரை

ஆ) மார்ச்சு 1 முதல் பிப்ரவரி 28 வரை

இ) சூலை 1 முதல் சூன் 30 வரை

ஈ) சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

**3. வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது**

அ) கணக்கீட்டு ஆண்டு

ஆ) முந்தைய ஆண்டு

இ) ஒளி ஆண்டு

ஈ) நாட்காட்டி ஆண்டு

**4. ஐந்து தலைப்புகளின் கீழ் வரும் வருமானத்தின் கூடுதல் என்பது**

அ) முழு மொத்த வருமானம்

ஆ) மொத்த வருமானம்

இ) ஊதிய வருமானம்

ஈ) வியாபார வருமானம்



XI_Tamil_commerce 26-33_255-324.indd 311 12/16/2020 4:23:50 PM

5. **இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது**

அ) முழுவதும் வரி விதிப்பிற்குட்பட்டது

ஆ) முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது

இ) வருமானமாக கருதப் படுவதில்லை

ஈ) மறைமுக வரி

**விடைகள்**

1 (ஆ) 2 (அ) 3 (ஆ) 4 (ஆ) 5 (ஆ)

## II. குறுவிடை வினாக்கள்.

1. வருமான வரி என்றால் என்ன?
2. முந்தைய ஆண்டு என்றால் என்ன?
3. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.
2. குறிப்பு வரைக.

   அ) நேரடி வரி ஆ) மறைமுக வரி
3. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?

## IV. பெருவிடை வினாக்கள்.

1. வருமான வரியின் ஐந்து சிறப்புக்கூறுகளை விளக்கி எழுதுக.
2. நேரடி மற்றும் மறைமுகவரியை உதாரணத்துடன் விளக்குக.




XI_Tamil_commerce 26-33_255-324.indd 312 12/16/2020 4:23:50 PM

## இணையச்செயல்பாடு

### நேர்முக மற்றும் மறைமுக வரிகள்: GST கணிப்பான்


**GST அறிவோமா!**





படிகள்:

- கீழ்க்காணும் உரலியை உலாவியில், தட்டச்சு செய்யவும் (அல்லது) விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.
- திரையில் "Commerce" என்ற GeoGebra செயற்புத்தகம் தோன்றும். அங்கிருக்கும் பல பணித்தாள்களில் "GST Calculator" என்ற பணித்தாளை எடுத்துக் கொள்ளவும்.
- GST வீதத்தையும், தொகையையும் அதற்குரிய இடங்களில் உள்ளீடு செய்து 'enter' –ஐ
- அழுத்தவும் தற்போது மூன்று விதமான கணக்கீடு முடிவுகள் கிடைக்கும்


1. GST தொகை
2. விலையை மட்டும் உள்ளீடு செய்திருப்பின். GST –யோடு சேர்த்த மொத்த தொகை.
3. GST யோடு சேர்த்து மொத்த தொகையை உள்ளீடு செய்திருப்பின், விலையும், GST வரியும் தனித்தனியே கிடைக்கும்.



படி–1



படி–2



படி–3

செயல்பாட்டிற்கான உரலி:

https://ggbm.at/b9jZFxRE

B133_11_COM_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

அத்தியாயம் **33**

# மறைமுக வரிகள்

HB93TD

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்கள்

1. மறைமுக வரியின் பொருளைப் புரிந்து கொள்ள இயலும்.
2. நேரடி வரி மற்றும் மறைமுக வரிக்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ள இயலும்.
3. சரக்கு மற்றும் சேவை வரியின் பொருள் வகைகள், நோக்கங்களை அறிந்து கொள்ள இயலும்.
4. சரக்கு மற்றும் சேவை வரி குழுமம் மற்றும் அதனுடைய பணிகளைப் பற்றி கற்றுணர இயலும்.

## 33.01 மறைமுக வரி என்பதன் பொருள்

சரக்குகள் அல்லது சேவைகளின் மீது வரி விதிக்கப்பட்டு விற்பனையாளரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு பின்னர் அரசுக்கு செலுத்தப்படும் வரியே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.


சுங்கவரி, சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி போன்றவை மறைமுக வரிகள் ஆகும்.

பின்வரும் வரைபடம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குகிறது.

| | | |
|---|---|---|
| நேர்முகவரி | : | உதாரணம் – வருமான வரி |
| மறைமுக வரி | : | உதாரணம் – சரக்கு மற்றும் சேவை வரி |

## 33.02 சரக்கு மற்றும் சேவை வரி–பொருள்

சரக்கு மற்றும் சேவை வரி என்பது சரக்கு மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரி ஆகும். இது ஒரு சேருமிடம் சார்ந்து நுகர்வு வரி மற்றும் அளிப்பு சங்கிலியின் ஒவ்வொரு படி நிலையிலும் காட்டப்பட்ட மதிப்பின் மீது வசூலிக்கப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தியாளர் எங்கு உற்பத்தி செய்தாலும் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தத் தேவையில்லை. சரக்கு மற்றும் சேவை வரி, எரி சாராயம் மற்றும் குறிப்பிட்ட எரி பொருட்கள் தவிர மற்ற எல்லாப் பொருட்களுக்கும் மற்றும் சேவைகளுக்கும் பொருந்தும். சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் நான்கு விதமான வரி வீதங்களை முன் மொழிந்துள்ளது. அதாவது 5%, 12%,18% மற்றும் 28%



**நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான வேறுபாடுகள்**

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1. பொருள் | ஒரு நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது வரி விதிக்கப்பட்டு அந்த நபரே அரசிடம் நேரடியாக செலுத்தப்படுவது | சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது வரி விதிக்கப்பட்டு, அவ்வரி பிறரால் (விற்பனையாளர்) அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுவது |
| 2. வரி நிலைப்பாடு மற்றும் வரித்தாக்கம் | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது |
| 3. ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 4. பணவீக்கம் | நேர்முக வரி பணவீக்கத்தைக் குறைக்க உதவுகிறது | மறைமுக வரி பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| 5. மாற்றுதல் | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |
| 6. உதாரணங்கள் | சொத்து வரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

ஒருமாநில எல்லைகள் ₹ இருபது இலட்சத்திற்கும் குறைவாக விற்பனை செய்கின்ற வணிகர்கள் சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து வரி விலக்கு பெறுகின்றனர். இச்சிறு வணிகர்கள் சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் பதிவு செய்யத் தேவையில்லை. ஆனால், மாநிலங்களுக்கு இடையே வியாபாரம் செய்ய வணிகர்கள், விற்பனை ₹ இருபது இலட்சத்திற்கு கீழ் இருந்தாலும் சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் பதிவு செய்து வரி செலுத்த வேண்டும். வடகிழக்கு மாநிலங்கள் (8), இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்ற மாநிலங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் சிறப்பு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### சரக்கு மற்றும் சேவை வரி

சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017, ஏப்ரல் 12ல் இயற்றப்பட்டது. 2017 ஜீலை 1ல் நடைமுறைக்கு வந்தது. சுதந்திரத்திற்குப் பின்பு இதுவே ஒரு மிகப்பெரிய ஒற்றை வரி சீரமைப்பு ஆகும். ரஷ்யா, கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், சீனா போன்ற பல்வேறு நாடுகள் ஏற்கனவே சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையை அறிமுகம் செய்துள்ளன.

இந்திய அரசியலமைப்பிலிருந்து வரி விதிக்கும் உரிமை பெறப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவைகளின் மீது வரிகளைச் சுமத்த மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்க அரசியலமைப்பில் தனி சட்டத்திருத்தம் தேவைப்படுகிறது. 2016, செப்டம்பர் 3ல் குடியரசு தலைவரால் ஒப்புதல் வழங்கப்பட்டது, அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2016, 101ன் படி இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி, சரக்கு மற்றும் சேவை வரி குழுமம் என்ற அரசியலமைப்பு குழுமம் சரக்கு மற்றும் சேவை வரியை நடைமுறைப்படுத்த தோற்றுவிக்கப்பட்டது.

### சரக்கு மற்றும் சேவை வரிகளின் வகைகள்

சரக்கு மற்றும் சேவை வரியானது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி, மாநில சரக்கு மற்றும் சேவை வரி, மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி என மூன்று வகைப்படும்.

1. **மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST)**

   சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் ஒரு மாநிலத்திற்குள்ளே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 315 12/16/2020 4:23:51 PM

2. **மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST)**

*தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் மாநில அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.*

3. **யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UGST)**

*UGST சட்டம் 2017ன் கீழ் இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்*

4. **ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST)**

*IGST சட்டம் 2017ன் கீழ் மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.*

5. **ஏற்றுமதி மீதான ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST On Export)**

*சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் அனைத்து ஏற்றுமதிகளும் மாநிலங்களுக்கிடையேயான அளிப்பாக கருதப்படுகிறது. ஏற்றுமதிகள் பூஜ்ஜியம் வீத வரி என்பதால், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து சரக்கு மற்றும் சேவைகளின் மீது சரக்கு மற்றும் சேவை வரி சுமத்தப்படுவதில்லை. ஏற்றுமதி மீது செலுத்தப்படும் அனைத்து உள்ளீட்டு வரிகளும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.*

## 33.03 சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம்

*சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம் சரக்கு மற்றும் சேவை வரியை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்யும். ஆனால் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி ஆகிய சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு மத்திய கலால் மற்றும் சுங்க வரி வாரியத்திடம் உள்ளது. இக்குழுமமானது சரக்கு மற்றும் சேவை வரி வீதங்களில் மாற்றம், சரக்கு மற்றும் சேவை வரி மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தல், வரி விலக்கு போன்றவற்றிற்கும் பரிந்துரை செய்கிறது.*

*மத்திய நிதி அமைச்சர் சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமத்தின் தலைவராக இருப்பார். மத்திய நிதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் மற்றும் அனைத்து மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். மத்திய அரசு 1/3 பங்கு வாக்களிக்கும் உரிமையையும் மாநில அரசுகள் 2/3 பங்கு வாக்களிக்கும் உரிமையையும் பெற்றுள்ளன. குழுமத்தின் அனைத்து முடிவுகளும் மொத்த வாக்குகளில் ¾ பங்குகள் இருந்தால் மட்டுமே இயற்றப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் ஒரு வாக்கு பெற்றுள்ளன.*

**சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம் தவிர, மத்திய சரக்கு மற்றும் சேவை வரிகள் செயலகம் பின்வரும் அலுவலர்களால் தோற்றுவிக்கப்படும்.**

i. *சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமத்தின் பதவி வழி செயலராக வருவாய் துறை செயலர் நியமிக்கப்படுவர்.*
ii. *மத்திய கலால் மற்றும் சுங்க வரி வாரியத்தின் தலைவர் நிரந்தர அழைப்பாளராக இருப்பார்.*
iii. *சரக்கு மற்றும் சேவை வரிகளின் கூடுதல் செயலர்.*
iv. *சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமத்தின் செயலகத்தில் நான்கு ஆணையர்களுக்கான பணியிடம் தோற்றுவிக்கப்படும்.*

### சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள்

1. *இந்தியாவின் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கமாகும். (ஓர் நாடு (தேசம்), ஓர் வரி, ஓர் சந்தை)*
2. *வரியின் விழுத்தொடராக விளைவினைத் தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரி முன் செலுத்திய வரியினை சரிகட்டிக் கொள்ள அனுமதிக்கிறது. (உள்ளீடு வரியின் மூலம்)*
3. *ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப் பட்ட உள்ளீட்டு வரி திருப்பி வழங்கப் படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.*
4. *வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.*
5. *வரி அறிக்கை வழிமுறைகளை எளிமை யாக்க பொதுவான படிவங்கள் வழங்கப் பட்டுள்ளன. வணிகவரி அலுவலகங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.*
6. *இணையதள வரி செலுத்தல்கள் மற்றும் படிவங்களைச் சமர்ப்பிக்க சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு (GSTN) என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.*



XI_Tamil_commerce 26-33_255-324.indd 316 12/16/2020 4:23:51 PM

### சரக்கு மற்றும் சேவை வரியின் பயன்கள்

#### I. சமூகம் மற்றும் நாட்டிற்கு

1. சரக்கு மற்றும் சேவை வரி சீரான தேசிய சந்தை அந்நிய முதலீட்டினை ஈர்க்கின்ற அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொருளாதாரத்தினை ஒன்றிணைக்கிறது.
2. இறக்குமதி சரக்குகள் மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்த சரக்குகள் இடையேயான வரிவிதிப்பில் சமநிலையைக் கொண்டு வருகிறது.
3. உற்பத்தி, ஏற்றுமதியினை ஊக்குவிக்கிறது.
4. அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிக்கிறது.
5. வரி இணக்கத்தினை அதிகரிக்கிறது. அரசாங்கத்திற்கு வருவாயையும் அதிகரிக்கிறது.
6. இது வெளிப்படையானது மற்றும் உலகளவில் வியாபார எளிமையில் இந்தியாவின் தரத்தை மேம்படுத்துகிறது.
7. சீரான வரி வீதங்கள் வரி ஏய்ப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரி வீத வேற்றுமையைக் குறைக்கிறது.

#### II. வியாபார சமூகத்திற்கு

1. பதினேழு வரிகள் நீக்கப்பட்டு அவை அனைத்தும் ஒரே விதமான வரி அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது சில வரி விலக்குகளைக் கொண்ட எளிமையான வரி முறை ஆகும்.
2. உள்ளீட்டு வரி, வரியின் விழுதொடராக்க விளைவினை குறைக்கிறது சராசரி வரிச் சுமை குறைவதன் மூலம் உற்பத்தி யாளர்களை ஊக்குவிக்கிறது. அதன் மூலம் இந்தியாவில் உற்பத்தி என்ற திட்டத்திற்கு உதவுகிறது.
3. பொதுவான வழிமுறைகள், சரக்கு மற்றும் சேவைகளின் பொதுவான வகைப்பாடு, வரி விதிப்பு முறைக்கு நிலைத் தன்மையை வழங்குகிறது.
4. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு (GSTN) பல்வேறு பதிவேடுகள் பராமரிப்பைக் குறைக்கிறது. மனித சக்தி மற்றும் வளங்களில் முதலீடு குறைவதன் மூலம் திறன் மேம்பாடு அடைகிறது.
5. அனைத்து நடவடிக்கைகளும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு GSTN மூலம் நடைபெறுவதால், ஊழலற்ற நிர்வாகத்திற்கு உறுதி செய்கிறது.
6. நாடு முழுவதும் ஒரே சீரான விலையைத் தருகிறது. அனைத்து மாநிலங்களிலும் வியாபார விரிவாக்கத்தினை எளிதாக்குகிறது.

#### III. நுகர்வோருக்கு

1. உள்ளீட்டு வரி நுகர்வோருக்கான விலையைக் குறைக்கிறது.
2. அனைத்து சிறு சில்லறை வணிகர்கள் வரிவிலக்கு பெறுகின்றனர். அதன் மூலம் நுகர்வோர்களின் செலவு குறைகிறது.

### சரக்கு மற்றும் சேவை வரியின் குறைகள்

மேற்குறிப்பிட்ட பல்வேறு நிறைகள் இருந்த போதும், சரக்கு மற்றும் சேவை வரியின் குறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. பல்வேறு பொருளாதார நிபுணர்கள் சரக்கு மற்றும் சேவை வரிகள் இந்தியாவில் நிலைச் சொத்து சந்தையில் எதிர்மறை தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது எனச் சொல்கின்றனர்.
2. மற்றொரு திறனாய்வு மத்திய சரக்கு மற்றும் சேவை வரிகள், மாநில சரக்கு மற்றும் சேவை வரிகள் என்பது மத்திய கலால் வரி, சேவை வரி, மதிப்புக் கூட்டப்பட்டது (VAT) மற்றும் மத்திய விற்பனை வரிகளின் மற்றொரு பெயர் எனக் கூறுகிறது.
3. சில்லறைப் பொருள்கள் மீது தற்பொழுது 4% வரி மட்டும் சுமத்தப்படுகிறது. இதனால், இவ்வரிக்குப் பின்பு ஜவுளிப் பொருட்கள் விலை அதிகரித்துள்ளது.
4. வான் பயணத்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வான். பயணக் கட்டணங்கள் மீதான சேவை வரி 6 முதல் 9% சதவீதமாக உயர்ந்துள்ளது. தற்பொழுது சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் காரணத்தால் இக்கட்டணம் இரண்டு மடங்காக உள்ளது.
5. சரக்கு மற்றும் சேவை வரிகள் ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் இடம் பெயர்தல் இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளது.

**கலைச்சொற்கள்**

மறைமுக வரி

மதிப்புக் கூட்டு வரி

சுங்க வரி

இறக்குமதி வரி

சரக்கு மற்றும் சேவை வரி

சரக்கு மற்றும் சேவை வரி குழுமம்

இந்திய அரசியலமைப்பு சட்டம்

**மேலும் அறிவதற்கு**

சரக்கு மற்றும் சேவை வரியின் விளக்கமான நடைமுறைகள்

**நமது சிந்தனைக்கு**

வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான நடைமுறைகள்

**பயிற்சி**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. **சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?**

   அ) இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர்

   ஆ) நிதி அமைச்சர்

   இ) பிரதம மந்திரி

   ஈ) இந்திய குடியரசுத் தலைவர்

2. **GST யின் விரிவாக்கம்**

   அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி

   ஆ) அரசு விற்பனை வரி

   இ) சரக்கு மற்றும் சேவை வரி

   ஈ) பொது விற்பனை வரி

3. **சரக்கு மற்றும் சேவை வரி என்பது**

   அ) நேரடி வரி

   ஆ) மறைமுக வரி

   இ) சரக்கு மற்றும் சேவைகளின் வகையை பொருத்தது

   ஈ) வியாபார நடவடிக்கைகளைச் சார்ந்தது

4. **IGST என்பது**

   அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி

   ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி

   இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி

   ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. **சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்**

   அ) ஏப்ரல் 1, 2017   ஆ) சனவரி 1, 2017

   இ) சூலை 1, 2017   ஈ) மார்ச்சு 1, 2017

**விடைகள்**

1. ஆ 2. இ 3. ஆ 4 அ 5. இ

HBEC74

## II. குறுவிடை வினாக்கள்.

1. மறைமுக வரியின் பொருள் தருக.
2. இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
3. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?
4. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?

## III. சிறுவிடை வினாக்கள்.

1. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
2. சரக்கு மற்றும் சேவை வரியின் குறைபாடுகள் மூன்றினை எழுதுக.

## IV. பெருவிடை வினாக்கள்.

1. நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)
2. சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.



XI_Tamil_commerce 26-33_255-324.indd 318 12/16/2020 4:23:51 PM

# A-Z சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| ஏற்பு | Acceptance |
| விளம்பரம் | Advertisement |
| உடன்படிக்கை | Agreement |
| ஒன்றிணைப்பு | Amalgamation |
| செயற்கை நபர் | Artificial Person |
| மதிப்பீட்டு ஆண்டு | Assessement Year |
| மதிப்பீட்டுக்குரியவர் | Assessee |
| வேளாண் வருமானம் | Agricultural Income |
| பண்டமாற்று முறை | Barter System |
| தொழில் | Business |
| தொழில் அமைப்பு | Business Organisation |
| பிணைய பண்டகக்காப்பகம் | Bonded Warehouse |
| தொழில் முறை புறத்திறனீட்டல் | Business Process Out-sourcing (BPO) |
| தொழில் நெறிமுறைகள் | Business Ethics |
| தரகர் | Broker |
| செலுத்தல் சமநிலை | Balance of Payments |
| வாணிபச் சமநிலை | Balance of Trade |
| ஒப்பந்த முறிவு | Breach of Contract |
| வணிகம் | Commerce |
| கடன் தகுதி | Credit Standing |
| கூட்டு வாரிசுதாரர் | Coparceners |
| பொது முத்திரை | Common Seal |
| வணிக வங்கிகள் | Commercial Banks |
| ரொக்கக் கடன் | Cash credit |
| கடன் அட்டை | Credit Card |
| பொதுச் சரக்கேற்றி | Common Carrier |
| அண்மைக் காரணம் | Causa Proxima (Proxi-mate cause) |
| வழங்கல் வழிகள் | Channels of Distribution |
| மறுபயன் | Consideration |
| தகவல் தொடர்பு | communication |
| ஒப்பந்தம் | Contract |
| மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | CGST |
| தயாபாகா சட்டம் | Dayabhaga Law |

| | |
|---|---|
| கலைப்பு | Dissolution |
| உள்நாட்டு உற்பத்தித் தொழில் | Domestic industry |
| வளர்ச்சி வங்கி | Development Bank |
| பற்று அட்டை | Debit Card |
| துறைமுக சான்றாணை | Dock Warrant |
| ஒப்பந்த விடுவிப்பு | Discharge of contract |
| நேர்முக வரி | Direct Tax |
| பொருளாதார நடவடிக்கைகள் | Economic Activities |
| வேலைவாய்ப்பு | Employment |
| சுரண்டப்படுதல் | Exploitation |
| மின்னணு தொழில் | E.Business |
| மின்னணு வணிகம் | E.Commerce |
| மறு ஏற்றுமதி | Entrepot Trade |
| ஏற்றுமதி | Export Trade |
| ஏற்றுமதி இறக்குமதி வங்கி | Export and Import Bank |
| நிலை வைப்புகள் | Fixed Deposits |
| இந்திய உணவுக் கழகம் | Food Corporation of India |
| விற்பனை உரிமை பெற்றவர் | Franchiser |
| விற்பனை உரிமை வழங்குநர் | Franchisee |
| தன் பொறுப்பு முகவர் | Factor |
| நியாய விலை | Fair Prices |
| அந்நிய நேரடி முதலீடு | Foreign Direct Investment |
| அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரம் | Foreign Currency Convertible Bond |
| அயல்நாட்டு வியாபாரம் | Foreign Trade |
| பொறுப்புறுதி | Guarantee |
| உலகளாவிய நிறுவனங்கள் | Global Enterprises |
| அரசு நிறுமம் | Government Company |
| உலகளாவிய வைப்பு இரசீது | Global Depository Receipt |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | Gross Domestic Product (GDP) |

| | |
|---|---|
| சரக்கு மற்றும் சேவை வரி | Goods and Services Tax (GST) |
| சரக்கு மற்றும் சேவை வரி குழுமம் | GST Council |
| தடைகள் | Hindrances |
| மனித செயல்பாடுகள் | Human Activities |
| வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | Housing Cooperatives |
| செயல் வரவேற்கும் நாடு | Host Country |
| வா கனத்தில் வைத்து விற்பவர்கள் | Hawkers |
| வாடகை கொள்முதல் முறை | Hire Purchase System |
| உற்பத்தித் தொழில் | Industry |
| ஈட்டுறுதி | Indemnity |
| உள்நாட்டு வியாபாரம் | Internal Trade |
| பன்னாட்டுத் தொழில் | International Business |
| இறக்குமதி | Import |
| பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கி | International Bank for Reconstruction and Development (IBRD) - World Bank |
| பன்னாட்டு நாணய நிதியம் | Internation Monetory Fund (IMF) |
| மறைமுக வரி | Indirect Tax |
| குறைந்த அளவு முதல் | Limited Capital |
| இறுதி கடன் ஈவோர் | Lender of last resort |
| கடன் கடிதம் | Letter of Credit |
| மட்டுப்படுத்துதல் | Mitigation |
| அடமானம் | Mortgage |
| முத்ரா வங்கி | MUDRA Bank |
| இடைத் தரகர்கள் | Middlemen |
| வணிக முகவர்கள் | Mercantile Agents |
| மடங்கு கடைகள் | Multiple Shops |
| நாட்டுடைமை | Nationalisation |
| முக்கியத்துவம் குறைந்த செயல்பாடுகள் | Non Core Activities |
| சில்லோர் முற்றுரிமை | Oligopoly |
| முனைவு /முன்மொழிவு | Offer |
| சுமைதூக்கி விற்பவர்கள் | Peddlers |

| | |
|---|---|
| வாக்குறுதி | Promise |
| வாக்குறுதி தருபவர் | Promiser |
| வாக்குறுதி பெறுபவர் | Promisee |
| முந்தைய ஆண்டு | Previous Year |
| நபர் | Person |
| தொடர் வைப்புகள் | Recurring Deposits |
| சில்லரை வியாபாரி | Retailer |
| விற்பாண்மையர் | Salesmanship |
| தனியாள் வணிகம் | Sole Proprietorship |
| சேவை தத்துவம் | Service Motto |
| தனித்தன்மை/ சிறப்பீடுபாடு | Specialisation |
| சிறப்பு எடுப்பு உரிமைகள் | Special Drawing Rights (SDR) |
| தெற்காசிய நாடுகளின் வட்டார ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பு | South Asian Association for Regional Cooperation (SAARC) |
| மாநில பண்டகக் காப்பக கழகம் | State Warehousing Corporation |
| பகர உரிமை | Subrogation |
| விடுமதிப்பு | Surrender Value |
| சமூக அதிகாரம் | Social Power |
| சம்பந்தப்பட்டவர்கள் | Stakeholder |
| சமூகப் பொறுப்பு | Social Responsibility |
| பங்குதாரர் | Share Holder |
| சுய உதவிக்குழு | Self Help Group |
| வியாபாரம்/வர்த்தகம் | Trade |
| ஒப்பந்தப் புள்ளி | Tender |
| முறை வழியற்ற கப்பல்கள் | Tramps |
| வர்த்தகக் கடன் | Trade Credit |
| வரையறாப் பொறுப்பு | Unlimited liability |
| தன்னிச்சையான அமைப்பு | Voluntary Association |
| வாக்குரிமை | Voting Rights |
| செல்லத்தக்க ஒப்பந்தம் | Valid Contract |
| செல்லத்தகா ஒப்பந்தம் | Void Contract |
| பண்டகக் காப்பகம் | Warehouse |
| பண்டகக் காப்பு | Warehousing |
| வழிச் சீட்டு | Way Bill |
| உலக வர்த்தக அமைப்பு | World Trade Organisation |

## வணிகவியல் மேல்நிலை முதலாம் ஆண்டு

நூலாசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர்கள்

### புல வல்லுநர்


**முனைவர் தீ. இளங்கோவன்,**
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், வணிகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர், சிதம்பரம், கடலூர் மாவட்டம். 608 002


### மேலாய்வாளர்கள்


முனைவர் **கே. சுந்தர்**
இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ,
சிதம்பரம், கடலூர் மாவட்டம். 608 002

முனைவர் **ஜெயந்தி இலட்சுமணசுவாமி**
இணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, (தன்னாட்சி)
நந்தனம், சென்னை – 35


### இணைய செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்கள்


**வாசுராஜ். தா**
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்), கொசபுர், புழல் பிளாக்,
திருவள்ளூர்.

**செந்தில் செல்வன்.ஜே**
பட்டதாரி ஆசிரியர் (கணிதம்), GHSS, மாங்குடி,
சிவகங்கை.


### ஒருங்கிணைப்பாளர்கள்


**பி. நந்தா**
மூத்த விரிவுரையாளர், SCERT, சென்னை.

**பி. இரவி**
முதுகலை வணிகவியல் மாகாண மகளிர் மே.நி.பள்ளி, எழும்பூர், சென்னை.


### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

பக்க வடிவமைப்பாளர்

ராஜேஷ் தங்கப்பன்
ர. மதன் ராஜ்
காமாட்சிபாலன் ஆறுமுகம்
சி. பிரசாந்த்
மனோகர் இராதாகிருஷ்ணன்
சி. அடைக்கல ஸ்டீபன்
M.A. மாணிக்க ராஜ் பிரபாகர்
ஸ்ரீதர் வேலு

In–House – QC

**அருண் காமராஜ் பழனிசாமி**
**ஜெரால்டு வில்சன்**

அட்டை வடிவமைப்பு

**கதிர் ஆறுமுகம்**

ஒருங்கிணைப்பாளர்

**ரமேஷ் முனிசாமி**

### பாடநூல் ஆசிரியர் குழு


முனைவர் **டி. திருப்பதி**
வணிகவியல் துறைத் தலைவர்,
அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி), சேலம்–7.

முனைவர் **கே. பத்மநாபன்**
பேராசிரியர், வணிகவியல் துறை,
அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.

முனைவர் **கே. முருகதாஸ்**
இணை பேராசிரியர், வணிகவியல் துறை தலைவர்,
பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர்–1.

**ச. செ. குமரன்**
தலைமை ஆசிரியர் (ஓய்வு), KENC அரசு மே.நி.பள்ளி,
மணவாளநகர், திருவள்ளூர்.

**ஆர். ரமேஷ்**
முதுகலை ஆசிரியர், டிரினிடி அகாடமி மெட்ரிக். மே.நி.பள்ளி,
வகுரம்பட்டி, மோகனூர் சாலை, நாமக்கல்–2.

**ஜி. பாஸ்கர்**
முதுகலை ஆசிரியர், இந்து மாதிரி மே.நி.பள்ளி,
மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**எஸ். உதயகுமார்**
முதுகலை ஆசிரியர், கருங்குழி மே.நி.பள்ளி, காஞ்சிபுரம்.

முனைவர் **ஜே. ஆனந்த்**
முதுகலை ஆசிரியர், மகரிஷி வித்யா மந்திர்,
சேத்துப்பட்டு, சென்னை–31.

**எஸ். ராஜேந்திரன்**
முதுகலை ஆசிரியர், அரசு கள்ளர் மே.நி.பள்ளி,
வி. கல்லப்பட்டி, மதுரை மாவட்டம்.

**ஆர். சண்முகசுந்தரம்**
முதுகலை ஆசிரியர், அரசு மே.நி.பள்ளி,
பாண்டமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

**கே. கோபி**
முதுகலை ஆசிரியர், அரசு மகளிர் மே.நி.பள்ளி,
வேணுகோபாலபுரம், கடலூர்–1.



இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

குறிப்பு



XI_Tamil_commerce 26-33_255-324.indd 322 12/16/2020 4:23:52 PM

# குறிப்பு

# குறிப்பு



XI_Tamil_commerce 26-33_255-324.indd 324 12/16/2020 4:23:52 PM